3 1761 08945667 7

Presented to the

LIBRARIES *of the*

UNIVERSITY OF TORONTO

by

François Gros

செய்யுட்டொடர்
வச்சகக்கிளவி
நுண்கிளவியாவன
கலவைத்தொழிற்றொடர்
அப்பிரமணிய தேசிகர்மாலை
அகப்பிரமாணமிசைநிற்றல்
நிகழ்வொன்றாகிநிற்றல்
ஆறுடையவிவ்வியலாகுமாறு
நிகழ்வொன்றாகிய
பலப்பிரமவிவேகம்
நிலையுறுவேறுபாடாகவுமாறு
நுட்பமாய அவைகளுள்ளுறை.

கடவுள் துணை.

இராயபுரம் வித்துவான்,

வே. கி. நாராயணசாமிபிள்ளையவர்கள்

அவ்வவ்வமயங்களில் இயற்றிய

செய்யுட்டிரட்டு.

இது

சென்னியம்பாக்கம்,

வரதபிள்ளை யவர்கள் புத்திரர்

சகநாதம்பிள்ளையவர்கள்

முயற்சியால்

சென்னை:

வெள்ளையநாடார் அச்சாபீசில்

பதிப்பிக்கப்பட்டது.

சர்வசித்தாஞ் சித்திரைமீ.

1887.

LIBRARY
MAR 15 2023
UNIVERSITY OF TORONTO

கையொப்பக்காரர்களின் பெயர்.

உ. சி. முனிசாமிபிள்ளை.
த. அ. தம்புசாமிபிள்ளை.
கெஞ்சி. ஆறுமுகசெட்டியார்.
தி. சீனிவாசநாயகர்.
வா. சண்முககிராமணியார்.
ஆ. பெ. வேலாயுதநாடார்.
பூ. அழகிரிசெட்டியார்.
ச. ச. அந்தோனியப்பநாயகர்.
ஈ. வெ. சுப்பராயமுதலியார்.
பெ. சிவராமநாயகர்.
கொ. பொன்னுசாமிமுதலியார்.
நா. செங்கல்வராயரெட்டியார்.
சி. அருணாசலமுதலியார்.
சீ. பாலசுந்தரமுதலியார்.
சி. முருகேசமுதலியார்.
வே. கிருஷ்ணசாமிரெட்டியார்.
ர. மாணிக்கமுதலியார்.
ம. நாகப்பநாயகர்.

ஜே. சின்னசாமிபிள்ளை.
மு. இரத்தினவேலுநாயகர்.
பெ. சண்முகம்பிள்ளை.
அ. பங்காருராஜா.
இராகவலுநாயுடு.
தி. பொன்னுசாமிமுதலியார்.
கு. நாராயணராவ்.
ம. சிவராவ்.

பு. தில்லைநாயகர்.
பெ. ஜானகிராம்நாயுடு.
அ. ஆ. சென்னை: கேசவநாயுடு.
கே. சே. அப்புகுட்டிசெட்டியார்.
மு. கோவிந்துநாயகர்.
சா. மு. செங்கல்வராயசெட்டியார்.
ஆ. முனிசாமிநாயுடு.
அ. வீ. கேசவநாயுடு.
ஆ. இரங்கசாமிநாயுடு.
ஆ. எ. குப்பாஜிராவ்.
கே. ஜா. இராமாஞ்சுலுநாயுடு.
மா. தா. பார்த்தசாரதிராஜா.

தி. கோ. முனிசாமிசெட்டியார்.
கா. வி. சுப்பராயநாயகர்.
பு. தி. அருணாசலதம்பிநாயகர்.
சா. மு. சின்னசாமிநாயுடு.
நா. ஆதிமூலநாயுடு.
இ. கு. நாராயணசாமிபிள்ளை.
இ. மு. முனிசாமிநாயகர்.
உ. வே. ஐயாதுரைநாயுடு.
மு. எ. முனிசாமிநாயகர்.
மு. வேலப்பசெட்டி.
க. வே. குப்புசாமிநாயகர்.
உ. வே. இரங்கசாமிநாயகர்.
சே. அ. இராகவசெட்டியார்.
வ. தி. முனிசாமிநாயகர்.
த. ம. இராமசாமிபிள்ளை.
ப. ச. ஆறுமுகமுதலியார்.
கே. ரா. பாப்பையநாயுடு.
கே. மு. இராகவநாயகர்.
எ. ந. முனிசாமிநாயுடு.
தா. ஈ. வேங்கடசாமிநாயுடு.
ஆ. வீரபத்திரமுதலியார்.
தி. பொன்னுசாமிநாயகர்.
பா. மு. சுப்பராயலுநாயுடு.
வீ. ஆறுமுகமுதலியார்.
தி. மு. முனிசாமிநாயுடு.
கோ. வீராசாமிநாயுடு.
ஓ. பா. வீரராகவலுநாயுடு.
சே. குப்புசாமிமுதலியார்.
ஆ. சி. சந்திரகுப்தபிள்ளை.
சு. கந்தசாமிபிள்ளை.
மு. இராமசாமிசெட்டியார்.
வே. முருகப்பமுதலியார்.
பா. நாராயணசாமிநாயகர்.
கா. பா. வேம்புலிசெட்டியார்.
உ. கி. கன்னசாமிநாயுடு.
பா. சுப்பராயலுநாயுடு.
வீ. நாராயணசாமிநாயுடு.
ம. சகநாதமுதலியார்.
கா. சுப்பராயநாயகர்.
க. ந. முத்தியாலு.

வீ. குருசாமிநாயகர்.
மு. முனிசாமிநாயுடு.
வே. சுந்தரநாயுடு.
ஆ. வ. சுப்பராயலுநாயுடு.
அ. ஏ. வேலாயுதநாயகர்.
தி. சு வையாபுரிமுதலியார்.
நா. கோவிந்தராஜநாயுடு.
ஆ. சின்னப்பதம்பிரான.
மு. சாமிநாதநாயகர்.
லாயிங். பாலாஜிசிங்.
சுப்பராயமுதலியார்.
க. மு. கிருஷ்ணசாமிநாயுடு.
தா. மா. மாரிமுத்துநாயகர்.
சே. வ. அப்பாயிநாயுடு.
ஆ. மு. லக்ஷ்மணநாயகர்.
ஆ, சி. வரதராஜுலுநாயுடு.
கோ. தன்சிங்.
பா. தி. இரங்கசாமிமுதலியார்.
சி. இராமசாமிமுதலியார்.
பு. சுப்பராயமுதலியார்.
நே. குப்புசாமிமுதலியார்.
கு. பாலகிருஷ்ணமுதலியார்.
கு. இராமாஞ்சப்பமுதலியார்.
உ. மாணிக்கமுதலியார்.
சூ. வேலுமுதலியார்.
தோ. முனிசாமிமுதலியார்.
நாகை. இரங்கசாமிமுதலியார்.
கா. முனிசாமிநாயுடு.
உ. இராமசாமிநாயுடு.
பூ. ஆ. அப்பாயிநாயுடு.
பம்பல். இராமசாமிமுதலியார்.
வீ. குமாரசாமிநாயகர்.
இராஜுபிள்ளை.
முனிசாமிசெட்டி.
பு. வீ. வரதராசபிள்ளை.
சூ. கந்தசாமிமுதலியார்.
ஆ. மு. முனிசாமிநாயகர்.
ம. தா. நாராயணசாமிமுதலியார்.
ம. மு. ஆறுமுகநாயகர்.
வே. இராஜா.
நெ. மேகாவுஆசாரியார்.
பு. வேதாசலநாயகர்.
ஆ. இரங்கசாமிஆசாரியார்.
ந. முனிசாமிநாயகர்.
அ. குப்புசாமிஆசாரியார்.
முத்துக்குமாரசாமிநாயகர்.
குமாரசாமிநாயகர்.
இராமசாமிநாயகர்.
கோவிந்துமுதலியார்.
அமிர்தலிங்கமுதலியார்.
மா. மு. திருவேங்கடம்பிள்ளை.
கே. கி. இராமசாமிராஜா.
ஆ. எ. சுப்பாராவ்.
இலட்சுமணநாயகர்.
ரா. சேணிநாயகர்.
பொன்னப்பநாயகர்.
வெ. கந்தசாமிமுதலியார்.
முருகன்.
ஏழுமலைநாயகர்,
வரதராசுலுநாயுடு.
சதாசிவநாயகர்.
பெருமாள்.
வடிவேல்.
இராகவன்.
சரவணன்.
சென்னை கேசவநாயுடு.
முத்துசாமி.
சடையன்.
வே. மு. பா. இராமாஞ்சுலுநாயுடு.
பு. தி. வீரராகவபிள்ளை.
மே. தி. உலகநாதநாயகர்.
மை. குப்புசாமி.
மெ. செல்லப்பாசாரியார்.
கோனே. கன்னியப்பஆசாரியார்.
பெ. சின்னசாமி.
இ. முனிசாமி.
தி. பார்த்தசாரதிஆசாரியார்.
மெ. மு. ஆறுமுகபண்டாரம்.
அ. ராசுநாயகர்.
கா. அருணகிரிஆசாரியார்.

Rev. T. K. Itty.
Mr. P. S. Soondrum.
" A. R. Josiah.
" R. Joseph.
" Anthoneyappa Modeliar.

சாத்துகவிகள்.

தஞ்சாவூர் சதாவதானம்,

ஸ்ரீமது

சுப்பிரமணிய ஐயரவர்கள்.

இயற்றிய

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

உலகமலர் வாய்ப்பெய்தான் வளர்குலத்தி லுதித்தவன்வே
லூரில் வாணன், நலமலிசீர்க் கிருட்டினசா மிப்பெயரோன் றவ
த்துதித்த நாற்பாக் கல்வி, வலமிகுநா ராயணசா மிக்கவிஞ னெ
ருசெயுட்கே மற்றோர் சொற்ற, பலசெயுளுந் தோற்றிருக்கப்
பலசெய்யுட் டிரட்டுந்தான் பகர்வ தென்னே.

சென்னைச் சருவகலாசாலைத் தமிழ்த்தலைமைப்
புலமை நடாத்திய இயற்றமிழாசிரியர்

கோமளபுரம், இராசகோபாலபிள்ளை

அவர்க ளியற்றிய

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மேலூர்சில் வகையாலு மொருசிறிதொப் பாகுமென விள
ம்பலாகா, வேலூர்வாழ் கிருஷ்ணசா மிக்குரிசில் புரிந்ததவம்
வீறவந்த, தாலூர்வண் புகழார்நா ராயணசா மிப்புலவன் தக்
கோர் நாவின், பாலூர்செவ் வியசெய்யுட் டிரட்டொப்பா வொ
ருநூலில் பகருங் காலே.

காஞ்சிபுரம் பிரபன்னவித்துவான்,

இராமசாமிநாயுடு அவர்கள் இயற்றிய

கட்டளைக் கலித்துறை.

ஆந்தக விற்பல் லணிவிர வத்தொடுத் தார்வுமிகத்
தீந்தமி ழாநின்று செய்யுட் டிரட்டெனச் செப்பினனால்
பூந்து வரைப்பெரு மான்மர போங்கப் புவியிலிசை
வேய்ந்திடு நாரா யணசாமி விற்பனன் மேதினிக்கே.

தொண்டைமண்டல பாடசாலை இயற்றமிழ்ப் போதகாசிரியர்,

தி. சண்முகம்பிள்ளை யவர்கள் இயற்றிய

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பதுமினைக் கழைப்பாகோர் முக்கனியென் றேசில்லோர் வகுப்ப ரீது, கதுமெனவன் 'றெனநிறுத்தக் கலயமுனி மதுர மெனக் கழற வன்றே, திரினருந் தமிழ்வகுத்தான் மற்றதனின் சொற்பொருளின் சார லெல்லாம், பொதுளநாரா யணசாமி மால்செய்யுட் டிரட்டென்னப் புனைந்தான் மன்னே.

சென்னை, கிரிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்புலவர்,

சபாபதிமுதலியாரவர்கள் இயற்றிய

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சீர்பெறுமிவ் வுலகதனிற் பல்வளஞ்சேர் வேலைநகர் சிறந்து வாழும், பேர்பெறுநா ராயணசா மிக்கவிஞன் பலவமயம் பெற் றகாலைப், பார்புகழெம் மிலக்கணக்க ளஞ்சியமாங் குருவருளாற் பலரு மெச்ச, ஏர்பெறச்செய் கவியனைத்துந் திரட்டியொரு நூலாக வியற்றினனே.

நேரிசை வெண்பா.

பார்புகழும் வேலைப் பதியினிடை மேவிவளர்
பேர்பெறுநா ராயணசா மிப்பெரியோன் - ஏர்பெறச்செய்
பாடலனைத் துந்திரட்டிப் பாரில்பல ருங்களித்துத்
தேடவச்சி லிட்டான் றெரிந்து.

திருவாவடுதுறை யாதீன வித்துவான்,

நாகை. த. ரா. ச.

நடராஜப்பிள்ளை அவர்கள் இயற்றிய

ஆசிரியவிருத்தம்.

மாமேவு சென்னையம் பதிராய் புரமென்ன மன்னுநகர் தன் னில்வாழும், வைகுந்த நாதனருள் பெற்றுயர்ந் தோங்குகோ வைசியகுல திலகனுன, தேமேவு தொடையலணி யகலனுயர் பெ ருமைநிறை செந்தமிழ்ச் சிந்துபருகிச், செய்யகவி மாரியிவ் வை

யக மதிற்பெயுஞ் சீமூத மனையதீரன், நாமேவு கலைமகட் குறையு ளேயென்னுநா ராயணக் கவிஞனேதும், நன்மைதரு செய்யுட் டிரட்டெனும் பாமாலை நானிலத் தோர்கள் மகிழும், காமேவு கற்பகப் பூமாலை கண்ணன் கவுத்துவமணி மாலைதுளவக், கான் வீசு பசியநற் றேமாலை பன்மணிக் கதிர்மாலை யென்னலாமே.

வேறு.

அந்நாளி லமரர்விருந் தருந்தவார் கலியைமதித் தமுத மீந்த, பன்னகப் பாயுடையான் பழமைக்கோ பாலகுலப்பால னாகி, நன்னுவலோர்புகழ்நா ராயணசா மிப்பெயரு நவிலப் பெற்றுச், சொன்னன்செய் யுட்டிரட்டிவ் வுலகர்தமி ழமுதமிந்நாள் சுவைக்க வென்றே.

அரிச்சந்திர மகாராஜா கீர்த்தனை பாடிய

சிவகுருதாசரென்னும் காரணப்பெயரெய்திய

வேங்கடாசல ஆசாரியரால் இயற்றிய

எண்சீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

ஆதவனேர் திகிரியினுற் கரியைக் காத்த
வண்ணல்கிருஷ்ண சாமியெனும் பெயரோ னீன்ற
யாதவர்தங் குலதிலகன் வேலூர் நாரா
யணசாமி பகர்ந்தசெய்யு ளனைத்து மொன்றுப்
போதவளம் பெறத்திரட்டித் தந்து சேடன்
புனிதசிர மசைத்திடவெண் கமலை வாழ்த்த
மாதவனு சீர்வதிக்கப் புவியின் மேவும்
வாணரெலாம் புகழ்ந்தேத்த மகிழ்கூர்ந் தானே.

அஷ்டாவதானம்,

பூவை. கலியாணசுந்தரமுதலியாரவர்கள் இயற்றிய

விருத்தம்.

மெய்யுட் டிரட்டு மேலோன் பதத்து மீதூர வைத்திடுபவன்
பையுட் டிரட்டு சிறிதேனு மின்றிப் பாராரும் வேலூரினன்
றையுட் டிரட்டு பாவாணர் சிங்க நாராய ணச்சாமிசெய்
செய்யுட் டிரட்டு கல்வித்திரட்டு செழுமைத் திரட்டாமரோ.

சென்னைமாநகரம், முத்தியாலுப்பேட்டையிலிருக்கும்

வேதாந்தபிரசங்கி,

அ. முனிசாமிநாயகரவர்கள் இயற்றிய

கட்டளைக் கலித்துறை.

சீர்கொண்ட நற்கவி வாணர்க்கு நண்பன் றிகழுடலாற்
பேர்கொண்ட வன்வேகி நாரா யணசாமிப் பிள்ளைநுவல்
ஏர்கொண்டு செய்யுட் டிரட்டினை யாவரு மேத்துதற்கு
நேர்கொண்ட யந்திரத் தாற்பதித் தெங்கும் நிறுவினனே.

"வெற்றிக்கொடியோன்" எடிற்றரும்

"சென்ற் மேரிஸ் காலேஜ்" தமிழ்ப்பண்டிதருமாகிய

பு. த. செய்யப்பமுதலியாரவர்கள் இயற்றிய

விருத்தம்.

கஞ்சனின் மருக னாகிக் காலிபின் னின்ற பாதன்
பஞ்சநற் கருவி கொண்டோன் பதாம்புயம் பரவச் செய்வோன்
பஞ்சர மொன்றிற் கிள்ளை பருந்தொடு வளர்வே லூரான்
தஞ்சத்தைத் தாங்குங் கிருஷ்ண சாமிவே டந்த பாலன்.

கற்பினை யுடைய கல்வி காரிகை தன்பா லின்ற
பொற்பமர் கவிகள் சேர்த்துப் புலவருக் கோர்கண்ணாக
அற்பருக் கசனிநாரா யணசுவா மிக்கோன் றந்தான்
சொற்பய னறிவோர் நித்தஞ் சுவைநுகர்ந் திடுவ ரன்றோ.

"சென்ற்மேரிஸ் காலேஜ்" தமிழ்ப்பண்டிதராகிய

சின்னப்பாவுமுதலியாரவர்களியற்றிய

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

மாலூர்வான் சடிலமுனி யடியுவர்கண் விழைந்தருளு மான்மியம்போன்ம், மேலூர்வா ழிமையவரும் நனிவியப்பப் பலவமயம் ஏளம்புஞ் செம்பாப், பாலூர்வா யமுதூரச் செய்யுட்டிரட் டெனுமொருநூல் பகர்ந்தீந் தான்சீர், வேலூரிவாழ் கிருட்டினமா லருள்நாரா யணசாமி மேன்மை யோனே.

இதுவுமது.

சீர்கொண்டா னறநெறியாற் றருமனைப்போற் றிறப்பொறையாற் சேட னைப்போற், பார்கொண்டான் முல்லைநிலத் தார்கொண்டான் மனுநீதி பார்த்தி பற்போல், நேர்கொண்டான் செய்யுள்திரட் டெனுநூலால் நாவலனாய் நிகழ்த்துங் [illegible], பேர்கொண்டான் நாரணன்போல் யார்கொண்டா ரிப்பெருமை பேசுங் காலே.

பலகைதொட்டி வியாபாரம்

வித்துவான்,

குளப்பாக்கம். கதிர்வேல்நாயகரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

மஞ்சு பிறைதவழு மாமலைசூழ் வேலூர்வாழ்
விஞ்சு புகழ்கிருஷ்ண வேளளிசேய்—செஞ்சொலமை
நாரா யணசாமி நாவலன்செய் யுட்டிரட்டின்
சீராய்ந்து சொல்லுவரார்? தேர்ந்து.

இலக்கண உதாரணவிளக்கம், இலங்கைச்சரித்திரம்,

காளிதாசசரித்திரம்முதலிய நூல்களை இயற்றினவரும்,

தற்காலம் வெள்ளையநாடார் அச்சாபிஸ் விசாரகருமாகிய

யாழ்ப்பாணத்து மானிப்பாய்

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்களியற்றிய.

நேரிசை வெண்பா.

சீரார்யர் தொன்மரபின் தீபமே போன்றுவரு
நாரா யணசாமி நாவலன்றான்—கூராரும்
செஞ்சொற் சிறப்புறச்செய் செய்யுட் டிரட்டுக்கு
நஞ்சொல்புக ழோமனனே? நாடு.

இராயபுரம் உபாத்தியாயர்

பவழை, தம்புசாமிமுதலியாரவர்களியற்றிய

இன்னிசைவெண்பா.

சீராணிபயனூற் சிந்துண் டுமிழ்விசும்பு
நாரா யணசாமி நற்கல்வி மின்மணந்து
செய்யுட் டிரட்டென்னுஞ் செல்வ னுலகழியாப்
பெய்யுற் றனனே பெரிது.

ஸ்ரீபாலதண்டாயுதபாணிக் கடிமைபூண்டவரும்

ஜாதக ஆரூட கணிதநூலாசிரியருமாகிய

ஜோதிஷ. இரா.

உருத்திரகோடிப்பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சீராரும் பொழிற்புடைசூழ் வேலூர்வா ழாயர்குலஞ் செய்த வத்தால், பேராருங் கிருஷ்ணசா மிப்பெருமா னரிதீன்ற பெருமை யோனாய்ப், பாராரும் புலவனாரா யணசாமிப் பாடியசெய்யுட் டிரட்டை, யாராரும் புகழவினி தச்சியற்றித் தந்ததற்கென் கைம்மா றம்மா.

ஐயனெனும் பழனிமலை யாண்டவன்ற னம்மானென் றமரரேத்தும், பையரவப் பாயலமர் மாதவன்றன் குலத்துதித்த பண்பன் மேலாம், மைவிழியார் மயல்கொளுநா ராயணசா மிக்குரிசில் மகிழ்ந்து நாளுஞ், செய்யுள்களா மமிர்தமதைத் திரட்டியுல குக்களித்துத் திடம்பெற் றானே.

அதிபத்தநாயனார்கீர்த்தனம்பாடிய

பு. கா. ஷெடாட்சர ஆரியரா லியற்றிய

கட்டளைக் கலித்துறை.

சீரோங்குஞ் சென்னை யிராய புரங்கோ வைசியகுலப்
பேரோங்குங் கிஷ்ண சுவாமிப்பிள் ளைப்பெரு மான்தவச்சார்
நாரோங்கு நாரா யணசாமிப் பிள்ளைவித் வானையடுத்
தோரோங்கச் செய்யுட் டிரட்டெனு நூற்செய்தச் சிட்டனனே.

—:o:—

ஸ்ரீ கண்ணபிரான் பக்தஜன சபாப்பிரசங்கியும்
சென்னை ரெயில்வே சீப் இஞ்சினியர் ஆபீசில் ஸாற்றருமாகிய

பொ. மு. கேசவசுப்பராய செட்டியாரவர்களால்

இயற்றிய

எழுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

சீர்பெறுங் கடலிற் பிறந்ததெள் ளமுதோ?
செங்கரும் போ?செழுந் தேனோ?
வேர்பெறும் பலவின் றீஞ்சுவைக் கனியோ?
விழைவுறு மினியசர்க் கரையோ?
பேர்பெறும் வேலூர் கிருஷ்ணசா மியினற்
பெருந்தவத் துதித்தநம் புலவோன்
ஏர்பெறும் புகழ்நா ராயணசாமி
யியற்றுசெந் தமிழ்ச்செய்யுட் டிரட்டே.

இராயபுரம் சிவக்கியானி,

வா. சொக்கலிங்கம்பிள்ளை இயற்றிய

கட்டளைக் கலித்துறை.

கற்கண்டு சர்க்கரை முக்கனிப் பாலுங் கலந்ததைப்போற்
சொற்சுவை தோன்றிடச் சொற்றதன் பற்பலச் செய்யுள்களை
விற்பனர் நெஞ்சம் வியப்புறச் செய்யுட் டிரட்டெனவே
மற்புய நாரா யணச்சாமி யச்சிட்டான் மாநிலத்தே.

தேவாதூர் - முருகேச உபாத்தியாயரால்

இயற்றிய

எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

திருமருவு மிராயர்புரி தன்னில் வாழுஞ்
செல்வயா தவகுலத்தின் றோன்றன் மிக்க
அருமறையும் பலகலையு முணர்ந்த வன்மா
லடியிணையைத் துதிபுரியு மழகு சீலன்
உரிமைநாரா யணச்சாமி செய்யுள் கேட்க
வுத்தமர்க ளெந்நாளு மூவந்து வாழ்த்த
நிருபனெனச் செய்யுளொன்று திரட்டித் தேர்ந்து
நிலத்தின்மிசைச் சேடனஞ்ச நிகழ்த்தி னானே.

திருக்கழுக்குன்றம்

கந்தசாமிமுதலியாரவர்களியற்றிய

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சீருறும் படிகோ பாலனைக் காத்த செங்கண்மால் தோற்றிய குலத்தின், பேருறும் படிவே லுர்கிஷ்ண சாமி பிள்ளையின் றவத்தினி லின்பத், தாருறு மடிக ளளித்திடு நாரா யணசாமி நாவலோன் புலவர்க், கேருறும் படிசெய் யுட்டிரட் டெனுநூ லீய்ந்தன னெழில்பெற விசைந்தே.

நேரிசை வெண்பா.

எண்டிசையும் போற்றிட வெந் நூலிடத்துந் தன்கவியைப்
பண்டிதர்க ளேற்கப் பரிந்தளித்தான்—அண்டர்களும்
நாரா யணசாமி நாவலன்செய் யுட்டிரட்டைப்
பாரா யணஞ்செய்வார் பார்த்து.

சென்னை - பிளாக்டவுன், விஜயநகரமகாராஜா

பெண்கள் கல்விச்சாலைத் தமிழ்ப்பண்டிதராகிய

க. திருவேங்கடநாயுடு அவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

வள்ளல் கிருட்டினமால் மாதவமே யோர்வடிவங்
கொள்ளும்நா ராயணசா மிக்கோமான்—தெள்ளுதமிழ்ச்
செய்யுட் டிரட்டருத்தஞ் செப்பமுடி யாதன்றோ?
பையரவந் தாழ்ந்தான் பயந்து.

தஞ்சை, வேங்கடாசலபண்டிதர் குமாரர்

குமாரசாமிபிள்ளையவர்களியற்றிய

கட்டளைக் கலித்துறை.

சீர்கொண்ட கங்கைச் சடைப்பெரு மாற்கருள் செய்பெருமான்,
நீர்கொண்ட கொண்ட நிறத்தன சோதா நெடுந்தவஞ்சார்
பேர்கொண்ட கண்ண பிரானைப் பணிகிஷ்ணப் பிள்ளைநலத்
தேர்கொண்ட நாரா யணசாமி செய்கவி சீர்த்தியதே.

சாத்துகவிகள் முற்றிற்று.

இஃது

இராயபுரம், சிவக்கியானி

வர். சொக்கலிங்கம் பிள்ளையவர்கள் இயற்றிய

புகழ்ப்பாமாலை.

காப்பு.

நேரிசை வெண்பா.

பொன்மருவு நாரா யணச்சாமி நற்புலவ
னின்மருவுங் கீர்த்தியெங்கும் நீடிடவே—சொன்மருவு
மாப்புகழ்ச்சிச் செய்யுள் வழுத்துதற்கு எம்மருங்குங்
காப்புதுதிக் கையான் கழல்.

நேரிசை வெண்பா.

ஏர்பொருந்து நன்னூ லியற்காரிகை தொன்னூல்
பேர்பொருந்த வேபடித்த பேருடையான்—வார்பொருந்து
மின்னே! நாராயணசா மிப்புலவன் போல்வலவர்
இந்நானிலத்தி லெவர். (க)

சீராருஞ் செந்தமிழின் செய்யுட் டுறையனைத்தும்
ஏராரு மால்கிருஷ்ண னீன்றமகப்—பேராரும்
நாரா யணசாமி நாவலனைப் போலெவர்கள்
பாரா யணஞ்செய் பவர். (உ)

மாவீர சோழியமும் வண்மைதரு நற்குறளும்
மாவீர மாயுணர்ந்து மற்றோர்க்கும்—நேரீந்து
நாற்றிசையுங் கீர்த்திகொளும் நாரா யணசாமிப்
பேர்த்திபற்கு நேரார்? பகர். (ங)

கல்விக் களஞ்சியசீர்க் கல்லாடம் நாலடியார்
சொல்லிற் களஞ்சியசிந் தாமணியோ—டெல்லாமுங்
கற்றறிந்த நாரா யணசாமிக் காவலற்போல்
நற்றமிழ்தேர் வாரை நவில். (ச)

கவித்கா வலர்புகழ்தொல் காப்பியத்தைப் பாடுங்
கவிக்காகக் கற்ற கவிஞன்—புவிக்கா
வலரேத்து நாரா யணசாமி போல்வார்
உலகிலுள்ளார் யாவர்? உரை. (ரு)

கா[illegible]ந்த நூரக் கடற்படிந்து பொன்னளிக்குஞ்
சீமான்க ளைத்திருத்துஞ் சீமானே—ராமா
யணக்கவியும் பாரதமும் ஆய்ந்தறிந்த நாரா
யணக்கவிஞன் போலார் அறை. (சு)

சீர்விளங்கும் பாகவதஞ் செப்புந் திருவிசைப்பா
ஏர்விளங்கும் பல்லாண் டியாவற்றும்—பேர்விளங்கும்
மிக்கபுகழேபடைத்த வேலூர்நாராயணசா
மிக்கவிஞ னென்றேநீ விள். (எ)

சீராய சொல்லெழுத்துஞ் செப்புபொரு ளும்யாப்பும்
நேராய நல்லணியும் நீர்மையுடன்—நாராய
ணச்சாமி கற்றுரைத்த நன்மைதிகழ் செந்தமிழை
மெச்சார்யார்? யாரிவற்கு மேல். (அ)

கட்டளைக் கலித்துறை.

கவிசொல்லும் பாவலர் தங்களைக் கண்டு கடுகடுத்துச்
சிவிகையி லேறித் திரியுநிர் மூடரித் தேசத்திலே
பவிசுகள் கெட்டுப் பணந்தன்னை வீணினிற் பாழுசெய்வார்
நவிலுநா ராயணன் போற்றரு வாரெவர் ஞாலத்திலே. (கூ)

பம்பரத்தைப்பழித்தல்.

சான்றோர்கள் மெச்சிய நாரண சாமியின் றண்வரையில்; மான்றேன்கண் சொற்பெண்கள் கொங்கைக்குத் தோற்றிந்த வன்பம்பரந், தான்சிறு பிள்ளைக ளாற்றெண்டி யாயொடிந் தே சக்கையாய், வான்வரை யுஞ்சித றிச்சென்ற தென்று வழுத்த ணங்கே. (ம)

கும்பத்தைப்பழித்தல்.

மங்களஞ் சேர்கவிச் சிங்கநா ராயணன் மால்வரையில்
நங்கையர் தங்கநறீ கொங்கைக்குத் தோற்றிந்த நானிலத்தில்
கங்கை முகக்கக் குடங்களெல் லாங்கயிற் றிற்குட்பட்டு
எங்கெங்குஞ் சில்லிக ளாயொடிந் தோடென வேய்ந்தனவே. ()

கமலத்தைப்பழித்தல்.

எங்கும் புகழ்பெறு நாரண சாமியி னேர்வாயில்
தங்கிய மங்கையர் கொங்கைக்குத் தோற்றுத்தண் டாமரைகள்
தொங்கல்க ளாயதன் சுந்தர மற்றுத் துவண்டுநிற
மங்கி வதங்கியுங் காய்ந்துந் தொலைந்தன மாநிலத்தே. (௰௨)

கிரீடத்தைப்பழித்தல்.

நன்னகர் மன்னிய மன்னவர் சென்னியி னன்குமின்னும் [ங்கிப்
பொன்முடி மங்கையர் கொங்கைக்குத் தோற்றுப் பொலன்மழு
பொன்னும் மணிகளும் முத்தும்வை டூர்யமும் போயொடிந்து
சின்னமும் பட்டது நாரண சாமிச் சிகாமணியே. (௰௩)

வெறிவிலக்கல்.

சென்னை யிராயர் புரிவாழு நாரணச் செம்மல்சென்று
இன்னம் வராம லிருப்பதி னானினைந் தேங்குகின்றாள்
கன்னலும் பாலு நறவுங் கலந்தசொற் காரிகையாள்
அன்னற் குழலணங் கேமையென் செய்த தறுப்பதென்னே. ()

வெறிவிலக்கல்.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஓதிமஞ்சேர் தடம்பொழில்சூ ழிராயபுரி வாயிலுறை யுசி
தமங்கை, பாதிமதி நுதல்வண்டு விழிபுருவம் வில்லசலப் பயோ
தரத்தாள், ஓதியநா ரணன்மயலால் கலங்கிக்கண் ணீர்சொரிந்
து தெளிவற் றாளோர், தீதுமிலா மை*மாரிக் கண்ணிலிட்டால்
தெளிவாமோ? சீர்மின் னாரோ. (௰௫)

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

தேன்மலர்ச் சோலை சூழுஞ் சென்னைநா ரணவிற் பன்னா!
மான்விழி வதனஞ் சந்த்ரன் மருங்குறந் ததரங் கொவ்வைக்
கான்புழு கணிந்த கொங்கை கந்தரம் நிதம்பம் பொற்றேர்
ஆன்மனு மகடாண் மைய லகன்றிட வணைந்தி டாயே. (௰௬)

---

* மாரிக்கண்ணிலிட்டால் - மாரியம்மனிடமாகிய கோயிலில்வெட்டினால்.

நடுவெழுத்தலங்காரம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மலை வேதந் திலதங் கூட்டம் மசகம் வாசனைச்சிள் வண்டிச் சொறகள், நடுவி லிருக்கு மெழுத்துகள் பெயரான் தந்த சுதா! நெடுமால்பாதம், புலபொழுதுந் துதிபுரி நாராயணசாமிப்புலவா! படிப்பதற்கு, இலையெனவே மொழியாமற் கேட்கும் புத்தகந்தரநீ யிசைத னன்றே. (௰எ)

உகிர், சுருதி, பொட்டு, கணம் கொசுகு, சாவாது, சிமிலி } கிருட்ணசுவாமி

நடுவெழுத்தலங்காரம்.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பாசுரஞ் சதுரதத்தார் கழனிவாரி பட்சமுதல் பரணையெனும் பதமாறுக்குள், ஏசலிலா நடுவெழுத்தின் பெயரோய் மற்ற வேழுமைந்துந் தன்வசமாயுற்றமாது, பேசுமொழி யல்குன்முலை கூந்தற்றேகம் பிரியத்தால் மெலிந்தா ளவ்விழியணங்கு, நேசமுடன் வரவழைத்தே யவளையிந்த நேரத்தி லணைந்திடுத னீதமாமே. (௰அ)

பாநால், தேரார், வயல், புணரி பாசாதி, சிமிள் } நாராயணசாமி

நடுவெழுத்தலங்காரம்.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

அம்மான்பெண் சிவன்சுபுத்திர னன்புவேத நடுவாழை யுமைசேனைவித்தையாகும், இம்மொழிக ணடுவிலுற்றவெழுத்தான் மான்க ணிதழ்கனிநல் வான்மருங்கு லிரண்டு கொங்கைச், செம்மலையா லகடுசுதி மதிமறந்து தியங்குகின்றாள் கலிசதங்கைச் செறிந்ததாளாள், நம்மாதுசதிபுரியாள் பெண்கடங்கள் பதிநாராயணசாமி நயந்திடாயே. (௰கூ)

மாமன், கன்னி, வாமன், மதலை, ஆவல், சுருதி மத்தி, கதலி, சத்தி, பதாதி, கல்வி. } மன்மதவருத்தத்தால்.

கமலபந்தம்.

நேரிசைவெண்பா.

வானயன மானகன மானதன வானவன
வானவர் வணங்கு திருமாருளைத்—தானனை
தாகங்கொண்டே நரணச்சாமி துதிப்பாயவட்குத்
தாகமது கொண்டு முத்தந்தா. (உ௰)

வாநயனம் ஆன—கண்போன்றவனேவா, கனமான கனம் பொருந்திய, தனவானம்—பொன்னுலகம், வனவானவர்—அழகியதேவர் திருமாருளைத்தான்—திருமால்தாளைத்தான், அதன தாகம்—அதிகப்பிரியம்.

இரதபந்தம்.

						பெ						
					உ	ற	வு					
				ள	யா	தா	நீ	ரா				
			ய	ற	வே	வை	தா	ளே	யா			
		லை	ல்	எ	ல்	ய	ம	கை	தோ	மே		
	வ	ல	ரோ	சொ	ல்	வீ	ரோ	ரு	த்	த	ர	
நா	மி	சா	ச்	ண	ய	ரா	நா	ரோ	வ	ல	ல்	ந

நேரிசைவெண்பா.

நல்லவரோ! நாரா யணச்சாமி நாவலரோ!
சொல்வீரோ ருத்தரமே தோகைமயல்—எல்லை.
யறவேவைதாளேயா ராநீதா யாள
உறவுபெற தாவையவீ ரா! (உக)

சதுரங்கபந்தம்.

செ	வ்	வா	யி	த	ழா	ளோ	த
ன	ன்	*அ	ம்	கு	க்	ரை	யு
மா	த	னை	தா	ளை	யி	ன்	பா
ரை	ம	லா	யி	ன	ன்	*வ	மை
ல	ணை	த	ரி	ல	ந்	த	மு
ஞ	ன்	த	ந்	க	ங்	ள	தோ
ன	ரி	க	*ணு	ன்	னு	கி	ர்
தே	ழி	மொ	னே	ண	ர	நா	ய

கட்டளைக் கலித்துறை.

சென்னை யிலங்கிய நாரணனே? மொழி தேனரிக
ணுன்னுகிர் தோளங்கந் தன்ஞ லணைதரி லந்தமுமை
வன்னயி லாமரை மாதனை தாளையின் பாயுரைக்கும்
அன்ன செவ்வாயித ழாளோ தரையி னரிதரிதே. (உஉ)

இருபத்திரண்டு மங்கலச்சொல்லுக்கும்
நேரிசைவெண்பா.

திருமணிதேர் பொன்மதிநீர் சீர்கடல்மா தங்கம்
பரியுலகங் கங்கைப் பரிதி—பெருசொலெழுத்
தாரணம்பூ மங்குலமிழ் தாநிலமுங் கீர்த்திமலை
நாரணனே? மங்கலச்சொ ஞடு. (உ௯.)

பூவை, அஷ்டாவதானம்
கலியாணசுந்தரமுதலியாரவர்களியற்றிய
கமல பந்தம்
நேரிசைவெண்பா.

நாகரிக மாகசுக போகமிக சோகமக
லாகமுக மேவிவரு பாவலஞ—மோகையொடு
பாரா யணமுழுதும் பார்த்துணர்ந்தான் வேதூர்வாழ்
நாரா யணச்சாமி நன்கு.

சிறப்புப் பாயிரம்.

சென்னை பிளாக்டவுண் ஐஸ்கூல் தமிழ்ப்புலவராகிய

இராயபுரம்,

அஷ்டாவதான ஜெகராவுமுதலியாரவர்களியற்றிய

நேரிசை ஆசிரியப்பா.

சந்தனப் பொதியச் செந்தமிழ்க் குரவன்
றருமா ணுக்கர்பன் னிருமா ணுக்கரில்
ஒல்காப் புலமைசால் தொல்காப் பியமுனி
தன்னியற் பெயர்நூன் மன்னியற் றிறம்பா
வாதிநூன் முதற்பன் னீதிநூற் பொருள்தழீஇச்
சொன்னயம் பொருணயந் தொடைநய மேய
பன்னயம் பயக்கும் பான்மைய வாகிப்
பாற்கடல் கடுக்கு நாற்கடற் றுறைதமிழ்
நூற்கட லிலக்கா மேற்கட லோர்கொளத்
தேமலர் புனைஇய பூமலர்ச் சரமெனுஅச்
சிந்தா மணியவிர் நந்தா வணியெனுஅ
உடலுக் குயிரெனுஅ வுயிருக் குணர்வெனுஅ
பற்பல வமயம் பற்பல விதிபெயாச்
சொற்பல தொடுத்த சொற்பல செய்யுட்
டம்மைத் திரட்டி வெம்மைக் கலியிறத்
தருகெனத் தன்பெயர் பெருகத் தந்தனன்
அறுகாற் பறவை சிறுகா லொசிக்கும்
பூங்கொடி மருங்குல் போர்மதன் வேட்டுத்
தேங்கொடிப் பணைக்கள மாங்குயிற் கூவக்
கணையெனு வூன்றிய களைதம தங்கத்
திணையெனுக் கட்டிள விருங்கூழ் வளர்க்கும்

வளங்கெழு வேலூர் தலங்கெழு வள்ளல்
உணர்வு நிறையோ டோர்ப்புக் கடைப்பிடி
குணஞ்சிறி தஃகாக் குலவிய மேரு
தளவ நிலத்தூர்த் துளவப் பைந்தார்
தயங்கிய பொன்வரை முயங்கிய செந்தோண்
மாலிரு வுரத்தில் வளர்ணி பொய்யெனு
நாலிரு மகளிரும் நயத்தகு வாழ்வினன்
இருடபு மெய்ம்மறைக் கருடத் துவசன்
மூலமே யெனக்கரி யோலமிட் டோயுமுன்
வந்தணைந் திரங்கிய செந்தா மரையான்
வரகலா தனவெழிற் பிரகலா தனனெனும்
ஆழ்வா னுயிர்த்து வாழ்வான் புரந்த
மாதவ னுதித்தருள் யாதவ மரபினன்
நல்கூர்ந் தவர்க்கும் நல்கூர்ந் தெனினும்
இல்லையெ னமங்கலச் சொல்லையென் றறியா
தயலினுங் கிளையினும் புயலினே ழளவரு
ணேமிநேர் கிருட்டின சாமிமால் தவத்தில்
சான்றோ ரென்கை யீன்றோர்க் கழகெனும்
பண்டை மொழிப்பயன் கொண்டினி துதித்தோன்
கலைபயி றெளிவு கட்டுரை வன்மை
யுலகிய லறிவோ டுயர்குண மேன்மை
கற்றுணர்ந் தடங்கன் முற்றும் பயனுக்
கண்டவன் கண்டது கற்போர் பலனு
விண்டவ னுலகுயிர் வெண்ணெயோ டொருங்கு
உண்டவன் கழலிணை யோம்புவா ரடித்துகள்
கொண்டவ னந்தணர் கொற்றவ ராரியர்
எப்பெரி யோர்க்கும் எப்புல வோர்க்கும்
ஒப்பிலாத் துணையி லோங்குமெங் கோமான்
நாமிசை யேத்தும் நாராயண
சாமி யெனப்பெயர் தகுநா வலனே.

கடவுள்துணை.

யாதவகுலதிலகர்,

வேலூர் கிருஷ்ணசாமிபிள்ளை யவர்கள்

குமாரராகிய

இராயபுரம், வித்துவான்

நாராயணசாமிபிள்ளை யவர்கள்

அவ்வவ் அமயங்களில் இயற்றிய

செய்யுட்டிரட்டு.

திருக்கணம், அருணாசலபிள்ளையவர்கள்

குமாரராகிய,

சீயாலபிள்ளை யவர்கள்மீது

இருபத்தெண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

சீரோங்கு நான்மறை துணிந்தபொரு ளீதெனச் செகதல
த்துறுமன் னுயிர், தெரிந்துசெந் நெறியதனி லொழுகியொரு
தனிமுத்தி திரமுறச் சேரு மாறு, செழுமலர்ப் பொழில்கொள்
பூ தூரின்வரு மெதிகுல சிகாமணிப் பதாம்புயத்தைத், திகழுற
வுளத்தின்மிசை வைத்தமெய்த் தொண்டனற் செந்தமி ழொரு
ங்குணர்ந்தோன்,

பாரோங்கு கோமள புரத்துவரு ராசகோ பாலப் பெருந்த
கைக்குப், பகர்சீட ராரா யணச்சாமி விநயமொடு பாரித் துரை
ப்ப தொன்று, பல்குபெரு வானெலா நிறைமதில் திருக்கணம்
பதியில்வாழ் சுகுண மேரு, பலகலைகள் முற்றுமுணர் மேதாவி
நன்னடை பயின்றவான் சீல தீபம்,

காரோங்கு மீகையிற் கற்பகம் பொறுமையிற் கடலவனி
யென்றுநவிலக், கருணீக குலவலம் புரியின்முத் தெனவந்த

உ வித்துவான், நாராயணசாமி பிள்ளை இயற்றிய

கண்ணியசீயாலமகிபா! கைப்பொருளி லாதவர்க் கிவ்வுலக மில்லெனக் கழறுமொழி நீயறிதியால், கயவர்சிலர் செய்தவஞ் சனையினு லுத்தியோ கந்தனை யிழந்து துயரப்,

பேரோங்கு மிடியினுல் யான்படு மிடுக்கணது பேச்சுக் கடங்கு துகாண், பெருமிதம் பெறுநினது சமுகமதை யண்டியது பேர்த்திடற் கெண்ணிவந்தேன், பெரியோ யெனைக்கைவி டாமலே கருணையாற் பேணையே னுட்களிக்கப், பெறலரும் பரிசொன் றளித்துன்சி ரொருவாது பெருகியே வாழியவரோ.

சந்தவிருத்தம்.

இந்தணிமாடக் கண்ணிநகர்க்கோ ரொழிலிப்போற்
சந்ததமும் நிலவுஞ் சீயாலத் தகையா! வென்
புந்திதளர்ந்து வருந்தியதன்பு பொருந்தியெனக்
கந்தமிலின்பு பெறுந்திற னன்கருள் செய்வாயே.

நேரிசை வெண்பா.

முப்பொருளின் றன்மை மொழி சைவசித்தாந்த
திப்பியமா நன்னெறியைச் சேர்கருணை - வைப்பாகுஞ்
சைவ சிகாமணி சீயால தயாளுவலா
லுய்வதரி தெம்போல்வா ருற்று.

அக்கீரனைநே ரருளுசல மகிபன்
நற்கீர்த்தி யோர்மகவி னல்லுருக்கொண் - டிக்கா
சினிப்புக்கா லன்னதுரை சீயால மானின்
றனைப்புக்கேன் சாய்ந்த திடர்.

சென்னைமாநகரம் இராயபுரத்திலிருக்கும்,

உ. சி. முனிசாமிபிள்ளையவர்கள்மீது

இருபத்தெண்சீரான் மிகுத்துவந்த கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

பொன்னுட்டு முப்பத்து முக்கோடி யமரரும் புகலிருடி யருமுரகரும், புனிதமுறு நித்யவை சூரிகளு மயன்முப்பு ராரிகுலி சாயுதனெனும், புத்தேளு மத்யலோ கருமநு தினந்துதிசெய் பொற்பதாம் புயகேசனைப், பூமகண் மணுளனைக் கவுத்துவா பரனைனைப் புண்யனைத் துழாய்க்கண்யனைப்,

பன்னுரு மிர்தயா சனத்தினி லிருத்திப் பராவு யாதவகுல த்தோன், பணைகள்செறி வேலூர் கிருஷ்ணசாமிப்பிள்ளை படர்த வத்துறுநலத்தோன், பாவலவன் நாராயணச்சாமி பிள்ளைநனி ப ட்சம்வைத் தெழுதுநிருபம், பகரரும் உறக்காடு பேட்டையூரன் பரஸ் பரமவுபகார விதுரன்.

கன்னுவதாரமால் சிங்கபெருமாள்பிள்ளை காட்சிமிகு தவகு மாரன், காஞ்சிபுரி யிற்சத் திரங்கட்டி தருமஞ்செய் கர்த்தன்மதி ராசு ரெயில்வே, கண்ணிஞ்சி னீரிங்காப் பீசில் க்ளெர்க்குத்தி யோ கப்பிரபுவாய் விளங்குங், கனதைமிகு என்னம்மான் முனி சாமிபிள்ளைகுண காத்திர னெதிர்ந்துகாண்க,

உன்னையல் லாலெனக் குறவின்ரு ளத்தியந்த உத்தமர்க ளி லையாதலால், உத்தியோக மின்றியான் நெடுநாள்படுந்துயர மொழியும் படிச்செய்யவே, உன்றனுலாகுமென் றண்டினே னெ ன்றன்மீ துள்ளன்பு வைத்தியாதாம், ஓரிடங் காட்டியெனை யாளா க்கி வைப்பதூஉ உன்மேல்விழுந்தகடனே.

கட்டளைக்கலித்துறை.

யாருமே லோரை யடுத்திடின்மேன்மை யடைவரொன ச்
சீரியர் சொன்னதற் குச்சான்று கண்டனன் திங்களொளி
நார மதிற்புக் குபுகுடந்தோறு நயந்தனவ ந்
நீரம தாலடுத் தேனென்னு ணின்றயை நீட்டுக வே.

கவர்ண்மென்ட் கெஜட்பிரஸ் கவுண்டாண்ட்

முருகேசமுதலியா ரவர்கள்மீது

இருபத்தெண்சீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

மணிகொண்ட மாடமா ளிகைகெழுமு வேலூரில் வந்தயா தவ குலத்தன், மாதவன லாதறிய கில்லாமனத்தன்மெய் வை ணவ வொழுக்கம் வாய்ந்தோன், மதிதவ ழெழிற்புரிசைமலிகோ மளப்பதி வயங்கியற் றமிழாரிய, மாமணிநலங்கொள்சென் னேத் துரைத் தனவித்தி யாசாலை மன்னுபுலவர்,

கணிகொண்ட சீர்த்திநம் ராசகோபாலனிரு கழலை மறவாத வன்பன், கவிநான்கும் வல்ல நாராயணச்சாமியாங் கவிராசன் விட்டகடிதம், கங்கைகுல மணிதிவ்ய சிந்தாமணியருங் கண்ம

ணி யெனத்திகழ்ந்து,கவர்ண்மெண்டு பிரசினிற் கவுண்டாண்டெ னப்புகழ் கதிக்கவரு ஞானமணியப்,

பணிகொண்ட பாயலான் சித்தாந்த மேபெரும்பயனெனுங் கவுத்துவமணி,பரிதிநிகர் மணிமாட மோங்குவேட் டீச்சுரப்பதி வரும் பாக்கியமணி,பகருமுரு கேசவள் ளற்பெயர்கொள் மணி யிதைப்பரிவாய்மகிழ்ந்துகேண்மோ,பரதகண் டத்திலுன் புகழ் சென்றிடாவிடம் பார்க்கிலை யாகையாலே,

அணிகொண்ட விப்பிரசி னிற்பன்னோ ராண்டுவரை யமிர்த சாமிப் பெயரினேன், அதிகமு முழைத்துமீக் கயநோயடைந்தா க மிகவாடி யசைவுமற்றே,அதனால் வரப்படுந் தன்மை யின்மை யினீயு மன்பினாற் கீசுதுரையின், அருஞ்சபையினிற்பேசி யுப கார சம்பள மடைந்திடும் படிசெய்வையே.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

புனிற்றுன்கின் றிளம்பசும்புல் லெனக்கறிக்கு மரகதத்தூ ண் பொலியுமாடந், தனித்திலங்கும் வேட்டீசு ரத்துமை கரத்து நதிதன்குலத்து, மனித்தர்செய றங்கெழுமிக் கான்முளையா வரு முருகே சப்பேர்வள்ளால், இனித்தமியே னின்சமுக மடைந்து கேட்பது மொன்றஃ தியம்புகேனால்.

நேரிசைவெண்பா.

உலகோங்குங் கீர்த்தி யுயர்முரு கேச
நிலவுதருவனையாய் நின்ற—சலவன்
படுந்துயரந் தீர்க்கப் படாதோ? வெஞ்ஞான்று
மிடம்படுமெய்ஞ்ஞானத்தோ யிங்கு.

கட்டளைக்கலித்துறை.

நாத னரங்க னெனநான் மறையு நவிற்றுவதோர் ந
தாதி யவனென் றடைமுரு கேச வருட்பெருக் கே
நீதியி னேழை வருத்த மறிந்துநன் னேயது நை
தீதில் சமுக மறிவித்தென் றன்குறை தீர்ப்பதுவே.

செஞ்சி - ஆறுமுகசெட்டியார் அவர்கள்மீது

நேரிசைவெண்பா.

மதியந்தோ யும்மதிள்சூழ் மாண்பாருஞ் செஞ்சிக்
கதிப னருணா சலவேள் - சுதனாறு
மாமுக! வின் றென்னை வரவழைத்து நல்குமன்புக்
காமொர்பரி சுண்டோ? வறி.

விருத்தக் கலித்துறை.

மதிமி லேச்சிய சடிலனார் வாழ்வினை விழையும்
அதிபர் மூவரி லிருவரும் பிறந்ததும் அரியே
பதியெ ணாவிற் றிடுமொரு பளகிலாமுதலாக்
கதுவு நங்களாழ் வார்களே கலக்குறும் பதியும்.

நிலவு சீர்த்தது புனிதரி னெடியசீர் நடுநா
டிலக வந்தவன் வணிகர்தங் குலத்திடை, வந்தோன்
நலமுறுமரு ணாசல வேள்சுத னங்கள்
புலமை சான்றகண் ணந்தமா ரிஷிபொலங் கோத்ரன்.

சித்தி ரத்தடந் தேரினென் றாழ்ச்செழுங் கதிர்செம்
பொத்த மாடங்களண் மற்ற தஃதுரு குதல்போன்ம்
வித்தகத்தொரு வேழநின் றிறையென விழையும்
அத்த னார்நில வியசெஞ்சி யம்பதியமர்வோன்.

சந்தவிருத்தம்.

ஐந்தின்பிணென்றுநெஞ்சிற்பொருந்து மதுகாட்டலவனுமொரு
வந்திங்கடைந்து புலவோர்கலக்க மாறும்படிக்குதிக்குஞ் [கால
சந்தஞ்செறிந்த குலநாமவாறு முகனாஞ் சலாபனுளமும்
வந்தென்றுமன்பு கூரும்படிக்கு வலயத்தில்யான்விழைவதே.

கட்டளைக்கலித்துறை.

கருணா கரன்பத மேதஞ்ச மென்னக் கருதியநம்
பிரதாபன் றோன்றி புனையரு ணாசலன் பெற்றநங்கள்
குருமா மணிப்பூ ணாரத்தாறு மாமுகக் கொற்றவன்மெய்
யொருநா முறைக்கு மரிச்சந்திரனென் றுரைப்பதுவே.

கொடையினிற் கன்னன் றருமத் தவன்பின் குவலயத்தே
நடையினி லன்னவ னாலடை யும்பரிசென்ன நவிற்
றடையலர்க் கிங்ங னசனியென் றோதுபவனிவணன்
படனனி நல்கினென் போற்செல்வ மிங்ங னுடையரன்றே.

சென்னைமா நகரத்திலிருக்கும்

செ. வ. சகநாதம்பிள்ளை யவர்கள்மீது

நேரிசைவெண்பா.

காமேவுஞ் சென்யம்பாக் கத்துவரதப்பேர்
தேமேவு வள்ளல் செழுந்தவத்தின்—மாமேவு
நங்கள் சகநாத! ஞாலத் துனதன்பு
தங்கும் படியெனக்குத் தா.

கட்டளைக்கலித்துறை.

நூல்கொண்ட சிந்தையன் பூங்கணைமார னுதியிலைச்செ வ்
வேல்கொண்ட வித்துவ மால்சக நாதனின் வீரவெற்பி ன்
மால்கொண்டவென்மொழியைக்கிளிச்சொல்லெனமன்னியின்பு
மேல்கொண்ட நாயக னுக்கென தாவல் விதஞ்சொன்மி னே.

சோலைக் கிருங்குயிற் காளங்கொண் மாரனற் றோற்றங்கண்டான்
ஆலைக் கரும்பின் சிலையிடை யேமல ரம்புகொண்டா ன்
சாலக் கருங்குழ லென்செய்கு வாள்சக நாதனே னு
மாலைப் பரந்தன மாதிர் விரைவில் வரச்செய்ம்மி னே.

பாட்டுப் படித்து வரும்புல வோரைப் பழித்துத்தங்க ள்
வீட்டுக் கடிக்கடி வாரா திருமென விள்மடைய ர்
கோட்டுக்கும் வேசைக்கு மல்லாது வேறுகொடுப்பதுண்டோ?
தேட்டுக் குடையண்டர் மால்சக நாதற்குச் செப்புமி னே.

பந்தான மேவுநின் மேற்புல வோர்பிர பந்தஞ் சொல்லி
வந்தா லவர்க்குக் குபேரனு மஞ்சுவன் வானவர்சூழ்
சந்தானங் கற்பகங் கொண்டல் சுரபி சலசநிதி
சிந்தா மணிக்குஞ் சகநாத நீயெனச் செப்புவரே.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வண்டுசென்றால் செழுமலர்த்தார் மதுவருந்தி மயக்குறும்
பைம் மயிலோவென்றால், கண்டுகொண்ட வவன்விழியினுக்க
ஞ்சுஞ் சிலைமதனைக் காளமொன்றிங், குண்டுசென்றால் வளர்த்
தெடுத்ததாய்க்குதவாப் பிள்ளையைப்போ லெனைத்துறக்கும், ப
ண்டுசென்ற முகில்பொதுவர் குலசகநா தற்கெனது பசைசொ
ல்வாயே.

நடுவெழுத் தலங்காரம்.

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

பத்துகிளி பெரியசபை நூறுவாளி
பசுதவளம் வயலெனவெண் பதமெட்டுள்ளே
மத்திமத்தி னடுவெழுத்தாற் பெயர்படைத்தம்
மாண்பினுக்கே வமைந்தபுகழ் மலிவாய்ச்செய்ய
எத்திசையுந் துதிசென்னியம் பாக்கத்து
விணையினக ரவதரித்த வினியசீரார்
உத்தமனே! யிதுகவிதை யுளத்தராய்ந்துன்
னுரியதிருக்கருணை வெள்ளம் பெருகமாதோ.

தசம்	சுகம்	மாநாடு	சதம்	அம்பி
	கபிலை	வெள்ளை	விளைவு	

திருவெவ்வுளூரைச்சார்ந்த நெல்வேலி கிராமமுன்சீபும் மணியமும் ஆகிய

நல்லதம்பிமுதலியா ரவர்கள்மீது

நேரிசைவெண்பா.

சீராரும்நெல்வேலிச் சீமான்ரு மோதரப்பேர்
காராளன் புத்திரசி காமணியே-ஏராருஷ்
நல்லதம்பி மாலே! நீ நான்றவா யற்கிளைய
வல்லதம்பி மாலாய் வதி.

வேதன்ரு தைப்பாத மேபணியு நெல்வேலி
நாதனல்ல தம்பிக்கு நாணியே-மாதிரதி
காந்த னருவுருவங் காட்டிப்போர் செய்கின்ருன்
மாந்தர்மே லேங்கணையை வைத்து.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

துதிமேவு நெல்வேலியூரா! காராளகுல சோமா! நல்ல [ன்
மதிமேவுதாமோ தரக்குமுணன்றவத்தில்வருமைந்தா!செம்பொ
நிதிமேவு நல்லதம்பி மாலே! கேள்ராயபுரி நிலம்வாழ்வித்வான்
ததிமேவு நாராயணச்சாமி யானென்பால் தயைவைப்பாயே.

இரத்தினப்பிள்ளை யவர்கள்மீது

கட்டளைக்கலித்துறை.

மாவேந்து மைங்கர னுக்கிளை யோன்பத வாரிசத்தை
நாவேந்து கின்ற திருக்கண வூருறை நற்றருமன்
பூவேந்து சோலை யபிதானனீன்ற புதல்வ! தமிழ்ப்
பாவேந் திரத்தின மாலே! யென் மேல்வைநின் பட்சத்தையே.

திருவெவ்வுளூரைச் சார்ந்த நெல்வேலி

வாசலிங்கப்பிள்ளை யவர்கள்மீது

நேரிசைவெண்பா.

சீரார்கருணீகச் செம்மல்சுப்ப ராயனருள்
காராரும் வாசலிங்கக் கன்ரு! நின் - ஊராகும்
நெல்வேலியிலுன்ற னேயம்பிடித்தவெனை
வல்வாயனென்றே மதி.

அ வித்துவான், நாராயணசாமி பிள்ளை இயற்றிய

காசிற் பணத்திற் கவிவாணர்க் காசையெனக்
காசினியிற் சொல்லுங் கருத்தறிந்த - வாசலிங்க
சோமா! நெல்வேலி துரையே! நிலைத்திடுங்காண்
பூமிதிலுன்றன் புகழ்.

சீனிவாசநாயகரவர்கள்மீது

பதினான்குசீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மணிகொண்ட பஃறலைச் சேடன் சுமந்திட வயங்குறும் புவி மாதுமா, மதிமுகக் கொருதிலக மென்றிலங் கிடுதொண்டை மண்டலத்திற் கரும்பின்,

கணிகொண்ட சாறடும் புகைமுகி லெனத்தோகைகண்டு நடனங்குயிற்றுங்,கலாமதிச்சேகரனை நிகர் வெண்மாடம்பொலி கவின்செய்திருமங்கலத்தில்,

அணிகொண்ட வேங்கடத் தப்பனரு ளெய்திநின்னகன்சில ம்பினிலிங்ஙனே, தானுமா வேன்கொலென் றருந்தமி ழலங்கல் சொல் லவிர்தருங் குலசேகரத்,

திணிகொண்ட வடிகள்மா போங்கவரு சீனிவாசச் செம் மல் தேரினீயச், செங்கண்மாலடியனு கலினென்று மென்பால் சிறந்ததயை புரிதியின்றே.

சென்னைமாநகரத்திலிருக்கும்
இராயபுரம், மெடிக்கல் மிஷியன் வைத்தியசாலையின்
அப்பாத்தகிரியாகிய

றெவரெண்ட். டி.கே. இட்டி அவர்கள்மீது

இருபத்தெண்சீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

உலகெலாமுன்னம் படைத்தளித்துண்டுமிழு மொப்பிலான் சமஸ்தவேதம்,உபநிடத மூவறுபுராணமிதி காசங்க ளோதருங்க மலநயனன்,உலப்பிலன்புறுமன்பர் மனமலரி லெந்நாளுமுறைந் திடும் முத்திமுதல்வன், உவட்டாத வின்பவடிவாம்பரம னடியி ணையை யொருபோது மறவாதவன்,

அலகறு தமிழ்ப்பிர பந்தகடல் செழும்புய லணையுமெயில் செறி சென்னையின், அணிபெறு துரைத்தனக் கல்விநற்சங்கத்

தருந்தமிழ் முதற்புலமையை, அழகுற நடாத்திடு மிராசகோ பாலனெம் மையனடி மைக்குமடிமை, அன்பன் வேலூர்நாரண ச்சாமி கவிஞனிங் ககமகிழ்ந்தெழுதுநிருபம்,

விலகிவில்லுமிழ்பொலன் மணிமாட நிரையோங்கு மேன் மைசெறி ராயபுரிவாழ்,விற்பனன் றமிழருமையறிவிரகனற்சத்ய வேதநெறி யொழுகுசீலன், மெடிகல் மிஸ்யோன் சங்கமுயர்பா த்தகிரியாய் விளங்கிடு குணளனங்கள, வியன்மணியெனத்தகும் இட்டிமகிபாலனனி விழைவினொடெதிர்ந்துகாண்க,

பலகலைவி நோதனீ யறியாத தொன்றில்லைபாரின்க ணுத்தி யோகம், பண்ணுதவன்புருட னன்றெனப் பழமொழி பகர்ந்தி டுந் திறமோர்ந்தியான், பலதரமு, முனதுசமுகந்தனைத் தேடி யென் பருவரலுரைத்திருப்பேன், பரிவினிற்செய்விப்பை யேலூ ழிவரையுமே பரவுமுன் கீர்த்திவளமே.

நேரிசைவெண்பா.

மட்டில் புகழ்வளத்த மாராய நன்னகரின்
இட்டிமகி பாலனைச்சென் றெய்தாத—தொட்ட
கவிவாண ரிங்கென்? கவிவாண ரெய்தப்
புவிவா ணருமாவார் போந்து.

உம்பர்க்குத் தன்வந் தரியென்று முன்னருஞ்சீர்க்
கும்ப முனியிக் குவலயக்கு—நன்பெரிய
வாகடத்த னுனர் வயங்கெங்கள் இட்டியைப்போல்
வாகடத்தரோ? வவர்தாம் மற்று.

சென்னைமாநகரத்திலிருக்கும்,

த. அ. தம்புசாமிபிள்ளை யவர்கள்மீது

கட்டளைக்கலித்துறை.

கங்கை குலத்து வருந்தம்பு சாமியாங் கன்னனை நீ
மங்கலமாக வழுத்துகண்டாய் நெஞ்சமே! வழுத் தி
லெங்கும் புகழவெஞ் ஞான்றுஞ் சுகமுற் றிருப்பையென்றே
யிங்குனக் கோதின னுலவன் பாற்சென் றினியடை யே.

நிதிசெய் குபேரன் றனைநிகர் தஞ்சை நிலவிய சி
ரதிசெயமாலி னருந்தவ மேயுரு வாகவரு ந்

கo வித்துவான், நாராயணசாமி பிள்ளை இயற்றிய

துதிசெயரும்புகழ் சால்தம்புசாமிச் சுகுண! மன க்
கதிசெய மீதென் றுரையன்பென் பால்வர வாய்ந்தரு ளே.

சந்தவிருத்தம்.

கம்புலா மலர்த்தடங் கவின்செய் தஞ்சை வாழுந
தம்புசாமியென்பெயர் தயங்குறுந் தராதி பா!
இம்பரொன் னரும்பெறல் எனக்குநின்ற னன்ப தே
யும்படிக் கருள்கவென் றிரங்குமென்ற னெஞ்ச ரோ.

நேரிசைவெண்பா.

தந்தைசொன் மிக்கவருந் தாய்சொலென்றே யௌவைதான்
முந்துரைநீதிச்சொன் மொழிககிங்ஙன்—நந்த
விலாவிலக்கி யந்தம்பு சாமியென் றன்பி
னெலாவுலகஞ் சொல்லு மிசைந்து.

சேசு பதமன்றிச் சிந்தைசெய் யாமனத்து
மாசில்தம்பு சாமி மகிபாலா—நேச
மலது பிறிதொன் றடியேன் விரும்பேன்
நிலனிடங் கண்டாய் நினைந்து.

இராயபுரத்திலிருக்கும்,

ச. ச். அந்தோனியப்பநாயக ரவர்கள்மீது

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

பரிதிதன்றேர்க் குரகதக்காற் படத்தெங்கின் காயிளநீர்ப்ப ணைசே ருக்கும், அருமைசெறிவளங்கெழுமு சத்திமங்கலப்பதி யி னழற்குலத்து,வருதிவாகரன்மரியின் குழவியையுள் குறுநெ ஞ்சம் வாயந்தோனிக்,குரிசிலென்பாலெஞ்ஞான்று முன்னருள் கூரும்பரிசு கூட்டுவாயால்.

நேரிசைவெண்பா.

சத்திமங்க லத்துச் சவரிநா தேந்த்ரதுரை
நற்றவத்தில் வந்த நவமணியே—இத்தருணத்
தென்பா லிரங்கினையே லெஞ்ஞான்று முன்பெருமை
யன்பா வழுத்தாதார் யார்?

மனனுணர்வாற் சாலமோன் மன்கொடையாற்றோபிஸ்
எனநில வந்தோனி யெனுநம்—வனியகுலச்
சீமானற் சத்தியவே தாசார மாசீலக்
கோமான் குறையுளதோ? கூறு.

கொடையாளி யேவான் குலவுமெனன் மேலோர்
நடையா தலினங் நலனோர்ந்—திடையாவன்
பாலீய்ந்தான் யாங்கள் பகருமந் தோனியென்
மாலேமிகவு மகிழ்.

கட்டளைக் கலித்துறை.

வாயா லனந்தனுங் கூறகில்லாப்புகழ் வாய்ந்தநங்க ள்
சேயாமந்தோனித் துணைமகிபாலன் சிலம்பிலிவ ன்
வேயாலரியா னறுங்கோங்கிணன் மிக்கவேதனையு ற்
றுயாலரிதுநின் றன்மருந்தாலன்றி யாருயி ரே.

செந்தா மரைத்தடஞ் சூழ்சத்தி மங்கலஞ் செய்தவமா ம்
அந்தோனியென்னு மபிதானவள்ள லணிவரைமே ற்
கொந்தார்குழலாண் மிடைந்தே யன்னேனுட் குறிப்பையிங்குச்
சிந்தாகுலததினிற் கல்விக்கென்றேகல் தெரிந்தன ளே.

வஞ்சனறப்பெற்ற நெஞ்சினர்வாழ்த்து மந்தோனியெனு ம்
எஞ்சில் புகழ்மலி யுங்குணசாலியை யேய்ந்தவனை த்
தஞ்சமென் றோர்பெறும் பேறிதென்றோதத் தகுவதன் று?
விஞ்சுநஞ் சேடன் வியப்பாற் பிலனேர்ந்திருந்தன னே.

காரைக்கால்,

ச. அமிர்தசாமிபிள்ளை யவர்கள்மீது

——:0:——

கட்டளைக்கலித்துறை.

கங்கைக்குலத்து வருஞ்சவரிக்குட்டி கான்முளையாச்
சங்கைக்குரிய வர்ச்சிஷ்டரைப்போற்றத் தரணிவந்த
செங்கைக்குக் கற்பக நாணுநின்னேயந் தினம்பெருகை
என்கைக் கமுதசாமித்துரை யேதுரை யோதுகைக்கே.

எழுசீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மடந்தையர் நிதம்பத் தோருக் கன்றன்
வளமலி பொற்றையா முருளை
யிடம்பொலி தேரை நகுதருகாரைக்
காலென்று மிரும்பதி வேளாண்

கஉ வித்துவான், நாராயணசாமி பிள்ளை இயற்றிய

மடந்தபு குலத்து வாணனைப் பொருவ
வயங்கமிர்த சாமியா மாலே!
கடந்தவன்பென்பால் நல்குதியாலென்
றடைந்தனன் கரிசினின் னிடனே.

நடுவெழுத்தலங்காரம்:

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

பெண்பிரிய மருத்துவகை யொன்றின்பேர் — வநிதை
சமீபந்துன் பிகந்த ஞானங் — அன்பு
கண்ணியவோர் முனிவன்பேர் வேற்றுமையின் — அபின்
வடிவஞ்சா யகமெனற்கு — அணிமை
நண்ணுரு பொருட்பொலிவி னடுவெழுத்தா — ததிசி
மமிர்தசாமிப்பேர் நல்லோய் — உருபு
புண்ணிய மெலாந்தடித்தோ ருருக்கொண்டா — அம்பு
லெனவயங்கும் புனிதமாலே.

சென்னைமாநகரம்,
முனிஸ்பால்வைஸ்பிரஸிடெண்ட்

பழவை, இராமசாமிசெட்டியாரவர்கள்மீது

ஐம்பத்தாறுசீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கார்கொண்ட நெட்டிதழ்க் கமலத்தணங்குதன் கவினுரங் கொண்டமுதல்வன், கஞ்சனைச்செற்றுமோர் கஞ்சனைத் தருமி ரைங் கஞ்சக்கரத்துமாயன், களிற்றினைக்கொம்பொன்றி னுற்ற டிந்தோலிடு களிற்றினைக் காத்தபரமன், கழறுபுன்கூனியை வரு த்தியோர்கூனியைக் கலந்தன்புகொண்டவுரவோன், கங்கை தருபாதாம் புயத்தினுலோர்கருங் கல்லணங்காக்குமிறைவன், க ணிச்சிவானவன்வில் லொசித்துமிதிலேசன்கனங்குழையைவே ட்டபெருமான், கண்ணனுனிலன்வரும் யாதவகுலத்தினுன்கலை யெலாம்பரசுமன்னேன், காலையெக்காலுமறவாத மனனக்குலக் ண்புடவிசெய்தவத்தால்,

ஏர்கொண்டபடிவுகொண் டன்னு னெழிற்சென்னை யேய்ந் திடும்பெருமைசாலும், இராசதானியின்வித்தி யாசாலை தன்னி ல்நன் கியற்றமிழ்ப்புலமை தன்னுள், இசைந்திடுந்தலைமையை

நடாத்திடும் புலவனறி வினிலிசைகொள் சேடனன்னான், இல குபரிமேலழகர் முதலாயவுரையாள ரீண்டுருககொண்ட தொப் பான், இறைமைசால்கம்பரா மாயணத்துட்பொரு ளிறும்பூது கொளநல்குவோன், என்கணனை யானியற் றமிழ்நாவ லோரோ றெனப்புகல வந்தநிபுணன், இராசகோபாலதேசிகனையேத் தன் பர்த மிரும்பாதமேத்துமன்பார், இதயநாராயணச் சாமிநாவல் வனின் றெழுதிவரவிட்டநிருபம்,

பார்கொண்டபுகழ்மலி தரும்வக்வமுனிவனும் பாற்கடலில் வந்தபெரியோன், பரும்பொருட்குவைதரும் கிட்கிந்தமாலையா ன் பதிநிலையினெஞ்சமலையான், புமரபம்பாநதி யெனும்பெயரி னாற்றினான் பசித்தவர்க்கன்பாற்றினான், பமரங்குலாங்காந்தள் மாலையான் அன்பர்தம் பணிசெயுங்குணமாலையான், பைந்நாக மென்னுமாமுரசினான் உமைபங்கன் பதுமமலரடிபரசினான், ப ணிகண்டுவெருவுபுட் கேதனன்பதுமைவளர் பைம்மாடநனிகே தனன், பலருந்தன்வாசல்முன் பழவையான்பரவைநனி பணில முத்தீன்பழவையான், பைம்பொன்முடி அரசர்பின் வருராம சாமியாம் பைந்தருவெதிர்ந்துகாண்க,

நீர்கொண்டமாமுகி னிகழ்த்தினீ செஞ்சாலி நேருநான்பா ற்கரனுநீ,நீர்மைசெறிகமலநா னிலவுநீ குமுதநா னேரிலாத்தா தைநீநான், நிலவுறும்மகவுநீ யன்னைநான்புதல்வனீ நிகழ்த்துறு ந்தேனுவஃதீன், நீடுகன்றேழையே னீசென்னைநகரத்து நிகழ் விசாரணசங்கமாம், நீதிபுனைசபையினில் வைஸ்பிரசிடெண் டெனு நிலைமைபெற்றேங்கினையிவண்,நெடும்போழ்திலம்பாடெ னுஞ் சூறைவன்காற்று நெடிதலைப்பத்துரும்பா, நீணிலத்திஞ் ஞான்று மனவாட்டமெய்தியே நெஞ்சுருகிநின்முன்றில்வாய், நின்றேனைமுன்னவிலுமரபினோர்தொழிறந்துநிற்கவருள்புரிவை யென்றே.

நேரிசைவெண்பா.

பராவருஞ் சீர்வசியப் பாற்கடலிற் றோன்றித்
தராதலமேத் தத்திகழுந் தக்கோன்—கராங்கடிந்த
மாயனேர் நங்கண் மணிராம சாமியெனுந்
தூயனையே நெஞ்சமே! சொல்.

கச வித்துவான், நாராயணசாமி பிள்ளை இயற்றிய

சென்னை, கவர்ன்மெண்ட் பப்ளிக் ஓர்க்ஸ் டிபார்ட்மெண்ட்
சீப் அகௌண்டாண்ட்

மாவண்டூர், தியாகேசமுதலியாரவர்கள்மீது.

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

மருப்பங்கயத்தடஞ்சூழ் மாவண்டூர் செய்தவமாவந்தசைவத், திருப்பங்கயத்தவனுங் காணாதவரனருளிற் றிளைத்துவாழும், விருப்பங்கயத்தவளை வில்லியடியவரருளும் வியக்கப்பெற்றேய் திருப்பங்கயத்தமலை தருஞ்செல்வத் தியாகேசச் செவ்வேள்கேண்மோ.

நின்க்கொருநான் விண்ணப்பஞ் செய்வதஃதிஞ் ஞான்றிந் தநீணிலத்தின், மனக்கொன்றுந்தகாததுவன்றஃதினியுன் னருள் பெறுவான் மதித்தன்றே, தனக்குன்ற மாவடையுந் தனதனிகர் தனிகசிவா கமங்கள்தேர்ந்திட், டுனற்கருமந் நெறியொழுகிப் புகழுடம்பி னினிதுலவு மொருவனென்றே.

நேரிசைவெண்பா.

அமலத் தியாகேசற் கன்புசெய்மா வண்டூர்
சுமனத் தியாகேசத் தோன்றால்-எமது
குறையகல வேண்டிக் குறுகினே னென்றன்
முறைசெவிம டுத்துதவு முன்

சதுரங்கபட்டணத்தைச்சார்ந்த மெய்யூர்
மணியம், முனியப்பநாயகர் குமாரராகிய

முருகேசநாயகரவர்கள்மீது

நேரிசை வெண்பா.

திங்கள் வெதும்பிசுடா தென்றலுளம் பாய்ந்துசுடா
கங்கு லிருளுங் கலந்துசுடா—கங்கைக்
கரைபாயு மெய்யூர் கதிக்குமுரு கேசன்
புரையொழித்தென் னைப்புணர்ந்த போது

என்னத்தைச் சொன்னாலும் என்னத்தைச்செய்தாலுஞ்
சொன்னத்தைச் சொல்லிமனஞ் சோர்கின்றாளி-மன்னன்முனி
யப்பவள்ளல் சேயென்பாள் ஆமென்பாள் சம்புமுனி
செப்புகுல னென்பாள் நிகைத்து.

விசையன் விறல்விதுரன் வீட்டுமன்குபேரன்
திசைபுகழ்கன் னன்குமுணன் சேடன்—இசையார்ந்த
வல்லமுரு கேசதுரை வள்ளலுக்கு வென்குறையைச்
சொல்லவிது நாளளியீர் தூது.

அறியு முயிரொவையும் ஆண்டகையென் பார்போல்
உறுகையா வுங்கையென் றேதேன்—அறம்வளர்க்குஞ்
சீர்முருகேசன்கமல செங்கையே கைமற்றை
கார்பனங்கை வேங்கைமுருங் கை.

கடடளைக்கலித்துறை.

கேட்டே னினிவிடமாட்டேன் கிளரொளிக் கேழ்வடத்தில்
தோட்டேன் வருமலர்ப் பாட்டே மிழற்றுஞ் சுரும்பினங்கள்
ஆட்டே விரும்பிய கோட்டே யுயர்வரையம்புயனே!
நாட்டேறு சீர்த்தி வளர்முரு கேசவென் னுயகனே.

நாகலாபுரம், கௌரிகுல வீராசாமிநாயுடு
குமாரர்,

இராசகோபாலதாசர்மீது

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

விண்ணின்மதி மிகையெனநின் றிலங்குமுகத் தெரிவையர்
பேரல் விழைந்துமஞ்ஞை, நண்ணிநட நவில்நாக லாபுரத்துக்
கௌரிகுல வீராசாமிப், புண்ணியன்செய் மாதவமே யோருரு
வாய் வருபுதல்வா! புகழ்துழாய்த்தார், கண்ணனிணை யடிமறவா
இராசகோபாலதா சரசேவாழி.

சிறுநாவூர், அன்னப்பரெட்டியார் குமாரர்

வேங்கடராய ரெட்டியா ரவர்கள்மீது.

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

மாவூருங் கற்பகநாட் டிறைமுதல வமரரெலா மகிழ்வி னேத்துஞ்,சேவூரும் பெருமானைச் செஞ்சடையின்மதியூருஞ்சிவபி

வித்துவான், நாராயணசாமி பிள்ளை இயற்றிய

ரானை, நாவூருஞ் செந்தமிழ்க்கு நலமளித்த பெரியோனை நயக்குஞ் செல்வ, மாவூருஞ் சிறுநாவூர் வேங்கடரா சேந்த்ரநனி வாழ்க மன்னே.

திரிசிரபுரம், அருளானந்தம்பிள்ளை குமாரர்

சின்னசாமிபிள்ளையவர்கள்மீது

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்

சாரப்பாப்புலவர்வரிற் சிந்தைமகிழ்ந் தன்புகொடு தண்டஞ்செய்து, பாரப்பா கிலைரசிதம் பொற்பரிசு பொழிதிரிசிரப் பேர்கொண்ட, ஊரப்பன் பெருங்கொடைசின்னச்சாமிகன்ன னென வுதிக்காவிட்டால், ஆரப்பா வென்பாரார் ஆரப்பா செந்தமிழி னருமைதேர்வார்.

புதுவை, சவரிமுத்துராயமுதலியார் அவர்கள்மீது

நேரிசைவெண்பா.

வாய்மைமிகும் புதுவை மான்மரிசூசைத்தவத்தின்
சேய்சவரி முத்தேந்த்ர சீமானே! நீயெளியேன்
மீதெஞ்ஞான் றுங்கருணை மிக்கூர்ந் திருந்திடவெப்
போதலரு மோகின்னுட்போது

இராயபுரம், சுதரிசனதாசரவர்க ளியற்றிய

கண்ணன் சரித்திரக் கீர்த்தனைக்கு.

நேரிசைவெண்பா.

கண்ணன் சரிதம் கடல்சூ ழுலகின்மிசை
உண்ணயந்து கீர்த்தனமா யோர்ந்துரைத்தான் - வண்ணமணி
மாடஞ்சே ராயபுரி மன்னுஞ்சுதரிசன
நீடாந்தர கவிஞ னேர்ந்து.

தஞ்சைமாநகரம், மகாவித்வான்

சதாவதானி

ஸ்ரீமது. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் மீது

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பூவிலுயர் திருத்தஞ்சை வாழ்சுப்ர மணியனெனும் புலவா? நான்கு, பாவிலுயர் வெண்பாவு மெப்பாவும் மூவினமும் பரிசோ டேற்றுங், கோவிலுய ரவதான மொருநூறும் நீயுஞற்றுங் கொ முமைகேட்டு, நாவிலுயர் சேடனனி யுடல்விளர்த்துத் தாழ்ந்த னெனி னவில்வதென்னே.

ஜீயர்குளம், பாலகவி - தெய்வநாயகப்பெருமாள் நாயகரவர்களாலியற்றப்பட்ட

வானமாமலைச்சதகத்திற்கு

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

புயலனைய புயக்கொடைஞ ரொக்குறுமா முநிக்கரசன் போல்வா னீடும், வயறடங்கள் செறிமதுரைத் தெய்வநா யகப் பெருமா ளெனுநாமத்தோன், உயுமரவத் துடலினும்பாற் கடலி னுந்தண் ணடையினிலு முறங்குபெம்மான், இயல்வளஞ்சேர் வானமா மலைச்சதக மெனுமொருநூ லியற்றினனே.

ஷை யார் பாடிய வானமாமலை அலங்காரக்

கொம்மைப்பாடலுக்கு

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

மெய்வருநான் மறையோர்ந்த பூசுரரு மீசுரரும் வியந்து போற்றக், கைவளைவி லீசனுமங் கயற்கணியுந் திகழுசினகரஞ் சேர்கூடற், றெய்வநா யகப்பெருமா ளுரையலங்கா ரக்கொம் மைத் தேனையுண்டோர், தைவருமெய் யானந்தத் தடங்கடலுட் படிந்துமுத்தி சார்வர்மாதோ.

கஅ வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

ஷெயார் இயற்றிய திருக்குருகூர் மாறன் யமகவந்தாதிற்கு

கட்டளைக் கலித்துறை.

நாலா யிரத்தின் வழுத்தீர்த் தருளிய நாதமுனி
போலா யிரங்கவி சொன்மாறன் றுளினை யிற்புனைந்தான்
பாலா யியமக வந்தாதி தன்னைப் பகர்ந்த தொற்றை
மேலா யியங்கும் படித்தெய்வ நாயக வேந்துதித்தே.

குமாரமுத்துச்சீடை ஈஸ்வரனென்னும்
ஆண்டிச்சுவாமியின்மாணாக்கர்

சித்தமக்கவிராயரவர்களியற்றிய

சிதம்பரஸ்தவத்திற்கு

சந்தக் கலிவிருத்தம்.

சுத்தசை தன்னிய மாய்த்தொடர் கிற்கும்
அத்துவி தப்பொருள் வாழ்வமர் தில்லை
நற்றவ மொன்று நயந்துரை செய்தான்
சித்தம னெனவரு தேசிகன் மன்னே.

சதாவதானம்,வாலசுப்பிரமணியஐயரவர்கள் இயற்றிய

பொய்சொல்லா மெய்யர்பதிகம் நான்மணிமாலை

இவைகளுக்கு

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

முந்நீரே முடையுடுத்த வவனியிடைக் காரைநகர் முன்னி வாழும், பொய்ந்நீர்மை யில்லாமெய் யனுக்கோர்நான் மணிமாலை புனைந்து தந்தான், செந்நீர்மைவழிநின்று மறைமநுவா லெச்சங்கள்செய்யுநீரான், மெய்ந்நீர்மை குன்றுநம் வாலசுப்ர மண்யனெனு மேதக்கோனே.

பெங்களூர், சு. இராமசாமிபுலவர் இயற்றிய பரத்துவதியானகீர்த்தனைக்கு

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

சைவர்கடஞ் சிவசமய நெறியென்பார் நாரணன்றன் சமயத்தோர்கள், பொய்யில் விசிட்டாத்துவிதப் பொருளென்பாரேனையர்தம் பொருளேயென்பார், பெய்யருளங் கடற்கடவுணிலையுணர்வார்க் குறைவிடமாம் பெங்களூரிற், சையிகலி ராமசாமிப்பரத்வ தியானகீர்த் தனையைமாதோ.

அஷ்டாவதானம். பூவை, கலியாணசுந்தரமுதலியாரவர்களியற்றிய திருவொற்றியூர் தியாகேசர்பதிகத்திற்கு

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

நற்றவத்தோர்க் குறைவிடமாந் திருவொற்றி யூர்தியாகர் நளினத்தாளிற், குற்றமினற் பதிகப்பா மாலையிசைத் தனன்சைவ குலகாம்பீரன், புத்தவே டெனுமூரன் மாலண்ணு சாமிதவம் பொலிகுமாரன், பத்திமிகுங் குணசீரன் கல்யாண சுந்தரவேள்பாவல்லோனே.

நேரிசைவெண்பா.

ஒற்றியூர் தியாகற் கொருபதிகஞ் செப்பினனே
நத்துமண்ணு சாமி நதிகுலமான்—முற்றுதவத்
தூலன் கலியாண சுந்தரவே ளென்னுமொரு
பாலன் றமிழிற் பரிந்து.

திருக்கழுக்குன்றம்,கந்தசாமிமுதலியாரவர்களியற்றிய ஞானானந்தசிந்திற்கு

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

நந்தூரும் வயற்கழுக்குன் றினிற்கங்கை குலமுஞற்றுநற்றவத்து, வந்தூரும் பேருமிலா வொருவனர னென்றுணர்ந்து மகிதலக்கு, முந்தூரும் ஞானநிலை யினைக்கந்த சாமிமுகில் முனைந்து ஞானச், சிந்தூரு மறிந்திடப்பெய் திட்டதுமோர் வியப்பிற்றோ ?தெரியுங்காலே.

உ0 வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

தஞ்சை,ஷட்டாவதானி வைரக்கண் வேலாயுதப்புலவ

ரியற்றிய நச்சுப்பொய்கை விலாசத்திற்கு

எழுசீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

செஞ்ஞீல மலர்தஞ்சை நகரில்வந்த செல்வவை ரக்கண் வேலாயுதக்கோன், இஞ்ஞாலத் தவர்க்குநச்சுப் பொய்கையின் சீரின்பவிலா சமதாக்கி யீந்தானல்லன், அஞ்ஞானப் புதையி ருள்சீத் தெமதுள்ளத் தமர்கண்ண னன்றிமற்றோர் முதற்றே வில்லென், மெஞ்ஞானந் தலைசிறந்து வினைவீட்டி வீடுபெ று மொருநெறியை விளக்கினனே.

ஷையா ரியற்றிய திருக்குறிப்புத்தொண்டநாயனார் சரித்திரக்கீர்த்தனைக்கு

குறள் வெண்பா.

திருக்குறிப்புத் தொண்டர் செழுங்கீர்த்தனமீங்
குரைக்கவுரு காருமுளரோ?

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சட்டாவ தானிவை ரக்கண்வே லாயுதமுத்தமிழ்வல்லோர் க்குத், தட்டாதிந் நூலியற்று போழ்தடிசிற் குதவிசெய்தச்சிட் டுத்தந்து, ஒட்டாரங் கைபிடித்தா னூலரங்கேற் றவையிடத்து முதவிசெய்யத், தெட்டாரோ காலிமர போங்குதியாக ராயனெ னுஞ் செவ்வேண்மன்னே.

ஷையா ரியற்றிய செவிபூடணோற்ஸவாரம்ப பாசுர குஞ்சத்திற்கு

அறுசீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சவைபூட ணச்சென்னை வேப்பேரி வாழ்அண்ணா சாமி வள்ளற், றவபூட ணப்புதல்வன் முருகேசப் பிள்ளையின்சொற் சமுகந்தன்னிற், செவிபூட ணோற்சவா ரம்பபா சுரகுஞ்சந் திறத் தளித்தான், கவிபூடணன்வைரக் கண்வேலா யுதப்புலவன் கரு ணைமாலே.

ஷியாரியற்றியபஞ்சரத்தினத்திற்கு

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

இடுக்கணெழித் தினருள்பெறு வானிறைவி யுண்ணமுலை
த்தாய்தண்சீர், அடிக்கணெரு பஞ்சரத்தினமா மலங்கலிசைத்
தருள்தியென்ன, வடிக்கும்வேலூர் கிருட்டி னச்சுவாமி சேய்வர
தப்பிள்ளை வேண்ட, உடைக்கும்வை ரக்கணவே லாயுதநா வல
ரேறு வுரைத்திற் றன்றே.

நேரிசை வெண்பா.

காதி னுழைந்து கருத்தாதா னத்தேறிப்
பேதமையைப் போக்குகின்ற பெற்றியால்-வேதப்
பொருளாமுண் ணமுலைத்தாய் பொற்சரண்பா மாலைக்
கருள்வாரிங் காரோ? அஆ.

சென்னை, இராயபுரத்திலிருக்கும் சோதிடர்

பு. உருத்திரகோடிப்பிள்ளை யவர்களியற்றிய

பழனி வழிநடைச்சிந்திற்கு

நேரிசைவெண்பா.

மாதிடங்கொண் டோன்பயந்த வான்பழனி யான்றலக்கு
மாதிடங்கொண் டோர்சிந்து மாநிலக்குச்—சோதிடரி
லுன்னப் பொருவி லுருத்திரகோடிச் செப்பல்
என்னற் புதமென்பேன் யான்.

புதுவை, கா. ஷடாக்ஷர ஆரியரவர்களியற்றிய

அதிபத்தநாயனார் சரித்திரகீர்த்தனைக்கு

நேரிசை வெண்பா.

கதிபத்த ரைப்பரவுந் தன்மையெனக் கண்டோர்ந்
ததிபத்தர் சீர்த்தி யனைத்தும்—புதுவைச்
சடக்கரவேள் கீர்த்தனமாச் சாற்றினன் யாரும்
கெடக்கருதா வண்ணங் கிளர்ந்து.

உஉ வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

தி. ச. கண்ணுசாமிமுதலியார் பார்வையிட்ட

ஆனந்தநாதகுரு தேசிகேந்திர சுவாமிகள்
பதிகத்திற்கு

நேரிசை வெண்பா.

ஆனந்த நாதற் கணிபஞ்ச ரத்தினமாந்
தேனிந்தத் தேயத் தவர்ப்ருக—ஞானந்தோய்
கண்ணுசாமிக் கவிஞன் கைப்பிழைதீர்த் தச்சிட்டான்
நண்ணுவோர்க் கன்பாநயந்து.

சென்னைபிளாக்டவுண் ஐஸ்கூல் என்னும்
வித்தியாசாலைத்தமிழ்த்தலைமைப்புலவராகிய
இராயபுரம்,

அ.ச.ஜெகராவுமுதலியா ரவர்கள்

ஞானானந்த புராணம் அச்சிட்டதற்கு

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நவிலருஞ் சத்ய மறைதனிற் பயின்று நாவலோன் தோம் பிலிப்பிசைத்த, கவிகளா லாஞா னாநந்தமென்னுங் காவியத்தினில் வழுக்களைந்து, புவிதனிற் கற்றோர் வியப்புற வச்சிற்பொறித்தனன் ராயமாநகரான், அவிதருவானக்குருகுலசெகரா வாந் தமிழ்ப்புலமை சான்றவனே.

ஷியார் இயற்றிய இலக்கணசிந்தாமணிக்கு

எண்சீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

பூமகளின் கீழொளித்தா னனந்தன்செவ்வி
பொதியமலைக் குகையொளித்தா னகத்தியன் செந்
நாமகளு முடல் விளர்த்தாள் குருவோநாணி
நவக்கிரகத் தொன்றுனு னளினச் செந்தாட்
டேமகள்வாழ் மெய்யகத்தன் சவரியப்பன்
றிருப்புதல்வ னிராயபுரன் குருகுலத்துக்
கோமகள்சேர் செகராவாந் தமிழ்த்தண் டங்கங்,
கொழித்த விலக்கண சிந்தா மணிநூற்கண்டே.

இராயபுரம், பிரிசர்ச் மிஷன் உபதேசியார்

பொ. சாமுவேல்சுந்தரமென்பவருடைய

திருவிவாகமகோற்சவமங்களவாழ்த்து

நேரிசை வெண்பா.

சீர்பெற்ற வஞ்சுகச்சொற் றேவமக ளீர்வாழ்த்தும்
பேர்பெற்ற பெண்மணிநா கோமியம்மாள்-தார்முற்றுங்
கொண்டாடச் சாமுவேல் சுந்தரற்குக் கொத்தலர்பூ
வண்டார மாலையிடல் மாண்பு;

சொற்கொண்ட தேவ சுதனடிபொன் சாமிதவச்
சொற்கொண்ட சாமுவேல் சுந்தரவேள் - விற்கொண்ட
நாகோமி யம்மாளை நன்மணஞ்செய் தென்றென்றும்
வாகோடு வாழ்க மகிழ்ந்து.

பு. அ. மிக்கேல்சாமிசெட்டியாரவர்களியற்றிய

இராஜதூதன் என்னும்நூலுக்கு

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

அட்டதிசை யரசர்முடி மணிமகரந்
தப்பொடிக ளாரும் வாயல்
கட்டழகன் பிரின்சாப்வேலுலகமெங்கும்
பவனி வந்த காரணத்தைத்
திட்டமுடன் றமிழ்நடையி லியற்றி யச்சிட்
டான் புதுவை சென்னை மிக்கேல்
செட்டி ஐய லெனும்புனிதன் றவப்பேருய்
விளங்குகுண செல்வன் மாதோ.

"சென்ற் மேரிஸ்காலேஜ்" தமிழ்ப்பண்டிதர்

பு. த. செய்யப்பமுதலியாரவர்களியற்றிய

மும்மணிமாலைக்கு

நேரிசை வெண்பா.

சீரார் புதுவைநகர்ச் செய்யப்ப வேளின்று
நீரார் மதுரை நெடுந்தகைமேல்—பேரார்
குலமும் மணிமாலை கூறிப் புகழை
நிலவப் புரிந்தா னிலத்து.

உச வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

ஷையார் பிரசங்கத்திற்கு

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

சீர்விளங்குங் கலைதெரிநஞ் சவேரிநாதத்
திருப்புலவன் சிறக்கச் செய்த
பேர்விளங்குந் திருவருளா னந்த
மாலையை யிங்ஙன் பிரசங்கிக்க
ஏர்விளங்கும் புதுவைவரும் செய்யப்ப
நாவலனு னியைவ தன்றிப்
பார்விளங்குஞ் சத்தியவே தந்தெரிந்தோ
ரும்முணர்ந்து பக ரொணாதால்.

காரைக்கால், பி. ஆரோக்கியசாமி பிள்ளையவர்க

ளுடைய திருவிவாக மகோற்சவ மங்களவாழ்த்து.

இருபத்தெண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மணிகொண்ட கடல்புடை யுடுத்தபுட வியன்மன் னுயிர்த் தொகையின்வெம்பவக்கா,வரைபடுமலைக்குநே ரெனமாடமாளி கைகள் மல்குபெத்லேமிலன்று, மரியன்னை மணிவயிற்றுதய மாய்க் கபிரியேல் மாத்தூதன் வரவுணர்த்த, மனுவுருக்கொண் டவம் மாண்டிபராவுசீர் மருவுகங்காகுலத்தில்,

கணிகொண்ட செல்வநவ நிதியன்றியறியாத கவின்கொள் மன் னவர்பின்னரொக், காலுமுறைதருமெழிற் காரைக்காலென் பெயர் கழன்றிடவேயாசுமுதலாங்,கவிவலோர்கவியெலாந் தன் பெயரிலங்குறக்கண்டபிலவேந்திர விந்திரன், காசினியின் முன் குயிற் றியபெருந்தவமெலாங் கான்முளையெனவந்ததென்,

றணிகொண்டவகிலமுர, சறையவருபுண்ணிய னாரோக்கிய சாமி யென்னும்,அதிவிற்பனன்கல்வி மிகுசுப்ரதீபனுங்காமனுங் கண்டுமகிழும், அங்கற்பகக்காம னும்மஞ்சநனிதுஞ் சலர்த்தட மிகப் பொலிதரூஉம், அரும்பதிகருங்குழியி னல்லறப்பகுதி யெனல் யாவுமோராகாரமாந்,

துணிகொண்ட சீர்த்திபெறு மெங்களண்ணாச்சாமி துரை யின் மகவாய்க்கற்பெலாந்,துதையுமுருவாய்க்கல்விகேள்வியெல் லாமொரு தோற்றமா மாச்சிக்கணும், சொல்லரும் குணசாலி யுந்தோ மிகந்துலக சுகசெல்வ வாழ்க்கையோடு தூயவர் கொ ண்டாடவே செயமணம்புரியுமா சுபங்கண்டு வாழ்த்துவமரோ.

கட்டளைக் கலித்துறை.

பூச்சக் கரம்புக ழுங்காரைக் காலிற் புலவர்க்கெலாம்
பாச்சக் கரவர்த்தி யேத்துங் குலன்வருபாக்கியமென்
றுச்சக்க ரேசநின் கீர்த்தியைச் சொற்றிங் ககமகிழ்வார்
ஆச்சக்கண்ணாளொடு நீ கூடிவாழ்ந்திடு மன்புகண்டே.

நேரிசைவெண்பா.

ஆரோக் கியசாமிக் காச்சிக்கண் ணுக்கென்றும்
பேரோ முதலெழுத்திற் பேசுங்கா-னேரோயிங்
கொத்தவெழுத் தாதலினு லொத்துமன முற்றுலகி
னித்தனையே வாழ்த்துவார் நின்று

புதுவை, ஞா. முத்துச்சாமிபிள்ளையவர்களியற்றிய சனிக்கிழமைப்புதுமை கீர்த்தனைக்கு.

———:o:———

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

பனிக்கலைமா மாதிசுலாம் பொலன்மாடம் பலகெழுமிப் பரிதியன்ன, நினைக்கரும்வாய் மையின்மாந்தர் வாழ்மனைசால் புதுவைநக ருலாவு சீர்த்திப், புனற்கங்கா குலதிலக னுமுத்துச்சாமிப்பேர்ப் புனிதனிக்காற், சனிக்கிழமை புதுமையெனுஞ் சரிதையைக்கீர்த் தனைநடையாச் சாற்றினனால்.

துதிமிகுசத் தியவேத சாகூஷிகணற் சரிதமதைச் சொல்வர்காரி, புதுமையென வதனைநா டகத்தமிழின் முத்தமிழ்தேர்புலவோர் மெச்ச, முதுமொழிவாய்ப் பப்பகர்ந்தான் புதுவைவளர்ஞானியெனு முதியோன்றந்த, மதலைமுத்துச் சாமிகவி வலவனறிவானனந்த னனையான் மன்னோ.

ஷையா ரியற்றிய வியாகுலமாலைக்கு.

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

'தூயதமிழ்க் கலைபயின்றிட் டிலங்குமுத்துச் சாமியாந் தோன்றலென்பான், மாயிருஞா லம்பழிச்சக் குயிற்றியிடு வியாகுல மாமாலையைக்கேட், டாயகருப் பிரதத்தோ டன்பான்முக் கனிகலந்திட் டருந்தினலு, மேயவிதை நிகர்த்திலதே லிதற்கிஃதொப்பன்றிவிரித் துரைப்பதென்னே.

உசு வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

நேரிசை வெண்பா.

சீர்கொண்ட தென்புதுவைச் செல்வன்முத்துச் சாமியெனப்
பேர்கொண்ட நாற்கவிஞர் பெம்மானி-னேர்கொண்ட
செந்தமிழ்வி யாகுலமா மாலைத் திறமுரைக்க
ஏந்தரமா மோ? விங் கினி.

ஈசூர் வெங்கடாசலமுதலியார் குமாரர்,

சுப்பராய முதலியாரவர்கள்மீது.

கட்டளைக் கலித்துறை.

குஞ்சரக் கோட்டு வரிமுலை யீர்மதன் கோத்துவிடுஞ்
செஞ்சரந் தேர்பரி பேரிகை தண்குடைச்சீறலினால்
வெஞ்சுரக் காம விடாயது தீர விளித்தருள்வீர்
தஞ்சமென் றோர்க்கரு ளீசூர்சுப்பராய தனதனையே.

பாக்கம், இரங்கசாமி முதலியாரவர்கள்மீது.

கட்டளைக் கலித்துறை.

திருவருட் பாக்கந் திருவேங்கடமால் செயுந்தவங்கள்
ஒருவுருக் கொண்ட வெழில் ரங்கசாமி யுயர்நலமே
பெருவுருக் கொண்டென் முனம்நிற்ப தான்மதன் பெய்சரங்கள்
அருகுறைந் தென்செய வல்லதுசொல்லுக ஆயிழையே.

சென்னை முத்தியாலுப்பேட்டை ஐஸ்கூல் உபாத்தியாயர்,

பா. பெ. சுப்பரர்வுநாயுடு அவர்கள்மீது.

கட்டளைக் கலித்துறை.

சொல்லாளு வாரும் புவிபொரு ளாடவர் தோயுஞ்சந்தப்
பலலார மேரு மலைமுலை வேல்விழிப் பாங்கியரே!
சல்லாப னும்பெரு மாள்சேய் சுபுராவ் தராபதிக்கு
எல்லா மறியச் சொலுவீர் விரக மெழுமுனமே.

ஷையார் சோதரர்,

பா. பெ. ஜானகிராம்நாயுடு அவர்கள்மீது.

———:o:———

கட்டளைக் கலித்துறை.

பாப்பான் குளம்பெரு மாள்சாமி நாயுடு பற்றுதவங்
காப்பான் கதித்தசேய் ஜானகிராமென்னுங் கர்னனரும்
பூப்பான காலத்து நேயனன் கொவ்வைப் பொலியிரசத்
தேய்ப்பான முண்டு மகிழ்தரச் சேடிகாள் செப்புகவே.

ஆ. அண்ணுமலை முதலியாரவர்களியற்றிய

விநாயகர்பாமாலைக்கு

———:o:———

நேரிசை வெண்பா.

தேமாலை வாழீசூர் செல்வ விநாயகன்மேற்
பாமாலை பாடிப் பரிசுற்ருன்—மாமாலை
நண்ணுர் திசைக்கீர்த்தி நம்ராம லிங்கனருள்
அண்ணு மலைப்புலவ னுய்ந்து.

கலி விருத்தம்.

பாவின் முற்றிய பல்சுவை மேவிய
நாவின் முற்றிய நம்பி யண்ணுமலை
தேவின் முற்றிய செல்வற் பழிச்சலின்
கோவின் முற்றிவர் கொண்டிஃ துரைப்பரோ.

சென்னைமா நகரத்திலிருக்கும்,

பு. வேதாசலநாயகரவர்கள்மீது.

கட்டளைக் கலித்துறை.

பாரோங்கும் புன்னமை யூருடை யான்கவிப் பண்ணுடையான்
சீரோங்கு சம்பு முனிகோத் திரன்மால் திரண்டெழுந்த
வாரோங்கு மென்முலை மாதே வேதாசல மன்னவன்மேல்
போரோங்கு மையலுற் றேன்மதன் வாளி புறப்பட்டதே.

வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

இராயபுரம்,

மு. இரத்தினவேலு நாயகரவர்கள்மீது.

கட்டளைக் கலித்துறை.

பொன்மா மகளு மகள்வளர் ராய புரம்வசிக்கும்
நன்மாவிரவு முனியப்ப நாயக னற்றவத்தின்
றன்மா திகளுருக் கொள்ரத்ன வேலெனுந் தண்ணளியன்
முன்மா வெழிற்றத்தை காளென்றன் மேர்க மொழிகுவிரே.

சென்னைமாநகரம் முத்தியாலுப் பேட்டையிலிருக்கும்
வேதாந்த பிரசங்கியார்,

அ. முனிசாமி நாயகரவர்கள்மீது.

கட்டளைக் கலித்துறை.

பூமகண் மாமுக மாஞ்சென்னை வாழும் புலவரிலசப்
பாமக ணுமறை யுட்பொருள் பன்னும் படியுதித்த
கோமக ணும முனிசாமி நாயகன் கோகனக
மாமுக மாமத னைக்கண்டென் காதல் வழுத்தணங்கே.

நெரும்பூர்,

மேகாவாசாரி அவர்கள்மீது.

கட்டளைக் கலித்துறை.

பொன்னுர மாமணி முத்தாரஞ் சந்தம் பொதுளுமுலை
மின்னே ரிடைதண் மதிதிரு மாமுக வேல்விழியீர்
பன்னேர் நெரும்பூரின் மேகாவாசாரி பரிவுடனென்
முன்னே வரச்சொல்லு வீர்காத லேய்ந்த விதஞ்சொலியே.

இராயபுரத்திலிருக்கும்,

பு. தி. வீரராகவப்பிள்ளை அவர்கள்மீது.

கட்டளைக் கலித்துறை.

சீர்கொண்ட தேவகி தேவி யசோதையர் செய்யறத்தின்
நீர்கொண் டுதித்த திருமாலைப் போற்று நெறிமறவா
நார்கொ டிருவேங் கடம்பிள்ளை சேய்வீர ராகவற்குச்
சார்கொண்டன் மேனி குயிலினங் காள்புகழ் சாற்றுமினே.

புதுவைமாநகரம்,

அவக்கா

வெண்மணி, ஐ. தம்பிப்பிள்ளை அவர்கள் மீது.

இசைக்கவி ரத்திநாகரம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

திருத்தகுதென் புதுவைவே ளாளகுல திலகனருஞ் சிறப்பு வாய்ந்த, பொருத்தமுறு வவக்காவெண் மணித்தம்பிப் பிள்ளை யினைப் புகழ்ந்திங்கோதுங், கருத்தமிழி ரத்திநா கரமென்னும் பனுவலுக்குக் கருணைசெய்யும், ஒருத்தனவன் சத்தியமறை யருத்தனவன் றிருவடியை யுளத்திற் சேர்ப்பாம்.

இருபத்தெண்சீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஜலநிதி யிடைச்சேஷ வமளிமிசை யறிதுயில்செய் சலசலோ சனனடியினைத், தாங்கிருத யாசனன் ப்ரெசிடென்சி காலேஜின் தமிழ்ப்புலமை யினைநடாத்துஞ், சகஸ்த்ரக்ரண ஞானபாஸ் கர ராஜ கோபால சற்குருபா தாம்புயத்தைச், சந்ததம் பணியுமா ணுக்கனைந் தியலிலக் கியவிலக் கணப்புணரியைப்,

புலனுற மடுத்தேப்ப மிடுகவிச் சலதரம் புனிதகோவை சியகுலப், பூமன்கிருஷ் ணப்பமால் தன்குமாரன்வளம் பொங்கு பணை சூழ்வேலூரன், புகழ்பெருகும் ஆங்கிலோ பாஷாந்திரன் றேட்டை பொரும்ஆர்ய முணர்விதரணன், புறங்கூறு நரைவெ ல்லும் நாராயணஸ்வாமி பிள்ளை விடுகின்றகவிதை,

கலவையிள தனவரம் பையருலவு மாளிகை கதித்தோங்கு புதுவையூரன், கனப்ரான்சு தேசபா ஷாப்தியின் முகட்டெழுங் கதிரென விளங்குமாரன், காராளகுலமோங்க வந்தவதரித்த கொடைகாம்பீர மிகுமுதாரன், கலையருமை யறிஅவக் காவெண் மணித்தம்பி காவலனெதிர்ந்து காண்க,

சிலநாண்முனம்மியா னின்னுடைந்துநீர் செய்தவுபசர ணையினையித், தேசவித்வான்கள்கேட் டகமகிழ்ந்துளர்வருந் திங் கள்பங்குனியினின்பாற், றிவ்யப்ரபந்தம தியற்றியச் சிட்டாங் குத்தேடிவர விஷ்டமுளனால், சித்தமிது போலநின்சித்தமுண் டென்றே திருப்தியெண முற்றனனரோ.

பஞ்சரத்நப் புகழ்ப்பாமாலை.

நேரிசை வெண்பா.

வேலை வளப்புதுவை வெண்மணித்தம் பிப்பிள்ளை
பால்பஞ்ச ரத்நப் புகழ்ப்பாவா - மாலையினைச்
சொல்லத் தயைசெய்வாய் சொல்லற்கரியசெயல்
எல்லாம் வலகடவு ளே.

பதினான்குசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

நீர்கொண்டமுகிறவழும்வெல்லைமலை ஆயர்கணெருங்கிப்பணி ந்தபாதம், நிமலிகனி மரியன்னை மடியினும் புல்லணையினிடமும் படிந்தபாதம், சீர்கொண்ட சூசைமுனி மருமத்தி னிடைபயில் சிறந்தசெஞ் சலசபாதம், தெரிககன வுடுகுறி யறிந்துமுச்சோதி டர்கள் சேவித்திறைஞ்சுபாதம், பேர்கொண்ட பெத்திலக மெரு சலமதாதிநடை பேறுபெறநாடுபாதம், பிணையிருப் பாணிகாயப் பாத மெங்குநிறை பிதாவலக் கைகொள்பாதம், வார்கொண்ட ஆதிதேவன்றிருச் சுதன்பாத மணமணக்கிதயகமலா! மன்புது வை யம்பதியின் மின்னுவேளாளவெண் மணிதம்பிப் பிள்ளை மாலே.

ஆதிவேதம்மோக்ஷ மருளும்வேதம் பிதா வரியவாக்கான வேதம், அமலமணி வேதமோ சேயினுக்களவொடு ரைந்தாயில ங்குவேதஞ், சோதிவேதந்தீர்க்க தரிசிகளெலாஞ்சொலித் தூண் டுவேதஞ் சேசுவாஞ், சுதனுரைத்திடுவேத முலகத்துயிர்க்கெ லாஞ் சொந்தமாய்வந்தவேதம், நீதிவேதந்தவிது கீதவேதம்ப்ர பலம் நீடும் அப்போஸ்தலர்க்கு, நெஞ்சத்துறும்வேத மவ்வேத வாராய்ச்சி நிதமுமகலா விதரணு! வாதிமூவேழ்மர்செங் கோன் மைக் குரித்தான வாய்மைகுணமார்ந்த விபவா! மன்புதுவையம் பதியின் மின்னுவேளாளவெண் மணிதம்பிப் பிள்ளைமாலே.

உள்ளாவலுறு மக்கள் பக்ஷத்தினும் பெரிய ரோதிடுமில் வாழ்க்கைதனினும், ஊதியச்செயலினுங் கணிதநுட்பத்தினு மூர வர்கண் மீதன்பினுங், கொள்ளுமுறைதனிலுநற் கல்விவிடயத்தி னுங் கூர்ந்தியோ சிப்பதினினுங், கோத்திரப் புகழினுந் தந்தை தாய் நெஞ்சினுங் குருமார்கள் திருவாக்கினுந், தெள்ளியகுணத் தினும்பழமொழிவிருப்பினுஞ் செந்தமிழ்ச் செய்யுள்களினுந், தீ ர்க்கவூக்கத்துனை நேரானமறுஜன்ம தேகங்கொள் வோருமுண் டோ? வள்ளன்மூவேழ்மர்செங் கோன்மைக் குரித்தானவாய்மை குண மார்ந்தவிபவா! மன்புதுவை யம்பதியின் மின்னுவேளா ளவெண் மணிதம்பிப் பிள்ளைமாலே.

சொன்னயத்தானு முயர் நன்னயத்தானுமிகு சூழ்ச்சியுறு புத்தியானுந், தொழினடையினானுமவ் வழியுணர்வி னானுமுக தோற்றமறி யறிவினானும், பன்னுநலொழுங்கானு மவரவர் தரா தரம் பார்த்துச்செய் நன்றியானும், பக்ஷம்வைத்திடினவர்க் கா கினுங் குறையொன்று பண்ணிடா நட்பினானும், உன்னதத்தொ டுகாலை மாலைசபதபநியம மோம்புங் கருத்தினானு,முள்ளங்கலங் கொணாத் தயிரியத்தானுமிவ் வுலகிலுனையன்றி யறியேன், மன் னர்மூவேழ்மர்செங் கோன்மைக் குரித்தான வாய்மைகுண மார் ந்தவிபவா! மன்புதுவை யம்பதியின் மின்னுவேளாளவெண் மணி தம்பிப் பிள்ளைமாலே.

கற்றபெரியோர்புலமை யோரெவர்கள்வருகினுங் கனிவா யுவந்து முன்னாள், காசினியி லீந்திடுங் கொடையாளர்தம்மினுங் கைமிகநிரம்ப வள்ளிப், பொற்பூடணங்களொடு நிதிமணியெலா மவர்கள் போதுமென் றோதுமட்டும், போற்றிக் கொடுப்பதினு மெளியோர் வரக்கண்ட போதுதவி புரிவததினுந், தளர்வின்றி யொன்றைக் கொடுப்பதினு நின்னைநிகர் தாதாக்களைக் காண்கி லேன், மற்கொடைமூ வேழ்மர்செங் கோன்மைக் குரித்தான வாய்மைகுண மார்ந்தவிபவா! மன்புதுவை யம்பதியின் மின்னு வேளாளவெண் மணி தம்பிப் பிள்ளைமாலே.

நவமணிமாலை.

நேரிசைவெண்பா.

கன்னன் புதுவைஅவக் காவெண் மணித்தம்பி
என்னுமிளங்கோவுக் கினிதிசைத்துச் - சொன்னவம
ணித்தொடைய லுக்கருள்செய் நேமிக்கடவுளைச்சித்
தத்திற் றுதிசந் ததம்.

கட்டளைக்கலித்துறை.

சீர்கொள் திரித்துவ மார்தனித் தெய்வத் திருமறையைத்
தேர்கொள்திருச்சவைக்றீஸ்துவர்தம்மிற்றிருக்கனையோய்
வார்கொள் புதுவைச்சிவி லவக்காவெண் மணித்தம்பிநின்
போர்கொள் செயுட்கள்வழிப் பெற்றதுதமிழ்ப்பேற்றினையே.

நிதம்பிரியான் கணமும்பிரியான் மெய்ந்நெறிச்சரத
மதம்புதையத்ரணமும் மதியாரை மயிர்ப்பிளவும்
பதம்புரியான் புதுவைப் பதிப்ரெஞ்சு நற்பாஷைவெண்ம
ணிதம்பிபிள்ளைப் பெயருற்ற பகீரதிநீள்குலனே.

௩௨ வித்துவான், நாராயணசர்மிபிள்ளை இயற்றிய்

அணிதந்து வந்தெரி பேராசிரிய ரகத்தினுக்கும்
பணிதந் தரப்பகர் பாவலருள்ளப் பதிவினுக்குங்
கணிதம்பொருந்துகணக்காயர் சித்தத்துங்காட்சியன்வெண்
மணிதம்பிப்பிள்ளைப் புதுவைவேளாளர் வரோதயனே.

எந்தெந்த நாளினுங் கல்வியுங் கேள்வியு மின்புமிருந்
தந்தந் தருவெண் மணித்தம்பிப் பிள்ளையெம் மண்ணலின்பால்
சிந்தந்தம் பாடி யரங்கேற்று வாணர் செழித்திடச்சீர்
தந்துங் குணந்தரு வான்றடை யின்றித் தனந்தினமே.

பண்மணி வாய்க்கவிப் பாவல ரேயருட் பாற்புதுவை, வெ
ண்மணி தம்பிப்பிள் ளைக்குன்டெஞ் ஞான்றும் விருப்பினிநின்,
கண்மணிச் சொற்பொருள் காமத்துப் பாலைக் கடைக்குவிற்
றங், கெண்மணி யாம்பொருட் பால்கொண்டிப் பாலிலுக் கே
குவையே.

பொல்லாக் கயவ ருழைப்பொருள் வீணர்க்கும் பூரியர்க்கு
மல்லாடு வம்பர்க்கு மாகியும் பாவம் வளர்த்திடுமால்
சல்லாப வெண்மணித் தம்பி நன் னுமத் தருமன்பொருள்
நல்லார்க்கு நாவலர் தங்கட்கு மாகி நயந்தருமே.

தாயான வள்மக வுக்குச்செய் நன்றி தனக்கதிகம்
ஞாயா திபர்தலங் காண்புது வைக்கண்ய லாயரொனுந்
தூயோ யெழில்வெண் மணித்தம்பி யேவித்துவஜனர்தம் [யே.
வாயா லிசைக்கக்கை யாற்பொன்னள் ளித்தரும் வண்கொடை

* கொண்மணி தம்பிர சமாநனிநின்னைக் கூடினர்க்குத்
திண்மணி தம்பி சகாதரு ணீயன்பு செய்திகண்டாய்
வண்மணி தம்பிதத் தார்மகிழ் சீர்ப்புது வைம்மணியாம்
வெண்மணிதம்பி சிகாமணி கண்மணி வேண்மணியே.

முத்தினத் தாணியும் புட்ப வினத்தின் முளரியும்பல்
வித்தையின் ஞானநல் வித்தையும் போலும்வே ளாண்மரபில்
உத்தமன் வெண்மணித் தம்பியென்றேயுல கஞ்சொலவெக்
னற்றமி ழுங்கமழ் கின்றது நின்புகழ் நற்கந்தமே.

---

* கொண்ம் - கொள்ளும்.
அண் - பொருந்திய.
இதம் - நெஞ்சம்.
திண் - வலிய.
மண் - பூமி.
இதம் - சொல்.
வண் - வளமையாகிய.
மணி - ஓசையை.

முன்முடுகு, நேரிசை வெண்பா.

கந்தமுந்த ரும்பெழுங்க ளுண்கவண்டி னஞ்செறிந்த
நுந்தழைந்தி டும்மலங்க ளுண்மருங்க - ரந்தருங்க
ணின்கணத்தை நேர்வெண் மணித்தம்பி மாலே! பாட்
டின்கணத்தை நேர்நின் னிதி.

பின்முடுகு, நேரிசை வெண்பா.

பண்மணிமா லைப்புயத்துப் பாடார் புதுவைநகர் [முத்
வெண்மணித்தம் பிப்பேர்கொள் வேளாளா!-வொண்மணி
திற்றவளத் தைச்சினத்துச் செப்பமுதத் திற்றெளித்துத்
துற்றருமச் சித்தமிகத் துள்.

நேரிசை வெண்பா.

வள்ளலவக் காவெண் மணித்தம்பி வேளாள
னுள்ளத் திளகி யுளையொழுங்கால் - மெள்ளமெளப்
பூரியரும் பூவுலகிற் போந்தகல்வி மீதூறிச்
சீரியரா ஞரோ சிறந்து.

சீரார் புதுவைத் தினகரனே! சேசுபதந்
தாரார் மலர்சூட்டுந் தன்மையனே!—காராருங்
கையானே! வெண்மணித்தம் பிக்கனவானே! கருணை
செய்வானே! யென்பேன் செறிந்து.

விஞ்சியசீர் மேய வியன்கங்கை மாகுலத்தி
லுய்ஞ்சிடயா ருந்தோன் றுதாரகுண—மைஞ்சபுது
வாபுரியின் வெண்மணித்தம் பிப்பெயரின் வள்ளலிங்க
னீபுரிதி நன்னலநி னைந்து.

குறள் வெண்பா.

வெண்மணித்தம் பிப்பிள்ளை மேதகையா! நங்களிரு
கண்மணிபோல் வான்சீர் கழறு.

நடுவெழுத்தலங்காரம்.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சுத்தாகா யம்பழனம் வனசஞ் சூளை
சோறுவேய் விளக்குகச கசப்பா றத்தை
ஒத்தசெழி விவைபத்துப் பதமொவ் வொன்று
முறின்மூவக் கரநாப்ப ணேங்கெழுத்தால்

வைத்தவபி தானவள்ள னின்னைப் பாட
வல்லனல்லே னுயினுநின் மாட்டெற் குள்ள
சித்தஞ்செய் வித்ததுகாண் பிரியா வன்பு
செய்குவாய் சுவணபுட்பம் பெய்கு வாயே.

தூவெளி	சாதம்	கிள்ளை
பண்ணை	காம்பு	விளைவு
தாமரை	தீபிமை	
கணிகை	அபின்	

வஞ்சித்துறை.

அன்பரை யரணிதி, பொன்பயில் புதுவை
வெண்மணித் தம்பிமால், மன்புகழ்க் கரமே.

கட்டளைக் கலிப்பா.

வெளைப்பணிமணி யாதியெண் பெண்ணினம்
மேதினியி லிழைத்திட வேண்டுமேற்
றுளைப்படுத்துங் கருவி வை ரம்மணிச்
சூட்டும்பேர்வெண் மணித்தம்பி பிள்ளைநின்
றுளிப்பறிந்துதேம் பாவணி நூற்றிற
மோங்கும்வேள்சவ ராயலிசைக்கவிக்
களிப்பறிந்துரைத் தேனிதை யானுநின்
கருணைகூர்ந்து கருதக்கடவதே.

இதுவுமது,

வழங்கிடும்பிழை நோக்கி வாதிக்கவும்
மையொருங்கற வசனித்தெழுதவும்
பழங்கனிந்தது போற்ப்பொஞ்சுபாஷையிற்
பாடவும்விதி நூலெளிதிற்படா
தழுங்குகின்றவர் யாரும் புதுவையி
லண்ணல் வெண்மணித் தம்பிப்பிள்ளைக்கிளர்
ஒழுங்குகண்டுக ளிப்பது போலிந்நூல்
ஒழுங்கு கண்டுளத் திற்களிப் பார்களே.

விருத்தக் கலித்துறை.

வானர் மணிமா டஞ்செறி வளமார் தருபுதுவைத்
தீனு பதிகங் காகுல தரணீ பதிமரியின்
ஞானு பதிகழ னுடிய நவில்வெண் மணித்தம்பி!
யானே வதுதெரி யுந்தயை யிலனென் பதுமெவனே.

அஞ்சங் கண்டுயி லும்பனை சூழு மகன்புதுவை
விஞ்சிய சீர்கெழு கங்கை குலத்தில் விளங்கிமெய்வே
தஞ்சொ லிறைந்தென வந்திடு கற்பனை தாம்வழுவா
இஞ்சி குயிற்றிடு வெண்மணிதம்பீ! யெனக்கருளே.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மெய்யன்பிள் ளையைவிழையும் பெருந்தகைமை யாலிங்ஙன் மேதக் கோரும், அய்யன்பிள் ளையின்சேயென் றுரைக்கும்வெண் மணித்தம்பி யறத்தின் றோன்றால்!, பெய்யன்பி னுனைவிழையும் பல்லோரி னல்லேன்யான் விழுமி தன்றும், பொய்யன்பின் விழையுஞ்சில் லோர்போல்வே னெனினுமுனைப் புகல்புக் கேனே.

கட்டளைக் கலித்துறை.

விதுமலி மாடம் பொலிபுது வைப்பதி மேவியநன்
னதிகுல நாத னெனும்வெண் மணித்தம்பி நாட்டிற் கண்டோம்
கதியென் றடைந்தவர்க் கில்லையென் றுதருள் கைத்தலமும்
சதியெண் கிலாமன முந்தவந் தானந் தழைத்திடவே.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

கனந்திகழும் புதுவைநகர் வாழிசத்திய மறைவாழி கருதந் நூலின், மனந்திகழுங் குருக்களுட னரசரும்வை சியமரபும் வாழிநாளுந், தனந்திகழும் அவக்காவெண் மணித்தம்பி மாலொடன்னான் றமரும்வாழி, தினந்திகழு மிசைக்கவிரத் திநாகரமும் வாழியவிச் செகத்தின் மாதோ.

இந்திரபீடம் கரபாத்திரசுவாமிகளாதீனத்திற்குரிய
பிறைசை, அருணாசலசுவாமிகள் பிரதமமாணாக்கர்
சூனம்பேட்டுக்கடுத்த ஈசூர் - கணக்கு,
சச்சிதானந்தபிள்ளையவர்களாற்செய்யப்பட்ட
பிரபுலிங்கலீலைவிருத்தியுரைக்கு.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பூமேவும் பொழிற்றுறைமங் கலவீர சைவவெழிற்
பூமா னுகித்
தூமேவு மந்நெறிசெல் சிவப்பிரகா சப்பெயர்கொள்
தூயோன் சொற்ற
நாமேவும் பிரபுலிங்க லீலையெனு நூற்குரையை
நன்கு ரைத்தான்
காமேவு மீசூர்சச் சிதானந்த னெனுமதுர
கவிஞ ரேறே.

நேரிசை வெண்பா.

இலிங்கமே தானென் றிலங்கற் குபிர
புலிங்கலீ லைப்பெருநூற் பொங்கி—யொலித்தலினைக்
கண்டுரைசெய் தான்சச்சி தானந்தன் காண்போர்கற்
கண்டெனவே கொள்வார் களித்து.

மரபுலிங்கந் தானாய் வ்யங்குதிரு ஞான
பிரபுலிங்க லீலையெனும் பேர்நூற்—கரியதிறத்
தின்னுரைசெய் தான்புலவ ரேத்துசச்சி தானந்தன்
தன்னுரைநே ருண்டோ? தகை.

ச. வேங்கடராமாநுசதாசர்மீது.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மருக்கமல மகளுறையுந் துழாயடவி மருமமுறு
மாலே வையத்
தொருமுதலோ னெனவலனென் றோனுடன்வா தித்தபெரு
வுரவுத் தொண்டன்
பிரகலா தனவாழ்வான் புகழாந்த்ர கீர்த்தனமாப்
பேசி னன்றேன்
றருபொழில்சூழ் சந்த்ரகிரி வேங்கடரா மாநுசதா
சண்ணன் மாதோ.

விவாக மகோற்சவத் திருமுகம்.

இருபத்தெண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

சீர்கொண்ட ப்ரபவாதி யுவவருடம் வைகாசி திங்களிரு பத்து வாருந், திகதிதிங் கட்கிழமை வளர்பிறை சதுர்த்தசித் திதி பூச் நக்ஷத்திரம், செங்க்ரண கரச்சூரி யோதயம் ஆறுமணி தியானத்தில் யாதவ குலத், தீபன்வே லூரன் கிருஷ்ணபிள்ளை கனிஷ்ட சேயன்முத் தமிழ்த் தினகரன்,

பேர்கொண்ட மதனவேள் நாராய ணச்சுவாமி பிள்ளையவர் கட்கும் நெசல்வாழ், பெற்றிமிகு கனதைதிகழ் தீரன்வீ ராசாமி பிள்ளைநற் றவமதில் வரும், பெண்ணினல் லாளிரதி யனையகுப் பம்மாட்கும் பெட்புறுஞ் சுபமு குர்த்தம், பெருகுமக் கடிகை தனின் மாத்தூரன் முனிசாமி பிள்ளையரு மைப் புத்திரன்,

ஏர்கொண்ட ராமசாமிப்பிள்ளை யவருக்கும் இசைநாராயண சாமி மால், என்னுமண மகனது சகோதரன் கலைவலோர்க் கிடுகுணு கரவி கஜிதன், இனியவர தப்பிள்ளை யருள்சேயி காமாக்ஷி எனுமிளங் கொடிமி னுக்கும், இந்த்ராதி தேவரறி யத்திரு முகுர்த்தம்நிறை வேறுமித னைக்குறித்து,

வார்கொண்ட ராஜமா னியராஜ பூஜித மகாராஜ ராஜஸ்த்ரி தே, வரிர்தாங்கள் சென்னைராயபுரம் அர்த்தூன்வீதி மன்னு முதல் நம்பர் வீட்டில், வந்துமண வாளர்மண வாளிகளை ஆசீர் வதித்தேகு வீர்க ளெனநும், வருகைக்கு வழியினின் றெதிர்நோக்கிப் பலதரமும் வந்தனிக் கின்றோமரோ.

சென்னை பிளாக்டவுண் ஐஸ்கூல் தமிழ்த் தலைமைப்புலவர்

அ. ச. ஜெகராவ்முதலியாரவர்களெழுதிய

தேம்பாவணி வசனகாவியத்திற்கு.

பதினான்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

அணிகொண்ட வாரியஞ் செந்தமிழ் பிராஞ்சுகலை ஆங்லோவித் தாலி லத்தீன், அருங்கடற் பொருண்முகந் தன்பராம் பைங்கூழ் அகங்கனிய பொழியு மேகம், பணிகொண்ட சத்யமறையிந்நாட் டவர்க்கெலாம் பரப்புமா ரியவி தரணன், படரம் புலிச்சரணி கற்பரசி காவலூர்ப் பைங்கொடியாந் தேவ தாயின், திணிகொண்ட மெய்யடியன் வீரமா முனியெனச் சிறந்தவபி தான னன்கு-செப்புதேம் பாவணியி னுரைவிளங் காதுபலர் சிந்தை சேவேறல் தேர்ந்து, மணிகொண்ட தண்டமிழ்ச் செகாவு நாவலன் வசனகா வியமாக்கி யிம், மாநிலத் தோருய்ய வச்சுக் குயிற்றீந்த வண்மைசொல வசமாமரோ.

நேரிசை வெண்பா.

அட்டதிசைக் கீர்த்தியுறை அட்டாவ தானியென
மட்டில்புகழ் வாய்ந்ததமிழ் வண்புலவ!—இட்டமுடன்
தேம்பா வணிவசனத் தேறலைநீ யூட்டுகையில்
ஓம்பாதுண் ணுருமுண்டோ? ஓது.

வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

ஆலங்குளம், பெ. இராமநாடார் புத்திரர்

வேலாயுதநாடார் அவர்கள்மீது.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

வானில வுறைய விம்மு மலத்தனச் சசிமு கந்தண்
டேனில வெறிக்கு முத்தச் சேடிசே டாலத் தூரன்
றுனிய வமுதீந் துய்யுந் தனபதி பாண்டி யூரன்
தானினம் புரக்கும் வேலா யுதமுகில் மன்னி வாழி.

இராயபுரம், காசிமேடு வீராசாமிநாயகர் புத்திரர்

சுப்பராய நாயகரவர்கள்மீது.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

நீர்மரு கொண்டற் கொண்டை நிறைமதி வதனி வாடாப்
பேர்மரு மல்லித் தாரிற் பெருத்திடும் புயன்மெய்ஞ் ஞானச்
சீர்மரு சம்பு கோத்ரத் திலகனெம் வீரா சாமி
நார்மரு சேய்சுப் ராய நாயகன் நீடி வாழி.

மோசூருக்கடுத்த அக்ராவரம் மணியம்,

பெ. சேஷப்பிள்ளையவர்கள்மீது.

நேரிசை வெண்பா.

சொற்பெரிய மாராசன் சூழ்பெரிய தம்பிதவ
நற்பயன்சே ஷப்பிள்ளை நன்னளனைப்—பற்பலநாள்
சந்திக்கத் தித்திக்குந் தானேற் பவருளமு
மெந்தற்கெம் போல்வார்க் கெவன்.

விவாக மகோற்சவத் திருமுகம்.

பதினான்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பூமாதி னருள்கொண்ட வியவருட மாசிநான் காந்தெய்தி
பொலி திங்களிற், புகழ்சத்த மித்திதி சுவாதிநட் சேத்திரம் பொ
ங்குதய மொன்ப ததனிற், றேமேவு மேஷலக் கினமருவு சுப

வோரை தன்னில்சிந் தாத்ரி பேட்டைச், செல்வனுல கப்பமேஸ் திரிவீதி கதவிலக் கம்பத்த தாங் கிரகசெம், மாமா லெனும்பூர் த்த சாரதிப் பிள்ளைசேய் மாணிக்கம் பிள்ளை வேட்கும், மாவல ன்வீ ராசாமி பிள்ளைபுத் திரிபாக்ய வதியம்மா ளுக்குந் திரு, மாமாதி னருளினுன் மாங்கலோற் சவதிருவி ழாமகிழ்வ தாய் நடக்க, வந்தருள்வீ ருந்தமது பந்துடனு மாசீர் வதித்தருள்வீர் வந்தனமதே.

இராயபுரம், பலகைதொட்டிவியாபாரி

பெ. சிவராமநாயகர் அவர்கள்மீது.

நேரிசை வெண்பா.

பாரளந்த பாதம் பணிபெருமா ணுய்க்கன்றன்
சீரளந்த புத்ரசிவ ராம்நாய்க்கன்—நீருளினேர்
நெஞ்சங் களிக்கும் நினைநினவுக் கின்பமெழுஞ்
செஞ்சொ லொழுக்கந் தினம்.

மதுரகவி. கன்னியப்பபிள்ளை இயற்றிய சிலேடைவெண்பாமாலைக்கு.

நிலைமண்டில ஆசிரியப்பா.

சீர்தரு மாமறை தேடுந் திருவளர்
கார்மலி செங்கண் மால்பொற் கமலத்
துதித்தீ ரேழுல குயிர்பல பலவுங்
கதிக்கும் விஞ்சைக் கணிதங் கலையுயர்
வேதன் சிருட்டி வித்தக ரவருண்
மாதவத் தோனென வாழ்த்துங் காந்த
மாரிஷி கோத்திரம் வருமொரு பாண்டியன்
நீரருட் கங்கைக் குலநிதி சான்றேன்
சிவபிரான் செம்பொ னடிபொடிப் பூழ்தி
யெவரணி யினுமவ் விறைவனென் றிறைஞ்சும்
ஏனுதி நாயனு ரின்மர புதித்தோன்
மானு பரணன் மலர்முகத் தருமன்
வேங்கடே சக்கிரா மணிதவம் விளங்கப்
பாங்குயர் கொண்டல் கரன்பகர் குபேரன்
பரிதியின் சேயங் கத்தர சென்ன
வருள்பூஞ் சோலை கிராமனி யரும்புகழ்

நிலமிசை நிலவச் செந்தமி ழாய்ந்து
பொலன்பொலி சிலேடை வெண்பா மாலை
நலம்பெற நற்கொடை நச்சினி தியற்றி
யுலப்பி லெழுத்தா லுவந்தச் சியற்றினன்
பூங்குயில் பிரசப் பொழிற்றண் பணைசூழ்
காஞ்சி புரத்தோன் கரிய மாலடிக்
குதிக்குங் ஞங்கன் றூய காசிபர்
மதிக்குங் கோத்திரம் வருங்கலை வல்லோன்
அருணீ டரச ரகமகிழ் கொள்ளுங்
கருணீ கரின்குலக் கதிரவ னென்னப்
பகருஞ் சகநா தம்பிளைப் பன்னு
ளிகமீ தியற்றுந் தவமுருக் கொண்டு
வரும்புக ழேந்தி மாமது ரக்கவி
யிரும்புகழ்க் கன்னி யப்ப பிள்ளையே.

வேலூர் கிருஷ்ணசாமிபிள்ளையவர்கள் மருமகளும்

ஒதியம்பட்டு, கேசவபிள்ளை புத்திரியுமாகிய

சௌபாக்கியவதி,

அலர்மேலம்மாள் பரமபதமடைந்தபோதுசொல்லிய.

நேரிசை வெண்பா.

மலர்மேலம் மாள்கமல மாணடியைத் தேடி
அலர்மேலம் மாணீசென் றுயென்—றலையா
திருக்கினுமென் கண்க ளிராவுறங்கு தில்லை
உருக்கொடுவென் கண்முன் னுலா.

கருவைகுந் தம்பிறவி கட்டறுப்போர்க் கெய்துந்
திருவைகுந் தம்புகுந்த தேனே!—உருவம்
பிரிந்தா யலர்மேலென் பேர்பிரியா தென்றும்
விருந்தாதி யோர்மனத்தை விட்டு.

புருவச் சிலையும் பொருவிழியொண் வாளும்
திருநாசி யாங்கதையுஞ் சேரும்—ஒருசக்
கரமுகமுஞ் சங்கக் கழுத்துமலர் மேனின்
சிரமுகத்திற் கண்டுபிரிந் தேன்.

மன்னும் அலர்மேலம் மாணற்பேர் வாணுதலே!
நின்னை மறந்தாலு நின்னடத்தைத்—தன்னை
மறவேனை நீயு மறவா நெறிக்கீங்
குறவாகிக் காட்டா யுரு.

விருந்தோம்பும் பொன்னே! விளங்குபுவி மின்னே!
யிருந்தோம் புவிவாழ்ந் திருந்தோம்—பிரிந்திருக்கக்
காலம்வந்து மென்னுட் கரந்திருப்ப தென்னை? அலர்
மேலெனுந்ற் பேதாய்? விளம்பு.

ம. முனிசாமிபிள்ளையவர்கள் புத்திரியாகிய

குழந்தையம்மாள்

பரமபதமடைந்தபோதுசொல்லிய

பதினான்குசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

திருவோங்கு தாமரை மலர்த்தடஞ் சூழ்குருகை திகழவரு காரிமாறன், திருவவ தரித்தகலி யாப்தநா லாயிரஞ் செறியுந் தொ ளாயிரத்துக், குருவோங்கு நாலொழியு மெண்பானி லீஸ் வரக் கிளராண்டி லக்கோமகன், குவலயம் வருமதியின் மதியம் வா னவர்பெறக் குறைவில்கலை நுகருவிக்கும், மருவோங்கு பக் கத்தி னட்டமி புரட்டாதி மணிநான்மூ வெட்டுதேதி, மருவிய பகற்கால மிசையரவி ஞடியவெம் மான்றனி வளர்ந்தபொதுவர், உருவோங்கு மரபினி லிராயபுர முனிசாமி யென்னுங் குபேர னீன்ற, உத்தமி குழந்தையா லிறறுயில் குழந்தையை யுகந்து சென் றெய்தினளரோ.

விருத்தக் கலித்துறை.

தவம்புரி வோரு மடைந்தறி யாவத் தானத்தில்
அவம்புரி நெஞ்சறி யாத குழந்தை யடைந்தாளென்
நவம்புகல் கின்றது நந்தா மன்ரு ஞமினிநம்
பவந்தெறு வானரு ளென்றிட லுசிதப் பண்பாமால்.

கட்டளைக் கலித்துறை.

குழந்தையி லாவில்ல மென்னில்ல மென்னக் குறித்துலகம்
அழுந்துய ரோடு புகலுமவ் வாறிவ் வவனிமிசைக்
குழந்தை யெனும்பெயர் கொண்டிடு நீயெங் குடிசைவிட்டுத்
தொழுந்தெய்வதப்பதிக்கெய்தினையென்னெஞ்சுசோர்ந்திடவே.

சுஉ வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

எம்மாத் திரம்புத்தி சொன்னாலும் பாழ்த்த வெனதுமனஞ்
சும்மா விராமற் பலபோதுஞ் செய்யுந் துயர்க்கடலை
அம்மா கடந்தேற வோர்தெப்ப முண்டோ? வயனெழுத்தால்
அம்மா நிலங்கொண்ட அம்மா குழந்தை யணியரசே.

நேரிசை வெண்பா.

பாயிர மாமறையும் பைந்தமிழி னாலா
மாயிர மாமறையு மாராய்ந்தோர்—போயடையு
மம்பரமபதத்தை யன்பிற் குழந்தை
யிற்பரிவோம் பாலுற்று ளேய்ந்து.

இராயபுரம்,

மாத்தூர் வேங்கடாசலபிள்ளையவர்கள் மனைவியார்

தெய்வயானை அம்மாள் அவர்கள்

பரமபதமடைந்தபோதுசொல்லிய

இருபத்தெண்சீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

ஏர்கொண்ட கலியாண்டு நாலா யிரத்துத் தொளாயிரத் தெ
ண்பத்துமூன், றியல்சாலி வாகன சகாத்தமோ ராயிரத் தெண்
ணூற்று நான்கினிகழும், இசைகொண்ட பிரபவாதி மூவைந்தி
லேய்ந்தவிஷு வெனுமாண்டி லேப்பசிமதி, யிருபத்து நாற்றேதி
யிற்சோம வாரமே யிலகபர பக்கதுதியை.

பேர்கொண்ட ரோகிணி கௌலவா கரணம் பிறங்கிடு மே
ஷலக்னம், பேசுமிச் சுபதினத் தென்றுமேற் கடல்செலப் பிறழு
மிரு நாழிகையின்முன், பெட்பின்மதி மதிள்கடக் கப்பெரு தம்
பொன்மனை பீடுகெழு சாளரத்துப், பேதையர் குழாங்கள்கண்
ணாடியென நிலவிடப் பிரபலவண் மாத்தூரினன்.

கார்கொண்ட மேனியா னவதரித் திடவே கவின்கொள்யா
தவகுலத்துக், கற்பக நிழற்கணம ரிந்திரதிரு வன்வேங்க டாசல
மகீபனில்லக், காதலியி மாசலன் றுன்குயிற் றியதவக் காதலி
யை நிகர்மடந்தை, கற்புக் கருந்ததி யெனத்தகுதெய் வானையாங்
காரிகையில் லறவாழ்க்கையில்.

நீர்கொண்ட கடல்கொண்ட நிலன்வயிற் புன்னணிரம்பிடப்
புகழ்கொண்டுநன், னீதியா கத்தனது குலவிர்த்தி தனையே நிக

ழ்த்திநீ டன்குலத்தே, நிறைதவத் தால்வளர்ந் திடுகமல லோசனனை நெஞ்சமுட் கொண்டுநிறுவி, நிலையிலா விவ்வுடலை நீத்தென்று மழியாத நீள்விசும் பெய்தினளரோ.

கட்டளைக் கலித்துறை.

பிணிகொண்ட மாயை மலமாதி நீக்கும் பிரானெமையே
பணிகொண்ட வேய்ங்குழ லூதிபொற் பாதத்தைப் பற்றினள்கா
தணிகொண்ட மால்கும ரப்பிள்ளை யீன்றசௌ பாக்யவதி [ண்
கணிகொண் டிடுந்தெய்வ யானைநன் னுமத்துக் காரிகையே.

நேரிசை வெண்பா.

விஷ்வாண்டே யொண்டுலா மேலட்ர பக்கத்
திடையே யிலங்குதுதி யேய்ந்து—மிடைநாளி
னங்கடெய்வ யானை நமரங்கள் சூழ்விசும்பை
யிங்ஙனின்றுஞ் சென்றடைந்தா ளின்று.

இராயபுரம்,

வேலூர், கிருஷ்ணசாமிபிள்ளையவர்கள் மருமகளும்,

நெசல், வீராசாமிபிள்ளையவர்கள் புத்திரியுமாகிய

சௌபாக்கியவதி, குப்பம்மாள்

பரமபதமடைந்தபோதுசொல்லிய

பதினன்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சீருலவு பிரபவாதி பார்த்திப வருடத்திற் சேர்ந்தமா சித்திங்களிற், றெய்திபிரு பத்தொடொன் பான்வியா ழக்கிழமை திதி சஷ்டி, யறுமீன்கணங், தாருலவு மணிபத்திற் கோவைசிய துரை கிருஷ்ண சாமிமா லின்மருகளுந், தகுநெசல்வீ ராசாமி வேள் குமா ரத்தியுந் தகைராய புரவித்துவப், பேருலவு நாரா யணச் சாமி யெனுமெனைப் பிரியாத மனையுமான, பேதைகுப் பம்மா ளெனுங்குலக் கொடியே! பிறங்குமாண் குழவிபேற்றால், ஏருலவு நின்வயது விருபத்து மூன்றில்சுர ரேத்தரிய பரமபதவீ, டேறிவாழ் கின்றனை யானுமுக் குழவியு மினத்தார்க ளுங்கதறவே.

சச வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

நேரிசை வெண்பா.

பொற்கொடியே! நோக்கப் பொறியறிந்து போஷித்த
கற்புடையா! யுள்ளக் கனிவுடையாய்!—சொப்பனத்துஞ்
சஞ்சலங்கள் விட்டொழியோ? சார்ந்தனையோ? வைகுந்தம்
அஞ்சலெனச் சொற்றுவரிங் கார்.

ஆழ்வுபெறு பற்பல்வாழ் வாரா திகளடிக்கீழ்
வாழ்புபெறு குப்பம்மாள் மாமயிலே!—தாழ்வுபெறு
தென்பங்கி னிற்றுணையா யெஞ்ஞான்று நீயிருந்து
இன்பந் தருவா யிசைந்து;

பார்த்திவம் மாசி யிருபத்து வொன்பானிற்
சேர்த்தகுரு வாரம் திதிசஷ்டி—பூர்வமெனும்
பக்கங் கிருத்திகைசௌ பாக்யவதி குப்பம்மாள்
செக்கருல கேறுந் தினம்.

கட்டளைக் கலித்துறை.

சீர்கொண்ட யாதவ மால்கிருஷ் ணப்பிள்ளை செய்தவத்தின்
பேர்கொண் டுருப்பெற்ற நாரர யணச்சாமி பிள்ளையுள்ள
நீர்கொண்ட தேவிகுப் பம்மாள் வைகுந்த நிழல்பெற்றதால்
பார்கொண்ட வாழ்வு நிலையா தெனுமொழி பாலித்ததே.

கண்டாசிபுரம்,

நாராயணப்பிள்ளை

பரமபதமடைந்தபோதுசொல்லிய

—:*:—

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

செப்பரிய தமிழ் வருடம் ஸ்ரீமுகத்திற் றிகழ்தைமா தந்திகதி
பன்னி ரண்டில், ஒப்பிலுத்தி ராடநட்சத் திரம ரக்கர்க் குபதேச
குருவாரம் உதய் மெட்டில், பெட்புறுகோ வைசியகுலத் திருவ
நாதப் பிள்ளையருள் சுதன்நாரா யணமால் ஆழி, கைப்படுகண்
ணன்பரம வைகுந் தத்தைக் காணற்கிவ் வுலகைவிட்டுக் கழன்
றான் மன்னோ.

நேரிசை வெண்பா.

சீரார் நாராயணவேள் சிற்றின்ப வாழ்வொழித்து
பேரார் பரமபதம் பெற்றனனே—ஏராரும்
ஆழ்வார்க ளோரீரு றம்பொற் பதத்தினிதம்
வாழ்வார்ந் திருப்பதற்கே மற்று.

நேரசை கட்டளைக் கலித்துறை.

என்றைக் கிருப்பினு மோர்நாட் கிறப்பமென் றெண்ணியிளங்
கன்றைக் கருதி வருமாவின் வந்தருள் கண்ணுதலோன்
குன்றைக் கலந்தநா ராயண மால்வண் குபேரனவன்
சென்றத்தி னாலறி வாளர்க ணெஞ்சந் திடுக்கிடுமே.

கூத்தவாக்கம், முத்துசாமிபிள்ளையவர்கள் மனைவியார்
சௌபாக்கியவதி,

பொன்னம்மாள்

பரமபதமடைந்தபோதுசொல்லிய

பதினான்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஏர்கொண்ட சாலிவா கனவருட மிருநூற்றி னொன்றொழியி
ரண்டாயிரம், இலகுதா துருவருட மீனரவி தேதிமதி னொன்றி
யற் சுக்லபட்சம், சீர்கொண்ட சப்தமியின் மிருகசீ ரிடநாற் செ
றிந்தவிர வினிலிரண்டாஞ், சேர்கடிகை யிற்பொன்வா ரச்சுப
தினத்தினிற் றேவர்பெரு மான்முன்வளரும், பேர்கொண்ட குல
திலக னஞ்செம்பொன் மாடம் பிறங்குறுங் கூத்தவாக்கம், பீடு
பெற வருமுத்து சாமிதுரை யில்லக் கிழத்திநப் பின்னைநிகரும்,
தார்கொண்ட கீர்த்திவடி வேவடி வெனக்கொண்ட தையல்
பொன் னம்மையிம்மை, தன்னிலில் லறநன் குறப்புரிந் தென்
றுந் தவாதவீ டெய்தினளரோ.

சந்தவிருத்தம்.

கஞ்சன் றண்மதி யஞ்சடி லன்கா ணவஞ்சந்
துஞ்சு நெறிக்கண் விரைந்து செலீஇவெந் துயர்நீந்தாள்
மஞ்சு தவழ்ந்திடு மாடக் கூத்த வாக்கஞ்சேர்
எஞ்சலில் சீர்மலி நம்பொன் னம்மை யெனுந்திருவே.

சசு வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

சேத்துபட்டு, வீராசாமிபிள்ளையவர்கள் மனைவியார்

சௌபாக்கியவதி, தாயம்மாள்

பரமபதமடைந்தபோதுசொல்லிய

பதினான்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சீர்கொண்ட கலியாப்த நாலா யிரத்துத் தொளாயிரத் தெண்ப ததனிற், செறிபிரப வாதியீ ராறில்வெகு தானியவாந் திகழாண்டில் வைகாசியென்,பேர்கொண்ட மதிபதினெ ழாந்தெய்தி புதனாள் பிறங்குதிர யோதசி திதி,பேசுமசு வனியிவையெ லாஞ் சேர் தருஞ்சுப தினத்தினிற் பாற்கரன்றன், னேர்கொண்ட வுதயத் தினிற்பினீ ரைந்துமணி யிற்செழுஞ் செஞ்சாலிபால், எழுகதிர் நிலாமுத் தினிற்கதி ரெனப்புகல விலகுசேத் துப்பட்டெனும், பார்கொண்ட புகழுலா மொருபதிவீ ராசாமி பகருநர பதி மனைவியாம், பாக்கியவதி பொதுவர் குல நிதியெனுந் தாய் பரம பதஞ்சதமெ னுற்ற னளரோ.

கட்டளைக் கலித்துறை.

வாராரும் பூண்முலை யாந்திரு மங்கை மணாளனைநெஞ்
சாரா ரமுதெனுந் தாய்வீரா சாமியை யண்ணலின்றிப்
பேரா வொளிமய மாந்திரு நாட்டினைச் சென்றுபெற்ற
நீரா ரறியத் தரமித் தரமா நிகழ்த்தரிதே.

நேரிசை வெண்பா.

தாராரு முல்லைமலர்த் தாமன்சேத் துப்பட்டு
வீராசா மிப்பேர் விறன்மீளி—சீரார்
மனையெவர்க்குந் தாயெனவே மன்னி யவண்மஞ்
சனையவர்க்குந் தாயாணாள் சார்ந்து.

தீவான், செங்கல்வராயபிள்ளையவர்கள் குமாரர்

விஜயராகவப்பிள்ளையவர்கள்

கைலாயபதவியடைந்தபோதுசொல்லிய

பதினான்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

அணிகொண்ட சாலிவா கனவருட நானூற்றி னைம்பதனி ரட்டி ரட்டி, யாகுமீச் சுரவருட மதிகடக நாலெட்டி னுந்தெய்தி பூர்வ பக்கத், திணிகொண்ட சட்டிசித் திரைநா ளாயவிச் சுப

தினந் தேச மேத்துந், திறல்கெழுஉம் வேங்கடகி ரீந்திரன் றன
ற்றிவான் செறிதொழில் குயிற்றி நிலவுங், கணிகொண்ட கருணி
கனெ முனையினு மழுங்கிடாக் கவினெழுத் தாணிப் பதா, கைய
னெழிற் செங்கல்வ ராயன்ற னொருசுதன் கலையுணர்வி சய ராக
வன், மணிகொண்ட கண்டனடி மறவாத பத்திமையை வாய்ந்த
வன தன்பர்த் தொழீஇ, மறலிவய மெய்தாம லவனைத் தெறூஉங்
கமல மலரடி யடைந்த ननனோ.

கட்டளைக் கலித்துறை.

கற்பகங் கண்டநந்த வானத் தொளிக்குங் கொடைக்கரத்தின்
வற்பக மேய்விசய ராகவனையவ் வானத் துள்ளார்
அற்பி னெதிர்ந்துவந் தந்நாளப் பேரனை யாதரஞ்செய்
கிற்பது போலுப சாரஞ்செய் தானென் கிளத்துவமே.

நேரிசை வெண்பா.

அம்மா வியப்பாகு மாகண் டலத்தோரிப்
பொம்மாய மாமுலகைப் பொய்யென்றே—விம்மாநின்
றோதினரா லவ்வுரையோர்ந் தேவிசய ராகவனு
நீதியாய்ப் புக்கா னிலைத்து.

திருவளவாயல், சீயால கிராமணியாரவர்கள் மனைவியார்

சௌபர்க்கியவதி, நயனம்மாள்

கைலாயபதவியடைந்தபோதுசொல்லிய

நேரிசை வெண்பா.

மாதுல னெல்லப்பன் மனமகிழ்ந் தீன்றெடுத்த
தாதை யெல்லப்பன் றகுகோட்டு—ராதிபனு
வாய்ந்தமையின் வாணயன மாதுநய னம்மையரன்
ஏய்ந்தவின்ப வீடெய்தி னாள்.

இருபத்தெண்சீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சீர்மருவு கலியாப்தம் நாலா யிரத்துமேற் றிகழுமொன் பா
னூற்றொடும், சேர்ந்தவெண் பத்திரண்டு விக்ரம வருடமதி கன்
னிதேதி முப்பத்தொன்றுநற், சேமகுரு வாரநாள் பூர்வபக்கத்

துவாதசி திதிசெழுஞ் சதயமெய்ச், செயகண்ட யோகஞ் செறி
ந்தெழில் குலாந்தினஞ் செஞ்சுடர்ப் பரிதி யந்தேர்.

நேர்மருவி யெய்துமதி ளார்ந்ததிரு வளவர்யி னெடுநகரி
னுனேனுதி, நெடுந்தவன் குலனில்வரு மெல்லப்ப மால்புதல்வ
னீடுகாந் தவமுனிவனு, நிகரில்கோத் திரனல்ல சற்பாத் திரன்
புகழ் நிலாவுசீ யாலவள்ளல், நிறைநிறை மனத்தொடவ னயந
நேர் நயனம்மை நீளருந் ததியிவரெனுப்.

பார்மருவி யேத்தநின் றுதுலர்க் கன்னம் பகர்ந்துதவி யம
லனன்பர், பணிபணி யெனக்கொண்டு ஞற்றித் தனுதுநண் பமை
காத லன்சொல்வேதப், பநுப்பொரு ளெனுவுளத் தமைமனத்
தாள்பதுமை படிவெனப் பகர்கனத்தாள், பணிலமென நனிபரச
வருகழுத் தாளரன் பதமலர லால்வழுத்தாள்.

கார்மருவ நட்னமிடு மொருதோகை யாளருங் கருணைகொடு
முந்தோகையாள், காஞ்சன மெனத்தகுந் திருமேனி யாணு
ணெர் கவினுருக் கொண்டதென்னக், காசினியி னின்றுபல் லா
ண்டுவாழ் வெய்தியிக் கரிசிலுட றன்னைநீத்துக், கங்கையஞ் சடி
லனங் கணன்முக்க ணன்பெருங் கயிலைவரை நண்ணினளரோ.

கோவைசியகுலதிலகராகிய,

புதுவை, திருவேங்கடம்பிள்ளையவர்கள்

பரமபதமடைந்தபோதுசொல்லிய

நேரிசை வெண்பா.

வியவாண் டிடபமதி மேவபர பக்க
நயமார் சதுர்த்தசிசேய் நாளாம்—புயலார்
மணிமாடப் பூம்புதுவை வாழ்வேங் கடவன்
திணியுடம்பு நீங்குந் தினம்.

திருவேங் கடவனையே சிந்தித் தொழுகுந்
திருவேங்கடவனையே சேரிந்திங்—கொருகூற்
றுருவுடம்பாய் நிற்பதனை யொவ்வாம லெவ்வா
றருவுடம்பா யாக்கினு னுய்ந்து.

பாப்பாங்குளம்,

தண்டு. பெருமாள்சுவாமிநாயுடு அவர்கள்

பரமபதமடைந்தபோதுசொல்லிய

பதினான்குசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

பொன்னருஞ் சாலிவா கனனென்பா னிருநூற்றில் பொருந்துமெட் டாண்டில் வியவம், பொற்றுலா மாதமிரு பத்துமூன் றபரபக் கம்பேணே காதசிகதிர், மின்னுதி வாரநட் சத்ரமுத் திரட்டாதி மேவுமிச் சுபதி னத்தில், விண்ணு டரும்புபூஞ் சோலைகோ புரமாட மேடைதண் பணைபல் சூழும், நன்னாட தாந் தொண்டை மண்டலத் துயரார்ய பாஷிதவே ளாள குலமால், நன்மைதரு பாப்பாங் குளத்தூரன் செங்கல்வ ராயநா யுடுசெய் தவந், தன்னில்வரு பெருமாள் சுவாமிநா யுடுமதன் தாரணிப் பெண்பொன் வாஞ்சை, தவிர்த்துவிர சாநதியின் மூழ்கிவை குந் ததிரு மால்பதஞ் சார்ந்த ननரோ.

சதுரங்கபட்டணத்தைச்சார்ந்த மெய்யூர், மணியம்

முனியப்ப நாயகரவர்கள்

பரமபதமடைந்தபோதுசொல்லிய

எழுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

சீர்மலியும் வியவருடந் தனுசுமாதந் தேதிமூன் றமரர்குரு வார மகநாள், ஏர்மலியுந் திதிசஷ்டி யபரபக்க மிதுநாளிற் சதுரங்க நகர்சேர் மெய்யூர்ப், பேர்மலியுஞ் சின்னதம்பி புத்ரபாக்யன் பெருகுபுகழ் சம்புமுனிக் குலத் தெழுந்த, தேர்மலியு மணியமுனி யப்பவள்ளல் செய்தவத்தாற் பரமபதஞ் சேர்ந்தா ननரோ.

நேரிசை வெண்பா.

செங்கமல வோடை செறியுசது ரங்கநகர்
தங்குமுனி யப்பனெனுந் தார்வேந்தன்—இங்குலகில்
நன்றாய தன்மணியம் நாட்டப் பரமபதஞ்
சென்றானோ? வென்னோ? தெளிந்து.

ரு0 வித்துவான், நாராயணசாமிபிள்ளை இயற்றிய

த. தம்புசாமிபிள்ளையவர்கள் மனைவியார்,

சௌபாக்கியவதி மரிகருதம்மாள் மீது

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சீர்கொள்சுதன் வருமெழிலா யிரத்தெண் ணூற்றிற் சே
ருமெழு பானென்பான் றிப்பியவாண்டில், ஏர்கொண்ட கார்த்தி
கையேழ் அட்டமிப்பூ லிலங்குசத யஞ்சுக்கிர வாரத்தோன்றல்,
தேர்கொண்ட கன்றபின்றை வயல்கள்சூழுந் திருத்தஞ்சைக் கா
ராளர் குலத்தேவந்த, நார்கொண்ட மனத்தானந் தம்புசாமி
னன்மனையா ளிறையுலக நாடினளே.

நேரிசை வெண்பா.

கம்பனைய கந்தரத்துக் காரிகையார் நாடுதஞ்சைத்
தம்புசாமிப்பேர்த் தனதன்மகிழ்—செம்பதுமை
யன்ன மரிகருதம் மாளமலன் பொன்னுலகை
யுன்னியடைந் தாளுடல்விட் டுய்ந்து.

கண்டாசிவரம்-நாராயணபிள்ளையவர்கள்

மனைவியார்,

சௌபாக்கியவதி அக்கம்மாள்

பரமபதமடைந்தபோதுசொல்லிய

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சீர்பெருகு சர்வசித்துத் திங்கள்சித்ரை தேதியைந் திற்கா
ரி வார நவமிப், பேர்பெருகு சிரவணநாள் முகிலுரிஞ்சும் பெரு
மதில்கொள் கண்டாசிவரமான் முல்லைத், தார்பெருகு பொதுவ
ர்குலந் தழைக்கவந்த தகைநாரா யணவேளில் லக்கிழத்தி, ஏர்
பெருகு நாற்குணமும் வளரக்கம்மாள் எம்பெருமா னிணையடித்
தா ளடைந்தாண் மன்னே.

நேரிசைவெண்பா.

ஆய்ந்த மனமு மருங்குணமும் வாய்ந்துலகில்
ஆய்ந்தோரை யாதரித்த அக்கம்மாள்—மாய்ந்தவுடன்
போச்சுதெங்கண் மீதன்பும் பொய்யல்ல வுங்களுடன்
பேச்சுமுளவோ?சொற் பெற.

வெ. வேலாயுதநாடார்பாடிய

அரசகுலமாலைக்கு

நேரிசை வெண்பா.

கோடா வரச குலமாலை வெள்ளைய
நாடான் மீதிற்சூட்டி னன்காணும்—பாடார்ந்த
ஆலங் குளன்வெண்ணெ யுண்டவே லாயுதமா
ருலம் புகழத் தழைத்து.

சிறுநாவூர் - கோ. சுப்பாநாயகர்மீதுபாடிய

நேரிசை வெண்பா.

சீரா ரிருசப்ப செம்மலரு ளுந்தவத்தின்
நேராருஞ் சுப்பாநாய்க் கப்புகழான்—பாராரும்
பல்வளமும் பல்லறிவும் பல்லிசையும் பல்கலையும்
நல்வளமுங் கொள்க நயந்து.

இராயபுரம் வித்துவான், வே. கி. நாராயணசாமிபிள்ளையவர்கள்

அவ்வவ்வமயங்களிலியற்றிய

செய்யுட்டிரட்டு

முற்றுப்பெற்றது.

☞ இப்புத்தகம் வேண்டுவோர், சென்னைமாநகரம் இராயபுரம், அரத்தூன்வீதி முதலாவது,கதவிலக்கமுள்ள வீட்டிலிருக்கும் இந்நூலாசிரியரிடத்திலும், சென்னைமாநகரம் பெத்துநாயகன்பேட்டை பிடாரியார்கோயில்வீதி 76-வது ,கதவிலக்கமுள்ள வீட்டிலிருக்கும் செ. வ. சகநாதம்பிள்ளை யவர்களிடத்திலும், புத்தகம் ஒன்றுக்கு விலை அணா-8 கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம். 12 - புத்தகம் மொத்தமாகக் கேட்போருக்கு ஒரு புத்தகம் ஆதாயமாகக் கொடுக்கப்படும்.

இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட நூல்கள்.

திருவரங்கபதிகம்.
அருணாசலீசன்பதிகம்.
தேனார்மொழியம்மைபஞ்சரத்னம்.
அய்யனார்பஞ்சரத்னம்.
திரௌபதையம்மைபஞ்சரத்னம்.
திருக்கச்சிப்பேரருளாளர்மாலை.
திருக்கச்சிவரதரந்தாதி.
சயவரதர்சதகம்.
சரஸ்வதிதோத்திரம்.
இலக்குமிபதிகம்.
சர்வசமயசமரசதோத்திரம்.
மன்மதன்சரித்திரக்கண்ணி.

உ

சிவமயம்.

புரசை

ஸ்ரீ கங்காதரீசர் வண்ணம்.

ஷெகிராமம்-மிராசிதார்-ஆதியப்பமுதலியாரும்
பேறூர்நாட்டுக்கிராமத்தாரும்
நேமம்கிராமத்தாரும் ஆகிய
இவர்கள்பேரில்

சீட்டுக்கவிதைகள்.

கூவம் - சோடச அவதானம்
சாமிநாதமுதலியாரவர்க
ளியற்றியவை.

இவற்றை
ஷெ. ஆதியப்பமுதலியார் - பௌத்திரர்
பு-முருகப்பமுதலியாரும்
வி - தாண்டவராயமுதலியார் - குமாரர்
இரத்தினசபாபதி முதலியாரும்
உதவிசெய்யப்
புரசை-அஷ்ட்டாவதாநம்
சபாபதிமுதலியார்
முன்னிலையிற்பரிசோதித்து
ஷெ நேமம்-மிராசிதார்-சீயால்முதலியார்
புங்கத்தூர்-ம. சபாபதிமுதலியாரது
கல்விவிளக்க அச்சுக்கூடத்திற்
பதிவித்தனர்.

ஆங்கிரச(ஹ) புரட்டாசிமீ
௯ஆஎ௰உ(ஹ) செப்டம்பர்மீ.

உ

முருகன் துணை.

புரசை

ஸ்ரீ பங்கஜாக்ஷியம்மைசமேத

சங்கரேச்வர

வெண்பா.

தனதன-தந்தன-தான-தனு-தனு-தனு-தனு-தன
தனதன-தந்தன-தான-தனு-தனு-தனு-தனு-தன
தந்தனந்-தனனதன-தந்தனந்-தனனதன
தனத்தாத்-தனனதன
தானு-தனனதன-தானு-தனனதன-தானு-தனனதன-தந்தானதான
தந்தனத்த-தனதனன-தானனு.

திருமகளுஞ்சசிவாணிவி-ணுடு-மாதர்-வேத-மாதவ
முனிவரொண்டிசையோரும்அ-மோக-நாக-ரீக-மாகவெ
சுந்திரன்பரிதிமல-ருஞ்சொரிந்திதயமகிழ்-வுறப்போற்றியுயர்கதி
நீதா-சர்வபுவன-மாதா-வெனவுதித-மேதா-டுதிபுரிய-லங்காரிநீல
மரகதகுங்குமமேனிமெய்-ஞான-மோன-மான-மாநிதி
பரமசவுந்தரியாமயி-ராமி-வாமி-காமி-மாமலர்
கொந்தடர்ந்தவெழிலிதி-ரண்டெழுந்தகுழலிமெ
யருட்பூத்திலகுகொடி-நாகாபரணிசிவ-மாகாரணிபுதிய-பாகார்மொழியுசித- சிங்கா
திரிபுரசுந்தரிவீரிய-கோரி-நாரி-சூரி-நாரணி [ரரூபி
டமருகமுந்திரிசூலக-பாலி-நீலி-பால-லோசன
மங்கைசங்கரிவரதர்-தங்கையம்பிகைகவுரி-யிருட்கூட்டமெனவெதிர்
வாதாடிவருமகி-ஷாசூரனையும்வெகு-போராடியுடல்கிழி-சங்கராதேவி
பங்கயக்க ணுமமருவு பாகனூர்

கொச்சகக்கலிப்பா.

காலநலமண்ணும்விண்ணுங் காராகியாதார ..... *
மூலமுதலாறிலுறை மூர்த்தியுமாய்ப்பூர்த்திகொண்டப்..... *
பாலகண்டசுத்தவெளி பத்திச்செழுஞ்சுடர்போல்..... *
தாலவொளியாகிநின்ற தற்பரமுமானவரோ..... (ஹ)

திரிபுவனங்களிலேயுள-பேர-நேக-போக-யோகிக
ளரியயனிந்திரனார்முனிவோர்வி-ணோரொ-லோரு-நாடொறும்
வந்துநின்றடிபணிய-வும்பதஞ்சலிதொழவெ-திமித்தாத்தைதிரிதிகட
தாதாதிமிதியென-வேதாளமொலியொடு-பாதாளமுமதிர-ஒன்றுனதாளில்
நடனபொனம்பலராஜசர்-வேச-நேச-மார்ச-பாபதி
சிவசிவசங்கரனார்கயி-லாச-வாச-மாசி-லாதசம்
பந்தரங்குளைசெயவி-ரிந்தசெந்தமிழறிஞர்-திருக்கூட்டமதுவர
ஆர்வாழ்மிழலையினி- னடோறுநிதிதனி-லோர்காசருள்புரியு-மன்பானதியாகர்
தெளிவுளசுந்தரர்தூ துவி-நோத-பாத-வேத-நாயகர்
அரகரசம்புசதாசிவ-பூத-நாதர்-நாத-கீதமி
குந்தபைந்தமிழ்வரிசை-செங்கலும்பொனெனவரு-மகத்தாய்ப்புகழ்பரவு
கோவானவரதிக-தேவானவரழகு- கோகேதனமுடைய-பண்பானநாதர்
பங்குடற்குளரியுமொருபாலராம்

கொச்சகக்கலிப்பா.

ஆதியப்பனன்மறையோ னாதியப்பனென்றுதொழ..... *
ஊதியப்பனூற்பதிக மோதியப்பரும்பணியும்..... *
சோதியப்பனாகந் துலங்குமப்பனேகமதி ..... *
பாதியப்புடன்புனைந்தோர் பார்தகப்பனானவரோ..... *

பரசுடன்ஒண்டிரிசூலக-பால-நீள்பி-ணாக-மாமழு
வணிதிரியம்பகர்கூவிள-மார்பர்-நாகம்-வாழ்ப கீரதி
யுங்கரந்தையறுகலர்-கொன்றைதும்பைபலபல-மலர்ப்பூத்தொடையதிக
சேடுரமதியொடு சூடுரமதுபெறு- கோடுரவருலக-முந்தேருபாவை
மதியுறுமந்திரசாரதி-போத-னாலு வேத-வாசிகள்
வடவரையுஞ்சிலைநாணுயர்-சேடர்-மாயர்-பாண-மாய்வர
மண்டலங்களிலுயிரும்-விண்டலங்களிலுமுயி-ரினைக்காக்கமுனிவர்கள்
மேல்வானவர்கள்பல-சேனுபதியெனவெ-தேரேறியுநகைபி-ரிந்தாதியன

பலபுரம்வென் றுவில்மாரன-ரூப-மாக-வேசெய்-தோரணி
யடிமுடிபங்கயன்மாலறி-யாத-சோதி-யாதி-மூவர்சொல்
வந்தபைந்தமிழ்நிறைத-லங்களெங்கணுமிகவெ- துதித்தேத்துமடியவர்
நாவேறுவர்கரிய-சேவேறுவரவர-லால்வேறிலையனைவர்-கொண்டாடுதேவர்
அங்கதித்தகிரிய னுபதேசனுர்.

கொச்சகக்கலிப்பா.

நாதவிந்துவாயகண்ட ஞாலமெங்குமேநிறைந்த ..... *
ஆதியந்தமாய்விளங்கி யாளவந்தஞானசம்பு ..... *
கோதகன்றுமேபணிந்து கூறுபண்புமீறுதொண்டர் ..... *
மீதிலன்புதான்மிகுந்து வீடுதந்ததேவவரே ..... (வஹு)

பனசமரம்பையுமாவொடு-பூக-நாவி-கேர-மாதுளை
நிறைவனமெங்கணுமேவிளை-யாடி-யோடி-யேறி-யூகம
நந்தமுஞ்சிலகனிக-டின்றுகொண்டதுமுகிய-வனத்தோப்பிலுதிர்கனி
தானேயுடனிறைகள்-பாலாறொடுபெருகி-மேலாகியகழனி-யும்பாயவீறு
பயிர்களெழுந்துவிணுடள-வாய-ளாவி-மேவி-யேவரி
தாளமதுஞ்சொரிவானவெ-ளாண்மை-ராசி-மேரு-வாமென
வுங்குவிந்தநுதினம்வி-ளைந்தபொங்கமுடனுயர்-புழற்கோட்டமெழிலெழு
மூர்நாடுமுளநகர்-தேவாலயமடமு- நீள்வேதியராசர்-சங்கீதவாணர்
பலபலமண்டபமேனிறை-மாட-கூட-மேடை-யீசான்
அமுதுநுகர்ந்திடவேமுளை-வாரி-நீடி-வாழி-பாடிய
கந்தர்கம்பர்தமிழ்பகர்-தொண்டைமண்டலமதனில்-மிகக்கீர்த்திபரவிய
வேளாளர்கடெருவு-தேர்வீதிகள்மருவு-வாழ்வாபுரசைவளர்-கெங்காதரீசர்
அண்டமெட்டும்வடவரையில்வாழ்மிஞள்.

கொச்சகக்கலிப்பா.

மானேமயிலோ மடவனமோகோகிலமோ ..... *
தேனேவமுதோ தெவிட்டாத்திரவியமோ ..... *
யானேவறியே னபுரூபசித்திரவல்லி ..... *
தானேகண்காட்சிதனைச் சாற்றுவன்கேள்காதலனே ..... (2)

மருவுலவுங்கமலாலய-வேத-ஞர-நேக-நாள்பர
சிவனைநினைந்தொருதாளினி-லூசி-மீதி-லேம-கர்த
வம்புரிந்துலகதனி-லெங்கிருந்தவழகுக-ளினைச்சேர்த்தருமைபெற
வேயோர்பதிமையென-வேதானுருவுசெய்த-ரூபாகரவ்டிவி-வண்டாடுவாச

மலர்செருகுங்குழலீசனை யேதொ-ழாத-பேருள்-யாமமொ
சிறுபிறைவெண்டிருநீறொடு-கூடு-ஞாய-மோசொல்- வாணுதல்
திங்கள்பங்கயமோமுக-மந்தமென்புருவமத-சிலைக்கொக்குமிருவிழி
வேலோவிடமோகணை-வாளோபிணையோகடல் - மீனோஞிமிறோகுழை - யுஞ்சேர்
[பொனூசல்

வருசிமிழ்செண்டிளநீரொடு-தாள,-மோகி-ரீட-மோவிரு
மலைகடிரண்டனவோகுட-மோபொன்-மேருவோ-பயோதர
முங்கனங்கடமிலிடை-யெங்ககன்றதெனசொல்வ-னதைப்பார்க்கிலதிசயம்
வேள்கோயிலுமரவ-மோமானடியோசுனை-யோவாசனையோதொடை - யின்சோடு
மங்கைபொற்பதம்வனசமாகுமே. [வாழை

கொச்சகக்கலிப்பா.

மங்கையர்க்கெலாமரசி வங்கணத்திலேசாகி..... *
எங்கிருக்குநாயகமோ வென்கணுக்குண்மாமணியாங்.....*
குங்குமப்பூமேனிபசுங் கொம்பையொக்கும்வாய்பவளம்..... *
பொங்கமெப்படிப்பகர்வேன் புந்திபித்தமீறுதலோ..... (உஙூ)

மகபதிதனபதியோபணி-லோக-மோகண்-வீசு-சாடையி
லுலகமடந்தையுமான-பெணே கணே-பொனே-மினேதனி
வந்ததென்கொலுரைவெயி-லின்கொடுந்தகையிதுட-லிளைப்பாற்றவும்விசிற
வோபூவடிவருட-வோதானலதொருகை-லாகேதருவனெசொ - லஞ்சாதெதேனே
எனசபலங்கபடேதுத-காதென்-மீதி-லேத-யாளம்வை
யரியதவஞ்செய்ததாலடி-யே னும்-யோக-சாலி-யாயின
னின்பெருந்தகைவடிவு-கண்டுகண்குளிரநிம-லனைப்பார்த்ததரிசன
மானேவிழிவலையு-ளானேனதிவிரக-ஞனேபரவசமி-குந்தேனொயாரி
மறுவசனஞ்சொலடுவெகு-மோக-மீறு-தேயி-தேதுன
திதயமதுங்கலடுபழி-காரி-பாத-கீக-டீரியி
ரங்குநெஞ்சடிமைமுறி-தொண்டனென்றுறுவனல-துனக்கேற்றபரவச
நீகேளல்குலரவ-வாயேகையிடுகுவ-ஞனேபிரிவதிலை-சந்தேகமாகில்
வண்குயக்கிரியிலெனைவைகோதையே.

கொச்சகக்கலிப்பா.

என்றுசிலபந்தயமி யம்பியவடன்கணெதிர்..... *
நின்றுகரமுந்தொடநெ ளிந்துசிரமுங்குலுக்கிக்.....*
குன்றனையகொங்கையைக்கு ளிர்ந்தவிழிகொண்டவகை..... *
நன்றெனவிருந்ததெனை நயந்தனளிசைந்தனளே ... . (ஞ)

விரியலர்பந்தலுள்நீளணை-யான-பாயல்-மீது-வாசனை
பரிமளகெந்தபடுரச-வாது-பூசு-வாளு-லாசமு

டன்சுகந்தமலர்சிறு-செண்பகம்புனைவள்குறு-நகைப்பாற்சிலசருள்தன்
வாயர்லருள்வளதி-லேபாதியுதவுவள்-சீரானபயிரவி-யுங்காபிதோடி
பலவிதமும்பதினாறவ-தானி-யார்சொல்-பாட-லோதுவள்
சரசவிதம்புரிவாள்முலை-மீதி-லேகை-போட நாணுவள்
கம்பலந்தருவளித-முண்டுகொஞ்சுவளுமது-மனக்கூச்சம்விடுமென
மேலேவிழுவள்மய-லாடிலேகுள்றிமத-னுலேபதறுவ-ளடங்காதமோக
வெறியொடுகெஞ்சுவள்தாமத-மேது-சாமி-மோடி-யோவென
வுடைகளுரிந்துமலாடிவி-நோத-மான-லீலை-தேடியும்
அந்தரங்கமுதனி லு-கந்துகந்துடலமது-மயிர்க்கூச்சினுடுதமி
நானூறுவகைசெய-வேநூறுவசையொடு-தேனூறுமதமனுகந்தேமினுளும்
இங்கிதத்திலவளுபரிமேலதாய்.

கொச்சகக்கலிப்பா.

கெட்டிகெட்டிநல்ல கிரீடிமதனுர்தொழிலில் ..... *
அட்டியட்டிசெய்வதென்ன ஆண்பிள்ளைதிராணியிதோ..... *
தட்டிதட்டிவந்தமதன் தானுடைச்சண்டைசெயும் .... *
திட்டமிதேகட்டழகி செய்வனெனத்தேர்ந்தனளே..... (ஏவறு)

விரைகமழ்குங்குமவாடைக-மாக-மாக-மாக-மாவென
பரிபுரகிங்கிணி யோசைக-லீர்க-லீர்க-லீர்க-லீரென
வுங்கைதங்குவளைகள்கு- லுங்கவுந்தளதளென-எழிற்காட்டியபணிதி
காதோலைகள்மினிர-வேல்போல்விழிபுரள-மாலாகியமனது-சந்தோஷமீறு
நவமணியும்புனைமோகன-மாலை-யூச-லாட-வூசலு
ளிருதனமும்குதிபோடவில்-மார-னுடி-யோவெ-லோமென
இங்கிதந்தொடையசைய- வுங்கலைந்திடையொசிய-முகத்தாற்றரளமென
மேல்வேர்வைகளகல-நீள்வார்குழல்களிரு-பாலேகவரியிட-அன்பாகமேவு
விபரிதமுந்தமுதூறல்சி-லீர்சி-லீர்கு-மீர்கு-மீரென
இருவர்களும்சமபோகசை-யோக-மாம்வை-போக-மாகிய
விந்தைவிந்தையிதுவெகு-சம்பிரமம்சிறுமனையில்-மணிச்சுட்டிமுடிமயில்
தானுடனவுசித்-கோலாகலபுதுமை-ஓகோகனசுரத-சிங்காரலீலை
இன்பமிக்கஇரதியினைநாடுமே.

கொச்சகக்கலிப்பா.

தன்னமைசேர்கங்கா தரநாதர்மால்வரையிற்..... *
கன்னிதனைக்கூடிக் கலந்தசுகாஞ்சிதந்தான் ..... *
மின்னினுருவும்அந்த வேளுருவுங்காலுருவும் ..... *
இன்னதெனச்சொன்னுலும் என்சுகஞ்சொல்லொண்ணுதே... (௧)

ஆதியப்பமுதலியார்பேரில்

சீட்டுக்கவிதை.

அதிமதுரமிருதுவசன சுபலளிதரசபாக வழுதப்பிரசங்கசிங்கம், ஆசுமதுரஞ்சித்திர விஸ்தாரகவிதனி டங்காதுபொழியுமேகம், அழகுற்றகல்விக் களஞ்சியம்வெண்சலசை யபிராமிசிம்ஹாசனம், அணிதொண்டைமண்டலங் கூவதகராதிபதி யான்குருநாதன்மைந்தன், புதுமைபெறுசதுரங்க மிக்கசூதாடலும் புலியாடல் கண்டபத்திரி, புகலாதியந்தமுட னெண்கவிதையெழுதவும் புறமெறியுநெற்கலெண்ணப், பொற்புறுகதித்தகிரி வடிவேலர்தம்அருட் பொழியும்அஷ்டாவதான, பொக்கிஷமெனுஞ்சாமி நாதகவிராசன் புகழ்ந்திடவிடுக்குமோலை, மதியணியுமரனுக்கு முளைவாரிய முதிட்டு வளர்சூலிமுதுகிலன்னம், வாணர்க்களித்தரவின் வாயினிற்கையிட்டு மணிவாங்கியேகொடுத்த, மகிபதிகிரீடபதி தொண்டைமண்டலபதி மகாபதிதராபதியென, வருபுரசைபாகைநக ராதியப்பேந்திர வரோதயன்மகிழ்ந்துகாண்க, சதுமறைவிளங்குபுவி மீது நின்சீர்ப்புகழ் தழைத்தெழுந்தெண்டிசையெலாந், தான்படர்ந்தெங்கும் பிரகாசித்ததாலுசித தண்டமிழ்ச்சொலிவிடுத்தேன், தன்னினந்தன்னையே காக்குமென்கின்றமொழி தவறுதநிலைமைகொண்டேன், தனதுசமுகத்திலவ தானமும்பார்த்திடத் தயவுசெய்திடல்வேண்டுமே.....*

நேமம்கிராமத்தார்பேரில்

சீட்டுக்கவிதை.

மங்கலம்சொல்லெழுத் துத்தானமுண்டிபால், வருணநாற்கதிகணமென, வகுத்திடுபொருத்தமுஞ் சொற்சுவையடர்ந்திட வழுத்தும்பிரசண்டவாக்கி, மலர்வாணிகுடிகொண்ட சிம்ஹாசனங்கல்வி வைக்கின்றபொக்கிஷமதாம், மங்குற்கதித்தகிரி வடிவேலர்பொற்கமல மலரடியைமறவாதவன், இங்கிதமிகுந்தசது ரங்கமுஞ்சூதாடலியல்கண்டபத்திரிதண்டல், இனியபுலியாடல்முது கினிலெறியுநெற்கல்பரி யெட்டெட்டுவீடுபாய்தல், எட்டெழுத்தாணிக் கிசைந்ததமிழ்பகர்தலுட னிவ்வளவுதிறமாமறவினில், இசைசோட்

சவதான சாமிநாதக்கவிஞ னினிமைகொண்டெழுதுமோலை, வெங்கயமுகன்காத்த விக்கிநேசன்மாரி மின்காளிசெல்லியம்மை, விந்தைபெறுகலியாண வீரராகவரருள் மிகுங்கனகவல்லியம்மை, விமலராவுணியீசர் சமயநாயகியும் விளங்கிவளர்நேமநகர்வாழ், வேளாளர்குவளைபுனை காராளர்தங்களிட விதரணமகிழ்ந்துகாண்க, எங்கெங்குமுங்களது கீர்த்திப்பிரதாபமதி லங்கிடவிளங்குகின்ற, இயல்பினையறிந்துதய வதுமிகுந்தல்லலறு மினியதமிழ்தனைவிடுத்தேன், இன்பமொடுதங்கள்சமு கந்தனில்மகிழ்ந்துகொண் டென்றனவதானவித்தை, யேற்கையையறிந்துபுகழ் சேர்த்திடநினைந்து நல மிசைவரிசைதரல்வேண்டுமே..... *

பேறூர்நாட்டுக்கிராமத்தார்பேரில்
சீட்டுக்கவிதை

தென்கலைமடந்தைநட னங்கொள்நாடகசாலை செந்தமிழ்ப் பொழிபுமேகம், செய்யசதுரங்கமொடு சூதாடல்புலியாடல் ஜெயகண்டபத்திரிதண்டல், தெளிவாதியந்தமுட னெட்டெழுத்தாணி கவி சேர்ந்தெழுதஓதும்வலவன், சீர்க்கூவநகரதிடன் அஷ்டாவதானமுறை செய்சாமிநாதனோலை, பொன்கருணைமேவிவளர் கங்காகுலாதிபர்கள் புகழ்மேழிகேதனத்தார், புனைகுவளைமாலிகா பரணருதாரத்தையும் பொற்புறப்பூறியுண்ட, புதியவமுதக்கூழை யுங்காட்டுவித்தவோர் புலவனையந்தீர்த்தவர், பூமியுயர்நாடான பேறைநகர்வேளாளர் புந்தியுண்மகிழ்ந்துகாண்க, முன்கையிற்சந்தன முளைத்ததும்பரனுக்கு முளைவாரியமுதிட்டதும், முத்தமிழ்க்கரவின்மணி யீந்ததும்சூலிதன் முதுகிலமுதைத்தந்ததும், மும்மண்டலந்தனினு மிம்மண்டலஞ்சீர்த்தி முதிர்தொண்டை மண்டலமென, முன்னமேயிப்படிதொ ணூற்றுறகீர்த்திபுகழ் மொழிமுதன்மைகண்டுற்றதா, னன்குபெறுதன்னினந் தன்னையேகாக்குமென நானிலஞ்சொல்வதாலே, நாடினேன்தங்களூர் தேடியேவாழ்வுற்ற ராமநாதப்பரமர்மேல், நயமானபஞ்சரத் தினமாலையோதிவந் தனமாகையாலனைவரும், நமதுடையவித்தைபார்த் ததிகபரிசுகள்தந்து நன்பாயனுப்பிடவுமே ..... *

கு - எழுத்து வெண்பா.

உதுகவஅஎஐத சரி.

உ

சிவமயம்.

வச்சணந்திமாலையென்னும் வெண்பாப்பாட்டியல் மூலமும் உரையும்.

வரையறுத்தபாட்டியல் மூலமும், உரையும்.

இவை,

இயற்றமிழாசிரியராகிய

திருத்தணிகை

விசாகப்பெருமாளையரவர்கள்,

முன்னிலையில்

தில்லையம்பூர்ச்

சந்திரசேகரகவிராஜபண்டிதரவர்களால்,

பரிசோதிக்கப்பட்டுப்

புத்தகபரிபாலனசபைத்தலைவராகிய

மணலி,

பெரியதம்பிமுதலியாரவர்களால்

ஆறுகாடு,

முத்தியாலுநாயகரது

வாணிநிகேதனஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

துந்துபிவரு ஆவணிமீ

இரண்டாம்பதிப்பு.

உ

சிவமயம்.

வச்சணந்திமாலையென்னும்,

வெண்பாப்பாட்டியல்

மூலமும், — உரையும்.

முதலாவது

முதன்மொழியியல்.

பாயிரம்.

மதிகொண்டமுக்குடைக்கீழ்வாமன்மலர்த்தாள்
துதிகொண்டுநாளுந்தொழுது, நுதிகொண்ட
பல்கதிர்வேலுண்கண்ணாய்பாட்டியலைக்கட்டுரைப்பன்
தொல்லுலகின்மீதேதொகுத்து

(என்பதுசூத்திரம்) யாதானுமொரு நூலுரைக்குமிடத்துப் பாயிரமுரைத்துரைக்கவென்பதுமரபு. பாயிரமென்பதுமுகவுரை. அப்பாயிரம்,பொதுவுஞ் சிறப்புமென விருவகைப்படும்.அவற்றுட் பொதுப்பாயிர நான்குவகைப்படும். "ஈவோன்றன்மையீதலியற்கை, கொள்வோன்றன்மை கோடன்மரபென, வீரிரண்டென்பபொதுவின்றொகையே." ஏன்றாராகலின். இவற்றுள், ஈவோன்றன்மை ஆசிரியனிலக்கணம், ஈதலியற்கை அவன் வித்தைகொடுக்குமுறைமை, கொள்வோன்றன்மை மாணாக்கனிலக்கணம், கோடன்மரபு அவன்வித்தைகொள்ளுமுறைமை. ஆசிரியரிருதிறத்தர், கற்கப்படுவோரும், கற்கப்படாதோருமென. அவருட்கற்கப்படுமாசிரியர் நான்குதிறத்தர். "மலைநிலம்பூவே துலாக்கோலென்றின்ன, ருலைவிலுணர்வுடையோர்" கற்கப்படாவாசிரியர் நான்குதிறத்தர். "கழற்பெய்குடமே மடற்பனைமுடத்தெங்கு, குண்டிகைப் பருத்தியோடிவையனையாரே" மாணாக்கருமிருதிறத்தர், கற்பிக்கப்படுவோரும். கற்பிக்கப்படாதோருமென" அவருட்கற்பிக்கப்படு மாணாக்கரறுவகையர். "தன்மகனுசான் மகனேமன்மகன், பொருண்ணிகொடுப்போன் வழிபடுவோனே, யுரைகொளாளரோடிவ ரெனமொழிப." இவர்குணம். "அன்னங்கிளியே நன்னிறநெய்யரி, யானையானே றென்றிவைபோலக், கூறிக்கொள்வர் குணமாண்டோரே." கற்பிக்கப்படாமாணாக்கரொன்வகையர்-(வெ) "மடிமானிபொச்சாப்பன் காமுகன்கள்வ, னடுநோய்பிணியாளனுருச்சினத்தன், றடுமாறுநெஞ்சத்தவனுள்ளிட்டெண்மர், நெடுநூலைக்கற்கலாகார்" ஆசிரியனீயுமுறைமை. "ஈதலியல்பேயியல் புறக்கிளப்பின், பொழிப்பேயகல மெச்சநுட்பமெனப், பழிப்பில்பல்லுரைபயின்றநாவினன், புகழ்ந்தமதியிற்றிகழ்ந்தநாளிற், றெளிந்தவறிவினன் றெய்வம்வாழ்த்திக், கொள்வோனுணரும்வகையறிந்தவன்வயிற், கொள்வரக்கொடுத்தன் மரபெனமொழிப." கொள்வோன்முறைமை. "கொள்வோன்றன்மை கூறுங்காலைப் பொழுதொடுசென்று வழிப

டன்முனியான், முன்னும்பின்னு மிரவினும்பகலினு, மகலாதுகியன்பொடுபு
ணர்ந்தாங், காசறவுணர்ந்தோன் வாவெனவந்தாங்,கிருவெனவிருந்து சொல்
லெனச்சொல்லி,நெஞ்சுகளனுகச் செவிவாயாகக், கேட்டவை கேட்டவைவல
வனுகிக், கொடுத்தனகோடலவன துபண்பே.'' இவையெல்லா நூன்முகத்து
முறைக்கப்படுதலிற் பொதுப்பாயிரமாம். இனிச்சிறப்புப்பாயிர மெண்வகைப்
படும். " ஆக்கியோன் பெயரோவழியேயெல்லை, நூற்பெயர்யாப்பேநுதலிய
பொருளே, கேட்போர் பயனோடாயெண்பொருளும், வாய்ப்பக்காட்டல்பாயி
ரத்தியல்பே'' என்றாராகலின். அன்றியும் இவ்வெட்டுடன், காலம், களன்,
காரணமென்னும்இம் மூன்றையுங்கூட்டிப்பதினென்றென்பாருமுளர்.''காலங்
களனேகாரணமென்றிம் மூவகையேற்றிமொழிநருமுளரே'' என்றாராகலின்.
அவற்றுள், ஆக்கியோன்பெயரென்பது நூல்செய்த ஆசிரியன்பெயர், இந்நூ
ல்யாராற்செய்யப்பட்டதோவெனின், கற்றவர்புகழுங் களந்தையென்பெரும்
பதிக், குற்றமில்வாய்மைக் குணவீரபண்டிதனென்னும் ஆசிரியனுற்செய்யப்
பட்டது. வழியேயென்பது, இன்னதின்வழித்தென்றல்.இஃது, எந்நூல்வழி
த்தோவெனின், இந்திரகாளியென்னும்பாட்டியன்மரபின்வழித்து. எல்லையெ
ன்பது நடக்குமெல்லை. இஃது, எவ்வெல்லையினடக்குமோவெனின், தமிழ்வ
ழங்குமிடமெங்குமென்க. நூற்பெயரென்பது நூலினதுபெயரிதுவென்றல்.
இந்நூல் என்னபெயர்த்தோவெனின், எய்தியமணிப்பூணிலங்குமணி நெடுந்
தேர் வேந்தர்சூடும் விரைகெழுமலர்த்தாள்,விளங்கெழின்மாடத்துக்களந்தை
யெம்பெருமான், வளர்ந்தகீர்த்தி வச்சணந்திதேவனென்னுமாமுனிசெய்வித்த
தனுல், வச்சணந்திமாலையென்னும் பெயர்த்து. யாப்பென்பது, தொகுத்தும்
விரித்தும், தொகைவிரிப்படுத்தும், மொழிபெயர்த்துமாக்கல். அவற்றுள்,
இஃதெவ்வாறுக்கப்பட்டதோவெனின், தொகுத்தாக்கப்பட்டது. நுதலிய
பொருளென்பது, எடுத்துக்கொண்டபொருளின்னதென்றல். இஃது எடுத்
துக்கொண்டபொருள் யாதோவெனின், பாட்டியன்மரபு. கேட்போரென்
பது, நூலாய்வார் - இப்பாட்டியலாய்ந்தோர்யாரோவெனின், சிங்காவண்பு
கழ்செறிபொழிற்றிருமலைப், பங்கயமலர்த்தாட்பண்டிதரென்னு முனிவராய்
ந்தாரென்றுணர்க. பயனென்பது, இன்னபயக்குமென்றல். இந்நூலோதவெ
ன்னபயக்குமோவெனின், அறம், பொருள், இன்பம், வீடென்னுநான்கினை
யும்பயக்கும். காலமென்பது, இன்னார்காலத்திந்நூல்செய்த தென்றல். இந்
நூல்யார்காலத்துச்செய்ததோவெனின்,குருத்தவாமணிமுடிக் கொற்றவர்கோ
மான், திருத்தகுமணிமுடித் திரிபுவனதேவனென்னும்அரசன்காலத்திற்செய்த
தென்றுணர்க. களனென்பது நூல்கேட்பித்ததின்னாரவைக்களத்தென்றல்.
இந்நூல்கேட்பித்ததியாரவைக்களத்தெனில், கடவுண்முதலிய நற்சங்கத்தார
வைக்களத்தென்றுணர்க. காரணமென்பது நூல்செய்தற்குக்காரணமின்ன
தென்றல். இந்நூல்யாதுகாரணமாகச்செய்யப்பட்டதோவெனின், பரந்தபா
ட்டியன்மரபுகளிற் கரந்துகிடந்தபொருளையெல்லாம், ஒருகோவைப்படுத்தல்
காரணமென்றுணர்க. சிறப்புப்பாயிரமென்பது தானுணர்த்தியவெழுந்த அந்
நூற்கு, இன்றியமையாதது. இந்நூற்குச்சிறப்புப்பாயிரம் யாதோவெனின்.
(வெ) " பண்பார்கவிஞர்வியந்தேத்தப்பாட்டியலாம், வெண்பாவந்தாதிவின

ம்பிரான், நண்பாருங், கோடாதகீர்த்திக்குணவீரபண்டிதனும்,பீடார்களந்தை ப்பிரான்" என்றுணர்க - இந்நூலுள், இவ்வாதியியலென்னபெயர்த்தோவெ னின், முதன்மொழியிலக்கண முணர்த்தினமையின், முதன்மொழியியலெ ன்னும்பெயர்த்து. அற்றேல், எடுத்தசூத்திரந்தொடுத்தபொருள் யாதோவெ னின், தெய்வவணக்கமும்,அதிகாரமுமுணர்த்துதனுதலிற்று. (இ-ள்) மதிகொ ண்ட - தொழுது. எனத்தெய்வவணக்கங்கூறப்பட்டது. பாட்டியலைக்கட்டு ரைப்பன்— தொகுத்து. என அதிகாரங்கூறப்பட்டது. நுதிகொண்டபல்க திர்வேலுண்கண்ணாய், என்பது, மகடூஉமுன்னிலை. இந்நூலுள்சிலசெய்யுளில் மகடூஉமுன்னிலைவரும். (க)

பாயிர முற்றிற்று.

தொகுத்துரைத்த மங்கலஞ் சொல்லெழுத்துத் தானம்
வகுத்தபாலுண்டிவருணம், பகுத்தநாள்
தப்பாக்கதிகணமென்றீரைந்தின்றன்மையினைச்
செப்புவதாமுன்மொழியின்சீர்

(என்னெனின்)உரியவோத்தினு ளொன்றும்பொருளிவையெனப்பெயரும்,மு றையும், தொகையுமுணர்த்து-ற்று(இ-ள்)மங்கலமுதலாகக் கணமீறுகக்கிடந் தபத்தினையுஞ், சொல்வதுமுதன்மொழியின்றன்மை. (எ-று) இப்பத்தினையுந் தத்தமிலக்கணமுரைக்குஞ் சூத்திரத்துள்ளேகாட்டுதும். (உ)

(மங்கலப்பொருத்தம்.)

சீரொழுத்துப் பொன்பூ திருமணிநீர்திங்கள்சொற்
கார்பரிதியானை கடலுலகம், தேர்மலைமா
கங்கைநிலம்பிறவுங்காண்டகையமுன்மொழிக்கு
மங்கலமாஞ்சொல்லின்வகை

(எ - ன்) நிறுத்தமுறையே முற்கூறியபத்தனுள் அடுத்தமங்கலமாராய்கின் றது (இ-ள்) சீர்முதலாக நிலமீறுகவெண்ணப்பட்டபத்தொன்பதும் பிறவும் முதன்மொழியிடத்தே நிற்றற்குரியமங்கலச்சொல்லினதுகூறுபாடாம்.(எ-று) பரியாயநாமம்வரினுமிழுக்காது. (ங)

(சொற்பொருத்தம்.)

வகையுளிசேர்தல்வனப்பின்றாய்நிற்றல்
தொகையார் பொருள்பலவாத்தோன்றல், தகையில
பொருளின்மையீறு திரிதலேபோல்வ
தருமுதற்சீர்ச்சொற்காகுந்தப்பு

(எ-ன்) முன்மொழிக்காகாதசொல் லின்னதென்றியம்புகின்றது. (இ-ள்) முதலெடுத்துக்கொண்ட மூவசைச்சீரியவாகியசொற்கண்மங்கலத்தவாயினும் வகையுளிசேர்ந்தனவும், சிறப்பில்சொல்லும், பலபொருட்கேற்றசொல்லும், பொருளில்சொல்லும், தோன்றல், திரிதல், கெடுதலென்னும் விகாரவிறுதிச் சொல்லும், முன்வைக்கப்படா (எ-று) எனவே அல்லனயாவையுஞ்சொல்ல ற்பாலனவென்றுணர்க. (ச)

(எழுத்துப்பொருத்தம்.)

தப்பாதமூன்றைந்தேழொன்பான்றவறிலவென்
றொப்பாமுதற்சீர்க்குரைசெய்வர், செப்புங்கால்
தண்டாதநான்காறெட்டாகாதவிர்கென்று
கொண்டாரொழுத்தின்குறி

(எ-ன்.) முன்மொழி எழுத்திலக்கணமுணர் - ற்று. (இ-ள்.) ஒற்றுட்பட மூன்றும், ஐந்தும், ஏழும், ஒன்பதுமாகியவெழுத்தான் முதன்மொழிக்குவருவதுநன்று. நான்கும், ஆறும், எட்டுமாகியவெழுத்தின் முதன்மொழிக்குவருவதுதீது. (எ-று) இரண்டெழுத்தாராயாது விட்டதெற்றுக்கெனின் "முன்மொழியாகலான் மூவசைச்சீரல்லன நன்மைசாறெய்வநவிலாமை." என்னுமிதனான்மறுக்கப்பட்டது. ஒற்றுட்படவென்பதெற்றாற்போந்ததெனின், ஒற்றொழிந் தொன்பதெழுத்தான்வருவதொரு மூவசைச்சீரின்மையினென்க. ஒற்றைப்படவருவனவியனிலை, இரட்டைப்படவருவனசமனிலை. (ரு)

(தானப்பொருந்தம்.)

குறிலைந்துந்தந்நெடில்கொண்டிஉஐஔசேர்ந்
தறிபாலனுதியாவைந்தும், இறைவன்பேர்
முன்னெழுத்துப்பாலனில்வைத்தெண்ணிமூப்பேமரணம்
என்னுமிவைதீதென்றேயெண்

(எ-ன்) ஐவகைத்தானமு மெய்வகையாகவிரிக்கின்றது. (இ-ள்) குற்றெழுத்தைந்தோடுந் தமக்கொத்தநெடிலைச்சேர்த்து, இஉக்கள் நின்றதானத்து து முறையே ஐகார ஔகாரங்களைச்சேர்த்தால், உயிரும், உயிர்மெய்யுமென்று சொல்லப்பட்டதொகையெல்லாம் ஐந்துகூறுயடங்கும், இவற்றைப்பாட்டுடைத்தலைமகன்இயற்பெயரின் முதலெழுத்தின் கூற்றைத்தொடங்கிப், பாலன், குமரன், இராசன், மூப்பு, மரணமெனவருவித்தால், அவற்றுள், மூப்பும், மரணமுமாகா ; அல்லனமுதற்சீரின்முதலெழுத்தாய்வருவனநன்கு. (எ-று)

(பாற்பொருத்தம்.)

எண்ணுங்குறிலாணியைந்தநெடிலெல்லாம்
பெண்ணுகுமொற்றுய்தம்பேடாகும், பெண்ணினே
டாண்புணர்ச்சிக்கவ்வவ்வெழுத்தேமயங்கினுமாம்
மாண்பில்பேடென்றார்மதித்து

(எ-ன்) பாலிலக்கணமுணர்த்துகின்றது. (இ-ள்) குற்றெழுத்தெல்லாமாண்பாலெழுத்தாம். நெட்டெழுத்தெலலாம், பெண்பாலெழுத்தாம். ஒற்றெழுத்தும், ஆய்தவெழுத்தும் அலியெழுத்தாம். ஆண்பாலைப்புகழுமிடத்து ஆணெழுத்துச்சிறப்புடைத்து. பெண்பாலைப்புகழுமிடத்துப் பெண்ணெழுத்துச்சிறப்புடைத்து. மயங்கிவந்தவெனினும் வரையப்படா. அலியெழுத்து முன்னிற்குந்தகைமையவல்ல (எ-று) முதன்மொழியென்பததிகாரத்தாற்கொள்க. (எ)

(உறுப்பொருத்தம்.)

மதித்தகசதநப மவ்வோடுவவ்வும்
உதித்தமைந்தநாற்குற்றுயிரும், துதித்தமுதென்

ருதிமொழிக்குந் தசாங்கத்தயலுக்கும்
தீதிலவேயென்றார்தெரிந்து

(எ-ன்) உண்டியிரண்டுமுணர்த்திய வெழுத்தாலவற்றுட் கொண்டவமுதெழுத்துக்கூறுகின்றது. (இ-ள்)கசதநபமவவ்வென்னும் ஒற்றுக்களேழும், அ இ உ எ என்னுநான்குகுற்றுயிரும், அமுதவெழுத்தாம். அவைமொழிமுதலும், தசாங்கத்தயலும், வந்துவழங்குமரபினவாம். (எ-று.) (அ)

தெரிந்தயரலமேற்சேர்ந்தவாவோவும்
புரிந்தவற்றொற்றாய்தப்புள்ளி, விரிந்த
அளவொடுகான்மாத்திரையுமாமென்றறிந்தோர்
உளவென்றார்நஞ்சென்றொழி

(எ-ன்) எஞ்சிநின்றநஞ்செழுத்துநவில்கின்றது. (இ-ள்) கூறியயரலக்கள் மேலேறிய ஆகார ஓகாரமும்,யரலவென்னுமொற்றும், ஆய்தப்புள்ளியும், ஒற்றுயிரென்னும் அளபெடையிரண்டும், மகரக்குறுக்கமும், ஆய்தக்குறுக்கமும், ஆகியபதினான்கும் நஞ்செழுத்தாம்.அவை ஆதிமொழிக்குந் தசாங்கத்தயலுக்குமாகா. (எ-று) முதற்சீராகிய மங்கலச்சொல்லின்கண் நஞ்செழுத்துவந்தனவாலோவெனின். "நஞ்சுமமுதமா மங்கலம்புகினே" என்பவாகலின், மூவசைச்சீருள்மங்கலச் சொல்லொழியக்கொள்க. நஞ்சினுமமுதினுநாட்டப்படாவாகி யெஞ்சிநின்ற உயிரும் உயிர்மெய்யும், மெய்யும் எப்பாற்பட்டவெனின் "அமுதெழுத்தென்றவாதியுயிர்நான்கொடும், புணர்ந்தமெய்யை யுணர்ந்தமுதென்ப."மெய்யாமறுதின் மேவியவுயிரும்பொய் தீர்புலவர்பொருந்தினவென்ப" "நஞ்சாமொற்றொடு நடந்தவுயிர்களும் வஞ்சமில்புலவர்மறுத்திலரென்ப" இருவகையுண்டியென்றெடுத்தனவல்ல, தாமேநிற்பினுந்தோமிலவென்ப என்பனஇந்திரகாளி. (கூ)

(வருணப்பொருத்தம்.)

ஒழியாவுயிரனைத்துமொற்றுமுதலாறும்
அழியாமறையோர்க்காமென்பர், மொழியும்
அடைவேயோராறுமரசர்க்காமென்பர்
படையாதசாதிகளின்பண்பு

(எ-ன்) வருணநான்கனுள்மறையோர்சாதியும், அரசர்சாதியுமறைகின்றது. (இ-ள்) உயிர்பன்னிரண்டு மொற்றுமுதலாறும், பயிலுந்தன்மைப்பார்ப்பனச்சாதி. அல்லாமெய்யினடையவேயாறு, மல்லார்புயத்துமன்னர்சாதி(எ-று)

பண்பார்வணிகர்க்காம் பாங்கிலவறனக்கள்
மண்பாவுஞ்சூத்திரர்க்காமற்றையவை, நண்பால்
அரனரிசேய்மால்கதிர்கூற்றாய்மழைபொன்மெய்க்குப்
பிரமன்படைப்புயிர்க்குப்பேசு

(எ-ன்) அல்லாவருணமிரண்டுமுணர்த்திச் சொல்லாப்படைப்புஞ்சொல்லுகின்றது. (இ-ள்)லவறன என்னுநான்குமெய்யும் வணிகர்வருணமாம். ழளவென்னுமிரண்டுஞ் சூத்திரவருணமாம். அரன், அரி, செவ்வாய், புதன், இரவி, மதி, இயமன், வருணன், வியாழம், என்னுமொன்பதுபுத்தேளிரும், முறை

யேயிரண்டிரண்டாகப் பதினெட்டுமெய்யும்படைத்தார், பன்னீருயிரும்பிரமன்படைத்தான் (எ-று) இச்சூத்திரத்துட் கதிரொனப்பொதுப்படக் கூறியதுகதிரிரண்டுங்கோடற்கு. படைப்பையதிகாரத்தாற்றழீஇக் கொள்ளாதெடுத்தோதித் தொடுத்தமைபடைப்புவேண்டாமை முதனூறழுவிற்றுதலானும், பிறர்நூன்முடிந்ததுதானுடன்படுதலானுமென்க. அன்றியும்இவ்வெழுத்துகட்குத்தெய்வம், அவ்வவர்களெனக்கொள்ளப்பட்டதெனினுமமையும். (௰க)

(நாட்பொருத்தம்)

பேசுமுயிரடைவேநான்காரல்பின்னைந்து
மாசிலாப்பூராடமற்றொருமூன்றுசிலாப்
பேருத்திராடமாமென்றுபெரிதுணர்ந்தோர்
பாரித்தார்நாளின்பரிசு

(எ-ன்) ஏறியமுதலெழுத்திற்கு நாளிசைப்புழி யாறீருயிர்க்கு, நாளறிவிக்கின்றது. (இ-ள்) அ ஆ இ ஈ என்னு நான்குயிருங்கார்த்திகை, உ ஊ எ ஏ ஐ என்னுமைந்தும்பூராடம், ஒஓஔவென்னுமூன்றும் உத்திராடமாம். (எ-று)()

பரிசுடையகவ்வரியினன்கிரண்டுமூன்றுந்
தெரிவுடையமூன்றடைவேசெப்பிற்,பிரிவுடைய
ஓணமேயாதிரையேயொண்புநர்பூசம்பூசம்
பேணிபுரைத்தார்பிறித்து

(எ-ன்) கவ்வருக்கநாளுரைக்கின்றது. (இ-ள்) க கா கி கீஎன்னும் நான்குந்திருவோணம், குகூவென்னுமிரண்டுந்திருவாதிரை, கெகேகை யென்னுமூன்றும்புநர்பூசம், கொகோகௌ என்னுமூன்றும் பூசமாம். (எ-று) (௰௩)

பிறிந்தசகரத்துநான்கைந்துபின்மூன்
றறிந்தகலமுதன்மூன்றுகும்,செறிந்த
ஞகரத்தொருமூன்றுநன்குணர்ந்தோராய்ந்த
புகர்தீரவிட்டமாம்போற்று

(எ-ன்) சகரஞகரவருக்கங்களுக்கு நாளுணர்த்துகின்றது. (இ-ள்) சசாசி சீ என்னுநான்கும் இரேவதி, சுசூசெசேசை என்னுமைந்தும் அச்சுவினி,சொசோசௌ வென்னுமூன்றும்பரணி, ஞஞாஞெ யென்னுமூன்றும் அவிட்டமாம். (எ-று) (௰௪)

போற்றுந்தகரமிரண்டேழ்மூன்றும்பொய்தீர்ந்தோர்
சாற்றுவர்சோதிமுறஞ்சதயம்,வேற்றனுடம்
கேட்டைபூரட்டாதிகேணகரத்தோராறும்
வாட்டமிலாமூம்மூன்றும்வந்து

(எ-ன்) தகரநகரவருக்கங்களுக்கு நாளுரைக்கின்றது. (இ-ள்) ததாவென்னுமிரண்டும்சோதி, திதீதுதூதெதேதை யென்னுமேழுவிசாகம், தொதோதௌ வென்னுமூன்றுஞ்சதயம், நநாநிநீநுநூ வென்னுமாறும் அனுடம், நெநேநையென்னு மூன்றுங்கேட்டை, நொநோநௌவென்னு மூன்றும்பூரட்டாதியாம். (எ-று) (௰௫)

வந்தபகரத்துநான்கிரண்டாறுத்திரந்தொட்
டந்தமிலாமூன்றுமவ்வடைவே,—வந்ததற்பின்
ஆறுமகமூன்றுடன்மூன்றுயிலியம்பூரமா
மாறின்மகரத்தின்மாட்டு

(எ-ன்) பகரவருக்கத்திற்கும், மகரவருக்கத்திற்கும், நாளுரைக்கின்றது, (இ-ள்) பபாபிபீயென்னு நான்கும்உத்திரம், புபூவென்னு மிரண்டும் அத்தம் பெபேபைபொபோபௌவென்னு மாறுஞ்சித்திரை, மமாமிமீமுமூவென்னுமாறும் மகம், மெமேமையென்னுமூன்றும் ஆயிலியம், மொமோமௌவென்னு மூன்றும் பூரமாம் (எ-று.) (௰சு)

மாட்டும்யகரத்துள்பாவுத்திரட்டாதி
ஈட்டியயூகாரயோகாரங்கள்,—காட்டிய
மூலம்வகரத்தொருநான்குரோகணிமான்
தோலாதநான்கெனவேசொல்

(எ-ன்) யகரவகரவருக்கங்களுக்கு நாளுரைக்கின்றது. (இ-ள்) யாவொன்றும் உத்திரட்டாதி, யூயோவென்னுமிரண்டும் மூலம், வவாவிவீயென்னுநான்கும் உரோகணி, வெவேவைவௌவென்னு நான்குமிருகசிரமாம். (எ-று) (௰எ)

சொல்லியநாண்மூவொன்பதாகத்துணிந்தொன்று
புல்லியமூன்றைந்தேழ்பொருந்தாவாம்,—அல்லனவற்
றட்டமராசிவயினாசியமிவையும்
விட்டொழித்தனன்றெனவேவேண்டு

(எ-ன்) பாட்டுடைத்தலைவன் பெயர்முதலெழுத்தினுட்கும், மங்கலமொழி முதலெழுத்தினுட்கும் பொருந்துமாறுணர்த்துகின்றது. (இ-ள்) சொல்லிய நாளிருபத்தேழையும், ஒன்பதொன்பதாக மூன்றுகூறுக்கிப் பாட்டுடைத்தலைமகனியற்பெயரின் முதலெழுத்தினாலைத்தொடங்கிக்கூறுகளையெண்ண ஒன்று மூன்று ஐந்து ஏழ்வரிற்பொருந்தா அல்லாதநாட்களுட்பாட்டுடைத்தலைவன் பெயர்முதலெழுத்தினிராசிதொடங்கி எட்டாமிராசிநாட்களும்பொருந்தா.வயினாசியமாகிய எண்பத்தெட்டாங்கால் நின்றநாளும்பொருந்தா. (எ-று) புல்லியவென்று மிகுத்துச்சொல்லியவதனால், மூன்றுமொன்பதின் மூன்றுமைந்து மேழும்பொருந்துமெனக்கொள்க. "மூன்றுமொன்பதின் மூன்றைந்தேழும், பொருந்துமென்று புகலுவர்புலவர்" என்பது இந்திரகாளி. (௰அ)

(கதிப்பொருத்தம்)

வேண்டுங்குறில்வன்மையீறொழித்தால்விண்ணோர்க்காம்
ஆண்டநெடின்முதனுன்கந்தமொழித். தீண்டிய
மென்னமயாமக்கட்கிவையிரண்டுமெய்க்கதிக்கு
நன்மையாமுன்மொழிக்குநாட்டு

(எ-ன்) ஓதியநாற்கதி யுணர்த்தியவெழுந்தவற் றுதியிரண்டுமறிவிக்கின்றது; (இ-ள்) அஇஉஎயென்னு நான்குகுற்றுயிரும் கசடதபவென்னு மைந்தொற்று

ந்தெய்வகதியாம். ஆஈஊஏஓஎன்னு நான்குநெட்டுயிரும், ஞணநம வென்னுமைந்தொற்றும், மக்கட்கதியாம். இவ்விரண்டுகதியெழுத்து முன்மொழிக்கு நன்மையுடையவாம். (எ-று) (யகூ)

நாட்டியஓஔயரலழநல்வன்மைக்
கீட்டியவந்தமிவைவிலங்காம், காட்டா
தொழித்தநரகர்க்கென்றோதினரின்ன
எழுத்தாகாவாதியிடை

(எ-ன்) ஒழிந்தகதியிரண்டுமுணர்த்துகின்றது. (இ-ள்) ஓஔவென்னும் உயிரிரண்டும், யரலழவென்னுமிடையொற்றுநான்கும், வன்மையிறுதியென்று சொன்னறகாரமும்விலங்குகதியாம், காட்டாதொழிந்த ஐஔவென்னுமுயிரிரண்டும், வகரளகரனகரமென்னுமூன்றொற்றும்நரகர்கதியாம், இக்கதியிரண்டும் முதன்மொழியிடத்து வரப்பெறுவெனக்கொள்க. (உய)

(கணப்பொருத்தம்.)

ஆதியிடையிறுதிமுற்றுநேராநிரையென்
றோதுவர்நீர்தீமாகமொண்சுவர்க்கம், தீதிலோர்
சொற்றூர்மதிபரிதிகானிலமாநீர்மதியு
முற்றுகியாமுன்மொழிக்கு

(எ-ன்) எண்வகைக்கணமுமுணர்த்து-ற்று (இ-ள்) ஆதிநேர், இடைநேர், இறுதிநேர், முற்றுநேர். ஆதிநிரை, இடைநிரை, இறுதிநிரை முற்றுநிரை என்றுகூறப்பட்ட, கூவிளங்கனி, புளிமாங்கனி, கருவிளங்காய், தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், தேமாங்கனி, கருவிளங்கனி என்னுமெட்டும்முறையானே, நீர், தீ, வானம், துறக்கம். மதி, பரிதி, காற்று, நிலம்என்னும்பெயரினையுடைத்தாம். இவற்றுள்நீரும், திங்களும், துறக்கமும், நிலமும்முதன்மொழிக்காகும், ஒழிந்தனவாகா. துறக்கத்தையியமான னென்பாருமுளர். (உக)

முன்மொழியாகலான்மூவசைச்சீரல்லன
நன்மைசாறெய்வநவிலாமை, முன்மொழிக்
கீட்டியதொன்மையிலக்கணங்களிவ்வகையே
காட்டுமகலக்கவிக்கு.

(எ-ன்) கணந்தருசிறப்பின்காரணமுணர்த்தி மணந்தபந்திலக்கணம்வருமிடமுணர்த்துகின்றது. (இ-ள்) வெண்பாவுரிச்சீரானும், கலிஞ்சி யுரிச்சீரானும்வந்த எண்பெருங் கணங்கட்குந்தெய்வமடுத்தமையிற்காட்டுமுன்மொழியிடத்து, மூவசைச்சீர்நாட்டியேனையவற்றைவிலக்கியதொல்லோரிலக்கணங்கள் மங்கலமுதலாக, இவ்வகையே அம்மூவசைச்சீரின்கட்காட்டாநின்றன அகலக்கவிக்கென்றவாறு. (வெண்பா.)

திருமங்கைநின்றகலாடெவ்வுநோய்நீங்கும்
தருமங்கணீங்கலாச்சார்வார், இருநிலத்து
மன்னருள்ளார்தாழுந்தாள் வச்சணந்திமாமுனிவன்
இன்னருளானேக்குமிடம். (உஉ)

முதன்மொழியியல் முற்றிற்று.

இரண்டாவது,

செய்யுளியல்.

கவிகமகன்வாதியேவாக்கியெனக்காசில்
புவியின்மேனல்வர்புலவர், கவிகடாம்
ஆசுமதுரமேசித்திரம்வித்தாரமெனப்
பேசுவார்நால்வர்க்கும்பேர்.

(என்பதுசூத்திரம்) இவ்வியலென்ன பெயர்த்தோவெனின், செய்யுளிலக்கண முணர்த்தினமையிற் செய்யுளியலென்னும் பெயர்த்து. இச்சூத்திர நுதலியபொருள்யாதோவெனின், பத்துவகையிலக்கணமும் வித்தாரக்கவிக்குவேண்டினார் அவ்வித்தாரக்கவிகளையும், ஒழிந்துநின்றகவிகளையு முணர்த்தியவேண்டிப்புலவரது பெயரும்,முறையும்,தொகையுங்கூறி,அவருள்முதற்புலவராகியகவிகளதுபெயருமுணர்த்து-ற்று. (இ-ள்.) கவி, கமகன், வாதி, வாக்கியெனப்புலவர்நால்வர். அவருள், ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவியெனக் கவிகள் நால்வர். எ-று. (க)

(ஆசுகவி.)

பேரொழுத்திற்சொல்லிற்பொருளிற்பெருங்கவியில்
சீரலங்காரத்திற்றெரிந்தொருவன், நேர்கொடுத்த
உள்ளுரைக்கப்போதுரைப்பதனையாசென்றார்
எள்ளாதநூலோரொடுத்து.

(எ-ன்.) நிறுத்தமுறையானே ஆசுகவிபேசுகின்றது. (இ-ள்.) இவ்வெழுத்தாலேபாடுக. இச்சொல்லாலேபாடுக. இப்பொருளாலேபாடுக. இந்தயாப்பாலேபாடுக. இவ்வலங்காரத்தாலேபாடுக. என்றொருவன்சொன்னவுள்ளுரைக்கவனெதிரேபாடப்படுவது ஆசுகவியாம். எ-று. ஆசுகவிபாடும்புலவனும் ஆசுகவியாம். இவற்றிலிரண்டுமூன்றுமகப்படப் பாடுதல்சிறப்புடைத்து. (உ)

(மதுரகவி.)

எடுத்தபொருளினோடோசையினிதாய்
அடுத்தவைசெஞ்சொல்லாயணியும், தொடுத்த
தொடையும்விளங்கவவைதுதிப்பச்சொல்லின்
இடமுடையமாமதுரயாப்பு.

(எ-ன்.) மதுரகவியிதுவென்கின்றது.(இ-ள்.)ஓசையும், பொருளுமினிதாய், முழுதுஞ்செஞ்சொல்லாய், அலங்காரமுந்தொடையுந்தெற்றென்று கேட்டார் துதிக்கும்படி பாடுவதுமதுரகவியாம் - (எ-று.) இக்கவிபாடுவோனும் மதுரகவியாம். சிறுபான்மையிற்றிசைச்சொல்லும், திரிசொல்லும், வடசொல்லும் மருவினுமிழுக்காது. வ-று, பூமகளுநல்வாழ்வுபெற்றாள்புரைதீர்ந்த,நாமகளும் பல்கலையுநண்ணினாள், தோமகல்சீர், வையம்புகழ்களந்தை வச்சணந்திமாமுனிவன், செய்யபதகமலஞ்சேர்ந்து. (ங)

(சித்திரகவி.)

யாப்புடையமாலைமாற்றுதியாவேனையவும்
வாய்ப்புடையசொல்லின்வகுத்தமைத்து,நீப்பிலா
வண்ணமுந்தொன்னூன்மரபுவழுவாமற்
பன்னுவதுசித்திரத்தின்பா.

(எ-ன்) சித்திரகவியித்தின்மைத்தென்கின்றது. (இ-ள்.) மாலைமாற்று, சக்கரம், சுழிகுளம், ஏகபாதம், எழுகூற்றிருக்கை, காதைகரப்பு, கரந்துறைப்பாட்டு, தூசங்கொளல், வாவனூற்றி, கூடசதுக்கம், கோமூத்திரி, ஒரொழுத்துப்பா, வல்லினப்பாட்டு, மெல்லினப்பாட்டு, இடையினப்பாட்டு, சித்திரக்கா, விசித்திரக்கா, வித்தாரக்கா, விகற்பநடை, வினாவுத்தரம், சருப்பதோபத்திரம், எழுத்துவருத்தனை, ரகபந்தம், முரசபந்தம், நிரோட்டம், சித்து, ஒருபொருட்பாட்டு, பலபொருட்பாட்டு, மாத்திரைப்பெருக்கம், மாத்திரைச்சுருக்கம், எழுத்துப்பெருக்கம், எழுத்துச்சுருக்கம், இன்னவைபிறவுமாகிய பலவிகற்பாற்செய்யப்பட்டோசைகெடாமல், எழுத்துக்குற்றம், சொற்குற்றம், பொருட்குற்றம்,யாப்புக்குற்றம், அலங்காரக்குற்றம், என்னுங்குற்றங்கள் படாமல், பாடப்படுங்கவி சித்திரகவியாம். (எ-று.) இக்கவிபாடுவோனுஞ்சித்திரகவியாம். இவையெல்லாம் யாப்பதிகாரத்திற்கண்டுகொள்க. (ச)

(வித்தாரகவி.)

பாங்கார்தொடர்நிலைப்பாபல்பாதஞ்சேர்தனிப்பா
ஈங்ககலப்பாக்களிரண்டாகும், ஆங்குத்
தொடர்நிலைப்பாதன்விகற்பஞ்சூழ்வளையாய்சொல்லிற்
கடையிலவேயென்றுரைத்தார்கண்டு.

(எ-ன்.) அகலக்கவிபுகல்கின்றது. (இ-ள்.) பலசெய்யுட்கள்கூடிவந்ததொடர்நிலைச்செய்யுளும்,அடிபலவாய்நடக்குந்தனிப்பாச் செய்யுளுமென்னும் இருதிறமும் அகலக்கவியாம். அவற்றுட்டொடர்நிலைச்செய்யுளை விகற்பிக்குமிடத்து ஏற்றபொருளெடுத்துப்பாடுவோரளவல்லது இன்ன அளவென்றுரைப்பதரிது. (எ-று.) அகலக்கவிபாடுவோனும் அகலக்கவியாம். (ரு)

(பிள்ளைக்கவி.)

கண்டுரைக்கிற்பிள்ளைக்கவிதெய்வங்காக்கவெனக்
கொண்டுரைக்குந்தேவர்கொலையகற்றி, ஒண்டொடியாய்
சுற்றத்தளவாவகுப்பொடுதொல்விருத்தம்
முற்றுவித்தனூலின்முறை.

(எ-ன்.) பலவிகற்பங்களிற் சிலவெடுத்துரைப்பான்வேண்டி யவற்றுள், பிள்ளைக்கவிக்கிலக்கணமுணர்த்துகின்றது. (இ - ள்) பிள்ளைக்கவிபாடுமிடத்து வேண்டுங்கடவுளைச்சுட்டிப் பாட்டுடைத்தலைவனை அவன்சுற்றத்தொகையோடு தேவர்கொலையகற்றிக்காக்கவென, வகுப்பாலும், ஆசிரியவிருத்தத்தாலும் பாடுக (எ-று.) கண்டுரைக்கினென்றுமிகுத்துச்சொல்லியவதனால், காப்பு

க்கவிகளை மூன்றைந்தேழொன்பதுபன்னொன்றுகத்தொடுத்துக் காப்புமாலை யென்று பாடுகையுமுளதென்றுணர்க. (சு)

முறைதருமூன்றுதிமூவேழிருந்திங்கள்
அறைகநிலம்பத்துமாண்டைந்தேழ், இறைவளையார்க்
கந்தஞ்சிறுபறையேயாதியாமூன்றெழித்துத்
தந்தநிலமோரேழுஞ்சாற்று.

(எ-ன்.) இதுவுமது (இ-ள்.) பிள்ளைப்பிரபந்தம் மூன்றுமாதமுதலிருபத்தோராம் மாதம்வரை ஒற்றித்தமாதமாகிய பத்துமாதங்களினுங் கேட்பிக்கப்படும். அன்றியும், ஐந்தாமாண்டினும், ஏழாமாண்டினுமிக்கவிகேட்பிக்கினு மிழுக்காது. பெண்பிள்ளைக்கவிபாடுமிடத்துச், சிறுபறைகொட்டலும், சிற்றில்சிதைத்தலும், சிறுதேருருட்டலுமாகிய மூன்றுநிலமுமொழிதது, ஒழிந்தவேழு நிலமும் பாடப்படும். (எ-று.) இவ்வேழுடன், கழங்கு, அம்மனை, ஊசல்என்னுமூன்றையுங்கூட்டிப் பத்தாகப்பாடுவாருமுளர். (எ)

சாற்றரியகாப்புத்தால்செங்கீரைசப்பாணி
மாற்றரியமுத்தமேவாரானை, போற்றரிய
அம்புலியேயாய்ந்தசிறுபறையேசிற்றிலே
பம்புசிறுதேரோடும்பத்து.

(எ-ன்.) பிள்ளைக்கவிக்கேற்ற பத்துநிலமுமுரைக்கின்றது. (இ-ள்.) காப்பும், தாலும், செங்கீரையும், சப்பாணியும், முத்தமும், வாரானையும், அம்புலியும், சிறுபறைமுழக்கலும், சிற்றில்சிதைத்தலும், சிறுதேருருட்டலும், என முறையானேபாடுக. (எ-று.) நிலங்கள்பத்தும், தம்மிலொக்கக்கொண்டுபாடுமிடத்து ஒற்றிக்கப்பாடுவது சிறப்புடைத்து. இரட்டித்துப்பாடினுமோசைபெயர்த்துப்பாடுக. (அ)

(பல்சந்தமாலை, அந்தாதி.)

பத்தாதிநூறந்தம்பல்சந்தமாலையாம்
ஒத்தாயவெண்பாவொருநூறு, ஒத்தசீர்
அந்தாதியாகுங்கலித்துறையுமவ்வகையே
வந்தாலதன்பேரவை.

(எ-ன்.) பல்சந்தமாலைகளும், அந்தாதியுமுணர்த்துகின்றது. (இ-ள்.) பத்துமுதலாக நூறீறுகநின்றவிகற்பத்தது பல்சந்தமாலை விகற்பமாம். நேரிசை வெண்பா நூறந்தாதியாய்வந்தால் வெண்பாவந்தாதியென்றும், கட்டளைக்கலித்துறை நூறந்தாதியாய்வந்தால், கலித்துறைபந்தாதியென்றும் பெயர்பெறும். (எ-று.) பல்சந்தமாலை வகுப்பும், ஆசிரியமுமாயந்தாதித்துவரும். (க)

(கலம்பகம்.)

வைக்கும்புயந்தவம்வண்டம்மனைபாண்மதங்கு
கைக்கிளைசித்தூசல்களிமடக்கூர், மிக்கமறம்

காலந்தழையிரங்கல்சம்பிரதங்கார்துது
கோலுங்கலம்பகத்தின்கூறு.

(எ-ன்.) கலம்பகவிலக்கணங்கூறுகின்றது. (இ-ள்.) புயம், தவம், வண்டு, அம்மனை, பாண், மதங்கு, கைக்கிளை, சித்து, ஊசல், களி, மடக்கு, குடி, மறம், காலம், தழை, இரங்கல், சம்பிரதம், மேகவிடுதூது என்னுமிப்பதினெட்டும் கலம்பகத்தினுறுப்புப்பொருளாம். (எ-று.) மிக்கமறமென்று சிறப்பித்தவதனால், இப்பதினெட்டும், கலம்பகத்துக்கு நிலைபெற்றவுறுப்பு. ஒழிந்தன இன்னவகையான பொருளால்வருபவென்னு நிலைபேறுடையவல்லவென்று கொள்க. ஊரென்றதுகுடிமை. இரங்கலென்றதுகாமமிக்ககழிபடர்கிளவி(௩)

கூறுமொருபோகுவெண்பாகலித்துறைகள்
மாறின்முதலுறுப்பாமன்விருத்தம், வேறகவல்
வஞ்சித்துறைவிருத்தம்வான்றுறைவெண்பாமருட்பா
எஞ்சாக்கலியினங்கொண்டீட்டு.

(எ-ன்.) கலம்பகப்பாவேறுபாடுணர்த்துகின்றது. (இ-ள்.) முதலொருபோகுவந்து, அதன்பின்னொருவெண்பாவந்து, அதன்பின்னொருகலித்துறைவந்தால் அவைமுதலுறுப்பாம். அதன்பின் ஆசிரியவிருத்தம், ஆசிரியப்பா, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம். வெண்டுறை, வெண்பா, மருட்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தமென்றுசொல்லப்படும் பாக்களியைந்தபடி கொண்டியற்றுக. பிறபாக்கள்வரினுமிழுக்காது. (௩௧)

ஈசர்க்குநூறிழிபைந்தையர்க்கிகலரசர்க்
காசற்றதொண்ணூறமச்சருக்காம், ஏசா
எழுபானைம்பான்வணிகர்க்கேனையோர்க்காறைந்
திழிபிற்கலம்பகப்பாட்டீண்டு.

(எ-ன்.) கலம்பகத்திற்கேற்ற சுருக்கமியம்புகின்றது. (இ-ள்.) தேவர்க்கு நூறும், முனிவர்க்குத்தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத்தொண்ணூறும், அமச்சருக்கெழுபதும், வணிகர்க்கைம்பதும், ஏனையோர்க்கு முப்பதுமாகப்பாடுவதேயிழிபு. (எ-று.) ஆசற்றவென்றுசிறப்பித்தவதனால், குறுநிலமன்னரை அரசரைப்போலவும், முனிவரைப்புத்தேளிரைப்போலவும் பாடினுமிழுக்காது. கலம்பகமும் அந்தாதியாகவேபாடவேண்டுமென்றறிக. (௩௨)

ஒலியந்தாதி, மும்மணிக்கோவை.

ஈண்டியமுப்பதாயீரொண்கலைவண்ணம்
மூண்டதொலியந்தாதிமுப்பதாம், ஆண்டகவல்
முன்முறையேவெண்பாகலித்துறையவந்தாதி
மும்மணிக்கோவைக்குமுதல்.

(எ-ன்.) ஒலியந்தாதியும்,மும்மணிக்கோவையுமுணர்த்துகின்றது.(இ-ள்.) ஓரடிக்குப்பதினாறுகலைதொடுத்த பல்சந்தவகுப்புக்கள் அந்தாதியாகமுப்பது

கூடியது ஒலியந்தாதியாம். நேரிசை ஆசிரியப்பாவும், நேரிசைவெண்பாவும், கட்டளைக்கலித்துறையும், முறையே அந்தாதியாகமுப்பது கூடியதுமும்மணிக்கோவையாம். (எ-று.) ஈண்டியவென்றுமிகுத்துச்சொல்லியவதனால், ஒலியந்தாதிசிறுபான்மை எட்டுக்கலையால் வரப்பெறுவனவும், மும்மணிக்கோவை சிறுபான்மைநிலைமண்டில ஆசிரியப்பாப் பெற்றுவருவனவு முளவெனக்கொள்க. ஒலியந்தாதியை, ஒலியலந்தாதியென்பாருமுளர். (௰௩)

(ஊர்நேரிசைவெண்பா, ஊரின்னிசைவெண்பா.)

முதல்வனூரின்பேரான்மொழிவனவெண்பா
அதனைத்தொண்ணூறெழுபானைம்பான், மதர்விழியாய்
இன்னிசைவெண்பாவிற்குமொக்குமியற்பெயர்
அன்னவற்றூர்கட்டுரைத்தாராய்ந்து.

(எ-ன்.) ஊர்நேரிசைவெண்பாவும், ஊரின்னிசைவெண்பாவும், அவற்றின் றொகையு முரைக்கின்றது. (இ-ள்.) பாட்டுடைத்தலைவன் ஊர்ப்பெயரெடுத்து நேரிசை வெண்பாவாற் சிறப்பித்துத் தொண்ணூறு, எழுபது, ஐம்பது, என்னுந் தொகையாற் பாடுவது ஊர்நேரிசை வெண்பா வென்றும், இவ்வாறு இன்னிசைவெண்பாவாற்பாடுவது, ஊரின்னிசைவெண்பாவென்றும்பெயர்பெறும். (எ-று.) (௰௪)

(கோவை, கைக்கிளை.)

ஆய்ந்தகலித்துறைதானூறகப்பொருண்மேல்
வாய்ந்தநற்கோவையாமற்றுரைப்பின், ஏய்ந்த
ஒருதலைக்காமமுரைப்பவையையைந்தாய்
வருவிருத்தங்கைக்கிளையாமன்.

(எ-ன்.) கோவையுங் கைக்கிளையுங் கூறுகின்றது. (இ-ள்.) கட்டளைக்கலித்துறை நானூறு அகப்பொருண்மேல்வருவன கோவையென்பதாம் – ஒருதலைக்காமப்பொருள்பெற்றுவிருத்தம் இருபத்தைந்தாய் வருவனகைக்கிளையாம். (எ-று.) (௰௫)

மன்னியவெண்பாகலித்துறைமன்னர்பா
முன்னியமுப்பான்மும்மணிமாலை, மன்விருத்தம்
நாட்டியநாற்பதுநான்மணிமாலையாம்
ஈட்டியவந்தாதியாயேய்ந்து.

(எ-ன்.) மும்மணிமாலையும், நான்மணிமாலையுமுரைக்கின்றது. (இ-ள்.) வெண்பாவும், கலித்துறையும், ஆசிரியமும், அந்தாதியாமுப்பதுசெய்யுள்வருமாயின் மும்மணிமாலையென்றும், மேற்கூறியபாக்களுடன், ஆசிரியவிருத்தஞ்சேர்ந்து அந்தாதியாய், நாற்பதுசெய்யுள்வருமாயின், நான்மணிமாலையென்றும்பெயர்பெறும். எ-று. (௰௬)

(இருபாவிருபஃது, இரட்டைமணிமாலை, இணைமணிமாலை.)

ஏய்ந்தவிருபாவிருபதுவெண்பாவகவல்
ஆய்ந்தவிரட்டைமணியிருபான், ஏய்ந்தசீர்
வெண்பாகலித்துறையாமேவியநான்கானூ
றென்பாவிணைமணியாமோர்.

(எ-ன்.) இருபா இருபஃதும், இரட்டைமணிமாலையும், இணைமணிமாலையுமியம்புகின்றது. (இ-ள்.) வெண்பாவும், ஆசிரியப்பாவும், முறையே அந்தாதியாய்வந்து இருபதுசெய்யுளான் முடிவது இருபாவிருபஃ தென்றும், வெண்பாவும், கலித்துறையும், முறையே அந்தாதியாய்வந்து இருபதுசெய்யுளான்முடிவதுவெண்பாக் கலித்துறை யிரட்டைமணிமாலை யென்றும், வெண்பாவும் ஆசிரியப்பாவும், முறையேயந்தாதியாய்நூறு செய்யுளான்முடிவது வெண்பா அகவலிணைமணிமாலை யென்றும், வெண்பாவும்கலித்துறையும் கூடி முன்போன் முடிவது வெண்பாக் கலித்துறை யிணைமணிமாலை யென்றும் பெயர் பெறும். (எ-று.) (௰எ)

(ஒருபாவொருபஃது. பன்மணிமாலை.)

ஓர்ந்தகவல்வெண்பாகலித்துறையென்றொன்றினால்
ஆர்ந்தவொருபாவொருபதம்மானை, கூர்ந்தொருபோ
கூசலொழித்தாற்கலம்பகப்பா வொண்மாலை
பேசியபன்மணியாம்பின்பு.

(எ-ன்.) ஒருபாவொருபஃதும், பன்மணிமாலையுமுணர்த்துகின்றது. (இ-ள்) ஆசிரியப்பாவேனும், வெண்பாவேனும், கலித்துறையேனும், அந்தாதியாய்ப் பத்துச்செய்யுள்வருவனவொருபா வொருபஃதாம். கலம்பகவுறுப்புகளில், அம்மானையும், ஒருபோகும், ஊசலும் ஒழித்து மற்றையவுறுப்புகளாற்பாடுவது பன்மணிமாலையென்று பெயர்பெறும். எ-று. (௰அ)

(தசாங்கம்.)

புல்லுமலையாறுநாடூர்புனைதார்மா
கொல்லுங்களிறுகொடிமுரசம், வல்லகோல்
என்றிவைநஞ்செழுத்தோடேலாவகையுரைப்ப
நின்றதசாங்கமெனநேர்.

(எ-று.) சின்னப்பூவுணர்த்துவான்றொடங்கி, அதற்குநிலமாகிய தசாங்கமுணர்த்துகின்றது. (இ-ள்.) மலை, ஆறு, நாடு, ஊர், மாலை, பரி, கரி, கொடி, முரசம், செங்கோல், ஆகியபத்தும், தசாங்கமென்றுசொல்லப்படும். இவைபாடுமிடத்து நஞ்செழுத்துத் தசாங்கத்துக்கு முன்னும்பின்னும்வாராமற் பாடுக. எ-று. (௰௧)

சின்னப்பூ, தசாங்கப்பத்து.

நேருந்தசாங்கத்தைநேரிசைவெண்பாவால்
ஈரைம்பதுதொண்ணூறீண்டெழுபான், ஓரைம்பான்

தேர்ந்துரைக்கிற்சின்னப்பூவீரைந்தாற்செப்பினூர்
நேர்ந்ததசாங்கநிலை.

(எ-ன்.) சின்னப்பூவும், தசாங்கநிலையுமுரைக்கின்றது. (இ-ள்.) தசாங்கம் பத்தையும்பொருளாகக்கொண்டு, நேரிசைவெண்பா நூறுனும், தொண்ணூறுனும், எழுபதானும், ஐம்பதானும் பாடுவதுசின்னப்பூவாம். முப்பது பாடினுமிழுக்காது. நிலைமைகடம்மிலொப்பக்கொண்டு பாடப்படுந்தசாங்கம்பத்தினையும், பத்துவெண்பாவாற்பாடுவதுதசாங்கப்பத்தென்றுபெயர்பெறும்-எ-று.

நிலையார்குடைசெங்கோலூர்நாடுநீள்வேல்
கொலையார்களிறுகுதிரை, சிலைவாள்
இவற்றின்மேன்மன்விருத்தமீரைந்தாய்வந்தால்
அவற்றின்பேர்நாட்டலறிவு.

(எ-ன்.) விருத்தவிகற்பமுரைக்கின்றது. (இ-ள்) குடை, செங்கோல், ஊர் நாடு, வேல், கரி, பரி, வில், வாள், இவ்வொன்பதினையும் பொருளாகக்கொண்டு, ஒன்றின்மேற்பத்தாசிரியவிருத்தம்புணர்த்தால், அப்பொருளோடுபெயர்கொடுத்து, குடைவிருத்தம், செங்கோல்விருத்தம், ஊர்விருத்தம், நாட்டுவிருத்தம்,வேல்விருத்தம், யானைவிருத்தம், குதிரைவிருத்தம்,வில்விருத்தம், வாள்விருத்தமென்றுவழங்கப்படும். எ-று. (௨௧)

(ஊர்வெண்பா, அலங்காரபஞ்சகம்.)

அறிந்திடிலூர்வெண்பாவையிரண்டாம்வெள்ளை
செறிந்ததகலித்துறைசீர்மன்பா, அறைந்த
கலங்காதமன்விருத்தங்காண்டகையவண்ணம்
அலங்காரபஞ்சகமென்றூர்.

(எ-ன்.) ஊர்வெண்பாவும், அலங்காரபஞ்சகமு முரைக்கின்றது. (இ-ள்) ஊரடுத்து நேரிசைவெண்பா பத்துவந்தால் ஊர்வெண்பாவெனவும், நேரிசைவெண்பாவும், கலித்துறையும், ஆசிரியாப்பாவும், ஆசிரியவிருத்தமும், வகுப்புமாகிய ஐந்துமுறையேவந்தால் அலங்காரபஞ்சக மெனவும் பெயர் பெறும். (எ-று.) (௨௨)

(ஊசல், நாழிகைவெண்பா.)

ஆங்கவிருத்தத்தாலறைந்தகலித்தாழிசையால்
ஓங்கியசுற்றத்தளவாயூசலாம், போங்கடிகை
தேவர்க்குங்காவலர்க்குந்தேர்ந்துரைக்கவெண்பாவை
மேவியநாலெட்டாகவேய்ந்து.

(எ-ன்.) ஊசலும், நாழிகைவெண்பாவும், உணர்த்துகின்றது. (இ ள்.)ஆசிரியவிருத்தத்தாலாதல், கலித்தாழிசையாலாதல் சுற்றத்தளவாத்தொகையாகப்பாடுவது ஊசலென்பதாம். நாழிகையளவைக் குறித்துத் தேவருக்கும், அரசருக்கும், நேரிசைவெண்பா வால் முப்பத்திரண்டாகப் பாடுவது நாழி

கைவெண்பா வெனப்படும் (எ-று.) ஊசன்முதற்கவியில் வண்ணமுங் கொள்க. வண்ணமென்பது வகுப்பு. (உ௩)

(அட்டமங்கலம், நவமணிமாலை, தசப்பிராதுற்பவம்.)

வேய்ந்தவிருத்தங்களெட்டட்டமங்கலமாம்
வாய்ந்தனவொன்பான்மணிமாலை, ஆய்ந்தங்
கிசைத்திடுவர்மால்பிறப்பாலீரைந்துவாழ்த்துத்
தசப்பிராதுற்பவமாந்தந்து,

(எ-ன்.) அட்டமங்கலமும், நவமணிமாலையும், தசப்பிராதுற்பவமு முணர்த்துகின்றது. (இ-ள்.) ஆசிரியவிருத்தத்தாற் கவிதோறும், தேவர்கள்காக்கவென எட்டுக்கவியாகப்பாடுவது அட்டமங்கலமாம். மேற்கூறியவாறே ஒன்பதுதகவியாகப்பாடுவது நவமணிமாலையாம். மால்பிறவிப்பேதப் பதின்மருங்காக்கவெனத் தனித்தனி ஆசிரியவிருத்தத்தாற் பத்துக்கவிபாடுவது தசப்பிராதுற்பவமாம். (எ-று.) வாழ்த்தென்பதனை யெங்குமொட்டிகொள்க. (உ௪)

(நயனப்பத்து, பயோதரப்பத்து.)

தந்துணைத்தமன்விருத்தஞ்சார்ந்தகலித்துறைதான்
அந்தமுறுங்கண்மூலைமேலையிரண்டாய், வந்தால்
நயனபயோதரப்பத்தாமென்றுநன்னூற்
பயனுணர்ந்தார்முன்புபகர்.

(எ-ன்.) நயனப்பத்தும் பயோதரப்பத்து முணர்த்துகின்றது. (இ-ள்.) ஆசிரியவிருத்தத்தானுதல், கலித்துறையினுதல் நயனத்தையும், பயோதரத்தையும் பொருளாகக்கொண்டுதனித்தனிபப்பத்துக்கவிபாடுவது நயனப்பத்தென்றும், பயோதரப்பத்தென்றும் பெயர்பெறும். (எ-று.) (உ௫)

(பெண்கள், பருவம்.)

பகருங்காலைந்தேழ்பதினொன்றுபன்மூன்
றகலாதபத்தொன்பானையைந், திகலாத
முப்பத்தொன்றீரிருபான்பேதைமுதலோர்க்குச்
செப்புவராண்டெல்லைத்திறம்.

(எ-று.) பேதைமுதலாப்புறத்திலக்கண மாகிய ஏழுநிலனு மிவையென்கின்றது. (இ-ள்.) ஐந்துமுதலேழளவும் பேதை. எட்டுமுதல் பதினொன்றளவும் பெதும்பை. பன்னிரண்டுமுதல் பதின்மூன்றளவுமங்கை. பதினான்குமுதல் பத்தொன்பதளவுமடந்தை. இருபதுமுதல் இருபத்தைந்தளவும் அரிவை. இருபத்தாறுமுதல் முப்பத்தொன்றளவும் தெரிவை. முப்பத்திரண்டுமுதல் நாற்பதளவும் பேரிளம்பெண். (எ-று.) பருவமொன்றுக்குவருடம். ௩ ௪, ௨, ௬, ௭, ௭, ௭, ௯. (உ௬)

(உலா, குழமகன்.)

திறந்தெரிந்தபேதைமுதலெழுவர்செய்கை
மறந்தயரவந்தான்மறுகேன், றறைந்தகலி

வெண்பாவுலாவாங்குழமகன்மேன்மேவிலவ்
வொண்பாக்குழமகனுமுறறு.

(எ-ன்.) உலாவும், குழமகனு மாமாறுணர்த்துகின்றது. (இ-ள்.) பேதைமு தலானோர் காதல்கூர வீதியிடைப்போந்தான் பாட்டுடைத்தலைவனென்றுகலி வெண்பாவாற்பாடுவது உலாப்புறமாம். மடந்தையர்கையிற்கண்டகுழமகனை ப்புகழ்ந்து மேற்கூறியபாவாற்பாடுவது குழமகனும். (எ-று.) திறந்தெரிந்த வென்றுமிகுத்துச்சொல்லியவதனால் உலாப்புறத்துமுன் குழமகனைப்பாடினு மிழுக்காது. அது தலைவன், நாடும், தாரும், பெயரு முள்ளிட்டவளந்தோன் றப்பாடுவது. (௨௭)

(வளமடல்)

உற்றவறம்பொருள்வீடெள்ளியுயர்த்தின்பம்
பொற்றொடிகாதற்பொருட்டாகப், பெற்றி
உரைத்தகலிவெண்பாமடலிறைவனெண்பேர்
நிரைத்தவெதுகைநிறுத்து.

(எ-ன்.) வளமடல்கூறுகின்றது. (இ-ள்.) அறம் பொருள் வீட்டையெள்ளி இன்பத்தையேவலியுறுத்திப் பாட்டுடைத்தலைவனியற்பெயருக்குத்தக்கமுழுது மொரேயெதுகை யாகத் தனிச்சொல்லின்றிக் கலிவெண்பாவாய் மடலூரும் பெற்றிற்றென்று பாடுவதுவளமடலாம். (எ-று.) வளமடலென்பதுஉரையிற் கோடல். (௨௮)

(அங்கமாலை. பாதாதிகேசம். கேசாதிபாதம்.)

நிறுத்தவெளிவிருத்தநீடுறுப்பில்வந்தால்
குறித்தங்கமாலையாக்கொள்க, உறுப்பமைந்த
பாதாதிகேசமுங்கேசாதிபாதமுமா
ஓதுங்கலிவெண்பாவொன்று.

(எ-ன்.) அங்கமாலையும், பாதாதிகேசமும், கேசாதிபாதமும்உணர்த்துகின் றது. இ-ள். உறுப்புக்களை வெளிவிருத்தத்தாற்புகழ்ந்துகோவையாகப்பாடுவ து அங்கமாலையாம். அவ்வங்கங்களைக்கலிவெண்பாவாற் புகழ்ந்துபாதாதிகே சமாகப்பாடுவதுபாதாதிகேசமென்றும், கேசாதிபாதமாகப்பாடுவது கேசாதி பாதமென்றும் பெயர்பெறும் எ-று. (௨௯)

(ஆற்றுப்படை.)

ஒன்றுமகவலாலொண்புலவர்யாழ்பபாணர்
குன்றுதசீர்ப்பொருநர்கூத்தரோ, என்றிவரை
ஆங்கொருவனாற்றுப்படுத்தபரிசறைந்தாற்
பாங்காயவாற்றுப்படை.

(எ-ன்.) ஆற்றுப்படையிலக்கணமுணர்த்துகின்றது (இ-ள்) ஆசிரியப்பா வாற் புலவனாயானும், பாணனாயானும், பொருநனாயானும், கூத்தனாயானு ம், தம்முளொருவனாறுப்படுத்தால், புலவராற்றுப்படை, பாணராற்றுப்ப டை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படையென்றுவழங்கப்படும்.எ-று. அவைவெண்கலிப்பாவாற்பாடினுமிழுக்காது. (௩௰)

(தானைமாலை, வஞ்சிமாலை, வாகைமாலை.)

படைத்திறஞ்சொல்லிற்பகர்தானைவஞ்சி
எடுத்துமேற்சேறலியம்பின், அடுத்தமைந்த
வெற்றியுரைவாகையாம்வேந்தன்பாவொன்றினால்
உற்றுரைத்துமாலைப்பேரோது.

(எ-ன்.) தானைமாலையும், வஞ்சிமாலையும், வாகைமாலையும் உரைக்கின்றது. (இ-ள்) ஆசிரியப்பாவாற்றானையைப்புகழ்ந்துரைப்பிற்றானைமாலையாம். படைமேலெடுத்துச் சேறலைப்பாடின் வஞ்சிமாலையாம். வெற்றியைப்பாடின் வாகைமாலையாம். ஆசிரியப்பாவால் வருவதெல்லாவற்றிற்குமொக்கும். (௩௧)

(தாரகைமாலை, மங்கலவள்ளை.)

ஓதுசந்தத்தாலுரைத்தலாண்டாரகைமாலை
கோதிலாக்கற்பிற்குலமகளை, நீதிசேர்
மங்கலவள்ளைவகுப்பொடுவெண்பாவால்
இங்காமொன்பானென்றிசை.

(எ-ன்.) தாரகைமாலையும், மங்கலவள்ளையுமுணர்த்துகின்றது. (இ-ள்.) தூசிப்படையைப் புகழ்ந்து வகுப்பால் ஒன்பது கவிபாடுவது தாரகைமாலையாம். கற்புடைமகளிரைப் புகழ்ந்து ஒன்பது வகுப்பும். ஒன்பது வெண்பாவுமாப்பாடுவது மங்கலவள்ளையாம். (எ-று.) அருந்ததிக்கற்பின்மகளிற்குள்ள இயற்கைக்குணங்களை வகுப்பாற்பாடுவது தாரகைமாலையென்பாருமுளர்.

(யானைவஞ்சி.)

இசைந்தநிலங்குலமொத்தவெழிலோ
டசைந்தபிராயத்தளவும், இசைந்தமதந்
துன்னவஞ்சிவீடுயிர்கோண்மன்னன்றொடர்ந்தணைத்தல்
சொன்னவஞ்சியானைத்தொழில்.

(எ-ன்.) யானைவஞ்சியியம்புகின்றது. (இ-ள்.) யானையதுபிறப்புங்குலமும், ஒத்தவழகும், பிராயமும், என்பவற்றினிலக்கண அளவும், மதந்துன்னினவிடத்தஞ்சிவிடுதலும், கொன்றுதிரிதலும், அதுகண்டரசனணைத்தலும், வஞ்சிப்பாவாற்சொல்லப்பட்டது யானை வஞ்சியாம். (எ-று.) (௩௩)

(மெய்க்கீர்த்தி, கையறமோதாப்பா.)

தொழிலார்ந்தமெய்க்கீர்த்திசொற்சீரடியால்
எழிலரசர்செய்தியிசைப்பர், மொழியுங்கால்
கையறமோதார்கலிவஞ்சியென்றிவற்றாற்
பொய்தீர்ந்தநூலோர்புரிந்து.

(எ-ன்) மெய்க்கீர்த்தி நீர்மையுங்கையறமோதாப்பாவுமுணர்த்துகின்றது. (இ-ள்.) ஆசிரியம்விரவிய சொற்சீரடிகளால் மன்னரதுண்மைக் கீர்த்தியைத் தொடுத்துப்பாடுவது மெய்க்கீர்த்தியாம். கையறம் கலிப்பாவாலும், வஞ்சிப்பாவாலும் பாடப்படா. (௩௪)

(புகழ்ச்சிமாலை, நாமமாலை.)

புரிந்தமயக்கவடிவஞ்சியாற்பொய்தீர்
திருந்திழையார்சீர்பேர்சிறக்கத், தெரிந்துரைத்தால்
மன்னும்புகழ்ச்சிநன்மாலையாமைந்தர்க்காம்
பின்னுமமாலைப்பேர்பெற்று.

(எ-ன்.) புகழ்ச்சிமாலையும், நாமமாலையுமுரைக்கின்றது. (இ-ள்) அடிமயங்கிய வஞ்சிப்பாவால் கோற்றொடிமாதரைக் குணம் பெயரடுக்கிப் புகழ்ந்துபாடுவது புகழ்ச்சிமாலையாம். மேற்கூறியவாறே ஆடவரைப் புகழ்ந்து பாடுவது நாமமாலையாம். (எ-று.) (௩௫)

(வேறு இரட்டைமணிமாலை, வருக்கமாலை.)

பெற்றசீர்மன்விருத்தம்வெண்பாப்பெயர்ந்திருபான்
மற்றையிரட்டைமணிமாலையாம், பொற்றொடியாய்
மன்னகவலெட்டாய்வருக்கவெழுத்தான்வருமேல்
முன்வருக்கமாலைமொழி.

(எ-ன்.) இரட்டைமணிமாலையும், வருக்கமாலையுமுணர்த்துகின்றது. இ-ள். ஆசிரியவிருத்தமும், நேரிசைவெண்பாவுந்தம்முண்மாறி அந்தாதியாய் இருபது வருவது இரட்டைமணிமாலையாம். உயிர்வருக்கத்தேனும். கசதநபமவ வென்னும் ஏழுயிர்மெய் வருக்கத்தேனும் அவ்வவ்வருக்கமுறையே யெட்டாசிரியம் வந்தால்வருக்கமாலையாம் (எ-று.) யகர ஞகரங்களை நீக்கியேழுயிர்மெய்யென்றது பிறர்நூன் முடிந்ததுதானுடன் படுதலென்னுந் தந்திரவுத்தி()

(செருக்களவஞ்சி, வரலாற்றுவஞ்சிமுதலியன)

மொய்யின்றிறம்வஞ்சிப்பாவின்முடித்துரைத்தல்
செய்யிற்செருக்களவஞ்சியாம், தையால்
வழியுரைத்தல்வஞ்சிவரலாறுமற்று
மொழியுரைத்தறன்பெயராமூண்டு.

(எ-ன். செருக்களவஞ்சியும், வரலாற்றுவஞ்சியும் உரைத்து ஏனைவஞ்சிகளையுமாட்டெறிகின்றது. (இ-ள்.) செருக்களச்செய்தி களைவஞ்சிப்பாவாற் பாடிற் செருக்களவஞ்சியாம். ஒருபொருளின் வரலாற்றை வஞ்சிப்பாவாற் பாடின் வரலாற்றுவஞ்சியாம். ஏனைப்பொருள்களையும் வஞ்சிப்பாவாற்பாடின் அப்பெயரானே வஞ்சியென்று வழங்கப்படும். (எ-று.) (௩௭)

(பரணி.)

மூண்டவமர்க்களத்துமூரிக்களிறட்ட
ஆண்டகையைப்பரணியாய்ந்துரைக்க, ஈண்டிய
நேரடியேயாதியாநீண்டகலித்தாழிசை
ஈரடிகொண்டாதியுடனீறு.

(எ-ன்.) பரணியிலக்கணங்கூறுகின்றது. (இ-ள்.) செருக்களம்புக்குத்தனக் கூறுபாடின்றி மாற்றார்யானைபடப்போர்செய்தான் பரணிக்குப்பாட்டுடைத்தலைவனும், அவனைப்பாடுமிடத்து நாற்சீர்முதலாக ஏனைத்துச் சீரானும்

கலித்தாழிசையடித் தொகையிரண்டின் மேலேறுமல், முதற்றொடங்கி முடிவளவும்பாடுக. (எ-று.) வெண்கலிப்பாவாற்பாடினுமிழுக்காது. (௩அ)

ஈறில்வணக்கங்கடைநிலம்பேயென்பனவும்
வீறுசாலையைக்குமெய்ப்பேய்கள், கூறித்
திறப்படச்சொல்லினவுஞ்செப்பிற்பிறவும்
புறப்பொருணூல்கொண்டுபுகல்.

(எ-ன்.) இதுவுமது: (இ-ள்.) பரணிபாடுமிடத்து, முற்படக்கடவுளை வாழ்த்தி, பின்புகடைதிறப்புக்கூறி, பாலைநிலத்தியல்புகூறி. காளிகோட்டம் பாடி, கழுதினுண்மைபழுதறக்கூறி, காளிக்குக்கூளிசொல்லுமாறும், அவளதற்குச் சொல்லுவனவுமாகிய பிறவும்புறப்பொருளிலக்கணத்தின் முறைமை தோன்றச்சொல்லுக. (எ-று.) பிறவுமென்றதனுல். பாட்டுடைத்தலைவனைச் சிறப்பித்தலும், அவன் படையெடுத்துச் சென்றமுறைமையும், செருமுடித்தலும், கூழட்டன்முதலாயின வெல்லாங்கொள்க. (எ-று.) (௩௧)

(பெருங்காப்பியம்.)

புகரில்வணக்கம்பொருப்பறமேயாதி
பகர்தல்கடல்கோள்பருவம், நிகரில்
தலைவனைக்கூறறபனனிந்துதோற்றம்
சிலைமணந்தோர்போரின்செயல். (௪௰)

செயலார்முடிசூடல்சீர்ப்புதல்வர்ப்பேறு
டயலார்பொழில்புனல்புக்காடல், இயலுமூண்
மந்திரந்துதாடல்வருமிகல்விக்கிரமம்
சந்துசெலவும்பிறவுஞ்சார்ந்து. (௪௧)

சார்சுவையேபாவம்விளக்கியினத்தொடுபாக்
கூருனையேபாடையேகொண்டிலம்பம், நேர்சருக்கம்
நீப்பில்பரிச்சேதநேர்ந்துவருமேற்பெருங்
காப்பியமாமென்றுகருது.

(எ-ன்.) பெருங்காப்பிய முணர்த்துகின்றது. (இ-ள்.) இம்மூன்று செய்யுளுக்கும் பொருள்விளங்கிக்கிடந்தமையின் பொருள்விரித்துக்கொள்க.(எ-று.) பொருப்பாதி, தசாங்கம். அறமாதி அறம், பொருள், இன்பம், வீடு. பருவம், கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில். தபனனிந்து தோற்றம், சந்திராதித்தர் தோற்றம். ஊண், காமபாணம், வீரபாணம். சுவை - சிங்காரம், பெருநகை, கருணை, வீரம், கோபம், பயம், அற்புதம், குற்சை, சாந்தம். (௪௨)

(காப்பியம்.)

கருதுசிலகுன்றினுமக்காப்பியமாமென்பர்
பெரிதறமேயாதிபிழைத்து, வருவதுதான்
காப்பியமாகுங்குலவரவுகாரிகை
யாப்பிற்புராணமேயாம்

(எ-ன்.) பெருங்காப்பியத்தினொழியும், காப்பியமும், புராணகதையுங்கூறுகின்றது. (இ-ள்.) பெருங்காப்பியத்திற்கு எடுத்தோதிய அறமுதனான்குமொழிந்தல்லாவுறுப்புகள் சிலகுறையினுமிழுக்காது. மேற்கூறியவற்றுள் தர்மார்த்த காம முத்தியெனு நான்கனுள் சிலகுறைந்து வந்தால், காப்பியமாம். குலவரவுமுதலாயினவற்றைக்காட்டுவது புராணகதையாம். (எ-று.) (சஙு)

ஆயவகப்பொருண்மேலாசிரியப்பாவினுள்
மேயசீர்வஞ்சியடிமேவாது, தூய
அகப்பொருண்மேலன்றியருங்கலிகள்வாரா
தொகப்பெறுவஞ்சிதொடர்ந்து.

(எ-ன்.) அகப்பொருள்சொல்லும் ஆசிரியப்பாவிற்புகப்பெறுவடியும், அகப்பொருண்மேன் மிகப்பெருகிவரும்பாவும், யாதானுமொரு பொருண்மேல் வரப்பெறும்பாவு முணர்த்துகின்றது. (இ-ள்.) அகப்பொருள்சொல்லுமாசிரியப்பாவில் வஞ்சியடிபுகுந்துவிரவப்பெறு அகப்பொருண்மேலன்றிக்கலிப்பா பெரும்பான்மையும் வரப்பெறு, வஞ்சிதனித்து நின்றுபொருள் சொல்லுந்துணையல்லது தொகையாவரப்பெறு. (எ-று.) (சச)

தொடர்ந்தபெயர்கடொழிலளவுகாலம்
இடம்பொருள்பாவுறுப்போடெல்லை, நுடங்கிடையாய்
பாடினான்பாடுவித்தான்பாடப்படுபொருளால்
நீடும்பிறவுநிறைந்து.

(எ-று.) அகலக்கவிக்குப் பெயர்வருமாறுணர்த்துகின்றது. (இ-ள்.) தொழிலானும், அளவானும், காலத்தானும், இடத்தானும், பொருளானும், பாவானும், உறுப்பானும், எல்லையானும், பாடினான்பெயரானும், பாடுவித்தான் பெயரானும், பாடப்படும்பொருளானும், பிறவாற்றானும், அகலக்கவிக்குப்பெயரிடப்படும். (எ-று.) அவற்றுள் யானைத்தொழிலென்னும் பெயர், தொழிலான் வந்தது. பன்னிருபடலம், நூற்றந்தாதி, குறுந்தொகை, நெடுந்தொகையென்பன அளவு பற்றிவந்தன. கார்நாற்பதுமுதலாயினகாலம் பற்றிவந்தன. களவழியும், ஐந்திணையும் இடம்பற்றிவந்தன. அகம்புறமென்பன பொருள் பற்றிவந்தன. கலித்தொகை, வெண்பாமாலை யென்பன பாப்பற்றிவந்தன. அங்கமாலை, நயனப்பத்து, பயோதரப்பத்து என்பன உறுப்புப்பற்றிவந்தன. பாதாதிகேசம் கேசாதிபாத மென்பன வெல்லைபற்றி வந்தன. தொல்காப்பியம், அவிநயம், கல்லாடமென்பன, பாடினானைப் பற்றிவந்தன. பாண்டிக்கோவை முதலாயின பாடுவித்தானைப்பற்றிவந்தன. வச்சணந்திமாலைமன்ன. காந்தபுராணம், கூர்மபுராணமென்பன பாடப்படும் பொருள்பற்றிவந்தன. பிறவுமென்றதனால் இடுகுறியாற் பெயர் பெற்றனவுமுள அவைகலைக்கோட்டுத்தண்டுமுதலியன. (சரு)

நிறைமதியாற்கல்வியானீள்கலைகள்கல்லா
தறையுமவன்கமகனாகும், முறைமேற்கோள்

புல்லுமெடுத்துக்காட்டேதுபுகலுவன்
நல்வாதியென்றேநவில்.

(எ-ன்.) கமகனையும், வாதியையுங்கூறுகின்றது. (இ-ள்.) தன்னுடைய ஞானவிசேடத்தாலேயாதல், கல்விப்பெருமையாலேயாதல், ஒருவன்சொல்லிய நூல்விகற்பத்தைத்தான் பயிலாதிருந்தும் பொருள்விரிக்க வல்லான் கமகனும். எடுத்துக்கொண்டகோளுக்குப் பொருந்தினமேற்கோளும், காரணமும், அவையிரண்டிற்கும் பொருந்தின எடுத்துக்காட்டுஞ் சொல்லிமுடிப்பான்வாதியாம்-எ-று. மேற்கோள், காரணம், எடுத்துக்காட்டென்றுத அம்முறையன்றிக்கூற்றால், விதண்டைவாதம், சர்ப்பவாதமென்னும் விகற்பவாதங்களுமுணர்ந்துகொள்க. (சசு)

நவிலுமறமுதனான்குமயங்காமற்
புவியதனிற்கேட்டோர்புகழக், கவிப்பனுவல்
குன்றுதசொல்லாற்றெளிவுபெறக்கூறுவோன்
நன்றுயவாக்கியென்றார்.

(எ-ன்.) வாக்கியிலக்கணம்வகுக்கின்றது. (இ-ள்.) அறம், பொருள், இன்பம், வீடென்பனதம்மில்விரவாமற்கேட்டோர்விரும்ப இலக்கணத்தையாதல், இலக்கியத்தையாதல், செஞ்சொல்லால்விளங்கச்சொல்லுவான்வாக்கி. எ-று.

ஆரொருவன்பாக்களையாங்கொருவனுக்களிப்போன்
சோரகவிசார்த்தொலியிற்சொல்லுமவன், சீரிலாப்
பிள்ளைக்கவிசிறந்தபின்மொழிக்காம்புன்மொழிக்காம்
வெள்ளைக்கவியதனின்வேறு.

(எ-ன்.) புன்கவிஞர்நாற்பகுதியரென்கின்றது. (இ-ள்.) ஒருவன்பாட்டைமற்றொருவனுக்குக்கொடுப்போன் கள்ளக்கவியாம். ஒருவன்கவியிசையில்வேறொருசெய்யுட்புணர்ப்போன் சார்த்துகவியாம், தனக்கெனவொன்றின்றி முன்னோர்மொழிந்த சொன்னடைபொருணடைகண்டு கவிபாடுவோன்பிள்ளைக்கவியாம். புன்மொழிகளாற்கவிபாடுவோன்வெள்ளைக்கவியாம். எ-று. (சஅ)

செய்யுளியல் முற்றிற்று.

மூன்றுவதுபொதுவியல்.

வேறுமறையோராதிநாற்சாதிவெள்ளைமுதல்
கூறுநிலைமுல்லைகுறிஞ்சியே, மாறு
மருதநிலகெய்தனிறம்வான்னமயேசெம்மை
கருதரியபொன்மையேகார்.

(என்பதுசூத்திரம்.) இவ்வியலென்னபெயர்த்தோவெனின், முதன்மொழியியலிற்கும், செய்யுளியலிற்கும் பொதுவாகியபொருளை யுணர்த்தினமையின் பொதுவியலென்னும் பெயர்த்து. இச்சூத்திரம் முற்கூறிப்போந்த ஆசுமுதலாகிய நான்குகவிகட்கு முதற்காரணமாயுள்ளவெண்பாமுதலிய நான்குபாவி

ற்கும், சாதியும், இடமும், நிறமுமுணர்த்து-ற்று. (இ-ள்.)வெண்பாமறையோர்சாதி; இதற்குநிலம்மூல்லை. நிறம்வெண்மை. ஆசிரியப்இதுதிரற்ஆசசார்பாகுநிலங்குறிஞ்சி, நிறஞ்செம்மை. கலிப்பாவணிகர்சாதி, இதற்குநிலம்மருதம், நிறம்பொன்மை. வஞ்சிப்பாசூத்திரசாதி,இதற்குநிலம்நெய்தல், நிறங்கருமை.

கார்த்திகைமாசிபனைகுன்றுதிகாட்டுகநாள்
மூத்தவிராசிநான்மூன்றினையும், நீர்த்தசீர்
மேதினிமேலாசிரியம்வஞ்சிகலிவெள்ளையென
ஓதியமேடாதியாலோட்டு.

(எ-ன்.) மேற்கூறியபாக்களின்நாளும், இராசியுமுணர்த்துகின்றது.(இ-ள்) கார்த்திகைமுதல் ஆயிலியமீறுகிய ஏழுநாளும், கர்க்கடகம், விருச்சிகம், மீன மென்னுமூன்றிராசியும், வெண்பாவிற்காம். மகமுதல்விசாகமீறுகிய ஏழு நாளும், மேஷம், சிங்கம், தனுசு, என்னுமூன்றிராசியும், ஆசிரியப்பாவிற்காம். அனுடமுதல் அவிட்டமீறுகிய ஏழுநாளும், மிதுனம், துலாம், கும்பமென்னுமூன்றிராசியும், கலிப்பாவிற்காம். சதயமுதல்பரணியீறுகிய ஆறுநாளும் இடபம், கன்னி, மகரமென்னுமூன்றிராசியும், வஞ்சிப்பாவிற்காம். எ-று. ௨)

ஓட்டுமதிபொன்வெள்ளையொண்கதிரோன்சேயகவல்
காட்டியமால்காரிகலிக்காகும், மீட்டும்
புகர்பாம்புவஞ்சிக்காம்பூவிரையோடாடை
பகர்நிறத்தாற்கொள்கவணிபாட்டு.

(எ-ன்.) மேற்கூறியபாவிற்கு அதிதேவதையும், புஷ்பமும், சந்தனமும், ஆடையும், ஆபரணமும் உணர்த்துகின்றது. (இ-ள்.) வெண்பாவிற்குச்சந்திரனும், வியாழமும். ஆசிரியப்பாவிற்கு, ஆதித்தனும், செவ்வாயும். கலிப்பாவிற்குப்புதனும், சனியும். வஞ்சிப்பாவிற்குச்சுக்கிரனும், இராகுகேதுக்களும். அதிதேவதைகளாம். புஷ்பமும், சந்தனமும், வஸ்திரமும், ஆபரணங்களும், முன்சொன்னநிறப்பகுதியினாலேகொள்க. எ-று. (௩)

பாட்டுடையோனூர்ப்பேரியற்பேர்பட்டவெதுகை
நாட்டிடினுமப்பேர்நவிலடியிற், காட்டுமுதற்
சேர்ந்தவனுவாகச்சீர்முன்னியற்றிடினும்
வாய்ந்தசிறப்பென்கைவழக்கு.

(எ-ன்.) பாடும்விதமுணர்த்து கின்றது. (இ-ள்.) பாட்டுடைத்தலைவன் ஊர்ப்பெயரினையாயினும், இயற்பெயரினையாயினும் அடிமுற்சீரிலே நிறுத்தி எதுகைத்தொடர்படவைப்பினும், வருக்கமுதலிய அனுவெதுகைத் தொடர்ப வைப்பினுஞ்சிறப்பாம். (எ-று.) (௪)

வழக்குண்மரபியலுணேர்ந்துவழுவா
திழுக்கிவடவெழுத்தையின்பம், வழுக்காது
முன்னையோர்பாட்டிற்பயின்றமொழியன்றோ
சொன்னவுறுப்பின்றுணிபு.

(எ-ன்.) உறுப்புச் செய்யுணெறியுணர்த்துகின்றது. (இ-ள்.) வழக்கினோடும், மரபியலோடும் பொருத்தமுடையவாய், வடவெழுத்துக்கலவாது கேட்டோர்க்கு மிகவுமின்பம் பூரிக்குஞ்சொல்லாகச்சான்றோர் செய்யுள்களில் எடுத்துக்காட்டுஞ் சொற்களாற்புனர்க்கப்படுவனஉறுப்புச்செய்யுளாம்.எ-று.()

துணிதற்கரிதுபொருளென்றுஞ்சோர்வு
பணிவுற்றசொன்மேற்பகுத்தும். அணிபொருட்டான்
மற்றுமுண்டென்றுமுரைப்போர்வழுச்சொல்லின்
இற்றன்றோபாவினிழுக்கு.

(எ-ன்.) குற்றப்படாமற் பாக்களைபுனர்க்கவென்கின்றது. (இ-ள்.) நிச்சயித்தற்கரிய பொருளுடையவாயினும், எடுத்தேறுபட்ட சொல்லுடையவாயினும், பலபொருளுக்கேற்ற சொல்லுடையவாயினும், பொருந்திற்குற்றமாம். (எ-று.) எடுத்தேறுசொல் - இடிபோன்றசொல். (சு)

இழுக்கிலாநாற்குலத்தோரொப்பொருளுந்தேர்ந்தோர்
ஒழுக்கறந்தெய்வமுடையோர், விழுக்கவிகள்
ஈரிரண்டுமுத்தமிழும்வல்லோரேயெஞ்ஞான்றும்
சீரார்கவியுரைப்போர்சென்று.

சென்றவிருபான்றொடங்கிச்சேருமெழுபானளவும்
நின்றபருவத்துறுப்புநீங்காதோர், ஒன்றில்
அகலாப்பிணியில்லோரன்றோபாக்கொண்டு
புகலப்பெறுவார்புகழ்ந்து.

(எ-ன்.) அகலக்கவிபுகல்வோரிவரென்கின்றது. (இ-ள்.)இவ்விருசெய்யுளையும், விரித்துரைத்துக்கொள்.(எ-று.) இக்குணமில்லாதார் பாடலாகாதென்பதாம்.

புகழுந்தருமநெறிநின்றோர்பொய்காமம்
இகழுஞ்சினஞ்செற்றமில்லோர், நிகழ்கலைகள்
எல்லாமுணர்ந்தோரிருந்தவிடமன்றோ
நல்லாயவைக்குநலம்.

(எ-ன்.) அகலக்கவிகேட்பிக்குநல்லவை, நிறையவையென்னு மிரண்டனுள், நல்லவை கூறுகின்றது.(இ-ள்.)இவ்விலக்கணமுடையோரவைநல்லவையாம்.

நலனடக்கஞ்செம்மைநடுவுநிலைஞானம்
குலனென்றிவையுடையோர்கோதில், புலனில்லோர்
சென்றுமொழிந்தனவுங்கேட்போர்செறிந்தவிடம்
அன்றோநிறைந்தவவை

(எ-ன்.) நிறையவை கூறுகின்றது.(இ-ள்.) இவ்விலக்கண முடையோரவை நிறையவையாம். (எ-று.) அவையுடையோரும்,குலனுடையோராதல்சிறப்பு.()

அவையின்றிறமறியாராய்ந்தமர்ந்துசொல்லார்
சுவையின்றித்தாமுரையார்நாணார், சுவையுணரார்

ஆயகலைதெரியாரஞ்சாரவரன்றோ
தீயவவையோர்செருக்கு.

(எ-ன்.) தீயவவையுரைக்கின்றது. (இ-ள்.) இவ்விலக்கணத்தையுடையோரவை தீயவவையாம். (எ-று.) இவர்முன்கவிகேட்பிக்க லாகாதென்பதாம்.

குன்றுநூலங்கமறைகோவணங்கோன்முத்தியும்
நன்றுயவேள்விநளினமும், அன்றிக்
குடைசமிதைகுண்டிகைபுற்கோத்திரமென்றின்ன
உடையாரையந்தணரென்றுன்னு. (௰உ)

உன்னலரன்கழலையோங்கியசீரங்கியயன்
என்னவுவமித்தலிவரென்றே, நன்மறைகள்
ஓதலேயோதுவித்தல்வேட்டலேவேட்பித்தல்
ஈதலிரத்தலென்றேத்து.

(எ-ன்.) நாற்குலமென்றவற்றுள் அந்தணரியல்பு கூறுகின்றது. (இ-ள்.) இவ்விலக்கணமுடையோர் அந்தணராம். (எ-று.) (௰௩)

ஏத்தியபூவைநிலையெல்லோன்கழல்வாழ்த்தல்
காத்தன்முடிசூட்டல்களம்வேட்டல், தீத்தொழில்கள்
வெண்குடைசெங்கோல்கவரிவெற்றியரியாசனமும்
மண்குலவுமன்னர்வளம். (௰௪)

வளர்த்தல்குடிகமையஞ்சாதுரங்கம்வாய்மை
விளைத்தல்பொருணெறியாமெய்ந்நூல், அளத்தலே
உம்பருவமைபுரைகோளிவையுடையார்
இம்பருலகுக்கிறை.

எ-ன்.) மன்னரியல் புரைக்கின்றது. (இ-ள்.)இப்பெற்றியுடையோர் மன்னர்.

இறையஞ்சாதேருழல்வித்தீதல்புரிந்து
மறைகொண்டழல்வளர்த்துவாய்மை, பொறையுடைமை
என்றிவையுங்காத்துநிரையோம்பலென்பவே
குன்றுவணிகர்குணம்.

(எ-ன்.) பூவைசியர், தனவைசியரென்பவர்களுள் பூவைசியரியல்பு கூறுகின்றது. (இ-ள்) இப்பெற்றியுடையார் பூவைசியராம். எ-று. (௰௬)

குணங்கோடாக்காத்தல்கொழுநிதிக்கோன்றன்னை
வணங்கலவன்புகழேவாழ்த்தல், அணங்கார்
இடத்தேகிவாணிகத்தாலீட்டலெரிவேட்டல்
படைத்தோர்வணிகரென்பார்.

(எ-ன்.) தனவைசியர் செய்தி கூறுகின்றது. (இ-ள்.) இப்பெற்றியுடையோர் தனவைசியராம். (எ-று.) (௰எ)

பார்திகழுமூவர்பணித்தபணியொழுகல்
ஏருழுதலீதல்பிழையாமை, பார்புகழக்

கோட்டமிலாமையொருமைக்குணம்பிறவும்
காட்டினாசூத்திரர்தங்கண்.

(எ-ன்.) சூத்திரர் செய்தி கூறுகின்றது. (இ-ள்.) இப்பெற்றியுடையோர் சூத்திரராம். (எ-று.) (௰அ)

(சிறப்புப்பாயிரவிலக்கணம்.)

கண்ணியதெய்வமிறைஞ்சிக்கருதுநூல்
பண்ணவதிகாரம்பாரித்தல், எண்ணும்
மதியோர்சிறப்பென்பர்வானவரைவாழ்த்தா
அதிகாரமுஞ்சிறப்பென்றாக்கு.

(எ-ன்.) அகலக்கவிக்கு இன்றியுமையாத பாயிரங்களுள், சிறப்புப்பாயிரங் கூறும்வகை யுரைக்கின்றது. (இ-ள்.) தெய்வவணக்கமும், அதிகாரமும், புணர்த்துரைப்பதும், அதிகாரமொன்றுமே யுரைப்பதுஞ் சிறப்புப்பாயிரமாம்.

ஆக்கியோன்பேர்வழியேயெல்லையாப்பந்நூற்
போக்கிடஞ்சொல்வோர்நுதலிற்றாயபயன், தாக்கியவிவ்
வெட்டினொடுங்காலங்களன்காரணமியம்பப்
பட்டாலுமப்பெயரேபன்னு.

(எ-ன்.) இதுவுமது. (இ-ள்.) ஆக்கியோன் பெயர் முதல், பயனீறாகிய எட்டுமுரைப்பதும், இவற்றுடன் காலங் களன்காரணமென்னு மூன்றுங்கூட்டி யுரைப்பதுஞ் சிறப்புப்பாயிரமாம். (எ-று.) (௰கூ)

பன்னியநூற்பேர்பகர்ந்தோன்பேர்காரணமும்
துன்னும்பயனளவுஞ்சொல்லினும், முன்னைச்
சிறப்பாமவற்றுட்சிலவேறினாலும்
பெறப்படுமாமுன்னைப்பெயா.

(எ-ன்.) இதுவுமது. (இ-ள்.) இவ்வைந்துங் கூறுவதும், இவற்றுடன், முன்னையவற்றுட் சிலவேறக்கூறுவதும், அச்சிறப்புப்பாயிரமேயாம். எ-று.

பொதுப்பாயிரத்திலக்கணம்.

பெயரார்நூலீவோனியல்பீயும்பெற்றி
அயராதுகொள்வோனளவும், அயர்வின்றிக்
கோடன்மரபீரிரண்டுங்கூறல்பொதுப்பாயிரமாம்
பாடல்சாநூலின்பயன். (உக)

பயனுன்காய்மூவகைத்தாய்ப்பன்மூன்றுரைத்தாய்
இயலுடைத்தாய்மூவாமலேழு, செயன்மதத்தாய்ப்
பத்தாய்க்குணங்குற்றம்பத்தொழிந்தெண்ணான்கா
முத்தியதுநூலென்றுரை. (உஉ)

உரைத்தநதிசீயமோடொண்பருந்துதேரை
நிரைத்ததொழிற்சூதிரத்தினின்று, விரைக்குழலாய்

செம்பொருண்ஞாபகமாஞ்செய்திநியதியாம்
கம்பமிலாநூலின்கருத்து. (உங)

கருத்தெச்சநுட்பம்பொழிப்பகலங்காட்டி
உரைத்தவுதாரணமுமுண்டேல், விருத்தியாம்
பூண்டகருத்தும்பொழிப்புமுதாரணமும்
காண்டிகையென்றோதல்கடன்.

(எ-ன்.) பொதுப்பாயிர விலக்கணங் கூறுகின்றது. (இ-ள்.) இச்சூத்திரங்களை விரித்துரைத்துக்கொள்க. (எ-று.) (உச)

கடனுமகரவாகாரங்கதிரோன்
உடனுயெழுங்கடிகையோரா-றிடனுகி
ஏனையுயிர்க்கூறுமிவ்வகையால்வந்துதித்தால்
ஆனமுதன்மூன்றுமழகு.

(எ-ன்.) அகலக்கவிகேட்கும் முகூர்த்த முணர்த்துகின்றது. (இ-ள்.) அகர ஆகாரமும். இகர ஈகார, ஐகாரமும், உகர ஊகார, ஔகாரமும், எகர ஏகாரமும், ஒகர ஓகாரமும், முறையே உதயாதி அவ்வாறு நாழிகையுதிக்கும், இவற்றுள் - முதன் மூன்று நாழிகையும், உத்தமம், பின்மூன்றுநாழிகையுமாகாது. (எ-று.) இவ்வைந்துகூற்றெழுத்துகளை முதலிலுடைய பாக்களுக்குச்சொன்னகாலத்தில் முற்கூற்றிலரங்கேற்றுக வென்பதாம். (உரு)

அழகாகமுன்மொழிக்கணராய்ந்தனவும்
அழகாகச்சொல்லினவுமன்றி, அழகாகச்
செய்யுட்குணாத்தனவுமெல்லாஞ்செயிர்தீரச்
செய்யினன்றன்றுயிற்றீது

தீதிலாநூலுரைத்ததீதிலாச்செய்யுளைத்
தீதிலோர்நல்லவையிற்சேர்த்ததற்பின், ஆதிசால்
பாவிற்கியையவுரைக்கிற்பலபொருளும்
தாவில்பொருளோடுஞ்சார்ந்து. (உஎ)

சாந்தின்மெழுகித்தரளத்திரள்பரப்பிக்
காந்திமணிகனகங்கண்ணுறீஇ, வாய்ந்தலர்ந்த
தாமமுநாற்றிவிளக்கிட்டுச்சாறவிசில்
நாமகளையேற்றுவித்தனன்கு. (உஅ)

நன்குணர்ந்தோராய்ந்ததமிழ்நூலினன்னெறியை
முன்புணர்ந்துபாட்டியனான்முற்றுணர்ந்து, பின்புணரும்
நல்லார்முன்னல்லாய்நலமார்கவியுரைக்க
வல்லாதலன்றோமதி. (உகூ)

பொதுவியன்முற்றிற்று.

என்களங்கம்யாவையுநீக்கியினிதருளி
நன்களந்தைந்நூலோடுநாட்டுவரால், தென்களந்தை
மன்பெயரான்வண்புகழான்வச்சணந்திமாமுனிவன்
தன்பெயரானாட்டுந்தமிழ்.

இஃது - அவையடக்கம்.

வச்சணந்திமாலை முற்றிற்று

வரையறுத்தபாட்டியல்.

கட்டளைக்கலித்துறை.

பார்கொண்டசோதியன்சம்பந்தமாமுனிபாதமலர்
நேர்கொண்டிறைஞ்சிநிகழ்த்துகின்றேனெடுநூல்சுருக்கி
ஏர்கொண்டசொற்புலவோர்செய்தபாட்டியல்கற்கமிக்க
சீர்கொண்டமாமதியில்லாதவர்க்குத்தெரிவுறவே. (க)

தெரியாதுவந்தவழியடையாளஞ்சிலர்தமக்கு
மரியாதையின்றென்மதியின்மையாற்சொன்மழலைப்புன்சொல்
பெரியோர்பொறுப்பர்தம்பேரறிவாண்மையும்பேதைமைபோய்
விரியாதவென்னறிவின்மையும்பாரில்விளங்குதற்கே. (உ)

விளக்கியமங்கலமேமுதலாகவிரித்தபத்தும்
துளக்கறநாடிம்பொருத்தமன்றேயெல்லைசொல்லறியா
உளக்கவிவாணரெனைப்போலநாடொறுமுண்பொருட்டால்
வளக்கவிபாடிப்பிழைப்பதிந்நூலின்வரும்பயனே. (ங)

(சீர், எழுத்து.)

வருகின்றமங்கலச்சொல்லினுட்சீர்கொள்கவாய்ந்தகக்கா
அருகொன்றுகிக்கீசொச்சோக்கள் நந்நாவொடுத்தநிந்நீ
தருகின்றயாவொடுவவ்வாவிவ்வீப்பெயர்தங்களுக்கு
முருகொன்றெழுத்துநுந்நூயூப்பெயர்க்குமொழியநன்றே.

(எ-ன்.) சீர், எழுத்து, என்னு மிரண்டு மங்கலச்சொல்லிற்குப் பொருந்திய பெயர்களையுணர்த்து தனுதலிற்று. (இ-ள்.) க, கா, கி, கீ, சொ, சோ, ந, நா, நி, நீ, யா, வ, வர், வி, வீ. என்னு எழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்குச் சீரென்னுமங்கலச் சொல்லால், சீர்கொண்ட, சீர்தந்த, சீரேறு எ-ம். நு, நூ, யூ, என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்கு, எழுத்தென்னு மங்கலச்சொல்லால், எழுதரிய, எ-ம். பாவிற்கிபைந்தபடிபாடுக-று.

(பொன், பூ.)

மொழிபொன்குக்கூவுஞ்சௌகாரந்துத்தூவுமுரணிதெத்தே
அழிவில்நெந்நேயொடுபுப்பூமெம்மேயொடகன்றமொம்மோ
வழுவில்மௌகாரப்பெயர்க்குரைபூக்கொண்டிசைக்கௌசை
வழிகொண்மம்மாமிம்மீமும்மூவைகாரவௌகாரங்கட்கே.

(எ-ன்.) பொன், பூவென்னு மிரண்டுமங்கலச் சொல்லிற்குப் பொருந்திய பெயர்களையுணர்-ற்று. (இ-ள்.) கு, கூ, சௌ, து, தூ, தெ, தே, நெ, நே, பு, பூ,மெ, மே, மொ, மோ, மௌ, என்னு மெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்குப் பொன்னென்னும் மங்கலச் சொல்லால், பொன்னுகும், பொன் கொண்ட, பொன்பயில், பொன்வளர், பொன்கிளர். எ-ம். கௌ, சை, ம, மா, மி, மீ, மு, மூ, வை, வௌ, என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்குப் பூவென்னுமங்கலச்சொல்லா, பூக்கொண்டு, பூமேவு, பூவணி, எ-ம். பாவிற்கியைந்தபடிபாடுக. எ-று. (ரு)

(திரு, திங்கள்,மணி,நீர்.)

வௌவுந்திருத்திங்களென்சொற்கள்கொக்கோவரும்பெயர்க்காம்
செவ்வுண்மணிச்சொற்கெக்கேப்பெயர்க்காஞ்செழுநீர்ச்சொற்கையோ
டிவ்வுண்சிச்சீயொடுதித்தீத்தைநொந்நோவுடனிசையக்
கௌவும்பைகாரப்பெயர்க்குநன்றும்படிகட்டுரையே.

(எ-ன்.) திரு, திங்கள், மணி, நீர், என்னு நான்கு மங்கலச்சொல்லிற்குப் பொருந்திய பெயர்களை யுணர் - ற்று. (இ-ள்.) கொ, கோ, என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்குத் திருவென்னு மங்கலச்சொல்லால், திருமகள், திருவளர், திருப்பதி, திருமல்கு,திருமன்னு, எ-ம். திங்களென்னும் மங்கலச்சொல்லால், திங்களூர், திங்களால், எ-ம். கெ, கே, என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்கு மணியென்னு மங்கலச்சொல்லால், மணிவளர், மணிதிகழ், மணிமேவு, மணிமன்னு, மணிதங்கு, எ-ம், கை, சி சீ, தி, தீ, தை, நொ, நோ, பை, என்னு மெழுத்துகளை முதலாகவுடையபெயர்களுக்கு நீர் என்னுமங்கலச்சொல்லால், நீர்கொண்ட, நீர்மேவு, நீர்கிளர். எ-ம். பாவிற்கியைந்தபடிபாடுக. எ-று. (சு)

(சொல், கங்கை, வாரணம்.)

கட்டுரைசொற்கொளௌகாரஞ் சுச்சூக்கள்செச்சேக்கள்தௌநௌ
ஒட்டுரைபேர்க்கினிதாங்கங்கைஅஆஒஓக்கள்தத்தா
விட்டுரைதொத்தோவிழையோப்பெயர்க்குயூர்யானையின்பேர்ப்
பட்டுரைவாரணங்கொண்டுஞெஞ்ஞொப்பெயர்பாடுகவே.

(எ-ன்.) சொல், கங்கை, வாரணம் என்னு மூன்று மங்கலச்சொல்லிற்குப் பொருந்திய பெயர்களையுணர் - ற்று. (இ-ள்.) ஔ, சு, சூ, செ சே தௌ, நௌ, என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்கு, சொல்லென்னு மங்கலச்சொல்லால், சொற்கொண்ட எ-ம். அ, ஆ, ஒ, ஓ, த, தா, தொ, தோ யோ, என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்கு கங்கையென்னு மங்கலச் சொல்லால், கங்கைசூழ், கங்கைநீர், கங்கைசேர், எ-ம். ஞெ, ஞொ, என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்குவாரண மென்னு மங்கலச்சொல்லால், வாரணஞ்சூழ். எ-ம். பாவிற்குப் பொருந்திய வாறுபாடுக எ-று. கங்கை யென்னு மங்கலச் சொல்லுக்குப் பரியாயமாக கடல் காரென்னு மங்கலச்சொற்களைக் கொண்டு கடல்செறி, கடல்வளை எ-ம். கார் கொண்ட, காரேறு. எ-ம். பாடினுமிழுக்காது. (எ)

(குஞ்சரம், உலகு, பார்.)

பாடியர்குஞ்சரம்இஈயுஞாவும்பகர்பெயர்க்காம்
நீடுலகங்கொடுபப்பாப்பெயர்க்குநிரந்துரைக்க
பீடுறுபார்கொடுசச்சாப்பெப்பேயொடொளிர்ந்தபொப்போ
நாடுவெவ்வேமுதனண்ணியபேர்க்குநயந்துரைபே.

(எ-ன்) குஞ்சரம், உலகு, பார் - என்னு மூன்று மங்கலச் சொல்லிற்குப் பொருந்திய பெயர்களையுணர் - ற்று. (இ-ள்.) இ, ஈ, ஞா, என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்குக் குஞ்சரமென்னு மங்கலச்சொல்லால், குஞ்சரஞ்செறி, குஞ்சரம்பின், குஞ்சரம்பொலி, எ-ம். ப, பா, என்னும் எழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்கு உலகென்னு மங்கலச்சொல்லால், உலகெலாம். எ-ம். ச, சா, பெ, பே, பொ, போ, வெ, வே, என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்குப் பாரென்னு மங்கலச் சொல்லால், பார்கொண்ட, பார்மேவு. எ-ம். பாவிற்குப் பொருந்திய வாறு பாடுக. எ-று. (அ)

(தேர்.)

உரைதருதேர்கொடுஉஊஎஏயுவந்தநைமை
விரைதருபேர்கட்குநேரோவிளம்புகமேவுதண்ணீர்த்
திரைதருவேலையுடனேசெஞ்சேலையுஞ்சேரவென்று
வரைதருமஞ்சனந்தோய்ந்தரிசிந்தியவாள்விழியே.

(எ-ன்.) தேரென்னுமங்கலச்சொல்லிற்குப் பொருந்திய பெயர்களையுணர்-ற்று. (இ - ள்.) உ, ஊ, எ, ஏ, ஐ, நை, மை, என்னுமெழுத்துகளை, முதலாகவுடைய பெயர்களுக்குத் தேரென்னு மங்கலச்சொல்லால். பாவிற்குப்பொருந்திய வாறுபாடுக. (எ-று.) மேவுதண்ணீர் — வாள்விழியே. எ-து. மகடூஉமுன்னிலை. (கூ)

வாளாவுரைப்பிற்றொன்னூலோர்வகுத்தவருணமுண்டி
கேளார்ந்தநல்லகதிகணமாய்ந்துரைகேழ்கிளரத்
தாளார்கமலமுநீலமும்போன்றுதருக்கிமுட்டி
நீளாமதர்த்தரிசிந்தியவாட்கணிரைவளையே.

(எ-ன்.) இந்நூலினெழிபு கூறுகின்றது. (இ-ள்.) இச்செய்யுளுக்குப் பொருள் விளங்கிக்கிடந்தமையின் விரித்துரைத்துக்கொள்க. எ-று. (௩)

வரையறுத்தபாட்டியல் - முற்றிற்று.

உ

கணபதிதுணை.

காஞ்சிபுரம்

குமரகோட்டப்பஞ்சரத்திநம்

திருத்தணிகாசலமாலை

திருத்தணிகைவெண்பாமாலை.

இவை.

சுத்தசைவகுலோற்பவராகிய

கா-சேநாபதிதேசிகர்

குமாரர்

கா-சிங்காரவேல்தேசிகரால்

இயற்றி

சென்னைக்கல்விமடம்

சிவசுப்பிரமண்ணியர்பஜனைக்காலக்ஷேபசபைக்குத்

தலைவரும், சுத்தசைவரும், ஆகிய

பு-நமசிவாயதேவர்

கேட்டுக்கொண்டபடி

புங்கத்தூர்

ம-ா-ா-ஸ்ரீ-கந்தசாமிமுதலியாரால்,

பு-ம, சபாபதிமுதலியாரது

கல்விவிளக்கஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

இரக்தாட்சிவரு-ஐப்பசிமீ.

உ

சிவமயம்.

சாற்றுக்கவி.

வித்வான்,

கா-சபாபதிமுதலியாரியற்றியது.

கச்சிநகர்வாழுஞ்சிங்காரவேல்நாவலன்சொற்
கவின்சேர்மாலை
நச்சியணிதரவிரண்டுபுயம்போதாதெனவுளத்து
நாடியேமுன்
நொச்சியிலையனையவடிமயிலிவருந்தணிகைமலை
நோன்றாள்வேலன்
அச்சிமயமேருவினும்பெரியபன்னிரண்டுபுய
மண்மிஞ்ஞல் (க)

செஞ்சொலுணருங்காஞ்சிச்சிங்காரவேலெனும்பேர்ச்
செல்வன்முன்னாட்
கஞ்சனைமுன்சிறைப்படுத்துங்குமரகோட்டப்பெருமான்
களிக்கும்வண்ணம்
பஞ்சரத்தினம்புனைந்தானெனக்கேட்டநவமணிநம்
பாலிலன்றி
விஞ்சுறவெங்கீட்டிஞ்ஞேவென்னவிறும்பூது
மேவிற்றம்மா. (உ)

ஷெயார்மாணுக்கர்-புரசை
அஷ்டாவதாநம்

சபாபதிமுதலியாரியற்றிய

நேரிசைவெண்பா:

உரைக்குந்தொறுமினிமையுண்டாகக்காஞ்சி
புரிக்குமரகோட்டம்புரக்கும்-பரைக்கொருசேய்
நேசமுறப்பஞ்சரத்நநீடியசிங்காரவேல்
தேசிகனயந்தளித்தான்றேர்ந்து.

கழிநெடில்விருத்தம்.

கருத்தணியநாவுலர்க்குந்தெரிவையர்க்குநிறையியலங் கவனநீடுந், திருத்தணிகைமாலைவெண்பாமாலையிவைசிங்காரவேற்பேரன்பன்-மருத்தணியமலர்நீபத்தார்புனைபன்னிருதோளான்வலியசூர்மாச்-செருத்தணியவேலெடுத்த குமரகுருதாட்கணிந்தான்சிறப்பமாதோ.

ம-ா-ஸ்ரீ-ஆறைமாநகர்
கவி-அரங்கப்பிள்ளையவர்கள்-குமாரராகிய
முத்தமிழ்க்கவி

திருவேங்கடப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

சீர்மருவுகடல்புடையுடுத்தமானிலமதிற்
றிகழுமெழுநகரிலளவிற்
சீர்த்திபெறுகச்சியிற்குமரகோட்டத்திற்
சிவாகமமெலாநடத்துந்
திடமுறுஞ்சரிதைகிரியாயோகஞானமுஞ்
செவ்விதினிசைந்தமைந்துச்
சின்மையானந்தவழிதன்மனோகதிநிறியீத்
திரியம்பகசதாசிவபரஞ்
சார்புடையகையிலைப்பரம்பனையரமைதரு
சதானந்தஞானமருவித்
தக்கபொருளொக்கவுணர்பக்குவர்தமக்குதவு
தர்ப்பரமதானசொருப
சாந்தமுறுசேனுபதிதேசிகன்றவந்
தனிலுதையமாகியீன்றோர்
தமதுநாமங்களைவிளங்கவார்கலியினெழு
தண்மதிநிகர்த்ததுல்யன்
பாராளுமன்னர்மகிழ்வகையய்தாலவுகீக
பராக்கிரமமிசைந்ததீரன்
பாவாணரந்தணரருந்தவநிறைந்தவர்
பரிந்துவகைகூர்தமிழினிற்
பகர்தருமிலக்கணமியைந்திடுமிலக்கியப்
பனுவலினுணர்ச்சியுடையோன்
பண்புடையநண்பினர்க்கெண்புதுவிருந்தினர்
படர்ந்திடவிடைந்திடாதோன்
காரணிபொழிற்குமரகோட்டத்தினெம்பிரான்
கவினுறுகராம்புயந்தாள்
கனகமயமாந்தொடுப்புகள்செய்துவைத்துமக்
கந்தனுக்கொருபதிகமுங்
ககனமளவியதனிகாசயிலமாலையுங்
கவின்கொள்வெண்பாமாலையுங்
கருணைமிகுசிங்காரவேலனுநாவலன்
களிப்புடனியற்றினனரோ.

சிவமயம்.

திரிசிரபுரம்

ம-ா-ா-ஸ்ரீ.

மதுரைநாயகம்பிள்ளைபாடியது.

நிலமண்டிலவாசிரியப்பா.

உலகம்புகழுறூஉ மலைமகள்கணவன்
உருவனருவ னுருவருவுளனிலன்
வானிலடங்கியுஞ்சேணிற்றிகழ்வோன்
அணியன்றூர னகத்தன்புறத்தன்
புலனுழைவில்லான் மலநுழைவில்லான்
திக்கனையுடையன் செக்கரஞ்சடையன்
கங்கைத்தலையன் கங்கைத்தலையன்
அரவணிபெம்மான் சிரவணியம்மான்
கான்மலர்பரவிய வான்மலர்வானவர்
அச்சமச்சுறுத்தற் கிச்சையினளித்த
நச்சுறுமயில னச்சுறுமயிலன்
உள்ளுநருள்ளுறு தெள்ளுறுமமிர்தன்
அள்ளுறுமழகிய வள்ளிநாயகன்
வண்டலர்பொதுளிய விண்டருநிழலில்
கம்முண்டகடு விம்முமேகமும்
இருகயன்மணந்த வொருபெருமதியும்
மட்டருவிரண்டு கட்டருவரும்பும்
செந்துவர்சிதறி நந்துறைவனத்து
மலர்ந்தகஞ்சு நலந்திகழிரண்டுந்
துற்றமின்குலவிய பெற்றியதென்ன
உலாவிவிளங்கி நிலாவியதெய்வ
வான்பிடிவிழைந்த கான்பிடிகடம்பன்
அறுமுகமுள்ளா னறுமுகமுள்ளான்
சூர்முதறடிந்த சூரிலைவேலன்
முற்பொழுதலர்ந்து பிற்பொழுதுலருங்
கான்றருநாண்மலர் சான்றதோர்மாலை
ஈண்டியவன்பொடு வேண்டலமெனவே
எப்பொழுதலர்ந்து மெவ்வுழித்தவழ்ந்துஞ்
சுவைமதுப்பிலிற்றி நவையறவிளங்குஞ்
சொன்மலர்மாலை நன்னயத்தணிவோர்க்
கவப்பெருந்துன்பந் தவக்கெடவருள்வோன்
ஆதலினவன்ற னருள்திருவடியில்

திமிரமதறுக்குங் குமரகோட்டப்
பஞ்சரத்தினமும் விஞ்சியதணிகை
விருத்தமாலையும் வெண்பாமாலையும்
மெனுமுத்திறநூ லியல்பெறவணிந்தனன்
செம்பொன்வரையணி யம்பொற்பிதிர்போற்
சுணங்குபூத்தவிணங்கியமுலைதமக்
கொப்பெனவருஉ மப்பிழைபொருது
துன்புறுப்பதுபோல் வன்பந்தடித்தும்
அழகுமுன்வரும் பளகறுநலத்தின்
உருப்பசிமுதலோர்ச் செருக்கறவென்று
ஆடலின்மகிழ்போ னுடொறுமாடியும்
கிம்புரிக்கோடணி கம்பமில்பிடிக்கு
நடையினுந்தனத்தினு நலந்தோலாது
வீறுறநடந்தும் விம்மிதமாதர்
அண்மிவீற்றிருக்கு மணிகிளர்கச்சி
மாநகர்ச்செல்வன் றேமிலறிவினன்
கரியுரிபோர்த்த திரியம்பகத்தன்
அறிவின்மேல னுமெனுமறைப்பொருள்
தெளிவுறவுணர்த்து மளியுறுங்கைலைப்
பரம்பரையதனிற் பண்புறத்தோன்றி
முச்சகம்வியக்க முழுதொருங்குணர்ந்த
சேனுபதியெனுந் தேசிகனியற்றிய
ஆனுத்தவப்பல னுகவந்துதித்தோன்
சான்றவர்புகழு மான்றநற்குணன்
பெருமுனியகத்தியன் குறுகநூல்கற்றோன்
பூமியும்விரும்பு மேமுறுபொறுமையன்
தெய்வப்புலமைத் திருவள்ளுவர்சொன
மறப்பினுமெனுங்குறண் மறவாமனத்தன்
விள்ளுறுபளிங்கின் விமலனியற்கையாய்
ஒப்புயர்வில்லா வொருபதிசிவமே
செம்பிற்களிம்பைச் செப்புறுமலத்தவாய்
அளவிடற்கரிய வநேகம்பசுக்களே
றேன்றுமைந்து முன்னியமலமே
என்றெடுத்தியம்புமிசையாகமமாம்
இக்கைச்சிரவணத் தெந்திரத்திட்டு
மனனக்கலச மன்னுறவிறக்கி
அனுபவவாய்வைத் தருந்தியபுனிதன்
சிங்காரவேலெனுஞ்செஞ்சொனுவலனே

விநாயகர் துணை.

காஞ்சீபுரம்

குமரகோட்டப்பஞ்சரத்திநம்.

காப்பு.

பஞ்சரத்துக்கிள்ளைபணிமொழிவள்ளிக்கிறைவன்
பஞ்சரத்திநம்புகலப்பார்த்தருளுங்-கஞ்சமுல்லை
ஆம்பல்வதனத்தமலையுவந்தருளுஞ்
ஆம்பல்வதனத்தவன்.

ஆசிரியவிருத்தம்.

சீர்பூத்ததினகரரோர்பன்னிருவருந்தஞ்
செழுங்கதிர்திரிந்தழுங்கத்
திகழுநவமணிகுயின்றொளிகாலுமோலிமலி
திரிபறுசிரத்தினமைவு

மேர்பூத்தெழுங்கமலமலர்பொருவவிலகிவள
ரிணையறுமுகத்தினெழிலு
மேதமறுகருணைபொழிவிழியொடிருசெவியுமொளி
ரிசைவரதமுடனபயமும்

நீர்பூத்தகண்டிகையொடக்கவடமுடனிகழ
நினதடிமைமகிழவருவாய்
நிறைகோலமறைமூலவொளிசாலதிகழ்வேல
நீலவிழிமாதுபால
கூர்பூத்தவேல்விடுத்தவுணரைக்கொன்றமரர்
கொண்டாடநின்றகுமர
குறவர்விட்டுக்குமரிவதுவைவேட்டுத்தழுவு
குமரகோட்டக்குரவனே. (க)

வட்டவாய்க்கமலமிசைவதிவிதியைவருகவென
வாய்விண்டதட்டிபுட்கி

வந்தவனைநந்தலில்பந்தமுள்ளாக்கிநின்
வழியுனைநடப்பதாக்கி

நட்டம்வரவொட்டாதுநனிசராசரமதனை
நல்குதொழிலன்புநாட்டி
நஞ்சுண்டநாதற்குமுபதேசகுருவாகி
நான்மறைதுதிக்கநின்றோய்

திட்டமாநினதடிகள்சிந்திக்கிலேற்கும்வினை
தீர்த்தின்பமேயருளுவாய்
சிவபோதகுணநீதிகழ்பாதபுகழ்வேத
தீரவீரப்பிரக்கியாத

கொட்டுமுழவுக்கிசையநட்டமிடுமங்கையர்கள்
கூட்டமகலாக்கோயிலாய்
குறவர்வீட்டுக்குமரிவதுவைவேட்டுத்தழுவு
குமரகோட்டக்குரவனே. (உ)

என்றுமுனதெதிர்நின்றுபணிகின்றபரிசொன்றி
யேதங்களைக்களைந்திட்
டிருமூன்றெனும்மெழுத்துருவுளத்துச்சரித்
தேத்தாவிறைஞ்சுமவருக்

கொன்றுமுடனுயிர்குடித்திழிதொழிலினுவகைகொண்
டொழுகுநமனுமொழித்திட்
டும்பரொடுமிம்பர்மற்றேனையர்களேவல்கொண்
டுவகையொடிருப்பதாக்கிக்

கன்றுகுணில்கொண்டவரிநின்றுபுகழ்நின்மகிமை
கசடனேன்கழறவசமோ
கருபாசமொழிநாசகிரிவாசகலியீச
காஞ்சிநகர்நேசவாச

குன்றுருவமென்றுசொலநின்றவசுரன்கெடக்
கூர்வேல்விடுத்தகோவே
குறவர்வீட்டுக்குமரிவதுவைவேட்டுத்தழுவு
குமரகோட்டக்குரவனே. (ஊ)

பாதிமதிசூடுசடையாதிதருமாங்கனிப்
பாங்காகவாங்கவேண்டிப்
பரபரத்துலகமுழுவதையுமொருநொடியில்வரு
பச்சைமயிலிச்சையினிவந்
தேதமுறுபேதைமனதோடு துதியாதுமொ
ரிமைப்போதுசிந்தியாது
மீட்டுவினையாவுமறவோட்டியருள்கூட்டியினி
தேழைகண்காணவருவாய்
தீதுபுணராதமனமீதிலுறைமாதுபதி
சித்தத்துவக்குமருகா
சிவயோகரகமாகவுறையேககுணயோக
சித்தசன்விரும்புமாக
கோதுதபுமாதவரொடுயர்பொதியவனாயிலுறை
கும்பமுனிநம்புகுருவே
குறவர்வீட்டுக்குமரிவதுவைவேட்டுத்தழுவு
குமரகோட்டக்குரவனே. (௪)

பரவியெழுபரவையுடைகுழுலகரடியனைப்
பழியாதிருக்கவேண்டும்
பகலவன்முனகலுதிசிபோலுமென்வினையினிருள்
பரவாதிருக்கவேண்டும்
வினைவிரவுமனமலரிலுறைபிரமனினுமெழுத
வேண்டாதிருக்கவேண்டும்
வெய்யதுயரழலினுழன்மனமுனதுகழலினிழல்
விலகாதிருக்கவேண்டும்
கரவிலடியவரருளுமிகபரமுமருளியெக்
காலுநீகாக்கவேண்டுங்
கனதீரசினமாரவருசூரனுயிர்தீர
காய்ந்தகாம்பீரவீர
குரவமலரளகவுமையருள்புதல்வவைங்கரக்
குஞ்சரற்கிளையகுகனே
குறவர்வீட்டுக்குமரிவதுவைவேட்டுத்தழுவு
குமரகோட்டக்குரவனே. (௫)

குமரகோட்டப்பஞ்சரத்திநம்
முற்றுப்பெற்றது.

சுப்பிரமண்ணியர் கீர்த்தநம்.

இராகம்-கலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

பாதாம்புயம்பணிவாய்மனமே-சாமி
பாதாம்புயம்பணிவாய்மனமே

அநுபல்லவி.

ஆதாரமாந்திருக் கச்சிநகரில்வாழும்
அம்மைகா மாட்சியருள்
அறுமுக நாதனிரு
பாதாம்புயம்

வீரபராக்ரமதீரசூரசம் மாரன்
விரைமலர்மீதிலுற்ற
வேதன்விதிர்விதிர்க்க-வெகுண்டுதலைப்படுத்துதாரன்
நீரைக்கரத்தெடுத்து நீண்டமுடிதரித்த
நிமலனுக் குபதேச
நிகழவுரைத்த தீரன்
பாதாம்புயம்

மாசிலாததமிழ்க்கடலைக்கடந்தநக் கீரன்
குகையிலிருந்துமிக
வருந்தியழைக்கமனந்தளர்ந்தோரையாதரிக்குஞ் சீரன்
வாசம்வீசுகுழல் வள்ளிப்பொன்மாமண
வாளன் பசும்பொன்மயில்
வாகனன்கூர் வேலனிரு
பாதாம்புயம்

திருக்கில்லாதமன முடையவர்க்கருளீசன்
சிங்காரவேலன்கவி
தினமுந்தன்னுளமகிழ்ந்தருள்செய்யுமகாவிசுவாசன்
இருக்குவேதத்துச்சி மிசையிருந்தெவருக்கும்
இனிய வரமளிக்கு
மிணையில்லா முருகேசன்
பாதாம்புயம்



சிவமயம்.

தணிகாசலமாலை.

காப்பு.

அன்பார்திருத்தணிகையண்ணல்பாமாலைசொலற்
கின்பாகவோகைகொளுமென்னெஞ்சே-முன்பாகி
வேழமுகத்தம்புகைக்கும்வேளையெரித்தானீன்ற
வேழமுகத்தான்கழலைவேண்டு.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நீர்மலிகடல்சூழ்நிலமகண்முகம்போனிகழ்தரவளர்ந்தெழுத
ணிகைக், கார்மலிசிகரிவனாமிசையிருந்து காசினியோர்வினை
யொழித்துச்,சீர்மலிதரவேவாழ்வவர்க்களிக்குந் தேவனேசிறிய
னேற்கருள்வாய், தார்மலிபொதும்பர்சூழ்திருத்தணிகைச்சைல
னேசரவணேற்பவனே. (க)

வேலையினடுவண்விளங்கியகொக்கைவெகுண்டுவீழ்த்திட்டுச்சூ
ர்தடிந்து,மாலையன்முதலாம் வானவரிடுக்கண்மாற்றியோய்நின்
றிருப்புகழ்ப்பா,மாலையொன்றுனதுமருமலர்க்கழலின் மாண்பு
றப்புனைந்தணிதரற்கென்,தாலம்வந்தருடாதயாநிதிதணிகைச் சை
லனேசரவணேற்பவனே. (உ)

உம்பரோடுலகருவகைகொண்டாடவொழிவினைத்தூயருண்ணு
டக்,கிம்புருவினைவல்லவர்பாடக் கிளரியங்கடலொலிநீட,வம்பு

றுகொங்கைக்குறமகட்கூடவாழுநின்னருளையான்றேடச், சம்பிர மமாகவந்தருடணிகைச்சைலனேசரவணோற்பவனே. (ரு)

என்றுநின்கோயிலெதிர்ந்துகைகுவித்தாங் கிருகழலிறைஞ்சி நன்கேத்த,ஒன்றுமன்பில்லேனெனினுமென்வினைதீர்த்தொழித் தருடருதனின்கடனுங், கன்றியேகமல மலரிருன்முகவன்கருத்த ழிந்திறைஞ்சலுமன்ருன்,றன்றுயரொழித்த சண்முகாதணிகைச் சைலனேசரவணோற்பவனே. (ச)

அண்டரைக்காத்தவறுமுகத்தரசேயைம்புலக்கோள்களைந்தரு ன்வாய்,கண்டவர்வினையைக்கழிப்பனெங்கடவுட் காசினிமாந்தர் காளன்பு,கொண்டிவணண்டதீனெனக்கொடிக்கரத்தாற் கூவலைநிக ர்தருமடமும்,தண்டலைகளுஞ்சார்ந்தணிதருதணிகைச்சைலனே சரவணோற்பவனே. (ரு)

பொங்குநீர்க்கங்கைப் புரிசடைக்கற்றைப்புராந்தகனெனும் பெயர்ப்பெரியோன்,அங்கமார்முதத்தீஞ்சொலம்பிகையாளகம கிழ்ந்துதவியபுதல்வ,மங்குல்கண்டுஞ்சுமணிமுடிக்கோயின் வல ஞ்செய்துதொழலெனக்கருள்வாய், சங்குலாங்கமலத்தடமிளிர்த ணிகைச்சைலனேசரவணோற்பவனே. (சு)

இந்திரர்முதலாமிமையவரிறைஞ்சவெழிற்கணிகையர்நடமிசை க்கச், சுந்தரமிகுந்ததோகையரிருபாற் றுலங்கிடச்சூரியனொளி யைப்,பிந்திடப்புரிகேதாரமீப்பிறங்கும்பெருமையைப்பித்தனு ன்காணத்,தந்தருள்குவையோசண்முகாதணிகைச் சைலனேசர வணோற்பவனே. (எ)

கடலுடையாடைக்காசினியோர்தங் கருவினைதவிர்த்தகாங்கே யா,படரிருன்மேனிச்செய்யகட்பேழ்வாய்ப்பகடிவர்ந்தெமன் பரபரத்து,நடந்தெனைத்தொடருநாளினின்னளின நற்கழறுதிக் கவெற்கருள்வாய்,,தடவரைபுடைகொண் டிலகுறுதணிகைச்சை லனேசரவணோற்பவனே. (அ)

வானுறநிமிர்ந்த வரையினைவெட்டி வலியிழந்தேங்கிநிற்பவர் போல்,ஊனெடுத்திந்நா ளொழித்தனன்கால மோரில்வெம்மா யையின்சதிக்குள்,ஆனதென்றுணர்ந்துநற்றவமியற்ரு வறிவிலிக்

கருள்புரிகுவையோ, தானநன்குஞற்று மறிஞர்வாழ்தணிகைச் சைலனேசரவணோற்பவனே. (௯)

மூதறிவுடையோரவையிடமணுகேன் மொய்மலரொடுபுனற் கொண்டுன், போதொளிர்கழலிட்டிறைஞ்சிடேனெனினும்புண் ணியவெனதுவெவ்வினையா, மேதமுமகற்றியினிப்புரந்திலையே லேதுவேறுதவியெற்கருள்பூந், தாதுகுத்தொளிரும்பொழில்வள ர்தணிகைச்சைலனேசரவணோற்பவனே. (௧௦)

மண்ணொடுபெண்ணு டகம்பிறப்பிறப்புமாண்புறு குலநலம் வேண்டேன், திண்ணமீதுரைப்பேன்செவ்விதிற்கேட்பாய்செந் திலம்பதிதனிலுளும், நண்ணுமாண்புடையாய் நறுமலர்த்தொ டையாய்நன்குனைத்தொழுதலொன்றருள்வாய், தண்ணுறுங்கொ ண்மூத்தவழ்தருந்தணிகைச்சைலனேசரவணோற்பவனே. (௧௧)

நறைமலர்க்கோயிலுன்முகப்பிரமனுகநற் சேக்கையாக்கொ ண்டோன், குறைசெயுமனத்தராயினரொன்னுக்கொழுங்கனற்கு ன்றமாய்நின்ற, பிறையணிசடிலப்பிஞ்ஞகனீன்றபெரியவென்ன ரும்பிணிதவிர்ப்பாய், தறையுளோர்வணங்கி யேத்துறுதணிகை ச்சைலனேசரவணோற்பவனே. (௧௨)

மலைவுறுமனத்தேனின்மலர்க்கழலில்வணங்கிநின் றேத்துநா ளுளதோ, மலைமுழைவதியும்வண்மையா னேக்கால்வாய்ந்தமெ ய்ப்பூதியின்வளனுல், நிலையிருந்தெழாத நீர்மையாற்றவஞ்செ ய்நிந்தர்வாளரிதனைப்பொருவு, தலையுறத்தரையி னேங்குறுத ணிகைச்சைலனேசரவணோற்பவனே. (௧௩)

பஞ்சரத்திருந்துவள்ளவாயமுதைப் பருகிவாழ்ந்திடுபசுங்கிள் ளை, யஞ்சுறக்கிளத்துமொழிக்குறமகட்காவவிர்நறாதிரைக்குறு மழகை, மிஞ்சுறவெடுத்தவேடத்தாய்மேலாய்மிளிர்தருகூடத்தா யுனையே, தஞ்சமென்றடைந்தேற்கருள்வையோதணிகைச் சைல னேசரவணோற்பவனே. (௧௪)

பந்தமற்றியங்குமாதவரொதுங்கும் பாதவக்குழுவினேர்பா ங்கர், நந்தலில்கொன்றையடிகுறுங்காயா நன்குறல்மால் சிவன் டிக்கண், விந்தையாமலர்க்கணிடவடியிறைஞ்சிவிழைவுறலேய்க்

குநீள்பொழிலாய், சந்ததம்போற்றுமெனக்கருடணிகைச் சைல னேசரவணேற்பவனே. (௧௫)

சந்திரமோலித் தாணுவின்றன்கை தங்குமாங்கனிபெறற்குன் னிச், சுந்தரமயின்மீதேறி நீருடுவசுந்தரா வலம்வருதூயோய் இந்திரற்குறுநோய்தவிர்த்தவாவேழை யிடரிலாதுய்யுநா ளுள தோ, சந்திரனணவவளர்ந்தெழுதணிகைச் சைலனேசரவணேற் பவனே. (௧௬)

சிரமுறச்செங்கை சேர்த்திநின்றுளைச் செம்மனத்தோடுநின் றேத்தேன், வரம்பெறுமடியர் குழாத்தினைக்குறுகி வாழ்ந்திடா வேழையேனீட்டும், பரம்பரைதருதீவினைதவிர்ப்பாய்கொற்பா ருளார்மனனடுக்குறுவேள், சரமெலாமளிக்குந்தடம்பொழிற்ற ணிகைச்சைலனேசரவணேற்பவனே. (௧௭)

மழவிடையுகைத்தார்க்கருளியமகவே மாசுறுமனத்துமாதவர் போல், அழலிடையடைந்தமெழுகெனவுள்ளமயர்ந்துநெக்குரு கிமிக்கேங்கிக், கழலினிதேத்தும்பரிசிலாவெனையுங் கடைக்கண் வைத்தாளுநாளுளதோ, தழலிடைமுயல்மா தவத்தர்வாழ்தணி கைச்சைலனேசரவணேற்பவனே. (௧௮)

பொறிவழிப்புகுந்துகொடுத்தொழிற்புரியும் புல்லியபுலனெ னும்புளிஞர், அறிவெனத்தோன்றுமரும்பொருள் கவர்வாரு யினரஞ்சினேனன்னோர், செறிதலையொழித்தென் பாலருடருதி செங்கண்மாலேத்துசெவ்வேளே,தறிநிகர்தவத்தரார்தருதணிகை ச்சைலனேசரவணேற்பவனே. (௧௯)

பந்தமுற்றியங்கும்பதகனேனுனதுபதமலர்போற்றிடப்பணி ப்பாய்,மந்திகண்டேமாப்புறவுயர்சாரன் மரன்வழி யிழிதருவா னோர்,மைந்துறுகழைக்கூத்தாடுறல்போலவளம்பட மிகவளர்ந் தோங்குஞ்,சந்தமார்கந்தப்பொழில்வளர்தணிகைச் சைலனேசர வணேற்பவனே. (௨௦)

பாவினுலுன்சீர் பண்புறவமைத்துப் படித்திடேன்பரிவுள ளுகி, நாவினுலேத்தநயக்கிலேனுனதுநல்லரு ளளிப்பைகொன னினப், பூவினிலிவர்ந்தோன்பூமுழுதளந்தோன்பொன்னகர்க்கி

றைமைபூண்டுயர்ந்தோன், தாவிலாதேத்தவுயர்ந்தெழுதணிகைச் சைலனேசரவணோற்பவனே. (உக)

நுடங்கிடைமடவார்மையலிற்சிக்கிநுண்ணறிவழிந்த வெற்கிரங்காய், விடங்குலாமிடற்றுவித்தகனுவக்கும்வேலவாபழவினையினியென், னிடங்கொளாதகற்றி யினியநின்றொண்டேயென்றும் யானியற்றிடப்பணிப்பாய், தடங்கெழுசார்ற்சிகரியார்தணிகைச் சைலனேசரவணோற்பவனே. (உஉ)

உண்மையாயுலகமுழுவதும்போற்றுமொருவனே யுன்கழலிரண்டும்,பண்ணுறப்பூசித்தேத்துமெய்யன்பின் பான்மைவிட்டுளமுழுமூட, னண்ணுறுந்தொண்டனுக்நின்கருணை நயந்தருள்புரிந்திடுகுவையோ, தண்ணியதடஞ்சூழ்ந்தொளிர்தரு தணிகைச் சைலனேசரவணோற்பவனே. (உங)

சங்குசக்கரம்வாழ் கரத்தனுமன்னுன் றநயனுந்தாழ்ந்தினிதேத்தும்,பொங்கராமுடித்தபுராரியைநினது போதனைக்காக்கியபுனிதா, மங்களாகரனேமயிலுகைப்பவனே மாசறுத்தாளலுள்கடனே, தங்கமால்வரையும்பணிதருதணிகைச் சைலனேசரவணோற்பவனே. (உச)

வாட்டமிட்டசுரர்வாழ்விழந்தோடவானவரின்பமேகூடத் தீட்டியகூர்வேலோட்டியாங்கவர் தஞ்சேட்டைகள்வாட்டியதீரா நாட்டுமுன்புகழை நாயினேனேத்தநல்வரமருளுதிசெழுமுட்டாட்டிகழ்கமலத் தடநிறைதணிகைச் சைலனே சரவணோற்பவனே. (உரு)

முன்னவன்முனிவின்மொழிந்ததற்கேங்கி மூதறிவுடையநக்கீரன்,பன்னகம்பரித்தபார்மிசைவெள்ளிப்பருப்பதத்துயர்பனிச்சார, றுன்னிடற்கரிதென்றோர்ந்தவற்காத்த தூயனேதுகளுறுநாயேன், றன்னிடர்தவிர்க்க வருகுவைதணிகைச்சைலனேசரவணோற்பவனே. (உசு)

ஒருமருப்போங்கலிருமருப்பினதாயுற்றிடற்குன்னியோர் மரைப்பூ, வருதிருவேய்க்குமான்மகளோட்டமதுவினைவேட்டவாவிளங்குன்,இருபெருங்கழலையேத்துமெற்கருள்வாயிருநிலத்தன்

பர்கட்கருளைத், தருதிருமுருகாதடங்குலாந்தணிகைச் சைலனே சரவ்ணேற்பவனே. (உஎ)

திருமறுமார்பன் றிருவுளத்தென்றுந் திகைத்திடாதிருத்திநின் றேத்த,வருமிருமூன்றுமுகமுடைத்தேவே வகையிலேற்கருளி லென்றுழ்வே, குருகமர்தடந்தோய் கொடிச்சியர்முகம்வெண் குளிர்மதியெனக்குமுதநிரந், தரமலர்ந்திடவோங்கணிதிகழ்தணி கைச்சைலனேசரவணேற்பவனே. (உஅ)

வேங்கைவாழடவிவேட்டுவர்மருண்டு வெருவரவேங்கையாய் நின்ற, காங்கெயாவென்றுன்கழறனைப்பணியாக்கசடனேற்கன் புமீகுவையோ, மாங்குயில்கூவவமர்க்கெழுமாரன் மனஞ்சலித் துழறரமெய்ம்மை,தாங்குறுதவத்தரோத்துறுதணிகைச்சைலனே சரவணேற்பவனே. (உகூ)

சீரணிதிருவேரகத்துறைதேவே சிறியனேற்கருள்செயவருவா ய்,வார்கழகுமைத்திட்டட்டதீம்புகையை வளநடம்பயின்மயி ல்காணூஉக், கார்நிறக்கமஞ்சூன்முகிலெனக்கருதிக் களிப்புட னென்றெடொன்றியல்சீர், சார்தருசோலை மிடைதருதணிகைச் சைலனேசரவணேற்பவனே. (ரு0)

அளிறைசிலைவே லணிகுமிழ்சாணையப்புமீப்படரிளவள்ளை களிதுகிர்தரளங் கயிரவங்கிள்ளைகமுகுகந்துகங்கழைவிழையால் வளியுணுமரவம் வாழைசூல்வரால்சீர்வண்டராசனநடைவாய்ந்த தளிரியற்கேங்கா தெனையருள்தணிகைச் சைலனே சரவணேற்ப வனே. (ரூக)

விரியிதழ்த்துணரார் விரைமலர்த்தெரியல்வேய்ந்துசெவ்வா னநேர்வேணித், திரிபுரம்பொடித்தசிவபிரானுளந்தேவியோடு றைவனையெடுத்த,அரிநிகரரக்கனுண்மையன்றெழித்த வைங்கரற் கிளையநின்னரிதாஞ், சரிதமேபுகல்வேற்கருள்வையோதணிகைச் சைலனேசரவணேற்பவனே. (ரூஉ)

துடியிடையன்னநடையினார்விருப்பாற்றுயருழந்துனதுதொ ண்டர்கடம், அடியடைந்திறைஞ்சுமவாவினைத்தவிர்ந்தேற் கரு ள்வைபோவேட்டுவர்நமது, குடிமகட்கெல்லாமரசியார்வாழுங்

கோயிலென்றெணிக்குறுகுதல்போற், றடிகெழுமுகின்மீப்பட
ர்ந்துறுதணிகைச்சைலனேசரவணோற்பவனே. (ரூரு)

தண்டுழாய்த்தொடையன்தாமரைத்தவிசன்சதமகத்திறைமுத
லானோர்,கண்டுதாழ்ந்திறைஞ்சற்கரியநின்கழலியான் கண்ணினு
ற்காண்பதற்கெளிதோ,வண்டுபாட்டயரும் பேட்டொடுமுண்டு
வருமதுகரமுமுண்டுவப்பத், தண்டுளியளிக்குந்தடம்பொழிற்ற
ணிகைச்சைலனேசரவணோற்பவனே. (ரூச)

வந்தனைபுரியேன்வழுத்திடேன்மனமார் மலருநின்கழலடிசாத்
தே,நிந்தனைபுரிவே னெனவெனைநீக்கிநீணிலத்தெவரையும்புரப்
பாய், மைந்தனையீன்றாட்கினிமையோர்மகப்பான்மறமொரும
கக்கணுமுளதோ, சந்தனப்பொதும்பர்புடைகொளுந்தணிகை
ச்சைலனேசரவணோற்பவனே. (ரூரு)

பானலந்தருசொற்பரத்தையர்மோகப் பரவையுட்படிந்தபா
ன்மையினால், ஞானமுற்றுணர்ந்தநற்றவர்மகிழா நவையெலாந்
திரண்டொருவுருவ,மானதீவினையேன் றனைப்பரிந்தருள்வாயாசி
லாமனத்தவர்வாழுந், தானமாளிகைக ளோங்கிடுதணிகைச்சைல
னேசரவணோற்பவனே. (ரூசு)

உனக்கெதிர்குறுகியுன்சடக்கரமா முருவுளத்தியைபுறவாக்கிக்
கனக்கநின்புகழைக் கனிந்துநின்றேத்தாக் கயமையேற்கருட்டி
றங்காட்டி, மனக்கவலையுநீமாற்றுநாளுளதோ மாநிலத்துவமை
நேரின்றாய்த், தனக்கிணைதானுயர்தருதணிகைச்சைலனே சரவ
ணோற்பவனே. (ரூஎ)

காசினியுள்ளார்கழிவினைக்குள்ளார் கசடனென்றிகழ்ந்திடாத
ளிப்பாய், மாசுறுமனத்துமாதவர்வியக்குமான்மகள்மகிழ்ந்தம
ரிடத்தா, யேசிலாயாகஞ் சரியையங்கிரியை யெழில்சிவயோக
மாஞானத், தாசர்நின்றியற்றவளந்தருதணிகைச்சைலனே சரவ
ணோற்பவனே. (ரூஅ)

பொங்குநீர்க்கடல்சூழ்புவிமுழுதொருகோல்போக்கிப்பொற்
சிவிகைமீதிவர்ந்தார்; மங்குறுநின்ற காட்சியேயல்லான் மாட்சி
வேறின்றெனமனுநூ, றங்குசிந்தையராற் சாற்றியதோர்ந்துந்த

வறிஞைத்தேற்கருள்சாது, சங்கமெஞ்ஞான்றுமேத்துறுதணிகைச்சைலனேசரவணேற்பவனே. (கூகூ)

திவலைத்தேன்றுளிக்குந்தெரியலார்கூந்தற் றெரிவையர்மயல் வலைச்சிக்கிக், கவலைகொள்மனத்தாற்கனிந்துநைந்தேற்குன் கழலிணைகாட்டுநாளுளதோ, அவலுறுபுனலி னலருறையன்ன மந்நலார்க்குடைந்தனமென்று, தவமுறல்காட்டுந்தடங்கெழுதணிகைச்சைலனேசரவணேற்பவனே. (சஃ)

பன்மலரணிந்துன்பதநிதமேத்தேன் பாவனைபுரிந்திடேன்பணியேன்,வன்மனமுடையேன்வறுமைமிக்குடையேன்வளம்பெறவருள்வைகொல்பூங்கா, நன்மலர்மதுவுண்டளிமகிழ்தரலுன்னுமமா மழுதமுண்டுவப்போர், தன்மைபோன்றழியாவளம்பயில்தணிகைச்சைலனேசரவணேற்பவனே. (சக)

மையணிகண்டன்மைந்தனேவந்தென்மனத்துறுபருவரன்மாற்றி, யுய்யுமாறருளாதொழியின்வேறுதவியுஞற்றுநருன்னில்வேறுளரோ-மெய்யணிநீற்றோ டொளிர்மணியணிந்துமெய்ம்மைதேர்நூல்விதிபயின்ற-சைவர் வாழ்தரும மடமமர்தணிகைச்சைலனேசரவணேற்பவனே. (சஉ)

அஞ்சனவிழியாராசையையொழியா வறிவிலேனருந்தவர்க்காகுஞ்-செஞ்சரணுடையாய்திறலயிற்படையாய் செயிரறுத்தாள்வதென்றிசையாய் -பஞ்சரத்திருந்துபயிலுறுங்கிள்ளை பாவையரின்சொலுக்குடைந்து, தஞ்சமிட்டவரைச்சூழ்தருந்தணிகைச்சைலனேசரவணேற்பவனே. (சங)

பரமுனையல்லால்வேறிலையென்னும் பற்றிலேனரந்தைதீர்ந்துய்ய - வரமெனக்கருளினின்புகழ்க்கிழிவோவளஞ்செறிபாற்கடலுப்பண்-அரவணைமேலானலரவன்வானத் தமரர்களகன்புவியடைந்து-சரணஞ்செய்தேத்திமனமகிழ்தணிகைச் சைலனேசரவணேற்பவனே. (சச)

விதிமுறைநவிலும்விரதமும்பூணேன் விரைமலர்க்கழலிடவேண்டேன்-றுதிசெயநினையேன் றொல்வினைதுறந்த தூயர்தஞ்சொல்வழிநிலேன் - னதியொடுவிதுவை முடித்தவன்சுதனே நலமி

லேனெனினுநான்வேண்டுந்-ததியில்வந்தெனையாண் டருளுதித
ணிகைச்சைலனேசரவணேற்பவனே. (௪௫)

இமையமால்வரைசெய்தவத்தினுலெவரு மேத்திடுமகளெனவு
திக்த, உமையுவந்தளித்தமுருகனேபுலகுக் கொருவனெயெனக்
கருள்குகனே, யமைதருநூறேர்ந் துரைத்துனைப்பூசித் தனம
ளித்துண்டுவாழ்சைவ, சமயர்மந்திரஞ்சூழ் தருதிருத்தணிகைச்
சைலனே சரவணேற்பவனே. (௪௬)

புரங்கண்மூன்றெரித்த புண்ணியன்விரும்பும் போதனேபோத
மெற்கருள்வா, யரம்பையரேய்க்கு மிந்நலார்புனலாட் டயரு
ழிக்கலனுகுமுத்தும், இரைந்தெழுசங்கத்தரளமுங்கமலமீனுநித்
திலங்களுமொதுக்குந், தரங்கமார்வாவி நிறைதருதணிகைச் சை
லனே சரவணேற்பவனே. (௪௭)

திங்களங்குழவிச்செவ்விநேர்நுதலார் திறத்திருந்தழியிழிமன
த்தேற், கிங்குளமிளகியினிதெழுந்தருளி யேங்குறேலென்னுநா
ளுளதோ, பங்கமுற்றெழுந்த பங்கயப்போதின் பரப்பெலாம்
பருத்தறித்திலமீன், சங்கமார்வயல்சூழ்தருதிருத்தணிகைச் சைல
னேசரவணேற்பவனே. (௪௮)

ஆதரம்பெருக வகமகிழ்ந்தலர்தூயருமறைக்கரியநின்னடியைத்
தீதறவேத்துந்திறமிலேனுனது திருக்கணுனேக்கி லுய்ந்திடுவே
ன், மாதர்மென்கமலமலர்மகளன்னுர் மணிநிலைநாற்றியதாமத்
தாதலர்வாசமாடமார்தணிகைச்சைலனேசரவணேற்பவனே ()

மருமலரிட்டுன்மலர்க்கழலிறைஞ்சு மாண்புடையார்தமைமதி
த்துக், குருபரனென்றேகுறித்திடுங்கொள்கைகொண்டிலேற் கிரு
வினைகுமைத்தாள், வருபவர்வேண்டுமனமுதலெவையும் வளம்
பெறவழங்குறுவாழ்க்கைத், தருமந்நீங்காதமடங்கள்சூழ்தணிகைச்
சைலனேசரவணேற்பவனே. (௫௦)

இரவலர்க்காணினிரங்கிடேனெண்ணுன்கறமதிலியா துமொன்
றியற்றேன், குரவுவார்குழலார்குறுகிடலுவகைகொண்டவர்க்கூ
டவுமுயல்வேன், கரவுகடமனத்தேற்கருட்டிறங்காட்டாய்கண்ட
வர்பவவினைகடியுஞ், சரவணப்பொய்கைசூழ்திருத்தணிகைச்சை
லனேசரவணேற்பவனே. (௫௧)

விரிகடலுடுத்தமேதினிமாந்தர்விதிவலிவிலக்கும் வேலவனே பரிவினுலுன்சீர்பன்னுவேற்கருளாய் பறித்தருள்பாலித்தாள்கு வையோ, திரிதலில்செவ்விச்சிந்தையராகித் தீவினையொழித்தபு ண்ணியர்தின், சரிதைதேர்ந்தோதுமொலிகெழுதணிகைச் சைல னேசரவணேற்பவனே. (௫௨)

நகைதருமுல்லைமுகைபொருமூரனங்கையரிங்கிதநயனப் - ப கைதனக்கேங்காதெனக்கருளுனது பத்திசெய்யடியர்கண்மநமா ங்,குகைகுடியிருப்பாய்நிலைத்துறமருவுங் குக்குடத்துவசனேய வண்வாழ்,தகைமைநேர்தவத்தார்முழைத்தணிகைச்சைலனேச ரவணேற்பவனே. (௫௩)

மஞ்சுசூழிஞ்சித்தளியினுள்ளவிருமாசறுகுருவிந்தமணியே தஞ்சமிட்டிறைஞ்சுந்தமியனைநணியே தவிர்த்தருளென்மனப்பி ணியே, கஞ்சன்வாழண்ட மாதியாக்கடல்சூழ் காசினியோர்வி னைகடிந்து, சஞ்சலந்தவிர்த்தாண்டருள்புரிதணிகைச் சைலனே சரவணேற்பவனே. (௫௪)

பூவலஞ்செய்தும் புனலகந்தோய்ந்தும்புகழ்தருமகம்பலபுரிந் தும், நாவினுற்றுதித்து நற்றவஞ்செய்துநானிலத்தறனெலாமளி த்தும், வீவினையறியாவாழ்க்கையர்தம்மைமேவிடாதெளியனைக் காப்பாய், தாவில்சீர்ஓங்கித்திகழ்தருதணிகைச் சைலனேசரவ ணேற்பவனே. (௫௫)

வந்தனைவழிபட்டேத்தலுமின்றிவயங்குநற்சீர்த்திசேரடிக்கட் சிந்தையுமின்றிச்சிதடனேனவமேசெலுத்தினேன்காலமேயெனி னும்,வந்தெனையாட்கொண்டருணவநீதவாயினுரவிந்தமலரோ ன், சந்ததம்போற்றிப்பணிந்திடு தணிகைச்சைலனேசரவணேற் பவனே. (௫௬)

முதுதிரைநரைசார்ந் தீனைவாயொழுக மொழியுருமாறிக்கண் மூடி, யதிசயித்தெவருமணுகிடாவகையா மாக்கைவேண்டிந ல்வாசப், பதுமமென்மலர்த்தாள்பணிந்திடாவெனையும்பாதுகா த்தருள்வையோவடியார், சதமகனமரர்பணிதிருத்தணிகைச்சைல னேசரவணேற்பவனே. (௫௭)

தினகரற்கெதிராம்பனியெனவடியார் தீயவெம்பவப்பிணிதீர்க்கும், அநகனேவடியே னகத்துயரொழித்தா ளருணன்வானெழுதருமுன்னம், புனல்படிந்தெழுந்துபோதுகொய்துனது பூசைசெய்பூசுரரோடுந், தனதனேர்குடிகள்வாழ்தருதணிகைச்சைலனேசரவணேற்பவனே. (௫அ)

பலகலைபண்டையாகமமநுநூல் பழகிப்படற்றின்றிப்பல்லுயிரு, நலனுறநோக்குமேலவர்நயக்கு நாதனேநாயினேற்கருள்கட், புலஞ்செலற்கரிதா மாழிசூழ்புவியிற் பொங்குறுபுண்ணியமியைந்த, தலங்களுட்சிறந்தவளமிகுதணிகைச் சைலனே சரவணேற்பவனே. (௫௧)

மூன்றெழித்திலங்குமூதறிவுடையார் மொழிதருமூலகாரணநின், கான்றருகமலக்கழனிழலதனிற் கடும்வினையேன்மனதென்று, மேன்றுறவிருத்துநல்வரமருள்வா யேகனேயேதமேதுமிலாச், சான்றவருளத்தாமரைவளர்தணிகைச் சைலனேசரவணேற்பவனே. (௫௦)

பாலமார்நயனப்பண்ணவற்கொருசொல்பகர் புகழ்ப்பாநுவேபடிறேன்- சீலமார்புனலிற்றிகழ்பயம்பினிற்சேர்சிற்றுணவுக்கடைந்தேங்குங்-கோலமாமயிலேபோலுமேமாயைக்கொடுமையினகப்படாதளிப்பாய் - தாலமீதேவர்க்குமருடிருத்தணிகைச் சைலனேசரவணேற்பவனே. (௫௧)

சூலியினிடப்பால்விளங்கவீற்றிருந்துதொல்புவியாவையும்படைப்பாள் - பாலிருந்தவள்வாய்ந்கைதழைப்புறவேபற்பலவாட்டயர்பால - நாலிரேடிரண்டாமெழுத்தின்மந்தணத்தைநாயினேற்கருள்செயலென்றே -சாலியார்மருத நாடுசூழ்தணிகைச் சைலனேசரவணேற்பவனே. (௫௨)

வாழ்வுறுமுலகர்வன்பிணிவாட்டிவளம் பெறக்கருதும் வானமுதே- யூழ்வினையென்றனுடம்பினையுடற்றி துவந்தருடரினுடனுய்வேன் - ஆழ்கடலுடுத்தநிலமகள்தனம்போ லணிபரங்குன்றமோடிரண்டாய் - தாழ்விலாதுயர்ந்துவளர்ந்தெழு தணிகைச் சைலனேசரவணேற்பவனே. (௫௩)

கேழ்த்திருமணியேயாடகவொளியேகேகயமீதிவர்தேவே,வா
ழ்த்துவோர்க்கனையே மாதவர்க்காகமாதங்க முரித்தவன்சேயே
வீழ்த்துமென்வினைதீர்த்தின்பமேவிடவே விளக்கிவெம்மாயை
செய்சதியாற்-றூழ்த்திடாவகையொன் றருள்வையோதணிகைச்
சைலனேசரவணோற்பவனே. (சுச)

பீழைசெயென்றன்பெரும்பிணிமாற்றிப் பெட்பினோடருள்
செயெம்பெரும-மாழையுண்கண்ணார்மாக மூடுருவவளர்பொழி
ற்கண்ணெறிசென்று -வாழைவெள்வேழமரிசனஞ்சாலிமாய்தர
வாட்டிவானளவுந்- தாழையங்கனிகளுதிர்த்திடுந்தணிகைச்சைல
னேசரவணோற்பவனே. (சுரு)

களிமதுக்குடைந்துவழிநறுவுண்டுகான்றருங் காமர்செய்செச்
சை - மிளிர்மலர்த்தொடையார்வீரவாகுடைய வித்தகாவென்பி
ணிவிலக்காய்- குளிர்குரன்முழவுக்கிசைவுறமிதிக்குங் கூத்தியரி
சைநடமொழியாத் - தளிபலவொளிரத்திகழ்தருதணிகைச்சைல
னேசரவணோற்பவனே. (சுசு)

முத்தியின்வழிதேர் முதிர்தவநாதர் முன்னுறுமூலகாரணநி
ன்-பத்திசெய்கில்லேனிழைத்தபாதக மோபலவுளவெனினுமெற்
புரட்பாய் - அத்திமாவுரியையாகமீப்போர்த்த வண்ணலார்க்கு
ளமகிழ்வளிக்குஞ் - சத்திவேல்வலமார்கரத்தனே தணிகைச்சை
லனேசரவணோற்பவனே. (சுஎ)

உனக்குமுன்னடியார்தமக்குமெப்பொழுதுமுவக்குமோர்ப
ணிபரிந்துஞற்று - வெனக்கும்வெம்பிணிசெய்தீவினை யகற்றியி
னிதருள்பெருக்குநாளுளவோ-கனக்கநீருண்டகார்பொழிமழை
போற்கனிந்துநற்றிருப்புகழிசைத்தோன் - றனக்கருள்குருவா
ய்வந்தவாதணிகைச்சைலனேசரவணோற்பவனே. (சுஅ)

நிசிசரர்த்தடிந்தநிசிதமார்நெடுவேல்நித்தநீ ணேமிசூழ்நிலத்
து-வசிபசுபவநோய்வாட்டிவாழ்விக்க வையகத்திருப்புனதென்
றூற் - பசியுளேன்முகம்பார்த் திருந்துமந்நியர்போற்பராமுக
ஞ்செய்வதென்பகராய்-சசிதவழ்மலர்த்தண்டுருமமார்தணிகைச்
சைலனேசரவணோற்பவனே. (சுகூ)

நம்புமெய்யடியார்நற்றவப்பேறே நவையுளேற்கருணலமின்றே-பம்புநீர்ப்பௌவப்பரப்புமேல்கீழாம்பரிசுகண் டதுசமமாகக் - கும்பமூடுதித்த குறுமுநிக்கோமாற் கொண்டுகூக்கூ ணெழித்திட்ட - சம்புவின்குருவாய், விளங்குறுதணிகைச்சைலனேசரவணேற்பவனே. (எ௰)

உன்னுயர்வாழ்க்கைக் கோயின்மாட்டொருகா லுற்றுளோர் கொடும்வினையவர்பால்- மன்னிடாதளிக்கும் வள்ளனீயென்றுமறைநிறைவாயர்சொல்வாய்மை- யென்னிடத்திலையோ நினக்குளமிலையோயென்றெனைப்புரப்பைசொன்மகவான்- றன்னிடர்தவிர்த்தன்றளித்தவாதணிகைச்சைலனேசர்வணேற்பவனே. (எக)

உமையுகந்தருளு மொருபெருங்கனியே வும்பல்பின்னுதித்த நற்றனியே-யமையுநன்மனத்தினுன்றவர்க்கினியோ யறிவிலேற்கருளுநாளுளதோ-இமையவரின்னேயிறுதியென்றிருப்பா மிடமகன்றேங்கிநைந்தழுமச்- சமையம்வந்தவர்துன் பகற்றியதணிகைச்சைலனேசரவணேற்பவனே- (எஉ)

மத்தமாமதியான்மாண்புறுமுனது மாமலர்க்கழன்மனத்தேந்தி-நித்தநின்றேத்துநேயநீள்வாய்மை நீத்தவெற்கருளுநாளுளதோ-பத்தர்பண்பாகப்பாடிநின்றுடிப்பரசுவாய்ச்சொல்லெலாங்கவர்ந்த - தத்தைகணிதமும் பழகுறுதணிகைச்சைலனேசரவணேற்பவனே. (எங)

மயானமாடிடத்த மாசிலான்மகிழுமாண்புளாய்நின்கழற்பூசைவயாவுகொண்டுஞற்றேன் வளங்கொளுன்கோயில் வாயில்வந்தொருவலஞ்செய்யேன்-புயாசலாவென்றுபோற்றிடேனேத்தேன்புண்ணியம்புரிந்திடேனெனினுந்-தயாளம்வைத்தாள்தாயனையனேதணிகைச்சைலனேசரவணேற்பவனே. (எச)

படவரவல்குற்பாவையராசைப் பண்பினுன்பதமலர்பணியாதிடருறுவேனையிரங்கலையெனவேயிசைத்தருள்பெருக்குநாளுளவோ- குடமுலைப்பணைத்தோட்குறத்தியர்புனத்திற்குருகரோம்பிடுங்குரலொலியாற் - றடமுறுகடனேர் குறிச்சிசூழ்தணிகைச்சைலனேசரவணேற்பவனே- (எரு)

சாத்திரக்கடலைக்கடந்துசன்மார்க்கந் தருதிருச்சிந்தையோடு
ன்சீர்த்-தோத்திரஞ்செய்யுந் துகளிலார்போலத் தொண்டுயானு
ஞற்றிலேனெனினுங்-காத்தெனைவாழ்வித்திடற்குநீயல்லாற் கரு
தின்வேறெவருளர்கழறுய்.தூத்திரிமாந்தரோத்துறுதணிகைச்சை
லனேசரவணேற்பவனே- (எ௬)

வேய்தருவிமலன்வியந்திடுவேலோய் விரிகடலுடுத்தமேதினி
யிற் - காய்பெரும்பிணியிற்கலங்கிடாதெனையுங்காத் தருள்புரியு
நாளுளதோ-வாய்தருப்பொழின்மாட்டலரொழுக்கியதேமலிம
துபாய்தரவளர்ந்து, சாய்தருஞ்சாலி மருதமார்தணிகைச்சைல
னேசரவணேற்பவனே, (எ௭)

நட்புறுமனைவிமக்கடாய்தந்தைநகைதருநானிலவாழ்க்கை
நுட்பமாமென்றுநுண்ணறிவாளர் நூல்வழிநுவன்றதையோர்ந்
தும்- பெட்புறுவேனும்பிரியமோடுன்சீர் பேசவும்வாய்க்குநா
ளுளதோ - தட்பமார்சோலை சார்தருதணிகைச்சைலனேசரவ
ணேற்பவனே- (எ௮)

பொங்குவெம்பிணிசெய்போர்க்குடைந்தேங்கும் புல்லனே
ற்கருள்புரிகுவையோ-திங்கடோய்சிகரித் திருப்பரங்குன்றந்திக
ழ்திருச்சீரலைவாய்மிக்-கங்கெழுதிருவா வினன்குடிதிருவேரகமு
யர்குன்றுதோறுடல் - தங்கியசோலைமலையனேதணிகைச் சைல
னேசரவணேற்பவனே- (எ௯)

உலகெலாமீன்றவொருத்திநன்களித்த வொருவனேயுருவிலா
ன்படையாந்-திலகவானுதலார்திறத்தினின்மயங்கித்திகழுமுன்றி
ருவடிக்கடிமை-யிலகநின்றுஞற்றுதிருந்தவிச்சிறியேற்கிரங்கிவந்
தாளுநாளுளதோ -சலசலோசனன்வந்தேத்துறுதணிகைச்சைல
னேசரவணேற்பவனே. (௮௦)

மட்டறுக்கமலக் கோயிலானெழுத்தின் வண்மையோதொலை
ந்திலாத்தொன்று,தொட்டெனைத்தொடர்ந்த துன்பமோகொடி
ய துகடருமாயைசெய்சதியோ-துட்டனேர்கண்மு முன்கழறு
தியாத்துயருற்றேற்குறுபிணிதொலைத்தாள் -தட்டையாற்றத்தை
கழறுத்தணிகைச்சைலனேசரவணேற்பவனே. (௮௧)

புண்படுமனத்துன்னறைவிரிமலர்த்தாள் போற்றிடேனெனி
னுங்கண்பார்ப்பாய், பண்படுகுழலைப் பின்படுத்தியசொற்பா
வையராடவரோடும்- விண்டொடுபொழில்வாயாடுழியவர்மெய்
விழைநிழல்தோய்தலாலருஞ்- சண்பகத்தருச்சூழ்ந்தொளிர்தரு
தணிகைச்சைலனேசரவணோற்பவனே- (அஉ)

துன்னெனக்கிரியைத்துளைத்தவேற்கரனே துட்டனேற்கருள்
பரம்பரனே-பண்ணவரோடுங்குலிசவேற்படையான் பதிதுறந்
திவ்வுழியணுகி-யண்ணலாலயத்தினடைந்தமைநோக்கி யைந்தரு
வவணடைந்தனபோற் - றண்ணலர்பொதுளுங்காவளர்தணிகை
ச்சைலனேசரவணோற்பவனே- (அங)

நன்மைசெய்கில்லேனருந்தவம்புரியே னுவிலுன்புகழெடுத்
துரையேன்-புன்மைசெய்கிற் பேன்றீயனேனெனினும்பொறுத்
தருடருவையோ பொழில்வாய் - மன்னியகொடிக ளெழுதரு
தோற்றம்வான்புனல்படிந்தவர்பிணிபோந் - தன்மையைநிகர்க்
கும்பெருமைசால்தணிகைச்சைலனேசரவணோற்பவனே (அச)

கயங்கெழுகமலமுகத்தியர்மயலாங்கயிற்றினாற்கட்டுப்பட்டெ
ன்று - முயங்கிநெஞ்சழிந்துன்முண்டகத்தாளை முன்னிடேனெ
னினுமென்றனையாள் - புயங்கமேயணியாப்பூண்டவர்க் கொரு
சொற்பொருள்புலப்படப்புகன்றிடுமு - தயங்கெழுபுனிதபாநு
வேதணிகைச்சைலனேசரவணோற்பவனே. (அரு)

தீஞ்சுவைப்பாகே துய்யசெங்கரும்பேசீனியேசெழித்தசெந்
தேனே-பூஞ்சினைக்கனியேபொங்கும்வானமுதேபோக்கொடுவ
ரவில்புத்தேளே- வாஞ்சையோடேத்தாவெனையருள்குவையோ
மாநிலத்தரசரோடமரர் - தாஞ்சிரத்தணிமா முடிமிடைதணி
கைச்சைலனேசரவணோற்பவனே. (அசு)

அருளினிற்றிறத்தினழகினிற்புகழினயலொருவரை யுயர்த்திடு
வோர் - பொருவினின்றனைமுன்னுவமைதொட்டெவர்க்கும்புக
ழ்படுத்துவரொனி லுன்சீர்ப்- பெருமையான் பேசற்கெளிதலவெ
னினும்பிதற்றுமெற்கிரங்கியெங்கோவே - தருதியேலருளையுய்கு
வேன்றணிகைச்சைலனேசரவணோற்பவனே. (அஎ)

விசுபூஞ்சந்தப்பொழில்வளர்பொதிய வியன்வரைவிளங்குமா முநிக்குத்-தேசிகனெனவேவந்தருடந்த தேவனேசேவலங்கொ டியாய் - பாசமோடிருண்டபெரும்பகடேர்ந்து படர்நமன்வரு த்திடாதெனக்குத் -தாசரணரவிந்தநீள்தணிகைச் சைலனேசரவ ணேற்பவனே. (அஅ)

உலகெலாநொடியிற்சூழ்மயிலிருக்க வொன்னலர்ச்செகுத்தவே லிருக்கக் - கலிகெடக்காப்பாயெனும்பெயரிருக்கக்கருணைசே ர்நிதிப்பெயரிருக்க-நிலமிசையடியேற்கிடர்செய்வெம்பிணியை நீக்கநீநினைந்திடாதுளத்துச்- சலமுடையவர்போலிருத்தலென்ற ணிகைச்சைலனேசரவணேற்பவனே. (அகூ)

திங்கள்சேர்சடையான்றிருவுளங்களிகூர் செல்வமேசிறியனே ற்கருளாய்-பொங்கர்வான்றருவார்நாண்மலர்ப் பிரசம்புள்ளின முண்டெழுதோற்றம்.பொங்குறுசெல்வமடைந்துழிப்புகழ்ந்து புகித்திருந்தவர்பொருளறுங்காற் - றங்குறுதகல்வார்நிகர்திருத்த ணிகைச்சைலனேசரணேற்பவனே. (கூ0)

இகலியவசுர ருடலுயிர்துறக்க யிமயவர்க்கதிசயம் பிறக்கப் புகுமயில்பொறுத்தபுனிதனேயினிதுன் பூங்கழல்போற்றிடே னெனினும் - பகலவற்குடைந்தபனியெனத்தீயேன் பழவினை யொழித்தலுன்கடனே-சகலரும்போற்றக்கிளர்ந்தெழு தணிகை ச்சைலனேசரவணேற்பவனே. (கூக)

இதமுறவுன துகழனிதமேத்தாவிடும்பனேற்கருள்வதென்றிசை ப்பாய்-பதமுறுபத்தர்மனமலருறலாற் பாமகணிலவுறுபரிசால் விதவிதமாகச்சராசரம்விளைக்கும்வித்தகர்க்கமகிழ்தரலாற்.சது முகனிகர்க்குங்குடுமியந்தணிகைச்சைலனே சரவணேற்பவனே

தையலோர்பாகன்றன்னகங்களிகூர் தநயவென்வினைதவிர்த்த ருள்வாய்-வையகமுழுதுந்தன்வயிற்கொளலால்வுன்னலிறப் பூம களுறலான்-மையணியென்றுமேவலான்மேனுண்மண்முழுதுண் டமாலெனலாஞ் -சையமாமெவைக்குமரசெனுந்தணிகைச்சைல னெசரவணேற்பவனே (கூ௩)

பண்டருமறையிற்பகர்பரஞ்சுடரோபரிவிலே னெனினுங்தன்
பார்ப்பாய்.கொண்டன்மீதுறலாலருமகஞ்செயலாற்கோதில்வா
ள்வயிரமேந்துறலால் - வெண்புகர்க்கோட்டுவேழத்தாற்சசிபா
ன்மேவலாற்கற்பகத்தருவார் - தண்டலைக்கிறையைநிகர்தருதணி
கைச்சைலனேசரவணேற்பவனே. (௧௪)

கூரியகொற்றவேற்கரத்தேந்துங்குமரநற்குணமிலேற்கருள்வா
ய்-பாருளோர்ப்புரக்கும்பரிசினாற்பரிந்துபணிந்திடார்க் கிடரு
றுத்துதலால்-வாரமும்பெறலாற்கவிஞர் வாழ்த்துதலால்வாகை
கொண்டுலகெலாம்புரக்குந்- தார்முடியரசர்தமைநிகர்தணிகைச்
சைலனேசரவணேற்பவனே. (௧௫)

உமையொருபாகனகமகிழ்சிறக்கவொளிர்பவவென்றுயரெழி
ப்பாய் - இமையவர்முதலாம்பகுப்பினருறலாலிருந்தவத்தினரி
ருந்திடலாற் - சிமயம்விண்ணளவத்திகழ்தலாற் சுவணஞ்செறித
லாற்கதிர்வலம்வரலாற்-றமனியக்குன்றந் தனைநிகர்தணிகைச்சை
லனேசரவணேற்பவனே. (௧௬)

உம்பர்தந்துயர்தீர்த்தொழித்த வாவேழைக்குறுமிடரொழித்த
லோர்பெரிதோ- நம்புமெய்யடியாரும்பர்தங்குழுவுநாரியோர்
பாகனுமுறலாற் - பம்புநீரருவிபாய்தலால்வேதம்பரவலா லழி
விலாதுறலாற்-றம்பிரான்கயிலைமலைநிகர்தணிகைச்சைலனேசரவ
ணேற்பவனே. (௧௭)

விடவராமீக்கொண்மேதினிமேலாய்விளங்குமெய்த்தெய்வமே
மிகையே-படர்வினையுடையேனுனதடைக்கலமேபற்றினேன் ப
ரிந்தெனைப்புரப்பாய் - அடவிவாழ்மான்கணம்மவளிருக்குமழ
கினைப்பார்ப்பமென்றெண்ணித்- தடவரைச்சாரலணுகுறு தணி
கைச்சைலனேசரவணேற்பவனே. (௧௮)

களித்துநெஞ்சுருகிக் கசிந்துமெய்பொடித்துக் கனிந்துனைத்
துதிக்கவெற்றருள்வாய்-அளிக்கருல்கோதைக்கோதையரிளைஞர
லர்ப்பொழிலகத்தயராட்டின்.ஒளித்திடுகுதுநீர்காண்கவென்றோ
டியுயர்மரந்தழுவுமேலவையினிற்-றளிர்த்தலர்குராப்பாதவங்கெ
ழுதணிகைச்சைலனேசரவணேற்பவனே. (௧௯)

தங்கமால்வரையென்றுயர்தனிக்குன்றந்தனுசெனச் சமைந்திடப்புரிந்த-திங்கள்சேர்சடிலத் தேவர்கோனிடம்வாழ் தேவியின் மடியினிற்றவழுங் - கொங்கவிழ்தொடையல்குலாவுநீள்புயத்துக் குழகனேயருள்செய்தென்மீதுரைச் - சங்கமுற்றிறைமைநடாத்தியதணிகைச்சைலனேசரவணேற்பவனே. (௧௦௦)

வாழிமூவிரண்டுமுகமுமுந்நான்குமலர் விழிக்கரந்திரண்டொழுதோள் - வாழிசெஞ்சூட்டுவாரணக்கொடியும் வல்லுறுவேலுமாமயிலும்- வாழிமானுதவவருமனப்பெடையும்வானர சீன்றபெண்ணரசும்- வாழிகாங்கேயனடியருந்தணிகைவரையுநற்சரவணத்தடமும். (௧௦௧)

தணிகாசலமாலை.

முற்றும்.

கணபதி துணை.

இஃது

திருத்தணிகைவெண்பாமாலை.

காப்பு.

சிந்திக்கினின்னல்சிதைக்குந்தணிகையற்கு
வந்திப்பினின்றமிழ்ப்பாமாலைசொல-நிந்தையிலா
மாதங்கமாமுகத்தேமானேந்தியீன்றருளும்
மாதங்கமாமுகத்தேவாழ்த்து.

கந்தாகதிர்வேலாகாங்கேயாசெங்கடம்பின்
அந்தாரணிந்தவணிவாகா-நந்தாவெண்
பாவினனைப்பாடப்பணித்தருள்பாலித்தென்
நாவில்வந்தாள்வாய்நயந்து. (க)

வேலாதணிகைவிசாகாவிமலனிடப்
பாலானமாதுதந்தபாலனே-காலான
மூச்சொருங்கேயொத்துமொழியுஞ்சடாக்கரத்தின்
பேச்சுரைக்குமாறெனக்குப்பேசு. (உ)

மூத்திநெறிதேருமூதறிஞர்போலுனக்குப்
பத்திநெறிபாங்குஞற்றுப்பாவியெனை-நித்தியமும்
போதலருங்காதணிகைப்போதப்பொருப்பினமர்
காதலருந்தோடுடையாய்கா. (ங)

பேராசையாமூன்றிற்பேதுறுமெற்குன்னையல்லால்
ஆராசைசொல்லியவையாற்றுவா-ரோராசை
ஆடையணியுமரற்குமுபதேசவள்ளிப்
பேடையனமுடையாய்பேசு. (ச)

தணிகைவளர்வாழ்வைச்சண்முகநற்றேவை
அணிகையிளம்பூவெடுத்தர்ச்சித்துப்-பணியின்
திருக்குமிடறுமுளதிநெஞ்சேநல்லன்
பருக்குதவுவாழ்வுவருஞ்பார். (ரு)

ஓலமிட்டேநின்புகழ்ஓதுமெனக்கியாவர்துணை
ஆலமிட்டகண்டனருள்சுதனே-சாலப்
பிழைத்தமகவேனும்பேதிப்பளோதாய்
தழைக்குந்தணிகைநாதா. (சு)

என்னுளுமேன்மேலிடர்விளைக்குமேழைநெஞ்சே
உன்னோடுறுமுறவையோர்ந்திலா-யென்னுகுந்
தஞ்சமெனத்தணிகைச்சண்முகனைச்சார்ந்துளநான்
அஞ்சேனஞ்சேனென்றறி. (எ)

வானவராலேத்துமகவான்மகளைவேண்டித்
தானவரானோர்மடியச்சாடுநினக்-கானவராம்
பத்தர்தமைப்பூசிக்கப்பாலிக்கிற்கைதொழுவேன்
நித்தந்தணிகையினின்று. (அ)

தித்திக்குந்தேனைத்தெவிட்டாததெள்ளமுதை
யெத்திக்குந்தானையெழுஞ்சுடரை-முத்திதனக்
காதாரமாந்தணிகையண்ணலைநெஞ்சேயிப்
போதாரவேத்திலின்புறும். (கூ)

ஆசில்புகழ்கீரனருணகிரிநாதனுரை
வாசகத்தைநீமகிழ்தல்வண்மையோ-பேசுமொரு
பிள்ளையுரையோபேசாப்பிள்ளையுரையோமகிழ்வு
கொள்ளுமனைநன்கெனக்குக்கூறு. (க0)

நண்ணார்ந்தசோமனுலாந்தண்டலைசூழுந்தணிகைக்
கண்ணார்ந்தகந்தனைக்கானவரின்-பெண்ணினது
ஓட்டமதுவேட்டானையொண்ணுதல்பாலோடிநயங்
காட்டெனவிட்டான்கழலென்கண். (கக)

வித்தகமாம்வேலால்வீரவசுரோசரைவென்
றெத்திசையும்வெற்றிபுரிந்தேர்தணிகை-நத்தியே
மேவிவளர்வாழ்வைமேருவில்லியானிடமாந்
தேவியருட்டேவைநெஞ்சேசேர். (கஉ)

ஒன்றுமொருநன்றிசெயினுள்ளத்தேவைப்பரலால்
என்றுமெண்ணுதொழித்தாரீங்கில்லை-யின்றுநெஞ்சே
பேருதவிசெய்தயான்பெம்மான்றணிகைதொழற்
காருதவியாவர்நீயலால். (கங)

பித்தம்பிடித்துழலும்பேயனெனப்பேதுறுத்துன்
மத்தமனனேதணிகைவாழ்வடிவேல்-நித்தனடித்
தாசர்த்தமைக்காணுந்தவாநெறியிற்சாரினும்பால்
நாசனடுக்குற்றொழிவானம்பு. (கச)

கன்றிக்கண்ணீர்வாரக்கைசிரமேலேறக்
குன்றுருவவேல்விடுத்தகோமானே-நின்றுருகப்
பாடியன்பர்வாழ்தணிகைப்பண்ணவநீயென்னைத்
தேடிவினைதீர்ப்பதென்றுசெப்பு. (கரு)

தந்தைகுணமீன்றதனையர்தமக்குண்டெனல்சம்
பந்தமுளதேதணிகைப்பண்ணவனே-நுந்தையன்று
தோலடியாற்றொட்டான்றுயரொழித்ததேபோன்றுன்
காலடியைத்தொட்டவெனைக்கா. (கசு)

பச்சைமலையுச்சியெழும்பானுவெனவிளங்கும்
கொச்சையிலாத்தணிகைக்கொற்றவநின்-னிச்சையிலே
வாழ்ந்தொர்பலரிருக்கவந்தனைசெயுன்னடிமை
தாழ்ந்திருக்கச்செய்ததெவன்சாற்று. (கஎ)

போதில்வரும்புத்தேளும்பொங்குதிருவைப்புணருந்
தீதிறிருமாலுந்தினம்பரவக்-கோதிலா
தோங்குதணிகைக்கரனேயுத்தமனேபித்தனெனைப்
பாங்குபெறவருட்கண்பார். (கஅ)

ஓவியத்தாமுன்கனிபோலோதுபலதேவினடி
தாவியத்தாலின்புதருமோதான்-பாவிநெஞ்சே
சாலப்புனல்புடைசூழ்தாலத்துறுதணிகை
வேலப்பிரான்கழலைவிட்டு. (கக)

உன்னையன்றிவேறொருதவியெனக்கில்லெனுஞ்சீர்
தன்னையறிந்ததணிகேசா-முன்னைவினை
நீக்கியென்னைநின்னைநினைந்திருக்கச்செய்திலையேல்
பாக்கியுன்மேலாகும்பார். (உ0)

அன்பரவர்வேண்டினவையாங்கருள்வோனீயாவாய்
என்பரவையென்றனுக்கின்றொவுன்-னன்பில்லான்
என்றிகந்துவிட்டனையோயென்றோயான்செய்ததுகா
துன்றுதணிகையனேசொல். (உக)

வன்றொண்டுகொண்டுறவாய்வாதாடிநாரவனை
இன்றொண்டனென்றெண்ணியின்புற்று-யென்றன்றொண்
டாங்கவரிஞொன்றுயமையாதோநற்றணிகைக்
காங்கேயவேதுபிழைகாட்டு. (உஉ)

வேதற்குவேதவிழுப்பொருளோதுந்தணிகைக்
காதலன்றன்கஞ்சக்கழலிணையைப்-பேதமறப்
பார்க்கினெஞ்சேபஞ்சமாபாதகம்போம்பேதமறும்
ஆர்க்குமுறவாவாயறி. (உரு)

உன்னடியானென்றுலகறியப்பேசியுன்சீர்
பன்னுமடியேற்கருட்கண்பாராயேற்-றுன்னுமிடர்
ஆழிவிழுந்தேங்குறுவேனையவவ்வாறுகுமேல்
வாழிதணிகையிலேவாழ். (உச)

என்றுமதியையிறுலிதுவென்றெண்ணுற்றுத்
துன்றுமதுகரங்கடோய்துருவ-மொன்றுந்
திருத்தணிகையானேதீவினையேன்மீதன்
பிருத்தியருள்வாயிவண். (உ௫)

தணிகாசலாவென்றுசந்ததமும்பேசிநின்றாள்
அணிகாதலாதலெற்கென்றுமோ-மணிமன்றுள்
ஆட்டுக்காலாலன்றரக்கனுடலழுந்தக்
கூட்டியுதைத்தான்குமராகூறு. (௨௬)

உன்னுதுநின்னையுணராதுன்னேர்புகழப்
பன்னுதிருந்தேற்கும்பண்ணவனீ-யென்றான்மற்
றுனாவெறுப்பேன்றணிகையண்ணலுனையன்றி
ஊனாவெறுத்தாவதென்னவோது. (௨௭)

உள்ளத்துறுபகையுமோட்டமதிலுறவாங்
கள்ளத்தனமுநெஞ்சேகாட்டுவையோ-வெள்ளமொடு
பிஞ்சுமதிசூடுசடைப்பெம்மான்றரும்பிள்ளைக்
கஞ்சமலர்த்தாள்கண்டுங்கைத்து. (௨௮)

உன்னிலொளிர்தணிகையோங்கலமாறுமுகன்
றன்னியலேயன்றியொன்றுந்தானில்லை-யென்னிலுனக்
கேனோயினித்துயரமென்னெஞ்சேயேங்கினது
தானோதவமளிக்குஞ்சாற்று. (௨௯)

கற்றும்பயனென்கற்றுனைகண்ணமணி
மற்றும்வனைந்தாவதென்னேவண்டணிகை-யுற்றன்
றரக்கர்தமைதீர்த்தமரரைக்கார்த்தாற்கண்
டிரக்கமுடனேத்தாதிருந்து. (௩௦)

கொலைகளவுகாமக்குரோதமுதலாரும்
அலைகடல்வீழ்ந்தேங்குமடியேற்-கிலைநிலவு
வேலேந்திவந்துவினைவீட்டித்தணிகையநின்
காலேந்தியேறும்வகைகாட்டு. (௩௧)

தணிகாசலமதில்வாழ்சாமிதனையுள்ளத்
தெணிகாதல்கொண்டிறைஞ்சியேத்திற்-பிணிதுயர்செய்
வாதனைபோமேதமறும்வாராதொருபிணியுஞ்
சோதனையென்னெஞ்சேதுணி. (௩௨)

முன்னைவினைப்பயனோமுதறிவிலாததுவோ
என்னையினுமித்துயர்க்கேயேறவிட்டா-யன்னையன்றி
ஆமோவுறவுமகர்க்கையுநினையன்றிசொலப்
போமோதணிகையாயிபுகல். (௩௩)

சரவணபவாவென்றுசந்ததமும்போற்றிச்
சிரமணவச்செங்கைதலைச்சேர்த்தி-வரவணரார்
கூந்தற்குறப்பெண்கொழுனனையெம்பொற்றணிகைக்
கேந்தலைநெஞ்சேயென்றுமேத்து. (௩௪)

ஓகெடுவாய்நெஞ்சேயொன்றுரைப்பதுண்டீங்கு
வாகொடிதாஞ்சகலவாதனையும்-போகவொழி
ஆலமிடற்றிருத்துமண்ணலருமகவின்
காலைத்தணிகையிலேகண்டு. (௩௫)

எத்திக்கும்போற்றுமெழிற்றணிகைத்தேவினடி
தத்தியென்றும்பத்திநயந்துசெயின்-நித்தியமாம்
இன்பமொடுநாற்பதமுமேழ்கடல்சூழிவ்வுலகின்
நன்பதமுமெய்துநயந்து. (௩௬)

இன்பாமென்னன்பேயிருங்கருணைமாகடலே
துன்பாமல்தொன்றுமிலாத்தூயநின்-னன்பாவார்
ஆர்க்குமருளாரியனேயாதிமுதல்வன்முதலே
பார்க்குளெனைக்கண்பார்பரிந்து. (௩௭)

மூக்கிலானுற்றமுங்கமூகுரநேர்காட்டால்
ஆக்கினுலென்னவடியேன்முன்-வாக்கினுல்
யாருமுனைப்பாடவருளளித்தெனைத்தாழ்த்திற்
சேருப்பழிபுனக்குத்தேர். (௩௮)

கற்றவனுமல்லேன்காசினியின்மாதவஞ்செய்
நற்றவரினுனொருவனல்லேன்காண்-சற்றுமுனைச்
சிந்திக்கேனிந்தனைசெய்தியனெனினுந்தணிகைச்
சந்திக்கநன்கருள்கந்தா. (௩௯)

வேண்டுமவைவேண்டியவைவேண்டியளிப்பானும்
நீண்டகழறீண்டநினைத்தளவில்-மீண்டுலகில்
வாராவரமளித்துவாழ்விப்பவனுமாம்
பேராந்தணிகைப்பிரான். (சஅ)

என்றுமென்சொனின்செவியினேறுதிருப்பதுபோல்
அன்றொருன்பர்சொற்குமன்பாகாயே-லொன்றொழிந்த
வாயிரவராங்கொருங்காகாரமாவரக்கன்
சேய்வாய்ப்புகுவரன்றோசெப்பு. (சக)

பகலுமிரவுந்தணிகைப்பண்ணவனைநெஞ்சே
இகலறவெண்ணுயேலின்பெங்ஙன்-தகவுண்
டுரத்தழுதசேய்க்கோவுறங்குமகர்க்கோபார்
பரபரத்தன்னைதரும்பால். (சஉ)

ஆறுமுகனையமரர்சேனுபதியை
வேறுமுகன்பின்னுதித்தவித்தகனை-யேறுக்கக்கும்
ஈசனுபதேசிகனையெந்தையினைவான்றணிகை
வாசனையேவாழ்த்துகவென்வாய். (சங)

கமலமிசைவாழ்பிரமன்கைப்பணிவேண்டாதாய்
மூமலமறுத்தாடணிகைமூதூர்-விமலனே
பேயனேயேனின்புகழைப்பேசாதிருப்பினுமென்
றுயனையாய்நின்றனருள்தா. (சச)

கன்றுமிளங்கன்றகலக்கண்டதாய்கால்விரைந்து
சென்றிடந்தேடித்துயரந்தீர்த்தலலால்-துன்றுமிளங்
கன்றோடுமோதணிகைக்கந்தனேவந்தென்வினை
இன்றோடொழித்தருளிடம். (சரு)

இன்னேயென்பாழ்நெஞ்சேயேதமிலாவேர்தணிகைப்
பொன்னேர்பொருப்பினுறைபோதனைநீ-சொன்னேறு
னத்துவையேனுனைநமைநாடானமனறிதீ
வித்திலர்க்கென்றும்விளைவு. (சகூ)

கோதண்டம்பெற்றவனுங்கோகனகத்துற்றவனுந்
தீதண்டாதேத்துந்திருத்தணிகை-வேதண்டத்
துச்சியொளிருத்தமனேயோங்காரத்துட்பொருளே
நச்சுமெனையானயந்து. (சஎ)

சந்தப்பொழில்சூழ்தணிகையாய்நின்றனது
கந்தமலர்த்தாளினைக்கண்ணுறுந்து-பந்தமுறப்
பூட்புனலிட்டேத்தும்புகழுற்றிலேனெனினுங்
காட்புனதேயன்றியிலைகாண். (சஅ)

பொன்னேபொருளேபுராரியருள்பொற்குன்றே
மன்னேமறையேமனுவடிவே-யின்னேயென்
சிந்தைகளிக்கத்திருத்தணிகைத்தேவேநற்
சந்ததியுந்தண்ணருளுந்தா. (சகூ)

பூமாலைகொண்டுனதுபூங்கழலைப்போற்றுதல்போல்
பாமாலைசூட்டித்தாள்பற்றினேன்-மாமாலை
பெற்றமெனக்கொண்டபெம்மான்மகிழ்தணிகை
யுற்றவனேயாளெனையுவந்து. (ரு0)

வாழிதணிகைமலைவாசனுமொள்வேலும்
வாழியிருபெண்மயிலுமாமயிலும்-வாழியன்னான்
நீண்டகரமீராறும்நேர்விழியுஞ்செவ்வாயும்
மாண்புறுதாளிரண்டுமகிழ்ந்து. (ருக)

திருத்தணிகைவெண்பாமாலை

முற்றிற்று.

உ

சிவமயம்.

தொண்டைமண்டலம்

கலவைமாநகரத்தி லெழுந்தருளியிருக்கும்

திருக்காரீசர்மீது

தோத்திரத்திரட்டு:

இஃது

கலவை - சுப்பராயமுதலியாரவர்கள்

வேண்டுகோளின்படி

சைவவேளாளகுலதிலகராகிய

அகரம் - இராஜப்பமுதலியார் - குமாரர்

அ-முருகேசமுதலியாரவர்கள்

இயற்ற,

அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

முன்னிலையில்

சென்னை இராயப்பேட்டை

தெய்வநாயக முதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

சென்னை:

ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சர்வசித்துஷ-மகாரவி.

சாத்துபவிகள்.

இஃது

அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றிய-வெண்பா.

இருக்காலுங் கண்டிடுதற் கேலாத பெம்மான்
றிருக்காரீ சன்கழலைத் தேர்ந்திங் - கொருக்காற்
படிப்பவர்க டங்களுக்கும் பத்திவிளை பூக்கள்
முடித்தான் முருகேசன் முன்.

ஷெயார்மாணுக்கர்

வல்லை-சண்முகசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றிய-வெண்பா.

தோத்திரத்தி ரட்டொன்று தோன்றிடவே செய்திட்டான்
நேத்திரத்த காரீச னின்மலற்குக் - கேத்திரத்துச்
சுத்தசைவ வேளாளர் தொல்குலத்து வந்துகலை
சத்தறிந்த நம்முருகே சன்.

சென்னை-இராயப்பேட்டை

தெய்வநாயகமுதலியாரவர்கள்

இயற்றிய-வெண்பா.

கலவைதனக் கூட்டுபுகை காரென்னச் சூழுங்
கலவைநகர்க் காரீசன் காற்கு-வலவை
அகரமிரா சப்ப னளித்தமுரு கேசன்
பகரவருந் தோத்திரமே பண்பு.

இராணிப்பேட்டை

வீராகவசெட்டியாரவர்கள்

இயற்றிய-வெண்பா.

அன்பருளத் தேயூறி யானந்த மாய்விளங்கு
மின்பத் திருக்கலவை யீசன்மேற் - பன்முறையாய்ச்
சத்துசித்தா னந்த சகசநிட்டைக் கப்பாலாம்
பத்திமுரு கேசன்சொற் பா.

சென்னசமுத்திரம்

குமாரசுவாமிபண்டிதரவர்கள்

இயற்றிய -வெண்பா

கண்ணூன் றுடைய கலவைக்கா ரீசர்புகழ்
மண்மீது வாழ்மாந்தர் மாட்சியுடன் - நண்ண
அகரமுரு கேசனிங் கன்பாற்சொல் மாலை
ககனமதிற் சேற்பிக்குங் காண்.

சட்டுவந்தாங்கல்

கோவிந்தசாமிபண்டிதரவர்கள்

இயற்றிய-வெண்பா.

இட்டனென வந்திட்ட வெங்கள் முருகேசன்
சிட்டர்தொழுஞ் சீர்க்கலவைச் செல்வன்மேற் - சொற்றதமிழ்
கற்கண்டோ சர்க்கரையோ கன்னற் செழுந்தேனோ
சொற்கமதில் வாழமுதோ சொல்.

தளர்ப்பாடி - ஸ்கூல்

உபாத்தியாயர்

பரசுராமநாயகரவர்கள்

இயற்றிய-வெண்பா.

எண்ணுஞ் சமுத்தாக விட்டன் முருகேசன்
மன்னுங் கலவைநகர் மாமணிமேற் - சொன்னவொரு
பாமாலை தன்னைப் படித்திடலா மெல்லோரு
நாமாலை யங்களிலே நன்கு.

திண்டிவனம்

சாமிநாதசெட்டியாரவர்கள்

இயற்றிய-வெண்பா.

எத்திசையும் போற்று மெழிற்கலவை யீசன்மேற்
பத்திமுரு கேசன்சொற் பாமாலை - நித்தநித்தந்
தித்திக்குந் தீந்தேனோ தெள்ளமுதோ செங்கரும்போ
முத்திக்கு வித்தோ மொழி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கலவை அகரமத்தியி லெழுந்தருளிய

கற்பகவிநாயகர்பேரில்

தேவாரப்பதிகம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

திங்களஞ்சடையுமொற்றைவெண்மருப்புந்திறல்கொள்பாசாங்குசகரமு
கொங்களவியமந்தாரமார்மார்புங்குரைகழல்வனைந்தசிற்றடியும் [ங்
எங்களங்கெர்ழிப்பவிழியெதிர்தோன்றவினிதுகண்டுய்யுமாறுளதோ
மங்களக்கலவையகரமத்தியினில்வாழ்ந்திடுங்கணேசமாமணியே. (க)

அப்பமெள்ளுருண்டைமுக்கனிவல்லமதிரசங்கடலைமென்பயறும்
துப்பமையிவைமுன்னுயசிற்றுணர்வுந்தொகுத்துனைப்பூசனைபுரிந்தோர்
எப்படிவாங்கேட்டிடினுமப்படியேயீந்தருள்புரிகுவையொருநீ
மைப்படிகலவையகரமத்தியினில்வாந்தருங்கணேசமாமணியே. (உ)

ஐம்பொறியடக்கித்தவஞ்செயவறியேனையநின்னடியரிற்கூடி
நம்புமுன்னிலையைமதிக்கவுங்கில்லேனுனினியென்செய்கோமறலிக்
கம்புயன்முதலோர்பெறலருமொருநின்னருள்பெறவடியனேற்கிரங்
பம்புசீர்க்கலவையகரமத்தியினிற்பணியவாழ்கணேசமாமணியே. [காய்

மருமலர்க்கூந்தலுமையவள்கங்கைவதுவைமுன்றனைமணிமிடற்றுன்
திருமணம்புரியச்சதுர்த்திநல்விரதஞ்செய்திடவவ்வகையருளும்
சுருதியின்முடிவேநின்புகழடியேன்துதிக்கவுமதிக்கவுமெளிதோ
திருமதிற்கலவையகரமத்தியினிற்சிறந்துவாழ்கணேசமாமணியே. (ச)

கண்புனறுளிப்பவுடல்புளகரும்பக்கருத்துநெக்குருகுபேரன்பால்
விண்புனல்சுமந்தசடிலமார்மகுடவித்தகன்மதலையாமுனது
பண்புனல்சிறிதுமிலாதுழல்சிறியேன்பவத்துயரொழியுநாளுளதோ
மண்புகழ்கலவையகரமத்தியினில்மருவிவாழ்கணேசமாமணியே. (ரு)

இருவினைத்தொடக்காற்சனனங்களீட்டியிறந்திறந்திளைத்தனனினியோர்
கருவினையுறுவெம்பவத்தடையாதுகடைக்கண்வைத்தருள்வதுன்பரமே
பொருவினையகன்றேறுசிங்கவேறிவர்ந்தோய்பொன்னடிபரவியவடியார்
வருவினைபோக்குங்கலவைமாவகரமத்தியிற்கணேசமாமணியே. (சு)

பந்தனிவிரலார்விழியிடைபட்டுப்படர்வலைமானெனமயங்கிச்
சிந்தைவேறுகித்திரிகுவேன்றனக்குன்றிருவடியருளுநாளுளதோ
கந்தவேளுலகைவலம்வருமுன்னர்க்கண்ணுதற்றனைவலம்புரிந்து
வந்துமாங்கனிகொள்கலவைமாகரமத்தியிற்கணேசமாமணியே. (எ)

யானெனதென்னுஞ்செறுக்கினையகன்றோர்க்கிருளறவிளங்கியேயாவுந்
தானெனக்காட்டியாளுனின்கருணைதனக்குமாறுதவியுமுண்டோ
கானெனவிளங்குஞ்செஞ்சடைக்கடவுள்கண்ணுதலளித்தநற்குன்றே
வானுயர்கலவையகரமத்தியினில்வாழ்ந்திடுங்கணேசமாமணியே. (அ)

சதுமுகப்பிரமன்மலர்மகண்மார்பிற்றயங்கவாழ்நாரணக்கடவுள்
விதுவணிசடிலத்திறையவனெனுமிம்மூவரும்வியந்துளந்துதிப்பக்
கதுவுபல்லுலகுநினதுதாத்திற்காட்டியபடியெனக்கருளாய்
மதுபொழிற்கலவையகரமத்தியினின்மருவியகணேசமாமணியே. (கூ)

நித்தியநிமலநிட்களானந்தநிரஞ்சனநிராலம்பநிகில
சத்தியவகண்டாகாரதற்பரநிற்சததளமலர்நிகரடியின்
பத்திசெய்திறைஞ்சும்பவமுருகேசன்பாவியேனுய்யுநாளுளதோ
வித்தகக்கலவையகரமத்தியினில்மேவியகணேசமாமணியே. (க0)

உ

சிவமயங்.

கலவைநகர் திருக்காலீச்சுரர்மீது

தோத்திரத்திரட்டு.

பதிகம்

சீர்பெருங்கலவைநகர்தனில்வாழுந்தேவனேசிவக்குலக்கொழுந்தே
கார்முகிலினங்கள்வாழ்வுறவளிக்குங்கன்கமாமகரமாநகரில்
ஏர்பெருஞ்சைவவேளாளர்தன்குலத்திலெழிமுருகேசனுக்குகந்து
பார்தனிற்பிறவாவரமதுபெறவேபரிவுடன்பாடினேன்பரனே. (க)

தேவியலறியாச்சிறியனேன்பிழையைத்திருவுளத்தெண்ணிநீகோபம்
மேவியிங்கையோகைவிடிற்சிவனேவேறுநானியாதுசெய்வேனே
மூவிருமுகஞ்சேர்முத்தினையளித்தமுழுச்சுவைமுதிர்ந்தசெங்கரும்பே
சேவின்மேலோங்குஞ்செழுமணிக்குன்றேதிருநகர்க்கலவைவாழ்தேவே.

உய்யவொன்றறியாவொதியனேன்பிழையையுன்றிருவுள்ளத்திற்
கொண்டே, வெய்யனென்றையோகைவிடிற்சிவனேவேறுநான்யாதுசெ
ய்வேனே, செய்யநெட்டிலைவேற்சேய்தனையளித்ததெய்வமேயானந்தத்தி
ரட்டே, மையலற்றவர்தம்மனத்தொளிர்விளக்கேவளம்பெறுகலவையூர்
மணியே. (ங)

கழல்கொளுன்னருமைத் திருவடிமலரைக்கருதிடாப்பிழைதனைக்குறித்தே, விழலனென்றையோகைவிடிற்சிவனேவேறுநானேதுசெய்வேனே
யழலயிற்கரத்தெம்மையனையீன்றவப்பனேயயனுமாலறியாத்
தழல்நிறப்பவளக்குன்றமேகலவைத்தனிநகரமந்தருடகையே. (௪)

வாடனக்குறழும்வடுக்கணர்க்குருகும்வஞ்சனேன்பிழைதனைக்குறித்தே
வேடனென்றையோகைவிடிற்சிவனேவேறுநான்யாதுசெய்வேனே
நீடயிற்படைசேர்கரத்தனையளித்தநிருத்தனேநித்தனேநிமலா
வேடகத்தமர்ந்தயீசனேதில்லையெந்தையேகலவைவாழிறையே. (௫)

நாணமொன்றில்லாநாயினேன்பிழையைநாடிநின்றிருவுளத்தடைத்தே
வீணனென்றையோகைவிடிற்சிவனேவேறுநான்யாதுசெய்வேனே
காணநின்னடியார்க்கருடரும்பொருளேகடிமதிற்கலவையூர்க்கரசே
பூணயிற்கரத்தோர்புத்தமுதெழுந்தபுண்ணியப்புனிதவாரிதியே (௬)

அஞ்செழுத்தோதியுய்ந்திடாப்பிழையையையனிற்றிருவுளத்தெண்ணி
வெஞ்சனென்றையோகைவிடிற்சிவனேவேறுநான்யாதுசெய்வேனே
கஞ்சன்மான்முதலோருயிர்பெறவிடத்தைக்களத்திருத்தியவருட்கடலே
சஞ்சிதமறுக்குஞ்சண்முகமுடையோன்றந்தையேகலவையென்தவமே.

நம்பினேனின்றன்றிருவடிமலரைநாயினேன்பிழைதனைக்குறித்தே
வெம்பினேனையோகைவிடிற்சிவனேவேறுநான்யாதுசெய்வேனே
தும்பிமாமுகனைவேலனையீன்றதோன்றலேவச்சிரத்தூணே
அம்பிகாபதியேயண்ணலேமுக்கணத்தனேகலவைவாழமுதே. (௮)

சூழ்ந்தவஞ்சகனேன்பிழைதனைக்குறியேல் துன்பசாகரந்தனிலழுந்தி, வீழ்ந்தனேனையோகைவிடிற்சிவனேவேறுநான்யாதுசெய்வேனே, வாழ்ந்தமாதவர்கண்மனத்தொளிரொளியேவள்ளலேமழவிடையவனே, போழ்ந்தவேற்படைகொள் புனிதனையளித்தபூரணகலவையூர்ப் பொருளே. (௯)

துரும்பினேன்பிழையைத்திருவுளத்தடையேல் துய்யனின்னருட்கடலாட, விரும்பினேனையோகைவிடிற்சிவனேவேறுநான்யாதுசெய்வேனே, கரும்பினேர்மொழியாரிருவரைமணக்குங்கனிதனையளித்தகற்பகமே இரும்பினேர்நெஞ்சனென்னினுமெளியேற்கின்னருள்கலவைவாழிறையே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

தேனெனவினிக்குந் திருவருட்கலைதெள்ளியவமுதமேசிவமே
வானெனநிற்குந்தெய்வமேகலவைவாயில் வாழ்மாசிலாமணியே
யூனெனநின்றவுணர்விலேனெனினுமுன் திருக்கோயில்வந்தடைந்தால்
யேனெனக்கேளாதிருந்தனையையாவீ துநின்றிருவருட்கியல்போ. (க)

பூங்கொடியிடையைப்புணர்ந்தசெந்தேனேபுத்தமுதேமறைப்பொரு
ளே, வாங்கொடிவிடைகொளண்ணலேகலவைவாயில்வாழ்மாசிலாமணி
யே, தீங்கொடியாதவினையனேனேனுஞ்செல்வனின்கோயில்வந்தடைந்
தால், ஈங்கொடியாதவருட்கணுனேக்கியேனெனுதிருப்பதுமியல்போ. ()

துப்புறேரிதழிமகிழ்ந்தகல்யாணசுந்தராசுந்தரன்றூதா
மைப்பொதிமிடற்றுய்வளர்திருக்கலவைவாயில்வாழ்மாசிலாமணியே
அப்பனேயுன்னைவிடுவ்னேவடியேனறிவிலேனேனுநின்கோயில்
கெய்ப்புடன்வந்தால்வாவேன்வுரையாதிருப்பதுன்றிவருட்கியல்போ. ()

கங்கையஞ்சடைகொண்டோங்குசெங்கனியேகண்கள்மூன்றுங்கு
செங்கரும்பே, மங்கலில்லாதவண்மையேகலவைவாயில் வாழ்மாசிலாம
ணியே, துங்கனின்னடியைத்துதித்திடேனேனுந் தொண்டனேன்கோ
யில்வந்தடைந்தால், எங்குவந்தாய் நீயாரெனவேனுமியம்பிடா திருப்
பதுமியல்போ. (ச)

நன்றுவந்தருளுநம்பனேயார்க்குநல்லவனேதிருத்தில்லை, மன்று
வந்தாடும் வள்ளலேகலவைவாயில் வாழ்மாசிலாமணியே, துன்றுனின்
னடியைத் துதித்திடேனெனினுந்தொண்டனேன் கோயில்வந்தடைந்
தால், என்றுவந்தாயென்றுருசொலுஞ்சொல்லாதிருப்பதுன்றிருவரு
ட்கியல்போ. (ரு)

பண்ணினுளிசையேபாலினுட்சுவையேபாதகற்கருட்செயும்பரமே,
மண்ணினிலோங்கி வளம்பெறுகலவைவாயில்வாழ்மாசிலாமணியே, பெ
ண்ணினும்பேதை மதியினேனேனும் பெருமநின்னருள்பெறலாமென்,
றெண்ணிவந்தடைந்தால் கேள்வியில்லாம லிருப்பதுன்றிருவருட் கிய
ல்போ. (சு)

முன்னியமறையின்முடிவினுட்பொருளேமுக்கணுமூவர்க்குமுதல்வா
மன்னியகருணைவாரியேகலவைவாயில்வாழ்மாசிலாமணியே
அன்னியனல்லேன்றொண்டனேனுன்றனருட்பெருங்கோயில்வந்தடை
ந்தால், என்னிதுசிவனேபகைவர்போற்பார்த்திருப்பதுன்றிருவருட்கி
யல்போ. (எ)

நல்லவர்பெறுநற்செல்வமேமன்றுண்ஞானநாடகம்புரிநலமே
வல்லவர்மதிக்குந்தெய்வமேகலவைவாயில்வாழ்மாசிலாமணியே
புல்லவனேனுமடியனேனெனையாள்பொய்யலவுலகறிந்ததுநீ
இல்லையென்றுலும்விடுவனேசும்மாயிருப்பதுன்றிருவருட்கியல்போ. (அ)

பொதுவினின்றருளுமுதற்றனிப்பொருளேபுண்ணியம்விளைகின்ற புலமே, மதுவினின்றோங்கும்பொழிற்றிருகலவைவாயில்வாழ்மாசிலாமணியே, புதுமையனல்லேன்றொன்றுதொட்டுனதுபூங்கழற்கன்புபூண்டவன்காண், எதுனினைந்தடைந்தாயென்றுகேளாமலிருப்பதுன்றிருவருட்கியல்போ. (கூ)

அண்டர்கள்போற்றுமமுதமேவுன்றனருட்பெருஞ்சோதியைக்காணக், கண்டவர்துதிக்குங்கருணையங்கலவைவாயில்வாழ்மாசிலாமணியே, முண்டிடவெறியுமுற்கணுயிடினுமுருகேசனின்கோயில்வந்தடைந்தால், தொண்டர்கட்குகந்த தொழும்பனேனென்று சொற்றிடாதிருப்பதுமழகோ. (கo)

உ

திருச்சிற்றம்பலம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வஞ்சகவினைக்கோர்கொள்கலமனையமனத்தினைனைத்தினுங்கொடியேன், தஞ்சமென்றடைந்தேனின்றிருக்கோயில்சந்நிதி முன்னர்நிற்கின்றேன், நெஞ்சலிலடங்காப்பாவியேன்றனைநீயிகழ்ந்திடிலென்செய்வேன்சிவனே, கஞ்சன்மால்புகழுங்கலவையங்கரும்பேகதிதருங்கருணையங்கடலே. (க)

நிற்பதுபோன்றுநிலைபடாவுடலைநேசம்வைத்தோம்புதற்பொருட்டாய்ப், பொற்பதுதவிரும்புலையர்தம்மனைவாய்ப்புந்திநொந்தயர்ந்தழுதிளைத்தேன், சொற்பதங்கடந்தநின்றிருவடிக்குத்தொண்டுசெய்நாளுமொன்றுளதோ, கற்பதுகற்றோர்புகழ்திருக்கலவைகாவல்கொள்கருணையங்கடலே. (உ)

முன்னைவல்வினையால்வஞ்சகமடவார்முழுப்புலைக்குழிவிழுந்திளைத்தேன்
என்னையோகொடியேனின்றிருவருடானெய்திலனேலுயிர்க்குறுதி
பின்னையெவ்வணந்தானெய்துவதறியேன்பேதையிற்பேதைநானன்றோ
கன்னலேதேனேகலவையிலமுதேகடவுளேகருணையங்கடலே. (ங)

மண்ணினுண்மயங்கிவஞ்சகவினையால்மனந்தளர்ந்தழுங்கிநாடோறும்
எண்ணினுளடங்காத்துயரொடும்புலையரில்லிடைமல்லிடுகின்றேன்
விண்ணினுளிலங்குஞ்சுடர்நிகருனதுமெல்லடிக்கடிமைசெய்வேனோ
கண்ணினுண்மணியேகலவையங்கனியேகடவுளேகருணையங்கடலே (ச)

அளவிலாவுலகத்தனந்தகோடிகளாமாருயிர்த்தொகைகளுமெனைப்போல்
இளகிலாவஞ்சநெஞ்சகப்பாவியேழைகளுண்டுகொலிலைகாண்
தளர்விலாவுனதுதிருவடியெனும்பொற்றூமரைக்கணியனுகுவனே
களவிலார்க்கினியகலவையெம்மருந்தேகனந்தருங்கருணையங்கடலே. (ரு)

ஞானமென்பதிலோரணுத்துணையேனுநண்ணிலேன்புண்ணியமறியேனீனமென்பதுக்கிறையெனலானேனெவ்வணமுய்குவதறியேன்
வானநாடவரும்பெறற்கருநினதுமலரடித்தொழும்புசெய்வேனோ
கானவேட்டுருவாமொருவனேகலவைக்கடவுளேகருணையங்கடலே. (சு)

ஞாலவாழ்வனைத் துங்கானனீரெனவே நன்கறிந்துன்றிருவருளால்
சீலவாழ்வடையுஞ்செல்வமிப்பொல்லாச்சிறியனும்பெறுகுவதேயோ
நீலமாமிடற்றுப்பவளமாமலையேநின்மலவானந்தநிலையே
காலனுளவிழ்க்குங்காலனேகலைக்கடவுளேகருணையங்கடலே. (எ)

மாலொடுநான்குவதனனுங்காணுமலரடிக்கடிமைசெய்தினிப்பாம்
பாலொடுகலந்ததேனெனவுன்சீர்ப்பாடுநாளெந்தநாளறியேன்
வேலொடுமயிலுங்கொண்டிடுஞ்சுடரைவிளைவித்தவித்தகவிளக்கே
காலொடுபூதமைந்துமாங்கலவைக்கடவுளேகருணையங்கடலே. (அ)

சற்றுநற்குணந்தான்சார்ந்திடாக்கொடியர்தந்தலைவாயிலுட்குறைக்கும்
வெற்றுநாய்தனக்கும்வேறுநாயர்கமெலிகின்றேனைம்புலச்சேட்டை
யற்றுநின்றவர்க்குமறியநின்றிருத்தாட்கடிமைசெய்தொழுகுவனேயோ
கற்றுமுற்றுணர்ந்தோர்க்கருளருங்கலவைக்கடவுளேகருணையங்கடலே.

உன்னையுன்னிநெக்குருகிநின்றேத்தவுள்ளமென்வசமுற்றதின்றேனும்
யென்னையாளுதலுன்கடனன்றேலிரக்கமென்பதுன்னிடத்திலையன்றோ
முன்னைவல்வினைமுடித்திடுஞ்சிவனேமூடனுமுருகேசனைக்காக்க
கன்னியோர்புடைகொண்டாண்டிடுகலவைக்கடவுளேகருணையங்கடலே.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்மலம்.

தேவாரப்பதிகம்.

கண்கண்மூன்றினார்கறைமணிமிடற்றார்கங்கைநாயகர்மங்கைபங்கு
டையார், பண்கணீடிய பாடலார்மன்றிற் பாதநீடியபங்கயப் பதத்தா,
ரொண்கண்மாதரார் நடம்பயிற்கலவையூரமர்ந்துவாழ்வுற்றவர்க்கேநாம்,
மண்கொண்மாலைபோம்வண்ணநற்றமிழ்ப்பூமாலைசூட்டுதும்வருதியென்
மனனே. (க)

கரியமாலன்றுகரியமாவாகிக்கலங்கநின்றபொற்கழல்புனைபதத்தார் [லா
பெரியவண்டங்கள்யாயையும்படைத்துப்பித்தனென்றுமப்பேர்தனையக
உரியசீர்கொளுங்கலவையூரமர்ந்தாரும்பர் நாயகர் தம்புயமணைய
வரியகன்றன்மலர்கொடுதெரிந்துமாலைசூட்டுதும்வருதியென்மனனே(உ)

திருவிநாயகன்கைப்படைபெருமான்றிருக்கண்சாத்திய திருமலர்ப்
பதத்தார்,கருவிநின்றயெம்போல்பவர்தம்மைகாத்தளிப்பதேகடனென
க்கொண்டால்,உருவிநின்றவரருவெனநின்றோர்வோங்குசீர்க்கலவையுற்
னவாக்கு, மருவிநின்றநன்மணங் கொளுமலர்பூமாலைசூட்டுதும் வருதி
றயென்மனனே. (ங)

கரும்பைநாகணைக்கடவுணன்முகன்வான்கடவுளாதியர்கலக்கங்கள் தவிர்ப்பான், துரும்பைநாட்டியோர்விஞ்சையன்போலத்தோன்றிநின்றவர் துரிசறுத்திட்டோன், தரும்பைம்பூம்பொழிற்கலவையூரிடத்துத்தலங்கொண்டாரவர்தமக்குநாமகிழ்ந்து, வரும்பைஞ்சீர்த்தமிழ்மாலையோடணிபூமாலைசூட்டுதும்வருதியென்மனனே. (௪)

வதனநான்குடைமலரவன்சிரத்தைவாங்கியோர்கையில்வைத்தநம்பெருநிதனநெஞ்சகர்க்கருடருங்கருணநிதியமாகியநின்மலப்பெருமான் [மான் சுதனமங்கையர்நடஞ்செயுங்கலவைதூயனுலவாதுணைத்திருத்தோட்குமதனவின்தமிழ்மாலையோடணிபூமாலைசூட்டுதும்வருதியென்மன்னே(௫)

கஞ்சனங்கொருவிஞ்சனமாகிக்காலிற்போந்துமுன்காணருமுடியா, ரஞ்சனங்கொளுநெடுங்கணுளெங்களம்பைகாணநின்றுடியபதத்தார், செஞ்சொல்மாதவர்புகழ்திருக்கலவைதேவர்காணவர்திருமுடிக்காட்டத்,மஞ்சனங்கொடுவருதுமென்மொழியைமறுதுநீயுடன்வருதியென்மனனே. ()

சூழுமாலயன்பெண்ணுருவெடுத்துத்தொழும்புசெய்திடத்தோன்றிநின்றவனை, போழும்வண்ணமேவடுக்கணுக்கருளும்பூதநாதர்நற்பூரணனந்தர், தாழுந்தன்மையோருயர்வுறச்செய்யும்தகைதிருக்கலவைதலத்தினவர்தாம், வாழுங்கோயிற்குத்திருவலகிடுவோமகிழ்வுகொண்டுடன்வருதியென்மனனே. (௭)

விதியுமாலுமுன்வேறுருவெடுத்துமேலுங்கீழுமாய்விரும்புறநின்றோர், நதியுங்கொன்றையுநாகமும்பிறையுநண்ணியோங்கியப்புண்ணியச்சடையார், பதியுநாமங்களனந்தமுற்றுடையார்பனைகொள்கலவையூர்பரமர்காணவர்தாம், வதியுங்கோயிற்குத்திருவிளக்கிடுவோம்வாழ்கநீயுடன்வருதியெனமன்னே. (௮)

குளங்கொள்கண்ணினர்குற்றமேசெயினுங்குணமென்றேயதைகொண்டருள்புரிவோர், உளங்கொளன்பர்தமுள்ளகத்திருப்போர்வோங்குகலவையூருற்றவப்புனிதர், களங்கொள்கண்டரென்றோளர்கங்காளர்கல்லைவில்லெனக்கண்டவரவர்தம், வளங்கொள்கோயிற்குத் திருமெழுக்கிடுவோம்வாழ்கநீயுடன்வருதியென்மன்னே. (௯)

பணிகொண்மார்பினர்பாகனமொழியாள்பாகர்காலனைப்பற்றியபததார், திணிகொள்வன்மதமலையுரிபோர்த்தார்தேவனுயகர்திங்களஞ்சடையார், அணிகொள்கலவையூரமர்ந்திடுமழகரருட்பெருங்கடலன்பருக்கெளியார், மணிகொள்கோயிற்குத்திருப்பணிசெய்வோம்வாழ்கநீயுடன்வருதியென்மனனே. (௧௦)

பசிக்குணவுமுன் றுன்பாததாமரையைப்பாடுதலொழிந்துநீர்த்துளிபோ
னசிக்குமிவ்வுடலை நம்பினேனென்னை நமன்றமர்வருத்திலென்செய்வேன்
விசிக்குநல்லரவக்கச்சினோய்நினதுமெய்யர்கணலமவையறியேன் [வே
வசிக்குநற்றவத்தோர்க்கருள்செய்வோங்கிவளம்பெறுகலவையூர்வாழ

கான்றசோறருந்துஞ்சுணங்கனிற்பலநாள்கண்டபின்சுகத்தையேவிரும்பு
ம், நான்றநெஞ்சகனேனமன்றமர்வருநாள்நாணுவதன்றியென்செய்வே
ன், சான்றவர்மதிக்குநின்றிருவருடான்சார்ந்திடிற்றருக்குவனையா
மான்றனிக்கரந்தெம்வள்ளலேயென்னைவாழ்விக்குங்கலவையூர்வாழ்வே.

மடிக்குறுநீர்மேலெழுத்தினுக்கிடவேமைவடித்தெடுக்குநர்போல
நொடிக்குளேமறையுமுடம்பினைவளர்க்கநொந்தனனொந்ததுமல்லால்
படிக்குளேமனத்தாற்பரிவுறுகின்றேன்பாவியேன்றனக்கருள்புரிவாய்
வடிக்குறுந்தமிழ்கொண்டன்பருக்கருளும்வள்ளலேகலவையூர்வாழ்வே.

எண்ணிலாநினைப்புற்றதின்வழியேயின்பதுன்பங்களெய்தியெ
னெஞ்சம், கண்ணிலாக்குரங்கெனவுழன்றதுகாண்கடையனேன்செயக்க
டவதொன்றறியேன், பெண்ணிலாவியபாகத்தெம்மமுதேபேதையாமுரு
கேசனைக்காப்பாய், வண்ணமாகியவான்மணிச்சுடரேவள்ளலேதிருக்கல
வையூர்வாழ்வே.

திருச்சிற்றம்பலம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தேவாறியான்மாலறியான்றிசைமாமுகத்தோன்றானறியான்
யாவரறிவார் திருக்கலவையப்பாவடியேன்யாதறிவேன்
மூவர்திருப்பாட்டினுக்கிசைத்தேமுதிர்தீம்பாலுமுக்கனியும்
காவலமுதுநறுந்தேனுங்கைப்பவினிக்குநின்புகழே. (க)

புகழேவிரும்பிப்புலனிழந்தேன்போற்றுன்பதத்தைப்போற்றுகிலே
னிகழேனெனைநான்கலவையப்பாவென்னைமதித்தேனிருண்மனத்தேன்
றிகழேழுலகிலெனைப்போலோர்சிறியனறியேன்றீவினையை
யகழேனெனினுமெனையாளாதகற்றலருளுக்கழகன்றே. (உ)

அன்றுமறியார்மாதவருமயனுமாலுநின்னிலையை
இன்றுமறியாரன்றியவரென்றுமறியாரென்னிலொரு
நன்றுமறியேனாயடியேனானெப்படிதானறிவேனோ
வொன்றுநெறியேதிருக்கலவையொப்பாரில்லாவுத்தமனே. (ங)

ஒப்பாரில்லாக்கலவையப்பாவுன்னைமறந்தேன்மாதர்கடம்
வெப்பார்குழியிற்கண்மூடிவிழுந்தேனெழுந்தும்விரைகின்றேன்
இப்பார்நடையிற்களித்தவரையீர்த்துக்கொடுபோய்செக்கிலிடு
விப்பார்நமன்றென்பதைநானினையாதறிவைவிடுத்தேனே. (ச)

விடுத்தேன்தவத்தோர்நெறிதன்னைவியந்தேனுலகவெந்நெறியே
மடுத்தேன்றுன்பவாரிதனைவஞ்சமனத்தார்மாட்டுறவை
அடுத்தேன்கலவையப்பாவுன்னடியைநினையேனலமந்தேன்
படுத்தேதமன்செக்கிடும்போதுபடிறேன்யாதுபடுவேனே. (ரு)

படுவேனல்லேனமன்றமறுற்பரிவேனல்லேன்பரமனினை
விடுவேனல்லேனென்னையுநீவிடுவாயில்லையினிச்சிறிதும்
கெடுவேனல்லேன்சிறியார்சொல்கேட்பேனல்லேன்றருமநெறி
யடுவேனல்லேன்திருக்கலவையப்பாவுன்றன்னருளுண்டே. (சு)

உண்டோவெனைப்போல்மதியிழந்தோரோங்குங்கலவையப்பாவுன்
திண்டோளிலங்குந்திருநீற்றைக்காணவிரும்பேன்சேர்ந்தேத்தே
னெண்டோளுடையாயென்றிரங்கேனிறையுந்திருப்பேனிவ்வறிவைக்
கொண்டேயுனைநான்கூடிவணின்குறிப்பேதோன்றுமறியேனே. (எ)

அறியேனுன்றன்புகழ்ப்பெருமையண்ணுகலவையப்பாநான்
சிறியேனெனினுநினையன்றித்தெளியேன்மற்றோர்தேவர்தமை
வெறியேன்பிழையைக்குறித்தெனைக்கைவிட்டாலென்செய்வேனடியேன்
நெறியேதருதல்நின்கடன்காணின்னைப்பணிதலென்கடனே. (அ)

கடனேயடியர்தமைக்காத்தலென்னுற்கடையேனடியனன்றோ
வுடனேர்பிணியுமொழித்திலையென்னுள்ளத்துயருந்தவிர்த்திலையே
விடனேர்கண்டத்தின்னமுதேவேதமுடியில்விளங்கொளியே
யடனேரிடையாய்திருக்கலவையப்பாவுன்னைநாடிலனே. (கூ)

நாடியலுத்தேனென்னளவோநம்பாமன்றுணண்குநட
மாடிமகிழுந்திருக்கலவையப்பாவுன்றனருட்புகழை
கோடியளவிலொருகூறுங்குணித்தாரின்றியாங்காங்கு
தேடியளந்துந்தெளிந்திலரோ திருமான்முதலாந்தேவர்களே. (கo)

உ

சிவமயம்.

திருப்பள்ளியெழுச்சி.

அருணனிந்திரன்றிசையணுகினன்மகரமவிர்ந்தனநின்றிருப்பெ
ருந்துறைபீடத், தருளொலிவீசிநின்றிலகுமுன்பதம்போலருக்கனுங்கு
ணதிசைப்பொருப்பெழுகின்றான், கருதருமலர்மகள்தினநடமாடுங்கல
வையம்பதியுறைகருணைமுக்கண்ணா, இருவினையொழித்தெமையாண்டரு
ள்புரியுமெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (க)

அழகுறுநான்மறைத்தாளவெண்பரிமேலவனியீடேறநீயெழுந்த
ருண்முறையோ, பொழிவுறுமரகதநிறமெழுபரிகள் பூட்டியதேர்மிசை
யெழுந்தனன்கதிரோன், கழைமதவேல்குடைகாம்பெனத்திகழும்கல
வையம்பதியுறைகருணை முக்கண்ணா, எழிலருளா லெமையாண்டருள்
புரியுமெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (உ)

சதிர்பெருமன்பர்களுளமெனமுளரிதடந்தொறுமலர்ந்தனசமனுளமெனவே, மதியொளிமழுங்கினவைணவருளம்போல்வானுடுமழுங்கினவசவநாயகன்போல், கதிரவனுதயநற்கிரிமிசையெழுந்தான் கலவையம்பதியுறைகருணைமுக்கண்ணா, இதமுறவெங்களை யாண்டருள்புரியுமெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௩)

அடியவர்வேண்டியயாவையுமளிக்கவையனும்பளளிவிட்டெழுந்தருள்சமயம், உடலளித்தருள்குவன்பூங்கணைக்குமாரவோடிநீவருகென மாங்குயிற்கரையும், கடிமலர்பொழில்தொறுங்கூவிளமிகவுங்கலவையம்பதியுறைகருணைமுக்கண்ணா, இடரொழித்தெங்களை யாண்டருள்புரியுமெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௪)

அன்றுகுத்திடுமுன்னெயிறுகள்யாவுமளித்தருள்புரிகுவன்களித்து நீவிரைவில், நன்றுறவருதியென்றெல்லினைநோக்கி நலமுறுமனைதொறுங்கூவினகோழி, கன்றினையாவினமழைத்துறுமுறைபோல்கலவையம்பதியுறைகருணைமுக்கண்ணா, இன்றுவந்தெங்களையாண்டருள்புரியுமெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௫)

அண்டகடாகப்பிர்மாண்டமுமதிரவாடகவரைகுலவரைகளுமதிர, பண்டுநின்னடிமிசைகண்மலர்புனைந்த பசுமுகிற்கரப்படையொளித்ததுன்னெதிரே, கண்டனமொழியரவிந்தையர்வதியுங்கலவையம்பதியுறைகருணைமுக்கண்ணா, எண்டிசைபுகழ வந்தெங்களையாண்டாயெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௬)

பனிமலையெனவுயர்முடிமிசைமதியம் பயிலுறுசிகரியின்வாயிலின்முன்னர், முனிவரர்கின்னரர்கருடகந்தருவர்முடியணிவிஞ்சையர்சித்தர்கள்வந்து, கனிவுடனைவகைவாத்தியந்தொனித்தார்கலவையம்பதியுறைகருணைமுக்கண்ணா, இனிமையொடெங்களையாண்டருள்புரியுமெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௭)

மாலயனிந்திரன்வானவரெரருபால்மாதவர்முனிகணநாதர்களொருபால், சீலநன்மறையுணர்ந்தணரொருபால்சிவமுறுநின்பழவடியவரொருபால்,காலையிலலர்மலர்சொரிந்தனர்பணிந்தார் கலவையம்பதியுறைகருணைமுக்கண்ணா, ஏலவந்தெங்களையாண்டருள்புரியு மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௮)

பகலவனொளிவிடுமகுடங்கள்கொணர்ந்தார்பருநவமணிதிகழாரங்கள்கொணர்ந்தார், நகுகதிராடகநூபுரங்கொணர்ந்தார் நசையுளம்விரும்பினதடையநிற்பணிந்தார், ககனமூடுறவளர்செந்நெலங்கழனிகலவையம்பதியுறைகருணைமுக்கண்ணா, இகபரசுகமளித்தெங்களையாண்டாயெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௯)

பகலவனொளிகண்டிருள்கெடுமதுபோற்பவக்கடல்நீக்கியுன்னருட்கடல்தந்து, அகரமாநகர்முருகேசவனுள்ளமன்புறமின்பமாயாட்கொளவருவாய், கனமூடுறவளர்ந்தோங்கிடுங்கன்னற்கலவையம்பதியுறைகருணைமுக்கண்ணா, இகலறுத்தெங்களையாண்டுகொண்டருளுமெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (கம)

உ

சிவமயம்.

அடைக்கலப்பதிகம்.

கருணைக்கடலேகற்பகமேகலவாபுரிவாழ்கண்ணுதலே
வருணைக்கடலைக்கடந்தேறிவந்துன்னருளிற்புகுவேனோ
கிரணப்பறைசூழ்தினகரனேகீழ்மேலறியாக்கிளரொளியே
அருணைப்பதிவாழாரமுதேவடியேனுந்தனடைக்கலமே. (க)

இன்பேபெருகுந்திருக்கலவையெந்தாய்நொந்தாதாவின்றித்
துன்பேதுணையாய்க்கொண்டுலகிற்சுழலாநிற்குந்துயரனைத்து
முன்பேயுரைத்தேன்நின்செவிக்கேமுற்றுதென்னோமுன்னின்று
அன்பேயஞ்சேலென்றருளாயடியேனுந்தனடைக்கலமே. (உ)

நறையார்பொழிற்சூழ்திருக்கலவைநாதாவேதாந்தத்தில்வளர்
இறைவாவண்டங்கடந்தொளிருமேகாம்பரமாமரநடுவே
உறவாய்விரித்தவருளணையிலுகந்தேவென்னைக்கலந்தருளாய்
அறிவானந்தவாரமுதேவடியேனுந்தனடைக்கலமே. (ங)

மன்றுடியசீர்த்திருக்கலவைவாழ்வேயெளியேன்றனையளித்த
வென்றுயன்றோநானுனக்கோரிளஞ்சேயன்றோநீவிடுத்தால்
இன்றூர்வளர்ப்பாரென்செய்வேனெந்தாயெந்தாயென்தாயே
அன்றுலிருந்தவாரமுதேவடியேனுந்தனடைக்கலமே. (ச)

செய்யாளுறையுந்திருக்கலவைதிருக்காரீசப்பேரொளியே
துய்யாகரணாதிகள்கடந்தேசொருபானந்தச்சுடர்காண்பான்
நெய்யாயுள்ளமுள்ளுறுகிநீநிற்குநிலைக்கேநசித்தேன்
அய்யாவெனையாண்டருளுதியோவடியேனுந்தனடைக்கலமே. (ரு)

செஞ்சேலுகளும்வயற்கலவைதிருக்காரீசப்பேரொளியே
மஞ்சேயனையகருங்கூந்தல்மடவார்வலைக்கேவசமாகி
நெஞ்சேயுழலாய்நிற்பேனைநின்றாள்வழுத்தநினைவுதந்து
அஞ்சேலெனவாண்டருளுதியோவடியேனுந்தனடைக்கலமே. (சு)

நாட்டிற்புகழ்சேர்திருக்கலவைஞானகரனேநாதாந்த
வீட்டிற்கழைத்தேவிருந்தாகவினையேன்றனகுன்னருளுமுதை
ஊட்டிச்சுகமாயெனைவளர்ப்பாயொன்றாய்ப்பலவாயுலகனைத்தும்
ஆட்டிப்புரக்குமருட்கடலேவடியேனுந்தனடைக்கலமே. (எ)

மீண்டேவாரவடியார்கள்விளங்குங்கலவாபுரிவாழ்வே
தூண்டாவிளக்கேயென்றனைநீ துரியாதீதத்துடன்கலந்தா
லேண்டாயாண்டாயவனையென்பாரிலையேயதனுலடியேனை
ஆண்டாயருளாயய்யாவேயடியேனுந்தனடைக்கலமே. (அ)

தழைத்தேவளர்க்கும்பொழிற்கலவைத்தலமேயமர்ந்ததற்பரனே
உழைத்தேன்வாளாவீணுக்கேயுண்டோபலனென்றதனுலே
யிழைத்தேனலனேயினியேனும்பிழைக்கும்வகைநீபேருளால்
அழைத்தேயெனையாண்டருளுதியோவடியேனுந்தனடைக்கலமே. (கூ)

கன்னல்வயல்சூழ்திருக்கலவைக்கருணுகரனேகண்ணுதலே
உன்னையல்லும்பகலுமாயுருகிநிற்குமெளியன்யான்
முன்னேயென்றன்குறையனைத்துமொழிந்தேனையாமுருகேசன்
அன்னைபோல்வந்தருள்பொழிவாயடியேனுந்தனடைக்கலமே (கo)

திருக்காரீசர்தோத்திரத்திரட்டு

முற்றிற்று.

உ.

திருச்சிற்றம்பலம்.

குருபாதந் துணை.

திருக்கைலாயபரம்பரைத்

திருவாவடுதுறைச்

சுப்பிரமணிய தேசிகர் மாலை.

இஃது,

திரிசிரபுரம்

மஹாவித்துவான்

மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

ஷி. ஆதீனத்து

அடியார்குழாத்துளொருவராகிய,

தமிழ்ப்புலமை

ஆறுமுகச் சுவாமிகளால்

பரிசோதித்து,

சென்னபட்டணம்.

ஊ. புஷ்பரதசெட்டியாரது

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

தாதுஷுபுரட்டாசிமீ.

உ

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

ஷ. ஆறுமுகச்சுவாமிகள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

யாமாலைநீங்கவருடுறைசையிற்சுப்பிரமணியவருட்கோமான்மேற்
பூமாலைவாடுறுநன்மணிமாலைபொள்ளலுறும்பொன்னுற்செய்த
மாமாலைதேய்வுறுமுத்தாமாலைவெள்ளையெனமதித்துநாறாற்
பாமாலைதொடுத்தணிந்தான்மீனாட்சிசுந்தரனும்பாவல்லோனே.

உ

திருச்சிற்றம்பலம்.

குருபாதந் துணை.

சுப்பிரமணிய தேசிகர்மாலை.

காப்பு.

பொன்மலர்தடித்துந்தனிதமுமுறுகார்ப்புயலிவர்தந்தையேபொருவ
வென்மலரொயிறுமுழக்சமும்வாய்ந்தவெறுழ்க்கருமூடிகமுகைத்துப்
பன்மலர்முடிமுன்னடிவாமைமலர்ந்துபயிலுமோரத்தியைத்துதிப்பாந்
தென்மலர்துறைசைச்சுப்பிரமணியதேசிகன்மாலைசீர்பெறவே.

நூல்.

பூமலிநினதாளுள்ளுபுதுதித்துப்போற்றிடும்வாஞ்சையேமதனுக்
காமலிமூன்றுமொருவழிப்படுவானாரருள்புரியுடலாதி
தாமலிதரக்கேளாதளித்தாய்க்குத்தகுவதோவருளெனக்கேட்ட
றாமலியறவர்சூழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (க)

எண்ணுதறுதித்தலியற்றவல்லாநீயெற்றைக்குநம்மடித்தொழும்பெ
பண்ணுகவென்றாய்மெய்ப்பணியென்றுபற்றினனிதுகொளற்பொருட்டோ
நண்ணுகூற்றுதைத்துங்கல்லெறியேற்றுநயந்துமுன்பழகியதைய
சுண்ணவொண்மாடஞ்சூழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. ()

எம்மையாள்பொருட்டுக்கையிலையுமமுமானிலகியதிருக்கைசார்வடிவுஞ்
செம்மைசால்பெயருநீத்துவேறடைந்தாய்திகழ்தருமுன்னுளமூன்று [ன்
தம்மைநோக்குறினின்றுள்ளமூன்றனுக்குந் தாழ்ந்தனவென்றுளந்தெளிந்தே
சும்மைநீர்த்தடங்கள்சூழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (ங)

கேவலஞ்சிவந்துவிதம்விசிட்டத்துக்கெழுமுமத்துவிதமோம்பாது
நாவலந்தருசுத்தங்கொளென்றருளநாடுகேவலத்தினின்றெடுத்து
மாவலம்படருஞ்சகலத்துவிடுத்தாய்வருவியாய்சுத்தமீதென்னே
தூவலகலைஞர்சூழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (ச)

இன்றுநீயடியார்தமக்கருடிறத்தாலெழும்புகழ்ப்படலமிக்கெழுந்தே
யன்றுநீபுனைந்தவம்பரங்கிழித்ததுகுறித்துணர்தரினின்று
நன்றுநீபித்தன்றுனெனல்விளக்குநாடுறின்மற்றதுமருளே
துன்றுவானவர்கள்சூழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (ரு)

மதிகதிரிரண்டுமுகவிழியவற்றுண்மதியமுள்ளுவப்பவோர்மலரைப்
பதிதரமுடியிற்கொண்டனைமற்றைப்பரிதியுமுவப்பவோர்மலரை
நிதிநிகரடியிற்கொளல்கடனளித்தேனீகொளெனிதயதாமரையைத்
துதிபெறுமுனிவர்சூழ்பெருந்துறைசச்சுப்பிரமணியதேசிகனே. (சு)

நிறைதகையழிந்தும்வெண்ணையேவாய்ந்து நெடியகட்குறுந்தொடியவர்பான்
முறைதிறம்புற்றுங்களங்கமிக்கமைந்துமுனிதகக்கோடியுமடைந்த
பிறைமதிமுடியிற்கொண்டநீயதுபோற்பிறங்குமென்மதியடிக்கொளினென்
றுறைதொறுமெகினம்பயில்பொழிற்றுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. ()

மருவிவேதண்டத்திருந்தநீயடியேன்வன்மனத்திருந்திடலரிதோ
பொருவிலவ்வரைமேனிசிசரனொருவன்போயறவூன்றியநின்ரு
ளொருவிவன்மலம்போயொழியமற்றதன்கணூன்றிடலரியதோசொல்லாய்
துருவிமான்முதலோர்சூழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (அ)

வளைதருபுறத்துக்கருகிருட்படலம்வயங்குநின்பார்வையாலன்றி
விளைதருமற்றொன்ருல்விலகுவதோவிராவகத்திருட்படலமுநி
னளைதருகருணைப்பார்வையாலன்றியகல்வதிலனமினுரோடு
துளைதருபெருநீர்த்துறைகள்சூழ்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (கூ)

கோலநின்செந்தாமரையடிவிட்டார்கூற்றுவனடிவிடாதவரோ
சீலநினங்கைச்செய்யதாமரைதஞ்சென்னிமேல்வைத்திடப்பெருதார்
சாலவுமொருதாமரைத்தவிசமர்வான்றன்கைவைத்திடுதல்பெற்றவரோ
சூலநின்றொளிருமாளிகைத்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (கo)

அத்தநின்றடந்தோட்செங்கமுநீரையவாவியவரிமதர்மழைக்கட்
புத்தமுதனையாடளவமுமசோகும்பொன்னிறம்பொலிதளிர்மாவு
நித்திலமுயிர்க்குஞ்சலசமும்பெற்ருணிலமும்பெறுகுவள்போலுந்
துத்தமொய்த்திசைக்குமளிப்பொழிற்றுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. ()

மன்னியநினதுநாமவைந்தெழுத்தைவயங்குநின்பாலுறப்பெற்று
மின்னியமனத்துச்சுமந்திடாரெல்லாம்விரிஞ்சனுர்நல்குபல்லெழுத்தை
முன்னியதுயரத்தொடுகருந்தலையின்முழுக்கவுஞ்சுமப்பவரன்ரு
துன்னியகழனிசூழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (சஉ)

பித்தவென்றிகழோம்பெண்கொடிமனைவாய்ப்பேயுறங்கிருட்பொழுதின்னே
யத்தசெல்லென்னேந்துதிபுரிந்திதயமாயவம்போருகத்திருத்தி
நித்தமுமுவப்போமடிகளுக்கெதன்கணிகழ்விருப்பருள்செயல்வேண்டுஞ்
சுத்தநற்றவத்தார்சூழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (சங)

மதிக்குமாரூரின்மறுகுவன்பூவின்மலிசருகிருளிடைமலர்ந்து
திதிக்குநின்பாதசெய்யதாமரைகடெண்டிரையுடுத்தவாரூரிற்
கதிக்குமெம்மனமாமறுகுவன்பூவிற்கவினுறமலர்தருமென்றே
துதிக்குமோர்கடமைபூண்டனந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (கச)

தவருடையலைவேளெய்வதுகுறியார்தழையுநின்செங்கழுநீர்வேட்
டிவருடையிழந்தாளென்பதுகுறியாரொம்மனைமார்கணேற்றிராவை
யவருடையறுத்தாரின்னமும்பசலையழகியமேனியிற்றீரா
டுவருடையிதழாளருள்புரிதுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (கரு)

ஐயநின்பொதுநாமத்தலாற்சிறப்பினமைந்தநாமத்தினுமெமக்கு
மெய்யநன்குறலாற்பொதுமையினன்றிமேவியசிறப்பினுமடிமை
யுய்யநன்குறலாமெனத்துணிந்திருந்தோமுதுநிறைவேறுமாறருள்வாய்
துய்யநற்புலவர்சூழ்பெருந்துறைசைசுப்பிரமணியதேசிகனே. (கசு)

கொலைகுறித்தெடுத்தல்செய்திடாமழுவிற்கொண்டதன்றுன்றிருமேனி
யலைபுரிந்தெம்மையடர்த்திடும்பந்தமடங்கலுமடர்த்திடற்கன்றோ
தலைமைமற்றதுகொண்டதுசெயாதிருக்குந்தன்மைசான்றவர்க்கழகாமோ
தொலைவில்பல்வளமுஞ்சூழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (கஎ)

கருவிகையிகப்பிற்போதமாம்போதங்கையிகப்பிற்றிருவருளா
மருவியவருள்கையிகப்பினின்பாமிம்மாண்புநின்னோக்கினாலன்றி
யொருவியமற்றையொன்றனாலாமோவுரைப்பவருரையெலாமாயுந்
துருவியபுகழோயருட்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (சஅ)

இருங்கடற்புவியினிடமறப்பரந்ததெழுந்துமேலிடத்தினும்பரந்த
தொருங்குநின்புகழ்மற்றின்னுமஃதவாவியுறமுயறன்மைதேர்ந்தன்றே
யருங்கலைவாதவூரர்முன்னினைப்பேராசைவாரியனெனப்புகன்றார்
சீருங்கைநீர்முழக்கமருவயற்றுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (கசூ)

மதிநதிமழுமான்முதலியமறைத்துமாரவேண்மேற்பகைமறையாய்
பொதியுமத்திறத்தாலுன்னையானகண்டபூரணசிவனெனத்தெளிந்தே
னதிர்கடலுலகிற்றெளிதரார்தாமுமறிதரப்புகலுவன்கண்டாய்
துதியொடுபுலவர்சூழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (உ0)

ஐயயான்வெளிப்பட்டிடினடங்குவைநீயடங்கில்யானீவெளிப்படுவை
வெய்யயானடங்கும்வகைபுரிந்தொருநீவெளிப்படாதிருப்பதென் னுரையாய்
வைய்யமேலுயர்தம்முதன்மையைமறந்துவாழ்நருமுளர்கொலோமதித்துத்
துய்யமாதவர்கள்சூழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (உக)

என்றுநாம்விரும்புஞ்செங்கழுநீரையிவள்விரும்பினளெனச்சினந்து
கன்றுமாமதியுங்கனன்றெழுமுழக்கங்கான்றெழுமுயிர்த்தவாரிதியுங் [வா
கொன்றுதீர்குவனென் றுடையவேள்சிலையிற் கோறெடுமடந்தையென்செய்
தென்றுநின்கருணைசெய்தருடுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௨௨)

யான்முதலென்றேயெழுவனெபபொழுதுமெய்தறியாமைநீயொருநான்
றான்முதலென்றேயெழுதலஃதன்றேசத்தியமென்பராய்ந்தமைந்தா [டுஞ்
ருன்முதலியவென்னெழிவினுக்கெதிர் பார்த்துறுதலென்னுரைத்திடல்வேண்
சுன்முதல்பணைத்தகழனிசூழ்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௨௩)

அடியவனீயென்றுவணநீயேயமைத்தவைபுகூஉவழக்காடி
நெடியவாரூரர்தம்மையாண்டாய்க்குநிகழுமோராவணமெழுதிக் [ன்
கொடியயாங்கொடுப்போமறுத்திடோமடிமை கொண்டுநன்றுடரத்தடையெ
றுடியமையிடையார்சூழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௨௪)

பாலைநேர்மொழியாள்வேண்டுவார்வேண்டும்படியருள்படியனீயென்று
மாலையேவேண்டமாலையேயளித்தாய்மாலையேநினக்குமீதைய
நூலையோரெவருமயக்கறுத்தாளுநோன்மையனென்பதுபொய்யோ
சோலைமேன்முகில்வந்துலாவருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௨௫)

அன்றுவண்கூடனகரின்மாபாவியாயினனொருவனையாண்டாய்
நன்றுமற்றதனாற்பெரும்புகழடைந்தாய்நாயினேன்றன்னையுமாண்டா
லின்றுமற்றதனாற்பெரும்புகழ்படுமேயிலாபமெண்ணார்களுமுளரோ
துன்றுமெய்த்தவத்தார்நிறைபெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. ()

உயரியவொழுக்கமெனும்பெருங்கரையுளுண்மையென்றுரைத்திடுமவலிற்
பெயர்வில்சேதனமென்றுரைத்திடுஞ்சேற்றிற்பெருகுறுமன்பெனும்புனலின்
மயர்வறத்தோன்றுநின்னடிக்கமலம்வகுத்தவையிலாதவென்னுள்ளத்
துயரறையகத்துந்தோன்றுமோதுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௨௭)

நாடுநின்னடிகடியானியாருவந்துநயத்தகவெடுத்தெடுத்துரையார்
நீடுமண்டோயப்பணிதராருலகினிகழ்தலிற்புள்விலங்காதி
கூடுமஃறிணையாய்நிகழ்வதேநன்றுகுறித்துரைநிந்தையின்மையினாற்
சூடுமெய்த்தவத்தர்சூழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௨௮)

வரைகெழுநினதுபுயத்தையானவாவமற்றையப்புயம்வடவரையைப்
புரைதபமு னங்குழைத்ததாமந்தப்பொருப்கைநினைந்ததற்கெதிராம்
விரைகெழுவரையினுதித்தமெல்வழியும்வெப்பமிக்குறவெனைவருத்துஞ்
சுரைநுகரளிபண்பாடுபில்பொழிற்றுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௨௯)

கலைபலபயின்றுதெளிந்தவர்வருந்திக்கற்றதற்குறுபயனாக
மலைவருநினையேபாதெல்சிறப்புமற்றுளபசுக்கண்மேற்பாட
லலைவருதீம்பாலட்டெடுத்திழிநாய்க்காங்கலங்கவிழ்ப்பதுபோலாந்
தொலைவில்பல்வளஞ்சாலற்புதத்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௩௦)

முற்றியகருணைநின்னையானவாவமுன்னமோர்மரங்குயிறன்னைப்
பற்றியபகையிற்றடிந்தனையாமப்பகைநினைந்தன்னைமார்ககொல்லாச்
செற்றியசிறையக்குயிலினமளியேன்செவிவெதுப்பேறமீக்கூவுஞ்
சொற்றியென்றருள்வாய்நன்றுசாறுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௩௧)

கருமலவிருட்டுள்யானெனதென்னக்கதித்தெழுமொருமதிதோன்ற
வொருவில்பல்கொடுமைப்பனிவிராயுடற்றவற்றதோனொன்னிடத்தினுமுன்
றிருவடிக்கமலமெங்ஙனமலருந்தேசிகோத்தமப்பெருமானே
சுருதியாயிரமுமுழக்கருத்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௩௨)

தெரிந்துனைவிழைந்தேன்மதன்மணக்கோலஞ்செய்யவந்தானிதுமுறையோ
புரிந்தபொன்மலராலாகியபாயல்பொங்கழறருமொருமலர்க்கு
விரிந்தவெந்தழன்முன்றந்தனையாம்பின்விரைந்தவைமாறுசெய்வனபார்
சொரிந்தவெண்டரளநிலாவருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௩௩)

மதியினைவருத்துநின்னடிக்கமலமாண்பையம்மதியினால்வருந்தும்
பொதியசெங்கமலமெண்ணியுள்ளுடைந்துபொலிவிரகுளசிலபொலிவான்
விதியினைச்சுமந்துமுறுமையின்விளர்ப்பவெள்ளியதாமரையென்பார்
துதிபயில்கவிஞர்கழகமார்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௩௪)

மறையவன்படைத்தன்மாயவன்புரத்தல்வாய்த்திடாவொருதிருவுருவ
மறைபெரும்புகழ்நீகொண்டகாரணத்தாலன்னநான்முகவிதிபடைத்த
னறைகெழுதுளவத்தாரினன்புரத்தனவில்பலவுருவம்யாமொழிந்தேந்
துறைகெழுபொன்னிவளப்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௩௫)

மேவியகிரியைஞானமென்றேத்தவிளங்குநின்றிருவடிக்கமலம்
பாவியசுவைப்பேரானந்தத்தேறல்பருகுபுதேக்குமிக்கெறிவான்
வாவியவடியேன்மனக்கருஞ்சுரும்பர்வந்துவீழ்நாளுமுண்டாமோ
தூவியந்தோகைபயில்பொழிற்றுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௩௬)

எனக்குனைக்கொடுத்துநினக்கெனைக்கோடலியல்பிஃதன்றியொப்பில்லா
நினக்கெனைக்கொடுத்தென்றனக்குனைக்கோடனீதியன்றேமுதனீயே
மனக்குவப்புறுத்தும்பலசுதந்திரனீமற்றஃதில்லவனடியேன்
சொனக்குலமதில்கோபுரம்பொலிதுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௩௭)

மருளகலடியார்சூட்டியகழுநீர்மாலைநின்சேவடிப்பொலித
லிருள்படுபொழுதினெழுமொருதொழுநனெழின்மிகமணத்தலாலங்குப்
பொருள்பெறுதானுமடுத்துறமணத்துப் பொலிந்துவாழ்ந்திருப்பதுபுரையுஞ்
சுருள்விரிகதலிப்பொங்கர்சூழ்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே (௩௮)

கறையடிவராகங்குரண்டமீன்மதியங்கரையிவைமுதற்பலமற்றை
நிறைவலிதபநீசெய்தனையவையினித்திலமனைத்துமப்பகையான்
முறைமையினுன்றோளவாவியவென்னைமுறுகுவெப்புறுத்திவாட்டுவபார்
துறைதொறுஞ்சங்கம்பயில்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே (௩௯)

அகத்திருளடியார்க்கொழிப்பவனீயென்றறைவரஃதுண்மையேயழகு
நகத்திகழ்நினதுதோளணிகழுநீர்நயந்தநானிப்புறத்திருளும்
புகத்தியங்கிடுவேனொழித்திடஎத்திறமென்புகலுதிபுண்ணியப்பொருளே
சுகத்தியன்முனிவர்சூழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௪௦)

மேயநீபுறத்துவெளிப்படுதிறத்தால்வெவ்வினைக்குழிசியாம்யாமும்
பாயநின்னடிக்கீழடங்கினம்புறத்தேபண்பினவ்வாறுமற்றகத்தே
நாயனீவெளிப்பட்டிடினதாட்கீழ்நாங்கணன்கடங்கிவாழ்ந்திடுவோந்
தூயமாதவருண்மணியெனுந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௪௧)

அடுத்தடியடைந்தார்தம்பசுபோதமடங்குறுவகையுபதேசித்
தெடுத்தநான்முகற்குங்கூற்றுவன்றனக்குமிடையறுத்தொழில்வளர்த்திடுவா
மடுத்தவாரியரோநோக்கினுலனைத்தும்வாங்கியாங்கசைவறவிருத்தித் [ர்
தொடுத்தபேரின்பமருத்திடுந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௪௨)

கற்றவர்நின்னையவாவினரெல்லாங்கழன்றவரென்பதுமெய்யே
யுற்றமற்றிவளுமுன்னலமவாவியுடைகலமுணவொடுதுறந்து
செற்றநாண்மடமைமுதலியதுறந்துசெவிலிதாயிகுளையராதிச்
சுற்றமுந்துறந்தாணன்றிதுதுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௪௩)

ஒளிகெழுமாற்றலுயர்கனகமும்பொனுற்றகாரிரும்பும்பொன்னதுபோற்
களிகெழுபசுபோதந்தபவடைந்தார்களைப்புரந்தினிதருள்புரியு
மளிகெழுநீயுங்குருவதுசிறிதுமாற்றறியார்களுங்குருவே
துளிகெழுமதுவத்துணர்ப்பொழிற்றுறைசைச்சுப்பிரமணியதேசிகனே (௪௪)

உற்றவர்பிறவிக்கடல்கடப்பதனுக்கொள்ளியுமரக்கலமாகிப்
பற்றமைதீரேர்தமருளெனப்பட்டுப்பரந்தநின்றிருவடியாய
பொற்றசெம்மணிக்குநாயினேன்மனமம்பொற்றகடாகுநாளுளதோ
சொற்றபல்வளத்தாற்பொலிபுகழ்த்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. ()

கலவுமொன்றெனுமாமலமிரண்டென்னகரைதருகருமமூன்றென்ன
நிலவுறுமாயையாயவிம்மூன்றுநிசழ்ச்சியற்றொழிதருபாக்குக்
குலவுநின்றிருவாய்வயின்வருகூற்றங்கூற்றமாய்க்கூடுநாளென்றோ
சுலவுநீருலகம்புகழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (சசு)

அடியவர்மலத்தையழித்திடுதிறத்தினும்பிரதாபமுமவர்க்குப்
படியில்பேரின்பமளிததிடுதிறத்திற்படுபெருங்கீர்த்தியுமெழுந்து
வடிவமாய்ச்சேந்துவிளர்த்துறும்பரிதிமதியெனவந்ததத்தியாசுந்
தொடியணிமடவார்டயில்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (சஎ)

திருவடியாயகமலத்திலொடுக்கஞ்சிவணுதன்முன்னமக்கமல
மருவடியெழுத்தில்லவற்றொடுங்குதலேமானுமென்றனையருளின்றேற்
பொருவடியந்தமிலாநினையென்றும்புகழ்ந்துபாடிடுவரமளித்தி
துருவடியவர்சூழ்தருபெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (சஅ)

கறைதபுகாட்சிச்சிவப்பிரகாசர்கருணையாலினிதுறவகுத்த
வறையகத்திருக்கைவிதித்தனரொனினுமடியரோமனத்தறையிருக்கை
நிறைபெரும்புகழோய்விலக்கினர்கொல்லோநீயிஃதொழிப்பதுதகுமோ
துறைதொருமடவாராட்டயர்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (சகூ)

கோலமார்பிடகரொற்றைக்குமருந்துகொண்டுறச்சுமப்பதுமூன்று
ஞாலமார்பிணியரவையறற்கன்றோநலமிகுபோதநீசுமத்தல்
சீலமார்பவர்மும்மலமறற்கன்றோசிறியனேன்விலக்குளேன்கொல்லோ
சூலமார்மணிமாளிகைப்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (ரு0)

இவள்விழிமழைநேர்குவளைநேரொன்பரிதுநிசமெவ்விதத்தென்னிற்
றிவளுருநின்னைவிழைந்திடையறுதுசெறியநீர்பொழிதலினுனுந்
தவழ்மதியுதிக்குமிரவுகண்படாததன்மையினுனுமென்றருள்வாய்
துவள்கொடிமுகில்கீண்டெழுமதிற்றுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. ()

நிலவுமுன்மாலைவிரும்பினள்தற்குநீயொருசேய்ஞலூர்மறையோ
ருலவுசீர்ப்புதல்வியல்லையென்றனன்முன்னுண்மையேயின்றுபல்லோருங்
கலவுறக்கொடுப்பதுண்டெனமொழிந்தாள்கருதிவண் முதுக்குறைவென்னே
சுலவுபூஞ்சோலைமுகிலளாந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (ருஉ)

பற்பலர்சூழப்பவனிநீவந்தாய்பார்த்திருகைமலர்குவித்தாள்
பொற்பவிர்மடந்தையதற்கணிவளைகள்பொருக்கெனக்கவர்ந்தனைமுன்னு
ளற்புறவிடுதல்செய்தனையிந்நாளமைதரக்கவருவையெனிலுன்
சொற்புகழ்நன்றாயிருந்ததுதுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (ருங)

வணங்கினர்வறுமைநோயொடுமலநோய்மாறிடவம்பொன்வட்டகையி
னிணங்கியசுவணநீறுநன்களிப்பாயெடுத்திடக்குறைபடாமையினாற்
குணங்கெழுபதுமநிதியெனவதனைக்குறித்தனங்குரவர்களேறே
சுணங்கிளமுலையார்பயில்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௩௪)

கூடிநின்றிருமுற்பணிந்துவீழ்போதேகூடியகருமலம்வீழு
நாடியங்கெழுபோதருள்விராயெழுநீநல்குநீற்றாலுடல்விளர்ப்ப
நீடியவிளர்த்தவுடம்புமற்றொன்றாநிலத்திதுசிலரெண்ணுதென்னே
சூடியபுகழாற்பொலிபெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௩௫)

மலம்வியாபகமோவியாப்பியங்கொல்லோமருவியவெனக்கெனவிரண்டு
மலவதுவியாத்திநீக்கநீங்கிடுமென்றருளுநின்வாய்மொழியவ்வா
றிலகுவானீக்கமியற்றிடாதென்னேயிசைத்தசொன்முடிப்பவர்வேறோ
சுலவுதீர்மனத்தர்தொகுபெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௩௬)

கருதுறுகருமகாண்டமுஞானகாண்டமுமிருபதமாக
மருவுபநிடதமேற்பரப்பாகவண்குமிழோரொழுத்தாகப்
பொருவறப்பொலிமுற்பாதுகையெனவிப்போததுபோற்றவெற்கருள்வாய்
சுருதியானெடுமால்சூழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௩௭)

தேடியமாலார்க்கரியைமுன்னாளுஞ்சிறந்தவிந்நாளுமத்தகையை
வாடியமடவார்வளையுடைகவர்ந்தாய்மாதர்பாலின்றுமத்தகையை
கூடியவளைமுன்னிட்டநீயின்றுகுவிகரம்பிடித்திடாவகையென்
சூடியமாலையெனுமருடுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௩௮)

கருவிழிச்செவ்வாயென்மகள்வருத்தங்காண்பதுநினக்கழகாமோ
பொருவில்சங்கரனேநீயெனவான்றோர்புகன்றிடுமாற்றமும்பொய்யோ
மருவுசெங்குவளைமதன்கருங்குவளைமறிதரச்செயுமெதிரன்றோ
சுருதியாயிரமுமுழக்கறாத்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௩௯)

மன்னுநின்காவிக்கொடிமிசையெழுந்துவானசத்தாடுதலமரீர்
மின்னுநுண்மருங்குலரம்பையர்போகம்வெறுத்தெனையுடையவனுமம்
பன்னுறவம்மினெனவிளித்திடுமெப்பண்புதேர்தரினருளாமே
துன்னுபல்கழனிவளமலிதுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௪௦)

ஆன்றநின்கருணையென்னெனவுரைக்கேனையநின்பணிக்கமைநாற்கால்
சான்றபல்பிசுவுநின்பொதுநாமந்தம்முடற்பொறித்திடப்படுவ
வேன்றவிவ்விருகாற்பசுவெனுமெங்கட்கியைந்திலவவைசெய்புண்ணியமென்
றோன்றவெவ்விடத்துங்கழகமார்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௪௧)

கற்பகமாலைபுனைபவர்நறியகமலமாலிகைபுனைபவர்பா
செற்படுந்துளவமாலிகைபுனைவாரிவரொலாநின்றிருவடிச்சூட்
டற்புதமாலைபுனையுமெங்களைநேராவரோவடர்மலமொழிந்து
சொற்புனைநின்னைக்கலத்தலாற்றுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௬௨)

மந்தணமாகவோதிமமேயென்மயலெலாந்திருச்செவிக்கேற்றிச்
சந்தமென்கழுநீர்வாங்கிவாவென்றுடனிமுடிமுன்புனராது
நொந்தயான்செவிப்பாலடைந்திடுமாறுநோற்றிலேனென்றதுமறுப்பச்
சுந்தரமடவாளயர்ந்தனடுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௬௩)

மான்மிகுமென்னைவந்துநீபுணர்தல்வழக்கொலாதென்றியேல்விரைத்த
தேன்மிகுகழுநீரருள்செயல்வேண்டுந்திருந்துருததுவுமென்றிடின்முன் [ன்
பான்மிகுதிருப்பூவணத்தொருமான்கைப் படாநகக்குறிகொண்டதுரைப்பே
சுன்மிகுசங்கம்புலம்புநீர்த்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௬௪)

ஒன்றியநினதுகுடைமதிமதவேளுடற்றுவானடைந்தஞான்றவன்பா
லள்ளியகவிகையென்னலாங்காமமாற்றுவதில்லையேயென்னி
னள்ளியவுயிர்கட்கினத்தியல்பானேநாஞ்மாமறிவெனல்பொய்யோ
துள்ளியகயன்மீப்பாய்வயற்றுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௬௫)

வெள்ளிமால்வரையோ முலைவரையொருநெல் வேலிவேயோதொடித்தோள்
யொள்ளியபிறையோநுதற்பிறைகண்ணுறுமதியோமுகமதிய [வே
ளள்ளியநீலிவனக்கதலியோவென்னகுதுடைக்கதலியென்செய்வேன்
றுள்ளியவரான்மீதெழுபுனற்றுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௬௬)

உள்ளுமெய்யடியார்சூட்டுமென்பூவுள்ளுன்னடிக்கேற்றியநீலம்
விள்ளுபன்மலரோவுடையவன்வயமாய்வெங்கொலைபுரிந்த தன்றிமை
தள்ளுதல்குறித்துவிரும்பிநின்னடியாஞ்சார்புபெற்றமர்வதுமானுந்
துள்ளியகயல்விண்கிழிக்குநீர்த்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௬௭)

காதன்மெய்யடியார்நின்னெதிர்நின்றுகவின்றதீபங்கொடுவளைத்தன்
மேதகுபரிதிமண்டிலமானும்விளங்கதனடுவணீபொலித
வோதருமனையமண்டிலநடுமுன்னுறைதருதன்மையேகாட்டுஞ்
சூதமுற்றருக்கடுறுபொழிற்றுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௬௮)

விட்டதுயாரைமுன்னர்வாசனைதான்வெண்பொனுலியன்றப்பாதுகையே
நட்டதுன்மலர்த்தாளதுகுறித்திடுங்கானகுகதிர்வெள்ளியங்கிரிமேற்
பட்டதுபயின்றபழக்கமதன்றோபசுவருக்கைச்சுளைகடுவன்
றொட்டதுமந்திக்கீபொழிற்றுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௬௯)

நின்னிருமருங்கினடியர்போற்றிடுங்கானெடியவொண்சாமரைபனித்தன்
மன்னிருவகையஞானமுமெழுந்துவயங்கலுமனையவையுயிர்த்த
மின்னிருவகையபுகழுமாங்கெழுந்துமேவுறத்துள்ளலும்பொருவுந்
துன்னிருப்பயனோடின்பருடுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௭0)

பிறையுருவென்னத்தலைவனைதண்டம்பிறங்கிநின்றிருமுனற்பொலித
லறைதருகிரியாகுருக்களென்றுரைக்குமானைகட்கங்குசமென்கோ
வுறைதருவெள்ளிபொன்னெனுமீன்களுரந்தபுதுண்டிலென்றுரைக்கோ
துறைபலகெழுமுபொன்னிசூழ்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௭௧)

அந்தநாணின்னைப்புகழ்ந்துபாடினருக்களித்தருளியானமாதிகளை
யிந்தநாணியேகொண்டனையவையாலிவர்களுக்கென்பயனென்று
சந்தமார்திருத்தாண்மலர்நிழன்மட்டேதரல்குறித்தனையதுபோதுஞ்
சுந்தரக்கனகமதில்வளைதுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௭௨)

வெள்ளியங்கைலையமர்ந்தநாள்வெய்யவிடமெடுத்தயின்றனையிங்கு
வள்ளியவருளினமருநாளதுபோல்வலிவிளக்குவதெவன்செய்தா
யுள்ளியவடியேனறிவெடுத்தயின்றுலொத்ததென்றியாவரும்புகழ்வார்
துள்ளியகயல்சாலிலஞ்சிசூழ்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௭௩)

பொறையெனுங்குலையுளன்பெனுநிறைந்தபுனல்படுமெய்யடியவர்த
நிறைமனமெனுநற்றடத்துறமலருநின்னடித்தாமரைமலரிற்
சிறைபடுமடியேனறிவெனும்வண்டுசேர்ந்துவாழ்ந்தமருநாளுளதோ
துறையுணர்புலவர்புகழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௭௪)

வஞ்சனேன்மலநின்றுட்கெதிர்நமனோவாய்ந்தகைக்கெதிர்விதிதலையோ
மஞ்சவாங்களத்திற்கெதிர்கொடுவிடமோமறைந்தகட்கெதிர்சிலைமதனோ
வெஞ்சுருநெடியசடைக்கெதிர்புனலோவினியவாய்நகைக்கெதிர்புரமோ
துஞ்சன்மேவுதற்குநவில்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௭௫)

மதித்திடுமுனையான்கண்டநாண்முதலாமாரவேள்கணைக்கிலக்காகிப்
பதித்திடுமயற்சேற்றுழ்தனன்றுமோபரிந்தருள்செய்திலாயென்னில்
விதித்திடுகனவில்வந்தெனைப்புணர்தல்வெளிப்படயாவர்க்குமுரைப்பேன்
றுதித்திடுவளஞ்சான்மாளிகைத்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௭௬)

அறைதருசருணையாழிரீயெனவாங்காறுகால்செல்லுமேயென்று
சிறையளிதுதுசேறியென்றியம்பிச்செறிந்தவெண்காற்புள்ளாகின்னம்மு
னிறையவனவன்பாற்குறைந்தகாலுடையேனேகிலேனெனத்தளர்தருவா
டுறைபலகெழுமுமாவிரித்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (௭௭)

மதித்திடுவளஞ்சான்மதுரையினெல்லாம்வல்லசித்தெனப்பொலிந்தனைமு
னுதித்திடுமடியேன்மனங்குழைவித்தாலுரைசெயுமதுபுதுக்கியதாங்
கதித்திடுமன்னுளுஞற்றியதென்னிற்காலவேற்றுமையுனக்குண்டோ
துதித்திடுமுனிவர்நிறைபெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (எஅ)

முத்தவெண்ணகையார்முயக்கமேபொருளாமுன்னுவார்குழாத்தொடுங்கலந்
சித்தமாழாந்தாயென்றெனைப்பேசிச்சிரிப்பையேன்முன்னமாரூரி [து
னத்தநேர்குழலாண்மனைவயிற்றூதுநடந்ததையுரைத்துனைச்சிரிப்பேன்
சுத்தமாதவத்தர்நிறைபெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (எகூ)

தரையுறமெழுகியொருபொழுதுண்டதவத்தினுல்யான்பெறுமகட்கு
விரைநறுமாலைதருதியின்றென்னின்மேவருதீக்கையாவதுசெய்
புரைதபவுடலாதியவொருமூன்றும்பொலியுமுன்வயத்தவாமன்றே
சுரையடிக்கமலமலர்புனற்றுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (அ0)

இழித்தவுனருந்தலோப்புகென்றெங்கட்கியம்பிமுன்னுளொருகிராதர்
கழித்தவுனுகர்ந்தாய்விதிவிலக்கொழிந்தாய்கடையனேற்கின்னருள்புரிந்தாற்
சுழித்தநீருலகிலென்செய்தாயென்றோர்தோடநிற்குரைப்பவருளரோ
தொழித்தளிமுரலுமலர்ப்பொழிற்றுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (அக)

கலைபலவையந்திரிபறியாமைகழிதரவுணர்ந்துளாரெனினு
மலைவினின்செவ்வாய்மொழியன்றிமுத்திவாய்ப்பரோபலபொறியிருந்து
மலைகடற்புடவியிடைப்படுபொருள்கண்ணன்றிநோக்கிடுநருமுளரோ
துலைநிகர்நடுவோர்நிறைபெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (அஉ)

ஆற்றிடுதொழிலுங்கொண்டிடுமுகமுமைந்துமுன்னொருமுகந்தரித்துக்
காற்றிடுமலமைந்திப்பொழுதென்னிற்கவினுமிம்முகப்புகழ்பெரிதா
லூற்றிடுகருணையுவட்டெழவடியாருள்ளத்துள்ளுறைகுருமணியே
தோற்றிடுமதியந்தவழ்மதிற்றுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (அங)

ஆன்றநின்பவனிகண்டநாண்முதலாவரியநின்றோளலர்வேட்டுக்
கான்றவுருள்ளார்வாயலர்மதவேள்கையலர்நிரம்புறவேற்று
மான்றநெஞ்சின்னளாய்க்கண்ணலர்பொழிவாள் வயங்குநின்னுளத்தலர்கருணை
தோன்றவென்றடைவாள்சொற்றிவான்றுறைசைச் சுப்பிரமணியதேசிகனே.

வடவரைதோட்டிவாசுகிபூட்டிவனத்துழாய்க்கோலொன்றுகூட்டித்
தடமதில்வீட்டிப்பெருவிறல்காட்டித்தயங்குநீயொருமலர்தொடுக்க [பேன்
வுடன்முனிந்தனைபன்மலர்தொடுத்தவ் வேளுடற்றுபோரெங்ஙனம் பொறுப்
சுடர்விடுகொடிமாளிகைப்பெருந்துறைசைச்சுப்பிரமணிய தேசிகனே. (அரு)

வல்லிநின்னடியென்றலைமிசையேற்றின்மலரவன்கைவளைந்திடவவ்
வெல்லைதீர்தலினுன்மலர்க்கைமற்றனையானிருந்தலையொன்றுவென்றதுமு[ன்
னெல்லைமென்மலர்த்தாளன்னவனெண்கையொருங்குவென்றஃதிதன்புகழெ
ரெல்லைநற்றவத்தார்நிறைபெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (அசு)

புன்மையெந்தலைமேனினதுகைக்கமலம்பொலிதரக்குவிந்துமேவிடுமோர்
நன்மைசார்தலின்மற்றயன்கரகமலநாடொறுமலர்ந்துநீங்கிடுமத்
தன்மைதேராதமடவரப்பிரமன்றன்ரெழில்வளர்ப்பவரன்ரே
தொன்மைமாதவத்தார்நிறைபெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. ()

பராரையாலமர்ந்தான்முன்னமிப்பொழுதுபராவரசமருவான்விழையிற்
றராதலமுவவாதென்னவுங்கோடலைவன்மற்றவனலாதிலையென்
றராவகலல்குலன்னமென்னடையாளயருவாண்முதுக்குறைந்தனள்காண்
சுராதிபர்விரும்பிச்சூழ்ந்தருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (அஅ)

வெய்யவாபாசமார்க்கமத்தனையும்வீட்டிநின்றிருவடியடைந்தே
னையவெங்காலன்வீசுபாசத்தோடைவகைப்பாசமுங்கழல
வுய்யவாழ்நினதுமுகத்துநம்பாசமொளிர்தரப்புரிந்தனையுய்ந்தேன்
றுய்யமாதவர்கள்சூழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (அகூ)

புல்லியவோரூரோனுமில்லென்றுபுகன்றுமற்றதற்குமாருக
நல்லியல்வெண்ணெய்நகுபுகழ்த்துறையூர்நலமலிகடந்தைகொற்றவனூர்
வில்லியறிருவாவடுதுறைபுரப்பாய்வெறுத்தமூன்றூர்மகிழ்தரவோ
சொல்லியவவற்ரொன்ருகியதுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (கூ0)

உன்னிடைக்களங்கமுறுதலினுருமென்றுரைத்தியேன்முன்னையம்மதியந்
தன்னிடையமர்ந்தாய்களங்கமங்கிலையோசாற்றெனிலியாதுசாற்றிடுவா
யென்னிடையதுநேரொன்றமர்வாயேலெய்தரும்புகழ்நினக்குண்டாந்
துன்னிடைமடவார்சூழ்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (கூக)

கரிகுழைத்தெழுதிப்புனைதரப்பெற்றகண்கணின்றிருவுருக்கண்டு
வரிவளைக்குலத்தைக்கையினின்ரெழிக்கமலர்க்கரநன்றுகொல்லென்னப்
புரியுமக்கயற்கண்முத்துகப்பொருதுபொம்மல்வெம்முலைமுத்தங்கருகுஞ்
சுரிகுழற்கருள்வதென்றுவான்றுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (கூஉ)

பாயவெப்பகலாநின்னுடையுளத்திற்பதிதரவமர்தரோமென்னின்
மேயமுற்பரிதிமண்டலத்தமர்ந்தவித்தகன்யாரெனக்கேட்ப
னுயவிவ்வினுவிற்கெவ்விடைகொடுப்பாயத்தகுதோல்விநிற்காரோ
சோயமென்கழனிவளப்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (கூங)

வேண்டமுன்கண்டத்தட்கியவிடத்தைவெளிவிடுத்தெனவிருணிமிரு
மாண்டசெஞ்சடைநீர்கொதிப்பொடுவெளியேவந்தெனப்பானிலாவிரியும்
பூண்டவெம்பணியினுயிர்ப்பெனவிளங்கால்போதருமெங்ஙனம்பொறுப்பா
ரேண்டநின்றவிராவிளக்கனுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (கச)

ஆன்றநீமிசைந்தபரிகலச்சேடமன்புமிக்கேற்றமாதவருக்
கேன்றவெம்பசிநோய்மருந்துகொலுடலினெய்தியநோய்தெறுமருந்தோ
சான்றமும்மலநோய்தவிர்த்திடுமருந்தோதவாவதன்பெருமையாதுரைக்கேன்
றோன்றமெய்ஞ்ஞானம்பயில்பெருந்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. ()

கையினுந்தவிர்த்தாய்நுதலினுந்தவிர்த்தாய்கடுந்தழலனையதுகுறித்து
நையினுநைகநினையெதிர்ப்பட்டநங்கைமார்காலியங்குறுவான்
செய்யினுநன்றுகாலியங்குறுவான்செய்தனரன்னதைநன்றோ
துய்யினுங்கூர்த்தமதியர்சூழ்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (கசு)

மிடைசடைமறைத்துநீயெழுந்தருளிமேவினையாயினுநினக்குப்
புடையுறமலர்க்கைகொடுப்பவரினையன்பொற்சடையுடையன்முன்னென்று
தடையறவெவருமறிதருபாக்குதாஞ்சுமந்துணர்த்திடத்தெளிந்தேன்
றொடைமதுப்பிலிற்றுங்காவணத்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (கஎ)

வழிவழியடியர்க்கணுத்துணைப்போதம்வயங்குமேற்பொறுமையுமனையார்
கழியவின்படையுமவாவுமற்றனையார்கருமலமேலடுமுனிவு
மொழிநமபிரமவெனுமினுமொழியுமுடையையானீயுமீதறனே
சுழியலையெறியும்பொன்னிசூழ்துறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (கஅ)

கற்றவருவக்குங்கல்வியில்யானுங்கடலகத்தங்கணப்புனல்சார்ந்
துற்றதேற்றிருத்தமாவதுகடுப்பவுன்பெரும்புகழ்விரவுதலாற்
குற்றமின்றாகிச்செய்யுளாமென்றேகுணமில்புன்சொற்கொடுதுதிகள்
சொற்றனனுவந்துகோடிவான்றுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (கக)

மன்னியகருணைப்பெருஞ்சயிலாதிமரபுபல்லூழியும்வாழ்க
வின்னியமுகிலின்முழங்கவெக்காலுமிலங்குநின்சந்நிதிவாழ்க
பன்னியநினதுநாமவைந்தெழுத்தும்பல்லிடந்தொறும்புகூஉவாழ்க
துன்னியநின்சீர்வாழ்கவான்றுறைசைச்சுப்பிரமணியதேசிகனே. (க00)

சுப்பிரமணிய தேசிகர்மாலை

முற்றும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அசாம்பிரதாய நிரசன நிர்த்தூளி.

இஃது,

மஹாகனம்பொருந்திய,

விரிஞ்சபுரம்,

நீலகண்டசாஸ்திரியாரவர்கள்,

தருமபுரம்,

சைவத்தம்பிரான்சுவாமிகள்,

தென்னாட்டு,

இராமலிங்க ஓதுவான் மூர்த்திகளின் உதவியால்,

சைவசாம்பிரதாயங்களைத்தழுவிப்பேசுவல்ல,

புராணீகர்

பொன்னேரி - சுந்தரம்பிள்ளையவர்களால்,

இயற்றப்பட்டு,

சென்னை:

கோமளீச்சுரன்பேட்டை - சாமிசெட்டிவீதியில்,

திருத்தொண்டர்சபைத்தலைவர்களாகிய,

சீ. வெங்கடாசலமுதலியார், கோ. நே. கன்னியப்பஆசாரியார்

கோ. உருத்திரப்பஆசாரியார் - ஆகிய இவர்களால்,

சென்னை மவுண்டுரோட்டு,

கார்டியன் முத்திராக்ஷரசாலையென்னும் அச்சுக்கூடத்திற்,

பதிப்பிக்கப்பட்டன.

பவஸ்ரு கார்த்திகைமீ.

இதன் விலை - அணா - உ.

Madras:

PRINTED AT THE GUARDIAN PRESS,

NO. 4, MOUNT ROAD.

1874.

P.A.C.M.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சற்குருவேநமஃ.

அசாம்பிரதாய நிரசன நிர்த்தூளி சரித்திரச்சுருக்கம்.

தென்னாடுகள் - பலவற்றினுஞ் சிறந்து விளங்குகின்ற சோழமண்டலத்திலேயுள்ள - திருப்பூம்புகலூரில் - வர்த்தமானீச்சுரம் என்னுமாலயத்துள் - ஓர்புறத்தில் சிவலிங்கப்பெருமான் - சிங்கமுகங்கொண்டிருக்கிற வுண்மைவரலாறு.

அசாம்பிரதாய நிரசனநிர்த்தூளிஎன்னும் இன்னூலுக்கு இங்ஙனம்பொருளுரைக்கின்றனன் - அதாவது சாம்பிரதாயத்தைப்போக்க - அசாம்பிரதாயநிரசனம் என்னும் ஓர் சிறுநூல் வெளிகண்டதனால், அதையுருக்காணுமல் - அதமாக்கும் பொருட்டு நிர்த்தூளியென்னும்பொருளை ஒற்றுமையாகக் கொண்டதாகும்.

சற்சாம்பிரதாயப்படி குருவினிடம் ஆதீனவித்துவான்களினிடங் கேட்டுணர்ந்தவுண்மையினாலும், அப்பர்சுவாமிகளை சிவபெருமான் சிங்கமுகங்கொண்டு ஐக்கிய மாக்கினர்என்று பொருளுரைத்தனன். அதற்குமாறாக - ஒரு அசாம்பிரதாயர் பிரமாணமில்லாமல் மறுத்ததனால், பின்னும் - விசாரணையில் சிவபெருமான் சிங்கமுகங்கொண்டு அப்பர்சுவாமிகளை ஐக்கியமாக்கியது - சத்தியம், சத்தியம்என்று பொருளுரைத்தபுண்ணியரை - இதனடியிற்காண்க.

வினா.—மதுரை ஆதீனந்திருஞானசம்பந்தசுவாமிகள் திருமடத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற சைவபண்டார சந்நிதியாகிய மகாமூர்த்திகளது திருமுகவோலக்கத்தில் தேவாரங்களைப்பண்ணுடன் ஓதிக்கொண்டு சந்நிதியில் நடக்கப்பட்ட பெரியபுராண சரித்திரங்களை சாம்பிரதாயத்துடன் கேட்டுத் தெளிந்து - வாழ்ந்திருந்ததுமல்லாமல், திருவாவடுதுறை தருமபுரவாதீனங்களிலும்போய்ப்பழகி - திருமணநல்லூர், திருப்பூம்புகலூர், முதலிய ஸ்தலயாத்திரைகள்செய்து, அந்த அந்த க்ஷேத்திரவிசேஷங்களைக்கண்டும், கேட்டும், இப்போது சென்னையில் - இருபதுவருடகாலமாய் வாசஞ்செய்யுங்காலத்து சில ஆண்டிற்குமுன் வித்துவான் காஞ்சீபுரம். சபாபதிமுதலியாரவர்கள் திருவாரூர் - சைவத் தியாகராசபண்டார மூர்த்திகளிடத்திற் பெரியபுராணந் திருவாசகம், பாடங்கேட்டபடி சென்னையில் - திருவண்ணுமலைமடாலயத்தில் - பெரியபுராணஞ்சொன்னகாலத்தில் அச்சபையில் தேவாரங்களைப் பண்ணுடன் ஓதிநின்றவரும், அகத்தியமகாமுனிவர் திரட்டியருளிய - தேவாரத்திரட்டை பண்களின்படிபாசுரங்களின்தளைகள் பிரிக்கப்பட்டவருமாகிய - தென்னாட்டுப்பூரணச்சைவர் - இராமலிங்கவோதுவான்மூர்த்தியவர்களை யான் ஒருகால்கண்டு வார்த்தையாடுங்காலத்து சிங்கமுகவிபரங்கேட்க.

விடை.—அவ்வோதுவார் "சிங்கமேயுன்னடிக்கே போதுகின்றேன் றிருப்புகலூர்மேவிய தேவதேவே" என்னுந்தேவாரத்தில் - சிங்கமேஎன்றதற்குப்பொருள் - சிங்கமுகங்கொண்ட கடவுளேஎன்றும், இதுவே ஸ்தலபுராண சாம்பிரதாய ஐதீகமென்று முரைத்தனர். அதுநிற்க, திருப்பூம்புகலூரில் அப்பர்சுவாமிகள் திருநக்ஷத்திரமாகிய சித்திரைச்சதையத்தில் இப்போதும் அவ்வாலயத்துள் நடந்துவருகின்ற ஐதீகமாவது நமது அப்பர்சுவாமிகளை எழுந்தருளப்பண்ணி பதிகமோதி நின்றவுடன் - அவரை - மூலஸ்தானத்தில் எழுந்தருளச் செய்யுங்கால் - சிங்கமுக ஐதீக ஐக்கியத்தையொட்டித் தீப்பந்தங்களை ஒவ்வொன்றாகக் குறைத்துக்கொண்டே ஒன்றுடன்

போய் அவ்வொன்றும்இல்லாமல் திருக்காப்பிட்டு வெளிப்படு கின்றார்கள். அதாவது, அப்பர்சுவாமிகள் சிங்கமுகத்தில் ஐக்கியமானார்என்பது. இன்னும், 'ஆதீனத்தார்களும் வழங்கி வருகின்றார்கள் - என்றனர்.

வினா.—சென்னைக் கோமளீச்சுரன்பேட்டையில் - திருத்தொண்டர்சபையில்— "சிங்கமேயுன்னடிக்கே போதுகின்றேன்" என்பதற்குப்பொருள் - பெரியோர்களாலும், ஆதீன வித்துவான்களாலுஞ், சிவரகசியங்களையறிந்த மகானுபவர்களாலுஞ் சொல்லக்கேட்டபடி தங்கள் அபிப்பிராயம் ஒத்ததுபோலவே யானுரைக்க அதுகேட்ட சில பாலியச்சிறுவர்கள், இச்சென்னையில் - தம்மனம்போனபடி பொருளுரைக்கின்றனர் என்றுவினவ.

விடை.—மேற்கண்ட ஓதுவான்மூர்த்திகள் நகைத்துச் சொன்னதாவது; இச்சென்னையில் தியாகராசகவிராசர் சைவ புராணங்களில் கிஞ்சித்துப்பழக்கமுடையவர் - அவரைச்சில வாண்டிற்குமுன் ஒருவர் "அகத்தியத்திரட்டென்று வழங்குவது என்னென்றுகேட்க" அதற்கு அவர் பொருளுரைத்தது.

அகத்தியந்திரட்டி சம்பந்தர்தகப்பனுருக்குக் கொடுத்ததனால் அகத்தியத்திரட்டென ஆயிற்றென்று, பொருள் செய்தபின் அறிஞர்அச்சில்வெளியிட்டபிறகு, அகத்தியராற்றிரட்டப்பட்டது அகத்தியத்திரட்டென்று பொருளறிந்து சொல்ல வல்லவராயினர். சென்னையில் சில வித்துவான்கள் ஆழ்ந்த கருத்து உடையவர்களாகியுங், கருத்தறிந்து பொருளுரைக்க வல்லவர்களாகியும், இருக்கின்றனர். அநேகர் மேற்கண்டபடி விபரீதப்பொருள்செய்து அறிந்துக்கொள்ளாதவர்களாய் இருக்கின்றனர். காஞ்சீபுரம் - வித்துவான் சபாபதிமுதலியாரவர்கள் - சாம்பிரதாயப் பொருள்வழி தெரிந்தவர் - அவர்; தம் மாணாக்கர்களுக்குஞ் சைவ ஞாய இரகசியங்களைச் சொல்லத் துணியாதவர் அப்படிசொல்லியிருந்தால் இவ்வளவு சந்தேகத்தை யடையமாட்டார்கள்என்றுஞ் சொல்லினர்.

அதுநிற்க - திருந்துதேவன்குடிஎன்னும் ஸ்தலத்தில் - சிவபெருமானை ஆணலவன்பூசித்த ஐதீகம்விளங்க - இப்போதுஞ் சிவலிங்கப்பெருமான்றிருமுடியில் அவ்வலவன் வளை போல் ஒன்றிருக்கின்றது. இக்காலத்தும் அன்பர்கள் அன்பு கொண்டு - பால் அபிஷேகஞ்செய்தால், அவ்வலவன்போல் ஒன்று அவ்வளையினின்று எழுந்து தோன்றிமறைந்துநிற்பது, இன்னுங்காணலாம் என்றனர்.

(திருவிளையாடற்புராணங்கீரனைக் கரையேற்றியபடலம்.)

நற்கீரதேவர்துதி.

விருத்தம்.

பருங்கைமால் யானையேனம் பாய்புலி யரிமான்மீன *
மிருங்குறள் யாமைகொண்ட விகல்வலி கடந்தாய்போற்றி *
குரங்குபாம் பெறும்புநாரை கோழியா ணலவன்றேரை *
கருங்குரீஇக் கழுகினன்புக் கிரங்கிய கருணைபோற்றி (உக)

ஆணலவன் - ஞண்டு.

என்பதில் - ஆணலவன்பூசித்தகாரணமறிக.

மேற்கண்ட அற்புதத்தை உள்ளயாவருமே கண்டுணர்ந திருப்பார்களோ - இல்லை, அதுபோல் - சிவரகசியங்கள் அநேகமுள - ஆகிலும், இலக்கணஇலக்கியம் முழுதுமுணர்ந்த காலத்தும் - இவ்வுளவுகள் அறிவது அரிது ! அரிது !! இவை விசாரணையினால் விளங்கவேண்டுவதென்றே முடித்தனர்.

இதன்றியில் - திருவாரூரில் முன்குறித்த சைவத் தியாகராசஓதுவார் பண்டாரம் ஐயா, அவர்கள் பரம்பரையில் வந்த சந்ததியார்கள்சொற்படி - பவஹு ஐப்பசிமீ உகஉ திருவாரூரிலிருந்துவந்திருக்கின்ற தபால் கடிதத்தில்உள்ள உண்மை வசனமாவது - திருப்பூம்புகலூரில்சிவலிங்கப்பெருமான் சிங்க முகங்கொண்டு அப்பர்சுவாமிகளைவிழுங்கி ஐக்கியஞ்செய்துக்

கொண்டதும்உண்மையே? அந்தச் சிங்கமுகரூபத்துடன்ஒரு மகாலிங்கம்அத்தலஆலயத்துள்ஓர்புறத்தில்இன்றும்இருப்பது உண்மையே? அவ்வாலயமண்டபத்தில் எழுதியிருப்பதும் உண்மையே? அதுநிற்க இக்காலத்திலும் அப்பர்சுவாமிகள் அடைந்தவண்ணந் தரிசனஞ் செய்யவேண்டுமானால், உண்மையாய்நம்பி ஒருநிறமுள்ளபசுவின்பால் - ஒருதினத்தில் நூற்றிருபத்தைங்கலங்கொண்டுஅபிஷேகஞ்செய்தாலின்றுங்காணலாம் என்பதுண்மையே?

அதுநிற்க - சிக்கல் கீழ்வேளூரிலிருந்துவந்த - தபாற்கடிதத்தால் பதிங்கலப்பால் அபிஷேகம்என்றும், எண்பது வருடத்திற்குமுன்பு - ஒருபெரியவர் அபிஷேகஞ்செய்து கண்டு தரிசித்ததும் உண்மையே? "சிங்கமேயுன்னடிக்கே போதுகின்றேன்" என்றதேவாரவுண்மைப்பொருள் இங்கும் வழங்குவதுமெய்யே? என்று - அவைகளில் வரைந்திருக்கின்றபடியே சொல்லத்துணிந்தனன்.

மேற்கண்ட தபாற்கடிதங்களில் கண்டிருக்கின்றபடி இப்புத்தகத்தின்கடையில் அச்சிடப்பட்டிருக்கின்றதையுங் கண்டுணர்க.

இராசதானியாய்விளங்குஞ் சென்னை சிறுவழக்குக்கோர்ட்டு ஞாயாதிபதியாகிய - இரங்கநாதசாஸ்திரியாரவர்கள் மருமகப்பிள்ளை பெரியஞாயஸ்தலத்தில் மொழிபெயர்ப்பவருமாகிய கிருஷ்ணசுவாமிசாஸ்திரியாருக்குத் தமையனுருமாகிய விரிஞ்சபுரம் அண்ணாசாஸ்திரியார் மருமகப்பிள்ளையாகியும், விளங்கும் பாண்டித்துவம் உடைய - நீலகண்டசாஸ்திரியாரவர்கள் தாங்கண்ட வேதவுபநிடத சாத்திரபுராணங்களில் உள்ளதை இந்நூலிற்காண்க.

இப்புத்தகம் அநேகருடைய திருப்த்திக்காகவே அச்சிட வேண்டியிருப்பதால், சென்னை கோமளீச்சுரன்பேட்டை, சாமி செட்டிவீதி (௰எ) வது, கதவிலக்கமுள்ள கிரகத்தில் - திருத் தொண்டர்சபைத்தலைவர்களில்ஒருவராகிய, சீ. வெங்கடாசல முதலியார், கோ. நே. கன்னியப்பாசாரியார், கோ. உருத்தி ரப்பாசாரியார், ஆகிய இவர்களால் செலவிட்டு அச்சியற்றிய தால்; புத்தகம்ஒன்றுக்குவிலை அணா இரண்டுகொடுத்து ஷை வீதியில், உ௰-வது, கதவிலக்கமுள்ளகிரகத்தில் அ. பெ. நாரா யணசாமி முதலியாரிடத்தில்பெற்றுக்கொண்டு இதனைஉள்ளப டிஅறிந்து மனத்தியக்கமில்லாதுவாழ்வதுமன்றி; நேரேகண்டு தரிசித்துஞ்சுகமாகவாழ்ந்திருப்பார்களென்றே கடவுளைமிகவும் பிரார்த்திக்கின்றனன்.—வருந்தொகையிற்செலவுபோக, மீதித் தொகையை - மேற்படிசபையார்களே - உபயோகித்துக் கொ ள்ளலாமென்பது கருத்தாகும். புராணீகரொனவழங்கும்.

இங்ஙனம்.

பொ. சுந்தரம்பிள்ளை.

கஅஎச வரு
டிசம்பர்மீ ௩உ க்குச்சரியான
பவ வரு
கார்த்திகைமீ ௰கூஉ.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அசாம்பிரதாய நிரசன நிர்த்தூளி.

விநாயகக்கடவுள் துதி.

மண்ணுலகத்தினிற் பிறவிமாசற ... ... *
எண்ணியபொருளெலா மெளிதின்முற்றுறக் ... *
கண்ணுதலுடையதோர் களிற்றுமாமுகப் ... *
பண்ணவன்மலரடி பணிந்துபோற்றுவாம் ... ... *

நடேசர் துதி.

உலகெலாமுணர்ந் தோதற்கரியவ ... ... *
னிலவுலாவிய நீர்மலிவேணியன் ... ...*
அலகில்சோதிய னம்பலத்தாடுவான் ... ... *
மலர்சிலம்படி வாழ்த்திவணங்குவாம் ... ...*

நூல்.

வடமொழிநூலில் வல்லவராகும், விரிஞ்சபுரம் - நீலகண்டசாஸ்திரியாரவர்கள் தாங்கண்ட வேதவுபநிடத சாத்திர புராணங்களிலுள்ள - உண்மைவிளக்கம்.

அதாவது, வேதத்தின்அந்தமாகிய வுபநிடதத்திற் கண்டிருக்கின்றபடி-மகாவிஷ்ணு ஒருகால்- நரசிங்காவதாரங் கொண்டு - இரணியனை சங்காரஞ்செய்தகாலத்து, அச்சிங்கமுக வழியே வுருத்திர சிவாம்சங்கொண்டே முடித்தனனென்பது உபநிடத நிச்சயப்பொருளாம். இதனால், அக்கடவுள் அயோனிசம்பந்தராய் தூணிலேதோன்றி நரசிங்கராய்ந்றது நமது

சிவமூர்த்தியேயாகும், என்பது - வேதநிச்சயமாம். மஹா விஷ்ணு சத்துவகுணப்பிரகிருதி தத்துவமுடையவர். உருத்திரசிவமூர்த்தி தமோகுணப்பிரகிருதி தத்துவமுடையவர் என்பதனால் உயர்வுதாழ்வு கூறவேண்டிவருமேயெனின் - அப்படியன்று; தருக்கசங்கிரகத்தில், திரவியங், குணங், கருமஞ், சாமானியம், விசேடஞ், சமவாயம், அபாவம்; என்ற - சத்த பதார்த்தங்களுள் குணம் இரண்டுவகையாம். அவை விளங்காவெண்மை, விளக்கமானவெண்மையென்பனவாம். அவைகளுள் - அப்பு, விளங்காவெண்மை; தேயு, விளக்கமானவெண்மையாம். அப்பு - தத்துவமுடையவர், மஹாவிஷ்ணு; தேயு - தத்துவமுடையவர், உருத்திரசிவமூர்த்தியென்ற விடத்து - மஹாவிஷ்ணுவினுக்கு, முழுச்சத்துவகுண மில்லாமையுஞ்; சிவத்திற்கு - முழுச்சத்துவகுண முண்டென்பதும்; பொருளாம். இத்தருக்கசாத்திரவளவால் - இவ்விரண்டு கர்த்தாக்களுக்கு - மிரண்டுகுணமுளவாம்.

பின்னுஞ் - சொப்பனகருத்தா - மஹாவிஷ்ணு; சுஷுப்திகருத்தா - உருத்திரர்; இவ்விருவரால், உயிர்கட்கு துக்க, சுக, முண்டென்பதை - நித்தியவனுபவ அளவாலுங்கண்டுணர்க. இஃது; வேதசூத்திரம்.

సింహాది పతిజ్ఞయాది పతిరుద్రః||

சிம்மாதி பதிஜெயாதி பதிருத்திராः

என்றதனால் - தத்துவகட்டளைகளில்கூறியபடி உருத்திரமூர்த்தி தமோகுணங்கொண்டு சங்காரஞ்செய்து உயிர்கட்கு சுகம்வருவித்தல் - மறக்கருணையாம்? துல்லிய சத்துவகுணமொன்றால் சுகம்வருவித்தல் - அறக்கருணையாம்? இருகுணமொருகுணமென்பது - வெளிமுகஉண்முகத்திற் கண்டுணரக்கடவர். தமோகுணமொன்றால் - அக்கடவுளுக்கும், பிற உயிர்களுக்கு, நஷ்டமில்லாதபடியால்; அதுமுக்கியகுணமாயிற்று. எப்படியெனின் - தந்தை, புத்திரன்வழியேகொண்ட கோபத்தால் - தனக்கும், புத்திரனுக்கும், நட்டஞ்சிறிதுமில்

லாது விளங்குவதுபோலாகும். சிங்கத்திற்கதிபதியாகியும், ஜயத்திற்கதிபதியாகியும், விளங்கப்பட்டவர் - உருத்திரமூர்த்தியென்பதனால் ; நரசிங்கத்திற்கும், ஆதாரமாகி அவர்செய்யத்துணிந்தஜயத்திற்குந் தாமே யாதாரமென்பது - முக்கியப் பொருளாம். இதனால் நமதுகடவுள் அயோனிசம்பந்த சிங்கமுகசொரூபரென்பது - வேதஉபநிடத முக்கியப்பொருளாம். நரசிங்க வேறுமதவபிப்பிராயத்தை யெடுத்தாளுங்கால். சிவாம்சங்கலந்த சமரசவேதப் பொதுப்பொருளாகுமன்றி - சிவாகமசம்பந்த சிறப்புவகையல்லவென்று வழக்கிடுவோருக்கு ; ஆகமசம்பந்த உருத்திரசம்மிதையில் - உத்திரபாகத்திலு முண்டென்பதை யிங்ஙனங்கண்டுணர்க.

அதாவது.—

మృగేంద్రరూప మాసాద్య - గజాసురమమర్థయత్ |
గజేంద్రత్వంసమాస్థాయ - జనయా మాసవైసుతం ||

மிருகேந்திர ரூபமாசாத்தியா - கஜாசுரமமர்த்தயத்து *
கஜேந்திரத் துவம்சமாஸ்தாயா - ஜநயாமாசவைசுதம் *

இந்தவடமொழி சுலோகப்பொருள்காணுமிடத்து முன்னாளில் - சிவமூர்த்தி சிங்கமுகங்கொண்டு கஜாசுரனைப் பயமுறுத்தி சம்மரித்தும் - கஜமுகங்கொண்டு கஜமுகக்கடவுளை வெளிப்படுத்தியுநின்ற சிவமூர்த்தியென்றதனால் - அக்கடவுளுக்கு - சிங்கரூபமுண்டென்பது முண்மையாம். இதனால், அக்கடவுள்கொண்ட சிங்கரூபத்திற்கு அழித்தல் மாத்திரமன்றி ஆக்கல், காத்தலும், உண்டெனக்கொள்க. ஏனெனில், அக்கடவுள் - முத்தொழிலுமுடையவராதலால், ரக்ஷகம் சிங்கமுகசுரூபத்திற்கும் உண்டென்பது முக்கியப்பொருளாம். அது ரூபகதியானவழிபாட்டிற்கும் ஏதுவாம். விருட்சஜாதியில் - கற்பகவிருட்சமாகவும். பசுக்களில் - காமதேனுவாகவும், சலத்தில் - கங்கையாகவும், மிருகங்களில் - சிங்கமாகவும் இருந்து விளங்குகின்றேமென்று மேற்குறித்த உருத்திரசங்கிதையில் உருத்திரமூர்த்தி உரைத்திருப்பதும் உண்மையே ?

இதுபற்றியே, கடவுளைக்குறித்து பேசுங்கால் பூனையே புலியே என்றுபேசாமல் - சிங்கமேஎன்று வேதஉபநிடத சாத்திரபுராணதோத்திரங்களிலும் பேசிஇருக்கின்றனவாம். இன்னும் - புராணவழியாலுங்கடவுள் சிங்கமுகசொரூபங் கொண்டது உண்டோவென்று விசாரிக்குங்கால், உண்டு. சைவபுராணம்பத்துள் - சைவமென்னுஞ் சிவபுராணம், இலிங்கபுராணம், ஆனவிரண்டும் - ௩௪௫-ம், கிரந்தங்களையுடையது. அவைகளுள் சுவாமிகளுக்கு சிங்கமுகமுண்டென்று - வெளியிட்டிருப்பதை அப்புராணங்களிலிருந்துழிகண்டுணரக்கடவர்.

சேக்கிழார்சுவாமிகள்அருளிச்செய்த - திருத்தொண்டர் புராணமென்னும் பெரியபுராணத்துள் அப்பர்சுவாமிகள் திருப்பூம்புகலூருக்கெழுந்தருளி திருத்தொண்டுசெய்திருக்குங்கால் - சுவாமிகள் பிறர்உய்யும்பொருட்டு, அப்பர்சுவாமிகளை மணிசோதனை, ஸ்திரிசோதனை செய்தருளியபின்னுஞ் சிங்கமுகங்கொண்டுசோதித்து - அப்பர்சுவாமிகளையுட்கொண்டு - கண்டமட்டில்வைத்து வெளியிட்டுதற்சொரூபமாக்கிக்கொண்டனர் - என்பதற்கு, நீலகண்டசாஸ்திரியார் - தாம் பக்தவிலாசாதிகிரந்தங்களில் கண்டிருக்கின்ற ஆதிகிரந்தசுலோகார்த்த சொரூபம் இதுவாம்!

அதாவது —

శింహాననస్వయంభూత్వా శరణేశోమహేశ్వరః |
అగ్రాసీత్ తపస్యంతం మప్పాశఖ్యంకంఠమాత్రతః ॥
కృపయాపునరుద్భవ్య గళేవిషభయాచ్ఛుతం |
తతఃస్వంరూపమాస్థాయ ప్రోవాచైనంశదాసివః ॥

சிம்ஹானனசுவயம்பூத்வாசரணேசோமஹேஸ்வரா
அக்ராசித்தபஸ்யந்தம்மப் பாசக்கியம்கண்டமாத்திரதஃ ॥
க்ருபயாபுநருத்வம்மிய களேவிஷபயாச்சுதம்
ததஃஸ்வம்ரூபமாஸ்தாய புரோவாசைநம்சதாசிவஃ ॥

மேற்குறித்த பக்தவிலாசாதிகிரந்தங்களுள் சொல்லாது விட்டசரித்திரஞாயங்களுஞ் சிலவுளவாம். அதுபோல்; சே

க்கிழார்சுவாமிகள் அருளிச்செய்த திருத்தொண்டர்புராணத்துள் வேண்டியதலபுராணவைதீகங்களை சிலது குறிக்காது விட்டிருப்பனவுமுளவாம்.

மேற்கண்ட சாஸ்திரியாரவர்கள் வெளியிட்டிருக்கின்ற முக்கியபிரமாணநூற்படி - சிவபெருமான் அப்பர்சுவாமிகளை சிங்கமுகங்கொண்டு கண்டம்வரையில் உட்கொண்டானென்பதை அசாம்பிரதாயர் மறுக்கவல்லவராவரோ !

திருக்குறள்.

தொட்டனைத்தூறுமணற்கேணிமாந்தர்க்குக்
கற்றனைத்தூறு மறிவு ... ...*
என்பதுபோலாவார்.

உ-வது, இதுநிற்க - சரணபுரமென்னுந் திருப்பூம்புகலூர் தலபுராணத்துள் - தசமுகன், சிவலிங்கங்கண்ட அத்தியாயத்தில், தருமபுரத்து ஆதீன சைவத்தம்பிரான் சுவாமிகள்கண்டுணர்ந்த செய்யுள்கள்.

திருவிருத்தம்.

இரண்டினையடுத் தோங்குறுமா ... ... *
பிரத்திறுதியைப் பெறுஞ்சீர்த்தி ... ... *
திரண்டகாற்பிறைச்செய்கையே ... ... *
திறனெனத்தெரிந்தருளுருக்கொண்டு *
திரண்டெழுந்துயர்சிவலிங்கநாயகன் ... ... *
சிங்கமாமுகம்பெற்று ... ... *
வரண்டுறுப்பெருங்கருணையாலப்பரை ... ... *
வாரிவாய்மடுத்துண்டான் ... ... *

என்றுரைத்திடுஞ்சூதமாமுனிவனை ... ... *
யிருடிகளினிதேத்தி ... ... *
நின்றருட்சிவகோசமைம்முகங்களாய்... ... *
நிமிர்ந்துமிப்புகலூரின் ... ... *
முன்னமாளுடையரசினைவிழுங்கவே ... ... *
முரணரிமுகங்கொண்ட ... ... *
தென்னெனத்தவமுனிவனுநிகழ்த்தின ... *
னெம்பிரான்றனைப்போற்றி ... *

பதியெனும் பொருளுரு வெழுத்தைந்தையும் *
பகுத்ததிற் பதிந்தோங்கும் ... ... *
பதியெழுத்தினைப் பயின்றிடும் ... ... *
பசுபதியாகுமப்பதிதானுய்க் ... *
கதியதாய்ப்பொருண்மூன்றதாய்ப் ... ... *
பொலிவதுகாணுறின்முழுத்துல்ய ... *
நிதியெனப்படுமொருமுகஞ்சிங்கமாய் ... *
நேர்ந்தருளியதென்றே ... ... *

(இம்முச்செய்யுளில் இருசெய்யுள் குளகம்.)

பின்னுந்தம்பிரான்சுவாமிகள் சொன்னதாவது - பதியெழுத்தாகுஞ் சிவ்வெழுத்து சச்சிதாநந்த துல்யப்பிரகாசமாகி-அந்தர்ப்பவமாயருகி சிங்கமுகவடிவாய் விளங்கும். அவ்வெழுத்தொன்றுள் - முப்பொருளுண்டென்பதை எடுத்துரைக்க வல்லவர். அக்கடவுள் சிங்கமுகங்கொண்டது முண்மையேயாகுமென்றுரைக்கவல்லவராவாரென்றதுங்கண்டுணரக்கடவர்.

ஸ்மஸ்கிருத இலிங்கபுராணசாரத்துள் ; பிரமவிஷ்ணுக்கள் சோதிவடிவாகிநின்ற - சிவலிங்கப்பெருமானைக்கண்டு தரிசித்து துதிசெய்தருளியசுலோகங்கள்.

నమోస్తుశివలింగాయ - శుద్ధలింగాయతేనమః,
నమోస్తుబుధలింగాయ - జ్ఞానలింగాయతేనమః ;
నమోస్తువిజ్ఞాలింగాయ - గ్నస్తిలింగాయతేనమః,
నమోస్తుదివ్యలింగాయ - జ్యోతిలింగాయతేనమః ;
నమోస్తుభవలింగాయ - భర్గలింగాయతేనమః,
నమోస్తునత్వలింగాయ - రజలింగాయతేనమః ;
నమఃప్రకృతిలింగాయ - తమోలింగాయతేనమః,
నమఃప్రదానలింగాయ - మహాలింగాయతేనమః ;
నమోనిర్గుణలింగాయ - చిత్తలింగాయతేనమః,
మృగేంద్రరూపలింగాయ - బుద్ధిలింగాయతేనమః.

నమోస్తుశివలిங்காய - சுத்தலிங்காயதேநமஃ,
நமோஸ்துபுதலிங்காய - கியானலிங்காயதேநமஃ ;
நமோஸ்துஞானலிங்காய - ஞஸ்திலிங்காயதேனமஃ,
நமோஸ்துதிவ்யலிங்காய - சோதிலிங்காயதேநமஃ ;
நமோஸ்துபவலிங்காய - பர்கலிங்காயதேநமஃ,
நமோஸ்துசத்வலிங்காய - ரஜலிங்காயதேநமஃ ;
நமஃப்ரகிருதிலிங்காய - தமோலிங்காயதேநமஃ,
நமஃபிரதானலிங்காய - மஹாலிங்காயதேநமஃ ;
நமோநிர்க்குணலிங்காய - சித்தலிங்காயதேநமஃ,
மிருகேந்திரரூபலிங்காய - புத்திலிங்காயதேநமஃ.

என்று இன்னுமுளவாம்.

இதுநிற்க - தாயுமானசுவாமிகள் திருவருள்பொற்றேங்கும் - அருளேயர், தமதுகுருவை பரமசிவமாக வுள்ளபடிவுட் கொண்டுதுதிசெய்யும் "அருள்வாக்கியவகவலில் விளக்கியது காண்க."

வாதவூராளியை வரிசையாய்விழுங்கும் *
போதவூர்மேவுகற் பூரவிளக்கு *
சுகமையகண்டத் தூவெளியெல்லாங் *
திகழவேகாட்டுஞ் சின்மயசாக்ஷி *

செழுந்தமிழப்பனை சிவலிங்கமாகி *
விழுங்கியஞான வித்தகவேழம் *
எழிற்றருபட்டினத் திறைவனையென்று *
மழிவிலாவிலிங்க மாக்கியவநாதி *

என்றுரைத்திருக்கின்ற வெமதுகுருசுவாமிகள் உண்மை வாக்கியமொன்றே சுவாமிகள் அப்பர்சுவாமிகளை விழுங்கி ஐக்கியமாக்கிக்கொண்டன ரென்பதற்குப் போது மானசாக்ஷி யாகும்.

பின்னும் - கருணைப்பிரகாசசுவாமிகள் - இஷ்டலிங்க வகவல் ; திருக்காளத்திபுராணத்தில் - சீகாளத்திச்சருக்கம் வ னாயிலுஞ்செய்தருளி, வெங்கைமாநகரத்தில் (௰அ-ம்,வயதில்) சிவலிங்கயிக்கமாய்ச் சமாதியானார் ; அப்போது - யாத்திரை யாக வெழுந்தருளியிருந்துவந்த - சிவப்பிரகாசசுவாமிகள் செய்தருளியது.



விருத்தம்,

முன்னமொருதமிழ்ப்புலவன் றனையுண்டுகண்டசுவை *
முதிர்ச்சியாலே ... ... *
தன்னியலே முழுதுமுணைத் தமையாமுன் னினைக்கவர்ந்து *
தடங்காளத்தி ... ... *
மன்னவனுண் டானெனது மாதவத்தின் வலிதீர *
மண்ணின்மீதே ... ... *
யென்னுடன்வந் தவதரித்த விளங்கருணைப் பிரகாச ... *
னெனுங்கோவே ... ... *

இதுநிற்க - பின்னுஞ்சொக்கநாதப்புலவர்பாடியதிருவிருத்தம்

துப்பனையு மரகதத்தின் கொழுந்தனையு மொன்றுகத் *
துலங்குமெய்யா ... ... *
செப்பரிய புலியதளைத் தரிக்குமுத்த ராபதியிற் *
சிவனேநீதான் ... ... *
அப்பனையும் விழுங்கியொரு பிள்ளையுந்தின்றுற்றுய *
லேயோவின்னுங் ... ... *
கப்பனையுங் கையுமாய்ப் புறப்பட்டாய் நல்லதிருக் *
காகூதிதானே ... ...

அதுநிற்க.—

பொன்னம்பலவாணனே - முன்னமுன்றனைப்பாடும் *
புலவனைநீவிழுங்கும் - புதுமையைக்கேட்டிருந்தும் *

(என்று மாரிமுத்தாப்பிள்ளைபாடிய - கீர்த்தனம்.)

நிந்தாஸ்துதியானகாலத்தும், பொருளிருந்தன்றோ விளங்கிற்று ; பொருள்இல்லாவிட்டால் விளங்குமோ ?

அதுநிற்க.—

மேற்கண்ட அநேகதிருஷ்டாந்தரங்களும் ஒத்தது போலவே - அப்பர்சுவாமிகள் பதிகத்தின் - இரண்டாவது செய்யுளுமொத்திருக்கின்றதாவது.

அங்கமேபூண்டாய் அனலாடினாய் ... ... *
ஆதிரையாய் ஆனிழலாய் ஆனேறூர்ந்தாய் ... ...*
பங்கமொன்றில்லாத பட்சடையினாய் ... ... *
பாம்பொடுதிங்கள் பகைதீர்த்தாண்டாய் ... ...*
சங்கையொன்றின்றியே தேவர்வேண்டச் ... ... *
சமுத்திரத்தி னஞ்சுண்டு சாவாமூவாச் ... ... *
சிங்கமேயுன்னடிக்கே போதுகின்றேன் ... ... *
திருப்புகலூர்மேவிய தேவதேவே ... ... *

என்றார் - ஆகையால் ;

இப்போது வேத, ஆகம, சாத்திரங்களுக்கு ஒத்ததாக - இங்ஙனம், பிரமாணங்களை மேற்காட்டியிருக்கின்றனன்.

அதுநிற்க.—

திருப்பூம்புகலூர் ஆலயத்துள் கர்ப்பாகரத்தையடுத்த ஆவரணப்பிரகாரமூர்த்திசந்நிதியில், அப்பர்சுவாமிகள் பணிவிடைசெய்துக் கொண்டிருக்குங்கால் அச்சிவலிங்கமூர்த்தி ஞானசிங்கமுகங்கொண்டு அவரை ஐக்யஞ்செய்துக்கொண்ட திருவுருவம் இன்றுமிருப்பது உண்மையாதலால் ; நேரேகண்டுதரிசித்துவாழலாம்.

இதுநிற்க.—

சென்னையில் - ஸ்ரீமுகவுல பங்குனிமீ த்தில் திருவல்லிக்கேணியில், சற்சாம்பிரதாயசீலருக்குத் தொண்டுபூண்டொழுகும் - சைவப்பிரகாசசமாஜீயர்என்று தாமே நூதனப்பெயர்வகித்துக்கொண்டு, "அசாம்பிரதாய நிரசனமென்னும்" ஒருசிறுநூல் வெளிப்படுத்தியிருக்கின்றனர். அதனுள், சாத்திரப்பிரமாணக்கேள்வியில்லாத - அப்பிரமாணவார்த்தைகளுக்குச் சிறிதுமிடங்கொடாத ஞாயவார்த்தைகளை யிதனடியில் சொல்லத்துணிந்தனன்.

அதாவது.—

இன்னிலைக்கட்செறிந்திறுமாந்து தந்நிலைப்பாடுமுன்னிலைநோக்கம் பெறீஇப்பெறுவதூஉம், உறுவதூஉம், இற்றெனக்கடற்றிரைபோன் றிடையிட்டலைப்புறுவிக் குமழிபொருட்கண்ணுமறச்சிறிதாய வணுத்துணையி னாக்கூற்றுயிரங்கூற்றுயவற்றினு மொவ்வாப்புணர்ச்சிக்கட்டதே யின்பெனப்பட்டாங்குணர்ந்துட்செறித்துச் செந்நிலைக்கட்சென்ற மெய்ந்நிலைப்புலவர் நன்னிலை யெங்ஙனமுணர்தற்காம்.

அங்ஙனமுணர்ந்த சேக்கிழார்சுவாமிகள் வெளியிடாத சிங்கமுகமொன்றை இவர் வெளியிடத்துணிந்தன ரென்றனர். பெரியபுராணத்துள் காட்டாதுவிட்டஞாயங்கள் அநேகமுள ;

எல்லாமெடுத்து எழுதப்புகின்மிகவிரியும் ஆதலின் சிலஞாய ங்கள் எடுத்துக்காட்டுவன். அவைகண்டுணர்க.

அதாவது.—

கண்ணப்பசுவாமிகள் புராணத்துள் கடவுள்கண்ணப்பர் கையொன்றைப்பிடித்து வலப்புறத்திலிருக்கச்செய்துக்கொண் டனரென்று - சேக்கிழார்சுவாமிகள் முடித்தனர். திருக்காள த்திபுராணத்துள் கண்ணப்பர்சருக்கத்தில் அங்ஙனங்கடவுள் அக்கையொன்றைப்பிடித்துக்கொண்டபிறகு ;

செய்யுள்.

குன்றவர்பெருமான்கையிற் ... ... *
கூர்ங்கணைவிட்டெறிந்து ... *
கன்றிளமடமானேந்துங் ... ... *
கண்ணுதலடிப்பூங்கஞ்சங் ... *
தன்றலைமிசைபுனைந்தான் ... ... *
சைவவேதிகனிறும்பூ ... *
தொன்றியவுளத்தனாகி ... ... *
யொருதனிமுதல்வற்றாழ்ந்தான் (கஎச)

மைதிகழ்மணிமிடற்று ... ... *
வார்சடையெம்பிரானக் ... ... *
கைதவமிலாமைமிக்க ... ... *
கருணையங்கண்ணானோக்கி ... ... *
மெய்தழனடுவணின்று ... ... *
விரிவறமனமொடுக்கி ... ... *
செய்தவர்தமக்குங்கிட்டாத் ... ... *
திருவுருக்கலந்துகொண்டான் (கஎரு)

என்றனர்.—

பெரியபுராணத்துள் கண்ணப்பருஞ்,சிவகோசரியாருங், கலந்தவழி சொல்லாதுவிட்டகாரணந் திருக்காளத்தி புராணச் செய்யுளைக் கண்டுணரக்கடவர். ஆனால் சேக்கிழார்சுவாமி

கள் சொல்லாதுவிட்டதைப்பற்றி - தலபுராணத்திலுள்ளதைத் தவிர்க்கப்படுமோ! பெரியபுராணத்துள் இப்படியநேகமுள வாம். இன்னு முண்மையெடுத்துக்காட்டுவன் கண்டுணர்க. திருஞானசம்பந்தசுவாமிகள் - திருவெண்காட்டுப்பதிகத்துள்,

இரண்டாவதுபாடல்.

பேயடையாப்பிரிவெய்தும் பிள்ளையினோடுள்ளநினை
வாயினவேவரம்பெறு வரையுறவேண்டாவொன்றும்
வேயனதோளுமைபங்கன் வெண்காட்டுமுக்குளநீர்
தோய்வினையாரவர்தம்மைத் தோயாவாந்தீவினையே.

என்று அத்தலஐதீகப்பிள்ளைப் பேறுதந்தருளும் முக்குளநீரைக்குறித்துப்பாடியதுண்மையாகுமென்று பொருள்கொள்வதுபோலும்.

என் அப்பர்சுவாமிகள் திருப்பூம்புகலூரில் - உள்-ஆவரணத்தில் பணிசெய்துக்கொண்டிருக்குங்கால் அங்ஙனம்அமர்ந்தருளும் எனதுசிவலிங்கப்பெருமான் சிங்கமுகங்கொண்டு நிற்கக்கண்டு - சிங்கமேயுன்னடிக்கேபோதுகின்றேன் திருப்புகலூர் மேவியதேவ தேவே - எனப்பதிகமோதிநின்றுஐக்யமானகாரணம் யாவருக்கும் இப்போதும்விளங்கும்- அப்படிசிங்கமுகங்கொண்ட சிவலிங்கம்ஒன்று இருப்பதுஞ் சத்தியமாதலால் அப்பர்சுவாமிகள் தேவாத்தமிழ்வேதப் பொருளொன்றே ஆதிமுழுப்பிரமாணமாகும் - தலபுராணமுதலிய நூற்பிரமாணங்களெல்லாம் ஆதியடுத்தமத்திமப் பிரமாணமாகும் என்றேபொருள்கொள்ளக்கடவர்

சிம்புள்வடிவுகொண்டெழுந்த சோணசைலனென்பதுசரபவடிவமாகும் அதனைவிரிஞ்சபுரத்தில்மேலண்டைகோபுரவாயற்படிக்கடுத்த ஓர்மண்டபத்தூணில் நேரோகாணுமிடத்துமுகமட்டுஞ்சரபமாகியும்மற்றையவுறுப்பெல்லாம் - மான்மழுபற்றி நிற்குந்தெய்வவுருவாகியும் - விளங்குகின்றது - ஆதலால் திருப்பூம்புகலூரில்சிவலிங்கக்கடவுள் திருவுருக்கொள்ளுங்கால் - சிங்கமுகமாத்திரங்கொண்டு விளங்குவதற்கொக்கும்.

அப்படியிருக்கசிங்கமேஎன்றபடி மற்றஎட்டுப் பாடல்களிலும் ஏன்சொல்லாதுவிட்டனர் - என்பதுகூடாது - தலைமையானசிங்கமுகங்கொண்டது சிவரகசியம் முத்திமுகமாதலால் அருமையாகஒளிவிடத்து குறித்துநின்றார் என்று அறிந்துகொள்ளக்கடவர்- அந்தநுட்பங்கண்டறியாது அப்பிரமாணமாகச்சொல்வதுமரபல்ல

ஆன்றோர்வழங்கிவரும் அருமைமொழியொன்றைக் கண்டோ! அல்லதுகேட்டோ! மாரிமுத்தாப்பிள்ளைசொன்னகுறிப்புமொழியைக்கண்டுணராது மூர்க்கரும்முதலையுங்கொண்டதுவிடா என்பது போற்கொண்டு அந்த மூத்தோர்சொல்லையும் மூடமாக்கிவிட்டனர், ஐயோ ! பெரும்பாவம்இவருக்கேனிந்த வீண்மதி

அதுநிற்க - கண்டதுபேசு - கேட்டதுபேசுஎன்பதைதப்பு என்றனர் - ஆ- ஆ - கெட்டி ! கெட்டி !! திருவாசகம் ஒன்றுங்கண்டவரும் அல்லர் - கேட்டவரும்அல்லர்போல்தோற்றுகிறது ஏனென்றால் - அத்திருவாசகம் ஒன்றில் - வெளிமுகப்பொருள்பேசுங்கால்கண்டது பேசுகேட்டதுபேசு என்னும்ஞாயங்களைத்தழுவியே மாணிக்கமூர்த்திகள் திருவாசகமுழுதும் பேசியிருக்க அதைக்கொஞ்சமேனும்பயமுற்று அறியாதவராய் இருக்கின்றார் திருவாசகத்தினுடைய சாம்பிரதாயம்ஒன்றைத்தெரிந்து கொள்ளாதவர் - மற்றசாத்திரபுராண சாம்பிரதாயங்களைஎன்னதெரியவல்லவராவார் திருவாசகம் 'மானேநீநென்னலைநாளைவந்துங்களை நானேயெழுப்புவன்' என்பதுதநுர்மாசத்தில் திருவண்ணாமலைப்பெண்கள் சொல்லக்கண்டு சொன்னமுறையாம் இஃதுகண்டதுபேசல். 'கீதமினியகுயிலேகேட்டியேலெங்கள்பெருமானே' என்றுகூவாய் உன்சம்மதப்படியேகூவவேண்டாம் என்றுசொன்னதுகேட்டதுபேசுதலாம். இதுபோலுங்கண்டதுபேசுதல் - கேட்டதுபேசுதல்தொன்றுதொட்டுவழங்குஞ் சத்தியமொழிகளாம் - அப்படியிருக்க கண்டதுபேசு கேட்டதுபேசு என்பதுபொய்தீரவிசாரிப்பதுமெய்யென்று நாலுந்திரிகதைகண்டு சொல்லத்துணிந்தவருக்கு என்ன

சொல்வ; இதுதெரியாதுவிட்டால்ஆதீனங்களில்கற்றுணர்ந்த தம்பிரான்களையாவது கேட்டு தெரிந்துகொள்ளக்கடவர்.

அதுநிற்க - 'இறுமாந்திருப்பன்கொலோ' என்றபதிகத்துள்சேவடியின் கீழ்ச்சென்றுஎன்பதைஇங்கெடுத்துக்காட்டவந்தனர் - இவர்மதிஎன்னமதி; இவர்முறைதெரிந்து சம்பந்தங்கலந்துவாழத்தெரியாத ஆண்பிள்ளைபோல் - தோற்றுகிறது. ஏனென்றால் அடியார்கள்ஆண்டவனடியைக்குறிப்பது அருளைமுன்னிட்டு முடியைக்குறிப்பது ஆநந்தத்தைமுன்னிட்டு சுவாமிகள் ஞானசிங்கமுகங்கொண்டு ஆநந்தவடிவாய்நின்ற அப்பர் சுவாமிகளை ஆநந்தமுகவழியே வாழைப்பழம்போல் விழுங்கித்தன்மயமாக்கிக்கொண்டனர்என்பதாம். இஃது, அறியாதுபல நூற்பயிற்சி கேள்விச்செல்வமுடையவரைப்போலுந்துணிந்து 'சாவாமூவாச்சிங்கமே' என்பதற்குவாயில்வந்தபடிபொய்யுரையெழுதியிருக்கின்றனர். பொய்மையில்லாதஅப்பர்சுவாமிகள் இவருள்ளேபுகுந்துகொண்டு அறிவித்தனரோ! அல்லது இவரேசொல்லிவிட்டனரோ !! விளங்கவில்லை.

'மூவர்ச்சிங்கமே' என்றதனால் இப்போதும் அந்த சிங்கவடிவஞ் சிவலிங்கத்தினிடத்தே இருத்தல்வேண்டுமென்றனர். அவ்வுருவுடன் அப்பரும் அச்சிங்கவாய்வழியே இருக்கக்காணவேண்டுமென்றுஞ்சொல்லவேண்டியவர் மறந்தார்போலும்.

அதுநிற்க - பிறர்உய்யும்பொருட்டு சிங்கமுக வுருக்கொண்டு அப்பரைபயமுறுத்திநிற்பதுபோற்காட்டி யுட்கொண்ட அக்கோலத்தோடும் உள்ளபடிநம்பி வரலாற்றில்அளவிட்டிருக்கின்றபடிபசும்பால்கொண்டு அபிடேகஞ்செய்துஇன்றுங்காண்பதுசத்தியமே அப்படிவுட்கொண்டவுண்மைநெறியை அறியாமல் 'நாமார்க்குங்குடியல்லோம்' என்றபதிகத்தையெடுத்தாளவந்தஇவர்மதிபின்மதியாகும். ஆதலால், அப்பர்சுவாமிகள் உண்மைக்கலப்பைஇனியாவது அறிந்துகொண்டு அடுத்தவர்க்கும்போதிப்பர்என்றேதுணிந்து சாஸ்திரியாரவர்கள் எடுத்துக்காட்டிய சாத்திரபிரமாணங்களையும் அனுபவப்பிரமாணங்களையுந்தழுவிமுடித்ததாகும்.

அப்படி தழுவிப்பேசாமல் அப்பிரமாணங்களை பேசத் தொடங்குமவர்களுக்கு வருங்கதி.

(பிரமோத்திரகாண்டம்.)

விருத்தம்,

அன்றிக்கேட்குமிடத்தழுக்காற்றினாற் *
கன்றிவேறோர்பொருளினைக்கற்பிப்பார் *
ஒன்றலாததுணைத்தெதிர்வாதிப்பார் *
பன்றியாயிந்தப்பாரிலுதிப்பரே *

என்பது இவருக்கேயாம். ஆகிலும் ஓர்விவகாரத்தை யெடுத்துப்பேசப்புகின்.

திருக்குறள்.

வினைவலியுந்தன்வலியுமாற்றான்வலியுந்
துணைவலியுந்தூக்கிச்செயல் *

என்பதுபோல் ஒருவருடைய வலியறிந்தன்றோ ஓர் விஷயத்திற்பிரவேசிக்கவேண்டும்; அப்படி துணிந்தகாலத்தும்

திருக்குறள்.

எப்பொருள்யார்யார்வாய்க்கேட்பினுமப்பொருண்
மெய்ப்பொருள்காண்பதறிவு *

என்னுந்திருக்குறலுண்மையும் அறியாதுவீண்பிரசங்கத்திற்கு இவர் ஏன்தலையிட்டுக்கொண்டனர். ஐயோ கொடுமை? கொடுமை?

இதுநிற்க தாமேபுராணிகரென்றுபெயர்வைத்துக்கொண்டார் சூதமுனிவருக்குப்புராணிகர்பட்டமல்லது இவருக்கேது என்றுசொல்லப்புகுந்தனர். சூதரிஷிக்கு புராணிகர்பட்டமேது. தெருப்பிரசங்கிகள் சூதபுராணிகரென்றுசொல்லிவழங்கி வரும்வார்த்தையாம். அப்படி வழங்குமாயினும் புராணஞ் செய்தலால் வந்தபெயராகுமாறால் புராணத்தை அடியாகக்

கொண்டு ஆசிரியருக்குப்பேர்வழங்கவேண்டும்; அப்படியில்லை. தொல்காப்பியங்களைக்கற்றதனால் தொல்காப்பியர்என்பதுபோல் ஆதல்வேண்டும். அப்படியுமின்றி. சூதரென்றும், புராணிகரென்றுந் தொடர்மொழிகளாகவிளங்குகின்றபடியால் ஆகாவாம் அவர்புராணகதைகளை ரிஷிகளுக்குச்சொன்னதனால் புராணிகரென்றுபெயர்வந்ததாகும். அதுபோல புராணகதைகளைப்பிறருக்குச் சொல்லிவருகின்றதனால் புராணிகர் என்றுபிறர் சொல்ல வழங்கிவந்தவார்த்தையாகும். அவதானஞ்செய்யப்பட்டவர், அவதானி ஓதப்பட்டவர், ஓதுவார் என்பதுபோல், அதுவும்ஓதற்றொழிற்பெயராகும்செய்தற்றொழிற்பெயராகாவாம்

இனியாவதுஇவர்இவைகளைக்கண்டுணர்ந்து பலநாட்படமுயன்று இச்சென்னைமட்டும்பழகாது தென்றிசையிற் சிலநாளாகினும் பழகிப்பேசியடங்கிநிற்கக்கடவர்.

ஐயோபாவம்? இவர்என்செய்வர். இவரைஅறியாதுவெளிப்பட்ட அகம்பாவத்திற்கு இவர்தான் என்செய்வர். எவர்தான்என்செய்வர், இவர்இந்தப்படி ஒருவர்மேற்குற்றங்கூறி எனதுஅப்பர்சுவாமிகளைப்புகழ்ந்ததுபோல் புகழத்துணிந்த இவர்தோத்திரப்பதிகத்துள்ளும் நான்காவதுபாடலில், நானென்றெழுந்த நாணமில்லாதவர்க்கு நானென்செய்வேன்! அதாவது 'துள்ளுமனப்பேயொழிய' என்னும்பாடலில் ஏகாந்தவாழ்வினர்தம் ஏவல்செய்யும். உள்ளமுடையேன், என்று தன் அன்பைத்தானேவியந்துகொண்டதலையெடுப்புடையதயாநிதிக்கு தாரணியிலுள்ளவர்யார்தானிகர் இவர் அன்பைஇங்ஙனம் எடுத்துஆளவேண்டுமோ! ஆண்டால்தான் ஆண்டவர்க்குவிளங்குமோ! தன்னையாண்டஅப்பர்தன்னைப்போலுஞ்சிற்றறிவுடையரென்றுசொல்லத்துணிந்தனரோ! ஐயோபாவம்? ஒருவர்மீது குற்றஞ்சொல்லப்புகுந்தஅவசரம், அப்பர்சுவாமிகள் துதியிலும் புகுந்துகொண்டதேயென்ற ஏனதுதுக்கத்தைஇவர் என்றுஆற்றுவரோ? ஐயோபாவம்?

திருவிளையாடற்புராணத்தில் நற்கீரதேவர் துதிசெய்தருளியபாடல்

மறையினந்தமுந்தொட்டாததாணிலந்தொடவந்த *
நிறைபரஞ்சுடர்நிராமயநிருத்தற்குப்பிழைத்தேன் *
சிறியகேள்வியோர்கழியவுஞ்செருக்குடையோரென் *
றறிஞர்கூறியபழஞ்சொலென்னளவிற்றேயம்ம *

என்றதுஇவருக்கேசாக்ஷியாம்.

அதுநிற்க - முன்குறித்ததருமபுரந் தம்பிரான்சுவாமிகள் சொன்னதர்வது, யெரியபுராணஞ் சொல்லப்புகுந்தவர்கள் தலயாத்திரைசெய்தவர்களாகவுந் தலபுராணங்கண்டவர்களாகவும் அத்தலபுராணமுதலிய கேள்விச்செல்வமுடையவராகவுஞ் சைவசாம்பிரதாயம் ஆட்சி ஐதீகங்கள் அறிந்தவர்களாகவும் இருத்தல்வேண்டும். அப்படியில்லாது சிறிது இலக்கியவிலக்கணங்கண்டதுணிபாற் சொல்லப்புகின் சிறிதும் பெருமையடையார் என்றனர்.

அப்படிஇவ்வசாம்பிரதாயர் அறிந்தவரர்யின், இதனடியிற்குறித்தளமதுகேள்விக்குப்பதிலுரைக்கக்கடவர்.

அதாவது.

க. பெரியபுராணஞ்சொல்லப்புகுந்த சேக்கிழார்சுவாமிகளுக்கு - உபமன்னியபுராணம் முதலியசம்ஸ்கிருத உபபுராணங்கள்முதநூல் ஆகாமல் திருத்தொண்டத்தொகையும் நம்பியாண்டார்நம்பியந்தாதியும்ஆனவாறென்?

உ. சேக்கிழார்சுவாமிகள்இரண்டாவதுகாண்டமென்று பேரிட்டதற்கு ஆதாரம்என்?

௩, சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குப் புதுப்பிணிவந்தகாரணமென்? அப்புதுப்பிணியெவ்வகைப்பிணியாகும்?

௪. சேக்கிழார்சுவாமிகள் பெரியபுராணத்தின்முதலில், உலகெலாமென்றெடுத்து ஈற்றில் உலகெலாமென்று முடித்தகாரணமென்?

மேற்கண்ட இந்நான்குவினாக்களுக்கு சைவஆதீனத்தார்கள் சம்மதிக்கும்படியான ஞாயங்களுடனே விடைசொல்லத் துணிந்தால் அவர்கள்ஆனமட்டும் புராணிகராவார்என்றுமுடித்தனர் - ஆதலால்சுவாமிகள்சொன்னபடிவெளிப்பட்டு சீக்கிரம் ஆனமட்டும் புராணிகர்பட்டங் கட்டிக்கொள்ளக்கடவர்.

பெய்யுடையொருவன்சொல்வன்மையினால்
மெய்போலும்மே மெய்போலும்மே

என்னும் அறிஞர்வாக்கியப்பொருளைக்கண்டறிந்தவர்கள் இனியாவதுசைவப்பிரகாசசமாஜீயர் - அவர்தலைவர் புலம்புவதெல்லாம் - ஊமையனுக்கு உளறுவாயன் உற்பாதபிண்டம் - என்பதுபோலுமெனக்காணக்கடவர். இதுநிற்க

திருக்குறள்.

உலகத்தாருண்டென்பதில்லென்பான்வையத்
தலகையா லைக்கப்படும்.

என்ற திருக்குறளுக்குஇவரேஇலக்கியமாய் இருப்பதல்லாமல்-இவருக்கினிப்பேய்வடிவம் உண்டாகுமேயென்னும்-வருத்தம் - என்னைவிட்டுநீங்கவில்லையேயென்செய்வேன்!! இவருக்குஇந்தவிபரீதபுத்திவந்தவழி விசாரிக்குங்கால் முறைப்படிஒருவனையடுத்து சிவபுராணங்கேளாதகுறையால் - வந்தகுறையேயாம் - ஆகலின்சாசியில்முத்திமண்டபத்தில் - வியாசமாமுனிவர்இருந்துகொண்டுகைகாட்டி சடவுளொன்றை ஒன்றாகக்கூறியவதனால் - அவருக்குவாய் அடைந்துங்கைநீண்டும்போனதுபோல் - நன்றாகவிசாரியாமல் சிங்கமுகங்கொண்டு அப்பர்சுவாமிகளை விழுங்கியதுஇல்லைஎன்றவாயினுக்கும் அதனைச்சிறு அச்சிற்பதிப்பித்து வெளியிடத்துணிந்த சேட்டையுடையசிறுகையினுக்கும் பின்னம்வாராதிருக்கும்படி அப்பர்சுவாமிகளைமிகவும்பிரார்த்திக்கின்றேன் இவருக்குத்துணைப்பட்டசகாயருக்குந்துன்பம்வாராதிருக்கும்படிஎன்அப்பருக்குஅப்பனைமிகவும்பிரார்த்திக்கின்றேன்.

என்றுமின்பம்பெருகுமியல்பினா
லொன்றுகாதலி னுள்ளமுமோங்கிட
மன்றுளாரடி யாரவர்வான்புகழ்
நின்றதெங்குநிலவியுலகெலாம்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

இஃதுமேற்கண்டசரித்திரச்சுருக்கத்திற்கண்டபடி தபால் கடிதங்களின் விபரமென்றறிக.

சேலம் சில்லாகோர்ட்டுவகில் - அப்பாவுபிள்ளையவர்கள் மரபில்வந்த மண்டிவெங்கடராமபிள்ளையவர்களுக்கு - திருப்பூம்புகலூருக்குஅடுத்த திருவாரூர் நாராயணபிள்ளையெழுதிய கடிதமாவது.

சிரஞ்சீவி வெங்கடராமபிள்ளைக்கு எல்லாநன்மையும்பெருகஉண்டாகதாக. நாளதுமீ உ௨உ வரைக்கும்இவடம்க்ஷேமம் - அவடத்தியக்ஷேமங்களுக்கு எதிர்பார்க்கிறேன்.

சி - ஆறுமுகம்பிள்ளைக்கு நீரெழுதியகடிதத்தி லடங்கியசமாசாரமறிந்தேன். நீரெழுதியசந்தேகங்களையிவட்டத்தில் - திருக்கூட்டங்களையுந் தியாகராசவோதுவார் சந்ததியார்களையும் விசாரிக்கதெரியவருகிறதாவது :—

புகலூரில் அப்பரை இலிங்கத்திலிருந்து - சிங்கரூபமாகயெழுந்தருளி அவரைஆபானம்பண்ணிக்கொண்டார் - அந்தரூபமுடன் ஒருலிங்கமிருக்கிறது அதற்கு பூசைநைவேத்தியமில்லாமல் அக்கோயிலின்பிரகாரத்தின்ஒருபுறத்திலிருக்கிறது சேலமண்டபத்தில் சிற்பிகள் ஷைரூபமுடன் எழுதியிருக்கிறார்கள் அதுபிரமாணஐதீகமென்றார்கள். இக்காலத்திலும் அப்பரடைந்தவண்ணம் - உண்மையாய் தெரிசனஞ்செய்யவேண்டுமென்றால் - ஒருநிறமுள்ளபசுவின்பால் ஏககாலத்தில் (௧௨௫) கலப்பால் அபிடேகஞ்செய்வோமாகில் சுவாமிகளடைந்தபிரகாரம் தோற்றப்படுமென்று இவடத்தில்பெரியோர்கள்சொல்லுகிறார்கள். இதுதங்கள்சித்தமறிக.

பவஹ
ஐப்பசிமீ - உ௩உ.

இனங்கும்.
நாராயணபிள்ளை

உ

சிக்கல் கீழ்வேளூரிலிருந்து சட்டளைப்பிள்ளையவர்கள் சுந்தராநந்தம்பிள்ளைக்கு எழுதியகடிதமாவது ;—

இயான்போய்ப்பார்த்துபின்னிட்டு பரிஷ்காரமாயெழுதுகிறேன், தற்காலகேள்வி - உப்பிரகாரத்திலே ஓவியத்தினால் சிங்கமுகங்கொண்ட இலிங்கமெழுதியும் சிங்கமுகங்கொண்ட

உ

முருகன் துணை.

திருப்போரூர்த்தலபுராணசரித்திரச் சுருக்கம்.

பூர்வம் நைமிசாரணியத்தில் காசிபர், கௌதமர், கர்க்கர், வசிஷ்டர், வாமதேவர், புலத்தியர், விசுவாமித்திரர், பராசர்முதலிய அநேக ருஷிகள் பிரமநிஷ்டாபரராயும், விபூதி ருத்திராக்ஷம்தரித்த அங்கங்களையுடையவராயும் ஜிதேந்திரியராயும் சிவபூஜா துரந்தரராயும் ஓரிடத்திற்சேர்ந்து தமக்குள் பேசத்தொடங்கினர்.

ஜெனனமரணமான சமுத்திரம் அஞ்ஞானமாகிய ஜலத்தால் நிறைந்து அவாவாகிய அலைகளையுடைத்தாய், காமாதிகளாகிய முதலைகளால்சஞ்சரிக்கப்பட்டு மனோபாவங்களாகிய மச்சங்களுக்கிடமாய்த் தாபத்திரயமாகியசேறுக ளுள்ளேபற்றி மோகமென்னும்பாசியால் மறைவுற்று மாதர்களென்னும் அட்டைகள்மிக்கதாய் அகங்காரமென்னும் குன்றுகளால் மேடுபள்ளங்களுள்ளதாய் பழையவாசனையாகிய புதல்களோடு கூடியதாய் அபிமானமென்னும்நீர்ச்சுழியால் அங்கங்கும்நெருக்கமுற்றுஆசையென்னும்முத்துச்சிப்பிகளால்நிரம்பி பொய்யாகியநுரைகளைக்கொழித்து ராகமென்கிறநீரோட்டத்துடனே மாயையென்னும்ஆழத்தால் நீச்சுநிலைகொள்ளாமல், துக்கமென்னும்தவளைகளாற் கோஷிக்கப்பட்டுதுவேஷங்களென்னும்ஊற்றுக்களாலதிகரித்துஉலோபமாகியஅளவில்லாதவிசாலத்தையுடைத்தாய் அசுத்தகருமங்களாகிய பயங்கர ஜலஜெந்துக்களால்பயமுறுத்தி-காயக்கிலேசமென்னும்பிலங்களும் வளைகளும் அங்கங்கும் பொருந்தியதாய் வியாதியாகியபிரவாகங்களால்அடிக்கடிநிரம்பிஅசத்தாகியகரையையுடைத்தாயிருக்கின்றது.

அன்றியும், அது மகோததியைப்பார்க்கிலும் மிகப்பெரிதாயிருப்பதால் அதனைக்கடத்தற்குத்தகுதியாயிருக்கின்றமரக்கலம்யாதெனிலே ஸ்ரீசுப்பிரமணியக்கடவுளதுபாதமேயன்றிப்பிறிதில்லையென்று அக்கடவுளின் சாக்ஷாத்காரத்தைஅடைதற்கு அநுகூலமாகியஉத்தியைஅவ்விமலராகிய மாதவர்கள் யோசிக்கலுற்றனர்.

பரத்துவாசர், சத்தியமென்னும் உபாயத்தால்அடையலாமென்றும், வசிஷ்டர், தபோபலத்தால்அதுகிடைக்குமென்றும், சதாநந்தர், தருமத்தால்கிடைக்குமென்றும், காசிபர் யாகங்களால்கிடைக்குமென்றும்,

கண்ணுவர்-தானங்களாற்பெறலாமென்றும், கௌதமர்-புத்திரரால் அகப்படுமென்றும், துருவாசர்-துறவால்சித்தியாகுமென்றும் இவ்வாறு அவ்விருடிகள் பற்பலவிதமாகயோசித்துக்கொண்டிருக்கையில் வியாசருஷிக்குமுக்கியமாணாக்கராகிய சூதபுராணிகர் முனிவர்களது புண்யாதிகத்தினால் அவ்வனத்தில்வந்தனர்.

அம்முனிவர் அவரைநோக்கி அர்க்கியபாத்தியமுதலியவற்றாற்பூசித்து ஆசனத்திலிருத்தினர் அவர் சூதபுராணிகரைத்தோத்திரஞ்செய்து தமது உள்ளக்கொள்கையை அவரிடத்தில்விண்ணப்பஞ்செய்து தாம்பேசிக்கொண்டிருந்த பலவிதயுத்திகளையும்விவரமாகச்சொல்லிப் பிரார்த்தித்தனர். சூதபுராணிகர்முனிவரரைநோக்கிச்சொல்லுவார் பதினெண்புராணங்களையும்வெளியிட்டவராகியவியாசரால்பூர்வத்தில் சமஸ்தவேதாகமங்களால்நிச்சயிக்கப்பட்டிருக்கின்றஇந்தப்பொருளெனக்குக்கிடைத்தது, காந்தபுராணத்தில்சங்கரசங்கிதையில்சிவரகசியகண்டத்தில்ஸ்ரீசுப்பிரமணியக்கடவுளால் வள்ளியம்மைபொருட்டு விவரித்துச்சொல்லப்பட்டுள்ளதாயிருக்கின்றது-அதனை நான்கேள்வியுற்றபடி சொல்வேனாக நீவிர் பரமபக்தியோடுகேட்கத்தக்கதென்று சூதபுராணிகர்சொலலிவருகின்றனர்.

ஊழிகாலங்கள்தோறும்வளர்ந்தோங்குகின்ற ஸ்ரீகைலாசத்தின் கொடுமுடிநடுவில்சகலவித அலங்காரங்களால்நிறைவுள்ள திருக்கோயிலுள் நவரத்தினங்களழுத்தியசிங்காதனத்தில் ஸ்ரீபார்வதிசமேதராய் விநாயகர்முருகக்கடவுள்சூழ்ந்திருக்கப்பரமேசுவரர்வீற்றிருந்து பிரமவிஷ்ணுக்களும் ஜனகர்முதலியமுனிவரரும் அநந்தமுத்தர்களும், நந்திதேவர்முதலியகணங்களும் அளவற்றஉருத்திரர்களும்மற்றையெல்லாத் தேவர்களும்வந்துநெருங்கிப்பயபத்தியுடன்சேவிக்க அவரவர்களுக்கும்இச்சித்தவரங்களை அநுக்கிரகித்துவருகின்றசமயத்தில் அநேகருஷிகளுடன் அகஸ்தியமுனிவர் பக்தியினாற்பலமுறைநமஸ்கரித்துக்கொண்டு அதிவிநயத்துடன்மெள்ளமெள்ளநெருங்கிச்சந்நிதானத்தில்வந்து அநேகமுறைஅஷ்டாங்கமாக ஸ்ரீபாதங்களைவணங்கிவேதவாக்கியங்களால்தோத்திரம்பண்ணினர். அதனைக்கேட்டுத்திருவுளமகிழ்ந்தருளியபரமேசுவரர் அவரைக்கடாக்ஷித்துயாதுவேண்டிவந்தனையெனவினவ-அகத்தியர் இறைவனைப்பணிந்து விண்ணப்பஞ்செய்கின்றனர், ஐசுவரியம் வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியமென்னும்ஆறும், பகமென்னும்சப்தத்தால்சொல்லப்பட்டுள்ளது-அவற்றின்உண்மைஎனப் அடியேனுக்குத் தெளிவாகவிளக்கியருளவேண்டுமென்ன, முனிவனை நீவினவிய[illegible]தனமாயுள்ளது - உன்னால் அறிந்துகொள்ளத்தக்கது

தான். இயற்கையாகவேஅதனைஉணர்ந்துள்ள ஸ்ரீசண்முகமூர்த்திமுன்னம்ஒருகாலத்துநம்பொருட்டுசெசொல்லியிருக்கின்றனர், அசரணவப்பொருளதாதலால்நமக்குஆநந்தத்தையுண்டாக்கியது, ஆதலால்ஸ்கந்தனையடைந்து அதனைக்கேட்டுக்கொள்ளக்கடவையென்று கட்டளையிட அவ்வாறேஅகஸ்தியர் புறவிடைகொண்டு சகலவிருக்ஷங்களாலும் பல அருவிகளாலும்நிறைந்துஅலங்காரமாயிருக்கின்றஅநந்த நவரத்தினமண்டபங்களாற் சூழ்ந்துள்ளதாகிய ஸ்ரீகந்தகிரியில்சகலதேவர்களும்வணங்க வீரவாகுதேவர்முதலியோர்புறங்காத்துப்பணிகேட்கச்-சத்திகளிருவருடன்சிம்ஹாசனத்தில் ஸ்ரீகந்தர்வீற்றிருக்கின்றதிருவோலக்கத்தை அகஸ்தியர்காணப்பெற்று ஆனந்தபாஷ்பங்களால்ஆனந்த சரீரத்தையுடையவராய்மலர்ந்தமுகத்துடன்சங்கிதியிலடைந்து பலதரமும் நமஸ்கரித்துகைகளையஞ்சலித்துக்கொண்டுவேதப்பொருள்களாற்றுதிசெய்தனர்.

துதித்துப்பாடிய அகஸ்தியரைத் திருநோக்கஞ்செய்தருளி அவரதுவிண்ணப்பத்தைத் திருவுளங்கொண்டுநம்மைத்துதிசெய்ததோத்திரம்அகஸ்தியகீதையென்றுவிளங்கக்கடவது இப்போதுநம்மைக்கோரிவந்துபிரார்த்தித்த ஷாட்குண்யப்பொருளைப், பலவகைச்சத்திகளுக்கும்,பிரமவித்துக்களுக்கும்,திருமால்முதலியதேவர்களுக்கும்,அந்தணர்முதலியோருக்கும்போகத்தையும்முத்தியையும்கிடைப்பித்துஅவர்களால்வசிக்கத்தக்கதாயுள்ளநிலையுலகத்தில், குருமூர்த்தமாகி யுபதேசிக்கின்றோமென்றருளிச்செய்யக்கேட்டு அகஸ்தியர் மீண்டும்வணங்கி உலகத்தில் அநேகக்ஷேத்திரமுண்டுஅவற்றுள்எந்தக்ஷேத்திரத்தில் அதனையடியேனுக்குக்கட்டளையிட்டருளத்திருவுளங்கொண்டது,அதனைக்கருணையால்திருவாய்மலர்ந்தருளல்வேண்டுமென்றுநமஸ்கரிக்க,ஸ்ரீசண்முகமூர்த்தி அருளிச்செய்கின்றனர்.

உலகத்தில்போகமோக்ஷங்களுக்குஹேதுவாகஅநந்ததலங்களிருக்கின்றன, அவற்றுள்பரமேசுவரருக்குப்பிரீதிகரமாயுள்ளவைபதினாறு அவற்றுள் ஆறுதலங்கள்விசேடமானவை, அவற்றைப்பார்க்கினும்நமக்குஆநந்தகரமாயும், சாநித்தியமாகியும், பாபசமூகமாகியஇருட்டுக்குத் தேஜசுகளாகியும்,முக்தியென்னும்ஸ்ரீசையோகத்திற்குப்புட்பவமளியாகியும்சர்வபாபவிமோசனகரமாகியுமுள்ளதலங்கள் அறுபத்தினான்குண்டு, அவற்றுள் ஆறுதலங்கள்நமக்குரியவை.அவை-பிராக்கியம்-திருச்செந்தூர்-சாயிசைலம்-கோமுக்தம்-மகாகதம்பவனம் - யுத்தபுரமென்பனவாம். இவ்வாறுதலங்களுள்நமக்குமிகுந்தபிரீதிகரமாயுள்ளதுயுத்தபுரியெனும்திருப்போரூர்-அதுநாம் இடைவிடாமல்வசிக்கின்றஸ்த

லமாகிப்பாபமென்னுங்காட்டுக்கு அக்கினியாகியும், சோகமாகியவிருட்டுக்குச் சூரியமண்டிலமாகியும், ஜெனனமரணமாகியவிஷப்பூண்டுகளுக்குக்கோடாலியாகியும், முத்தியென்னும்பெண்ணின்விவாகத்திற்குமங்களகிருகமாகியும், சகலதேவர்களுக்கும்ஆஸ்பதஸ்தானமாகியும், ருஷிசங்கத்தினால்உபாசிக்கப்பட்டதாயுமுள்ளது, அதுஅத்தியந்தம் புண்ணியக்ஷேத்திரமாக்வுமிருக்கின்றது, அந்தக்ஷேத்திரத்தில்சகலதேவர்களும்பூசிக்கின்றயுத்தபர்வதமென்றொருமலையுண்டு, அதன்கொடுமுடியில்பூர்வகாலத்தில்நாம்பராத்தமாகப்பிரதிஷ்டைபண்ணியபரமேசுவரர்பார்வதிசமேதராய் விக்நேசுவரருடன்வீற்றிருந்துபக்த்தஜெனங்களுக்குச்சதுர்விதபுருஷார்த்தபலன்களையும் பெறுவித்து, மனதாரஸ்மரிக்கின்றவர்களுக்குச்சகலபாவங்களையும் பரிகரித்துஇடைவிடாமல்சாநித்தியராயிருக்கின்றனர். அந்தப்பர்வதத்தின்கிழக்கில் அன்பர்களுக்கு எண்ணியவாறுபலன்களைக்கொடுத்துக்கொண்டு விஷ்ணுபுத்திரியாகியவள்ளியம்மையும், இந்திரன்புத்திரியாகியதெய்வயானையாரும், இருபக்கத்தினுமிருக்கநாமெக்காலமும் நீங்காமல்வீற்றிருக்கின்றோம், அதற்குத்தெக்ஷிணபாகத்தில் மூழ்கினவர்களுக்குப் பிரமகத்திமுதலிய கொடியபாவங்களையும்நசிக்கப்பண்ணுகின்றதாயுள்ளதுஒருதடாகம், அது வள்ளையாரோடையென்றும் சரவணப்பொய்கையென்றும் பெயருள்ளது, அது தீர்த்தவிசேஷத்திற்சிறந்திருக்கின்றது, அதற்குவடதிசையில்நிம்பவிருக்ஷத்தின்மூலத்தில்விக்நேசுவரர்வீற்றிருந்து தம்மைவந்துதெரிசிப்பவர்களுக்குவிக்நங்களையொழித்து அபீஷ்டங்களைப்பாலிக்கின்றனர். இவ்வகைமகாத்மியமுள்ளயுத்தபுரியில்நாம்பிரணவப்பொருளை உபதேசித்தருளுவோம். எந்தத்தலத்தில் தேவர்களும்முனிவர்களும் சித்தர்முதலியோரும்மாசற்றமனதுடனேநம்மைப்பக்திபூருவகமாகப்பூசித்துஇஷ்டபலன்களை அடைகின்றனரோஅததலமாகியதிருப்போரூரின்கண் அகஸ்தியமுனியேபோய்த் தியானித்துக்கொண்டிருந்தால் உனதுஅபீஷ்டம்நிச்சயமாகக்கூடியவிரைவிற்சித்தியாகுமென்று பிரசாதித்தருளினர்.

இவ்வாறு சொல்லக்கேட்டநைமிசாரணியமுனிவர்கள் யுத்தபுரிக்ஷேத்திரத்தின்எல்லையும்அதிலுள்ளசிவதலங்களும், விஷ்ணுஸ்தலங்களும்விநாயகர்தலங்களும்இன்னதின்னதென்றுசொல்லவேண்டுமெனவினவச்சூதபுராணிகர்சொல்லுகின்றனர்.

ஸ்ரீகாஞ்சீபுரத்திற்குக்கிழக்கில்ஐந்துயோசனைக்குள்ளும், திருக்கழுக்குன்றத்திற்குஈசானதிக்கிற் பத்துநாழிகைவழிக்குள்ளும், கிழக்குச்சமுத்திரத்திற்குமேற்கில்இரண்டுநாழிகைவழிக்குள்ளும், திருமயிலை

யைச்சார்ந்ததிருவான்மியூர்க்குஇருபதுநாழிகைவழிக்குள்ளும் அத்தலமிருக்கின்றது. இங்ஙனம்நான்குதிக்கிலுமுள்ளஎல்லையினளவு ஒன்றாக்காவதமாம். அத்தலத்தில்ஆன்மாக்களுக்குக்கலிகாவத்தையும், இயமவேதனையுமுண்டாவதில்லை. ஸ்ரீசன்முகமூர்த்தியின் சத்திபுனையாற்பெருமையுற்றுஅவரதுதேஜசினால்நிறைந்துள்ளது. அங்குவசிப்பவர்கட்குமுத்திஎளிதினடையக்கூடும். பத்தியாலாவதுஅபக்தியாலாவதுஅங்குவசிப்பவன் சர்வபாவத்தினின்றுநீங்கித் தேகாந்தத்திற் கந்தகைலாசத்தையடைவன். அத்தலத்திலுள்ளயுத்தகிரியைஒருமுறைவலம்வந்தவன்மற்றைப்புண்ணியதலங்களில்வாசஞ்செய்தவனாகிச்சகலஇஷ்டகாமியங்களையும்பெறுவன் அதன்கொடுமுடியிற்சுயம்புவாய்வீற்றிருக்கின்ற ஸ்ரீபாலாம்பிகைசமேதமகேசுவரனை ஒருமுறைபக்தியுடன் பிரதக்ஷிணம்பண்ணினவன்பந்தவிமோசனம்பெறுவன். அம்மலைதிருமகள் பூஜித்தமையால், ஸ்ரீபர்தவதமென்றும், ஸன்முகமூர்த்தியால் அங்குச்சிலஅசுரர்தாக்கப்பட்டுப் போய்விட்டமையால் யுத்தகிரியென்றும் பெயர்பெற்றது.

அவற்றின்வரலாறு. பூர்வம்ராதாந்தரகற்பத்தில் ஸ்ரீவைகுண்டத்தின்கண்விஷ்ணுதேவர்ஒருநாள்மஹாமணிமேடைமேற்பரிவாரங்களின்றிஉபேந்திரனுடன்ஸ்ரீதேவிசமேதராய்வீற்றிருந்து சிலரகசியவார்த்தையாடிக்கொண்டிருந்தசமயத்தில்அங்குவந்த கண்ணுவமுனிவனைத்தமதுரகசியவார்த்தைகளாலேபரவசராகஇருந்தமையால் தாம்உபசரிக்கவில்லை. அதனாற்கண்ணுவர்கோபமுற்றுவிஷ்ணுதேவரையும், ஸ்ரீதேவியையும், உபேந்திரனையும்நோக்கி நம்மை உபசாரம்செய்யாதிருந்தமையால்நீவிர்மூவரும்முறையேஊமையாகவும், மானுகவும், வேடனுகவும்தோன்றிவனங்களிற்சஞ்சரிக்கக்கடவீரென்றுசபித்துத்தமதுஆச்சிரமம்வந்துசேர்ந்தனர்.

பின்பு-மேற்கூறிய மலையைச்சார்ந்த ஆரணியத்தில் உபேந்திரன் வேடர்க்கரசனுகத்தோன்றியிருந்தான்அவ்வனத்திற்குச்சிலதூரத்திலுள்ளஓர்மலைச்சாரலில்விஷ்ணுதேவர் சிவமுனியென்னும்பேருடன் மரவுரியுடுத்திவிபூதிருத்திராக்ஷதாரணராய்ப் பஞ்சாக்ஷரமந்திரத்தைஜெபித்துக்கொண்டொருபுன்னைமரத்தின்கீழ்த்தவத்திலிருந்தனர். திருமகளும்ஒருபெண்மானுகித்துணையில்லாமையால்பயமும், மருட்சியுமிகுந்துதனதுதுணையாகியபதியையடையவேண்டுமென்னும்இச்சையுடன் வனங்கடோறும்தேடிப் பார்த்துக்கொண்டு துணையைக்காணுமையால் அதிகவிசனங்கொண்டுசஞ்சரித்துவருங்கால். ஒருநாள்தெய்வாதீனத்தால்மேற்கூறியமலைச்சாரலில்வரப்பெற்று அங்குதவத்திலிருக்கின்றசி

வமுனியைக்கண்டு இச்சையுண்டாகி அருகில்வந்து இடைவிடாமல் அவர்முகத்தை மோந்து மோந்து அன்புடனெதிரில்நிற்கமுனிவரும் அழகுள்ள இளமைவாய்ந்த அந்தப்பெண்மானையிச்சையொடுங் கண்களால்நோக்கியமாத்திரத்தில் அதுகெர்ப்பங்கொண்டு அங்கேஓரோடைக்கரையில் குறத்தியர்வள்ளிக்கிழங்குகள்தோண்டியபள்ளத்தில் ஒருபெண்குழந்தையைப்பெற்றது அக்குழந்தைதன்னில்நின்றும்வேறுபட்டதாய்க்குரல்பேதமுள்ளதாயிருந்தும் அதனைத்தான்விட்டுப்போகத்துணியாமல் அடிக்கடிமுகத்தைமோந்தும்உடம்பைநாவினால்வருடியும் அடங்காதபிரீதியுடன்பால்சுரந்துபூரிக்கின்றமடியையுடையதாய்க்கூவிக்கூவிச் சுற்றிச்சுற்றி ஓடியும்வந்தும்களித்திருந்தது, அன்றியும் அக்குழந்தையை யெடுத்துக்கொண்டுபோகமாட்டாமையாற் காட்டுமிருகங்கள் அதனைவருத்தி வதைத்திடாதபடிப் பாதுகாத்துக்கொண்டு மிகுந்தஅச்சத்துடனிருந்த சமையத்தில் நான்குபக்கங்களிலும் நாய்கள்சூழப் பம்பைகளொலிக்கவார் வலை வெடிகளுடன்வேட்டைமேல்வருகின்றஓர்கூட்டத்தைத்தூரத்திற்பார்த்துமருண்டுபயந்து இனியாதுசெய்யக்கடவோம், நாம்இங்குதாமதித்துநின்றால்வேடர்வந்துநம்மைப்பற்றிவதைப்பர். குழந்தைக்குவேறோர்துணையுமில்லை, எவ்வாறானாலும்நாம்இதுபோதுஇவ்விடத்தைவிட்டுநீங்குவதேநலன், எல்லாவுயிர்களுக்கும்பதியாகிய கடவுளே இக்குழந்தைக்குப்பிரியாத்துணையாகுமென்றுடகொண்டு மேல்நடக்கவிருக்கின்றநிமித்தத்தால் தன்குழந்தையைவிட்டுப்போகத்துணிந்தது.

அந்தருணத்தில் வேட்டைமேல்வந்தஉபேந்திரவேடராஜன் அக்குழந்தையைக்கண்டு பூரித்து கையினால்தழுவியேந்திக்கொண்டுபோய்த் தனதுபத்தினிகையிற்கொடுக்க அதனைப்பார்த்து மகிழ்ந்து, இருகையாலும்வாங்கிப்பால்சுரந்து அதற்குஊட்டிச்சீராட்டிவளர்க்க, வள்ளியம்மையென்னும்பெயருடன் அது வளர்ந்திருந்தது.

பின்பு வனங்கடோறும்சஞ்சரித்துவருங்கால் சாபவிமோசனகாலம்நேர்ந்தமையால்திருப்போரூரின்கணுள்ளயுத்தகிரியையடைந்து நாற்றிசையினுஞ்சுற்றிப் புல்மேயவேண்டுமென்னுமிச்சையால் மூன்றுதினம் வலமாகத்திரிந்துகொண்டிருக்க அம்மலையின்தெய்வத்தன்மையாலமான்வடிவுநீங்கிச்சுயரூபத்தைப்பெற்றவளவில் ஸ்ரீதேவிக்குஅதிசயமும்அன்புந்தோன்றிஇக்கிரியில் ஏதோதெய்வத்தன்மை நிலைபெற்றுள்ளது. இதுபுண்ணியக்ஷேத்திரமாகும்நிச்சயந்தான்வேறேவிசாரம்வேண்டுவதில்லையென்று அத்தலத்தை நான்குபக்கங்களிலும்போய்ப்பார்த்துப்புண்ணியதீர்த்தமாகியவள்ளையாரோடையில்ஸ்நானஞ்செய்து நித்தியகிரியைமுடித்து அதன்வடகரையிற் கோயில்கொண்டிருக்கும்

ஸ்ரீசண்முகமூர்த்தியைத்தரிசித்துவிடைகொண்டுயுத்தகிரியைப் பத்தி யொடுவலம்வந்துமேலேயேறிக்கொடுமுடியின்கண்சிவலிங்கப்பெருமா னைத்தெரிசித்துஇந்தமஹாலிங்கத்தின்பிரபாவத்தினாலேயன்றோ நமக் குச்சாபவிமோசனங்கிடைத்ததென்றுதுதித்து,கிரீசனையும், பாலாம்பி கைஅம்மையையும், நின்மலமானதீர்த்தம் புஷபம் அக்ஷதை முதலிய வற்றால்அபிடேகஅலங்காரங்கள்செய்துநாடோறும்பூசித்து நவநவமா கியதோத்திரங்களால் துதிசெய்து பிரார்த்தித்துத் தன்பதியாகியவிஷ ணுதேவனையடையவேண்டுமென்னுங்கருத்தால் அங்குதவத்தைமேற் கொண்டுஆயிரவருடவரைநோற்றிருக்க.

மேற் புன்னைமரத்தின்கீழிருந்தசிவமுனிவர்பிறகு அநேகவனங்க ளிற்சஞ்சரித்துயோகுசெய்தும்,சாபவிமோசனங்கிடையாமையால் ஸ்ரீ கைலாசத்தைநோக்கிச்சென்றுஅச்சாரலில்ஆயிரவருடவரையில் அரு மையானதவஞ்செய்துகொண்டிருக்கக்,கைலாசபதிபிரத்தியக்ஷமாகிஅ நுக்கிரகித்தருள்கின்றார்.சிவமுனியே பூமியின்கண்பிரசித்தமாயிருக்கி ன்றநமது தலங்கள்அநேகங்களுள் யுத்தபுரியென்றொரு மஹாஸ்த்தல முண்டு, அதிற்கண்ணுவமுனிவனுச்சிரமத்தில்ஸ்கந்தரது ஆநந்தத்திற் கிருக்கையானயுத்தகிரியின்கண் கந்தராற்பிரதிஷ்டைசெய்தசிவலிங்க மொன்றுண்டு. அதுகண்ணுவமுனிவனுலும்பூசிக்கப்பட்டுள்ளது.அம் மலையிற்கந்தரது உபாசனையை முக்கியமாகவுடைய அம்முனிவன் நா டோறும்கிரிவலஞ்செய்துகொண்டுஆச்சிரமத்திலிருக்கின்றனன்.

அங்கு உனதுபாரியாகியதிருமகள்சாபவிமோசனமடைந்திருக்கி ன்றனளாகையால் அவ்விடத்தி லுனக்கும் சாபவிமோசனங்கிடைக்கு மென்றுசொல்லியெழுந்தருளலும் சிவமுனிவர் ஸ்ரீகைலையினின்றும் பூலோகத்தையடைந்து யுததகிரியைச்சேர்ந்து தரிசித்தமாத்திரத்தில் ஹிருதயம்நிர்மலமாகி அதிசயங்கொண்டு இஃதென்னஅற்புதம் இவ்வு லகத்தில்அநந்தவனங்களிற்போய்நாம்தவஞ்செய்தும் இவ்வாறுமனம் நிர்மலமாகவில்லை, இங்கேபிரவேசித்தமாத்திரத்தில்நிர்மலமாயிற்று,இ துமஹாஆச்சரியமெனஎண்ணி ஸ்ரீகைலாசத்தற்பரமசிவனுல்சொல்லி யருளியபுண்ணியதலம்இதுவேயாம் அதோஎதிரிற்காணப்படுவதுகண் ணுவராச்சிரமமாகும், அதற்கருகில்தோன்றுவதுதான்யுத்தகிரி,அதற் குக்கீழ்பாலுள்ளதுகந்தராலயமாகும்,எனநிச்சயித்துஆநந்தாகாரராய் அணுகி அன்னப்பறவைகள்வசித்தொலிக்கின்றதாமரைமலர்நிறைந்து வண்டுகளதுகீதங்கள்மிகுந்துஉத்தமர்களதுஉள்ளம்போல் மாசற்றிரு க்கின்றஜலத்தால்நிறைவுற்றுச்சித்தர்முதலியதேவர்களால் சேவிக்கப்ப ட்டுப்பிரமத்திமுதலியமாபாதகங்களைநிவர்த்திசெய்துபிரமதீர்த்தமெ

ன்றுபிரசித்தமாயுள்ளவள்ளையாரோடையைக் கங்காதீர்த்தமாகப்பாவித்துச்சங்[illegible] மேற்கொண்டுஅதின்மூழ்கி விபூதிருத்திராக்ஷாலங்கிருதராய்நித்தியகன்மத்தைமுடித்துஸ்கந்தனைத்தரிசித்து அத்தலவிசேடத்தைஅவர்சொல்லக்கேட்டுப்புளகாங்கிதமுற்றுப்பணிந்துஅவர்திருவருளைமேற்கொண்டு கிரியைவலம்வந்துஅதன்சிகரத்திலுள்ளமஹாலிங்கத்தைப்பத்திபூர்வகமாகவணங்கிச் சங்கற்பஞ்செய்துகொண்டு, காமிக ஆகமத்திற்சொல்லியவிதிப்படி அபிடேகமுதலியனவும் அன்புடன்செய்துசகலவுபசாரங்களினும்பூசித்துவேதவாக்கியங்களாற்பற்பலவிதமாகத்தோத்திரஞ்செய்தனர்.

அப்பொழுது விஷ்ணுதேவர் செய்த திவ்ய பூஜையினாலும் தோத்திரங்களாலும் ஆநந்தமுற்றுப் புத்திரர்களுடன் பார்வதிசமேத கைலாசநாதர் சிவலிங்கத்தினின்றும்வெளிவந்து காக்ஷியருளி அவரதுசாபவிமோசனஞ்செய்து ஸ்ரீதேவிஅதற்குமுன் அங்குவந்து தானுஞ்சாபவிமோசனம்பெற்றுத் தம்மைப்பூஜித்துத் தன்பதியை யடையவேண்டிக்கந்தாலயத்தில் வள்ளியம்மைக்கருகில் நோற்றிருக்கின்ற செய்தியைச்சொல்லி-ஸ்ரீதேவியையும் வரவழைத்து உனது பூசையினாலும் கிரிப்பிரதக்ஷிணத்தினாலும்அளவில்லாதஆநந்தமுற்றோம், உனதுகோரிக்கையின்படிஉனதுபதியைப் பெற்றுக்கொள்கவென்றுதந்தருளி ஸ்ரீதேவியைநோக்கியநுக்கிரகிக்கின்றனர்.

இந்தமலைக்கு ஈசானத்தில் கீழ்ச்சமுத்திரக்கரையில் சிலமுனிவர்கள் உன்னைப் புத்திரியாகப்பெறவேண்டி நெடுங்காலம்தவஞ்செய்யாநின்றனர், அவர்களுக்குப்புத்திரிகளாயவதரிப்பாய், ஓர்காலத்திற் சதுரங்கவிளையாட்டில் உலகும் உன்பதிக்கும் வாக்குவாதத்தினால் நீ தனித்து நீங்கி அம்முனிவர்கட்குப் புத்திரிகளாயிருக்க,இந்த விஷ்ணுதேவர் வராகரூபியாய்த்தேடிக்கொண்டுவந்துஅம்முனிவராச்சிரமத்திலிருக்கும்உன்னை ஓராண்டுபெரியந்தம் ஒவ்வொருபெண்ணாக விவாகஞ்செய்துநித்தியகல்யாணரென்னும்பெயருடையராயிருப்பர், அன்றியும் விஷ்ணுதேவர் உன்னைத் தமதுமடியிலேந்திக்கொண்டு ஒருபோதுங்கீழேவிடாமலிருப்பாராகையால்அந்தக்ஷேத்திரம் வாமகெவியென்னும் நாமத்தையுடையதாகும்.

இன்னும்கேட்பாயாக,உனக்குப்பிரீதிகரமாயிருக்கின்ற சுக்கிரவாரம்விடியற்காலத்திலெழுந்திருந்து ஸ்நானமுதலிய நித்தியகன்மங்களைப்பிரணவாமிர்தீர்த்தத்தினால்நிறைவேற்றிநம்மாலும்,கௌரியினாலும் நமதுகுமாரர்களாலும்ஆசரிக்கப்பட்டிருக்கின்ற இவ்வோங்காரரூபியாகியஸ்ரீசைலத்தை யாவன்பத்திமையோடும் பிரதக்ஷிணஞ் செய்கின்று

னோ அவன்எழுபிறவியாகிய துன்பங்களினின்றும்விடுபட்டவனும். இக்கிரியைமுக்காலும்வலம்வருபவன் பாபரஹிதனாய் ஆயிரம் அசுவமேதஞ்செய்தபயனையடைந்துசெல்வமிகுந்து அபீஷ்டங்களைப்பெற்றுச் சந்தானவிருத்தியுடன்வாழ்ந்திருந்துதேகாந்தத்தில்நமதுபதவியையும் அடைவனென்றும், வருடந்தோறும்ஆடிமாதக்கார்த்திகையில்நியமத்துடன் தேவ முனிவ யக்ஷ கந்தருவர்முதலியோரும்தத்தம்பத்தினிகளுடன் இங்குதரிசனத்தின்பொருட்டு வருகின்றனராகையால் அவர்களுடன், நீங்களிருவீரும்கூடிவந்து சோமாஸ்கந்தராகியநம்மை - பக்தியினாலாராதித்துச்சேவித்து ஆநந்தத்தையடையக்கடவீரென்றுஞ்சொல்லியருளினர்.

இவற்றைக்கேள்வியுற்று இக்கிரியானது பிரணவாத்மாவென்றும், இத்திர்த்தம், பிரணவாமிர்தமென்றும் யாதுகாரணத்தாற்பெயர் பெற்றன, அவ்வரலாற்றைச்சொல்லியருளவேண்டுமென்று விஷ்ணு தேவர் அஞ்சலித்து வினவுதலும். ஸ்ரீகைலாசநாதர் திருவாய்மலர்ந்தருள்கின்றனர்.

ஒருகற்பாந்தரத்தில் வேதங்கள்கலிகாலத்தையஞ்சி அருந்தவஞ்செய்து நம்மைப்பிரார்த்திக்க அவைக்குநாம் காட்சிகொடுத்தருளி அவற்றின்வேண்டுகோளின்படி வரந்தரப்பெற்றவேதங்கள் ஸ்ரீகாஞ்சீபுரத்திற்குக்கிழக்கே ஒருசார் அக்கினிமூலையிற்-கிழக்குச்சமுத்திரத்திற்கு மேல்பால் காதவழிதூரத்தில் உருத்திரகோடி யென்கிற திவ்யக்ஷேத்திரத்தில் பர்வதமாகிநின்றன - அது வேதகிரியென்று பெயராயினது - அந்தமலையின்சிகரத்தே - லோகாநுக்கிரகத்தின்பொருட்டு நாம்திவ்ய லிங்காகாரமாகிச் சாந்நித்தியமாக இருக்கின்றோம், அவ்வாறுவேதங்கள் வரம்பெற்றதை யறிந்து வேதங்களுக்கு ஆதியந்தமாயிருக்கின்ற பிரணவபுருஷன் நம்மையடைந்து நமஸ்க்கரித்துக் கேட்டுக்கொண்டவாறு.

ஸ்ரீகைலாசபதியே-அடியேன்தேவரீர்கிருபையினால் வேதங்களுக்கெல்லாம்ஆதியந்தமாகி-மஹாமந்திரங்களுக்கெல்லாம் முதலாகியிருக்கின்றேன், என்னைவேதங்கள்நீக்கிவிட்டுத்தனியேசென்று தவஞ்செய்து வரம்பெற்றமையால் அடியேனுக்கு இருக்குமிடம் யாதென வினனைப்பஞ்செய்யப்-பிரணவமே, தமதுசரீரமாக உன்னைவகித்திருக்கின்ற நமது சுப்பிரமண்ணியமூர்த்தியைநோக்கிப் பிரார்த்தித்தனையாயின் உனதுமனோரதம் நிறைவேறுமென்று கட்டளையிட்டருளலும்-பிரணவம், முருகக்கடவுளையடைந்து வணங்கிப் பலவாறு தோத்திரஞ்செய்தது பிள்ளையார்ஓங்காரத்தைக்கடைக்கணித்து அதன்விண்ணப்

பத்தைக்கேட்டருளி அநுக்கிரகித்தவன்னம்-கைலையைநீங்கி யித்தல த்தின்கண்வந்து வள்ளையார்ஓடையினீராடி அநுஷ்டானங்களைமுடித்து ஸ்கந்தனை நமஸ்கரித்து அவரைப் பூசிக்கவேண்டிக் கோயிலின்ஈசான த்தில் பிரணவாமிர்தமெனத் தன்பேரால் ஒருதீர்த்தத்தையுண்டுபண்ணி அதனும் பிள்ளையாரை அபிஷேகித்துத் தோத்திரஞ்செய்து அன்புடன் பிரார்த்தித்தஅளவில்-ஐசுவரியமுதலிய ஆறுலும் பூரணராயிருக்கின்ற ஷண்முகர் அங்குள்ள சுயம்புவாகியவிம்பத்தினின்றும் பிரத்தியக்ஷராய்வந்து தமதுபாதங்களில் நமஸ்கரித்த பிரணவபுருஷனைக் கைகளாலெடுத்தாசிர்வதித்து மஹாமந்திரயந்திரங்களில் உன்னுலெப்படி சூழப்பட்டிருக்கின்றோமோ அப்படியிந்தயுத்தபுரியில் - நீ-நமது பின்பக்கத்திற் சூழ்ந்து மலைவடிவமாகி யிருக்கக்கடவையென்றும், இதுமுதல்பிரணவசைலமென்றபெயர்பெறுவாயென்றும்உனதுச்சியில் உன்பாலுள்ளபிரீதியினுல்கௌரீபாகராகியகைலாசநாதரும் நாமும் இடைவிடாமல்வீற்றிருந்து உன்னைச்சேவிக்கின்றஆத்மகோடிகளுக்கும மோக்ஷதங்களைப் பூர்த்திசெய்வோம் - ருத்திரகோடியில் பர்வதரூபங்களாய்நிற்கின்றவேதங்கள்உபநிஷதகணங்களோடு- நாடோறும்உன்னைச்சேவித்துக்கொண்டிருக்கக்கடவது-உன்னருகிலிருப்பவர் உன்னைமுன்னர்வணங்கி வேதசைலத்தைப்பின்னர்ஒருமுறை தரிசிக்கப்பெறுவராயின் அவர்கட்கினிவரும் பிறவித்துன்பங்களையொழித்துக் கடாக்ஷிப்போம்-அவ்வாறேவேதகிரிக்கருகிலிருந்துமுதலிலுன்னைச் சேவித்துப் பிறகுவேதகிரியைச்சேவித்தவர்க்குச் சிவபெருமான்போகமுக்திகளையருளிச்செய்வர்.

வருடந்தோறும் ஆடிமாதக்கார்த்திகையில் தேவர்முநிவர்முதலானவர்கள் சூழக்கிரிரூபமாயிருக்கின்றஉன்சிரசில்விநாயகருடன்பார்வதிபாகராகியமகேசுவரனைப்பரார்த்தமாகநாம்பூசிப்போம்- அத்திருநாளில் உன்னுலுண்டுபண்ணப்பட்டிருக்கின்ற பிரணவதீர்த்தத்தின் மூழ்கிப் பத்தியுடன்வலம்வந்தவனுக்கு மறுபிறவி யுண்டாகமாட்டாதென்று பிரணவகிரி பிரணவதீர்த்தங்களின் விசேடங்களையும், விதீபாதம், கந்தசஷ்டி, கார்த்திகை, அமாவாசை, மாதப்பிரவேசம், சுக்கிரவாரம் இவைமுதலியதினங்களில் இங்கிருந்துமுறைப்படி விரதம்நோற்பார்க்குக்கிடைக்கும்பலவகைப்பயன்களையும்எடுத்தோதி விடைகொடுக்கப் பிரணவமும்அவ்வாறேயிப்பர்வதமாகிநின்றதென விஷ்ணுதேவருக்குச்சொல்லி இலிங்கத்துள்அந்தர்த்தானமாயினர்.

———o———

யுத்தபுரி

வேம்படிவிநாயகர்வரலாறு.

தேவரும், அசுரரும், முன்னோர்காலத்தில், தாம்தாம்பராக்கிரமத்திலதிகராய்ஒருவர்க்கொருவர்நெடுங்காலம்யுத்தம்பண்ணின்தில்தேவர்கள்தோற்க-அசுரர் அதிகமதோன்மத்தர்களாயுலகங்களைமெல்லாம்உபத்திரவஞ்செய்யக்கண்டுதேவர்முதலானோர்முறையிடலும்விஷ்ணுதேவர்அசுரரையெதிர்ந்து பானவருஷங்களாற்சின்னாபின்னப்படுத்த-இறந்தவர்களொழிய உயிர்பிழைத்துப்புறங்கொடுத்தோடினவர்கள்பலவிடங்களினுஞ்சென்றொளித்துக்கொண்டனர்,சிலர்கோபமூண்டெதிர்த்துப்போர்செய்ய-அவர்களையும்,மாய்க்கத்தொடங்கினபோதுஅவர்கள் வலிமையற்று நிராயுதராயோடுதலும்அவர்களைவிடாமற்றொடர்ந்து விஷ்ணுதேவர்துரத்தியபோது ஓடிவந்தஅசுரர் பிருகுமுனிவர்தவஞ்செய்துகொண்டிருந்தஆச்சிரமத்தைச்சந்தித்துஅம்முனியைச்சரணமடைய விசையாமல் நாமின்னுமெங்கேயோடிப்போவோமென்றுபயந்துசுற்றிக்கொண்டிருந்தசமயத்தில்அங்குநீராடிவருகின்றபிருகுபத்தினியைக்கண்டுசரணமடைந்துதமதுகுறைகளைப்பலவாறுசொல்லியிரக்க-பிருகுபத்தினிகேட்டு நீங்கள்தேவர்க்கும்முனிவர்க்கும் சென்மவிரோதிகளானதுர்க்குணமூர்க்கராதலால்அபயங்கொடேனென்றுசொல்லிமறுக்கவும், அசுரர்காலைச்சுற்றியபாம்புபோலப்பத்தினிகாலில்வீழ்ந்துவிட்டுத்தொலையாமல்அநந்தவிதமாகக்குறையிரந்து ஓவென்றலறிக் கூச்சலிட்டுத்துயரப்பட்டதற்கிரங்கி,அவர்களைஅபயாஸ்தங்கொடுத்தாதரிக்க-பின்னேதுரத்தியவிஷ்ணுதேவர்அங்குவந்துஅவர்களைக்கண்டெதிர்க்கப்பிருகுபத்தினியும் அவரைப்பிரார்த்தித்துச் சொல்லியவார்த்தைகளை அநாதரவுசெய்துதயைபாராட்டாமல்அவ்வசுரரைத்தாக்கத்தொடங்குதலும், பிருகுபத்தினி பின்னும்விஷ்ணுவைநோக்கிஅநந்தஞாயங்கள் சொல்லியுங்கேளாமலெதிர்த்தார், பிருகுபத்தினி-அபயாஸ்தங்கொடுத்தவளையன்றோமுன்னேசங்கரித்துத்தோற்றுவந்தஅசுரர்களை(ஞாயமானால்)பின்னேசங்கரிக்கவேண்டுவதென்றுசிலகடுஞ்சொற்களால்கண்டிக்கத்தொடங்குதலும் அதிகோபங்கொண்டுவிஷ்ணுதேவர்அவள்கழுத்தைச்சக்ராயுதத்தால்அறுத்துவீழ்த்தினர். அதுகண்டங்கிருந்தருஷிபத்தினிகள்கோவென்றலறியழுதுவிம்மினர், அவ்வழுகையோசையாற்பிருகுமுனிவர் தவத்தினீங்கிவிரைந்துவந்து-நடந்தகொடுமைகளைக்கேள்வியுற்றுக்கோபமிகுந்துவிஷ்ணுதேவரையழைத்துச்சினந்துநோக்கி நம

துபத்தினிக்குமருமகனாகியிருக்கின்றநீ உனதுதாயார்க்குச்சமானமாக எண்ணத்தகுக்கவளைஹத்திசெய்தென்னையும்உபேக்ஷைசெய்தனையாகையால்நீபத்துஜன்மத்தையடையக்கடவையென்றும், திருமகளைநோக்கி நீயும்உனதுதாயாருடையகொலையை உபேக்ஷையால் பார்த்துக்கொண்டுஉன்கணவன்மார்பினிடத்துத்தலையெட்டுனையுமில்லாமல்மரம்போலிருந்தாயாகையால்-கசப்பாகிய வேப்பமரமாகக்கடவையென்றும்சபித்துவிட்டுச் சுக்கிராசாரியனைவருவித்தவனாக்கொண்டு மிருதசஞ்சீவினிமந்திரத்தாலற்றகழுத்தைச்சேர்த்துப் பத்தினியைப்பிழைப்பித்து அவளுடன் பர்னசாலையிற்பிரவேசித்துத்தவத்திலிருந்தனர்.

பிருகுமுனிவராலடைந்த சாபத்தால் திருமகள் சொல்லற்கரியமனோதுக்கமுற்றிவ்வாறுசிந்திக்கலுற்றனள்.

முனிவர்களுக்குச்சிவயோகமேஉயிர்க்குறுதியாம், அச்சிவயோகம்விக்கிநேசுவரரால்இடையூறின்றிமுடிகூடும்.யோகியர்தியானிப்பது ஓங்காரமாம்-பலவகைமஹாமந்திரங்கட்கும்மேன்மையுள்ளதாகிய பிரணவம்வேதத்துட்பொருளாகி யோகியருள்ளத்தின்கண்பெரியசுடரொளித்திரளாய்நிலைபெற்றிருக்கின்றதாகும்,அப்பிரணவமேவிக்நேசுவரரது திவ்யசொரூபமாகுமெனவேதாகமநூல்கள்முறையிடுதலால்-பிள்ளையாரதுகருணையாகியதுணையால் தனதுதுன்பத்திற்குமுடிவுகாணக்கூடுமென்று-வந்துயுத்தபுரியிலுள்ள பிரணவகிரிச்சாரலின் வனத்திற் கண்ணுவமுனிவரதுஆச்சிரமத்தினருகேதிருக்கோயில்கொண்டுவீற்றிருக்கும்விக்நேசுவரரைச்சேவித்துத்துதித்துஅன்புருவாய்க்கண்ணீர்பெருகப்பிரார்த்தித்துக்குறையிரக்கப்,பிள்ளையார்ஊர்த்தமுகத்ததாகியமூஷிகவாகனருடராயெழுந்தருளித்தரிசனைகொடுக்க - மீண்டும்திருமகளபலவாறுசுவாமிதிருநாமங்களால்தோத்திரஞ்செய்துபோற்றி முன்னடந்தவற்றையும்பிருகுமுனியால் விஷ்ணுதேவர்க்குந்தனக்கும்-சாபம்வீந்ததையும்விண்ணப்பஞ்செய்ய விநாயகர் அருளிச்செய்கின்றனர்.

சர்வலோகங்களுக்கும் நிமித்தகாரணராய்த்-தமதுதிருவருளே சத்தியாகக்கொண்டுஅநாதிமலமுக்தராய் அனைத்துயிர்க்கும் உயிரும் உணர்வுமாகித்தானசைந்தாலன்றிஉலகுயிர்கள்சிறிதும்அசையாவாகையால்லாமும் தன்வயத்தேயாகப்-பசுபதியாகிய உடையவராய்ப் பெருமைகளுட்பெருமையும்,நுட்பங்களுள் நுட்பமுமாகி எங்கு நிறைந்திருக்கின்றசிவபெருமானுக்குமனமாதிமூன்றாலும் நல்லவடியவராயினர் எவர்க்கும் எவர்க்குமேலோர்-அவ்வடிமைத்திறத்தினுள்ளாராகிய முனிவரதுசாபவலிமையம்மாலும், பிரமாதிகளாலும் எளிதில்நீக்கரிது.

ஆயினும் அஞ்சவேண்டாம்-திருமகளே நீ அந்தநிம்பவிருக்ஷவடிவாகியே யிங்குநிலைபெற்றிருப்பாயாக-அதனடிக்கண் நாமும் நீ காமல் வீற்றிருந்துசகலருக்கும்இடையூறுகளை நீக்கி நன்மைசெய்கன்றோமென்ன-அவ்வாறுதிருமகளும் அம்மரமாகநிற்க-அதன் புலத்தில் தாமும் வீற்றிருந்தருளலும், தேவர் மலர்மாரிபொழிந்தனர். தேவதுந்துபிகள் முழங்கின, சகலமுனிவரும்உலகத்திலுள்ளோரும், குதுகலித்தாநந்தமுற்றனர்.

வேம்படிவிநாயகரதுபுகழைத்துதித்தவர்புண்ணியராவர், அவ்விருக்ஷத்தை முறையாற்பிரதக்ஷிணம்செய்தவர் பிறவித்துன்பங்களைவெல்வர், பிள்ளையாரைப்பூசித்தவர் எல்லாவிரதங்களையும் குறைவில்லாமல்செய்தவராவர்.

யுத்தபுரியாகியதிருப்போரூரின்கண் எத்தகையோர்க்கும் சேவைதந்தருளத்திருவுளங்கொண்டு ஸ்கந்தர், பிரமன், இந்திரன் முதலியோரைவரும்படிக்கடாக்ஷிக்க-அவர்கள்யாவரும்அங்கடைந்துவேதாகமமுறையாற்பூசித்துவணங்கிச் சந்நிதியினிற்க-ஸ்கந்தர் அவரைக் கடைக்கணித்துவருடந்தோறும்உத்தராயண கும்பரவியிற்பூருவபக்கத்திற்சகலாத்மகோடிகளுக்கும்நமதுசேவையெளிதிற்சித்திக்கும்படிதிருவிழாச்செய்கவென அநுஞைதந்தருளலும். கேட்டுப் பரமாநந்தபரிதராயவ்வநுஞையைமேற்கொண்டு ஆடிப்பாடித்துதித்துப்பெறுதற்கரியபெருஞ்செல்வம்பெற்றராய் வள்ளிதெய்வயானையாருடன் ஸ்கந்தருக்குமுறையே மஹோர்ச்சவங்களை விபவமாகநிறைவேற்றித்-தாந்தாமிச்சித்தவரங்களையெல்லாந்தந்தருளப்பெற்றனர்.

அதன்பின்னர், பிரணவகிரீசராகியஸ்ரீபாலாம்பிகைபாகதியாககைலாசநாதர்க்கும்வேம்படிவிநாயகருடன் ஸ்ரீஷண்முகர்-சகலதேவரும், முனிவரும்அடியர்களும்சூழ வேதாகமவிதிப்படிமஹோர்ச்சவநடாத்திச்சிவபெருமானதுதிருவருள்பெற்று அக்கடவுளுடன்திருப்போரூர்த்தலத்தின்கண்கிரியாசத்தியும்ஞானசத்தியுமாகியதேவியரிருவருடன் திருக்கோயில்கொண்டு, வேதநெறி, ஆகமநெறி, பக்திநெறி, யிவற்றைக் கைவிடாமல்ஒழுகாநின்றமெய்யடியர்களுக்கும், முனிவர்தேவர்முதலியோர்க்கும்கிருபைசெய்துகொண்டு தாமும்வேம்படியில்விநாயகமூர்த்தியும்வீற்றிருந் தருள்கின்றனரென் றிவ்வாறு சூதபுராணிகர்நைமிசாரணியமுனிவரர்-ஜெண்மசாகரத்தைக் கடக்கும்படி யுத்தபுரிக்ஷேத்திரத்தின்மஹாத்மியத்தைச்சொல்லியதென்றுவாறு.

திருப்போரூர்த்தலபுராணசரித்திரச்சுருக்கம்

முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

ஸ்ரீஞானசம்பந்தகுரவேநம:.

ஆளுடையபிள்ளையார்

வெண்பாவந்தாதி.

காப்பு.

பொன்பூத்த செங்கமலப் பொய்கைப் புகலியில்வாழ்
மின்பூத்த வேணி விமலனிடம்—மன்பூத்த
அம்பிகைபா லுண்டோ னந்தாதி யான்புகலத்
தும்பி முகன் பொற்றா டுணை.

நூல்.

சீகாழிச் சம்பந்தன் சேவடியை யெஞ்ஞான்று
மோகா டவியொழிந்து முன்னுவார்—நாகா
பரணனடி ஞானம் பற்றுகிற்பா ரென்றிங்
குரைசெய் வார்வேத முணர்ந் தோர். (க)

உணர்வரியா னம்மை யுமைமுலைப்பா லுண்ட
துணைவனருட் காழிவரு தோன்றல்—எணுமடியர்
பாலுடையா னென்றன் பவமகலத் தந்தருளுங்
காலுடையானெங் காவலன். (உ)

வலமாழியான்பங்க யாதனனும்வாழ்த்தி
வலமாகவந்து வணங்க—வலமா
வரங்களருள்காழிவரு வள்ளலடியென்றன்
சிரங்களமாய்த்தே சேருமே. (ங)

சேர்வார்சிவகதியிற் சீகாழிச்சம்பந்தன்
றூர்யாமலர்ப்பூஞ் சதங்கைசெறி—சீர்பாதம்
போற்றுவார்புல்லறிவிற் போந்துதடுமாறுமெனை
யேற்றுவார்தம் மடியிலே. (ச)

இலதென்னுமாயையாமிவ்வுலகைமெய்யென்
றலையாநினைந்துமறந்தாழும்—புலையேன்றன்
றீங்ககலச் சம்பந்தன் சேவடிக்காளானவர்தம்
பாங்கடைதலன்பெனக்காம்பார். (ரு)

அன்பில்லார் முத்தி யடைவரோ வித்தொழிந்த
தென்புகலவுண்டிங் கிசையுமேல்—அன்பொழிய
முத்தியடையுமுறையுண்டாங் காழியில்வாழ்
அத்தனருளுடு வமியாம். (சு)

யாமாருடலாரி ருமையுமிங்கொத்துறவே
தாமாச்சமையுந் தரமிலதே—கோமானே
யென்றடியோத்து மெழிற்காழிச்சம்பந்தா
வின்றடியேனுக்கிங் கிசை. (எ)

இசைவாதுவென்ற விறையோடிரண்டற்
றிசையவருள விரங்காய்—இசைமலியு
நல்லசீகாழிவரு ஞானசம்பந்தாநீ
புல்லெனையண்டாதவித்தைப் பொய். (அ)

பொய்வேடக்காரர் புகலுமவநெறியே
மெய்யாகநம்பிவிதிர்விதிர்த்திங்—கையமடைந்
தாடியுழன்றோடி யலையுமெனைச்சம்பந்தா
வாடியருளுடி மகிழ்வால். (கூ)

ஆயமறையாக மாதிகலையனைத்துந்
தூயபரசிவனைச் சொல்லுமுயர்—வாய்மைநெறி
சொன்னகழுமலத்துத்தூமணியேசம்பந்தா
நின்னருளேநற்றுணையா நின்று. (ரு)

துணையொன்றுமின்றுன்று ணையன்றியெந்தா
யணையவுனைநாளு மருளாய்—உணையுமெனை
வாவென்றழைத்தாலுன்வாய்முத்தஞ்சிந்திடுமோ
தேவருண்ஞானக்கன்றே தேர்ந்து. (ரூக)

அருள்பொழியுமேகமனையாய்நின்னுமந்
தெருளுடனிங்கோதுந் திறமே—மருளுடையேன்

கொண்டுயிர்வாழ்ந்துய்யக் கூறியெழிற்சம்பந்தா
பண்டைவினைமாயக் கண்பார். (௨௨)

பாராதியெட்டும் பரனார்திருவருளென்
றோராதலையுமென்ற னுள்ளத்தே—நீரா
யுருக்கியமர்ந்தோங்கு முவகையுடனுளுந்
திருக்கிளருநற்புகலித் தே. (௨௩)

தேவர்தொழுமுன்னடிக டேடிமகிழ்ந்தேதிரிவுற்
றுவிதரியேன்போலிங் காயினேன்—பாவிநான்
ஐயாபுகலிவளரார முதேசம்பந்தா
மெய்யேமற்றேது வெலாம்வீண். (௨௪)

வீணவலர்போல்வேன் விளம்புமாறுண்டோவுண்
ணுணமிலாதுன்னருளை நாடியே—கோணுமனத்
தீயனடல்வினையேன் சிந்தைமடவார்க்குடையே
னாயினேன்றென்புகலி யாய். (௨௫)

ஆராவமுதேயளவிலாப் பேறுதவுஞ்
சீரார்சிவநேசச் செல்வமே—வாராயோ
என்பானீவந்திங்கியம்பாயோ நன்மொழியொன்
றன்பாற்சம்பந்தா வமர்ந்து. (௨௬)

சம்பந்தமுன்றன் சரணமேயல்லாமல்
சம்பந்தம்வேறுண்டோசம்பந்தா—நம்பும்
புகலியிடமேபுகலிடமென்பாருள்
ளகலிடமன்பாக வுவந்தாய். (௨௭)

தாயுந்தனையீன்ற தந்தையுமற்றைப்பெண்டி
ராயுமுடற்சார்பிங்கத் தனையு—நீயெனவே
நாடியுளம்பூப்பவருண் ஞானமருள்செய்யுமே
பாடிமகிழ்தேவா ரப்பர். (௨௮)

தேவாரஞானச் செழும்பாடடும்வாசகமும்
நாவாரப்பாடு நலத்தவர்பா—லோவாமல்
நெஞ்சங்கசிந்துருகி நின்றிடவேசம்பந்தா
கஞ்சமலர்த்தாளருள்வாய் காண். (௨௯)

அருளேதிருமேனி கொண்டவரசே
பொருளேதுமின்றியுளம்பொங்கி—மருளேய்ந்
தழியுமெனையாளாயோ வையாசம்பந்தா
விழிவிதெனவுள்ள மெணுதே. (உ௰)

எண்ணுடையமூவரிராக்கதர் தீயிற்பிழைத்த
தண்ணலாரின்னருளாலாகுமால்—கண்ணுதலெங்
கீரணனருள்ளங் கனியவருசம்பந்தா
பூரணனேபோற்றியுன்றன் பொற்பு. (உக)

போற்றியருட்குருவே போற்றிசிவசமயப்
பேற்றையுடையார் பெருவாழ்வே—சாற்றுசீர்
முத்திவடிவாகு மூர்த்தியேசம்பந்தா
வைத்தெனையாளுன்றுண் மலர். (உஉ)

மலமாயைகன்மமறு மாண்பருளுஞான
நலமேயருட்காழி நட்பே—சலமிலா
வின்பப்பெருமாட்சி யேயென்வினைதபுநற்
கன்றேயருள்சதங்கைக் கால். (உங)

காலனனீரோடா காயம்பிருதிவியா
வேலுமொளாம்பூதங்க ளென்றேமுன்—மாலயனுங்
காணன்கலந்தவருட் காட்சியருள்சம்பந்தா
பேணுநின்றேனிங் கன்பே. (உச)

கன்மவினைதொடரார் காலன்வழியடரார்
சன்மவிருள்படரார் சார்வரால்—தன்மயமே
சீகாழிச்சம்பந்த தெய்வமேயெனபார்மற்
றுகார் துயர்க்கடலு ளாழ்ந்து. (உரு)

துயரக்கடல்கடத்துந் தோணியேதோணி
யியலுஞ்சிருநெறிகோ லென்றும்—அயனன்
றடையுமருட்காழியநீ யஃதூர்வாயுயின்
கடையனேற்கென்குறையாங் காண். (உசு)

ஆகாமதங்க ளழித்தேயருள்விரவச்
சீகாழிவந்தருளுஞ்செல்வமே—போகாத

துயரமொழிதருமே தூயமணியே
யுயர்தருநின்போத முணர்ந்தால். (உஎ)

போதசிகாமணி யாம் புத்தமுதேயென்னுடைய
நாதனேசெம்மைநலத் தொன்றே—மேதகுசீ
காழியில்வாழ்மெய்ஞ்ஞானக் கற்பகமேகற்பனைசேர்
பாழில்விழுவேனைக் கண்பார். (உஅ)

பாரார்பதிநிலையும் பாசப்பசுநிலையுந்
தேரார்சிவஞானஞ் சிந்தியார்—தீரா
விடும்பைகூர்வாழ்விதமென் பாசேசம்பந்த
கொடும்பீழையாளர் குறித்து. (உகூ)

குறிக்கும்பரசமயக் கோளரியார்பாசம்
பறிக்கும்பழமையருட்பாவார்—பொறிக்கும்பொற்
செம்மைமலர்ப்பதத்தார் சிற்றறிவினேனகத்தார்
அம்மைதரும்பாலமு துண்டார். (௩௪)

ஆராவார்நீயல்லா லையாவடியேற்குன்
பேராயிரமுமருட் பெற்றியோய்—நேராக
நெஞ்சங்கசிந்துரைசெய் வேனெடும்பொழில்வான்
மஞ்செய்துகாழியனே வாழ்ந்து. (௩௧)

எய்தும்பரசமய மெல்லாந்தணந்துண்மை
யெய்துஞ்சிவசமய மெய்தவே—செய்தனையே
புத்தமுதேகாழிப் பொலனகரிற்போந்துடைய
உத்தமதேவேயென் பாலுற்று. (௩௨)

எந்தையேசீகாழி யேந்தலேபற்றெறிவார்
தந்தையேயென்பாற் றயைபுரியாய்—முந்தையோ
ருன்னையருச்சித்தே யுய்ந்தார்பெருந்தோணி
மன்னினைவாழ்த்தற்கெளிதாமா. (௩௩)

மால்சிவசாரூபமன்னி னுன்சம்பந்த
னாலெனவிங்கேயாய்ந் தறியாதார்—மால்கொண்
டனைவர்நறுந்துளவத் தானைப்பிறவிப்
பிணிதவிரப்பார்க்கக் கிலாப்பேர். (௩௪)

பேர்சிவசம்பந்தப் பெருமானமர்ந்திலகு
மூர்திகழ்சீகாழியெனவுடையான்—நீர்நிலனே
டெல்லாமவனு யிலகுமெழிற்கோலமே
யல்லாமல்வேறில்லை யால். (௩௫)

இல்லையெனுநாத்திகர்பா லெய்தியவர்கூறுஞ்
சொல்லைநன்னிநம்பியிவண் சோர்ந்தலையும்—பொல்லாப்
புழுத்தலையேனும்போற் றுவேனேசம்பந்தா
வழுத்தவருள்செய்திட நீவா. (௩௬)

நீவாததீபமே நேயவடியாரிதயத்
தேவேயானந்தச் செழுந்தேனே—மூவா
முதலாமுதல்வர்தரு முத்துச்சிவிகை
அதிபாசம்பந்தா வருள். (௩௭)

பந்தமொழியார்பரிப வமாயார்தமது
சிந்தைமெலியத்தியங்குவார்—எந்தையெனும்
சம்பந்தனருளைச் சாரார்மலவிருளில்
வெம்புந்திறலுடையார் மேல். (௩௮)

மேல்கீழயன்மால் வெதும்பியுளந்தேடுறவப்
பாலெனவேநீண்ட பரனுர்தங்—கால்பரவாக்
கள்வனேனுய்யுங் கதியுண்டோசம்பந்தா
புள்வருசீகாழிபுரத் தோய். (௩௯)

தோயச்சடைமுடியான் றேகையொருபாலுடையான்
வீயச்சலந்தரனை வீட்டினன்—பேயுடனே
யாடுவான்மாமயிலை யம்பதியிலென்பணங்காப்
பாடுவானீசம் பந்தா. (௪௦)

வாதச்சமண்புத்தமால்பாஞ்சராத்திரமும்
பேதப்பயனுதவப் பின்னுளவும்—சாதப்
பிணிப்பெனவேகண்டும் பிரியார்வினையாற்
கணிப்பார்தம் முட்காழியாய் (௪௧)

உட்சமயமாறு முவந்தனையேநின்விளையாட்
டுட்சமையாராரிங்குளை பகராய்—சட்சமய

தாபிதனாரேத்துந்தலைமைபெறுசம்பந்தா
சோபிதனேதேர்ந்தேனுன் சொல். (௪௨)

சொல்லாருஞானத்தெளிஞரேயென்றுசொலும்
வல்லாளர்பாதமருவியே—நில்லா
வெனக்கும்வருமோவுன்ற னின்னருள்சம்பந்தா
மனக்கவலைமேற்கொள்ளாமல். (௪௩)

ஆமல்லவென்றே யறையுமவரவர்க்குப்
பூமானியாகிற் புனிதனே—தாமாக
வொன்றுமறியாராவ ருன்விளையாட்டேயாகு
மென்றறிவேன் சம்பந்தனே. (௪௪)

தன்னியராமெங்கடலைவனுர்சம்பந்தர்
பொன்னினடித்தாமரையைப் போற்றுவார்—மன்னியெழு
மானந்தவெள்ளத்தழுந்துவார் வெம்பிறவி
யூனம்புகாமலுயிருய்ந்து (௪௫)

காமனுடல்பொடியாக் கண்டவகண்டிதன்பால்
வாமத்தொருத்தியருள் வாய்க்குமே—சேமநிதிப்
பேறெனவேசம்பந்தப் பேரானையுட்டெளிமின்
கூறுமதாலுண்டோ குறை. (௪௬)

குறையுண்டோகாழிக் குரவனடிப்பூ
நிறையுமதிகொண்டு நினையின்—இறையளவே
போதும்புகழ்க்கருணைப் புண்ணியனுர்சீர்ப்பதிக
மோதுந்தகுதியுளோர்க்கு. (௪௭)

ஓரார்மறைக்காட்டி லுற்றகதவடைத்த
தேராருந்தென்புகலி யெம்பெருமான்—பாரார்
பழவினையேதோய்வுற் றெழியாப்பவமா
மிழிவினைவந்தெய்து மிதனுல். (௪௮)

நான்மறையின்மிக்க நலமுடைத்தாமாகமமெய்ந்
நூன்முறைசொற்றுன்பாதநோற்றுளார்-கான்மரையிற்
பட்டபெரும்புகழைப் பாடுகிற்பார்சம்பந்தன்
மட்டவிழ்தாள்பெற்றார் மணந்து. (௪௯)

பெற்றலைநீர்வைப்பிற் பிறந்தங்கலமருவீர்
கொற்றவன்சீகாழி வருங்கோமானார்—பொற்றேர்
வடம்பிடிக்கவாருங்கோண் மாலயனுக்கெட்டா
விடம்பிடிக்கவேண்டு மெனிலின்று. (௩௰)

இன்றேபசுமார்க்க மெம்பிரான்சம்பந்த
னன்றேயழித்தருளு மாற்றினால்—நன்றே
புகழ்மினவனருளைப் புன்சமயமற்றின்
றிகழ்வினிருந்தும் மில்லையால். (௩௧)

இல்வாழ்க்கைநன்றேயா மெய்திணியலெல்லா
மல்வாழ்க்கைகொண்டிங் கலைவதேன்—புல்வாழ்க்கை
நீத்தார்நெடும்பிறவி நேர்கிலர்மற்றெய்துவார்
பூத்தார்ச்சம்பந்தன் புகல். (௩௨)

பந்தர்சிவிகை பரனார்கொடுத்திடவன்
றந்தமுடன்பெற்றவழகனே—சுந்தரஞ்சேர்
பால்வடியுநின்முகநான்பார்த் திருக்கச்சம்பந்தா
கால்படியவந் தருளிக்கா. (௩௩)

இக்குமொழிப்பேதையர்பாலெய்தியவரின்பம்
பக்குவமென்றுன்னிப் பருகுவேன்—அக்கரவஞ்
சூடும்பிரானருளிற் றோய்வனோசம்பந்தா
கூடவேயெற் குனருள்கூர். (௩௪)

கூர்வேன்மறைத்துக் குருவடிவங்கொண்டுதித்த
சீர்சால்புடையசிவக்கன்றே—யார்பாற்றான்
சென்றென்குறைபகர்வான் சேர்ந்திடுவேன்சம்பந்தா
நன்றருளுன்பொன்னருளிந் நாள். (௩௫)

நாளவலமேபோக்கி னாருன்னலனறியாக்
கோளர்மிகுந்தீவினைகைக்கொண்டே—காளிநகர்ச்
சம்பந்தநாமத் தனியேதனிமுதலே
யெம்பந்தந்தீர்ப்பா ரெவர். (௩௬)

ஆயுநிகமா கமங்களருள்விரவும்
வாய்மைவளநீறு மாமணியுந்—தூயவெழுத்

தைந் தும்புகலியிலே யன்புடனீதோன்றாக்கா
லெந்தாயென்னுமோ விசை. (௩௭)

தாமதமார்க்கத்தார் சமயச்சழக்கொழியார்
தாமதமாவாருன்னைச் சார்கிலார்—நேமப்
புறவத்திருநகர்வாழ் புண்ணியனேயென்னு
ளுறவுற்றருள்வா யுகந்து. (௩௮)

உகமெண்ணிறந்து முலவாத்தென்காழி
யகமன்னுஞானவரசே—தகவுன்னு
மோத்தூரிலாணிற் பொலியுமுயர்பனைபெண்
ணைத்தமிழ்சொற்றாயுளத்தேயண்மு. (௩௯)

உளவறிவாருன்னை யுகப்பரோயன்றி
யுளவறியாருன்னை யுகவார்—உளவீதங்
கன்றுன்றிருமணத்தி லார்ந்தபேர்சம்பந்தா
துன்றினர்காண்சோதியிடந் தோய்ந்து. (௪௦)

இடங்கொண்டுநம்ப ரிடமகலாளம்பொற்
குடமுலைப்பாலுண்ட குழந்தாய்—செடிசேர்
மறமலியும்வன்னெஞ்சக் கள்வனே னுய்யுந்
திறமுண்டோநின்றாள்செறிந்து. (௪௧)

தாளானடியர்படுந் தாபந்தகவருடந்
தாளானவலர்தமையாளுமலர்த்—தாளாளன்
சம்பந்தாவென்று தணவாப்பெருங்கேண்மை
யின்பந்தாவென்பார்க் கிசைந்து. (௪௨)

இன்பங்கடந்தவிடத்தே யிருத்துமோ
வன்பிற்பழுத்தமனத்தேனைச்—சண்பைக்
கொருமூன்றுலகு முணர்த்துங்கருணைக்
குருராயனும்புகலிக் கோ. (௪௩)

புகலிநகர்போந்தென் புன்மைதவிர்த்தாளும்
பகவன்பகவதிபால் வந்த—சுகசொருப
ஞானவிளக்கே நமச்சிவாயப்பொருளே
மோனநிலைசற்றே மொழி. (௪௪)

சற்றேபதைக்கத்தரினுஞ் சகம்படைக்கக்
கற்றுனுங்காலனுமா மென்றே—சொற்றூர்க்
கெழுமன்பிலேனிங் கிடராற்சம்பந்தா
கழிவனோநாளுங் கதித்து. (சுரு)

கதிநின்கமலக் கழலல்லால்வேறு
கதியறியேன்காழிக் கரசே—துதிமேவு
மாமறைகள்போற்று மறைஞானசம்பந்தச்
சேமநிதியேயுன் சீர்தேர்ந்து. (சுசு)

தேருங்கலைஞானமெல்லாந் தெளிந்தபெரி
யோர்தம்பெருமை நலத்தொன்றே—வாரார்
முலைமடவாரின்பமே முத்தியென்பார்பாழ்வாய்க்
கிலையோசம்பந்தா விடர். (சுஎ)

பந்தார்விரலுமையோர் பங்குளார்மெய்யன்பிற்
சிந்தாநெறியுலகிற் செப்பினுன்—செந்தா
மரைமேலவனுள்ள மாசுபறித்தாளும்
பரைகான்முலைசம்பந் தன். (சுஅ)

காழிப்பதியுடையகௌணியனுர் பொன்னடிகள்
வாழிகண்டாயென்றுவழுத்துகேன்—ஆழியின்மேற்
றேணிபுரங்கொண்டெங் துரிசறுத்துவண்கயிலை
காணியெனக்காட்டுதல் கண்டு. (சுகூ)

கண்டேகரும்பின்சுவையே கனிரசமே
தண்டாமரைத்தடஞ்சூழ் சண்பையில்வா—ழெண்டோளன்
கந்தமலர்ப்பாதங் கண்டணையுஞ்சம்பந்தா
அந்தமிலாவன்பெற் கருள். (எஅ)

அந்தணர்கள்போற்று மரசேசீகாழிவரு
சுந்தரனேயெங்கடுணைவனே—மந்திரமாம்
பஞ்சாக்கரப்பதிகம் பாடினையேயெம்போல்வார்
நெஞ்சாற்றியானிக்க நேர்ந்து. (எக)

நேரில்சிவபாதநெஞ்சுடையா ரொன்றுபொரு
ணேருமவருளங்கெ ாணையவருட்—சீரார்

புதல்வனெனவருநின் பொன்னருளாம்வெள்ள
மதுதோய்கிலேனருள்வாய் மற்று. (எஉ)

மதுரைவளம்பதியை மன்னியெழினீற்றுத்
துதிபதிகமோதுந் துணையே—விதுகதிர்தீக்
கண்ணுனுளங்கதித்த காளையேசீகாழி
நண்ணுநிற்பேனென்று நான். (எங)

நாடவயலுண்டோ நன்னெஞ்சேநான்மறைகள்
பாடுமெழிற்சம்பந்தன் பாதமலர்—கூடுகிற்பார்
எம்மடிகளாமவர்பாலேவ லிசைகிற்பார்
பொய்ம்மைநிரலேமாய்ந்து போம். (எச)

போமேபுலன்வழியிற் போகுமவாவைந்து
மாமேதிருவருளுமன்பரிவர்—தாமேயா
மென்னுமபிதான மெய்துமேசம்பந்தன்
பொன்னடிசிந்திப் போருக்கு. (எரு)

போருருமேரகமும் போற்றுதிருவேங்கடமுந்
தேருருஞ்செந்திறிருத்தணிகைச்—சீருரும்
வீற்றிருந்தஞான விளக்கேவியன்காழித்
தேற்றமேநன்றருளிச் செய். (எசா)

செய்வானுஞ்செய்பொருளுஞ் செய்யப்படுவானும்
பெய்வானுமாரியெனப் பேரருளைக்—கொய்வானும்
மாயாமலவிருளை வந்தென்னகம்புகுவான்
றூயாம்புகலிநிதி தான். (எஎ)

நிகரொன்றெனைத்துணையுநேட வரியான்
புகலிப்பெருந்தகையைப்போற்றும்—அகமுடையார்
கண்ணிற்கருமணிபோல் வான்மற்றென்கண்ணனையான்
றண்ணருளென்பாலுண்டோ தான். (எஅ)

உண்டோசிவஞான முண்டதிருச்சம்பந்தன்
பண்டாமலரடிமெய்ப்பத்தியார்க்—கொண்டா
மரையோன்வகுத்தவிதி மற்றவனே
யருணடிநிற்பதனு லாங்கு. (எக)

நாலுமுகனார்க்கிளைய ஞானவருட்செல்வமே
நாலுமுகனுக்கருளு நம்பனே—நாலுமுக
நாடுங்கழுமலத்து நாயகமேநின்னருளை
நாடுங்கிழமையரு ணன்று. (அய)

அருளாலேயுன்னை யணைவார்பிறவி
மருளான்மதிமயங்கு வாரோ—அருளாளா
நாயிற்கடைப்படுமென் மாட்டுநயந்தீன்ற
தாயிற்பேராதருணீ தான். (அக)

நீதாசீகாழிநிமலா சிவங்கமழும்
போதாபுராண புனிதனே—நாதா
பரம்பூத்தஞான பரமகுருவேயென்
னுரம்பூத்தலென்றுள் ளுவந்து. (அஉ)

வந்தார்மலரோனும் வாசவனுமாலவனுங்
கொந்தார்மலர்சொரிந்து கூப்பியே—தந்தங்
கரங்கள்சிரங்கொண்டு காழிச்சம்பந்தா
வரங்கணீ தந்தருளு வான். (அங)

வானோரகமகிழ்ந்து வாழ்த்தத்திருமருகல்
மேனாள்விடந்தீர்த்த வித்தகநீ—நானுந்
துவிதப்பிழையொழிக்குஞ் சோதிவடிவே
எவிதத்தானீடேறு வேன். (அச)

ஏற்றுக்கொடியுயர்த்த வெம்மானைக்காட்டுதியோ
கூற்றிடத்திலென்னைக் கொடுத்தியோ—சாற்றரிய
தென்கழுமலப்பதியிற்சேர்த்தியோசம்பந்தா
என்செய்வானுள்ள மியம்பு. (அரு)

என்றுமொழியாவிருநிதியேதென்காழிக்
கன்றேநின்சீரைக் கருதாதார்—பொன்றுங்கால்
அந்தோபரிதிமகனார்க்கென் செயற்பாலா
ரெந்தாய்சம்பந்தா வினி. (அரு)

தாரமர்பூங்கொன்றைச் சடையானிடம்பூத்த
வேரமரும்பூங்கொடிபா லீந்தருளுஞ்—சீரமைந்த

பாலமுதமுண்டபரம்பொருளே யேழையேன்
சீலமிகுங்காழியநின் சேர்வு. (அஎ)

சீலம்பெரி துடைய போரூர்ச்சிதம்பரனார்
தாலம்புகழ்காழிச்சம்பந்தா—கோலஞ்சேர்
வேள்பணியும்பேரழகா வென்னுமவர்மென்மலர்ப்பூந்
தாள்பணிவேனோ சிறியேன்றான். (அஅ)

பணியகிலாருன்னைப்பதிதராவாரொன்
றெணியறிஞர்போற்றுமியறேர்ந்—தணிதருசீ
காழியனேபோதிற்பொலியுங் கழலிணையே
வாழியுனைத்தேனுண் மகிழ்ந்து. (அகூ)

மகிழ்பூத்தஞானமடவாட்புணர்த்த
விகழ்பூத்தவென்னுள்ள மெய்தும்—புகழ்பூத்த
கற்பகமேகாழிக் கவுணியர்தங்கண்மணியா
மற்புதனேயெந்துணை மற்றார். (கூய)

துணையேயென்றுன்னைத் துதித்தார்சீரல்லா
லுணையேன்பெருங்காழி யுற்றாய்—பிணைசேரும்
பாற்படுநெய்போலும் பரிசொருவனுண்மையையென்
பாற்படவிந்நாள்கண் பாராய். (கூக)

நாளாகிமாதமாய் நல்வருடமாயினைய
கோளாகியல்லவாய்க்கூறுநசைக்—காளாகி
மாயும்வினைவலியேன் மாகாழிசசம்பந்தா
ஏயுநினைப்பெறுவே னென்று. (கூஉ)

வேனோக்குடையார்தம் மேலேவிருப்பமுடன்
ஞானகாரத்தினிலே நாடிடா—தூனுடிப்
போய்வருவதேதொழிலாய்ப்போந்திழிந்தேன்சம்பந்தா
தோய்வினையான்மேனளந் தோ. (கூங்)

அந்தோதென்சீகாழி யார்பழிச்சும்போரேறு
கொந்தார்விரைமலர்த்தாள் கூடியே—சிந்தா
குலந்தவிராய்பாழ்நெஞ்சே கூட்டுங்கருணை
நலந்தவமேயென்பதினி நாடு. (கூச)

நாடுநலமெவையு ஞானசம்பந்தன்முனம்
பாடுந்திருப்பதிகம் பாடுவார்—கூடும்
பரிசிற்பிழைபடுமோ பாடியேமாலன்
றொருசிவமுற்றுணோரு மின். (கரு)

மின்னார்கலவிவிலே வீழ்ந்துதடுமாறுமெனக்
கன்னேசிவஞான வாரமுதைக்—கொன்னே
யளித்தனையேசம்பந்தா வன்பனேனுள்ளங்
களித்தனனேநின்னருளைக் கண்டு. (கஙு)

கண்டங்கரியபிரான் கானமலரைவாழ்த்தகிலாக்
கண்டகரையன்றுகழுவிட்ட—கண்டமய
சின்மயஞானுகாரச் சீராளனுய்வருவான்
றன்மயன்காழிச் சம்பந்தன். (கஎ)

மயலில்லாரஞ்ஞை மறமில்லார்வேறு
செயலில்லாருண்மையே சேர்வார்—பயமில்லார்
சம்பந்தன்போற்றுஞ் சமயம்புகுந்தடைவார்
சம்பந்தனத்தனிணைத் தாள். (கஅ)

அத்தத்தொளிரத்தத்தா லமைத்ததாளநிலை
வைத்தருளுஞ்சீகாழி வள்ளலே—முத்துச்
சிவிகையரத்துறையிற்பெற்றசிவக்கன்றே
செவிகையெலாநின்பணி செய்யும் (கக)

செய்வதறியாச்சிறியேனிடருழந்து
நைவதறிந்திலையே நாயகனே—சைவநெறி
பாடிலுயர்நெறியென் றுண்மைபகர்சம்பந்தா
தேடித்தேர்ந்துய்குவனுன் சீர். (ஙு)

வாழ்த்து

வாழிமறையா கமஞ்செந்தமிழ்வேதம்
வாழிசிவசமயம் வாழியே—காழிநகர்
வந்தகுருமணிதாள் வாழியருளுமையோ
டெந்தைபிரான்றுணு மிசைந்து.

முற்றிற்று.

ஆளுடையபிள்ளையார்
திருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

ஸ்ரீசண்முகதேவாயநம:.

*ஸ்ரீ சண்முகஞானபுரம்

சுப்பிரமணியக்கடவுள் பேரில்

ஒருபாவொருபஃது.

காப்பு.

அஞ்சக்கரத்தொரு-விஞ்சைக்களிற்றினைக்
கஞ்சத்திருவடி-நெஞ்சிற்பொருத்துவாம்.

பொன்பூத்தபூங்கொன்றை வேணியானிடம்பூத்தபூங்கொடிக்கண்
பின்பூத்தசேயெனவேபோர்பூத்தவாய்மைதிகழ் பெரியோய்வென்றிக்
கொன்பூத்தவயிற்படையெங்கோமானேயின்பநலங் குறித்துநின்பால்
மன்பூத்தவளந்தருசண்முகஞானபுரத்தடைந்தேன்மௌனவாழ்வே.

வாழ்த்துமடியார்வாழவரமருளுமணிக்குன்றே வயங்குமெய்ம்மை
சூழ்த்துமொருதனிமுதலேசுருதிமுடிமேனின்றதுணையேநாளும்
பாழ்த்தமனப்பதகனடியேனருள்பெற்றுய்யுநெறி பகராயன்பர்
தாழ்த்திமுடிவணங்குறுசண்முகஞானபுரத்தில் வளர்சகசப்பேறே. (௧)

பேறனைத்துமுதவுமருட்பெருமானின் பொன்னடிகள்பேணிவாழு
மாறறியாதந்தோவெம்பவத்தொடக் காலகம்பிரமமென்றுவாளா
கூறியலக்கண்பட்டிங்கழிவார்தங் கூற்றிகந்துகுலவும்வாய்மை [னே.
வீறுமெழிற்பதியாஞ்சண்முகஞானபுரம்பணிந்தேன்விறல்வேலோ

பதியாமுன்றனைப்போற்றும் பருவமுடையேனல்லேன்பாசசால
முதிர்ஞானமிகவல்லேன்முத்திநலங்கமழுமருண்மொய்த்தநின்சீர்த்
துதிமேவுவார்க்கருளுந்துணையேநற்றணிகைமலைச்சோதியேயெங்
கதியேதிங்கருளாய்சண்முகஞானபுரத்தில்வருகருணைத்தேவே. (௪)

தேவேசூர்ப்பகைதடிந்தசிவக்கன்றேயெமைச்சழக்கிற்செலுத்தாதா
[ளெங்
கோவேயன்றறுவர்முலைப்பாலுண்டுவிளையாடுங்குழந்தாய்மோனப்
பூவேபூங்கமலமிசையானெடுமால்போற்றுமருட்பொருப்பேசைவக்
காவேசண்முகஞானபுரத்தமர்ந்தபரஞாநங்கமழுங்குன்றே. (௫)

*புரசபாக்கத்தைச்சார்ந்தகுசப்பேட்டை.

குன்றமிசையேறியடியாருள்ளமேறியெழில்குலவுபச்சை
வென்றிமயிலேறியருட்பரன்மடியிலேறியிட மேவுமம்மை
நன்றுவந்துகண்களிக்கநடந்தேறிமுன்வந்து நடிக்குமெந்தாய்
என்றெனுளமேறுதிசண்முகஞானபுரத்துமினி தேறுவானே. (சு)

வானேவான்வந்துலவுமாருதமேமண்கடையாய் வந்தவின்பத்
தேனேதேன்கைக்குமருட்டீஞ்சொல்பயிலஞ்சுகங்கள் சேர்ந்துவாழுந்
தானேதானாய்த்தழைத்ததருவேசத்தியஞானந் தருவோயுன்னைத்
தானேசண்முகஞானபுரத்தினில்வந்தடிநாயேன் றரிசித்தேனே. (எ)

ஏனோவிங்கலமரவைத்தாயென்னையேன்றுகொளா திறையேயுன்னை
நானேவந்தடிவணங்குநலமுளதோநயந்தருணீநல்காயாயின்
றேனுருஞ்செங்கழுநீர்த்தொடைபுனைந்தசெங்கரும்பே தித்தித்தென்
[னுட்
கோனாய்நின்றெழிறருசண்முகஞானபுரத்தில்வருகுமரவேளே. (அ)

மருவாருந்தண்கடப்பந்தாராயெண்சித்திமுத்தி வாய்ப்பநின்சீர்த்
திருவாரும்பாதமலர்தாராயிந்திரைமகிழுஞ் செங்கண்மாலோன்
தருவானைச்சிறைவிடுத்ததமனியக்குன்றேயெஞ்சம்பந்தஞான
குருவேசண்முகஞானபுரத்துமடியாரிடத்துங் குடிகொண்டானே(கூ)

கொண்டலிவர்ந்தானுள்ளம்பூப்பவருமருமானின் கோலங்காணும்
பண்டைவினைவந்துறுமோபாவியேற்கருளாயின்பவளவான்கற்
கண்டனையாய்சிவமணங்கந்திக்குமொருபன்னிரண்டு கண்ணாய்வாய்
[மைத்
தொண்டர்புகழ்மலிதருசண்முகஞானபுரத்தமர்ந்து துலங்கும்பொற்
[பே-(ய)

மெய்கண்டநாதன்
திருவடிவாழ்க.

(*)

திருச்சிற்றம்பலம்.

உ

ஸ்ரீராமஜெயம்.

அழகியமணவாளதாசரென்கிற

திவ்வியகவி,

பிள்ளைப்பெருமாளையங்கார்.

வெண்பாவினாலருளிச்செய்த

திருவேங்கடமாலை

மூலபாடம்.

இஃது.

திருத்தணிகை,

ஆறுமுகசுவாமிகளால்

பரிசோதித்து,

(*)

பிரிங்கிமாநகரம்.

சாமிமுதலியார் - குமாரர்

வேம்புலிமுதலியாரது

வேதாந்தசமரசவிளக்க-அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விக்கிரமஷு - கார்த்திகைமீ

()(*)()

உ

கடவுள்துணை.

திருவேங்கடமாலை.

மூலபாடம்.

நூன்முகம்.



திண்பார்புகழுந்திருவேங்கடமாலை
வெண்பாவானூறும்விளம்புதற்குத் கண்பாராய்
நாராயணவடியேனுடுந்தமிழ்வேத
பாராயணசடகோபா. (க)

மூலமேயென்றகரிமுன்வந்திடர்தொலைத்து
நீலமேகம்போலநின்றானைப் பாலாய
வேலைநடுவிற்றுயிலும்வித்தகனைவேங்கடத்து
மாலையன்றிப்பாடாதென்வாய். (உ)

ஆழ்வார்கள்செந்தமிழையாதரித்தவேங்கடமென்
றாழ்வானபுன்சொல்லுந்தாங்குமா லேழ்பாரும்
வெல்லுங்கதிர்மணியும்வெம்பரலுஞ்செஞ்சாந்தும்
புல்லும்பொறுத்தமையேபோல், (ங)

திருவேங்கடமாலை.

நூல்.

—(✿)—

பொன்னுமணியும் பொலிந்தோங்கிப்பார்மகட்கு
மின்னுமணிமுடியாம்வேங்கடமே மன்னும்
பரமபதநாட்டினன்பையரவின்சூட்டிற்
சிரமபதநாட்டினன்சேர்வு. (க)

சோதிமதிவந்துதவழ்சோலைமலையோடிரண்டாய்
மேதினியாள்கொங்கைநிகர்வேங்கடமே போதி
லிருப்பாற்கடலானிபமூர்ந்தார்க்கெட்டாத்
திருப்பாற்கடலான்சிலம்பு (உ)

மாலைக்கோலைத்திரியும்வையகத்தோர்தம்பிறவி
வேலைக்கோர்வங்கமாம்வேங்கடமே சோலைத்
தருமாதனைநட்டான்றண்முல்லையாயர்
தருமாதனைநட்டான்சார்பு, (ங)

நாலுதிசைமுகமுநண்ணுதலாலொண்கமல
மேலுறலால்வேதாவாம்வேங்கடமே சாலுறையு
மண்மயக்கந்தேற்றுவித்தான்மாற்றுதல்போலாரியனு
லுண்மயக்கந்தேற்றுவித்தானூர், (ச)

பாணிபிறைகொன்றைபணிசூழ்மானேந்தி
வேணியரனைப்பொருவும்வேங்கடமே யானிறப்
பீதாம்பரனார்பிரமர்வாழண்டங்கண்
மீதாம்பரனார்விருப்பு, (ரு)

மாலாய்ச்சதிதழுவிவச்சிரமேந்திப்புகர்மா
மேலாய்ப்புரந்தரனும்வேங்கடமே நாலாய்க்
கிளர்வாகுமந்தரத்தான்கேட்டமார்வேட்டுத்
தளர்வாகுமந்தரத்தான்சார்பு. (சு)

வள்ளிபுணர்ந்தாறுமுகமன்னிமயின்மேற்கொளலால்
வெள்ளிலைவேல்வேள்போலும்வேங்கடமே யுள்ளினரைத்
தங்கமலப்பார்வையான்றன்னடியார்மேல்வைக்குஞ்
செங்கமலப்பார்வையான்சேர்பு. (எ)

புள்ளரவநீரோவம்போர்மாவரவுமரு
வெள்ளரவவெற்பாகும்வேங்கடமே பொள்ளரியாய்
மாகனகம்பத்தினார்வாய்கண்கையுந்திபதங்
கோகனகம்பத்தினார்குன்று. (அ)

துய்யசெம்பொற்கோயிற்சுடரெரிப்பக்கண்முகிழ்த்து
வெய்யவன்றோமாவிடரும்வேங்கடமே யையிருநூ
றானமுகப்பாம்பணையாரானிரைப்பினாதிவருங்
கானமுகப்பாம்பணையர்காப்பு, (கூ)

மாண்டுபிறக்குந்துயாபோய்வைகுந்தம்புக்கவரு
மீண்டுதொழக்காதலிக்கும்வேங்கடமே பாண்டுமக
னேறிரதப்பாகனாரேத்துமடியார்நாவி
லூறிரதப்பாகனாரூ, (ம)

கோலியொருநான்குகுலமறையுநாற்றிசையும்
வேலியெனநின்றேத்தும்வேங்கடமே வாலிதனை
நண்பாவையாதரித்தான்ஞானமுதலாழ்வார்கள்
வெண்பாவையாதரித்தான்வெற்பு. (மக)

தெள்ளியதோர்வீடருளுஞ்சீர்கேட்டுப்பொன்மலையும்
வெள்ளிமலையும்பணியும்வேங்கடமே யுள்ளின்
கொடிவாகனத்தான்குளிர்ந்திருண்டகாரின்
வடிவாகனத்தான்வரை. (மஉ)

எப்பூதலமுமிறைஞ்சித்திசைநோக்கி
மெய்ப்பூசனைபுரியும்வேங்கடமே கொப்பூ
ழிலகுமுண்டகந்தரத்தானீன்றளிக்குமீரே
ழுலகுமுண்டகந்தரத்தானார், (மங)

நோவினையுநோயினையுநோய்செய்வினையியுனைம்
தீவினையுந்தீர்த்தருளும்வேங்கடமே மூவினைசெய்
மூவடியாய்ப்பச்சென்றான்முன்னாளகலிகைக்குச்
சேவடிவாய்ப்பச்சென்றான்சேர்வு, (மச)

பித்துமலமைமுடம்பேய்குருடுகூன்செவிடு
மெய்த்துயர்நோய்தீர்த்தருளும்வேங்கடமே பத்தருக்கு

வந்ததுக்கங்காப்பான்மலருந்தியினுலகக்
தந்ததுக்கங்காப்பான்றலம், (௰ரு)

வாடப்பசித்தவரியுழுவைவாலாட்டி
மேடத்தைப்பார்த்துறுக்கும்வேங்கடமே கூடத்துக்
கம்பவளமாவென்றுன்காசினிக்கும்வெண்ணெய்க்குஞ்
செம்பவளமாவென்றுன் சேர்வு, (௰சு)

தாவிவரும்வானரங்கடண்குவட்டிற்கற்கடக்
மேவிவரக்கண்டோடும்வேங்கடமே காவிரிசூழ்
பொற்றிருவரங்கத்தான்போதன்சிவனென்னு
மற்றிருவரங்கத்தான் வாழ்வு, (௰எ)

ஒண்சிந்துரந்தைவெறுத்தூடும்பிடிவேழம்
விண்சிங்கங்கண்டனைக்கும்வேங்கடமே யொண்சிந்தைக்
கோராவிருந்தாளொருநாளவிதுரனுக்கு
வாராவிருந்தான்வரை. (௰அ)

மாதுமடக்கன்னிகழைவந்தணுககம்பத்தின்
மீதினடிப்பாளொக்கும்வேங்கடமே யூதுகுழற்
பாலன்பாலாக்குவித்தான் பஞ்சவர்க்காநூற்றுவனைக்
காலன்பாலாக்குவித்தான் காப்பு, (௰கூ)

மன்னுகுடிக்குறவர்வானூர்துலாத்திடையே
மின்னுமணிநிறுக்கும்வேங்கடமே யென்னு
ளரவிந்தப்போதகத்தானன்பாலழைத்த
கரவிந்தப்போதகத்தான்காப்பு (உ௰)

கொல்லைக்குறவர்குளிர்மதிமானைக்ககன
வில்லைக்குனித்தெய்யும்வேங்கடமே கல்லை
யரிவைவடிவாக்கினனன்னமாய்வேத
விரிவைவடிவாக்கினன் வெற்பு, (உக)

தேனேறித்தேன்வைக்குந்திண்கழைமேல்விண்மகர
மீனேறிவேள்கொடியாம்வேங்கடமே வானேறித்
தீமுகனைத்திருப்பார்சேவடிக்காளானவனைக்
காமுகனைத்திருப்பார்காப்பு. (உஉ)

ஒன்கொம்பிற்றேனிறுலூர்பிறைக்கோட்டாலுடைந்து
விண்கும்பவாய்நிறைக்கும்வேங்கடமே வண்கும்ப
கம்பத்தானைக்கடுத்தார்காரரக்கர்போர்மாளக்
கம்பத்தானைக்கடுத்தார்காப்பு (உங)

கூனலிளவெண்குருகுகோனேரியில்விசும்பூர்
மீனநிழலைக்கொத்தும்வேங்கடமே தானகத்துப்
பொன்னுருழையெய்தார்பூங்கழலேதஞ்சமென
வுன்னுருழையெய்தாரூர், (உச)

மண்மூலந்தாவென்றுமந்திகடுவற்குரைப்ப
விண்மூலங்கேட்டேங்கும்வேங்கடமே யொண்மூல
வேதத்திருக்குழையார்வெய்யோதிரண்டனைய
சீதத்திருக்குழையார்சேர்வு. (உரு)

நாலவிட்டப்பொன்னாசனன்னுதலாருந்துதொரு
மேலவிட்டந்தொட்டிழியுய்வேங்கடமே யாலமிட்ட
பொற்புக்களங்கறுத்தார்போர்சரிபவாணன்றோள்
வெற்புக்களங்கறுத்தார்வீடு, (உசு)

பானிறங்கொடெங்கினிளம்பானைவிரியச்சுனையின்
மீனினங்கொக்கென்றொளிக்கும்வேங்கடமே. வானிமிர்ந்த
வெள்ளத்துக்கப்பாலான்மெய்ப்பரமயோகியர்தம்
முள்ளத்துக்கப்பாலானூர். (உஎ)

கொம்பணியுந்தேமாங்குயில்கருடன்போற்கூவ
வெம்பணிகள்புற்றடையும்வேங்கடவே வம்பணியிம்
விண்ணினைந்துகாப்பார்மிசைவைத்தார்பத்தரைத்தம்
முண்ணினைந்துகாப்பாருவப்பு. (உஅ)

தெங்கிளநீர்வீழச்சிதறுமணியைக்கரிகள்
வெங்கனலென்றஞ்சிப்போம்வேங்கடமே பைங்கழையின்
மாண்டாரைப்பண்டழைத்தார்மாமறையோன்பாற்றோன்றி
மாண்டாரைப்பண்டழைத்தார்வாழ்வு, (உகூ)

அங்கயலுண்மேகமதிரப்பெரும்பாந்தள்
வெங்கயமென்றங்காக்கும்வேங்கமே பங்கயனோ

டம்புவனங்கடந்தாரம்புயத்துமங்கையொடு
வெம்புவனங்கடந்தார்வெற்பு (௩௮)

திங்களிறுமாந்துலவத்தீம்பாற்கவுளமென்று
வெங்களிருகைநீட்டும்வேங்கடமே பொங்கமரி
லார்த்தவலம்புரியார்ர்ட்பட்டார்செய்தபிழை,
பார்த்தவலம்புரியார்பற்று. (௩௧)

அம்புலியின்வாழ்மானதிரக்குரற்பகுவாய்
வெம்புலியைக்கண்டேங்கும்வேங்கடமே நம்புமெனை
வீங்கூத்தைக்கண்டிருப்பார்விண்ணோர்நரர்பிறந்து
சாங்கூத்தைக்கண்டிருப்பார்சார்பு (௩௨)

கண்ணல்வெடித்தகழைமுத்தங்கார்தொளைத்து
விண்ணலியோடுதிரும்வேங்கடமே யெண்ணார்
கலங்கவருமஞ்சனையார்கான்முளையையூர்ந்தார்
கலங்கவருமஞ்சனையார்சார்பு, (௩௩)

செல்லுக்குமேற்செல்லுந்திண்ணியவேய்வாசவனார்
வில்லுக்குவாளியாம்வேங்கடமே யெல்லுக்கு
ளந்தகாரம்படைத்தாராரழல்வாயம்பினால்
வெந்தகாரம்படைத்தார்வெற்பு. (௩௪)

பொன்கமழுங்கற்பகத்தின்பூங்காவனத்துக்கு
மென்கமுகங்காலாகும்வேங்கடமே நன்கமரு
மூரத்திகிரியாரூதுந்திகிரியார்
வீரத்திகிரியார்வெற்பு (௩௫)

தண்ணிலைக்கண்பிங்கிற்றலைதொடுத்ததேனிறால்
விண்ணிலைக்கண்ணடியாம்வேங்கடமே யுண்ணிலைக்குஞ்
சோதிவணங்கரியார்தூயசனகாதியரு
மோதிவணங்கரியாரூர். (௩௬)

தண்கமுகின்பாளைதடங்கதிரின்செல்வனுக்கு
வெண்கவரிபோலசையும்வேங்கடமே யொண்கடல்சூழ்
வண்டுவரைநாட்டினன்மத்தாகவாரிதியுட்
பண்டுவரைநாட்டினன்பற்று (௩௭)

அங்கதிருங்கான்யாற்றடர்திவலையானனைந்து
வெங்கதிருந்தண்கதிராமவேங்கடமே செங்கதிர்வேந்
சேர்ந்தனத்தமைந்தான்றிருத்தாத்தைவிற்கிளையாள்
பூந்தனத்தமைந்தான்பொருப்பு. (௩௮)

சேணுலவுதிங்களெனுஞ்சித்தசவேள்வெண்குடைக்கு
வேணுவொருகாம்பாகும்வேங்கடமே கோணுமனத்
தென்னையாளாகத்தானின்னருள்செய்தான்கமல
மின்னையாளாகத்தான்வெற்பு (௩௯)

தேவருடையைந்தருவின்செந்தேனிறுல்கிருப
மீவருடைபாய்கின்றவேங்கடமே மூவடிமனை
போயிரந்தாரத்தார்புனையுமொருபதினு
றுயிரந்தாரத்தாரகம். (௪௦)

வன்குறிஞ்சிமாதர்பால்வானோர்மருந்துக்கு
மென்குறிஞ்சித்தேன்மாறும்வேங்கடமே நன்குறிஞ்சிப்
பேய்த்தனஞ்சுவைத்தார்பிறர்க்கமுதீந்தீசனுக்கு
வாய்த்தனஞ்சுவைத்தார்வரை. (௪௧)

வாவுகவின்மந்திநுகர்மாங்கனிக்குக்கற்பகத்தின்
மேவுகவிகைநீட்டும்வேங்கடமே தாவுகடல்
வேகவிலங்கைக்கொண்டார்வீடணைவைத்தொழிந்தார்
சாகவிலங்கைக்கொண்டார்சார்பு. (௪௨)

வெள்ளியகன்மீதேவிடர்முளைத்தசெங்காந்தள்
லெள்ளியல்விளக்காம்வேங்கடமே வெள்ளியெனும்
வேதியனுட்டங்கெடுத்தார்மேதினியைப்பாதலமென்
றோதியனுட்டங்கெடுத்தாரூர். (௪௩)

அல்லிமலர்க்காந்தளின்மேலாடுஞ்சுரும்பினங்கண்
மெல்லியர்கள்கைக்கழகாம்வேங்கடமே மல்லினைப்
பண்டறைந்தவன்புடையார்பார்த்தனுக்குத்தத்துவநூல்
விண்டறைந்தவன்புடையார்வெற்பு. (௪௪)

காந்தளிரவலர்போற்கையேற்பக்கொன்றைகொடை
வேந்தனெனப்பொன்சொரியும்வேங்கடமே பூந்துளவின்

கான்மடங்காமார்வத்தார்காணவிரும்பினர்மே
னன்மடங்காமார்வத்தார்நாடு, (௪௫)

நாகத்தின்மேற்குறவர்நன்கெறிந்தமாணிக்க
மேகத்தின்மின்புரையும்வேங்கடமே மாகத்தின்
மாத்தாண்டமண்டலத்தார்வாயுண்டுமிழ்ந்தளந்து
காத்தாண்டமண்டலத்தார் காப்பு. (௪௬)

செம்பதுமராகச்சிலைசூழ்பெரும்பாந்தள்
வெம்பரிதியூர்கோளாம்வேங்கடமே யும்பருல
கோதத்தினப்புறத்தானோராலிலைதுயின்றான்
வேதத்தினப்புறத்தான் வெற்பு, (௪௭)

கோலமணிப்பாறையிற்பாய்கோடரங்கள்செங்கதிரோன்
மேலனுமன்பாய்ந்தனையவேங்கடமே நாலுமறை
பாய்ந்தபரதத்துவந்தானனன்குடமாடும்
வாய்ந்தபரதத்துவந்தான் வாழ்வு, (௪௮)

கொம்பினிறுல்வாங்கநிமிர்குஞ்சரக்கையம்புலிமேல்
வெம்பியெழுங்கோளரவாம்வேங்கடமே தும்பியல
போர்காதுமீர்ந்தார்புனையரக்கிழுக்கினொடு
வார்காதுமீந்தார் வரை (௪௯)

வண்மைதிகழ்வெண்பளிங்குவட்டத்திற்கண்டுயின்மான்
விண்மதியின்மானேய்க்கும்வேங்கடமே யொண்மதியா
னாலைத்தாமோதரனார்நோக்கவரியார்துளவ
மாலைத்தாமோதரனார் வாழ்வு. (௫௦)

சிலேடைகள்.

காதலித்துச்சார்ந்தவர்க்குங்காமியத்தைச்சார்ந்தவர்க்கும்
வேதனைக்கூற்றைத்தவிர்க்கும்வேங்கடமே போதகத்தை
மோதிமருப்பொசித்தார்முன்பதினாறுயிரவ
ரோதிமருப்பொசித்தா ரூர். (௫௧)

கேள்வித்துறவோருங்கேடறவில்வாழ்வோரும்
வேள்விக்கினமாற்றும்வேங்கடமே மூள்வித்து

முன்பாரதமுடித்தார் மொய்வேந்தாவந்தவிய
வன்பாரதமுடித்தார் வாழ்வு (௫௨)

பொய்யாம்வினையேனைப்போல்வாருமன்பருஞ்செய்
மெய்யாம்வழுத்தேயும்வேங்கடமே செய்யா
டனத்துவசப்பொற்புள்ளார்தானவரைமோதிஞ்
சினத்துவசப்பொற்புள்ளார் சேர்வு (௫௩)

கோட்டிலாவுள்ளத்துக்கோதிலடியவரும்
வேடருமங்கைவரைவெல்வேங்கடமே மூடர்
மனமாமனைக்கொன்றார்வன்கஞ்சனென்னுஞ்
சினமாமனைக்கொன்றார்சேர்வு. (௫௪)

மொய்வதனமங்கையர்கண்முன்கையும்யோகியர்கண்
மெய்வயதுமஞ்சுகமார்வேங்கடமே பெய்வளையார்
பாற்றிருப்பாதஞ்சிவந்தார் பற்றினார்யுன்பிறப்பை
மாற்றிருப்பாதஞ்சிவந்தார்வாழ்வு. (௫௫)

இல்லக்குறத்தியரும்யாக்கநிலைவேட்டவரு
மெல்லக்கிழங்கெடுக்கும்வேங்கடமே நல்ல
புதுப்பூவைவண்ணத்தான்போர்முகத்துச்செவ்வாய்
மதுப்பூவைவண்ணத்தான் வாழ்வு. (௫௬)

தேனியலுங்கூந்தலார்செங்கரமுமாதவத்தோர்
மேனியுமையம்பொழியும்வேங்கடமே ஞானியர்க
டங்குறியெட்டக்கரத்தார்தாஞரன்மேல்வைத்துவெண்ணெய்
தங்குறியெட்டக்கரத்தார்சார்வு, (௫௭)

காணையிலார்சொற்கேட்டகந்திருவருந்தவரும்
வீணையிராகத்தைவிடும்வேங்கடமே கோணை
யிருங்குண்டையோட்டினனேற்பொழிந்தான்கூனின்
மருங்குண்டையோட்டினன்வாழ்வு, (௫௮)

முந்நூன்மறையவருமூதரம்பைமாருநடு
மெய்ந்நூனலங்கவரும்வேங்கடமே பொய்ந்நூலா
மச்சமயக்கத்திரைாதரிக்கத்தெய்வங்கள்
ஒச்சமயககத்தினர்வாழ்வு (௫௯)

ஓதுமறையோர்புறமுமுள்ளுங்கலையினரு
மேதையகலாவிருக்கும்வேங்கடமே கோதைகுழற்
சுற்றுததாரணியார் தூயதிருத்தாளுன்றப்
பற்றுததாரணியார் பற்று. (௧௮)

நன்முலைபோல்வெண்ணகையார்நாயகர்மேல்வைத்தநெஞ்சு
மென்முலையுங்கற்புரஞ்சேரவேங்கடமே முன்மலைந்து
தோற்றமாரீசனுர்தோற்றமாயம்புரிய
சிற்றமாரீசனுர் வோவு (௧௯)

கூறுங்கிளிமொழியார்கொங்கையென்றுங்கண்ணென்றும்
வீறுமருப்பினைசேர்வேங்கடமே நாறுந்
துளவமலர்க்கண்ணியார்தொண்டாய்த்தமக்கன்
புளவமலர்க்கண்ணியா ரூர். (௨௦)

மாதரம்பொன்மேனிவடிவுமவர்குரங்கு
மீதரம்பையைப்பழிக்கும்வேங்கடமே பூதமைந்தின்
பம்பரமாகாயத்தார்பாடினுல்வீடருளு
நமபரமாகாயத்தார் நாடு (௨௧)

கோள்கரவுகற்றவிழிக்கோதையர்கள்பொற்றுளும்
வேள்கரமுமமபஞ்சார்வேங்கடமே நீள்கரனுர்
தூடணனுர்முத்தலையார் துஞ்சவெய்துதுஞ்சாரைக்
கூடணனுர்முத்தலையார் குன்று (௨௨)

கோங்கைக்கோடேறிக்குலுக்குமரியுங்கரியும்
வேங்கைக்கோடாதரிக்கும்வேங்கடமே பூங்கைக்குண்
மெய்த்தவளச்சங்கெடுத்தார்மேகலைவிட்டங்கைதலை
வைத்தவளச்சங்கொடுத்தார் வாழ்வு (௨௩)

மாவிற்குயிலுமயிலுமொளிசெய்ய
மேவிப்புயறவழும்வெங்கடமே யாவிக்குள்
னானவருடந்தடுத்தாரானிரைக்குக்குன்றேந்தி
வானவருடந்தடுத்தார் வாழ்வு. (௨௪)

கானேடருவிகனகமுமுததுந்தள்ளி
மீனேவெனக்கொழிக்கும்வேங்கடமே வானேர்கண்

மேகனயனங்கொண்டாவேணியரன்காண்பறியாக்
காகனயனங்கொண்டார் காப்பு, (௬௭)

கண்டடைந்தவானவருங்காந்தட்குலமலரும்
விண்டவிர்ந்துநிற்கின்றவேங்கடமே தொண்டற்கு
வைகுந்தநாட்டான்மருவுருவமீயந்துவைக்கும்
வைகுந்தநாட்டான் வரை (௬௮)

வாம்புலியினொடுவானூர்தினகரனும்
வேழங்களும்வலஞ்செய்வேங்கடமே யூழின்கட்
சற்றுயினுமினியான்சாராவகையருளு
நற்றுயினுமினியா னாடு, (௬௯)

தாட்கமப்பூஞ்சுனைக்கும்சாயங்கள்கோயதுதிரி
வேட்கும்வடிவில்லாவேங்கடமே வாட்கலிய
னுவியப்பாம்பாட்டினுர்நச்சுமடுவைக்கலக்கித்
தாவியப்பாம்பாட்டினுர் சார்பு, (௭௦)

ஆயுந்துறவறத்தையண்டினமுத்தண்டினரும்
வேயுங்கிளைவிட்டவேங்கடமே தோயுந்
தயிர்க்காத்தாங்கட்டுண்டார்தாரணியிற்றந்த
வுயிர்க்காத்தாங்கட்டுண்டா ரூர், (௭௧)

தொண்டொடுமெய்யன்புடையார் தூய்மனமுஞ்சந்தனமும்
விண்டொடுபொற்பாம்பணைசேர்வேங்கடமே தண்டொடுவாள்
கோலமருங்கார்முகத்தார்கோடாழியார்குழையின்
கோலமருங்கார்முகத்தார் குன்று. (௭௨)

கிட்டுநெறியோகியருங்கிள்ளைகளுந்தங்கூடு
விட்டுமேறுகூடையும்வேங்கடமே யெட்டுமத
வாவென்றுவந்தான்வரநாளைவாவின்று
போவென்றுவந்தான் பொருப்பு, (௭௩)

மட்டுவளர்சாலினுமாதவத்தோர்சிந்தையினும்
விட்டுமெதிவிளக்கும்வேங்கடமே கட்டுசடை
நீர்க்கங்கையேற்றுனிறப்பொழித்தானீள்குமளாயப்
பார்க்கங்கையேற்றுன் பதி, (௭௪)

புக்கவருமாதவரும்பூமதுவுண்வண்டினமு
மெய்க்கவசம்பூண்டிருக்கும்வேங்கடமே யொக்கவெனை
யன்பதினாலாண்டாரரிவையோடுங்கானுறைந்த
வன்பதினாலாண்டார் வரை, (எரு)

தக்கமனையோர்நாவுந்தண்சாரலின்புடையு
மிக்கமனுவிளையும்வேங்கடமே யக்கரவம்
பூண்டார்க்குமாறுடைத்தார்பொங்கோதநீரடைத்து
மீண்டார்க்குமாறுடைத்தார் வெற்பு. (எகூ)

நீடுகொடிமுடியுநீதிநெறிவேதியர்கள்
வீடுமகமருவும்வேங்கடமே கோடுங்
கருத்துளவமாலையார்காணுமனின்ற
மருத்துளவமாலையார் வாழ்வு (எஎ)

சீதங்கொள்சாரலினுஞ்சீர்மறையோரில்லிடத்து
வேதங்கனல்வளரும்வேங்கடமே போதன்
சிரித்துப்புரந்துடைத்தான்றேவரோடுமெண்டம்
விரித்துப்புரந்துடைத்தான் வெற்பு, (எஅ)

நன்கோடுபோலுமுலைநாரியருஞ்சண்பகத்தின்
மென்கோடுங்கற்பகஞ்சேர்வேங்கடமே வன்கோடு
கூரிருவராகனார்கோகநகைபூமியென்னு
மோரிருவராரனாரூர், (எகூ)

தோடஞ்சுங்கோதையர்கள்கொங்கையினுங்குஞ்சரத்தும்
வேடன்சரந்துரக்கும்வேங்கடமே சேடனெனு
மோர்பன்னகத்திடந்தானுற்றுனிரணியனைக்
கூர்பன்னகத்திடந்தான் குன்று, (அ௰)

நாரியர்தங்கூந்தலினுநாலுமருவியினும்
வேரினறுஞ்சாந்தொழுகும்வேங்கடமே பாரினளா
ரற்பசுவர்கத்தாரறிவரியார்முன்மேய்த்த
கற்பசுவர்க்கத்தார் நாடு, (அக)

மாதரார்கண்ணுமலைச்சாரலுங்காமர்
வேதமார்க்கஞ்செறியும் வேங்கடமே பாதமாம்

போதப்படத்துவைத்தாபோர்வளையமாற்றரசர்
வாதப்படத்துவைத்தார் வாழ்வு (அஉ)

எத்திக்குங்காம்புமெயினருமாரத்தினையே
வித்துக்கதிர்விளைக்கும்வேங்கடமே தித்திக்கும்
காரிமாறன்பாவார்காதலித்தார்தம்பிரவி
வாரிமாறன்பாவார் வாழ்வு, (அங)

பாரோடுகானயாறும்பல்களிறுநந்தவனம்
வேரோடலைத்தீர்க்கும்வேங்கடமே காரோதஞ்
சுட்டகருவிற்படையார்தொண்டைமீண்டேழுவகைப்
பட்டகருவிற்படையார் பற்று. (அச)

நன்காமர்வண்டினமுநால்வாய்மதகரியு
மென்காமரமுழக்கும்வேங்கடமே புன்காம
மேவார்கழலானெதுளத்திலென்றலைவை
பூவார்கழலார் பொருப்பு, (அரு)

பாம்பும்குளிர்சந்தின்பக்கத்தினிற்கின்ற
வேம்புமருத்துவக்கும்வேக்கடமே காம்புகர
மானவரைநன்குடையாராளாய்த்தொழுதேத்தும்
வானவரைநான்குடையார் வாழ்வு, (அசு)

சாருமருவிதவழ்சாரலுஞ்செஞ்சந்தனத்தின்
வேருமாவமருவேங்கடமே நேரு
மதுகையிடவர்க்கறுத்தார்மாமலரோன்சாப
மதுகையிடவர்க்கறுத்தார் வாழ்வு (அள்)

மணமட்டுத்தாழ்சுனையும்வட்டசிலாதலமும்
விண்மட்டுத்தாமரைசேர்வேங்கடமே யெண்மட்டும்
பாதமுன்னினைந்தார்பரமபதஞ்சேர்க்கவென்று
போதமுன்னினைந்தார் பொருப்பு, (அஅ)

போதாவிருசுடரும்போதுதற்குமோதுதற்கும்
வேதாவினன்முடியாவேங்கடமே மாதாவின்
விங்குதனத்துக்கினியான்விம்மியழாதாட்கொண்டான்
ஞங்குதனத்துக்கினியான் சாபு, (அகூ)

பேய்க்குமொருபேய்போன்றுபித்தாய்த்திரிவோர்க்கும்
வேய்க்குமணிமுத்திவரும்வேங்கடமே வாய்க்கமுதூர்
வண்மைப்பேராயிரந்தான்மன்னினன்மாவலிபாற்
றண்மைப்பேராயிரந்தான் சார்பு, (கூ௰)

வாழ்க்கைமனைநீத்தவரும்வாளரியுமர்தர்தங்கள்
வேட்கைமறந்திகழும்வேங்கடமே தோட்கைவிழ
மாகவந்தனைக்கழித்தார்வாழிலங்கைப்பாதகனை
லோகவந்தனைக்கழித்தா ரூர், (கூக)

கூட்டுத்தவருங்கொளரிகளின்றொகையும்
வேட்டுவரம்பொழியும்வேங்கடமே மோட்டுமதத்
தந்திக்கமலத்தார்தாம்பெரும்வீடளிததா
ருந்திக்கமலத்தா ரூர் (கூஉ)

வஞ்சமடித்திருப்பார்வாக்குங்கலைக்கோடும்
விஞ்சமடித்திருக்கார்வேங்கடமே கஞ்சப்
பிரமானந்தத்தான்பிரபஞ்சமாய்த்த
பரமானந்தத்தான்பதி, (கூங)

சலஞ்சுங்கண்மடவார்தேங்குழலுங்கோங்கினமுர்
மேலஞ்சுவர்க்கமார்வேங்கடமே கோலஞ்சே
மாரிலலங்காரத்தார்மற்றும்பல்பூணணிந்த
காரிலலங்காரத்தார்காப்பு. (கூச)

கொய்யுமலர்ச்சோலைக்கொக்கும்பினரியாளர்
மெய்யும்வடுத்தவிரும்வேங்கடமே நையுஞ்
சனனுந்தகனுர்தலையிலிதோள்காய்ந்த
சினனுந்தகனுர் சிலம்பு, (கூரு)

நேர்க்கவலைநோயினருநீடுசிலைவேடுவரும்
வோக்கவலைமூலங்கல்வேங்கடமே கார்க்கடன்மேற்
றுண்டுங்காலத்திறப்பார்தம்மைவிழுங்கிக்கனிவாய்
மீண்டுங்காலத்திறப்பார் வெற்பு, (கூசு)

தண்டாமரைச்சுனையிற்சாதகமும்வேடுவரும்
கிவிண்டாரைநாடுகின்றவேங்கடமே தொண்டாச்

யேவத்தனக்குடையாரொன்னைமுன்னாளெடுத்த
கோவத்தனக்குடையார் குன்று, (௯௭)

வாழரியுஞ்சந்தனந்தோய்மாருதமுந்தாக்குதலால்
வேயுமருப்புகுதும்வேங்கடமே நீழலமர்
பஞ்சவடிகாட்டினன்பாரளப்பான்போலெவர்க்கும்
கஞ்சவடிகாட்டினன் கர்ப்பு, (௯௮)

எவ்விடமுமாறுதோய்ந்தெல்லோரும்பல்பாம்பும்
வெவ்விடரினீங்கியெழும்வேங்கடமே தெவ்விடையே
ழட்டவனுகத்தனைனுதிமறைநூன்மார்க்கம்
விட்டவனுகத்தனையான் வெற்பு, (௯௯)

பாடுமதுகரமும்பச்சைதழைக்குடிலின்
வேடுமணமருவும்வேங்கடமே நீடு
மகராலையங்கடந்தார்வாழ்வசுதேவருக்கு
மகராலையங்கடந்தார் வாழ்வு, ௧

ஆதிதிருவேங்கடமென்றுயிரம்பேரானிடமென்
றொதியவெண்பாவொருநூறுங் கோதில்
குணவாளபட்டிருகோகனத்தாள்சேர்
மணவாளதாசன்றன் வாக்கு (௧௧)

திருவேங்கடமாலை,

முற்றிறது.

ஸ்ரீ

சர்வம் விஷ்ணுமயம் ஜகத்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

விசுவரூபபசுசம்வாதம் என்னும்

பரப்பிரம விவேகம்.

அழகியமணவாளதாசர்

என்கிற-திவ்வியகவி

பிள்ளைப்பெருமாளையங்கார்

திருவாய்மலர்ந்தருளியது.

இஃது.

உபயவேதாந்தாசாரியராகியதிருமலை

நல்லான்சக்கிரவர்த்திசுவாமிகள்

திருவடிசம்பந்தரும்

விசிஷ்டாத்துவிதவேதாந்ததரிசன

சம்பிரதாயஸ்தரான

ஸ்ரீமத்வேதமார்க்கச்சபையாரில்

ஒருவரும்

அத்திரிருஷிகோத்திரரும்ஆகிய

கெ, பார்த்தசாரதிராஜா

அவர்களால்

பார்வையிட்டு

கலைமகள்விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

கலியுகாப்தம்- ௪௧௧௫

துன்மதிவருஷ- ஆவணிமீ

இந்நூல்அச்சுப் பதித்தவின்வரலாறு,

இச்சென்னையில்-தமிழிலக்கண விலக்கியங்களைக்கற்றுணர்ந்தவர்களாயும்-சைவசமயசீலர்களாயுமுள்ள, சென்னைக்கல்விச்சங்கத்தில்தமிழ்த்தலைமைப்புலமைநடாத்தும்இயற்றமிழ்ச்சிரியர் - தி-விசாகப்பெருமாளையர்காஞ்சீபுரம்-வித்வான்சபாபதிமுதலியார்புரசை--அ சபாபதிமுதலியார்-ஷை-கல்விச்சங்கத்தில் தமிழ்ப்புலவர்-பு-பொன்னம்பலக்கவிராயர்-நில்லையம்பூர்-சந்திரசேகரகவிராசபண்டிதர்-யாழ்ப்பாணம் போலஇச்சென்னையும்மற்றஇடங்களும் கிறிஸ்தவர்மயமாகவொட்டாமல் சுஞ்ஞானசூரியோதயமுதலிய சிறுபுத்தகங்களைச்சிட்டுஉபகரிக்கும், சென்னைச்சதுர்வேதசித்தாந்த சபாபோஷிகர்களாகிய-சைவத-உமாபதிமுதலியார்-சிற்றம்பலமுதலியார்முதலானவர்கள் இதுவரையும் ஸ்ரீவைணவசமயத்தின்மேல்வாதொருகுறைவும்கூறிஅச்சிட்டதில்லையாரோஒருவர் அரதத்தாசாரியசுவாமிகள்சுலோகப்படி சிஞ்ஞானசுவாமிகள்மொழிபெயர்ப்பு ஆசிரியப்பாவென்றுஒன்றைத்தம்பேரூரிலவாமலச்சிட்டிருக்கின்றனர் இவர் இவ்வூர்ச்சைவசமயிகளுடையஅபிமானம்பெறும்படிஅதுசெய்தார்மறுபடியும்அதுநிற்க இரதத்தாசாரியசுவாமிகளாகிய அழகியமணவாளதாசர் அருளிச்செய்த இந்நூல் அதற்குமாறாக வெளிப்படுத்தலாயிற்று.

இனிப்பதிப்பிக்கப்படுவன.

சைவவைணவதீபம்.

நீலகண்டசிருங்கபங்கம்.

சிவதத்துவவிவேககண்டனம்.

சிவார்க்கமணிதீபிகாபிரவாதம்.

சூத்ரதேவதாநிர்ணயம்.

பாஷண்டமததப்தம்.

பரப்பிரமநிரூபணசாரசங்கிரகம்.

ஹரி: ஓம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பரப்பிரமவிவேகம்.

நூன்முகம்.

நித்ய விபூதியாகிய பேரின்பத்தில் நித்யர்முத்தர் சேவிக்கும்படி வீற்றிருக்கிற ஸ்ரீமந்நாராயணன் ஆதிபஞ்சோதி யுருவை அங்குவைத்து லீலாவிபூதியிலுள்ள சேதந சேதனர்களுஜ்ஜீவிக்க அர்ச்சாவதாரமாயெழுந்தருளியிருக்கிற திவ்யதேசங்களிலிறப்புற்றோங்கிய திருவரங்கம் பெரியகோயிலில் உலகத்திலுள்ள சேதனர்களைத்திருத்தி ஸ்ரீமத்வேதமார்க்க தரிசனத்தில் செலுத்தியருள ஸ்ரீபெரும்பூதூரில் திருவவதாரங் கண்டருளி மாயாவாத முதலிய மார்க்கங்களைத்திரஸ்கரித்து ஸ்ரீவிசிஷ்டாத்துவித வேதாந்த தரிசனத்தை நிலைநாட்டிப் பராங்குசரால் கொடுக்கப்பட்ட பரசமயக் கோளரி யென்னும் திருநாமம் பெற்று எழுந்தருளியிருந்தஸ்ரீஉடையவருடைய திருவடிச்சம்பந்தியாய்ப்பிரபன்னகாயத்திரியைத் திருவாய் மலர்ந்தருளிய ஸ்ரீபாதமுதலிலமிசதிலகராய்த் திருவரங்கத்தமுதனார் திருப்பேரனாகிய அழகியமணவாளதாசர் என்கின்ற திவ்யகவிப் பிள்ளைப்பெருமாளையங்காரவர்கள் நம்பெருமாள் முதலிய சிலதிவ்யதேசப்பெருமாள்களின்மீது தமிழ்ப்பிரபந்தங்கள் பலசெய்தருளுங்காலத்தில் தமி ழிலக்கணவிலக்கியங்களைக் கற்றுவலலகிறந்தபுலவர்கள் பலரும் இவருடைய கவிகளில்சொன்னோக்குப்பொருணோக்குமுதலியவற்றைக்கண்டுங் கேட்டும் கொண்டாடுவதை ஆனைக்காவிலிருக்கும் ஆகமவாதிகள் கேள்விப்பட்டு இப்படிப்பட்ட வித்துவானால் நம்முடைய சம்புகேசரச் சிவபெருமான்மீது ஒருபிரபந்தம் பாடுவித்துக் கொள்ளவேண்டுமென்னுங் கருத்துடையவர்களாய் ஒருநாள் இவருடைய திருமாளிகையில்வந்து தங்கள் கருத்தை வெளியிட அதுகேட்டருளித்

திரிகாணத்தாலும் தேவதர்சுரத்தைப்பற்றறவிட்ட சுத்ததத்துவ தொண்டக்குலஸ்ரீவைஷ்ணவசிகாமணியாகிய ஐயங்காரவர்கள் புன்னகைகொண்டு யாம் அரங்கனைப்பாடினவாயினால் மற்றொருகுரங்கனைப் பாடுவதில்லையேயெனத் திருவாய் மலர்ந்தருளக் கேட்டு (குளிக்கப்போய்ச் சேற்றைப்பூசிக்கொள்ளு மவனைப்போல) நம்முடைய பரமசிவத்தின்மீது பாடல்பெற்றுக்கொள்ளவந்து குரங்கனென்னும் சொல்லைப் பெற்றுக்கொண்டோமேயென்று மனம்பொறாதவர்களாய்ச் சடக்கெனவெழுந்திருந்து எவ்வகையினாலாவது உம்முடையவாக்கினால் எங்கள்பரமசிவத்தின்மீது ஒருபாடலாவது பெற்றுக்கொள்ளுகிறோமென்றுசபதங்கூறித் தங்களிருப்பிடத்துக்குட்போய்அதற்குவகைதேடிக்கொண்டிருந்தனர்கள்.

இப்படி யிருக்கச்செய்தே கோயிலில் உதயத்தில் திருக்காப்பறிக்கி நம்பெருமாளுக்குச்செய்யுங் கைங்கரியமாகிய விசுவரூபதரிசனஞ்செய்விக்கப்போகிற சமயத்தில்கொண்டுபோய் அர்ச்சகர் சமர்ப்பிக்கிற பொருள்களில் ஒன்றாகிய கபிலைஎன்கிற பசுவானது* ஒருநாள் ஆனைக்காவைச்சார்ந்த ஒருபுலத்தில்மேய அதைமேற்கூறிய ஆகமவாதிகள்பிடித்துஇதனால்தாங்கள்கொண்ட கருத்தையீடேற்றுவித்துக்கொள்ளலாமென நினைத்துக் கட்டிவைத்தனர்கள் அன்றிராத்திரி கோயில் அர்ச்சகர்முதலாயினோர் விசுவரூபதரிசனப்பசவைக்காணாமல் தேடிக்கொண்டுபோகையில் ஆனைக்காவிலிருக்கக்கண்டு ஆகமவாதியர்களைப்பசுவைக்கொடுக்கும்படிக்கேட்க அவர்கள் உங்களுடையபிள்ளைப்பெருமாளையங்காரவர்கள்வந்துகேட்டால் தருகிறோமென்றுசொல்ல அதுகேட்டு விசுவரூபதரிசனத்துக்குப் பிராதகாலத்திலவேண்டுமேயென்று மெண்ணத்தினால் அதைமறு

---

* விஸ்வரூபதரிசனப் பொருள்களில் கபிலையும்

ஒன்றென்பதற்குப் பிரமாணம்,
திருப்பள்ளியெழுச்சியில் - எட்டாவதுபாசுரம்.

வம்பவிழ்வானவர்வாயுறைவழங்க..... ....*
மாதிகபிலைவொண்கண்ணடிமுதலா..... ... .*
எம்பெருமான்படிமக்கலங்காண்டற்... ... ... *
கேற்புனவாயினகொண்டுநன்முனிவர்..... ....*
தும்புருநாரதர்புகுந்தனரிவரோ..... .....*
தோன்றினிரவியுந்துலங்கொளிபரப்பி.....*
அம்பரத்தலத்துநின்றகல்கின்றதிருள்போய்..... ...*
அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே..... .....*

த்து ஒன்றும் பேசாமல் ஒத்துக்கொண்டு பரபரப்புடன்சென்று ஐயங்காரவர்களிடத்தில்விண்ணப்பஞ்செய்ய "மறந்தும்புறந்தொழாமாந்தர்,, என்கிறபடியே அந்தப்பிரபன்ன நிஷ்டானுபவராகிய வைதிக வைஷ்ணவரானவர் அதுகேட்டருளித்தூஷிகர்மகாலந்தவிரமற்றைக்காலத்தில்ருத்திராக்ஷமிலில்அடிவைப்பதுகூடுமோஅன்றியும் அவ்வாலயத்தில் பிரவேசிப்பது வைதிகவைஷ்ணவனுக்குத் தக்கதன்று ஆனைதுரத்தி வந்தாலும் ஆனைக்காவில் நுழையாதே என்கிற பழமொழியை யேனுங் கேட்டதில்லையோ ஆதலால் அந்த ஆகம வாதியர்களைக் கோயிலிடத்தில் அழைத்துவாருங் கோளெனச் சொல்லினர் அவ்வாறே அந்த ஸ்ரீவைஷ்ணவர்களும் ஆனைக்காவில் சென்று அவர்களுக்குச்சொல்லவ்வகையாலாயினும் ஐயங்காரவர்களால் ஒருபாடலைபெற்றுக்கொள்ள எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவர்களும் நம்முடைய எண்ணம் நிறைவேறுங் காலமிதுதானென்று அதற்கொத்துக்கொண்டு அதிக சந்தோஷத்தோடு அக்கபிலையையும் ஒட்டிக்கொண்டு ஜயவிஜயர்களெழுந்தருளியிருக்கும் சந்தனுமகாராஜா மண்டபத்தில் வந்து சேர்ந்தனர்கள் ஐயங்காரவர்களும் அவ்விடத்திலெழுந்தருளிக் கபிலையை விடுவதற்கு உங்களுடையகருத்தென்னுகேட்டருள அவர்கள் உம்முடையவாக்கால்சம்புகேசுரச் சிவபெருமானுகிய எங்கள் தெய்வத்தின்மீதுஒருபாடல்பாடித்தருவீரேல்விசுவரூப தரிசனப்பசுவைதாங்கள் விடுவதற்கு யாதோராடங்கமுமிலையென்று சொல்லினர். (பொய்ம்மையும் வாய்மை யிடத்தபுரை தீர்ந்த நன்மைபயக்குமெனின்) என்கிற குறளின்படி அவர்கள் சொன்னதற்கு இணங்கினவராய்ப்போல நடித்து நம்பெருமானுக்கு விசுவரூபதரிசனத்துக்கு மற்றுநாள் பிராதகாலத்தில் ஆடங்கமர்கிறபடியால் அப்பசுவை விடுவீர்களாகில் உடனே யாம் பாடுகிறோமென எங்கள் சிவபெருமான் விஷயமாக நீர்பாடுவது யதார்த்தமாகில் அப்பாட்டிலிரண்டொரு சீரையேனு முன்னேசொல்லு வீராகில்பசுவை விடுகிறோமென்றுசொல்ல ஐயங்காரவர்களும் புன்னகைகொண்டு அவ்வாறே (மங்கைபாகன்) என்றுமுதலிரண்டுசீரை அருளிச்செய்த மாத்திரத்தில் அப்பசுவை விட்டனர்கள் உடனே ஐயங்காரவர்களும் மூன்றாம்சொன்ன சீரைத்தொடங்கி,

(பதினான்குசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்)

மங்கைபாகன்சடையில்வைத்தகங்கையார்படுதத்துநீர்*
வனசமேவுமுனிவனுக்குமைந்தனுகில்லையோ... ...*
செங்கையாலிரந்தவன்கபாலமாகநற்றிறுர் ... ...*
செய்யதாளின்மலரான்சிரத்திலானதில்லையோ... ...*

வெங்கண்வேழமூலமென்னவந்த துங்கள்தேவனோ...*
வீறுவாணனமரிலன்றுவிறலழிந்ததில்லையோ... ... *
அங்கண்ஞாலமுண்டபோதுவெள்ளிவெற்பகன்றதோ
ஆதலானரங்கனன்றிவேறுதெய்வமில்லையே.....*

ஆதலால் ஜீவகோடியில் சார்ந்தவரோயொழிய உங்கள்தேவதைபரமாத்துமா அல்லர்என்றுஇச்செய்யுளைச்சொல்லி உலகத்துக்குப்பலதெய்வங்களுண்டோ ஒருதெய்வமேயாம் அத்தெய்வம்திருவரங்கனையல்லாமல்வேறில்லையென அதுகேட்டு அவ்வாகமவாதியர்கள் (கிணறுவெட்டப்பூதம்புறப்பட்டாப்போல்) இதென்னவிபரீதமாய் முடிந்ததேயென்றுசினங்கொண்டு அந்த ஆகமவாதிகளுக்குள் சிறந்த சதிஷ்டானுபவர்களாகியசிலவித்துவான்கள் வேதவிருத்தமாகிய ஆகமபுராணங்களைக்கொண்டு புலவர்பெருமானாகிய ஐயங்காரவர்களோடுவாது செய்யத்தொடங்கினர்கள்,

அவ்வாதிசைவவித்துவான்கள்கேட்டவினாவுக்குவிடைசொல்லி வருளிய உத்திரங்களைப்பின்னுள்ளோருந்தெரிந்துகொள்ளும்படிப்பரமகாருணிகராகிய ஐயங்காரவர்கள்வெள்ளைப்பாவாற்கூறினர்.

எங்கள்சிவபெருமான் அக்கினிமலையாய் நின்றருளியபோது அவருடைய பாதத்தைத் திருமால் தேடினாரென்றதற்குவிடை.

(நேரிசைவெண்பா)

அண்டமளக்கவடிக்கோடுங்கியுல.....*
குண்டபொழுதுதரத்துள்ளொடுங்கித்-துண்டமதி *
சூடினன்மாலருளாற்றோன்றினனுங்கவனைத்.....*
தேடினன்மாலென்பதென்.....(க)

லோகேசுவராகிய பரமசிவனார் திரிபுரதகனஞ்செய்து அச்சுதன்முதலிய தேவர்களைக்காத்தருளினாரென்றும் அந்தஅச்சுதனாவர் விருஷபமாய் அப்பரமசிவத்தைத் தாங்கினாரென்றும் சொன்னதற்குவிடை.

ஆவாயதன்கன்றாயந்தரியாமிப்பொருளாய்.....*
ஏவாப்பவுத்தனுமாமெம்பெருமான்-காவாக்கால்...*
போரும்பொருமோபுராந்தகனென்றேபேரும் ... *
சீரும்பெற்றமோசிவன்.....(உ)

அந்தவரனேயனுமானாகப்பிறந்து.....*
சந்ததமும்வாகனமாய்த்தாங்கியதை-யிந்தவுல .....*

செல்லாமறியமாலேறுனென்பதென்றே .....*
கல்லாமடமாந்தர்காள் ....(ரு)

பக்தவற்சலராகிய திருமால் சிவனைக்காத்தருளினுரென்பதற்கு மேலும் ஓரொடுத்துக்காட்டுவிடை.

தூளாய்த்தலைசிதறிச்சுட்டவிடப்புன்முளைத்து .....*
வாளாப்பெயருமறையாதோ-தாள்வருந்த ... .*
வந்தசிவனுக்கிரங்கிமாயவிருகாசுரனை..... ...*
அந்தவரிகொல்லாவிட்டால்.....(ச)

ஸ்ரீகபிலர்சபதியைஸ்ரீபரந்தாமனுனவர்தம்முடையகண்ணைச்சாத்திச்சக்கரத்தைப்பெற்றுரென்று நூல்கள்கூறுகின்றனவென்றதற்கு

சக்கரத்தைமிக்கமலர்சாத்தியுபாசித்ததனுல் ... ...*[விடை
மூக்கவட்டுச்சூல்முனம்பெற்றுன்-தக்கமென்று... *
மாமறைநூல்சொல்லவரன்மாத்கஃதீந்தானெனலென்
தாமதநூறபொய்யறியாதார்..... (ரு)

சின்முத்திரைதரித்துத்தெக்கணுமூர்த்தியென .....*
இன்னமரன்றியானித்திருக்க-முன்னைபரி... ... .*
போதோர்கண்ணுலரனைப்பூசித்தானென்றுரைப்ப ...*
தேதோசிவப்பிராந்தரோ..... ....(சு)

சிவனுர்விஷயானஞ் செய்துதிருமால் முதலியதேவர்களைக் காத்தானென்றதற்குவிடை.

அண்டமுண்டபோதுகடலாலமுமாலத்தையுண்ட ...*
கண்டனையுங்கூடவுண்டகாரணனை-மண்டிநஞ்சுக் ...*
கஞ்சினதாகப்பகர்வீராகமத்தைநம்பிநம்பி.....*
வஞ்சநரகிலிழுவீர்மாண்டு..... .....(எ)

மலைமடந்தைதன்கழுத்தின்மங்கலநாணேதோ ... ... *
அலைகடைந்தநாளுதித்தவாலம்-கலைகடந்த... ... ...*
நக்கனும்பாத்திரத்தால்நாரணனுருள்ளமுகந்.....*
தக்கணத்துண்ணுவிடினுவா.....(அ)

சதாசிவனுனவர் சரபமாய்வந்து நரசிங்க மூர்த்தியைப் பொருதுவென்றுரென்றதற்கு விடை

புக்ககருடனையோர்புன்மசகம்வெல்லுதிறம்..... *
ஒக்குங்கனகனுரங்கீண்ட-மிக்கதிறல்..... ... ...*

ஆளரியைப்பொன்னனுக்காயஞ்சிக்கிடந்தசிவன் ... *
கொள்விளைத்தானென்னுங்குறி.....(கூ)

பொன்னனுரங்கீண்டதனாற்பொங்குசினமாறிற்றோ *
துன்னுசிவசாபஞ்சோரவுயிர்-அன்னதனைப்.....*
பற்றிவகிர்ந்தபின்னர்ப்பாழிநரமடங்கல்.....*
உற்றசினந்தனிந்ததூங்கு.....(ம)

சுதரிசனுழ்வானுல் சிவன்தலை யிழந்தானென்று மேலுமோரெ
தித்துக்காட்டி-விடை.

இந்திரன்செய்வேள்விக்கிடரிழைக்கவெண்ணுமரன் *
ஐந்தலையுமற்றுவிழவாழிபிளை-முந்தரிந்த.....*
அச்சுதனைமைந்தமாடுமம்பிகையாள்வேண்டிடலும்*
அச்சிவன்பெற்றுனுபிரையன்று.....(மக)

காசியில்எழுந்தருளியிருக்கும்மஹேசுவரனுர்அந்தத்தலத்தில்ம
ரிக்கின்றவர்களுக்குமுத்தியைக்கொடுக்கின்றுரென்றதற்குவிடை.

கேட்டுமறியீர்கொல்கிளர்சடையோன்வண்காசி.....*
நாட்டிறப்போர்தம்முயிரைநற்கதியிற்-கூட்டல் ... *
தயாதனுமான்தனிப்பெயான்னேர்க்கு.....*
வயமுறப்போதித்தன்றேவாய்ந்து.....(மஉ)

சிவனுரை மஹேசுவரரென்றதற்கு விடை.

செய்தவங்கள்செய்துசிவனுயினுனைநீர்.....*
எய்தமகேச்சுரனென்றேத்தல்-வைதசிறு.....*
புன்கள்ளிதன்னைப்புவியின்மகாவிருக்கம்.....*
என்கையொக்குமொக்குமேயீங்கு.....(மகா)

தவங்கள்செய்துசிவனுயினுனென்றுநீர்கூறுதல்எவ்வாறென்றதற்கு
ஒருகத்தி லுநவினிலோருகத்திற்பூருவிலம் ... ...*[விடை
போருகத்தன்பாற்பிறந்தபோழ்தனில்-கார்நிறத்த *
கண்டத்தான்றோதனஞ்செய்காரணத்தால்ருத்திரன்னு
ரெண்டவநூல்களுரைக்கும்.....(மச)

ஸ்ரீகண்டத்தானன்றோ வேதமுதலவ ரென்றதற்குறவிடை.

ஞானமறையைநவின்றுரைக்கும்போதெல்லாம் ... *
ஆனமுறையாலாதியந்தத்தும்-ஊனமற... .....*
அந்தணர்களென்போரரியோமெனுஞ்சொல்லைத்]...*
தந்துரைத்தல்கேட்டிலிரோதான்.....(மரு)

சைவர்கள் ஆராதிக்குந் தெய்வம் யோனியும் இலிங்கமும் என்று கூற அதுபொருதவர்களாய்த் திருமாலை நிந்திப்பதேபொருளாகக்கொண்டு ஆலயங்களிற் பிரதிஷ்டை செய்திருக்கும்சிவலிங்கமூர்த்தியை யோனிரூபமாய்த் தாங்கியிருப்பவர் திருமாலன்றோவென்று சொன்னதற்குவிடை,

பிருகுகோதமன்முன்பெருஞ்சினங்கொண்டின்பம் *
பருகுமையீசன்குறிகள்பாரில்-அருகிவிழ ... ... *
இட்டசாபத்தினாலிற்றகுயியன்றோதும்..... *
இட்டதெய்வமாயிருத்தலிங்கு..... ... ...(௩௬)

ஸ்ரீசர்வேசுவரனை வாய்மதங்கொண்டு பேசுமவர்கள் அடையும் பயன் இன்னதென்று குறிப்பித்துக் கூறும் மேலுமோர் விடை.

கையிருக்கக்காலிருக்கக்கண்ணிருக்கநக்கனுக்கு..... *
மெய்யிருக்கவன்பாவிரும்பாத-வைதுவிழும்..... *
ஆண்குறியைப்பூசித்தழிவதெல்லர்மாயவனை..... *
வீண்குறியாம்பேசும்வினை..... ..... (௩௭)

அவ்வாறானால் சிவனையாராதித்துபூதி உருத்திராக்ஷம் இலிங்கம் இவற்றைச்சிலபிராமணஜனங்கள்தரிக்கின்றார்களேஎன்றதற்குவிடை.

வேதியர்களாய்ப்பிறந்தும் மெய்யிலிலிங்கம்பொறுத்
பூதியரன்கண்மணியின்பூணணிந்த-பாதகரை... [துப்
நீதியாசன்றனிலத்தின்புறம்விடுக்க..... *
ஓதிடுமேநூல்களொருங்கு..... .....(௩௮)

திருமாலுக்கு ஆராதித்த நிவேதனங்களை வார்கொண்டாலுந் தோஷமில்லை சிவபெருமானுடைய நின்மாலியத்தைப் பிராமணர்களும் கொள்ளக்கூடாதென்பது அந்நின்மாலியப் பரிசுத்தத்தின் ஏற்றத்தைக் கண்டன்றோ வென்றதற்கு விடை.

சத்திரயாகந்தன்னிற்றக்கன்பிருகாற்கு..... *
வைத்தகொடுஞ்சாபத்தான்மாமறையோர்-இத்தலத்தில்
சங்கரனின்மாலியமுந்தானுகந்தபோனகமும்... ... *
அங்கிகரியாரறிந்து ..... ௩௯)

நீர்இவ்வாறுசொல்லுவீரானால் உலகத்திலேசைவசமயத்தைப்பற்றி பதுகமமுதலியநூல்களைவரித்ததிருவாய்மலர்ந்தருளினவர்பரமசிவக்கடவுளன்றோ அவருடையதிருவாக்குப் பிராமணமன்றோ வென்றதற்குவிடை,

மோகவா நூற்பல்சமயமுன்னியற்றுந்தியவினை ... ...*
போகநறுநாவலின்கீழ்ப்போந்துமையாள்-பாகனன்னீ
பம்புசீராங்கற்பணிந்துதவஞ்செய்தகன்றோ..... [ர்
சம்புகேசுரப்பேர்த்தலம்... .....(உ௰)

சிவபெருமானைக்குறித்து அநேகர்தவஞ்செய்துவரங்களைப்பெற்றனரென்றதற்குவிடை,

பொன்னிலங்குமெய்யன்பொருவலிசேர்வாலியொடு*
தென்னிலங்கைக்கோமான்றிறல்வாணன்-முன்னரனைத்
தாழ்ந்துபெறுவரத்தைச்சாற்றிடலும்வேண்டுமோ *
வாழ்ந்துவிடிந்திட்டனரோவாய்ந்து .. ..(உக)

திருமாலேபரனென்னக் கங்கைக்கரையில் வேதவியாசமுனிவர் பொய்சொன்னபடியால்கைதம்பித்ததென்றதற்குவிடை,

யாருமறியவெசுருவேதாரணமெய்..... .....*
ஆருமொழியாளனெனவாய்ந்துரைக்க-வோர்வின்றி *
வேதவியாசன்பொய்விளம்பக்கரந்தம்பித்... ... ...*
தேசமுறுநின்றதென்பதென்..... .....(உஉ)

முனிவரொழுவர்முதுபராசரன்செம்..... ... ...*
பனிமலரானுள்ளிட்டபல்லோர்-இனிதாய்த்... .....*
திருமால்பரனென்னச்செப்பினரன்றோர்க்கேன்... *
பெருநாத்தம்பிக்காத பெட்பு,.....(உ௩)

கேசவனேபரனென்றவேதவியாசர் மேற்சினங்கொண்டெழுந்தநந்திகேசுரர்வரலாறுகூறியவிடை.

ஓதுமுனிமால்பரனென்றோதமாழ்கிச்சினந்து... ...*
போதுநந்திமாமுகத்திற் பொன்னடியால்-வாதசேய்*
முன்னுரைத்தானந்தமுறைமையாற்கங்கையெருத் *
தின்முகத்தன்றோன்பிறங்கலீங்கு..... .....(உச)

o மாருதிசீர்பாதமுகம்வாய்க்கப்பெறுநந்தி.....*
சீருதவுமாலபரனுச்சிந்தைசெய்யுங் - காரணத்தால்...*
பேர்கங்கைமாட்டைப்பெருமாள்மாடென்னவுல....*
கோருமாப்பரிச்சாராதுணர்ந்து..... .....(உ௫)

---

o அனுமானுடையதிருவடிஸ்பரிசத்தால்நந்திகேசுரனுக்குஞானமுண்டாகி சோழதேசஞ்சென்று அச்சுதனைநோக்கித்தவஞ்செய்து பேறுபெற்றகாரணத்தால் அந்ததிவ்பதேசத்துக்குதிருநந்திபுர விண்ணகரமெனப்பெயர்வழக்கிவருகின்றது,

திருமால் உலகத்தில் அனேக அவதாரங்கள் செய்தமையால் அவர் நம்மைப்போலப்பலபிறப்புடையவரன்றோவென்றதற்குவிடை,

பிறப்பிலிபாய்த்தானிருந்து பேருலகின்மாயோன்...*
உறப்பிறக்குமென்றுமறையோதி-மறுத்துநீர் ... .. *
அச்சுகனைச்சாதமுடையானென்றறிவிழந்த..... ...*
பிச்சரிற்பிதற்றுவதென்பேச்சு.....(உசு)

அவ்வவதாரம் இதுகருதியென்னும் விடை,

ஆயவறத்தையறவோராயாக்கவும்வெந்... .... *
தீயர்தமைப்போக்கவுமேதிண்புவியில்-மாயுகங்கள் *
தோறுமுற்பவிப்பனெனத்தொக்கீதையிற்கண்ணன்*
கூறுமொழிதேர்கிலிரோகூர்ந்து.....(உஎ)

பிரமன்சிவன்முதலானோர் இறைவனாகிய திருமாலைப்போல அவதரிக்கநிமித்தமில்லையென்னும்விடை.

உடையானுக்கன்றியுடைப்பொருளைக்காக்கப் ... ...*
படையார்தமக்குண்டோபாரம்-அடைவாகச்...*
சீதரனார்காக்கத்திருவவதாரஞ்செய்வர்.....*
சேனருக்கேனச்செயல்.....(உஅ)

சிவனுக்குப்பிறப்பில்லையெனமயங்கிக்கூறியதற்குவிடை,

விச்சுவவரன்சுகனு மேலோன் சமதங்கி..... *
அச்சுவத்தா மன்னனுமா னவ்வுறுவன்-மெச்சுபுகழ் *
பொங்குதுரு வாசன் பொலிசை கிடவியனார்... ... *
சங்கரன்பிறப்பன்றோ தாம்.....(உகூ)

சிவனுடைய பிறப்புகள் இந்திரன்முதலானோர்செய்த பிறப்புகளைப்போலன்றிச்சிறந்தன அல்லவென்னும்விடை,

அக்கியமன்வாயுவாகண்டலன்முதலோர்..... ... ...*
இங்குதித்ததோற்றங்கள்யாவையுமே-பொங்கறிவின்*
மிக்கவர்கண்மாணவிளம்பினரோவில்லையம்..... ...*
தொக்குமரன்பிறப்புக்கும்.....(ரூ௰)

❋ இந்நூற்செய்யுள்கள் இன்னும்பலஉண்டென்றுகேள்விஅச்செய்யுள்களை யாரேனும்கொடுப்பாராகில் பரமோபகாரமாகக் கொள்ளப்படும்.

ஆதிசைவசமயநிஷ்டாநுபவர்களாகியவித்துவான்கள்சொல்லி க்கொண்டு வந்தபிரசனைகளுக்கு வடமொழியினுந் தென்மொழியி னுந் தெய்வப்புலமையுள்ளவீர வைஷ்ணவசிகாமணியாகிய ஐயங்கா ரவர்கள் அருளிச்செய்தவிடைகளை மறுத்துச்சொல்ல ஒன்றுந்தோ ன்றாமல் ஒமென்றுதங்கள் தரங்கள் இருப்பிடத்துக்குச்சென்றனர்கள்.

ஐயங்காரவர்கள் அருளிச்செய்ததனிப்பாட்டுகள்,

தாழிசை,

செங்கண்மால்கழன்மஞ்சனம்விழுந்தொட்டிசங்கரன்றலைகளே *
சீர்கொள்கண்ணனல்லடிநிர்மாலியக்குப்பைசப்புவின்றலைகளே *
எங்கண்மாயவன்பாயறுக்கியதூக்குமாபதிசெவிகளே ... ... *
எந்தெழிற்புருடோத்தமன்றுதியெழுதுமேடராஞக்களே ... ... *
பொங்குசீதரனைச்சிலர்படிக்கம்புரிபின்கண்டமே ... . *
புகலிராமனைகடிகொள்பாதுகையகலுமுக்கணன்காமமே ... ... *
திங்கள்சூழ்சித்திரகூடமேவியவெங்கள்கோவிந்தராசற்குத் ... *
தினமும்மகூத்தாடியானவன்றிருச்சிற்றம்பலவாணனே ... ...(க)

கட்டளைக்கலித்துறை.

கானேந்துதாமரைவாவியுளானைகராவினயர்ந் ... ... *
தூனேந்திமூலமென்றோதியநாட்சென்றுதவுகையால்,
தேனேந்துசோலையரங்கனல்லாற்றெப்பமில்லையென்றே
மானேந்துகையன்மழுவேந்திஞனிந்தமாநிலத்தே *

மத்தக்கரியைக்கராப்பற்றிநின்றதொர்வாவியுள்ளே ... *
சித்தந்தெளிந்துமுறையிடும்போதுசெழுந்துளவக் *
கொத்துக்கிளர்முடிக்கோவிந்தவென்றதுகூப்பிட்டதோ
செத்துக்கிடந்தனவோகெடுவீருங்கள்தெய்வங்களே *

(திருத்தேர்விஷயமாயருளிச்செய்த- நேரிசைவெண்பா.)

ஒன்றுமறியாத ஆமைகாடென்னரங்கர் ... ... *
இன்றுதிருத்தேரிலறிஞர் - நின்று ... ... *
வடம்பிடிக்கவாருங்கோள் வைகுந்தநாட்டில் ... ... *
இடம்பிடிக்கவேண்டுமென்றக்கால் ... ... *

அழகியமணவாளதாசர் திருவடிகளேசரணம்.

உ

சிவமயம்.

இளையனார்வேலூர்

எம்கவந்தாதி.

இஃது

க்ஷேதேவஸ்தானம் தர்மகர்த்தாக்களிலொருவராகிய

ம-ா-ா-ஸ்ரீ

வெ. செ. முத்துக்குமாரசாமிமுதலியார்

கேட்டுக்கொண்டபடி,

சிகிந்திராபாக்கத்தில்வசிக்கும் வழூர்நாயகமரபிற்சிறந்த

ஒழுக்கபாக்கம் வித்துவான்

ம-ா-ா-ஸ்ரீ

கா. சிவசங்கரதேசிகரால்

இயற்றப்பட்டு,

மேற்படி தேவஸ்தானஒதுவார்,

புல்லம்பாக்கம்

ம-ா-ா-ஸ்ரீ

கா. சிவஞானதேசிகரால்,

காஞ்சீபுரம்

சந்திரபானு அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1889ஆ நவம்பர்மூ 1உ

காஞ்சீபுரம்

பச்சையப்பமுதலியார் பாடசாலை உபாத்தியாயர்

ம-ா-ா-ஸ்ரீ.

வ. கணபதிப்பண்டிதரவர்களியற்றிய

சிறப்புப்பாயிரம்.

நேரிசையாசிரியப்பா.

மண்டலமதனுள் வளமலிந்தோங்குந்
தொண்டைநன்னாடெனத் தொல்கவிவாணர்
சிரமிசைக்கொள்ளுபு சீர்தரநள்ளுபு
வரமிசைத்தாலென வந்துவாசஞ்செயூஉச்
சாகராம்பாலன சற்சனசங்கப்
பாகராம்பெரியவர் பாங்குறவுரைக்கும்
தாலாரணியச்சார்பினிலோங்கும்
பாலாரணியமாம்பண்புடன்றிகழும்
ஒழுக்கப்பாக்கத் துயர்சைவநன்னெறி
வழுக்கப்பாங்கொரீஇமன்னியபெரியோன்
மரபினிலோங்கிய வழூர் நாயகந்தனில்
விரவியசீர்சால் வித்தகனாகிய
சிதம்பரதேசிகன் செல்வமார்தோன்றல்
இதம்பெறு சிவசங்கர தேசிகனிவன்
இளையனார்வேலூரிருந்தடியாரினல்
களையனார் வேலைக்கடவுளாமறுமுகன்
குருபரன்மீது கோதிலாயமகம்
மருவுமந்தாதி மண்டலமதிக்க
இயற்றின னின்ன லெல்லாம்
மயற்றிறமோடு மடிக்குவானினைந்தே.

சிகிந்திராபாக்கம் மைபூப் காலேஜ்
தமிழ்ப்பண்டிதர்
சி. அருணாசலம்பிள்ளையவர்களியற்றிய

நேரிசையாசிரியப்பா.

பொற்றுணர்மலிதரு கற்பகநிழற்கீழ்
அவிரொளிபரப்பு நவமணிகுயிற்றிய
சிங்கந்தாங்கும் பொங்கியதவிசுறீஇச்
சாமரையிரட்டக் காமரங்கேட்
டரிமதர்மழைக்க ணரிவையர்நடங்கண்
டிருந்தரசியற்று புரந்தரன்முதலா
விண்ணவரெல்லாங் கண்ணீருகுத்துச்
சரணஞ் சரணஞ் சரவணபவனே
ஏழையடியேம் பீழைகேண்மோ
மடலவிழ்கடப்ப நடைமயிற்பரிய
தேவ தேவே கோவேசரணம்
கதியே மதியே விதியே பதியே
குகனேசிவனார் மகனேமுறையோ
சூரனியற்றுங் கோரம்பொறேம்
என்றென்றரற்றத் துன்றுபேரருளாற்
காற்படைக்கொடிநிறீஇ வேற்படைவிடுத்து
வரமதிலுயர்ந்தோ னுரமதுபிளக்கக்
கண்டுளங்களிகூர்ந்தண்டர்கள்குழுமித்
தாவாத்துன்பறுத் தோவாவின்பருள்
எங்குருநாத வெங்குருவேந்தே
உள்ளத்தூறுந் தெள்ளியதேனே
விழுமியவுன்றாள் தொழுமடியேஞ்செய்
பூசனைகொண்டுண் மாசதுகழுவென
இம்பருமுய்ய வும்பரார்நயந்து
பொற்புடனிறுவிய பற்பலகோயிலே

அவற்றுள்

பைந்திரையுடுத்தவ சுந்தரமங்கையின்
நகைநிலவெறிக்குந் தகைமுகமெனமிளிர்த்
தண்டகநாட்டிற் கண்டகநாட்டும்
ஒண்பிறைநுதலிற் கண்கவர்திலகமே
என்னப்புலவர் பன்னிவியப்புறத்
தளையவிழ்மரைமேல் வளைமுத்தீனும்
வளவயன்மருதத் திளையனார்வேலூர்க்
கழிபெருங்கருணைகெழுமியகோயிலு
ளருச்சனைசெய்வார் குறிச்சவரந்த

மன்னியமுருகன் பொன்னடிக்கன்பாய்ப்
பழுதறுநால்வகை விழுமியசொன்மலர்
மாணத்தொடுத்துக்காணும்யமக
அலங்காரங்கொள அலங்காரம்மா
அந்தாதியொன்று நந்தர்தியற்றினன்
அன்னவனின்னெனப்பன்னக்கேளீர்
திருவினுஞ்சிறந்தவுருவிற்பொலிந்த
சிற்றிடைபடைத்த பொற்றொடிநல்லார்
தன்னடைக்கஞ்சிய மென்சிறையன்னங்
கண்படுகமலமுங் கண்படுகுவளையு
நிறைதரமலர்ந்த துறைநீர்த்தடத்துக்
கருமுகில்கடுக்கும் பெருவாய்மேதி
முழக்கொடுபாய்ந் துழக்கவெரீஇக்
கட்டிளவாளை முட்டியெழுஉப்
பாய்தலினிடையறு தோய்வறவொழுகுங்
குடக்கனித்தேனு முடக்கியபைங்குலைக்
கதலிக்கனியின் பதமுறுநறவுந்
தீங்கனியென்னு மாங்கனிச்சாறும்
அளவளாஅய்ப்பெருகிக்குளம்பலநிரப்பிச்
செஞ்சாலிவளர்க்கு மெஞ்சாவளஞ்சால்
ஒழுக்கவாக்க வழுத்துபேரூரினன்
வழுவறுவழுவூர்த் தழுவிச்சிறந்த
நாயகமரபிற் றாயகம்போல்வான்
சான்றோர்கவியெனஆன்றாழ்ந்தெங்கும்
பம்பியவெள்ளக்கம்பைமாநதியிற்
றாயின்றறியா வேயின்றதோளி
தழுவக்குழைந்த முழுதுணர்தம்பிரான்
பதம்பரவுறாஉஞ் சிதம்பரதேசிகன்
நற்றவப்புதல்வன் கற்றோர்நண்பன்
செந்தமிழ்ப்புலவர் சந்ததம்மகிழ
ஒல்லுவதன்று வில்லையென்றுமே
மனமொழிமெய்களாற் கனமுறவுதவும்
வண்மைபொறுமையுண்மையுடையன்
நற்பொருணூலொடு கற்பவர்க்குவந்து
சோதிடநூலும் ஓதிடவல்லோன்
தத்துவாதீதச் சுத்தசைவன்
சமயம்விசேட மமைநிருவாணம்
உய்தரவெவர்க்குஞ் செய்திடுந்தேசிகன்
பவசங்கமமொழி சிவசங்
கரனெனப்புகலும் வரநாவலனே.

சாற்றுக்கவிகள்.

பிரமபீடம் நிஜானந்த சுவாமிகளது

மரபிற்குரிய

புலத்தியபுரம் ம-ா-ா-ஸ்ரீ.

அச்சுததாஸரவர்கள்

இயற்றிய

எழுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

பொன்னவிருடுநாயகனுடனேயும் பூம்பொழிலிளையனார்வேலூர்
மன்னியசெவ்வேண்மலரடி யேத்திமாசிலாயமகவந்தாதி
யுன்னருமன்பாலுரைத்தனனமலவொழுக்கபாக்கஞ் சிதம்பரமா
றன்னரும்புதல்வனாகிய சிவசங்கரனெனுந்தவசிரோமணியே.

ம-ா-ா-ஸ்ரீ.

பேறை-தசாவதானம்.

செகநாதப்பிள்ளையவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மணம்பூத்த தண்டலைசூழிளையனார் வேலூர்வாழ் வடிவே லற்குப்
பணம்பூத்த பேரரவும் வாணனுந்தஞ் சிரகரகம் பனஞ்செய் வானல்
வணம்பூத்த சிகந்தநகர் வளரும்வழூர் நாயகமா மரபில்வாய்ந்த
குணம்பூத்த நங்கஞ்சிவ சங்கரதே சிகன்யமகங் கூறினனால்.

வெண்பா.

தொட்ட கரமணக்குஞ் சொல்லியநாவும் மணக்குந்
திட்டமுடன் கேட்டசெவிமணக்கு—மிட்டத்,
திரமியைந்த நங்கள் சிவசங் கரன்சித்
திரயமக வந்தாதியை.

திருநெல்வேலிஜில்லா

ஊற்றுமலைச்சமஸ்தானவித்வான்களிலொருவரும்

ஸ்ரீமத். தண்டபாணிசுவாமிகள்மாணுக்கருமாகிய

தி. கந்தசாமிப்புலவரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

தினந்தினந்த வசிகள்பணி யிளையனார்வேலூர்வாழ் செவ்வேட்காமுந்
தினந்தினந்த வனமழியா தருண்முதல்வன்றுணைவனுக்குத்திகம்பரத்தா
தினந்தினந்த வதேசிகனென் றகமகிழுமுருகனுக்குத்தெள்ளன்பாய்மோ
தினந்தினந்த வழுமலர்ப்பூந்தடஞ்செறியு மதிவளமைச்சிகிந்த்ரா பாக்கம்.

யமகவந்தா திருடநடவெனும்வழூர்நாயகமரபோன்யாணர்க்கேக
யமகவந்தா திணர்த்துடவைசூழொழுக்கப் பாக்கமெய்மை யானவேணி
யமகவந்தா திகலில்சிவ சங்கரதேசிகனதின யத்தேன்போல
யமகவந்தா தியெனுமியன் மாலையியற்றிப்புனைந்தேயருள்பெற்றானே.

ம-ா-ா-ஸ்ரீ.

அஷ்டாவதானம்.

பூவை. கலியாணசுந்தரமுதலியாரவர்கள்.

இயற்றிய

ஆசிரியவிருத்தம்.

இந்தாதி தகைதுடவை சூழிளையனார் வேலூரினிதுமேவு
மந்தாதி யியலாதநம்சுப்ரமணியரிணை யடியிலோர
வந்தாதி யமகமதிற்பலவணி கண்மிக வியங்கவமைந்திட்டானால்
பந்தாதி யிகலிரித்தசிவசங்கர தேசிகனும்பாவலோனே.

—:o:—

அரன்வாயல் ம-ா-ா-ஸ்ரீ.

திரு. வயித்தியநாததேசிகரவர்களியற்றிய

இருபத்தெண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருமருவு மாழியைக் கலையென வுடுத்தபுவி
தேவிநுத நிலகமாகித்
திகழ்மது நிறைந்தொழுகு துணர்மாரி பொழிசோலை
செறியிளையன் வேலூரெனச்
செப்பிடுஞ் சோழரா ஜேந்த்ரபுரி தனின் முனுள்
செய்தகாசிபன் வேள்வியைச்
சென்றழித் திடுமவுண குலமலையன் மாகறன்
செற்றிடச் செய்வா யெனத் ¼
தருமருவு மிமயமலை யுமைமருவு சிவபிரான்
றனைநினைந் திருடிவா டத்
தண்ணருள் சுரந்தெமிறை யண்ணல்முரு கேசனைச்
சற்று மஞ்சாமலே யத்
தானவரை நின்னயிற் கிரையாக்கி வருகெனத்
தந்தவுரை கொண்டயில் கரந்
தாங்கிமயி லூர்ந்தவுண ரேங்கியுயிர் நீங்கத்
தழைத்து முனி யாகமோங்கக் ½
கரமருவு குக்குடக் கொடியனக் கொடியர்பாற்
கடுகலொடு செல்ல வவருங்
கண்டுபடை கொண்டெதிர் புகுந்துவரு காளைமேற்
கணைபல விடுத்திடலும் வேள்
கையிலகு வேல்விடத் துட்டருயி ருண்டுவே
கத்துடன் செலவே யதைக்
காணுமலிளையன் கடம்பவன நண்ணிமுக்
கட் கடவுளருளாற் குரா ¾
மரமருவு வேலினைக் கைக்கொண்டு தங்குமறு
மாமுகக் கடவுண்மீது
வண்டமிழி னுல்யமக வந்தாதி சொற்றனன்
மாசிகந்த்ரா பாத்தினில்
வாழ்தரு வழூர்நாய கன்மரபில் வருசீர்மை
வாய்ந்திடு மொழுக்கபாக்கம்
வல்லகவி வாணர்புகழ் சிவசங்கரப்பெயர்
வதிந்த தேசிகதூயனே. (1)

விளம்பரம்.

இதனால்சகலருக்குந்தெருவிப்பது யாதெனின் இளையனார்வேலூர் யமகவந்தாதி இயற்றிய சிகிந்திராபாக்கத்தில்வசிக்கும் வழூர்நாயகமரபிற் சிறந்த ஒழுக்கபாக்கம் வித்துவான் ம - ா - ா - ஸ்ரீ கா. சிவசங்கரதேசிகரால் ஷை இளையனார்வேலூர் ஸ்தலபுராணத்தையும் சீர்திருத்தி பொழிப்புரையோடு அச்சிற்பதிப்பிக்கவேண்டி, பல ஏட்டுப்பிரதிகளைச்சேர்த்து ஷை யாரிடங் கொடுத்திருக்கின்றேன்; கூடியசீக்கிரத்தில் அப்புராணம் வெளியிடப்படும்.

இங்ஙனம்.

1889ஆவு நவம்பர்மீ 1உ } வெ. செ. முத்துக்குமாரசாமிமுதலியார்

ஷை தேவஸ்தானம் தர்மகர்த்தர்.

உ

வேலுமயிலுந் துணை.

இளையனார்வேலூர் எமகவந்தாதி.

காப்பு.

வெண்பா.

அந்தாதிபாடற்காமிளையனார்வேலூர்
வந்தாதரிக்கின்றமாவேலன்—முந்தாய
ஆபத்சகாயனடித்தாமரையுளமே
தாபத்தைதீக்குந்தனி.

அவதாரிகை.

சேர்தல் தங்கல் பிணைதலுறுதலாம்.

கலித்துறை.

சேர்வா டிருமதிச்செஞ்சடையானருட்டேசிகனிற்
சேர்வா னவர்முப்பிணியடையாரெனற்செம்மையன்றே
சேர்வா ள்விழிமடமின்னுரெழில்வலைச்சிக்கிச்செம்மை
சேர்வா ன்புரியிளவேலூர்ச்சென்றுற்றிடினுவுடைத்தே. (க)

ஆசைவிருப்பமாச்சரியமோடாவல்.

ஆவுடைத் துன்னடியாமலர்க்காய்ந்தவர்தம்மிடத்தில்
ஆவுடைத் தாயெனவாரணங்கூறினதானதினால்
ஆவுடைத் தாங்கவியாய்ந்தேனிளையவேலூரரசே
ஆவுடைத் தாடலைசேர்த்தருளாவிடிலார்துணையே. (உ)

என்புசமானமன்பிரண்டாமே.

துணையா ர்பணியணித்தூயவன்சொற்கொடிறைத்துணிவால்
துணையா ரிடையிலையானோம்பொருளெனுந்தூவிலன்பால்
துணையா ர்வலியழித்தாண்டிளவேலூர்தொழவமர்ந்த
துணையா ர்மலர்ப்பதந்தந்தென்வினைகெடத்தூற்றிறையே. (ங)

அணுவரசன்றுன்பாதங்கடமை.

இறை யுநின்றன்னருளின்றசையாதென்றிருக்குளைப்ப
இறை மொழியென்றடியாரிருந்தாரடியேனிக்குளான்
இறை தரநொந்தயர்ந்தேனிளவேலூரிறைபுரக்க
இறை யுனக்கேயலதின்றெவர்காக்கவிசைகுவரே. (ச)

ஒப்புசொல்லோசையுடன்கூடுதலே.

இசைகுவ ரோவிடையில்லாமடவரென்றின்புரைத்து
இசைகுவ ளைக்கஞ்சியானவர்பாற்சென்றிருந்திளைத்தேன்
இசைகுவ ளைக்குலஞ்சூழிளவேலூரினையடைய
இசைகுவ ழிக்கிவன்போமினென்றுரருளிச்சையென்னே. (ரு)

அஞ்ஞானமாசைபொய்யபிமானமென்ப.

இச்சை யென்னுட்குடியாமிளவேலூரிறைவவன்பர்
இச்சை யென்பூன்றியுளானடிக்கேவைத்திறப்பகன்றூர்
இச்சை யென்வாயுரைத்தீட்டிப்பொதுமடவார்க்களிக்கும்
இச்சை யென்றேமுருகாவகற்றுளிலையீடெனக்கே. (சா)

ஒப்பழதம்வலியுறுபெருமை.

ஈடெ மக்காரிளவேலூர்முருகெனுமின்பரசம்
ஈடெ மன்காலனிருவிழியீந்ததினிப்பிறவேன்
ஈடெ ம்பிரானருளாகுமிச்சாபுத்தியம்விடுத்தால்
ஈடெ ம்மநோர்க்கிலைகாண்பெறுவீரிதுமெய்ப்பொருளே. (எ)

உடலுடனுண்மைசந்தியப்நித்தியம்.

மெய்ப் பொருளாயிநரிக்குணவாமெனமெய்யடியார்
மெய்ப் பொருளுற்றிடாதியற்றூர்வினையான்மெலிய
மெய்ப் பொருடேர்ந்திளையார்மயக்குண்டுவெருண்டடைந்தேன்
மெய்ப் பொருளாரிளவேலூரிறையருள்மெய்நிலையே. (அ)

பத்திரமாலினோடில்லையுலோபம்.

இலைமுன் மதிநதியிட்டவன்றந்தவிறையவனால்
இலைமுன் பகற்றுயின்றூனெச்சங்கொண்டிளவேலூர்வந்தும்
இலைமுன் றுதியுடையாயுளத்திப்பொழுதிச்சையுற்றேன்
இலைமுன் றளையிறுமோவுறுப்புண்டரிணம்மிசையே, (கூ)

செம்மைபோன்கரிமான்சிறந்திடுவேள்ளை.

அரிணமிசைச் சடையானம்பிகையருளாறுமுகா
அரிணமிசைத் திளவேலூரமர்ந்தடியார்பொருட்டே
அரிணமிசைத் தமின்னார்மணங்கொண்டனையஞ்சலென்று
அரிணமிசைத் தவரைத்தலையிட்டழிப்பாயழலே. (கய)

அழற்றீநரகமாதஞ்சிவந்தவாய்.

அழலைம் படையவனுக்கனைந்தாட்டியரல்குலுற்றேன்
அழலைம் பொறியறிவாதிசத்தீர்த்தென்னகங்குழைத்த
அழலைம் புலாதியினுலடைந்தேனிளவேலூரைய
அழலைந் தொன்றூலினியஞ்சேலெனுமொழியாயினன்றே. (கக)

நற்குணம்நல்லதுபெருமையிலக்குமி.

நன்றுடை யுன்னடியாரைப்பழித்துநகைத்தழிதல்
நன்றுடை த்தாமெனநாடுங்குழாமொடுநட்படைந்தேன்
நன்றுடை யற்றுழல்நாயடியேன்வினைநாசமுற
நன்றுடை யுன்னிளவேலூர்கண்டேனருணாயகமே (கஉ)

நடுநாயகமேலாயவன்புத்தமன்.

நாயகமா ம்புவிமேலிளவேலூர்நயந்திடுவேல்
நாயகமா வடியான்றூள்வணங்கிலைநாரியர்பால்
நாயகமா யிருந்தேர்போலுழைத்துநலியுமெனை
நாயகமா க்குவையோவறியேனருணாட்டமின்றே. (கங)

கண்ணோடுபார்வைநோக்குநீண்டதுவே.

நாட்டந்தர வந்தவனிளவேலூர்நலமடைய
நாட்டந்தர ங்கிவையோமுனிசெய்யவினைசமுரு
நாட்டந்தர மிதுவோமலையான்றனைநாடிமழு
நாட்டந்தர ம்படவோவறியேனிவர்நாடகமே. (கச)

தாசிகூத்துவீதிகீதமே.

நாடக மாய்ந்தவர்வாழிளவேலூர்நலமடைய
நாடக நோக்கிநயப்புறவோநடமங்கையர்சூழ்
நாடக மாமிடையுற்றுனரியொடுநான்முகனும்
நாடக ம்பாடுவர்மானத்திக்குட்டிநயப்புறவே. (கரு)

ஆசைவிருப்பமாவற்சிரிப்பே.

நயப்புறு வாரிளவேலூர்முருகனைநாடியன்பர்
நயப்புறு திக்கிவன்றுட்டாமரையெனநாரியர்பால்
நயப்புறு கண்ணறலாமென்றவர்நயநாடியுள்ளம்
நயப்புறு கண்ணடைந்தாற்றேனினியருணல்வினையே. (கரு)

போருடனுயித்தந்தீவினைச்செல்வம்.

வினையுடை மாகறன்றன்பொருட்டத்தியின்மீதிவர்ந்து
வினையுடை யான்வடிவேலிடக்கொன்றவைமேலெழும்பி
வினையுடை நெஞ்சத்தினைப்பிலமுற்றிடவிண்ணவர்வேல்
வினையுடை மைப்பெயர்வைத்தடியார்தொழவேண்டினரே. (கஎ)

வேண்டும்போதுமநேகங்கிருபை.

வேண்டும் பொதுமடவார்நட்பெனப்பலவீணரொடு
வேண்டும் படியவிற்கிட்டைம்பொறிவிழற்கேயிறைத்தேன்
வேண்டும் படிக்கெனக்காயதுதீவினைவீழவருள்
வேண்டும் படிக்கிளவேலூரமர்ந்தவவேத்துவனே. (கஅ)

அம்புமலைதடியாயதுநரகம்.

வேத்திர மைந்துவிடுப்போனுக்கையுற்றுவேல்விழியார்
வேத்திர மரந்தனத்திச்சைவைத்தேனினிமேலழிப்பார்
வேத்திர ங்கொண்டறைவாரிளவேலூர்விரும்பியவா
வேத்திர கீயம்புகாதருணீசெயும்வேலையின்றே. (கக)

அளவோடுகடற்கரையாதந்தாமதமே

வேலையிலா வவதிக்கடற்பட்டுனைவேண்டலிலேன்
வேலையிலா ழ்ந்துவெறுப்பிலனுய்முனிவேள்வியருள்
வேலையிலா வருளார்கலியேயிந்தவேளைவந்து
வேலையிலா வருடாவிளவேலூரைவேண்டினனே. (உ0)

பூசைவிருப்பம்வேண்டியிணங்குதல்

வேண்டி னற்கேயவிருப்புடையானெனவிண்ணவர்கள்
வேண்டி கழுற்றுடையானடியேத்திவெண்குன்றமர்ந்தார்
வேண்டி சிகொண்டுவிளம்பிடியாரிடைவீழ்ந்தனன்யான்
வேண்டி சைநீத்திளவேலூர்தொழவருள்வேளாண்மையே. (உக)

உழுதல்மெய்யீகையுபகாரமுமே

வேளாண்மை யர்புகழும்மிளவேலூர்வேலவன்பர்
வேளாண்மை யாயருச்சித்தகன்றூர்வினைவேட்படைக்கு
வேளாண்மை செய்துய்ந்திடநினைந்தோய்ந்தவர்வேட்கைகொண்டேன்
வேளாண்மை செய்விரைவாயடியீதென்வினைக்கொள்கையே. உஉ

அறிவுதுணஞ்செயலாதியாம்பெருமை

கொள்கை யிலாக்கொடியேனிளவேலூர்குருபரநின்
கொள்கை நிழற்கலியென்றடைந்தோருன்குராவிநிழற்
கொள்கை யற்றேயைந்ததின்வழிசெல்லல்குறைத்துனடிக்
கொள்கைகொண்டார்முத்திகொள்ளைகொண்டாரென்குறையகற்றே

தற்றமற்பந்தீவினையோடாமநளே

குறையகற்றூ க்குறுமைச்செயலேன்கொடுங்கூட்டுறவால்
குறையகற்றூ யந்தவர் மேற்பழிகூறுங்குணம்படைத்தேன்
குறையகற்றூ ண்டருள்செய்யிளவேலூர்குரவவன்பர்
குறையகற்றூதவனேவுரையாயெண்குணக்கடலே. (உச)

துணமோடுகல்விசிறப்போடுசீர்மையே

குணமெட் டுடையவெங்கோனக்கருளியகோழருகா
குணமெட் டினமுனிமேற்காதலாலிக்குராவினடி
குணமெட் டுனையழியாவகையன்னேன்குறைகளைந்தாய்க்
குணமெட் டனையெனக்கொண்டான்றொழுநின்றகோமணியே.

நவமணியாண்மகனம்புமேநாடு

கோமணி மேவியவேல்கொண்டனைக்கரங்கோகநகை
கோமணி யென்றவளீன்றுரைத்தந்தனள்கொண்டிடும்பர்
கோமணி யேற்றிடவேதலைப்போக்கிக்குராவமர்காக்
கோமணி யென்னிளவேலூரென்றுயினிக்கோளறுமே (உசு)

துன்பந்தீமைதுணம்வலியென்ப

கோளற க்காசிபன்றன்னவிழுற்றிடக்கோறொடுத்துக்
கோளற த்தீயரைக்கொன்றடியார்களிகொள்ளவைத்தாய்
கோளற வேல்விழியார்வலைச்சிக்கினன்கோழையுண்ட
கோளற வோர்துதிசேரிளவேலூர்கொடுவினிதே (உஎ)

இனிப்புமேலிலாபம்விருப்புடனுமே

இனிமை யதாயிளவேலூரமர்ந்தவிறைவவின்பால்
இனிமை யென்றுன்னடிக்கிச்சையிலாதிதழிட்டிருக்கால்
இனிமை கொண்டாரிறவாதிளமாதரினம்பிரியா
இனிமை கொள்ளுள்ளத்தவேனுக்கென்னோகதியெண்ணிலையே.

இலையுடனிலைபோய்கிடையாதே

இலையாதி விண்டமலரெடுத்துன்னடியிட்டிறைஞ்ச
இலையாதி நாளிளவேலூர்முருகவிம்மைப்பயனே
இலையாதி சொற்புகன்றீட்டியிட்டேழையரின்பமுற்றேன்
இலையாதி மூர்த்தியுன்றூணீழற்பேரினியேந்துகொள்ளே (உகூ)

பகையடங்காமையாற்றுதுகொண்டதுவே

கொள்ளா ரெனுமலையான்மாகறனொடுங்கூடியவர்
கொள்ளா மையாயவிகொண்டிடக்காசிபன்கூக்குரலாற்
கொள்ளா தவருயிர்கொண்டிளவேலூர்குராவடியைக்
கொள்ளா றுமாமுகவாவென்குறைகெடக்கோட்டமிதே (ங0)

தூராமநந்தோடுகோட்டந்தேய்வலோகம்

கோட்ட மடிக்குடியானிளவேலூர்குருபரனுங்
கோட்ட மெமக்குளதென்றடியாரினங்கோட்டமதாய்க்
கோட்ட முறும்பிணியற்றூரெழுத்தையுட்கொண்டுணவாய்க்
கோட்ட மடைந்தமர்வாரடியேனையுங்கூட்டுகவே. (ங்க)

வினைசேர்விடுப்பாராக்துவானுதம்

கூட் டுடலென்றடியாரிளவேலூர்குராவடியிற்
கூட் டெமைமென்றுனைக்கும்பிடுவார்கொடியேனழியக்
கூட் டுவராரெனவென்றென்றிரவியங்கொட்டியயல்
கூட் டுவனுன்னடிக்கன்புற்றிலேனென்குறையகற்றே. (ங உ)

உள்ளம்போக்குடல்நீக்கேனநான்கே

அகத்தா யறிவுடையோரிளவேலூரடைந்துதினம்
அகத்தா யெமக்கழியும்பயமென்றுன்னடிபணிவார்
அகத்தா யெனவருள்வாயடியேன்மயலாரகலின்
அகத்தா யெனதுயிரென்பேனையாளினழகுறுமே (ங ங)

நோயுடனச்சந்துன்பந்தரித்திரீம்

உறுகண் டருமிளையார்மயலென்றுளமோர்ந்திலமுன்
உறுகண் ணறவுவர்தம்மேவல்கொண்டுணவாதியின்றி
உறுகண் வளர்த்தனனுன்னிளவேலூருகந்தடையா
உறுகண் களைவடிவேலாவெனக்கெங்குறைவிடமே. (ங சு)

திருவோவோழ்நாள்மருந்தோடுவுறையே

உறை விடமென்றிளவேலூரமர்ந்துடையாயடியேன்
உறை மடவார்பணிக்கேசென்றனவுனையுற்றுணரா
உறை சிரமுற்றவருடலிநாலிளைத்துக்கமற
உறை மட்குடமுடற்றுவடிகைவிட்டிடலுடைப்பே (௩௫)

அறுத்திடுகரைதிருசெல்வழிடையதே.

உடைப்பா ங்கரைகரத்தாற்றுத்தரதிசையுன்பதியாம்
உடைப்பா வைவாழிளவேலூர்வந்தேத்தியுறுமுணர்வோர்
உடைப்பா திநீத்துரையாடாப்பதம்பெற்றனருலகை
உடைப்பா வகியெனையாண்டாலெவர்பிழையோதுவரே. (௩௬)

சொல்லுபதேசமருச்சனைகற்கவே.

ஓதுத லென்னிளவேலூர்முருகவுமாபதிக்கு
ஓதுத ல்செய்திடவுற்றுயுனக்கெவரோதவல்லார்
ஓதுத லட்டபுட்பத்தாலமர்ந்துன்னொளிவிளக்க
ஓதுத ல்கொண்டறியேனுபதேசமுரையெனக்கே. (௩௭)

திருவிலையற்ற சொல்லோடுமேலான்

உரை யென்மருகனென்பாளிளவேலூருயர்மணியை
உரை யற்றிடுகண்மணியெனதென்றரனூர்புகுந்தான்
உரை நீத்தவரெங்களுண்மணியென்றுழியாதிருந்தால்
உரை யாமணுமணியெவ்வாறடைகுவதுட்டுணைக்கே. (௩௮)

திருசகாயத்தோடிருமரமிரண்டே.

துணை சேரிளவடிவேலூரமர்ந்ததுணைமுருகன்
துணை யாமர்க்கரைத்தூள்படுத்தான்றுணையார்மரமாய்த்
துணை யாயமர்ந்திடுந்துட்டர்க்குறுஞ்சினைத்துண்டுசெய்த
துணை யாமலர்ப்பதமென்னுட்குடிபுகத்தூண்டுவனே. (௩௯)

ஞாபகநினைப்புவிடுந்தோடுப்பானே.

தூண்டுதல் செய்மனமேயிளவேலூர்துணைப்பதத்தைத்
தூண்டுதல் கொண்டுறுமைந்திந்திரியத்துணிவதனால்
தூண்டுதல் செய்திடுமைங்கோலவனுறுந்தோற்றமற
தூண்டுதலா க்கிடுவான்வடிவேலொடுதோகைகொண்டே. (௪௦)

மயில்சிறைவிருதுவாலெனப்படுமே.

தோகை கொண்டேயிளவேலூரமர்ந்திடுதோன்றலரித்
தோகை கண்டித்தவனீன்றுடனேமணந்தோதரிய
தோகை கொண்டேபலவண்டந்திரிந்துலகீர்பகைவர்
தோகை கண்டித்தவன்றுளடையார்க்கிலைசொக்கமதே. (௪௧)

தூய்மைநன்மைதுயயோடுநலமே.

சொக்கமுடை த்திளவேலூரமர்ந்தசுயஞ்சுடரே
சொக்கமுடை யவர்தந்துணைகொண்டுட்டுரிசகன்றூர்
சொக்கமுடை யமின்னுரிடையார்மணச்சொக்கமுற்றுச்
சொக்கமுடை யதென்றேயறிந்தேனெனைத்தொண்டுகொள்ளே.

தழம்பேர்டலைமபணிவிடைப்பழமையே.

தொண்டுகொண் டானருட்டேயோயடியவர்தோத்தரிக்கத்
தொண்டுகொண் டாயடியேனிளவேலூர்தொழவருளுன்
தொண்டுகொண் டானடிசொற்றறியேன்வினைகட்டொழியாத்
தொண்டுகொண் டப்புழைமட்பாத்திரமெனத்தோன்றினனே.

உதித்தல்காண்டல்வந்ததேன்ழளைத்தே

தோன்றுத லெம்பெருமானிடைக்கண்பொறிதோற்றமெனத்
தோன்றுத லாயினைநீயிளவேலூர்தொடர்ச்சிகொடு
தோன்றுத லென்றருவான்கான்முளையவித்தோடமறத்
தோன்றுத லோவுலகோர்தொழவோவதைச்சொற்றுணையே.

சோற்றுனைசொல்மொழிமௌனமாமென்ப

சொற்றுணை வேதியனென்பான்றுணையருட்டேயவனே
சொற்றுணை யாப்படையாக்கொண்டவனவிச்சோர்வகலச்
சொற்றுணை யாறெழுத்தென்றிருந்தானுன்சொதையடைந்தான்
சொற்றுணை யில்லிளவேலூர்முருகவென்சோகமறே. (சரு)

பூச்சாந்துன்பமயக்கமசோகம்

சோகம ணிந்திடுவாரிளவேலூர்தொழுதவர்பாற்
சோகம டைந்திடவொட்டாயடியவன்சோட்டையுற்று
சோகம டைந்தனனந்தோவறிவிலிச்சோடனெனைச்
சோகம டித்திடவொட்டாதருட்பெருஞ்சோதியின்றே. (சரு)

கடவுள்சோதித்தீயோடுநரகமே

சோதியின் றென்றுன்றுணைத்தாண்மறந்திடுஞ்சொட்டையரைச்
சோதியின் றேயிளவேலூர்முருகவென்சொக்கதனுல்
சோதியின் றெந்தன்றுணையாயினவினிச்சோதித்திடின்
சோதியின் னுவுறுவேனருளாவிடிற்சொல்லுவனே. (சஎ)

திருவோடுசோல்வீண்டேச்சோடுபுகழே

சொல்வள ரும்மறுகாமிளவேலூர்சுயம்படியார்
சொல்வள ர்மாலையைச்சூட்டுகின்றூர்தொழுதேத்திமயற்
சொல்வள ர்ப்பார்மனைக்கேதிரிந்தேன்கெடத்தொன்மறையோன்
சொல்வள ர்க்காவணந்தோற்றுவித்தானருட்டோற்றமின்றே.

தோற்றஞ்சொல்வலிவல்லமையாதும்

தோற்ற மென்னுள்ளத்தினிற்பலவாயுறுந்தோகையர்பால்
தோற்ற முரைத்தவற்கேவல்செய்தேதுயரான்மெலிந்து
தோற்ற மிழந்தனனந்தோவருளடித்தொண்டர்புகழ்
தோற்ற முறும்மிளவேலூரமர்ந்தவொடைப்பொருளே. (சகூ)

நூற்போருள்பாசுரமம்பொடநுச்சனை

தொடைப் பொருளாமிளவேலூர்முருகன்றுணைப்பதத்தைத்
தொடைப் பலவாலருச்சிப்பார்வினையறத்தூயரினந்
தொடைப் பத்தரையுடையான்சேவகாடிதொண்டுசெய்து
தொடைப் பத்தியற்றிடராழியுற்றேனருட்டோணிகொண்டே. (ரும)

அம்புடநீர்துணமாதுந்தோணி

தோணிகொண் டோர்ழியக்கரிமீதுதொடர்ந்தமர்ந்தாய்
தோணிகொண் டான்புகழும்மிளவேலூர்தொழாவடியேன்
தோணிகொண் மூவினைக்கொண்டைமின்னாரிதழ்த்தோணியுண்டு
தோணிகொண்டற்பகையாலாஞ்சியொத்ததென்றுப்பகற்றே. (ருக)

பவளம்பெருமையறிவுடனுணவு.

துப்பிதழ் மங்கையர்சூழிளவேலூர் துணைவவுனைத்
துப்பிதழ் கொண்டுதுதித்திடுவார்வினைத்தூற்றுவையான்
துப்பிதழ் மூடித்துராலறவாறெழுத்தைத்துடருந்
துப்பிதழ் செய்யருளென்னூழ்படமுனந்தோன்றகமே. (ருஉ)

பூதலம்பாதலமனமுடனுள்ளம்.

அகமாதி யிலுயர்வாமிளவேலூரதின்முருகன்
அகமாதி யினமுந்தார்க்கடித்தாமரையாட்சியென்பான்
அகமாதி பிட்சுவினன்பர்க்கொருபிடியன்னமிடார்
அகமாதி யினடிக்காமோவெனக்கருளந்தரமே. (ருங)

மேன்மைபோன்னுலகங்கீழ்மைமுடிவே.

அந்தர மாயுனக்கம்மியெட்டாமதனுன்முருகா
அந்தர ஞ்சேரிளவேலூர்குன்றுதடியார்க்களிப்பாய்
அந்தர ஞ்சூழுளத்தாவலிநேனனங்கன்படையார்
அந்தர மற்றவரந்தைதந்தாரருளாரியனே. (ருச)

தருவோடெற்றேன்மேலோன்வைத்தியன்

ஆரியனு யரர்க்கன்றுபதேயமருளியயன்
ஆரியன ன்றென்றவன்காற்றளையிட்டகமழித்தே
ஆரியனு யிளவேலூரமர்ந்தடியார்களுக்கு
ஆரியனு யினையென்னூழ்க்குறையளியாய்ந்தணிக்கே. (ருரு)

தரித்தலோடழகுபெருமைநன்மை.

அணியுடை மேற்பணியாமீமிசைக்கடியாய்ந்தணியும்
அணியுடை மங்கயர்க்காவலுற்றைங்கணையாலயர்ந்தேன்
அணியுடை மைப்புரியாமிளவேலூரமர்ந்தவவுன்
அணியுடை மைக்குரித்தாகாதினன்றூற்புகலாரிடமே (ருசு)

யாவராகமம்வேதஞ்சோதி.

ஆரிடந்தந் தெமையாள்வாரெனத்தலையாணமுற்றூர்
ஆரிடந்தந் நபடிக்குன்பெயருரைத்தார்வமொடு
ஆரிடந்தந் திதையத்தமைத்தாற்குறுமாவலற
ஆரிடந்தந் திடுவாயிளவேலூரமரமுதே (ருஎ)

தேவர்மேலாதுங்துணமோடுமுத்தி.

அமுதமு ண்டோற்கிறையான்பங்கயனெனுமாக்குறுவான்
அமுதமு ம்பற்புயங்கப்பணையானுறுமப்பதியால்
அமுதமு ண்டென்றுளத்தெண்ணாரிளையவேலூரமர்ந்து
அமுதமு ற்றூரடிக்காளாக்குமென்னுளத்தத்திரியே. (ருஅ)

உலையின்றுருத்தியம்போடுமலைவிண்ணும்.

அத்திரி போற்சிறுகாலென்னிதையமதையுருக்க
அத்திரி யைந்தெடுத்தங்கசன்மெய்த்துளைத்தானதனால்
அத்திரி போன்றொளிரம்மத்தைக்கூடியென்னுவியுய்ய
அத்திரி யுற்றிளைத்தேனருள்வேலூரமர்பதியே (ருகூ)

இடம்புருடன்தருகடவுளுமாமே.

பதியே திவனிளவேலூரலாமலிப்பாரிலரன்
பதியே குடியெனக்கொண்டானடிதொழப்பாதகம்போம்
பதியே ளியென்றுரைப்பங்கயன்பட்டதிப்பாரறிந்தாற்
பதியே யுனையடைவாருரைத்தேனென்பயம்பரியே. (சுஎ)

உயர்ச்சிவழியும்பெருமையோடன்பே.

பரியா ஞ்சிலைவளைத்தான்பாலகழுனம்பாரதியான்
பரியா ய்ந்திலையெனப்பாசறைதந்தழப்பார்த்தழைத்துப்
பரியா ம்படிக்கருட்செய்திலையேலெனைப்பாவிதரான்
பரியா கியவிளவேலூர்தொழப்பணித்தாள்விதியே. (சுக)

பிரமனுகமமிலக்கமியுண்மை.

விதிமா ற்சுரரிறைமேலென்றுறும்பதிவேண்டிலருன்
விதிமா சறக்கற்றமெய்யடியாரிவையென்விதப்பு
விதிமா துறுமிளவேலூர்பாவவிருந்தவவவ்
விதிமா த்திரமுரைத்தாலெனக்காரிணைவீறுறுமே. (சுஉ)

காதல்பெருமைதனிமைபுண்ணியமே.

வீறுறு மென்றிமையோர்க்கமுதச்சுதன்விடலற
வீறுறு மாறளித்தான்காசிபன்றருவீர்கணை
வீறுறு கண்டருமென்றிளவேலூர்விரைந்தடைந்த
வீறுறு ப்பாலுயிர்கொண்டாரருளிதுவேலாற்றலே. (சுங)

ஞானமுயற்சிபோறைபொடுவிலியே.

ஆற்றலி லேசமிலார்பொய்ச்சமையமதையடுத்து
ஆற்றலி லச்சையற்றுட்புகுவாரடையேனவரை
ஆற்றலி லாரிருளுற்றுதித்தோய்வுடையாரருளால்
ஆற்றலி லேப்பரந்தாவிளவேலூர்க்கணியாடலே. (சுச)

துளித்தலாடல்புணர்தல்சொல்லுதல்.

ஆட லரிசனத்தாற்பொட்டணிந்துயராடைசுற்றி
ஆட லிசைத்தவரக்கவம்பாலென்னகந்துளைத்தார்
ஆட ல்செய்தைம்பொறிப்பின்மதியாயிடவஞ்சலென்று
ஆட றரும்மிளவேலூர்முருகவருளங்கமே. (சுரு)

உடலோடழகுசரீரத்தோடுமறை.

அங்கந்த ளிர்மாவடுக்கண்சிலைநுதலம்புயந்தோள்
அங்கந்த ரமரம்பைக்குரங்கென்றென்றறிவையர்தம்
அங்கந்த னையடைந்தேனிளவேலூரரர்க்கரிய
அங்கந்த ருமுருகாவடிவேல்கொண்டயர்வகற்றே. (சுசு)

துன்பம்வருத்தந்தளர்வுவெறுப்பே,

அயர் வாரடைந்திலருன்னடித்தாமரைக்காட்புகுவார்
அயர் வறப்பார்த்திளவேலூர்புகவருள்வாயடியேன்
அயர் வாள்ந்தமின்னிடையார்க்கிதமோதியழிந்துமினம்
அயர் வாம்படிக்கெனதுள்ளிலைகாணுன்னரத்தமின்றே. (சுஎ)

இரத்தஞ்செம்மைபொன்னொடுபவழம்.

அரத்த மின்பாலுணுமுன்கரவேலமராவதியான்
அரத்த முறப்பிரமன்வழிமைந்தரையன்றழித்தே
அரத்த மெண்மாதொடுசேரிளவேலூரமர்ந்தனையுன்
அரத்த மிணைத்திருவாய்திறந்தோர்மொழியாய்ந்தரியே (சுஅ)

மால்கிளிபொன்வெட்டெனப்படுமென்ப.

அரி யீன்றவர்மணங்கொண்டத்தவுந்தியதின்வட்பால்
அரி கேகயங்குயிலாதியுன்சீர்கோண்டமர்பொழில்சூழ்
அரி யென்புரியெனச்சேரிளவேலூரறுமுகவா
அரி யென்வினையொழிப்பாரிலைநாயினுக்கார்கடிதே (சுகூ)

சிறப்புடனச்சங்கூர்மைகளிப்பு.

கடிசேர் ந்திடுமிளவேலூருளானயன்கான்முளைபாற்
கடிசேர் த்திலமெனக்காஞ்சியைநீத்தொண்கரியிவர்ந்தே
கடிசேர் த்திடுகணையாற்கடம்பாற்களைக்கண்டறுத்துக்
கடிசேர் வையோடமர்ந்தான்றண்டனனுட்கயமறுத்தே (எ௰)

கேடுபேருமைமேன்மைதேய்வே.

கயமறு ப்பான்கரத்தாற்றுத்தரமுறுங்கண்ணுதற்சேய்
கயமறு திட்டுபெற்றகாரணத்தாற்கலையான்றொழிலின்
கயமறு த்தற்கொடுகண்டாக்குவாயைந்தொழிற்கடையேன்
கயமறு த்தாளிளவேலூரவனினைக்காங்கனமே (எக)

மேகமிலந்தமிசிறப்போடுகூட்டம்.

கனமொத் திடிகொடுகொல்சாய்த்தொளிதந்துகண்டளிக்குங்
கனமொத் திடவதுகண்டடியாரவண்காதல்கொண்டார்
கனமொத் திடுமிளவேலூர்கலந்தவர்கன்மமெலாங்
கனமொத் தினிசெலுமேவெளியேற்கருள்காண்வாரியே (எஉ)

ஊதுங்கருவிகங்கைமதில்வழி.

வாரியை வாயிலிட்டான்மகளார்மணவாட்டமற்றூர்
வாரியை ந்துச்சிகொண்டானுபதேயவழியமர்ந்தான்
வாரியை சேரிளவேலூரவனின்வலியுணர்ந்த
வாரியை ங்கோற்கிலக்காக்காதென்மேனிவயிரமின்றே (எங)

தண்டோடுகோபம்வச்சிரம்பகையே.

வயிரங்கை யேந்திவருமாயையின்சுதர்வாட்டமுற
வயிரங்கை கொண்டமட்டுஞ்சமர்செய்துயிர்வாங்கியன்றே
வயிரங்கை கொண்டவன்றன்முடிசூட்டினைவானவர்க்கு
வயிரங்கை யாரிளவேலூரவவருள்வாய்திறந்தே (எச)

வாயோடுமேளனமிதழோடுவாசல்.

வாய்திற வாதெழுத்தாறுளத்துன்னுவர்வாய்த்தலுண்டு
வாய்திற வாளிகளாய்ந்திளவேலூர்வழிவழியாய்
வாய்திற ந்தொய்யலெனக்குடித்தேழையர்மாத்திரத்தால்
வாய்திற ங்காத்தழிந்தேனருள்வாரிலைமாயையறே. (எரு)

பொய்யுடனிரதிபஞ்சாசத்திவஞ்சகம்.

மாயையுடை ப்பொருளாமென்றனைத்துமதித்தடியார்
மாயையுடை ச்டமற்றூன்றனைமதியாதமர்ந்தார்
மாயையுடை ந்திடவேயிளவேலூர்மறையுணரா
மாயையுடை யவர்க்குட்டலையாயினன்மாலகற்றே. (எசு)

சோழன்பெருமைமயக்கம்விருப்பம்.

மாலாண் டிடுபுவியுன்னிளவேலூரெனமறையோய்
மாலாண் டலைக்கொடிவைத்திளமான்குட்டியைமணந்து
மாலாண் வழிகெடவொட்டாதொருபிடிமன்றல்கொண்டாய்
மாலாண் டவர்க்கழகோமதியானருள்மாநாதனே (எஎ)

கடவுள்விட்டுணுசிவனொடுசோழன்.

நாதன்ற னக்கொருநாதனென்றேமறைநாதத்தினை
நாதன்ற னூனக்கநாடாப்பரன்றனக்கேநவின்றாய்
நாதன்ற னையனென்றெண்ணுதுசற்றுநடுத்துறந்து
நாதன்ற னூரிளவேலூரெனக்கருள்நன்னடையே (எஅ)

திருநடைமார்க்கத்தோடுநிருத்தம்.

நடையே டணைகொண்டுளவிளவேலூர்நயப்புறிநன்
நடையே ண்டவமொளியாதியெண்சித்திகணுமடையும்
நடையே கமாய்ந்தருள்செய்திடவல்லவனம்முளத்தே
நடையே ற்றவன்மகன்காணுலகீருண்ணடலையின்றே. (எகூ)

துன்பம்நடுக்கம்வஞ்சனைபொய்யே

நடலையின் றோர்விதிக்காலவிமுற்றிடநங்குமரன்
நடலையின் ஞங்கிழைப்பாருயிர்கொண்டிடுநாட்டமினி
நடலையின் சொல்வளர்கச்சிக்குரியநம்மான்மருகன்
நடலையின் ஞதருள்வானிளவேலூர்நடைநலமே. (அ௰)

தாண்டவஞ்செல்வமொழக்கம்வழியே

நடைநல மாச்செயுமம்பலத்தானருணம்வடிவேல்
நடைநலமா ய்ந்திளவேலூர்குராவடிநாட்டமுற்றான்
நடைநலமா யுறுவார்பொருட்டாகமநான்மறைநூல்
நடைநலமா க்கற்றமர்வார்க்கவனடிநன்குறுமே. (அக)

அடைந்ததரித்திரந்துன்பத்தோடுநோய்

உறுகண்க ளையிருநூறிரண்டாயிரமுற்றவர்கள்
உறுகண்களை யுனக்கென்புகல்வேனுணராதழிந்தால்
உறுகண்களை ந்தவர்சூழிளவேலூருடைவவென்பால்
உறுகண்களை யறிந்தாண்டிடிலாம்புகழூறகற்றே. (அஉ)

வடுகோலையிடையூறேடுதளர்வே

ஊறுடை யானுரையாற்காசிப்பனவியோங்கவைத்து
ஊறுடை மாகரன்றன்முன்னவனொடுமூதிவிட்டாய்
ஊறுடை யோரடையாவிளவேலூருகந்தவவென்
ஊறுடை ப்புற்றிடச்செய்யென்றலையுறுமூழ்மடியே. (அங)

வயறெடுத்துன்புபிணிபோய்யாமே

மடியா லிலையிடைப்பூங்கொம்பரசிலைமாதரல்குல்
மடியா திகடரவல்லகண்மாவடுவாமதித்தே
மடியா ளவைத்தழிந்தேனிளவேலூர்வழியடையா
மடியா வலன்பவந்தீவடிவேல்கொடுமானமின்றே (அச)

மானுபிமானமளவிலாவலியே

மானமிலா மடவார்தனமானையின்மத்தகம்போன்
மானமிலா கிரியான்மதித்தாடவர்மாழ்கிமதி
மானமிலா ப்மதாய்க்கொண்டழிவதென்மான்மகன்செய்
மானமிலா வியற்கீயிளவேலூர்மகிழ்சாமியே (அரு)

முருகன்குறத்திசிவனெகெடவுளே

சாமிக்குரிமை யதாமிளவேலூர்தனிச்சவரர்
சாமிக்குரிமை மணளனென்றுலிதென்சாதிமதி
சாமிக்குரிமை யளாம்பரையந்தணர்சாங்கமெலாஞ்
சாமிக்குரிமை யன்றுளுரையேனடிச்சாதனமே. (அகூ)

செல்வமிடமடையாளத்துடனூர்

சாதனமா துறுவாளிளவேலூர்த்தலைவனுற்ற
சாதனமா ய்ந்திடிற்றீநடையந்தணர்சாதியென்பான்
சாதனமா ர்த்தருக்குச்சூர்தருவரைத்தான்றுலைக்குஞ்
சாதனமா ஞ்சிகிமேலயில்கொண்டுறுந்தாமமன்பே, (அஎ)

உடலோடொழங்குவீடோடுகீர்த்தி.

தாமமன் பாலுயிர்க்கிட்டளமென்றழற்றுண்டவன்பர்
தாமமன் புற்றிளவேலூர்த்தலைவநின்றனைமணந்து
தாமமன் றென்றினமும்பெறுவாரடிதாவழியாத்
தாமமன் பாதியிலாதழிப்பான்படத்தண்டுகொண்டே. (அஅ)

நால்தண்டாயுதம்பூவோடுகணையே.

தண்டுகொண் டோன்மகன்றட்டான்மருளர்தமக்கடர்ந்த
தண்டுகொண் டாழுப்பிடையமர்ந்தார்தந்தலையறுத்தான்
தண்டுகொண் டாய்ந்தரிச்சிப்பார்க்கருளுந்தயாநிதியூழ்த்
தண்டுகொண் டோரழிவாரிளவேலூர்தகுதியற்றே. (அகூ)

ஒழுக்கம்போறுமையுரிமையுந்துணமே.

தகுதியற் றேவாணியன்காற்றளைகொடுதஞ்சமெனத்
தகுதியற் றைத்தினஞ்செட்டிசெய்தேவிடத்தங்கையரைத்
தகுதியற் றந்தெரிந்தேமணங்கொள்கெனத்தாரையிட்டான்
தகுதியற் றாடையாவிளவேலூர்தனிக்களத்தே. (கூ௰)

நேற்களமிடம்போற்களமோடுகூட்டம்.

களமி மக்குன்றிளவேலூர்வெள்ளாழர் தங்காதலர்க்குக்
களமி ங்கிலைமலையான்களத்தொப்பிடிகண்டவடங்
களமி ன்றியாவப்புண்டிளப்பாறக்காட்டாங்குளத்தே
களமி ங்கறப்பதர் தூற்றியளந்தனல்காண்வாரமே. (௧௧)

கரையுடனன்புவுரிமைநற்பதமே.

வாரங்க ரதிரையுத்தரமாமிளவேலூர்வந்து
வாரங்க லந்தவர்தம்மிடர்தீரமனத்துறுவான்
வாரங்க டையென்றுறுங்குரவற்கொருமாமருகன்
வாரங்க னம்புரப்பானஞ்சிடீர்தருவான்பகமே. (௧௨)

அவாவின்மைகீர்த்தியன்பீச்சுரத்தன்மை.

பகமடை வார்க்கருளும்பதிச்சேணியன்பாவைகொண்டு
பகமடை த்தற்கிணையாயிளவேலூர்பதிக்குடியாய்
பகமடை ந்தாற்கொருபட்டுதந்தேயவற்பாற்சுகிக்கப்
பகமடை ந்தானினியான்பாவையாயிற்பயிறலென்னே. (௧௩)

உரைகூடுதெலோடுசேர்தலுஞ்சொல்லே.

பயிறலெ ன்னுப்புறுநீரிடைப்பள்ளிப்பயந்தவரை
பயிறலெ ன்றன்குணமென்றிளவேலூர்பதிமணந்தான்
பயிறலெ ப்போதெனப்பார்ப்பார்தொழலென்பழியுலகீர்
பயிறலெ ம்பாலிலையென்பாற்கருளும்பரம்புகலே (௧௪)

சொல்லுறைதஞ்சம்வெற்றியீதாமே.

புகல்வா முமக்கிளவேலூர்கைக்கோளர்புகழ்வரன்சொற்
புகல்வா ய்ந்திடுமுடலார்படப்புங்கவம்போட்டழித்தே
புகல்வா'சவன்றனக்காக்கியன்னேன்முடிபூட்டியதாற்
புகல்வா கையென்றவன்றாளேத்துவீரருட்பூரணமே. (௧௫)

கடலுடனெல்லாங்கடவுள்ஞாயமோ.

பூரண த்தேதுயிலோர்சக்கிலிதரும்பூவையரை
பூரண மற்றிடப்பார்ப்பான்மகன்மணம்பூண்டமர்ந்தாற்
பூரண னென்றிளவேலூர்புகுந்தவர்போற்றுதலென்
பூரண மோவறியேனிவர்சாதியின்பூதிநன்றே (௧௬)

திருநீறுகோடுமைசெல்வம்பெருமை.

பூதிநன்மைக்குறி யென்றிளவேலூர்புகுந்தசைவர்
பூதிநன்மைக்குறி யோகருமான்றரும்பூவைகொண்டாற்
பூதிநன்மைக்குறி யாமென்றறிந்தவர்போற்றுதலென்
பூதிநன்மைக்குறி த்தற்றருவான்றெரிபூபாரமே (௧௭)

கவசம்பூமிசுமையளவிலதே.

பாரந்த ரித்தபரமிளவேலூர்பதியமர்ந்து
பாரந்த னக்குப்பளுவெனிலக்கணம்பாதகராம்
பாரந்த னைக்கணையாற்கீழ்ப்படுத்தியப்பாலன்பரைப்
பாரந்த ராவின்பவாரியிலாட்டிப்பதிதருமே (௯௮)

கோடுக்குந்தருமழையனுக்கிரகிக்கும்.

தருமா னிரையுறுவான்காதலியரைத்தான்மணந்து
தருமா கமவழிநிற்போர்க்கருளுந்தயாநிதிவான்
தருமா மழையெனக்கைம்மாறினையடையாத்தலைவன்
தருமா ணடியிளவேலூரமர்ந்தவர்தம்மிடத்தே. (௯௯)

இடதுபால்செல்வம்பெருமையோடிடமே.

இடங்குஞ் சரமகளிச்சைவைத்தானிறவார்புகழ
இடங்குஞ் சிரிப்புடைத்தாமிளவேலூரினிலமர்ந்து
இடங்குஞ் சமக்கியுளார்க்கருள்செய்திடுமீசனடி
இடங்குஞ் சமாய்ந்தரிச்சிக்கார்க்கென்னோமதியீரமின்றே. (௧)

துணமோடறிவுவன்புடனழகே.

ஈரம்பெ றுதலவனருளாலென்றிருக்குரைத்தும்
ஈரம்பெ ருக்கலிறைதூன்வழியென்றிருந்தறிந்தார்
ஈரம்பெ றர்க்குரியாரடையார்மயலிச்சையினால்
ஈரம்பெ றுகடையாரிளவேலூரிருஞ்சேர்வனே. (௧௧)

இளையனார்வேலூர்

எமகவந்தாதி

முற்றிற்று.

உ

சிவமயம்.

இவை,

சிவப்ரகாசவெண்பா-தத்வாமிர்தம்

தத்வராயசுவாமிகள்

அருளிச்செய்த

இவ்விரண்டுடன்,

தத்வாமிர்தகட்டளையும்

காஞ்சிபுரம்,

சுத்தவைதீகசைவசமயாசாரியருளொருவராகிய

சண்முகதேசிகர்- குமாரர்

அருணாசலதேசிகர் அவர்களால்

பரிசோதித்துப்பதிப்பித்த

பிரதிக்கிண கத்

திருமயிலை.

குருநாததேசிகரவர்களால்

பார்வையிடைப்பட்டு

விவேகசந்திரோதயஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

உ

சிவமயம்.

அச்சிற்பதிப்பித்தவர்.

சிரப்புப்பாயிரம்.

(நேரிசையாசிரியப்பா.)

பூவருநான்முகப் - புத்தேள்படைத்த,பாவருமண்டம் பற்பல் கோடியு, ளுயர்ந்ததிவ்வண்ட - மோங்கதிற்சிறந்தது, நயந்தபூவுலக-நவிற்றதிற்பொலிந்தது, சம்புத்தீவதிற் - றக்கதுதென்றிசை, பம்ப திலுயர்ந்தது - பாரதகண்ட, மற்றதிற்றிகழ்ந்தது - வண்டமிழ்நாட தில், வெற்றிசேர்சைவ - சமயமெய்க்குரவரா, மொப்பில்சம்பந்த-னுதித்திடுங்காழியிற், செப்புவாகீசன் - திருவாமூரிற், றீதிலாச்சுந் தரன் - சேர்நாவலூரில், வாதவூரண்ணல்- வருமப்பதியுடன்,சடகோ பன்வரு - சால்புறுகுருகையி, னிடமார்ந்தற்புத - மியைதிருவீரையி லந்நால்வருணத் - தாதியாம்வருணரின், மன்னுந்தத்துவ - வாதிகண் மரபினிற், செந்தமிழ்நாடு - செய்தவமிவனாத், தந்ததென்னத் - த ரணி வந்தவரிற், புலவர்சிகாமணி - போதகர் சிகாமணி, குலமறைய வர்கள் - கோதில்சிகாமணி, யான்றவர்சிகாமணி - யாரியர்சிகாமணி, சான்றதத்துவநூல் - சாற்றினர்சிகாமணி, வித்துவராயர்- வியந்திட லொழியாத்; தத்துவராயத் - தனிப்பெயர்மேக,முலகநூல்போலா-துடலமெடுத்த, பலனடைநூல்கள் - பலவினுஞ்சிறந்த, விருக்குமு தலா - வீரிரண்டென்னும், பெருக்கார்வேதப்-பெருங்கடலதனுட்,ட பவருந்துவிதச் - சார்பெனுமுவர்கெடுத், துபநிஷத்தென்னு- மொ ண்புனல்பருகிச் - சிவப்பிரகாச - சிகரமேற்கொண்டு, தவப்பிரகாச சர் - தங்கிடனாகி, யருபானந்த - மடுத்வர்க்களிக்குஞ், சொருபானந் தச் - சோதிமால்வரைமேற், செப்புபல்கருமத் - தீவெயிலெறிக்கு, மிப்பவக்கோடைதீர்ந் - திவ்வுலகுய்ய - வேறுவேறாக - விரைந்துட ன்பொழிந்த, பேறமைசாத்திரப் - பெரும்பிரவாகமாந், திருத்தலா ட்டொளி - திகழ்பிள்ளைத்தமிழ் பரத்தினையருள்வெண் - பாவந்தாதி

துன்னியசீர்க்கலித் - துறையந்தாதி,, சின்னப்பூவெண் -பாத்திருத்தசாங்க, மும்மணிக்கோவை - நான்மணிமாலை - மம்மர்நீக்கிரட்டை- மணிமாலையினொடு, கலிப்பாக்கலம்பக- மூலாச்சிலேடையுலாத்துலக்குநெஞ்சுவிடு - தூதுகலிம—,லஞ்ஞைவதமோ - கவைதைப்பரணிக,டஞ்சமாரமிர்த, சாரவெண்பாவெனும், பதிணெண்ணூலும்-பாடுதுறையும், முதிருதிரட்டு - மொழிந்திடும்பிறவுமிடைநெடுநாட்பட- லாலெவரிடத்து, மடையவுமகப்படாதருசலைநோக்கித், தராதலத்திற்புதி தாச்செய்திடலிற்,புராதனநூலைப்-போற்றனன்கெனவெணிப், பலதேயத்தினும்-பலமடங்களினு, நலமுறுபுலவரானுட்பலநாடி,-வருந்திற்சேர்த்து- வையசமடந்தை,திருந்துமாமுகமாய்த்-திகழ்தொண்டைநாட்டி,லம்முகத்திலதத்-தலகிலாலயங்கொண்,டிம்மகிதலமே - விலங்குசீர்க்காஞ்சியி, லதிவர்ணச்சிர - மத்திலுதித்து, முதிருஞ்சிவாகம - முறையினுணர்ந்து, தபுதலினுல்வர்செய் - தமிழ்வேதமுமுணர், உபயகவிகளி - லொருவனுனென், அச்சரவணபவ - னருளேநிறைந்த, கச்சிப்புலவன் - காமருமரபின. னிலக்கியவிலக்கணமெனுமிருகடலி, னலக்கணில்லா - வகன்சுனைகண்டோன், வேதாந்தத்தொடு - விளங்கியசைவப், போதாந்தநூலும் - புரையறவுணர்ந்தோன், மன்னியசுத்த - வைதிகசைவத், தன்னிகர்குரவரிற்- றலைமைபூண்டோன், சண்முகதேசிகன் - தகுமாதவத்திற், றண்முகனுகித்-தரையிடையுதித்தோன், றோருணசல - தேசிகன்றன்பா, லாருமந்நூல்க - ளனைத்தையுமளித்து, வறைபவர்தம்மால் - வருபிழைமுற்றும், புரையறத்திருத்திப் - பொறியாவெழுத்திற், றீட்டியகருதிச்- சிவப்ரகாசத்தொடு, நாட்டியதத்துவா மிரதமக்கட்டளை, மூன்றையுமச்சினின்- முந்துறப்பதித்தனன், கான்றதேம்பொதும்பர்—ககனகூடத்தையுந், தெங்குவிண்ணுலகையுந்- திரள்கமுகதன்கீழ்த், தங்கியநாளையுந்- தாற்றுக்கதலிகள், மதிமண்டலத்தையும்-வளர்கழையதன்கீழ்க், கதிர்மண்டலத்தையுங்- கதிர்த்தெழுஞ்சாலி, கொண்மூவையுமளாங்- கொன்றையாநகரோன், வெண்மதிக்கவிகை- வேந்தரு மதிப்பொன், கங்காகுலத்தர்- களித்திடவந்தோன், கொங்கார்ந்தளிமுரல்- குவளையந்தொடையா,னளகைக்கோவு- மவாம்பெருநிதியான், வளர்கைக்கொடையான் - மழையையும்வென்றோன் , பண்டைஞான்றுலகிற் பாண்டியனைப்போற், றண்டமிழ்வளர்ப்பான்- சார்தருநிபுணன், அ

வ்வியர்போலா- தான்றவிந்நாடுஞ், செவ்விதினுறச்செயுந் - தேசாபி
மானி, தேவாசிரியனுந்-தேர்வருமொன்றை, நோவாதுணரு- நுண்ண
றிவாளன், எண்ணலர்க்கரியே- றேய்ந்தவனேனு, நண்ணினர்க்கன்பு
நயந்துமுன்னிற்போன், சயந்தனைப்பெற்றுத்- தருவினைக்கைக்கொ
ண்டியைந்துநற்புலவரை - யினிதிற்காத்துப், பொருவறுபோகம்-
பொருந்தியசெயலா, லிருவிழியொடுபுவி- யிடைவருமிந்திரன், வை
யகமுழுதாண்- மன்னர்தங்கொடியையு, மெய்ந்நிலைபெறச்செயு மே
ழிக்கொடியின, னுவின்கிழத்தி- நண்ணியவிடத்திற், பூவின்கிழத்தி
பொருந்தாளென்னு, முதுமொழிதன்க்கு- முதிர்பகையாகக், கதுவி
யசெல்வமுங்- கல்வியுமுடையோன், கற்றோரவையிற்-கல்வியினானு,
மற்றோரவையின்- மாண்பொருளானு, முந்துறச்செய்த- முருகப்ப
வேளெனுந், தந்தையிவனைத்- தரற்கருந்தவமு, னென்னோற்ற னன்
கொலென்- றெவரும்வியப்ப, வன்னோன்றனிலு-மரும்புகழ்படைத்
தோ, னுனகன்வாழ்பவ ரினுறினுமெய்ஞ்ஞானச், சனகன்வாழ்வத
னிற், சாலுமெய்யறிவினன், முத்தமிழ்த்துறையின் - முயங்கலெஞ்
ஞான்றும், வித்தகமில்லா- விளையாட்டானோன், சங்கமுடனஞ் சக்க
ரந்தாங்கி, யிங்களித்திடலா- லினிபமாலொப்போன், பலகலைவடிவிற்
பாரதிநாவிற், குலவலினன்மறைக்-கோவினையனையான்- அருணாசலப்
பெயரார்ந்த - கருணாசலமெனக் கவினுமன்னவனே ... ...*

சிறப்புப்பாயிரம்-முற்றுப்பெற்றது.

இ ஃ து,

சாரம்- குமரப்பமுதலியாராற்

செய்யப்பட்டது,

களத்தூர்,

இலக்கணம் - குமாரசுவாமிதேசிகர்குமாரர்

சுப்பராயதேசிகர்பாடியது.

(பதினான்குசீர்க்கழிநெடிலடி - ஆசிரியவிருத்தம்,)

தண்ணப்புறுப் பிறவிப் பிணிசெட மருந்து - தக்கவாபற்பகனடித், சரணியினிறைவே தாந்தமாக் சடலிற் றத்துவராயர்சாஸ்த்திரமா முணப்பெறுவமிர்தைக் கடைந்தெடுத் தெவருமுண்ணியவச்செழுத் தென்னு - மொண்மணிக்கலத்தின்மாதவனமரர்க்குதவியாங்குதவினன் கொன்றை, யெணப்பெறுப்புகழ்சேர் முருகப்பமன்ன - னிருந்தவத்தளித்தவனுலகி, லிருவகைப்பொருளிற் பாண்டியன்பண்டை-யிந்தநாளிவனெனச் சிறந்தான், அணப்பெறுப் பெருக்கின்வணக்கம் வேண்டிடுமென் - றறைமுதுமொழிக்கொருசான்று, யமருநல் லருணாசலனெனப்பெயர்கொண் டகிலமேல்வரு - புரந்தரனே, ...*

ஷை முதலியார்கள் சமூகவித்துவானுகிய

சிதம்பரம்,

பழனி உபாத்தியாயர் பாடியது.

நேரிசைவெண்பா.

கொன்றைபரு ணாசலப்பேர்க் கொண்ட லுலகவர்க ... ... *
டுன்றுபவ வெப்பைத் துரப்பதற்குண்—டின்றுபெயத் ... *
தத்துவ ராயர் சகரரிற்சாண் சாஸ்திரமாம் ... ... *
அத்திபிடை வாய்வைத்த தால்... ... ...*

இதுமவர்

கட்டளைக்கலித்துறை.

பைம்மாறுதத் துவராயர்சொன்னூலைப்பதித்தச்சினின்... ... *
மைம்மாறில்சன்மப்பகைவெருண்டோடமலிவித்துவெம் ... ...*
பொம்மாறுபேரின்பவாரிதிளைக்கப்புரிந்திடலால்... ... *
கைம்மாறென்செய்வதருணாசலாக்குக்கடலுலகே ... ...*

உ

சிவமயம்,

நூலின் வரலாறு.

பூமிதேவிக்குத்திருமுகம்போலச் சிறந்திருக்கிற தமிழ்நாடுபல வற்றினு மேம்பட்ட நடுநாட்டில் வீரமாநகரத்தில் சற்றேறக்குறைய நா லுத்திற்குள்ளாக மாத்துவப்பிராமணருக்குள்ளே யிவ்வுலகஞ் செய்தமாதவமென்றுசொல்ல இரண்டு புண்ணியமூர்த்திகள் அவதரித்தார்கள், அவர்கள் அம்மான் * மருமகன்என்கிறமுறைமையுடையவர்கள், அவ்விருவரும்வடமொழிதென்மொழி யிரண்டிலும்வல்லவராய் அறிவாசார முதலியவைகளிற் சிறந்தவர்களாய்ப் பிரமசாரியர்களாகியேயிருந்துதங்கள் கருமத்தில் வழுவாதுநடந்துவருநாளில்வேதாந்தசாஸ்தரம் யாவையும்படித்து ஐயந்திரிவு அறியாமையில்லாமல்அவற்றின்பொருள்களை ஆராய்ந்தறிந்தெப்போதுந்தத்வவிசாரணையும் ஸ்வரூபவிசாரணையுஞ்செய்துவருதலாலும் அவைகளையே எவர்களுக்கும் போதித்தலாலும் பெரியவிருக்ஷம் தோன்றற்கிடனாஞ் சிறிய ஆலம் விதைபோல்ஞானங்குரமானவராதலாலும் இவர்களுக்குஅப்பருவத்திலேதானே பூர்வநாமம்போய்த் தத்வராயரென்றும், ஸ்வரூபானந்தரென்றும், காரணநாம முண்டாயின,

(இவர்கள்.) பூர்வதவக்குறைவால்வந்தவர்களாதலால் ஆத்மவிசாரணைசெய்யவேண்டுமென்கிற விவேகமே மேலிட்டாலோ சித்தார்கள் அவையென்னெனில், இம்மையில், யாவரினுஞ் சிறந்த அரசர்கள் வாழ்வுஞ்சிலநாளிலழிந்து விடும்அதனால் வருமின்பமு முள்ளிப்பூவின்றேனை யொக்கு மென்றும், மறுமையில், இந்திராதி தேவர் பதங்களும் ஆயுண் மிகுந்திருந்து காமாதிதுன்பமுற்றழியுமென்றும் இளமையாதியும் நிலையல்லவென்றும் நினைத்துப்பெண்ணாதி மூவாசையுந் துறந்து சாந்திமுதலாகிய குணங்களைத் தமக்கலங்கமாகக் கொண்டு தலையில் நெருப்புப்பற்றிக் கொண்டவன் நீர் தேடுதல் போலவும்மிகு

---

* ஸ்வரூபானந்த ஸ்வாமிகளுடன் பிறந்தாள்பிள்ளை தத்வராய ஸ்வாமிகள்.

ந்தகோடைவெயிலிலகப்பட்டவன்நிழல் தேடுதல்போலவும் ஆதிதீவர பக்குவமுடையவர்களாய் சனனமரணமொழிக்கவல்லஞானசிரியனை த்தேடிஅடுக்கவேண்டிப்பலநாள்பல்விடங்களிலுந் தேடிப்பார்த்துங் கிடையாமையால் மிகவுழ்வருத்தமடைந்து ஒருநாள்போம்வழியில்ஒ ரு சிறந்த சோலையில்பெரியகல்லால விருக்ஷத்தின் கீழிருந்தாலோ சித்தார்கள் அவைபென்னெனில் நாம்இப்படித்தேடினால் எத்தனைகா லஞ்செல்லும்ஆதலால் ஒருவர்உத்தரதிசையிலும்ஒருவர்தக்ஷிண்திசை யிலும்போய்த் தேடிப்பார்ப்போம் நமக்குள் எவருக்குமுன்னே ஆ சிரியர்கிடைத்த னுக்கிரகம் பெற்றுக்கொள்ளுகிறமோ அவரோமற் றொருவருக்கும் ஆசிரியரொன்று நிச்சயித்துக்கொண்டு போனார்கள், அவர்களில்தென்றேசத்திற்சென்ற ஸ்வரூபானந்தஸ்வாமிகள்பலதே சங்களிலும்பல ஊர்களிலும் பலவனங்களிலும் பலமலைகளிலும்பலந திதீரங்களிலும் பலபுராதனலயங்களிலுந் தேடிக் கொண்டுதிருவரங்க முந் திருவானைக்காவும் காவேரிநதியும் தெர்க்காகவடக்கே போய்த் திருப் பைஞ்ஞிலியென்கிற சிவஸ்தலத்தையும், திருவெள்ளறை யெ ன்கிற விஷ்ணுஸ்தலத்தையும் தன்பாங்கினுடைத்தாயிருக்கிற கோவ த்தமென்னும்ஸ்தலத்துக்குச்சமீபத்தில் போம்பொழுது இவருக்கு ஒருகாரணமுமின்றிபேரானந்தமும் சரீரத்திலே புளகாங்கிதமும் உ ண்டாகிக்கைகள் அஞ்சலிமுகிழ்த்திடக்கண்களில்நீர் பெருகக்கண்டு தான்தேடிவந்த ஞானசிரியரிருக்கிறஸ்தானம் இதுவேயென்று அந் தநகரைப்பிரதக்ஷிணமாய்வந்து உள்ளேபோய்இவ்விடத்திலேபெரிய வர்கள் உண்டோவென்றுவிசாரித்தார், அவ்விடத்திலுள்ளவர்கள் இந் தஊர்க்குப்புறத்திலே நாணற்புதலிருக்கின்றது, அதனுள்ளேயொ ருபெரியவரிருக்கின்றார் அவர்பெயர் * சிவப்ரகாசஸ்வாமிகளென்று ம் அவர் ஒவ்வொருதினத்திலேசாயங்காலத்தில்அந்தப்புதலைவிட்டுவெ ளியில்வருகின்றாரொன்றுஞ் சொல்லஅவ்விடத்திலேபோய் இவர்காத் துக்கொண்டிருக்கிறபோது அந்தச்சிவப்ரகாசஸ்வாமிகள்ஒருநாள்வெ ளியிலேவந்தார்ஸவரூபானப்தஸ்வாமிகள் நமஸ்காரம்பண்ணி நெடுங் காலமாயலைகின்ற சனன மரணப்பிர வாகத்தினின்றும் அடியேன்

---

* சிவப்ரகாசஸ்வாமிகள்பூர்வஸ்தலம்திருவாரூர்- இவர்சுத்தவை தீகசைவர்,

கரையேற ஞானோபதேசம் பண்ணவேண்டுமென்று பாதகாணிகை யைப் பிடித்துக்கொண்டு முறையிடும்பொழுது நாம்நினைத்திருந்த அதிதிவரபக்குவனிவனேயென்று ஆலோசித்து அப்பா உனக்காகத் தான் இங்கேஇதுவரையில் யானிருந்தேனென்று மேலானமஹாவாக்யத்தைச் சிரவணாதிகளால் அநுக்கிரகம் பண்ணஅவ்வநுக்கிரகத்தைப் பெற்றுக்கொண்டு ஸ்வாநுபூதியாகவேண்டிச்சமாதிபண்ணிக்கொண்டிருக்குநாளில்வடக்கேதேடிக்கொண்டு போனதத்வராயஸ்வாமிகள் அதுதேசமுழுமையுந்தேடி ஆசிரியர்கிடையாமல்மறுபடியுந்தென்றேசத்திற்கேவந்துஸ்வரூபானந்தஸ்வாமிகளைக் கண்டார்சுவரூபானந்தஸ்வாமிளுந்தனக்காசியர் கிடைத்ததும் அநுக்கிரகம்பெற்றுக்கொண்டதும் பிறவுஞ்சொல்லமிகவும் அதிசயமடைந்து சுவரூபானந்த சுவாமிகளைவணங்கிமேலானஞானாநுக்கிரகம் பெற்றுக்கொண்டுநிருவிகற்பஸமாதியிலிருந்து நித்யநிரதிசயானந்தத்தை யனுபவித்துக்கொண்டிருக்கின்றகாலத்திலே பெரியோர்களுக்குத்தாம்பெற்றபேறுஉலகம்பெறவேண்டுமென்கின்றஸங்கல்ப்பம் சுபாவமானபடியால் ஸ்வரூபானந்தஸ்வாமிகள் திருவுள்ளத்தில் இந்ததத்தத்வராயர் தென்மொழியிற்பாடுதலில் மிகவும்வல்லவராயிருக்கையால் இவரைக்கொண்டு லோகோபகாரமாய் சிலசாஸ்திரங்களைச்செய்விக்கவேண்டுமென்று நினைத்துஉபாயமாய்க் குறிப்பித்துக்கொண்டுவர அவர்சதாநிஷ்டையில் இருக்கின்றவரானபடியால் அவருக்கு இந்தக்குறிப்பு மிகவுந்தோன்றாமலிருந்ததுகண்டு இக்கருத்து நன்றாய்த் தெரிவிக்கவெண்ணி ஒருநாள் அமாவாசையில் அப்பங்கஞ்செய்ய வேண்டியவர்போல ஏவலாளரைத்தயிலங் கொண்டுவாருமென்றுசொல்ல அருகேநின்றதத்வராயஸ்வாமி அமாவாசையென்கிறதை மனதிலே நினைத்து அம்மென்றார். அப்போதுஸ்வரூபானந்த ஸ்வாமிகள்கோபித்துக்கொண்டவர்போல விதிவிலக்கென்கிற ஸங்கல்ப்பமுங்கடந்துகாலாதீதராய்நின்றநமக்கும் விதிவிலக்குண்டோநம்மெதிர்நிற்கவேண்டாம் போமென்றுசொல்லத்தத்வராயசுவாமிகள் அகண்டபரிபூரண சச்சிதானந்தமாய்விளங்குகின்ற சுவாமிகளுக்கும் நான்விதிவிலக்குக்கற்பித்தகுற்றத்தால் இனிநானிந்தச்சரீரத் தோடிருத்தல்தகாது: கடலில்விழுந்திறத்தலன்றிஇதற்குப்பரிகாரம்வேறில்லையென்று நினைத்

து ஆசாரியர்சன்னிதானத்தை நோக்கிக்கொண்டே பின்னிட்டபடி நடந்து ஆராமைமேலிட்டுக்கண்களிற்சலம் தாரையாய்ப்பெருகப் பரமாசாரியராகியசிவப்ரகாசசுவாமிகளையும் ஆசாரியராகிய சுவரூபானந்தசுவாமிகளையுங் குறித்து ஸ்வரூப சாட்சாத்காரவிலாசத்தை நவநவமாய்த்தமது சுவாநுபூதியின்கணனுபவித்தபிரகாரம் பின்னுள்ள வாத்மசோடிகளும் அவ்வனுபூதியைப்பெற் றுய்யும்படி சீவகாருண்ணியத்தினால் தமதுசுவரூபானுபூதி ஆவேசத்தால் ஸ்தோத்திரமாய்ச்சிவப்ரகாசவெண்பா- தத்வாமிர்தமென்னும் இரண்டுடன் திருத்தாலாட்டு, பிள்ளைத்திருநாமம், வெண்பாவந்தாதி - கலித்துறையந்தாதி, சின்னப்பூவெண்பா, த்சாங்கம், இரட்டைமணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை - கலிப்பா, ஞானவிநோதன் கலம்பகம், உலா, சிலேடையுலா, நெஞ்சுவிடுதூது, கலிமடல் - அஞ்ஞவதைப்பரணி, அமிர்த்சாரவெண்பாவென்னும் இந்தபதினெட்டையும் திருவாய்மலர்ந்தருளிக்கொண்டுபோம் பொழுது அருகில்நின்றமாணாக்கர்கள் அப்போதைக்கப்போதே அப்பிரபந்தங்களைத்தனித்தனியெழுதிக்கொண்டுபோய் சுவரூபானந்தசுவாமிகள் சன்னிதானத்திற்படிக்கசுவாமிகளும் அச்சாசதரங்களில்விருப்பமில்லாதவர்போல் மயிருள்ளவள்வாரிமுடிக்கிறது போலவாயுள்ளவன் பாடியனுப்புகிறானென்று திருவாய்மலர்ந்துகொண்டிருந்தார் அப்படியிருக்க இங்கேதத்வராயசுவாமிகள் ஆசாரியர்தரிசனத்துக் சபாத்திரனாய்விட்டேனே இனிநானெந்தச்சனனத்தில் தரிசிப்பேனென்னும்ஏக்கத்தினாலேதாயைக்காணாதஇளங்குழந்தையைப்போல அழுதுமுகம்வீங்கிபாடுதுறையில் திருவடிமாலையைப்பாடிக்கொண்டு விழுந்திறக்கடலுக்குச் சமீபத்தில்போம்பொழுது அந்தச்செய்தியையுமாணாக்கர்கள் வந்து சொல்லசுவரூபானந்த சுவாமிகளறிந்துகுருவுக்குவீங்கியை வரச்சொல்லுமென்றுகட்டளையிட அதைக்கேள்விப்பட்டதத்வராயசுவாமிகள்தன்தேக வருத்தமுழுதும் நீங்கிநடக்கச் சக்தியும்பெற்றுக்கொண்டுஸ்வாமிகளால்அனுப்பப்பட்டமாணாக்கர்களைப்பார்த்துக்கருணாநிதியாகிய சுவாமிகள் மகா அபராதியாகிய வென்னையும் வரக் கட்டளையிட்டதோ வென்று பேரானந்தமடைந்து மேற்படிப் பிரபந்தத்தில் திருவருட் கழன்மாலை - போற்றிமாலை - புகழ்ச்சிமாலை - முதலானவைகளையும் பாடிக்கொண்டு சிரசின்மேல் அஞ்சலியஸ்தராய் சுவா

மிகளுடைய சந்நிதானத்தைப் பார்த்துக்கொண்டே வந்து பிரதக்ஷிணம் பண்ணி அஷ்டாங்க பஞ்சாங்கமாக அநேகநமஸ்காரஞ் செய்து முன்னிலும் அதிகமாய்க் கண்களில் நீர்பெருக மயிர்க்குச்செறிந்து பரவசப்பட்டு நெஞ்சமுருகி ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு நிற்கும்போது சுவாமிகளும் இருவென்று கட்டளையிட இருந்து சுவாமிகளின் பணிவிடை செய்துகொண்டு மிகவும் சந்தோஷமடைந்திருக்குநாளில் சுவாமிகள் தத்வராயர் பாடிய சாஸ்திரங்களையெல்லாம் பார்வையிட்டுச் சொல்லமைதியும் பொருளமைதியு நோக்கிச் சந்தோஷித்தைத் தனக்குள்ளே யடக்கிக்கொண்டு இந்த சாஸ்திரங்கள் மிகக் கற்றவர்க்கன்றி மற்றவர்க் குதவாதென்று நினைத்துத் தத்வராய சுவாமிகளைப்பார்த்து அப்பா இந்தச் சாஸ்திரங்களெல்லாம் உனக்கே பாடிக்கொண்டனை யன்றி யுலகத்தாருக் குபயோக மாகப் பாடவில்லையே என்றருளிச்செய்ய அப்போது. மடைத்தொழிலாளர்கள் சுவாமீ அமுதுகொள்ள வெழுந்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய சுவாமிகளும் நித்யகர்மங்களை முடித்து அமுதுக் கெழுந்தருளத் தனியேயிருந்த தத்வராய சுவாமிகள் ஆசாரியர் திருவாக்கை ஆலோசித்து அப்படியே தாமும்நினைத்து சுவாமிகள் அமுது கொண்டு வருமுன்னர் எல்லாருக்கும் பிரயோசனப்பட மோகவதைப்பரணியில்ஒருபிரகரணமாகச்சிவர்ணபோதமென்னும் ஒருசாஸ்திரத்தைச் செய்து சுவாமிகள் திருவடியிலேவைத்து நமஸ்காரம்பண்ண சுவாமிகளும் தத்வராயர் விரைந்து பாடினதையும் அச்சாஸ்திரத்தின் பாகத்தையும் பார்த்துச் சந்தோஷமடைந்தார். பின்னும் தத்வராய சுவாமிகள் சிலவேதாந்த சாஸ்திரங்களுஞ் சிலமதசித்தாந்த நூல்களுஞ் செய்துக்கொண்டு நிருவிகற்ப சமாதியி லிருக்கு நாளில் யாத்திரைசெய்கின்றவராகிய சில ஆராத்தியர்களுஞ் சில வித்வான்களும் ஸ்வரூபானந்த சுவாமிகளின் சந்நிதானத்தில் வீற்றிருக்கிற தத்வராய சுவாமிகளின் முன்னேவந்து போர் முகத்தாயிரங்க ளிற்றியானையைக்கொன்ற சுத்தவீரனைத் தலைவனாகக்கொண்டு பாடப்பட்ட பரணியென்னும் பிரபந்தத்தை வீரமென்பது கனவிலுங்கேட்டறியாத உம்முடைய ஆசான்மே லெப்படி நீர்பாடினீரென்று கேட்க அதற்குத் தத்வராய சுவாமிகள் நம்முடைய சுவாமிகளும் சிஷ்யருடைய அகங்காரமாகிய யானையைக்கொல்லுதலாற் பாடினோமென்று

சொல்ல அதற்கு அவர்கள் நீர்சொல்லும் அகங்காரயானை கண்ணுக
குப் புலப்படாமையால் ஒவ்வாது ஆயினும் ஒரு சிஷியனுடைய அக
ங்காரமாகிய யானையைக்கெடுத்தற்கு அநேகநாட் செல்லுமே இவர்
ஏககாலத்தில் ஆயிரஞ்சிஷியர்கள் அகங்காரத்தைக் கெடுத்த தெப்படி
யென்று வினவ அதற்குத் தத்வராய சுவாமிகள் அனுபவத்திற் காட்
டவேண்டுமென்று பிரதியுத்தரமொன்றுஞ் சொல்லாமல் சமாதிசெ
ய்திருந்தார் ஸ்வரூபானந்த சுவாமிகளின் சந்நிதானப் பட்டமை
யால் வந்தவித்வான்களனைவரும் இராப்பகல் ஒன்றுந்தெரியாமல் மூ
ன்றுதினமளவும் பரிபூரண அசையிலிருந்தார்கள் நாலாநாள் தத்வ
ராயசுவாமிகள் திருக்கண் விழித்தபின்பு அவ்வித்வான்களும் எழுந்து
சுவாமிகளையும் தத்வராய சுவாமிகளையும் நமஸ்காரம்பண்ணி நாங்கள
றியாமையினால் ஆக்ஷேபித்தோம் தங்கள் சந்நிதானத்தினது விசேஷி
ம் ஏககாலத்தில் பதினாயிரஞ் சிஷியர்கள் நேரிட்டாலும் பரிபாகப்
படுத்ததக்க வல்லமுள்ளதென்று அவர்கள் பலரும் இப்பிரபந்த
ங்களைக்குறித்து ஒவ்வொரு கவிகளைச்சாத்தி மாணக்கர்களால் வழிப
ட்டுப்போயினார்கள் பின்பு தத்வராய சுவாமிகள் லோகோபகாரமா
க வேதாந்த சாஸத்திரத்திற்குள்ளே சுவானுபூதிக்கிசைந்து சாரமா
யுள்ள செய்யுட்களை யெல்லாந்திரட்டிப் பெருந்திரட்டு குறுந் திரட்
டென்ன இரண்டு சாஸதிரத்தை அருளிச்செய்தார் இப்படியாகசுவா
மிகளுட னிணைபிரியாமல் இருக்கும்பொழுது ஸ்வரூபானந்த சுவா
மிகள்யாதோ ஒருதிருவிளையாட்டை நினைத்துத் தத்வராய சுவாமிக
ளைவைத்துத் தாம்பிரிந்து புறப்பட்டுப் போகையில் இவரும் பின்
றொடர சுவாமிகளுந் தமக்குநேரிட்டபடி வழிபொன்றின்றிகாடுநா
டு மலைகள்முதலான விடங்களிற் சுற்றித்திரிந்து சமுத்திரத்தின் சமீ
பத்திற்போயினார் தத்வராய சுவாமிகளும் உட்னுகவேபோய் ஸ்வரூ
பானந்த சுவாமிகள் கடன்மேல் நடக்கக் கடற்சலம் விலகி வழிகொ
டுக்க அதைக்கண்டு தாமும் கடலில் நடக்க ஜலம் வழிவிடாமையால்
கரையிலே நின்று பசுவைநீங்கிய விளங்கன்றுபோலக் கதறித்திக்குக
ள்தோறுந் தேடும்பொழுது சுவரூபானந்த சுவாமிகளுந் தரிசனங்
கொடுத்துப் பின்பு அகண்டபரிபூரண சச்சிதானந்தமாய் விளங்கினா
ர் அதைக்கண்ட தத்வராய சுவாமிகள் அதிசயமும் ஆராமையும் அ
டைந்து சுவாமிகளுக்குச் செய்யவேண்டிய உத்திர கிரிகைக ளெல்

லாமுடித்து சுவாமிகளையே நினைத்துக் கொண்டிருந்து பிரிவாற்றாமையாலோ பேரன்பினாலோ சுவாமிகளையன்றித் தனக்கொரு செயலின்மையினாலோ தாமும் உடனே பரிபூரண அசையடைந்தார். இவர்களுக்குத் திருவலஞ்சுழியும் வாசஸ்தானம் சிவப்ரகாசசுவாமிகள் சமாதி திருவாரூர் சமீபஸ்தானம் சுவரூபானந்தசுவாமிகள் சமாதி திருவண்ணாமலைக்கும் விருதாசலத்துக்கும் மத்திஸ்தானம். தத்வராய சுவாமிகள் சமாதி சிதம்பரத்துக்கும் விருதாசலத்துக்கும் மத்திஸ்தானம் இந்தச்சரித்திரம் மேற்படி சுவாமிகளுடைய பரம்பரை மாணாக்கர்கள் அனுப்பின பிரதிகளின்படி பதிப்பிக்கப்பட்டது.

இந்தச் சரித்திரம் வரும் பிரதிகளில், விரிவாகத்தெரிவிக்கப்படும்.

சிவப்பிரகாசசுவாமிகள்

திருவடிகளே சரணம்.

கணபதிதுணை.

ஸ்வரூபானந்தஸ்வாமிகள்மேல்

தத்வராயஸ்வாமி திருவாய்மலர்ந்தருளிய சிவஸ்தோத்திரத்தில்

முதலாவது.

சிவப்ரகாசவெண்பா.

வாக்குமனங் காணாத வாசாமா கோசரத்தை ... ... *
பாக்கமழி வில்லா வறிவுருவைப் - பாக்கியத்தோ ... ... *
ரொன்றும் பரம்பொருளை யுள்ளாமல் விள்ளாம ... ... *
லென்றுந் துதிப்பேனி யான் ... ... (க)

தனையாருங் காணாத தத்ஸ்வருபங் காணப் ... ... *
புனையாத் திருமேனி போற்றிங் - கெனையாண்ட ... ... *
நாதன் சிவப்பிர காச னளினமலர்ப் ... ... *
பாதந் தொழுதேன் பரிந்து ... ... (உ)

எழுமுகிற் பெய்து மிறையத் தனைநிரம்பா ... ... *
வாழிபனி நீர்நிரப்பு மாறுபோ - லூழிபல ... *
வேத மொழிந்துமறியர்த மெய்ப்பொருள்யா ... *
லோதுந் தமிழ்விளக்க முற்று ... ... (ங)

இனஞ்சீர் பொருள்பா விலக்கணமொன் றில்லா ... ... *
தனந்தமொழி கொண்டாடுந் தன்மை - மனந்தனிலே ... *
குற்றங்கொண் டாடாமற்(* கோதாட்ட) வெற்றைபரன் ... ... *
கற்றறிந்தோ ரொன்றன் கவிக்கு ... ... (ச)

திரைக்கடலுட் சென்று சிதறியுடைந் தாழ்ந்த ... *
மரக்கலங்கை விட்டார்மனம்போ - லிருக்குமெனக் ... *
கையா வெனப்பிறவிக் கஞ்சிக் கலங்கினு ... ... *
னுய்யுநெறி காண வுணர்ந்து ... ... (ரு)

---

* கோதாட்டுகவென்பது - கோதாட்டவெனவிகாரமாயிற்று.

ஐய மறத்துறந்தா னைகார முங்குறைந்தா ... ... *
னுய்யுநெறி யெங்கேயென் றோடிப்போய் வையமெலா ... *
முண்டா னுருப்புனைந்தங் கோவியம்போலேயிருக்கக் ... ... *
கண்டான் விழுந்தான் கழல் ... ... (சு)

அஞ்சலஞ்ச லென்னு வவன்மே லருள்புரியாக் ... ... *
கஞ்சமலர்க் கண்பார்த்துக் கைமைத்துக் - தஞ்சமாப் ... *
பெற்றோ மிவளையெனப் பேரின்பங் கூர்ந்திரங்க ... ... *
லுற்றான் பெருமானுளம் ... ... (எ)

தோயந்தன் னாலே சுருதி மொழிந்தபடிக் ... ... *
காயம் பொருளாவி கைக்கொண்டு - மாயாத ... ... *
போதம் புகுந்துபரி பூரணமாகத் தலையிற் ... ... *
பாதம் பதித்தான் பரன் ... ... (அ)

பிள்ளை தனக்கொருவர் பேதித்தும் பேதியா ... *
வுள்ளபொரு ளெல்லா முணர்த்துவிக்கத் - தெள்ளும் ... *
விழியைக் கொடுத்தருளி வேதாந்தந் தன்னை ... ... *
மொழியப் புகுந்தான் முனி ... ... (கூ)

உடம்புநீ யல்லை யுறக்கத்தி லெல்லா ... ... *
மடங்கப் பிணமாகை யாலே - திடம்படவும் ... *
வேறுதா னுண்டோ விடாதே யருந்துகின்ற ... *
சோறுகாண் காயச் சுமை ... ... (ய)

நீடு புலனெடுங்கி னின்றே யொடுங்காம ... ... *
லோடு மடங்கு முயிர்க்காற்று - வாடு ... ... *
மெனக்கருவிக் கொக்குங்கா லேகாம லென்றுந் ... *
தனக்கறிவொன் றில்லாமற் றான் ... ... (யக)

மெய்வாய்கண் மூக்குச் செவியாய் விஷயமாய்க் ... ... *
கைபாத மந்தக் கரணமா - யையா ... ... *
பொறிபுலன்க ளென்றுபல பேரிட்டுப் போத ... ... *
மறிகின்றார் நின்னையொழிந் தார் ... ... (யஉ)

காட்டும் படியுனக்குக் கையா மலகமென ... ... *
வோட்டங்க ளெல்லா மறவொருக்கி - மீட்டிருந்திங் ... ... *
கெட்டுணைப்போ துள்ள மிருந்த படியெனக்கு ... ... *
வெட்டெனத்தான் சொல்லுவாய் மேல் ... ... (௰௯)

மைப்பே ரிருளொழிய மற்றொன்றுங் கண்டிலே ... *
னிப்போ தெனக்கிங் கிருந்தபடி - யப்பா ... ... *
வழுத்தமுற வேண்டாநீ கண்டாயமையுஞ் ... ... *
சுழுப்தியது வாகத் துணி ... ... (௰௪)

அந்தவிருளை யறிந்த வறிவுதனைப் ... ... *
புந்தியினிற் பார்த்துப் புகன்றுகா - ணிந்தநான் ... ... *
கண்டே னடியேன் கதிர்விட்டுக் காயமெலா ... ... *
முண்டா யிருந்த துணர்வு ... ... (௰௫)

ஊண்டா யிலங்கு முணர்வுதனைக் கொண்டுநீ ... ... *
தின்டாடும் பேரிருளைத் தேடிக்கா - ணண்டாபோ ... *
யங்கேநான் றேட வறிவொழியைக் கண்டிலே ... ... *
னெங்கே யொளித்த திருள் ... ... (௰௬)

உள்ள கதிரனைத்து மொன்று யுதயமுற ... ... *
நள்ளிருடா னெவ்விடத்து நாடுமோ - தெள்ள ... *
வருளே யறியே னறிவுதயஞ் செய்ய ... ... *
விருள்போய் மறைந்த விடம் ... ... (௰௭)

ஐயா வொருவ ரறியா வறிவுதனைக் ... ... *
கையா மலகமெனக் காட்டியைப் - மெய்யாக ... ... *
வுன்னை யெனக்கருள வோராவினையேனிங் ... ... *
கென்னதவஞ் செய்தே னியான் ... ... (௰௮)

காயம் புனைந்து கழல்சிவப்பக் காசினிமே ... ... *
லுயேன் பொருட்டா நடந்தாயே - யாயாநின் ... ... *
றுடுஞ்ஜடாதரனே யப்பாலுக் கப்பாலாய் ... ... *
தீடுப்படரொளியே நீ ... ... (௰௯)

என்றுமொழிய விருதோளும் பூரித்து ... ... *
நன்றுநீகண்டபடி நான்மறையு - நின்று ... ... *
கரியென்றுசேரக் கதறியதுமந்தத் ... ... *
துரியந்தனைக்காண்டுணிந்து ... ... (உ௰)

உள்ளே யொடுங்குமொடுங்காப் புறம்போகு ... ... *
மெள்ளமறக்கும் வினைசேர்க்குங் - கள்ளத் ... ... *
துரியம்பரமாத் துணிந்தவர்க்குச்சொல்லாய் ... ... *
பிரியுமோ மாயப்பிறப்பு ... ... (உக)

கற்றனினைத்தல் கருதல்பொருளறித ... ... *
லுற்றுணர்வுநோக்க லுளத்துள்ளும் - பற்றடையத் ... *
தொத்தறவேமாயாத் துரிசுகளெல் லாங்கழியக் ... ... *
கத்தறவேவிட்டிருந்துகாண் ... ... (உஉ)

இருந்தபடியேயிங்கெல்லாங்கழன்று ... ... *
சரிந்துபெரும் பாழாய்த் தனியாய்த்-தெரிந்ததனைச் ... *
சொல்லாடாலின்றியொருகாற்றெலையாதே ... ... *
யல்லா யிருந்ததது ... ... (உங)

பரவுடலென்றுமறை யெல்லாம்பகருந் ... ... *
துரிய வதீதமெனச்சொல்லுங் - கருவி ... ... *
திரண்டடங்கும் பாழ்போலச் சிவனெழிக்கின்ற ... ... *
விரண்டாம்பாழ் கண்டாயிது ... ...(உச)

விட்ட வதீதவிரிவைத்தெளிந்துமிகச் ... ... *
சுட்டவிருந்தபடி தான்சொல்லின் - முட்ட ... ... *
விரவுபக லில்லாவெறிக்குஞ்சுடராம் ... ... *
பரவறிவை மைந்தாநீபார் ... ... (உ௧)

ஆருமறியா வகண்ட பரிபூரணமாம் ... ...*
பேரறிவுகண்டேன் பெருமானே-நேராகப் ... ... *
போக்குவரவுண்டோபொறிபுலன்கடாமுண்டோ ... ... *
வாக்கமழிவுண்டோ வதற்கு ... ... (உ௨)

மண்ணுமறிகடலும் வானுதி பூதமெலாம் ... ...*
பண்ணியளித்தழித்துப்பார்க்கின்றார் - நண்ணி ... ... *
யொழியாமலெங்குமொளியுருவாயென்று ... ... *
மழியா வறிவையொழிந் தார் ... ... (உஎ)

நின்றும் பறந்துநடந்தூர்ந்து நீணிலம்விண் ... ... *
(*ணென்ற) பலகோடியித்தனையு - மொன்று ... ... *
மறிவொழியக் கண்டிலே னண்டாண்டமெல்லாம் ... ...*
பொறிவுலன்பூ தம்வேறும் பொய் ... ... (உஅ)

உள்ளாய்ப் புறம்பாயுருவர்யுருவாகி ... ... *
வெள்ளவெளிதானாய் வெறும்பாழாய் - நள்ளிருளா ... .*
யல்லாய்ப் பகலாயனைத்துமா யப்பாலா ... ...*
யெல்லாமாய் நின்றேனு மியான் ... ... (உகூ)

ஏதுந்தெரியா(*வியனே)விதுபெறுவே ... ... *
னேதவதியவுபநிடங்க - ளோதா ... ... *
கருணைக்கடலே கவுத்துமேகண்ணே ... ... *
புரணப் பரிபூ ரணா ... ... (ஙய)

பொல்லாத நாயேன்பொருட்டாகப் பூதலத்தே ... ... *
யெல்லாருங் காண விடரகற்றி - நல்லா ... ... *
யுழுந்துருளும்போழ்தி லுணர்வுருவங் காட்ட ... ... *
வெழுந்தருள வேண்டியதே யின்று ... ... , (ஙக)

ஓதற்கரிதாகியொன்றானபேருணர்வுங் ... ... *
கோதற்றமுதாகிக் கூடாதே - பேத ... ... *
மறிந்திருக்குநாடாதவெல்லாநாமென்றங் ... ... *
கறிந்திருக்கை யுண்டாகை யால் ... ... (ஙஉ)

அடைய நமதுருவ மாயினேமென்றே ... ... *
விடைய மதுக்கதுநீவிட்டிங் - கிடையிலொரு ... ... *
போத மிலதென்னும் புந்தியும்விட்டந்திபக ... ... *
லேதுந் தெரியாதிரு ... ... (ஙஙு)

---

* என்றவென்பது - என்றவெனவிகாரமாயிற்று.

* இயல்பனென்பது - இயனெனவிகாரமாயிற்று.

(*வைத்த)நிலமிறந்து வானிறந்து மண்ணி றந்திங் ... *
சித்தனையுந் தீர விறந்துபோ - யத்தா ... ... *
தெரிந்துந் தெரியாமை யொன்றுந் தெரியா ... ... *
திருந்தபடி தானிங் கெனக்கு ... ...(௩௪)

இக்கணக்குக் காணவியம் பியதி லல்வேத ... ... *
மொக்குமோ மைந்தா வுனக்கேற்க - மைக்கொணெடுங் ... ...*
காருலா மேனிக் கருணா கராவேழு ... ... *
பாரொலா முண்ட படி ... ... (௩௫)

இந்தநில மொன்றுந் தெரியா திருந்தேனு ... ... *
மந்தவது வும்பிறந்த தப்படியே - புந்தி ... ... *
நயிக்கும் படியிருந்து பார்த்துக்கா ணல்லா ... ... *
யயிக்யந்தான் கண்டா யது ... ... (௩௬)

ஓதி மறைகள் கதறி(*முடிந்தி)டந்தைத் ... ... *
தீதில் பரமாஞ் சிவபதத்தை - யோதி ... ... *
நிறைந்திருக்கு மைந்தனுக்கு நின்மலமா நெஞ்சி ... *
லுறைந்தருப்பான் காட்டுவா னுற்று ... ... (௩௭)

இப்படியே நீயு மிருவென் றிறையிருந்தா ... ... *
ணெப்பிடவொன் றெவ்வாத வோயியம்போற் - செப்பறிய ... *
மோனந் தனிலே முடிவிற் பெரும்பாழா ... ... *
யானந்த மாகி யவன் ... ... (௩௮)

மறையவனைப் போலவேமைந்தனுள மாண்டங் ... *
குறையுந் தனதுருவத் துள்ளே - நிறைய ... ... *
வுருகிக் கலந்துசெறிந் தொன்றா யிருந்தான் ... ... *
சொருபக் கடலாஞ் சுகம் ... ... (௩௯)

---

* வைத்தவென்பது-வைத்தெனத் திரிந்துநின்றது.

* முடிந்தவென்பது-முடிந்தெனத்திரிந்துநின்றது.

நீயிருப்ப திப்படியோ நீராழி யிற்பதித்த ... ... *
வாயில் குடநிறைந்த வாறுபோற் - காய ... ... *
மழிந்திருக்க மாறாத வானந்த வாரி ... ... *
பொழிந்திருக்க வுள்ளேபுகுந்து ... ... (சம)

ஆசாபா சத்தே யழிவேனை யிப்படியே ... ... *
தேசாஞ் சிவமாக்கித் தீதகற்றி - வாசாம ... ...*
கோசரத்துள் வைத்த குருமுனிக்குக் குன்றாத ... ... *
வீசனுக்குக் கைம்மாறிங் கேது ... ... (சக)

அல்லும் பகலு மறியாம லிப்படியே ... ... *
செல்லுகின்ற காலந் தெரியாம - னல்ல ... ... *
வடியார்க் கடிபைப் புணரவபி டேக ... ... *
முடியிற் பதித்தான் முனி ... ... (சஉ)

ஈண்ட வெழுந்தருளி யெப்பழுது மிப்படியே ... ... *
யாண்டு சொளவரு வையாகின் - மீண்டு ... ... *
பிறக்கினுந்தாழ் வுண்டோ பிரியா விடைகொண் ... ... *
டிறக்கினுந்தாழ் வுண்டோ வினி ... ... (சஙு)

சிவப்ரகாசவெண்பா.

முற்றியது.

கணபதிதுணை.

ஸவரூபானந்தசுவாமிகள்மேல்

தத்வராயசுவாமிதிருவாய்மலர்ந்தருளிய சாஸதிரத்தில்

இரண்டாவது,

தத்வாமிர்தம்,

முதலாவது.

அதிகாரசத்ததி.

கடவுள்வணக்கம்.

உளவிருளொழிதரவொளிர்பவனெவனவ... ... ...*
னளவறுமரியநலநிவினனெவனவன் ... ... *
வளமலியடியவர்மதிநலமெவனவ .. .. *
னனிதருமடிதொழுதனமனவரதமும் ... (க)

வேறு.

நித்தசுத்தபுத்தநிஷிகளத்ததெத்தையத்தையே .. ... *
பத்தியுற்றசித்தமத்தின்மெய்ப்பதெத்தையத்தையே ... *
முத்தபெத்தமுற்றுமற்றமுத்தமெத்தையத்தையே... ... *
மெய்த்தசத்துவத்தினிற்பதத்தையுச்சிவைத்துமே... ... (உ)

வேறு.

அருளிறைவணக்கம்.

உலகமோடுயிர்பரமெனவுதித்தவப்பேதக் ... ... *
கலகமாரிருட்கரிசறவுதித்தநற்பதத்தை ... ... *
யிலகவேயுளத்தெழில்பெறவளித்தெனையாண்ட ... *
திலகபேரருட்சிவப்பிரகாசனைப்பணிவாம் ... (ங)

நூற்பெயர்.

அழிவிலாவுபநிடதமெனுததியினமலன்... ... *
வழுவிலாவுபதேசமேமத்தருணணுப் ... *
பழுதிலாவனுபவர்கடைவார்பராவமிர்த ... *
மெழுதல்காரணத்திந்தநூற்பெயாதத்வாமிர்தமே...(ச)

வேறு.

அவையடக்கம்.

அளவிலாரணமரிபயனரனவரறைந்தநற்பரமார்த்தந் ... ... *
தெளிவிலாதவிவுலகினிலிதனையான்றமிழினற்றெரிபித்த ... ...*
லொளியினன்மிகுமிரவிதனொளியினுமொழிப்பருமிருடன்னை ...*
வளமிலாதமின்மினியொழிப்பதற்குறமதித்திடும்வகையன்றே (ஙு)

வேறு,

தெளிதல்,

உற்பவப்பெருமுத்தியில்விழுந்தழுந்துயிரிற் ... ... *
றப்புதற்கொருதலைமகன்றத்துவமுணர்வான் ... ... *
முற்பவத்தினின்முயல்வுறுதவமுதிர்ச்சியினு... ... ... *
னெப்பவத்தினுமிடருடலனித்தமென்றுணர்ந்தான் ... (சு)

மூவரேமுதன்மொழிந்திடுமிவிமயவர்பதமுஞ்... ... ...*
சாவதோடுறுசனனமென்சாகரத்தழுந்தி... ... ...*
மேவுபாதியிற்பட்டுதாண்மிகுதியுற்றழியுந் ... ... *
தேவர்தம்பதந்தீதெனமிகவெறுத்தனனால் ... ... (எ)

ரோகமேமுதலிடையறவுடையராயுடலிற் ... ... *
பராவுசோகமும்பழுதறமிகமிகப்படர்வுற் ... ... *
திராவொடேபகலிமையவர்படுதுயர்நினைந்து ... ...*
பராவுதேவர்தம்பதம்படுகுழியெனப்பார்த்தான் ... (அ)

இகமதுற்றிடுமுயிர்களிலரசர்வாழ்வெண்ணி ... ...*
னகமதுற்றிடுமிடையறவளவறுகவலை ... ... *
தகவிதிற்பெறுசுகமதுசாற்றின்முள்ளித்தே ... ...*
னகமதிப்புளவரசர்தமயர்வுளிவெறுத்தான் ... ... (கூ)

வேறு.

அரசர்கள்பரவிடவுண்டகாவலன் ... ... *
பரவுடறுணிந்தனன்பதைப்பவக் * கணே... ... *
யொருவனைப்புணர்புவியுவலைவேகையை ... ... *
யருவராவரசர்கேடுணர்ந்தழுங்கினன் ... ... (ய)

* கணமென்பது- கண்ணெனவிகாரமாயிற்று.

கறையுறு கணிகையர்தமினுங்கற்பிலா ... ...*
முறையழிதிருவெனுமூடவேசைதன் ... ...*
னுறவதுபொருளெனவுண்ருமூடரி ... ...*
னறிவறுமவரிலையெனவுமஞ்சினன் ... (௰௧)

எய்கணைபிறக்குமிளமைமூப்பது ... ... *
தைவருவளியினுஞ்சாலவேகுமான் ... ... *
மையுறுதந்தையாய்மக்கள்சுற்றமுஞ் ... ... *
செய்பொருளகளுங்கனவொப்பத்தீருமால்..... (௰௨)

பிணிகளுங்கலலையும்பேசினேழ்கட ... ... *
லணிதருமணலினுமனந்தகோடியா ... . *
மிணைதரும்பிறவியானிடரலாதொரு .. ... *
கணமதுமிலதெனக்கண்டுநொந்தனன் ... ...(௰௩)

(வேறு,)

கண்ணிவாய்ப்பட்டதோராக்கருடன்வாவுறகன்றவாழி ... *
லெண்ணிலாத்தேனாவாயினிடைப்படுஞ்சிறியகீட ... *
நண்ணிமுள்ளிப்பூவிற்றேனக்குடுமின்பமன்றே ... ... *
யெண்ணிலாப்பிறப்பினின்பத்தேழமையெனவுநொந்தான் (௪)

அடுகரிதொடரவீழுங்குழியினைந்தலைநாகங்கண் .... *
டிடிகளையொருவேர்த்தூறைப்பற்றிஞான்றிடவவ்வேறைக் ... *
கடுகியவெலியுங்காதிக்கறித்திடக்கலங்குதேனி ... ... *
னிடைகழிதுளிநக்கின்பம்போலுமிப்பிறப்பினின்பம் ... (௰௫)

வேறு.

துறவு.

இடர்டிடுமுடலுறுமின்பம்யாவையு ... ... *
மடுதருவிடனெனவஞ்சியொன்றொடுந் ... ...*
தொடர்பறத்துறந்துவீட்டின்பந்தந்திடுங் ... .*
கடனுடைக்குரவனைக்காணவெண்ணியே ... (௰௬)

சாந்திதாந்திநல்லுபாதிதகுதிதீக்ஷையடன் ... *
வாய்ந்தமைத்திரியாதிடனக்கவையுவமா ... ... *

யாய்ந்துவிட்டுநல்யமாதியுமழிவில்வீட்டின்ப ... *
மேய்ந்துகாட்டுநல்லிறைகழலுறப்பெருவிடாயாய் (யஎ)

வேறு,

எந்நாடுமெலுருமிலந்திகுவக்கிரிகானு ... ... *
முன்னுர்கலிசூழுலகெங்குமுயன்றுதேடிப் ... ... *
பொன்னுடதுபுல்லெனநன்மைவிளங்குபொன்னி ... ... *
நன்னுடம்தெய்திநலன்பெறவெங்குநாடி ... ...(யஅ)

திருமாறிகழ்தென்னரங்கந்திருவானைக்காவும்... ... ... *
பொருமாபுனலுந்துநற்கங்கையிற்றுய்யபொன்னிக் .. ...*
திருமாதியுந்திகழ்லக்ஷணமாவடக்குப் ... ... *
பரனுறைபஞ்சிலிநல்வெள்ளறைபாங்குசூழ ... (யக)

(வேறு.)

பீடார்பொழினீடுபெருங்கமுகின் ... ... *
றேடாரநல்வாளைதொடர்ந்த(*துக ... ...*
(*ளாடா)ர்பெரியவ்வளவாயதுசூழ் ... ... *
சேடார்மழைநாடதுசேர்ந்தனனுல் ... (உய)

ஆர்வத்தையெவர்க்குமறுத்தழகா ... ... *
ரோவற்றநன்முத்திபுறுத்திடனுந் ... ...*
தேவர்க்குமளப்பரிதாகியசீர்க் ... ... *
கோவத்தையின்வந்துகுளிர்ந்தனனுல் ... *

(கலிநிலைத்துறை,)

முன்னுர்கலிசூழுலகெங்குமுயன்றுதேடி ... ... *
யெந்நாளுங்காணுதிடரேமிகவெய்துகின்றுன் ... *
பொன்னுமேனிப்புனிதனுறைகின்றவந்த ... ...*
மின்னுருமாடம்விளங்கும்பதிதன்னைமேவி ... ,*

வேறு.

வேதநாலுமொருசார்விமலகீதமொருசார் ... ... , *
சோதி(*யாக)மொருசார்சுடர்புராணமொருசார் ... ... *

---

* துகள்-மகரந்தம். * ஆடு- மேஷவிராசி.

* கனிமம்

நீதிபாமிருதிதேருமிதிஆசமொருசா ... ... *
ரோதலாமளவதன்றிநகரொன்றுள்வியவா ... ... (உ௩)

உளமகிழ்ந்துதயமொன்றியலமந்துபெருகுந் ... ... *
தளர்வதின்றியநலன்புதலைநின்றுவளரும் ... ... *
புளகம்வந்துடல்பொருந்தியிடுமஞ்சலிகையாம் ... ... *
விளைவுகண்டெனிறைதங்குநகரிங்கிதுவெனு ... (உ௪)

நகர்வலஞ்செய்துபுகுந்துநலனுருமிறைசேர் ... ... *
திகழுசண்பகநலாடவிதிருந்துபொழில்வாய் ... ... *
மிகுதருங்கருணைமேனியன்விவிக்தமெனுநன் ... ... *
குகையினின்புறவிருந்தருளல்கண்டுமகிழா ... ... (உ௫)

பதின்சீர்க்கழிநெடிலடி-ஆசிரியவிருத்தம்.

புணியமென்றபொருள்வந்துருவுகொண்டபடியோ ... *
போதம்வந்துருவமாயிங்கிருந்தபடியோ ... *
வணியுநன்கருணைவந்துருவமானபடியோ ... *
வருளதின்றுருவுகொண்டுறவிருந்தபடியோ ... *
பணியுநன்கமையதின்றுருவமானபடியோ ... *
பரவுசாந்திவடிவாயினிதிருந்தபடியோ ... *
விணையதின்றியபரம்பரமதின்றெளிதின்வந் ... *
தென்னையாளவெனவிங்கினிருந்தபடியே ... (உ௬)

மறைகளின்றளவுநின்றுமயல்கொண்டுவிடவே ... *
வானநாடருமயங்கியுணராதுவிடவே ... *
யறையுநன்சமயமாறுமதிவின்றிவிடவே ... *
றரியமூவருமிருந்துதுயமொன்றிவிடவே ... *
பொறிபுலன்கரணமிந்தியபுலால்கமழுமூ ... *
ணுயபொய்யினையுமெய்யெனநினைந்தபுலையே ... *

னிறவறும்பரமுணர்ந்திடவுவந்தருளவோ ... ...*
வெம்பிரானெளிதின்வந்திங்கிருந்ததுவெனு ... (உஎ)

தொழுதெழும்பணியுநின்னைபுகழுஞ்சுழல்வுறுஞ்... ...*
சொல்லும்வாய்குழறுமெல்லையறவன்புபெருகு... ...*
மழுநகுந்நுழையுமென்புருகுநன்புளகம்வந் ... *
தாகம்விண்டுவிதிர்கொண்டயருநின்றுதெளியு .. ...*
மழலதொன்றுமெழுகின்சிலையெனும்படிகனைந்... ...*
தமரர்கண்டிடவருந்துபரமின்றுவெளிகண் .. ... *
பழுதறும்படிவுமந்திடவிருந்தவருளின் ... *
பரிசுகண்டுவலம்வந்திருகைகுஞ்சிமிசையாய் (உஅ)

கலிவிருத்தம்.

ஆதியேயடியனேனுடையவாரமிர்தமே ... ...*
பேதையேனுறுபவம்பிறகிடும்பெருநலப் ... ... *
போதமேததனின்பரிசைநீ * புகல்கெனு ... ... *
வோதினுனுறுதவத்கடல்தாசியமகன் ... ... (உகூ)

நாதனுருமகிழாநலமதாகியவையர ... ... *
போதம்வேதமுடிவாலெழுதரும்பொருளதே .. ... *
யேதமாமிருளதாமறிவிலாதனவெலா ... ... *
மாதலாலுபநிஷித்தளவில்சீரறிகுவாய் ... ...(ரூ௰)

அதிகாரசத்ததி.

முற்றுப்பெற்றது,

---

* புகல்கவெனுவென்பது-புகல்கெனுவென விகாரமாயிற்று,

திருச்சிற்றம்பலம்.

வாக்கியசத்தி.

கலிநிலைத்துறை,

அண்ணல்கூறிடுமரியவாரணக்கடலெழுமவ் ... ... ✻
வண்ணமின்றியவாசாமகோசரவயிர்தைக் ... ... ✻
கண்ணதாயிடக்கரதலமணியெனக்காட்டும்... ... ... ✻
வண்ணமுள்ளமாவாக்கியமைந்தற்குப்புகல்வான்... .... (க)

வன்னநாலதாய்வண்பதமூன்றதற்குடைத்தாய் ... ...✻
தன்னதாம்வடிவதுமிகத்தானுநுண்ணியதாய் ... ... ✻
முன்னமாமறைமுழுதுமோதியுமுடியாச்சீர் ... ... ✻
மன்றுமாப்பொருளுடைமைமாவாக்கியப்பெயராய்.... ...(உ)

வடிவுநுண்மையுமாப்பொருளுடைமையு ✻ மலர்வு ... ... ✻
முடிவுமாயிருமையுமறமொழிதருவிரகும் ... ... ✻
படியிலாதெழுபழமையுமப்படிபுதுமை ... ... ✻
யுடையவாகியவுயர்குறியாறவையுடைத்தாய் ... ... (ங)

இறந்தகேள்வியாயிறந்தநற்றரிசனமாந்தா ... ... ✻
யிறந்தவீரமாபெலையிலானந்தஞானமதாய்ச் ... ✻
சிறந்தகாலதெசந்திசையிறந்திடத்திகழ்ந்து ... ...✻
நிறைந்தவேட்டியல்புடைத்துநீள்வாக்கியமினங்கேள்... ...(ச)

கலிவிருத்தம்.

நித்தமொடுமுத்தநிமலந்திகழ்பரத்தை ... ... ✻
யுய்த்தகரமுத்தபணியத்தி ✻ னிகரொப்பு ... ✻
மெய்த்திடவெவர்க்குமுணரத்திகழுவிக்குந் ... ... ✻
தத்வமசிதத்வமசிதத்வமசிசத்யம் ... ... (ரு)

✻ நிறைவு - ✻ மீமிசை.

சத்தமுறுபித்தினலைதட்டறவுளத்தே ... ... *
முத்தியெனுமப்பதமுமுத்திடநினைக்கிற் ... *
கைத்தலநெலிக்சனியெனுப்பொருள்விளங்குந் ... ...*
தத்வமசிதத்வமசிதத்வமசிசத்யம் .. ... (சு)

பத்தியதிற் மெய்க்குரவனற்பதமதுற்றே .. ... *
சித்தமொருமித்துலவினிற்றுறவியற்றின்... ...*
மெய்த்துமுயறத்துவபரிக்கதுவிளக்குந்... ... *
தத்வமசிதத்வமசிதத்வமசிசத்யம் ... (எ)

கத்ததுறுபித்தசமயக்கவலைவிட்டு ... ... *
நித்தபரமத்தையுணர்தற்குலநினைக்கின்... ... *
மெய்த்தொருகணத்தினில்வெளிப்படநிகழ்த்துந் ...*
தத்வமசிதத்வமதிதத்வமசிசத்யம்... ... (அ)

மத்தமுறுபொய்ப்பவமயக்கறவுளத்தே... ... *
மெய்த்தபரதத்துவம்வெளிப்படவெவர்க்குஞ் ... ...*
சுத்தமணிநற்சுடர்விளக்கதுவெறிக்குந் ... *
தத்வமசிதத்வமசிதத்வமசிசத்யம் ... (கூ)

மூத்தமொடுநித்தமுறுசுத்தமதுபுத்த... ... ...*
வத்தவிதமப்பரமமத்தினையுளத்தே... ... *
யித்திறளெனத்திகழுவித்திடவிளக்குந்... ... ... *
தத்வமசிதத்வமசிதத்வமசிசத்யம் ... (ம)

அருசீர்க்கழிநெடிலடி- ஆசிரியவிருத்தம்.

ஆதலால்வாக்மனன்யஞானமேஞானமன்றி ... ... *
யோதியஞானமெல்லாமுணரினஞ்ஞானமேயா ... ... *
மேதமதற்வேதாந்தமிசைத்திடும்பரிசைமைந்தா ... ...*
வோதுவனுவகையோடுமுளத்தினையொருக்கிநீகேள் ... ...(மக)

(கலிநிலைத் துறை.)

சவனமாதிதகுமூவகையினனறைதரு ... ... *
மவணமாசில்குரவன்னரியவாரருளினற் ... ... *
* கைவணமாயழிவில்வீடுவெளிகண்டுகொளலாய்ப் ... *
(*பொய்வண) மாகியபவம்பொடிபடும்பொடிபடும்(க)

(அறுசீர்க்கழிநெடிலடி - ஆசிரிய- விருத்தம்.)

சாற்றியசவணமாதித்தன்மையாமூன்றுமோரிற் ... ... *
றேற்றருந்தூலசூக்கமெனவிருவகையாந்தூல ... ... *
மேற்றியகலைகள்கேட்டல் சவணமப்பொருள்யமாதி ... *
யாற்றியமனனமத்தினிலைநிதித்யாஸமாமே ... ... (உ)

அன்றியுஞ்சூக்சமாயசவணமாதிகளையோரிற் ... ... *
றுன்றியவுபநிஷித்திற்சுடருமாவாக்கியத்தின் ... ... *
முன்றிகழ்பதபதார்த்தமுக்கியவிலக்கியங்க ... ... *
டன்றிகழசுத்தசுத்தங்கேட்டிடல்சவணமாமே ... ... (ங)

உணர்த்தநற்சவணந்தந்தவுறுதியாம்பதபதார்த்த ... ...*
நிணைத்தவைமுடிபாயுள்ளநிமலமாம்பரமன்சிவன் ... ... *
றெரிப்பருமுபாதிநீக்கிச்சிற்பரம்பொருளொன்றேயா ... ...*
யிருத்திடுமதியின்றிட்பமிசைத்திடின்மனனமன்றே ... ... (ச)

அசைவறமனனந்தன்னலற்றவப்பொருளைநேரே ... ...*
யிசைவுறக்குரவனனுபூதியாவிடங்கடோறுந் ... ... *
திசைவுறத்தெரித்துமீட்டுங்காட்டியெத்திகழ்வுமாய ... *
நிசியறுத்தருளுபாயநிலைநிதித்யாஸமாமே ... ... (ரு)

ஆதலாலாரணத்தின்ந்தமாவாக்கியந்தா ... ... *
னேதமிலதுநீயானயென்பதாமித்தினல்ல ... ... *
நீதியாம்பதமதென்றுநீயென்றுமானயென்று ... ... *
மோதியபதமூன்றத்தினருத்தமுமுணர்த்துவன்கேள் ... (சு)

---

*கை-ஒருமாத்திரை. (*பொய்வண மென்பது-ஆசிடைபெதுகை,

அதுவெனும்பதத்தருத்தமரியநற்பரமன்சிவன் ... ... *
பொதுவறநீயேயென்னும்பதத்தினிற்பொருளதாகும் ... ... *
பதியுறவானாயென்னும்பதப்பொருளாபரமன்சிவன் ... *
கதியுறவேகமாதல்காட்டிடுமதுவாமன்றே ... ... (எ)

முக்கியவிலக்கியங்கஞ்மொழியின்முனிருபதத்திற் ... ... *
றக்கிடுமுபாதிபரிவஞ்சாற்றின்முக்கியமதாகு ... ... *
மிக்கவைதம்மின்வேறாப்வேவிநின்றுணருஞ்சித்தே ... *
தக்கலட்சியமதென்றுசாற்றவும்படுவதன்றே ... ... (அ)

எறித்திடுமிருபதத்தினிசைத்தநற் சபளஞ்செப்பிற் ... *
குறித்திடுபரோக்ஷமொன்றுங்கூறபரோக்ஷமொன்று ... ... *
முறைப்படுசபளமாயவிருபதமுக்கியத்தை ... ... *
நெறிப்படவடைவிற்கூறநிகழ்தரவறிகவையா ... ... (கூ)

(கலி விருத்தம்.)

அந்தவபரோக்ஷசபளத்தகமதென்னும் ... ,*
பெந்தமதுமுந்துறுதல்பேணிவரலாலப்... .....*
புந்தசபளப்பழுதறுத்தருளவீசன் ... ... *
தொந்ததசியென்றமுறைசோதனையளிப்பாம்(௩)

(அறுசீர்க்கழிநெடிலடி-ஆசிரியவிருத்தம்.)

மூந்துறக்கேட்டநீயாம்பதத்தினின்முக்கியந்தா ... ... *
னந்திடுமுடலமாதிநானெனத்தோன்றிமெய்போல் ... .*
வந்திடுமயக்கமாயவுடலொடிந்தியமனந்தான் ... ... *
பூந்திநற்பிராணுங்காரம்புகலுசங்காதமையா ... ... (௩க)

* எற்படவேழுநானென்றிடுதறும்பதத்தசுத்தங் ... *
கூப்பிடுமஞ்சங்கோஷங்கங்கையிற்றிகழுமென்ற ... *
வேற்பதத்தருத்தமெவ்வாறப்பரிசேழின்வேறாஞ் ... ...*
சீர்ப்பதக்கரியாஞ்சித்தேதிகழுந்தொம்பதார்த்தசுத்தம் ... (௩உ)

இச்செய்யுள்மூன்றுமெழுத்தெதுகை.

சொல்லியதொம்பதத்தைச்சோதனைபண்ணிவைத்துத் ... *
தல்லெனும்பதத்தைத் தேரில்ஸகலஜ்ஞயஸகலேசாதி ... *
மல்கியஸகலவியாபிமதித்திடுகாரணாதி ... ... *
தல்லினிலசுத்தமாகுஞ்சபளமுக்யார்த்தமன்றே ... (௰௩)

சுட்டிபசிவலை(*நின்ற) சுவேதமோடியதென்றெண்ணப் ... *
பட்டிடும்பதத்தருத்தப்பரிசுபோற்றத்பதத்தின் ... ... *
விட்டிடாச்சபளபாவமுக்கியத்தினில்வேறுகுந் ... ... *
தட்டறுகரியாஞ்சித்தேசாற்று தத்பதார்த்தசுத்தம் ... (௰௪)

தோற்றியவிருபதத்தைச்சோதனைபண்ணிவைத்தங் ... *
காற்றவேயாறுயென்னும்பதத்தினுக்கருத்தந்தேரி ... ... *
லேற்றியவிருபதத்திலுபாதிதீரிலக்கியார்த்த ... ... *
மாற்றவேயேகமாகியகண்டபூரணமதாகை ... ... (௰௫)

கூடுமோவெந்தாயிந்தவிருபதத்தைக்கியந்தா ... *
னீடியேயொன்றுதூரநிகழுமுன்னிலையதொன்றும் ... *
பீடுடையிரண்டொன்றுமோபேதையேன்சங்கைநீங்க ... ... *
நாடியேயொன்றுந்தன்மைநலம்பெறவருளிவேண்டும் ... ...(௰௬)

ஒதுவமொள்ளியோய்கேளோங்கிருபதத்தால்வந்த ... *
மேதகுபொருளொன்றுமாறைக்கியவிருப்பினோடு ... ... *
மோதுஸம்ஸர்க்கத்தோடும் விசிட்டவாக்கியத்தின்முக்ய ... *
மேதமாமகண்டவாக்யத்தேகமேயாகுமன்றே ... ... (௰௭)

சொன்னவாக்கியத்தருத்தம்ஸோயநற்றேவதத்த ... ...*
னென்னும்வாக்கியபதங்கட்கருத்தமெப்பரிசினவ்வா ... ... *
றன்னியவிருபதம்விட்டகண்டமாம்பதத்தினாலே ... ... *
யுன்னருமகண்டபூர்ணமாகியேயொளிருமன்றே ... (௰௮)

(*நின்றதென்பது-நின்றவெனக்கடைக்குறை-விகாரமாயிற்று

வாதிலமதுரவாரிமன்னுமாவாக்கியத்தி ... ... *
நேதமில்பதபதார்த்தவிலங்குசோதனையினாலே ... ... *
யாதனேனயர்வற்றுண்மையகண்டபூரணமதாகும் ... ... *
பொதாமேபுனையற்றேங்கும்பொருளெனத்தெளிந்தேனெந்தாய் ()

இல்லதோவுள்ளதோமற்றேகமோவனேகந்தானோ ... *
வல்லதோவாமோவன்றியருவமோவுருவந்தானோ ... ... *
வெல்லையில்பரமார்த்தந்தானெவனமென்சங்கைநீங்கி ... *
வல்லதீர்பொருளிவ்வண்ணமென்பதையறிந்துகொண்டேன் (உய)

சிரவணபத்ததி.

முற்றுப்பெற்றது.

மனனபத்ததி.

(அறுசீர்க்கழிநெடிலடி-ஆசிரியவிருத்தம்.)

பரமமாம்பொருளீதல்லாதபரமென்பதுதெளிந்தேன் ... ... *
திரமதாஞ்சவணத்தால்வேறொருபொருடேறுதுள்ளம் ... *
பரமனேபரமமாகிப்பொருளினைக்காண்பானாயேன் ... *
வரமதாவாஞ்சையுற்றேன்மனனமுமருளிடாயே ... (க)

மொழிந்தவப்பதங்கண்மூன்றின்முன்னியதொம்பதத்திற் ... *
பொழிந்தமுக்கியபாவத்தைப்பொறியுறமனனஞ்செய்நீ ... *
யொழிந்தமற்றுடலமாதியுறைத்தவேழினையுந்தேரின் ... ... *
விழைந்தமுப்பரிசாய்மேவுமவத்தைமூன்றென்னவாங்கே.....(உ)

நவின்றிடுமவைமூன்றுவநனவொடுகநவுமற்றுந் ... ... *
துழன்றிடுஞ்சுழுத்தியெனனச்சொன்னவாறடைவேசெப்பிற் ... *
பயின்றிடுவிசுவனோடுதைசதன்பிராஜ்ஞயனென்ன ... ... *
நவின்றிடுமுயிரின்முக்யநலம் பெறமனனஞ்செய்நீ ... ... (ங)

ஏன்றவச்சீவன்றன்பாலினையந்துளவுபாதிபாவ ... ... *
மூன்றிபமனவிருத்தியிரண்டதொன்(*றுபரமந்)தான் ... ... *
மூன்றையுமுணர்ந்துமூன்றுங்கடன்றவையின்றிநின்று ... *
தோன்றியவுணர்வதாகைசுத்ததொம்பதார்த்தமன்றே ... (ச)

உன்னிபத்வம்பதத்தினுற்றவப்பொருளாயுள்ள ... ... *
மன்னியசீவனுண்மைமனனஞ்செய்தற்றபின்னைப் ... *
பன்னியதத்பதத்தின்பொருளதாம்பரமனுண்மை ... *
தன்னையுமனனமுன்போற்றகுதரற்செய்திபையா ... ... (ரு)

கூறியபரமன்றன்பாற்கோதறுமுபாதிபாவ ... ... *
மூறியசகலஜ்ஞயத்துவாதிகளுயர்தூலாதி ... ... *
தேறியகாரணத்வாதிகளெனுந்திரளுமுன்போன் ... *
மாறியவவஸ்தைமூன்றுமவற்றையுமனனஞ்செய்நீ ... (ஈ)

ஓதியசகலஜ்ஞயத்வாதிகளெலாமொளிருந்தேய ... *
மேதகுபரமன்றன்சாக்கிரமதாமமுங்கிற்றெங்கே ... *
யாதகுபரமன்றன்பாற்கனவதாமாண்டதெங்கே ... *
யோதியபரமன்றன்பாலுபாதியாஞ்சுழித்திபையா ... (எ)

நாட்டியவடைவேமூன்றினமமுமனனஞ்செய்யிற் ... *
கூட்டியவிராட்டன்மற்றுங்குலவியவிரண்யறீப்ப ... *
ஞட்டுறுமரியவவ்யாகிரதனெனநயந்தமூன்று ... *
மூட்டியதத்பதத்தின்முக்கியமாகுமன்றே ... (அ)

ஆத்லாற்சீவபாவத்தாயமூன்றவஸ்தைபோல ... *
வோதியபரமன்றன்பாலுபாதியாமவஸ்தைமூன்று ... *
மேதமதறவுணர்ந்துகழித்தறவமூன்றுமில்லாப் ... *
போதமேதகுவாஞ்சுத்தப்பொருவிறத்பதார்த்தமையா ... (க)

பரமன்றன்சுழித்திதன்னைப்பழமறைபரநல்வியோமம் ... ... *
பிரிவறத்திகழாசாசசரீரநற்பிரமமென்று ... ... *
முரவியபரமாத்மாவினுபாதிசொல்லுதலாலத்தைத் ... *
துரிசறக்கழன்றசித்தேசுத்ததத்பதார்த்தமையா ... (ம)

(*உபரமம்-ஒடுக்கம்.)

இருபிதப்பொருளுமிங்ஙனிலக்கியப்பரிசையைய ... *
மருவறத்திகழும்பண்ணமனனஞ்செய்தற்றபின்னைத் ... *
தெரிவுறவானுயென்னுந்தேசுடைப்பதார்த்தந்தன்னைப் ... ... *
புரிவுறமனனஞ்செய்தற்பூரணமாகவையா ... ... (௨௧)

இதமுறுதூலபாவத்திடர்ப்படுபெத்தநீங்கி ... ... *
விதமுறுமுயிரார்ஞ்சித்தின்விட்டவாதனையங்குண்டு ... *
பொதுவுறுசூக்கபாவத்தகழுறுபுணர்ப்புநீங்கி ... ... *
விதமறுபரமன்பாலும்விட்டவாத்னையங்குண்டே ... (௨௨)

சொல்லியதொம்பதத்திற்றுரிசதாமூன்றும்விட்டுத் ... *
தல்லினிற்றுரிசதென்றுசாற்றுமூன்றினையும்விட்டே ... *
மெல்லியதிருக்குதிர்ச்யவியதிர்க்தந்தீரிக்கைசுட்டி ... ... *
யெல்லையிலிதமதெல்லாம்பிரமமென்றதுவேதந்தான் ... (௨௩)

தூலமாமிதத்தைச்சீவனகமெனுந்துரிசினுன்முன் ... *
னேலமேயிதத்தினீவேறென்றகமுகமதாக்கி ... ... *
மேலுமோருபாதிமேவப்படுமறிவிதுதானேரின் ... *
ஞாலமுண்டிடுதன்மாட்டாதெனமறைநவிலுமன்றே ... (௨௪)

உன்னியமுறைமையாலேயுற்றதத்பதார்த்தமாகி ... *
மன்னியகாரணத்தைவாய்ந்திடக்கழன்றுமேலா ... ... *
புன்னருஞ்சித்தின்ஞாலமுண்டிடப்படுதலாலே ... *
மன்னியவிசுவக்ராசமறையெலாமறையுமன்றே ... (௨௫)

ஆதலாலிருபதத்தினவஸ்தைகளனைத்துக்கிக் ... ... *
காதலாலகத்தின்மீலுங்கண்ணெனுங்கருத்தும்வாட்டி ... *
தீதியாலிதமுந்தானுய் நிகிலமும்விழுங்கியோங்கு ... ... *
மோதருகிரியாபோதந்தானேங்குதத்பதார்த்தத்துண்டே ... (௨௬)

ஆதலாலாரணங்களைறைந்தஸம்ஸர்க்கவாக்ய ... ... *
மோதியவிசிட்டவாக்யமுறைத்தவிவ்விரண்டினுலும் ... ... *
மோதரும்பொருளிரண்டிற்பொருந்துவாஸனையுந்தீரக் ... ... *
காதலாலசிபதத்தார்காட்டிடவுற்றதன்றே ... (௨௭)

ஸோயநற்றேவதத்தனெனச்சொல்வாக்கியத்தினாலே ... ...
காயமற்றிருபதத்தாங்காரியகாரணங்கள் ... ...
போயமற்றிதமகம்போய்ப் போயவாஸனையுந்தீர ... ...
வாயமற்றகண்டபூர்ணமாகியதசிபதந்தான் ... (௩௮)

சீவனும்பரனுமற்றைச்செகமெனுமுபாதியாய ... ...
மேவருகோள்கண்மற்றும்விரிவுடனொடுக்கம்யாவு ... ...
மோவிமற்றொன்றுமின்றியொழிவிலாதிறைவையிங்ங ... ...
னவமற்றுனையென்றங்கமைந்ததுசமைந்ததையா ... (௩௯)

பொறுகடல்சூழ்ந்தவிந்தப்புவிபகமெங்கும்புக்கேன் ... ...
றெரிதரவேதாந்தத்தின்திகழ்தருபொருளையிங்ஙன் ... ...
மருவுறுமயக்கந்தீரவாய்த்திடக்காட்டவல்லா ... ...
னொருவருமில்லையில்லையும்பனேயுன்னையல்லால் ... (௪௦)

மறைகள்போவாருமுண்டுமருவுமாகமபுராணங் ... ...
கணைகடீர்மிருதிமற்றுங்கலைகள்போவாருமுண்டிங் ... ...
கிறைவனேவேதாந்தத்தினெழின்மிகுபொருளுலோகத் ... ...
தறிவுறவருளவல்லாரானையேயில்லையில்லை ... ... (௪௧)

தம்பிரானருளிச்செய்தசவணமாத்திரத்தின்மட்டே ... ...
யிம்பராருலகந்தன்னில்யாவருமறிவதன்றி ... ...
யம்பொனேமனனந்தானுமறிபவரில்லையானாற் ... ...
செம்பொனேஸ்வானுபூதிசெய்பவேண்டுவதுமுண்டோ ... (௪௨)

மனனபத்ததி.
முற்றுப்பெற்றது.

நிதித்யாஸபத்ததி.

(அறுசீர்க்கழிநெடிலடி-ஆசிரியவிருத்தம்.)

ஆதிகாரணனேயாதிமூலமேயாதிமூர்த்தி ... ...
கோதிலாவமிர்தேஞானக்குளாகடற்கருணைக்குன்றே ... ...
யேதமின்மனனத்திங்ஙனற்றவிப்பதபதார்த்த ... ...
சோதனைப்பரிசைஸ்வானுபூதியிற்காட்டிடாயே ... (௧)

(கலிநிலைத்துறை.)

என்றுனைத்தடிபணிந்தொழுந்தஞ்சலிசெய்த ... *
துன்றுநற்பெருமன்பார்க்குத்துயலன்மொழிவா ... ... *
னென்றுநற்பரமானுபூதியிற்கண்டுகொள்ளுந் ... ... *
தன்றனற்பொருட்டன்மையுஞ்சாற்றுவன்மைந்தா ... ... (உ)

தொம்பதந்தனிற்சரியசோதனைத்துணிவு ... ... *
நம்பதத்துக்காரணசோதனைநலனு ... ... *
மம்பதத்தசிவாஸனைச்சோதனையுந்துங் ... ... *
கம்பமற்றிடக்கண்டுண்மைகாண்பதுமுடிவால் ... ... (ங)

முப்பதங்களின்மொழிந்தவம்முறைமையுமுடிவுந் ... *
தப்பறும்படிதமியனேன்கண்டுகண்டுவெப்பச் ... *
செப்பமொன்றியதிகழனுபூதியிற்காட்ட ... ... *
வப்பனேயெனையாண்டவெம்பரமனேவேண்டும் ... (ச)

நீதியாநிதித்யாஸநற்பரிசதாயுள்ள ... ... *
கோதிலாவனுபூதியைகூறியவடைவே ... ... *
யேதமானதொன்றறநினைற்கேற்க நீகாணக் ... ... *
காதலாலுறக்காட்டுவன்கண்டுகொண்டிடுநீ ... ... (ரு)

(கலிவிருத்தம்,)

என்றிறைமொழிந்திட்டியங்கியநலன்ப ... ... *
னென்றுகடலேழோரணுவாகிநன்பாய் ... ... *
நின்றருவிசேர்விழிநெக்குறுகியசென் ... ... *
பொன்றிகழ்திருந்தடிபொருந்திடவிழுந்தான் ... (சு)

(கலிநிலைத்துறை,)

அங்கவன்றிறங்கண்டிறைசமைந்தருணயனைப் ... ... *
பங்கயங்களாற்பழவினைபொடிபடப்பார்த்துத் ... *
துங்கமைந்தநற்றென்னியிற்றுணைக்கழலிணையாம் ... ... *
பங்கயங்களைப்பதித்துநற்பவளவாய்மலரும் ... ... (எ)

தொம்பதத்தினிற்சொல்லுமுக்கியத்தினின்மொழிந்த ... ... *
நம்புமுப்பரிசாகியவவஸ்தையுநனவிற் ... ... *
கம்பமற்றிடக்கண்டவைகழிந்துளகரியை ... ... *
நம்பவிப்பரிசேகண்டுகண்டவாநவினீ ... ... (அ)

பொறிபுலன்புணர்மனனுறுவிஷயமாநனவு ... ... *
மிறைவகண்டருள்வகையினிற்கழிந்ததுங்கண்டேன் ... *
கறைசெய்வாசனைப்பந்தமாங்கனவதுங்கண்டேன் ... *
செறியுநின்னருளினிலதுதீர்ந்ததுங்கண்டேன்... ... ...(க)

நனவுவாசனைக்கனவதாநாற்றமுமற்று ... ...*
வினவலாவதும்வேறுமொன்றறும்வெறும்பாவம் ... ...*
புனைவதாகுமவ்வியத்தமாம்பொற்புடைச்சுழுப்திக் ... *
கனைசெய்பேரிருண்மூலநற்பகுதியுங்கண்டேன் ... (ம)

அனையமூலநற்பகுதியைவிஷயமாவறியு... ... ... *
மெனையுநீயருள்வகையினிலறிவெனக்கண்டே ... ... *
னினையநீதியினறிவதாமெனைக்கண்டபின்னர் ... *
புனைசெய்மூலநற்பகுதிபோயிறந்ததுங்கண்டேன் ... ...(௩க)

அறிவுதானழிவின்றியேயனைத்தையுமறிந்து ... ... *
முறிவதாகியமுன்புபின்பக்கமேல்கீழ்சூழ் ... ... *
செறிவுதாயிடத்தனக்கின்றியெங்குமாய்த்திகழ்ந்து ... *
பிறிவிலகதனைத்தினுக்குமுள்ளாகியேபிறழும் ... ...(௩உ)

எழுமெனாமிதினிகழுமிங்கழிதருமிதுதான் ... ... *
கழிவிலாதனைத்தினுக்குநற்காரணமறுவா ... ... *
யொழிவதாமுடல்பொறிபுலன்தரணமற்றனைத்தின் ... *
கழிவிலாதநற்கரியதுவாகியேகமழும் ... ... (௩ங)

ஒப்பிலாதவிவ்வுணர்வதுவதாமெனைக் ... ...*
கப்பெலாமறக்கரதலமணியெனக்கண்டே ... ... *
னிப்பெருதபேறதுநினதருளினாற்பெற்றே ... ... *
னப்பனேயெனப்பணிந்தெழுந்தஞ்சலிசெய்தான்... ...(௩௪)

அமையநின்றனையனுபவத்துணர்ந்தமையாலே ... ... *
துமசியென்றெழுசொற்பதப்பொருடுலங்கியதா ... ...*
லமையவிப்படியறிபொருடொம்பதத்தருத்தன் ... ... *
சமையவேயினித்தத்பதப்பரிசங்காட்டுவனான்... ... (௩௫)

தற்பதத்தின் முக்கியமாஞ்சபளபாவத்திற் ... ... *
கறிபிதப்படுகருத் துமூன்றையுமுனக்கேற்கக் ... *
கற்பறக்கண்டுகண்டவைகழிந்துநின்றுணருஞ் ... ...*
சிற்பரத்தையுமிவணநீகண்டுசெப்பிடுவாய் ... ... (௩௬)

கண்டனன்விராட்டெனும்பரன்கருதருநனவைக் ... *
கண்டனன்காரணாதியத்தூலாதியதனிற் ... ... *
கண்டனன்போதவிகல்ப்பமாங்கனவதிற்கழிய ... *
வண்டநீயழகுறவருளியல்பதாவதனால் ... ... (௩௭)

எழுவதாகியவிரணியசர்ப்பனாயிசைந்த ... ... *
கழிவிலாதநற்பரமுறுகனவதுங்கண்டே ... ... *
னழிவிலாதவவ்வியாகிர்தனெனும்பரன்சமுப்தி ... *
யொழிவிலாதநின்னருளினிலொதுக்கறக்கண்டேன் ... (௩௮)

பழுதிலாநற்பழமறைபரமநல்வியோம ... ... *
மழிவிலாதநல்லாகாசசரீரநற்பிரம ... ... *
மொழியினாகியபபனதுதெரிவுறப்பரமன் ... ... *
கழிவிலாதநற்சமுப்தியிற்கரிசறக்கண்டேன் ... (௩௯)

விழைர்தவவ்வியாகிர்தனெனும்பரமநல்வியோமங் ... *
கழிந்தமேலுறுங்கண்ணதாய்வியோமமேமுதலா ... *
மொழிந்தமூன்றையுமொக்கமேவிழுங்கிநின்றொளிருங் ... *
கழிந்தடாதநிற்பரமுநின்னருளினிற்கண்டேன் ... (௨௰)

ஒருங்கிமீள்வுறுமியல்பினிலுபாதிகள்கழித்துத் ... *
தரங்கமே * யநிர்தப்பெரும்பித்தநந்தடித்து ... ... *
நெருங்குபேரிதமெனும்விச்வநிகழ்வதுமிவிழுங்கிப் ... *
பெருங்கணாய்நிகழ்பிறழ்வுநின்னருளினாற்கண்டேன் ... ... (௨௧)

* அரோயமாநன்மாவுளம்புறமுழுதுமென்றறையும் ... *
பாவுமாரணமறைதருதிருமெழிப்பரிசே ... ... *
தராதலாதலவுலகமுண்டகம்புறமருவுஞ் ... ... *
சராசராதிகண்முழுதுந்தன்னுருவதாய்த்திகழும் ... (௨௨)

---

* அநிர்தம் - பொய் - அரோ என்பது (ஓ- என்னும்விளிக்குறி

ககலபேரிதம்பிரமநிச்சயமெனவறைந்த ... ... *
மிகுநலாரணம்விளம்பியமெய்ம்மொழிப்படியே ... ... *
சகமெலாமொருதன்வடிவாகியேதிகழு ... ... *
நிகழ்வதாயிருந்ததுவெனநிமலனைப்பணிந்தான் ... (உ௩)
அரியநாயகனழகுறவடியனுக்கருளித் ... ... *
துரியமேமுதலகமிதத்துகளெலாந்துடைத்துத ... *
தருவதாதலிற்றகியெனச்சமைவதாமிதனை ... ... *
யரியதாகியவமலதத்பதார்த்தமென்றறிநீ ... (உ௪)

அறுசீர்க்கழிநெடிலடி-ஆசிரியவிருத்தம்.

வியோமாதீதக்கிரமத்தால்விச்வங்கிரிகித்தவேகத்தா ... ... *
ஞமாதீதமிதமாவோமென்றுனிடமானவைதன்னாற் ... *
போமாமுபாதிப்புரைகழிந்தும்பொலிவாசனையாற்புகன்றவிதி ... *
ஞமாந்தோஷிமவைதீர்ப்பானுயென்றதாரணந்தான் ... ... (உ௩)
ஐயாவிதனுலிருபதத்தாலாகிமுடிந்தவரும்பொருளின் ... *
மெய்யாநாமக்கிரியாவேசமிகுவாசனையாநாற்றமது ... ... *
மையோகழிந்தங்ககண்டபதமானுயென்னுமருஞ்சமைவை ... ... *
மெய்யேகண்டுகொள்கவெனவிமலன்காட்டியருளினன் ... (உ௪)

கலிநிலைத்துறை.

ஊனிறந்துயிரிறந்துளமிறந்துணர்வதாந் ... ... *
தானிறந்துதகுபாவமுழுதும்பரமொடே ... ... *
வானிறந்துமிகலொன்றிவையமுண்டபுரணம் ... ... *
தானிறந்தபரமம்பதமிருந்தபடியே ... ... (உ௨)
புறங்கணன்றுளமதன்றுபுகலங்ஙனமதா ... ... *
யுறுங்கணன்றுணர்வுமன்றுணர்விறந்தவிடமா ... ... *
நிறங்கணன்றுநிகழ் * வேதிதமும் * வேத்யமுமெலா ... *
மிறந்திருந்தபரமம்பதமிருந்தபடியே ... ... (உ௮)

வேறு.

எலையிலாவிதம்ப்ரவஞ்சமொடநிதமும்விழுங்கிச் ... ... *
சொலிதையாய்மிகுசுடர்தருபுரணமுமிறந்தி ... ... *
வலைவிலாவுததியதேணிமமலநற்சமைவைத் ... ... *
தலைவநானினவணமெனச்சாற்றுவதறியேன் ... (உ௯)

---

* வேதிதம்- அறியப்பட்டது- * வேத்யம். அறியப்படுவது.

எனவியம்பியஞ்சலிசெய்தெழுருயிர்த்தலைவ ... ... *
முனமியம்பினைமுப்பதப்பொருண்முடிவெனவு ... *
மினமியம்புமிப்பதமிருபதத்திரிவிதம்போன் .. *
முனைவகண்டனன்முடிவையிங்சருளெனப்பணிந்தான் ... (௩௰)

அருளுநாயகனருயிர்வெளிப்படுமொருபாழ் ... ... *
பொருளதாம்பரன்பொருவறவெளிப்படுமொருபாழ்... ... *
தெருளதாகியகுருபரன்றிகழுமிச்சமைவா ... ... *
மிருளிலாதசூழ்கீழ்மேலுமெலையிலிப்பெரும்பாழ் ... (௩௧)

நீலகந்தமாமுற்பலமெனநிகழ்த்திடல்போற் ... ... *
சாலுசத்தியஞானமோடனந்தவானந்த ... ... *
நாலுமொக்கவேநிகழ்தருநலமுடைக்குரவன் ... ...*
சாலமிக்கநல்லொளிவெளிப்படுவதிச்சமைவே ... ...(௩௨)

என்றியம்பிடவெழின்மிகுமன்பனும்பணியா ... ... *
வுன்றனன்பெருமைக்கொப்பதுன்னையேயனையாய் ... *
தின்றநின்றிகழ்பரமசூட்சுமநிலையேதிங் ... ... *
குன்றனன்பருளெனையுமாளியல்பதேயெந்தாய் ... ...(௩)

வேதவந்தநல்விளக்கியசமைவுமாயுலகிற் ... ... *
போதுகின்றவவ்விருமையும்புகலிலின்றளவு ... ... *
மோதுத்வம்பதத்திரயத்துடன்பதத்திரயமுடித்து ... ...*
போதுமென்றுதான்புகன்றுபோய்விடலாலிலையால் ... (௩௪)

அறுசீர்க்கழிநெடிலடி-ஆசிரியவிருத்தம்,

அந்தோவெவருந்தடுமாறவாதிப்பிரமமாநின்னைத் ... *
தந்தேயிடவந்திங்குருவாய்த்தமியனேற்றுவாய்த்தாயே ... *
முந்தாமும்மைப்பதமுடிவாமொழிசத்தியமாதித்திகழ்வாய்... ...*
நந்தாவமிர்தத்திடைதிளைக்கநாதாநாயேற்சருளாயே ... ... (௩௫)

கலிநிலைத்துறை.

மைந்தமுன்புகலிருவகைப்பாழியல்பெனலாய் ... *
வந்தவெல்லைகண்முடிந்தவிம்மதிப்பெரும்பாழைச் ... *
சொந்தமொன்றறவிழுங்கியஸவயம்பிரகாச ... ... *
மிந்தகண்டிடென்றிறைமோனமொழியினளித்தான் ... (௩௬)

சொல்லுமெல்லைகண்முடிந்துதுரிசொன்றுமிலதா ... ... *
யெல்லையின்றியவகண்டபரவின்பமிதெனு ... ... *
வல்லவன்புதல்வன்வாழவொருமேனமொழியா ... *
லெல்லைகண்டுதிளையாயெனவுவந்தருளினான் .. ... (ரூஎ)

(பதின்சீர்க்கழிநெடிலடி-ஆசிரியவிருத்தம்.)

தனவுறுங்கனவொடுங்குதலிறந்துணர்வது ... ... *
நாடிமேலுறுபராங்கமதிறந்ததிவிறந் ... ... *
லுனவருஞ்சகமுமுண்டதுமிறந்துசமைவுண் ... *
பொப்பிலாதொளிருளப்பில்பிரகாசமதளித் ... ... *
தினமறும்பரமவின்பவொளிநல்கியினிமேல் ... *
வினவறும்படிமுடிந்தநிலனிங்கிதுவெனு ... ... *
வனையவங்கணனியம்புதலறிந்தபுதல்வ ... ... *
னாரநன்குணரவங்கினிதிருந்தருளினான் ... ... (ரூஅ)

காரணத்தினைவிழுங்கிவையமுண்டபுரணக் ... ... *
கண்ணுமற்றிவணமென்றுகருதற்கரியவச் ... ... *
சீரணச்சமைவிறந்துதிகழ்நற்சுயமதாய்ச் ... ... *
சிவமதாயபிரகாசவொளியுண்மையதளித் ... ... *
தேரணத்திகழுலப்பில்சுகசாகரமதா ... ... *
மியல்பளித்தினியியம்புதலிறந்தமுடிவைக் ... ... *
காரணத்தர்வெளிகாட்டினரிருந்தடியனுவ ... ... *
கண்டுகொண்டுறவிருந்தனனிருந்தபடியே ... ... (ரூஉ)

(கலிநிலைத்துறை.)

ஒப்பில்பூரணவொளியின்பநிகழ்ந்துணையிறந்து ... ... *
செப்பமாயுறுசிற்சுவைந்திகழ்பயனளித்து ... ... *
நிற்பதாயமுதுறீஇநிகழ்நிரதிசயத்தை ... ... *
மெய்ப்பதாமுழுந்திடவிறைவெளியதாவளித்தான் ... (சம)

புலமதாய்ப்பொலிந்தேயவையவைதொறும்பொலிந்தங் ... *
கொலியொடேயுருவுறுசுவைமணமதாயொளிர்ந்து ... ... *
நிலையதாய்நிகழ்நிரந்தரமுழுந்திடவளிக்க ... ... *
வலைவிலாததனனுபவம்விபந்திறைக்கறைவான் ... (சஎ)

கண்டுகொண்டனன்முடிந்தபதநின்னருணையான் ... ... *
மொண்டுகொண்டுமுடியாதமிகுபேரமிர்தமே ... ... *
மண்டியுண்டுகளியாமதுரவாரியெனநீ ... ... *
தொண்டுகொண்டவியல்சொல்லும்விரகேதறிகிலேன் .. (சஉ)

அண்டமுன்திகழ்பதங்களுமவஸ்தைகளுமா ... ... *
யெண்டரும்படியிசைந்திடவிசைந்திடவினை ... *
கண்டுகொண்டிடவுநீசெய்தவினைதமதெலாம் ... ... *
விண்டொழிந்திடவுநீசெய்விரகேதரிகிலேன் (சரு)

அது(*நி)யேயதுவாயினையென்றெழுமமல்வாக்கியமு ... *
மது(*நி)யேயதுவாயினையென்றவாக்கியமு ... *
முதியன்வாயினின்மோனமாமொழியினின்முடிந்து ... *
பதியதாகியபரம்பதமிருந்தபடியே ... ... (சச)

அகமதேதிகழ்பிரமமாயினனெனவறைந்த ... ... *
பகவிலாதவப்பிரதிபத்திவாக்யத்தினருத்த ... ... *
மகமதார்மெய்கண்டனுபவப்பிரதிபத்திவாக்ய ... *
மிகவுநான்மொழிந்திடவிறையெனைச்செய்வித்ததமே ... (சரு)

மோனமாமொழியினிருந்திரைகட்டத்தன்முடிவை ... ... *
யானநுகுவிவாயமையாக்குடநிறைநீர் ... ... *
தானெனப்பரிபுரணநற்பிரகாசவானந்தத் ... ... *
தேன்முழுந்துளநிறைந்தெதிர்த்துக்கடைவிடுமால் ... (சகு)

சொல்லிறந்ததுமோக்ஷமுத்திரைதனிலிருந்து ... ... *
நல்லதன்முடிவினைநடித்தேயிறைகாட்டச் ... ... *
சொல்லிறந்தநற்சுயம்பிரகாசவானந்த ... ... *
மல்கியேயுளநிறைந்தெதிர்த்துக்கடைவிடுமால் ... (சஎ

---

* நீ-நீஎன்பனநி-நி-என குருக்கல்விகாரமாயின

பூரணஞ்சுடர்வடிவதாய்ப்பொருவில்சிற்பிரகாசத் ... ...*
தேரணந்திகழொளியின்பவொலியின்பவொளியினிற்றெளிவாய்ச்*
சீரணந்திகழ்திகழ்சிவப்பிரகாசமர்ந்திகழ்வி ... ... *
னேரணந்தனையியம்புமாறெதுமதிகிலனான் ... ... (சஅ)

பூரணந்திகழமிர்தமாய்ப்பொருவில்சிற்பிரகாச ... ... *
மேரணந்திகழ்சுவையின்பச்சுவையினிற்பயனாய்ச் ... *
சீரணந்திகழ்சிவப்பிரகாசவாரமிர்தான் ... ... *
டார்வதன்றியப்பூர்த்தியெப்பரிசறைகுவன்யான் ... (சக)

வேறு.

முப்பதங்களின்மொழிந்துறமுடிந்தபொருளா ... ... *
மிப்பரம்பதமிருந்தபடியின்றறையுமா ... ... *
றப்பவொன்றும்விரகின்றிய*தஹோவதிசய ... ... *
*முப்த்திருந்துவிடலன்றியினியொன்றுமறியேன் ... (ருஅ)

முடிந்ததின்றுமுழுதுந்திகழுமோனமதிலே ... ... *
படிந்தரும்பொருளிருந்ததிருந்தபடியே ... ...*
விடிந்ததெங்கும்வெளிபாகியதுமாயவிரவு ... ... *
முடிந்ததிங்கிறைவவென்பலமொழிந்திடுகுவேன் ... (ருக)

என்றுளந்தழுத்துடல்விதிர்த்தெழுமயிர்க்குச்சிட் ... ...*
டென்றும்வாயுரைகுழறியொண்கண்கணீர்சொரியச் ... *
சென்றுவீழ்ந்தனன்மைந்தனற்றேசிகேந்திரனும் ... *
தன்றனரருளடியவன்றலைமிசைவைத்தான் ... (ருஉ)

வைத்தவார்கதன்முடிமிசைவளம்பெறச்சூடி ... ... *
யுப்த்தநன்முகமண்டலந்தொப்பறவொற்றி ... *
மெய்த்ததன்றிகழ்மார்புறவிருப்புடனனைத்துச் ... *
*செப்புமேழ்கடலணுவெனத்திகழன்பிற்பணிந்தான் ... (ருங)

---

*இவ்வடி இனவெதுகை *இவ்வடி இனவெதுகை *அஹோ அதிசயம்

பணிந்தெழுந்தொழும்பரமனதடியிணைமுடிமீ ... ...
தணிந்தணிந்தழன்மெழுகெனவமைவுறவுருகி ... ... *
யினைந்தவார்கழலிரண்டையுமெழிலிபெறத்தழுவி ... *
மணந்தவார்குழிழான்முன்னுண்டன்பினையர்ந்தான் ... (ருச)

திருத்யாஸபத்ததிமுற்றிபது.

தத்வாமிர்தமுற்றுப்பெற்றது

ஆபத்ததி-ரு-இ திருவிருத்தம்-ாகூன

வெண்பா.

சாற்றுமுப நிஷித்திற் றத்பதத்தின் மெய்ப் பொருளை ... *
மாற்ற மனங்கடந்த மாமணியைப் - போற்றியிடக் ... *
காணாது காட்டியதற் காரணனார் கோலமலாற் ... ... *
காணா தினியொன்றென் கண் ... ... *

உ

கணபதிதுணை.

மூன்றாவது,

தத்வாமிர்தக்கட்டளை.

அத்வைதசுத்தவேதாந்ததரிசனம்.

கலிநிலைத்துறை,

அண்ணல்கூறிடுமரியவாரணக்கடலெழுமவ் ... ... *
வண்ணமின்றியவாசாமகோசரவமிர்தைக் ... ... *
கண்ணதாயிடக்கரதலமணியெனக்காட்டும் ... ... *
வண்ணமுள்ளமாவாக்கியமைந்தற்குப்புகல்வான் ... ... (க)

வன்னநாலதாய்வண்பதமூன்றாந்துடைத்தாய்த் ... ... *
தன்னதாம்வடிவதுமிகத்தானுநுண்ணியதாய் ... ... *
முன்னமாமறைமுழுதுமோதியுமுடியாச்சீர் ... ... *
மன்னுமாப்பொரு * ளுடைமைமாவாக்கியப்பெயராய் ... ... (உ)

வடிவுநுண்மையுமாப்பொருளுடைமையுமமர்வு ... ... *
மூடிவுமாயிருமையுமறமொழிதருவிரகும் ... *
படியிலாதெழுபழமையுமப்படிபுதுமை ... ... *
யுடையவாகியவுயர்நிபாறவையுடைத்தாய் ... ... (ங)

இறந்தகேள்வியாயிறந்ததற்பரிசனமாந்தா ... ... *
யிறந்தவீரமாயெலையிலானந்தஞானமதாய்ச் ... ... *
சிறந்தகாலதேசந்திசையிறந்திடத்திகழ்ந்து ... ... *
நிறைந்தவெட்டியல்புடைத்துநீள்வாக்கியமினங்கேள் ... (ச)

---

* உடைமையின்என்பது-உடைமையென-வேற்றுமைத்தொகையாயிற்று.

கலிவிருத்தம்,

நித்தமொடுமுத்தநிமலந்திகந்பரத்தை ... ... ❀
யுப்த்தகரமுத்தமணியத்தினிகரொப்பய ... ... ❀
மெய்த்திடவெவக்குமுனரத்திகழுவிக்குந் ... ... ❀
தத்வமசிதத்வமசிதத்வமசிசத்பம் .. .. (❀)

இனிவசனம்.

ஆதலால்- மஹாவாக்யஞ் சொல்லப்பட்டஞானமே ஞானம், அதையல்லாமற் சொல்லப்பட்ட ஞானங்ளெல்லாம், அறியுமிடத்துக் குஞ்ஞானமேயாம் ஆனபடியினாலே சுத்தவேதாந்தஞ்சொல்லப்பட்ட பரிசினை ஆசாரியர் சிஷியனுக்கு- அனுக்கிரகம்பண்ணுகிறார்.

அதெப்படியென்னில், இருக்கு- யசுஸ், சாமம், அதர்வணம் என்கிற நான்குவேதங்களும், இரண்டு பிரகாரமாயிருக்கும். அவை யெவையென்னில், அல்ப்பசுருதிவாக்யமென்றும் பிரபலசுருதி வாக்யமென்றுமாம்- இவற்றில், அல்ப்பசுருதிவாக்யம், கர்மகாண்டத்தைச்சொல்லும்- பிரபலசுருதிவாக்யம், அத்யாத் மத்தைச்சொல்லும், இது, முப்பத்தாறண்டு உபநிஷத்தாயிருக்கும் இது நான்கு வாக்கியங்களைப்பிரதிபாதிக்கும், அவைமெவையென்னில், பிரக்ஞானம், பிர்ம அகம்பிர்மாஸ்மி- தத்வமசி- அயமாத்மாபிர்ம - என்பனவாம் இந்த நான்குவாக்யமும்- சீவபரைக்கியத்தைச்சொல்லும் இந்த நான்குவாக்யத்திலும், தத்வமசிவாக்யம்- மஹாவாக்யமென்றுசொல்லப்படும் அதெப்படியென்னில் நான்குவாக்யத்தினர்த்தமும் இந்த வாக்யத்திலிருக்கையினாலும் அந்வயபதம் இதினிடத்தேயிருக்கையினாலும். அவாங்மநோகோசரமாயிருக்கிறவஸ்துவைகரதலாமலகம்போலக்காட்டுகையினாலும் இது, மகாவாக்யமென்று சொல்லப்பட்டது. இந்த மகாவாக்கியந்தானு, அவாங்மநோகோசரமாயிருக்கிற வஸ்துவை, நான்குவர்ணமும், மூன்றுபதமும், மூன்றுலட்சணத்தாலுஞ் சொல்லித்து ஆறுகுறியும், எட்டியல்புமாயிருக்குமென்றுசொல்லிற்றுஅவைகள்மெவையென்னில் நான்குவர்ணமாவன, தத்-துவம்-அ-சி- இவை

குஞ்ஞானம் - ஞானமல்லாதது ஆயினஎன்பது - ஆனவென வழங்கியது.

களாம் மூன்றுபதமாவன, தத்பதம்- துவம்பதம்- அசிபதம்,-இவை களாம், மூன்றுலட்சணமாவன, சிவ-பர-ஐக்கியம்,- இவைகளாம்-ஆறுகுறியாவன, வடிவுநுண்மை-மாப்பொருளுடைமை-நிறைவு, இரண்டறவிளங்கியமுடிவு, என்றும்மாழமை, என்றும்புதுமை, இவைகளாம், எட்டியல்பாவனகேள்வியிறந்ததாதல்தரிசனமிறந்ததாதல்வீரமிறந்ததாதல் எல்லையிலாத வானந்தமுடையதாதல் எல்லையிலாதஞானமுடையதாதல்-காலமிறந்ததாதல்-தேசமிறந்ததாதல்; திசையிறந்ததாதல், இவைகளாம் இப்படி மகாவாக்யத்தாற் சொல்லப்பட்ட வஸ்து எப்படிவிளங்குமென்னில் ஆசாரியர் திருவருளினாலே சொல்லுகிற-சிரவணம் மனனம்-நிதித்யாசனம், என்னுமூன்றுவகையினாலே விளங்கும் இந்தமூன்றுவகையும் விசாரிக்குமிடத்து ஸ்தூலசிரவணாதிமூன்றென்றும் சூட்சமசிரவணாதி மூன்றென்றும், இரண்டுவிதமாயிருக்கும்.

ஸ்தூலசிரவணாதி,

இவற்றில், ஸ்தூலசிரவணாதிமூன்றுவன, சொல்லப்பட்டசாஸ்திரங்களை இதுவிதுவென்று வினவிப்பகுத்தறிந்து கேள்விப்படுகிறது சிரவணம் அப்படிகேள்விப்படாநின்ற சப்மார்த்தங்களெல்லாமனதிலேதரிக்கத்தெளிந்து விளங்குகிறது மனனம் சிரவணத்தினாலே கேள்விப்பட்டு மனனத்திலேதெளிந்து விளங்கியிருக்கப்பட்ட யாதொருஅறிவுண்டு அந்தஅறிவுதானாய் நிற்கப்பட்ட நிலை நிதித்யாசனம்

சூட்சமசிரவணாதி

இனிசூட்சமசிரவணாதி மூன்றென்றதெப்படியென்னில்-சிரவணமாவது மகாவாக்யஞ்சொல்லப்பட்ட அதுவெனும்தத்பதத்துக்கர்த்தம். பரம் நீயென்னும், துவம்பதத்துக்கர்த்தம், சீவன் ஆனையென்னும், அசிபதத்துக்கர்த்தம், இரண்டினுடைய ஐக்கியமாயற்றபொருள். கிரியாபதத்துடனேகூட்டிப், போதிக்கிறமுறைமைஎப்படியென்னில், அது, நீயாகின்றாயென்றும் நீதுவாகின்றாயென்றும் போதிக்கப்படுதலாம் இந்தவாக்யம் அறிவித்துப் போதிப்பானேனென்னில் அதுவென்கின்ற தத்பதத்துக்கு உபாதி, பரோட்சமென்கிற காரணஉபாதி நீயென்கின்ற துவம்பதத்துக்கு உபாதி அபரோட்சமென்கின்ற காரிய உபாதி இந்த அபரோட்சமென்கின்ற காரிய உபாதி முந்திவருகையினாலே துவந்ததசியென்று

திக்கவேண்டிற்று துவந்ததசி வாக்யம்போதிக்கிற முறைமைஜக, சீவ பரத்தைவிளக்கும், அதெப்படியென்னில் நீயென்கின்ற துவம்பத த்துக்கு உபாதியேழு அதென்கின்ற தத்பதத்துக்கு உபாதியேழுயி ந்த உபாதியேழு முக்யம் இந்தஉபாதியேழுந் தீர்ந்ததுலட்சியம்உபா தியை நானென்றது அசுத்தம் உபாதியைநீங்கினதுசுத்தம் யிந்தயி ரண்டுபதங்களுக்கும் லட்சியமான சுத்தார்த்தங்களை ஆனாயென்னு ம் அசிபதத்திலே ஏகமாய்க்கண்டு விளங்குகிறதேசிரவணம் மனன மாவது துவம்பதத்திற்காரிய உபாதியேழும், அவஸ்தைமூன்றும் த த்பதத்திற்காரண உபாதியேழும்- அவஸ்தைமூன்றும் தரிசித்து நீக் கி சீவனும் பரனுமீ அசிபதத்திலே ஐக்கியப்படக்கண்டு ஏகமான பொருளைமனதிலே தரித்திருக்க விளங்குகிறதுமனனம் நிதித்யாச னமாவது, துவம்பத, முக்யமான அவஸ்தை மூன்றையும் நீக்கி ல ட்சியமாய் விளங்குகிற சீவனுந்- தத்பத முக்யமான அவஸ்தைமூன் றையும் நீங்கிச் சுத்தமாய்விளங்குகிற பரனும்- அசிபதத்திலே- ஐக்கி யப்படக்கண்டு ஏகமாய் விளங்குகிற ஸவரூபத்தை ஆசாரியருடைய திருவருளினாலே சிரவணத்தினாலே கேள்விப்பட்டு மனனத்தினாலே தரித்துவிளங்குகிற தத்ஸவரூபந்தானாய் நிற்கப்பட்ட நிலைநிதித்யா சனம்,

துவம்பதமுக்யசீவவுபாதி,

இப்பரல், மூன்சொல்லப்பட்ட சூட்சமசிரவணாதி என்றமூன் றையும் விரித்துவிளங்கவருளிச்செய்திறோர் அவையெப்படியென்னில் மனனமாவது, துவம்பதமுக்ய சீவ உபாதிசொல்லுகிறோம், அதெ ப்படியென்னில், வேதாந்ததத்வமாவன, (உஅ) அவையெவையெ ன்னில், ஞானேந்திரியமானஸ்ரோத்ராதி, ரு- இவற்றின், விஷயமா னசப்வாதி- ரு- கன்மேந்திரியமானவாக்ராதி-ரு- இவற்றின் - விஷய மானவசனாதி-ரு- ஸந்தக்கரணம்-ச- புருஷன்-காலபரம்- வியோமம்- பரம்-ச- அ- தீவம்-உ- யிவற்றில்,புருஷன், காலபரம்-வியோமம் பரம்- யிவைநான்கும் நிற்க நின்றதத்வம் உ - பிராணவாயு-க- ஆக தத்வம்-உரு-யிவை.ஏழு உபாதியாம் அவையெவையென்னில் தேக கம்- யிந்திரியம்- மனம்- புத்தி - அகங்காரம் சித்தம்-பிராணன்- ஆ ஏ யிவற்றில், தேகம்தானேவென்னில், தேசம் நீயன்று அதெ

ப்படி நானன்றென்னில்- என்னுடையதேகமென் றுன்னு லறியப்ப டுகையினாலும்தேகம் பஞ்சபூதத்தின்கூறுகையாலும்தேகமுனக்கந் நியமாகையினால் தேகம்நீயன்று இந்திரியம்நானேவென்னில்இந்திரி யமும்நீயன்று. அதெப்படிநானன்றென்னில் என்கண்நன்றாய்விளங் குகிறதென்றும்என்கண்நன்றாய்விளங்குகிறதில்லையென்றும் என்கா துநன்றாய்கேட்கிறதென்றும்என்காதுநன்றாய்கேட்கிறதில்லையென் றுஞ்சொல்லப்படுகையினாலுமிந்திரியமொன்றறிந்ததொன்றறியாத படியினாலும்என்னுடைய இந்திரியமென்றுன்னு லறியப்படுகையினா லுமிந்திரியம்பஞ்சபூதத்தின்கூறுகையினாலுமிந்திரியமுனக்கந்நிய மாகையினால்யிந்திரியமும்,நீயன்று அந்தக்கரணங்களில் மனந்தான் நானேவென்னில், மனமும் நீயன்று, அதெப்படிநானன்றென்னில் என்னுடைய மனமென்றுன்னுலறியப்படுகையினாலும், மனம்வாயு வின் கூறுகையினாலும் மனமும் நீயன்று புத்திதான் நானேவென் னில், புத்தியும்நீயன்று அதெப்படி நானன்றென்னில், என்னுடை ய புத்தியென்றுன்னு லறியப்படுகையினாலும் புத்திஅசனியின்கூறு கையினாலும் புத்தியும் நீயன்று, அகங்காரந்தான்நானே வென்னில் அகங்காரமும் நீயன்று அதெப்படி நானன்றென்னில் என்னுடைய அகங்காரமென் றுன்னுலறியப்படுகையினாலும் அகங்காரம்பிருதிவி யின் கூறுகையாலும் அகங்காரமும் நீயன்று சித்தந்தான் நானேவெ ன்னில் சித்தமும் நீயன்று அதெப்படி நானன்றென்னில் என்னுடை யசித்தமென்றுன்னு லறியப்படுகையினாலும் சித்தம் அப்புவின் கூ றுகையாலும்சித்தமும்நீயன்று அந்தக்கரணந்தான்நானேவென்னி ல்அந்தக்கரணமும் நீயன்று அதெப்படிநானென்றென்னில்,ஸங்கல் பநிச்சயவபிமான சிந்தனை இத்யாதிவடிவாகையால் அந்தக்கரணமு ம் நீயன்று பிராணன்நானேவென்னில் பிராணனும்நீயன்று அதெ ப்படிநானன்றென்னில் என்னுடைபபிராணனென் றுன்னுலறியப்ப டுகையினாலும் பிராணன்பிருதிவியின் கூறுகையினாலும் சுழுப்தியி ற் சைதன்னியமில்லாமையினாலும் பிராணனும் நீயன்று இவையெ ல்லாம் நானன்றாகில் நான்யாரோவென்னில் தாமதிருஷிடாந்தபி டனுக்கிரகம்பண்ணுகிறார்,

அதெப்படி யென்னில் பத்துப்பேர்கூடி ஒருஊர்வழிப் போ கையில் ஆற்றிலேஅமிழ்ந்திக்கரையேறி யெண்ணிப் பார்க்கும்போ

து ஒலிபதுபோலா யெண்ணித்தன்னை யெண்ணாமல் ஒருவனைக் காணாமென்று மயங்குமிடத்தில் அந்நியனாகிய வொருபுருஷன்வந்து பத்தாவானைக் காட்டிக்கொடுத்தாற்போல ஆசாரியரொழுத்தருளி இந்த ஏழுபாதியுங்கண்டுகொண்டிருக்கிற யாதொரு சைதன்னிய வறிவுண்டு அந்தச்சைதன்னியவறிவுதான்காண் நீயென்றனுக்கிசசம்பண்ணினார் இந்தச்சைதன்னியவறிவுகாரியவுபாதியுடனேகூடிநின்றபோது முக்யமென்றும் உபாதியைவிட்டு நீங்கினபோது லட்சயமென்றும் உபாதியை நானென்றபோது அசுத்தமென்றும் எபாதியை நீங்கினபோது சுத்தமென்றுஞ்சொல்லப்பட்டது. இதுக்கு சம்சர்க்க வாக்யம் அவையெவையென்னில் (மஞ்சாக்குரோசந்தி- கெங்காயங் கோஷிப்பிரதிவசதி) என்பன மஞ்சங்கூப்பிட்டதென்றும் கெங்கைக்கண்ணிடைச்சேரியுள்ளதென்றுஞ் சொல்லுமிடத்துமஞ்சமானது மரம் மரமானதுகூப்பிடுமோ மஞ்சத்தில் ஒருபுருஷனிருந்து கூப்பிட்டானென்று கொள்ளவேண்டிற்று கெங்கையானது ஜலம் ஜலத்திலே இடைச்சேரியிருக்கமாட்டாது கெங்கைக்கரையிலே இடைச்சேரியிருக்கின்றதென்று கொள்ளவேண்டிற்று இப்படிபோல ஏழுஉபாதிக்குஞ் சீவன் சாட்சியாயிருக்கின்றானென்று கண்டுகொள்க இதுவிட்டலட்சணை-துவம்பதமுக்யசீவ உபாமூற்றிற்று.

தத்ப்தமுக்யபரவுபாதி.

தத்பதமுக்யபரவுபாதிசொல்லுகிறோம் அதெப்படி யென்னில் துவம்பத லக்ஷ்யார்த்தமான துரீயம் பரனுக்கு உடலாகையாலே [illegible]த்திலே ஸர்வக்ஞத்வாதி உபாதியுண்டாயிற்று. அவையெவையென்னில், ஸர்வக்ஞன் - ஸர்வகாரணன் - ஸர்வாந்திரியாமி- ஸர்வேஸ்வரன் - ஸர்வசிருஷ்டி - ஸர்வஸ்திதி - ஸர்வஸம் ஹாரன்என்பனவாம், அவற்றுள், ஸர்வக்ஞனென்பானேனென்னில் இந்திரியங்களெல்லாம் ஒன்றறிந்ததொன்றறியாத படியினாலும் தான்ஸர்வத்தையும் அறிகையினாலும் ஸர்வக்ஞனென்கிற நாமமுண்டாயிற்று ஸர்வகாரணனென்பானேனென்னில் இந்திரியங்களெலலாமழிந்துந் தானழியாமல் நிற்கையினாலே. ஸர்வகாரணனென்கிற நாமமுண்டாயிற்று. ஸர்வாந்திரியாமி யென்பானேனென்னில், இந்திரியங்களுக்கெல்லாமுள்ளீடாய்நின்றறிகையினாலேஸர்வாந்திரியாமியென்கிற நாமமுண்டாயிற்று. ஸர்வேஸ்வரனென்பானேனென்னில், இந்திரியங்களுக்கெ

ல்லாமேலாய்நின்று விளங்குகையினாலே ஸர்வேஸ்வரனென்கிற நாம முண்டாயிற்று. ஸர்வசிருஷ்டியென்பானேனென்னில், இந்திரியங்க ளெல்லாந் தன்னுக்குள்ளே தோன்றுகையினாலே, சர்வசிருஷ்டி யென்கிற நாமமுண்டாயிற்று. சர்வஸ்திதியென்பானே னென்னில், இந்திரியங்களையெல்லாந் தானே ரட்சிக்கையினாலே சர்வஸ்திதியென்கிற நாமமுண்டாயிற்று. சர்வஸம்ஹாரனென்பானேனென்னில் இந்திரியங்களெல்லாந்தன்னுக்குள்ளேயடங்குகையினாலே சர்வசம்ஹாரனென்கிற நாமமுண்டாயிற்று இந்த, ஏழுஉபாதியும் ஸ்வரூபமன்று: இனி. எதுதான் ஸ்வரூபமென்னில் இந்த. ஏழுஉபாதிகளையும் யாதொரு சைதந்நியத்தினாலே யளவிடப்பட்டதோ, அதுவே ஸ்வரூபம்-இந்த, ஸ்வரூபம் உபாதியிடனே சம்பந்தித்து நின்றபோது. முக்யமென்றும், உபாதியைப் பிரிந்தபோது - லக்ஷ்யமென்றும். உபாதியைநானென்றபோது அசுத்தமென்றும், உபாதிக்குச் சாட்சியானபோது சுத்தமென்றுஞ்சொல்லப்பட்டது, இதற்கு விசிஷ்டவாக்யம் அவையெவையென்னில். சோணஸ்திஷ்டதி - சுவேதோசாவதிஎன்ப ன, ஒருசிவப்புச்குதிரையும் வெள்ளைப்பசுவையுங் கண்டாயோவென்பார்க்குச் சிவப்புநிற்கின்றது, வெள்ளைபோகின்றதென்னுமிடத்துச் சிவப்பானவர்ணந் தனியேநில்லாது. வெள்ளையானவர்ணந்தனியேபோகாது - ஆகையால் சிவப்பையுடையகுதிரை நிற்கின்றதென்றும் வெள்ளையையுடையபசுபோகின்றதென்றும், கொள்ளவேண்டின இப்படிபோலசர்வக்ஞாத்வாதி உபாதியுடையவனாய் அதற்குச்சாட்சியாயிருக்கின்றானென்பரன். இது.

விடாதலக்ஷணைதத்பதமுக்யபரஉபாதிமுர்திற்.

அசிபதம்.

இனி, அசிபதம் அநுக்கிரகம்பண்ண வேண்டுமென்றபோது முன்சொல்லப்பட்ட விரண்டுபதத்தினுடைய உபாதியுந்தீர்ந்துலக்ஷியார்த்தமான பதார்த்தத்தை அசிபதத்திலே ஐக்யம் பண்ணவேண்டுமென்ன, ஆசாரியனைநோக்கிச் - சிஷ்யன்விண்ணப்பஞ் செய்கிறான்-தேககிரகனாகிற கிஞ்சித்ஞனாயிருக்கிற அவனுக்கும் போதகனாகிற சர்வக்ஞனாயிருக்கிற - பரனுக்கும். எப்படி. ஐக்கியங்கூடுமென்ன கூடுங் காண் - இரண்டுபதத்தினாஞ் சொல்லப்பட்டபொருள் - முன்னையிக்கியவிருப்பினாலேயேசமம், அதெப்படியென்னில்

சம்சர்க்கவாக்யமும் - விசிஷ்டவாக்கியமும் - சொல்லப்பட்ட முக்ய மானஉபாதி தீர்ந்து லக்ஷ்யமானேமென்கிற வாசனுதோஷமாகியகுற்றம் அகண்டவாக்யத்தினுலே ஏகரூபண்ணப்படும். அகண்டவாக்யமாவது சோயந்தேவதத்தனென்றது ஒருதேவதத்தனுகிடபுருஷனுடனே நாம்சிறிதுநாள்கூடவிருந்தோம் இவன்சிறிதுநாளுக்குப்பிறகுபிரிந்துபோயினுன், அநேகநாளுக்குப்பின்பு சதுரங்கபரிகரத்துடனேயிவனைமதுராயிலே அந்திக்காலத்திலே ராஜாவாயிருக்கக் கண்டோம் அங்கேஅவனுடன் சிறிதுநாள்கூடியிருந்தோம். பின்புநம்மை அவன்பிரிந்துபோயினுன். சிறிதுநாளுக்குப்பின்பு தண்டகமண்டலத்துடனே அவனைச்சிதம்பரத்லே விடியற்காலத்திலே சந்நியாசியாயிருக்கக்கண்டோம், அப்பொழுது இவன் அந்ததேவதத்தனே அல்லனேவென்றுசந்தேகிக்கையில் இவனடியிலும் - மார்பிலும்-முடியிலும் முன்னேமறுவுண்டேஅந்த அடையாளம் இவனிடத்திலேயிருந்தால் அந்ததத்தேவதத்தனே இவனுவனென்று பார்க்குமிடத்து அந்த அடையாளம் இவனிடத்திலே இருக்கையால் அந்ததத்தேவத்தனே யிந்ததத்தேவதத்தன் ஆவானென்று சொல்லப்பட்டது அப்போது அவனைவிட்டன அந்த. இரண்டிடமும் இரண்டுகாலமும், அவைவிட்டுப்போக, விடாமல்நின்றவன் ஒருதேவதத்தன் மாத்திரமே, அவனைப்போல இந்தத், துவம்பதமாகிய, ஜீவஉபாதிக்கும் தத்பதமாகிய பரஉபாதிக்கும் சாட்சியாய் நின்றவன்ஒருவனே, இந்தஒருவனுக்குப் விட்டுப்போயின துவம்பதஉபாதியென்னும் காரியஉபாதியும் தத்பதஉபாதியென்னும் காரணஉபாதியும் அவை விடுப்பேர், விடாமல் நின்றவன் ஒருவன்இப்படி இரண்டு உபாதியும் போகஇரண்டுபதத்திலும் நின்ற சீவனேபரனென்றும் பரனே சீவனென்றும் ஏகமாய்க்காண்பது. அசிபதம் (இதுவிட்டுவிடாத லக்ஷணை.

அசிபதமுற்றிற்று.

வாதமறிருக்கப்பட்ட - வஸ்துவை, மனனுமஹா வாக்யத்தினுலே, தத்பதார்த்தசோதனைபண்ணப்பட்டது, அதனுலேபோதமேயுனாயற்றேக்கும்பொருளெனத்தெளிந்தேன், அல்லறீர் பொருளீதென்பதறிந்துகொண்டேன் தேவரீரநுக்கிரகத்தினுலே சிரவணந்திடமாயிற்று—இனி, மனனமருளிச்செய்ய வேண்டுமென்ன அருளிச்செய்தீரு.

சிரவணமுற்றிற்று.

மனனம்.

துவம்பதார்த்தம்

அஃதாவது, சொல்லபட்ட பதமூன்றில்முன் துவம்பதார்த்தஞ் சொல்லுகிறோம். துவம்பதமுக்யத்தை மனனஞ்செய்நீ அதெப்படியென்னில்-தேகம், இந்திரியம், மனம், புத்தி, அஹங்காரம்சித்தம், பிராணன், இந்ததத்துவம்பதமுக்யமான ஏழுஉபாதியும் மூன்றவஸ்தைகளாம் அவையெவையென்னில் ஜாக்ரம் - ஸ்வப்னம் - சுழுப்தி இவைக்கு - அபிமானிகள்விஸ்வன் - தைசதன் - பிராக்ஞான் - இந்த - மூன்றவஸ்தையும் - மூன்றபிமானியும் - சீவனுடையமுக்யம் ஆதலால் ஏழுஉபாதியுடனேகூடிவிளங்குகிறது - ஜாக்ரம் அபிமானிவிஸ்வன் - தேகம்இந்திரியம் இவையிரண்டுநிற்க-மனம்-புத்தி-சித்தம் அஹங்காரம், பிராணன், இந்த ஐந்துடனேகூடிவிளங்குகிறது ஸவப்னம் அபிமானி, தைசதன் அந்தக்கரணம். நான்கும்நிற்க பிராணவாயுவுடனேகூடி விளங்குகிறது - சுழுப்தி - அபிமானி பிராக்ஞான் ஆதலால்இந்தமூன்றவஸ்தையும்நீபன்று அதெப்படி நானன்றென்னில் ஜாக்ரம் ஏழுஉபாதியுடனேகூடிவிளங்குமென்றும் அது ஸவப்பனத்திலே அழியுமென்றும் இப்படி உன்னாலறியப்படுகையினாலேஜாக்ரமும்நீபன்று ஸவப்னந்தான் நானேவென்னில் ஸவப்னமும் நீபன்று-அதெப்படி நானன்றென்னில் ஐந்து உபாதியுடனேகூடிவிளங்குமென்றும் - ஸவப்னஞ்ஜாக்கிரத்தின்வாஸனையென்றும்மனோவியாபாரமென்றும் ஸவப்னம் சுழுப்தியில் அழியுமென்றும்இப்படியுன்னாலறிபப்படுகையினாலே ஸவப்னமும் நீபன்று சுழுப்திதானநானேவென்னில் சுழுப்தியும் நீபன்று, அதெப்படி நானன்றென்னில் பிராண்னேயாதாரமென்றும் இரண்டவஸதசைகளுடைய வொழிவென்றும் இப்படியுன்னாலறிப்பப்படுகையினாலே, சுழுப்தியும்நீபன்று இனி, நான்யாரோவென்னில் இப்படி மூன்றவஸ்தைகளையும் உணர்ந்து அவைகழன்று உணர்வாய்நின்று விளங்குகிறதுயிதுதான் நீபாகிற சுவரூபம் இந்த சுவரூபத்தை ஆக்ஞாநாஹாரூக்பம், சுத்ததுவம்பதார்த்த மென்றுசொல்லப்பட்டது — துவம்பதார்த்த முற்றிற்று

தத்பதார்த்தம்.

இனி, தத்பதார்த்தஞ்சொல்லுகிறோம் தத்பதமுக்யத்தைதமனனஞ்செய்நீ அதெப்படியென்னில்சர்ஞான் -ஸர்வகாரணன் -சர்வாந்திரியாமி - சர்வேஸ்வரன் -ஸர்வசிருஷ்டி- ஸர்வஸதிதி: ஸர்வசம்ஹாரன், இந்தத்தத்பதமுக்யமான ஏழுஉபாதியுந்துவம்பதஉபாதிகள் போலமூன்றவஸ்தைகளாம் அவையெப்படியென்னில் துரியங், காலபரம், அதீதம் இவைக்கு அபிமானிகள்விராட்புருஷன், இரணியசர்ப்பன், அவ்யாகிருதன்-இந்தமூன்றவஸதையும் மூன்றபிமானியும் பரனுடையமுக்யம் ஆதலால்சீவனுடையஉபாதிகளாகிய மூன்றவஸதையுமுணர்ந்து அவைகழன்று உணர்வானதுபோல பரனுடையவுபாதியாகியமூன்றவஸதையுமுணர்ந்து அவைகழன்று அறிவானதேபரம் ஆகையால்பரஜாக்ரமெதென்னில் முன்சொல்லப்பட்டசுத்ததுவம்பதார்த்தமான துரியம்பரனுக்குத்தேகமாகையினாலேகாரணோபாதிகளேழும் இதனிடத்தேசம்பந்தித்துவிளங்குகிறதே துரியமாகியபரஜாக்ரம் அபிமானி விராட்புருஷன் பரஸவப்னமெதென்னில்சர்வசிருஷ்டி-சர்வசதிதிலர்வசம்ஹாரன்-இந்தமூன்றுஉபாதியுடனேவிளங்குகிறதேகாலபரமாகியபரஸவப்பனம்அபிமானிஇரணியசர்ப்பன்பரசுழுப்பதியெதென்னில் இந்தஏழுஉபாதிகளும் அந்த ஸ்வரூபத்தினிடத்திலே நிற்குதோ வில்லையோ பாரென்னுமிடத்தில் இல்லைஇப்படியொன்றுமில்லாமலிருந்தவிடமோ அதீதமாகிய பரசுழுப்திஅபிமானி அவ்யாகிருதன் இந்தப்பரசுழுப்திபைவேதம் ஓரிடத்திலேயென்றும் ஆகாசம்போல நிறைந்திருக்கையால் பிரமத்தின்சுவரூபமென்றுஞ் சொல்லுவர் அதுஸ்வரூபமாகாது அதெப்படியென்னில் இது, பரனுக்கு உபாதியானபடியினாலே இந்தமூன்றவஸ்தையுமுணர்ந்து அவைகழன்றுநின்றதேபரம். இப்படி, சுத்ததுவம்பதார்த்தமான துரியத்திலே, காரணோபாதிகளேழுஞ் சம்பந்தித்துவிளங்குகிறதே பரஜாக்ரமென்றறியப்படுகையினாலும் பரஜாக்ரம்பரஸவப்பனத்திலே தோன்றுமையினாலும் பரஜாக்ரமும் நீயன்று மூன்றுஉபாதியுடனே கூடவிளங்குகிறதே பரஸவப்பன மென்றறியப்படுகையினாலும் பரஸவப்பனம் பரசுழுப்பதியில் அழிகையினாலும் பரஸ்ப்பனமும் நீயன்று இந்தஉபாதிகளேழும் ஒழிந்து ஒன்றுமில்லாமலிருந்தவிடமே பரசுழுப்தியென்றறியப்படுகையி

ஞானும், பரசுழுப்தி மேலாய்நின்றுவிளங்குகிற பரஸவரூபத்திலே அழிகையினாலும் பரசுழுப்தியும் நீயன்று இப்படி மூன்றவஸ்தையுங்கண்டுகழன்று மேலாய்நின்றுவிளங்குகிறதேபரஸ்வரூபம் இந்தனவரூபத்தை ஆக்கும்மஹாவாக்யம்சுத்ததத்பதார்த்தமென்றுசொல்லப்பட்டது இந்த சுவரூபம் உள்ளும்புறம்பும்போக்கும்வரவுமின்றியே தானேதானாகி விளங்கப்படாநின்றதுஅதுவேபரம்,

தத்பதார்த்தமுற்றிற்று.

அசிபதார்த்தம்.

இப்படி, இரண்டு பதார்த்தத்தினுடைய லட்யார்த்தப் பொருளைப் பொருந்தவருளிச் செய்தாற்போல ஆனாயென்கிற பதத்திலர்த்தமும் மனனத்திலே யநுக்கிரகம்பண்ணவேண்டுமென்ன அப்படியே இருபதப்பொருளையும் லட்சயப்பரி சாற்குற்றமற விளங்கத்தக்கதாக மனனத்திலே தரித்தபின்பு ஆனாயென்னும் பதத்தையும் பூரணமாக மனனத்திலே தரித்திரு அதெப்படியென்னில் சீவனிடத்திலேயுண்டான துவம்பதஉபாதி நீங்கினேமென்கிற வாசனை யிருக்கையினாலும் பரனிடத்திலுண்டான தத்பதஉபாதி நீங்கினேமென்கிற வாசனையிருக்கையினாலுந் துவம்பதத்திலுள்ள துரிசு மூன்றையும் விட்டுத்தத்பதத்திலுள்ள துரிசமூன்றையும்விட்டு தருக்காய் நின்று விளங்குகிற தத்ஸவரூபத்தினிடத்திலே இரண்டு உபாதியும் ஒழிந்த படியினாலும் விஸ்வந் தோன்றாமையினாலும் அதுவே பிரமமென்று வேதஞ்சொல்லப்பட்டது அது எப்படியென்னில் ஸ்தூலமாய்விளங்குகிற பிரபஞ்சத்தைச் சீவன் நானென்றுகொண்டு நின்ற உபாதியை நீக்கிமுன்சுத்த துவம்பதார்த்தமான விடத்தில்காரணோபாதி சம்பந்திக்கையால் சுத்ததுவம் பதார்த்தம் விச்வக்கிராசம்பண்ணமாட்டாது விச்வக்கிராசமானாலொழிந்து ஐக்யங்கூடாது ஆகையால் காரணோபாதிகழன்று விளங்காநின்ற தத்ஸவரூபத்தினால் விசவத்தைக் கிரகிக்கையினாலே அதுவே விசவக்கிராசமென்றுவேதஞ்சொல்லப்பட்டது ஆகையால இரண்டுபதத்தினுடைய அவஸ்தைகளும் நீங்கி சிவத்வமென்கிற போதமுமொழிந்து விஸ்வமெல்லாந்தன்மயமாயிருக்கிறேமென்கிற விவேகந் தத்பதத்துண்டாகையால் அது சம்சர்க்கவாக்யத்தினாலும் விசிஷ்டவாக்யத்தினாலும் நிச்சயிக்கப்பட்

டிப் போதுகிறபொருள் இரண்டினுடைய வாசனையும் அசிபதத்தி னாலே யொழிந்துநீங்காது அதெப்படியென்னில் சோயந் தேவதத் தனென்கிற வாக்யத்தினாலே இரண்டுபதத்தினுடைய காரியமுங் காரணமுங்கழன்று இதம் அகம்பேரிய் இந்தவாசனையுந்தீர்ந்து அகண்டபரிபூரணமாய் விளங்குகிறது அசிபதம் ஆகையால் சீவனும்பரனும் ஐகமாயிருக்கிற உபாதியும்சம்பந்தித்து வருகிற அவஸ்தையுங் கோட்பாடும்,விரிவும் ஒடுக்கமுமாகிய இவையெல்லாம் ஒன்றுமின்றியே ஒழிவிலாத நிறைவாய் விளங்கா நின்றபாதொரு சுவரூபத்தை ஆக்கும் மகாவாக்யம் ஆனயென்றது அசிபதார்த்தமுற்றிற்று.

குற்றமில்லாமல் மனனத்திலேதரித்த பதார்த்த சோதனையாகிய படியை சுவாநுபூதியிற்காட்டவேண்டுமென்ன நிதித்யாசனம்அநுக்கிரகம்பண்ணுகிறார்— மனனமுற்றிற்று,

நிதித்யாசனம்.

அதெப்படியென்னில் முன்சொல்லப்பட்ட துவம்பதத்திற் காரியோபாதியினுடைய சோதனையுந்தத்பதத்திற் காரணோபாதியினுடைய சோதனையும்இரண்டு உபாதியினுடைய வாசனாதோஷமாகிய அசிபதத்தினுடைய சோதனையுஞ்சந்தேகமறக்கண்டு உண்மைகாண்பது முடிவு இந்த உண்மையினுடைய முடிவைக் குற்றமில்லாமல் உனக்கேற்க நீ காண விருப்பத்துடனே நிலைபெற்று விளங்கக்காட்டுகிறோம் நீ தரிசுகொண்டுவருவாய்,

துவம்பதார்த்தசுத்தம்.

முன்னே உனக்குச்சிரவணத்தினாலே கேள்விப்பட்டு மனனத்திலே தரித்துவிளங்குகிற துவம்பதமுக்யமான அவஸ்தைமூன்றும் அறிவுகண்டு கழன்றுணருகிற துரிய சுவரூபத்தையுஞ் சந்தேகமற நனவிலே நீகண்டபடிசொல்லிக்காணென்னச் சொல்லுகிறான், பொறியும் புலனுமிடனுமேயாதாரமாக விஷயத்தைப் புசிக்கிறபொது ஜாக்ரமென்றும் விசுவமாயிருக்கிற உபாதியை நானென்றபிமானித்திருக்கையினால் விசுவனென்றுங் கண்டேன் அது தேவரீரருளினாலே தீர்ந்ததுங்கண்டேன் ஜாக்ரத்தின் வாசனை சுவப்னமென்றும் இந்தச் சடமாகிய வாசனையை நானென்றபிமானித் திருக்கையினால் யிதற்கபிமானிதை சதனென்றுங்கண்டேன் அது தேவரீர் அருளினாலே தீர்ந்

ததுங்கண்டேன் தனவின்வாசனையாகிய கனவும் யிறந்தவிடம் சுழுப்
தியென்றும் யிந்தவெறும்பாவனையாகிய சுழுப்தியை நானென் றபி
மானித்திருக்கையினாலே யிதற்கபிமானிபிராக்ஞயனென்றுங்கண்டே
னதுதேவரீரருளினாலேதீர்ந்ததுங்கண்டேனிந்தப்பேரருளாகியசுழுப்
தியைவிஷயமாயறியுமென்னை அறிவெனக்கண்டேன் நின்னுடைய
அனுக்கிரகத்தினாலேஎன்னைக்கண்டபின் மூலப்பகுதியாயிருக்கின்ற
சுழுப்தியிறந்ததுங்கண்டேன் கண்டஸ்வரூபமெப்படியிருந்ததென்
னில் - (செய்யுள்-அரிவுதானழிவின்றியேயனைத்தையுமறிந்து- மு
றிவதாகியமுன்புபின்பக்கமேல்கீழ்சூழ்) என்பனவொன்றுமின்றி ஈ
ங்குமாய்த்திகழ்ந்து பிறிவில்லாமல்எல்லாவற்றினுள்ளுந் தானாய்நின்
றுவிளங்குகிறபடியினாலுஞ்சகலமுந்தன்னிடத்திலே தோன்றியும், வி
ளங்கியும்,ஒடுங்கியுந்தானேமேலாகிச் சகலத்துக்குங் காரணமாய் தே
ஹேந்திரிய காரணங்களுக்கெல்லா மேலாகித் தானே சாக்ஷியாய்நிற்
கையாலும் ஒப்பிலாதவிவ்வுணர்வதேவடிவதாமென்னைத் தேவரீரருளி
னாலேஉள்ளங்கைமணிபோற் சந்தேகமறக்கண்டேன் அமையவுன்ற
னை அநுபவத்துணர்ந்தாய்ஆனபடியினாலே துவம்பதத்திற்குப் பொ
ருள்சுத்தமாயிற்று—துவம்பதார்த்தசுத்தமுற்றிற்று



தத்பதார்த்தசுத்தம்.

தத்தபதமுக்யமான வவஸ்தை மூன்றையுங்கண்டுகழன் றுண
ருகிற சித்பரத்தையுஞ்சந்தேகமற நீதண்டபடிசொல்லிக்காணென்
னத் தேவரீரநுகிரகத்தினாலே சுத்ததுவம்பதார்த்தமாயிருக்கிற, து
ரிய சுவரூபத்தினிடத்தில்சர்வக்ஞாத்வாதிஉபாதி சம்பந்தித்து விள
ங்குகிறதே பரஜாக்ரமென்றும் இதற்கபிமானி விசுவத்துக்கெல்லா
ஆதாரமாகையால் விராட்புருஷனென்றுங்கண்டேன், அது தேவரீர
ருளினாலே ஸவப்னத்தி லழிந்ததுங்கண்டேன் காலபரமா யிருக்கிற
வசுபத்தைப் பார்க்குமிடத்தில்- சர்வசிருஷ்டி - சர்வஸ்திதி - ஸர்வச
ம்ஹாரன்-என்றமூன்றுஉபாதியுடனேகூடி விளங்குகிறதே பரசவப்
ன மென்றும் இதற்கபிமானிஜாக்ரம்போலவியாப்தமும் சுழுப்தியோ
ல அவ்யாப்தமுமானபடியினாலே இரணியகர்ப்பனென்றுங் கண்டே
ன். அதுதேவரீரருளினாலே சுழுப்தியிலொழிந்ததுங்கண்டேன் தத்
ஸ்வரூபத்தினிடத்திலேசர்வக்ஞாத்வாதி உபாதிஒழிந்ததேபர சுழுப்
தியென்றும் யிதற்கபிமானி ஒருவியாப்தமுமில்லாதபடியினாலே அ

வ்யாகிருத னென்றுங் கண்டேன்இந்த பரசுழுப்தியை வேதம் ஒரி டத்திலே பரமென்றும்ஆகாசம்போல வியாப்தமற்றிருக்கையினாலே பிர்மத்தின்ஸ்வரூபமென்றும் சொல்லப்பட்டதுங் கண்டேன் யிந்த ப்பர சுழுப்திக்கு மேலாய்நின்றுவிளங்காநின்ற ஞானத்தைப்பரசவ ரூபமென்றுங்கண்டேன் வியோமமாயிருக்கிறபர சுழுப்தியும்பரனி டத்திலே ஒழியக்கண்டேன் இத்பதார்த்தசுத்தமுற்றிற்று,

அசிபதார்த்தசுத்தம்.

தேவரீர் அநுக்கிரகத்தினாலே வியோமமீறாய மூன்றவஸ்தையுங்க பளீகரித்து நின்றுவிளங்காநின்ற சுவரூபத்தையுங்கண்டேன் ஞான மே வடிவாகையால்யிதற்கபிமானி சித்சொலிதையொன்றுங்கண்டே ன் தேவரீர் அநுக்கிறத்தினாலேயிரண்டு உபாதியுந்தன்னிடத்தில்ஒழி கையினாலும் போக்குவரவின்றியே நிற்கையினாலும் இதமாயிருக்கி ன்ற விசுவமெல்லாம் விழுங்கி அகண்டபரிபூரணமாய் விளங்குகை யினாலும் விசுவக்கிராசமென்றுங் கண்டேன் யிதற்கபிமானி அசேஷ முந் தானாய்நிற்கையினாலே பிரசாபத்திய னென்றுங்கண்டேன் விப் படி சகலஆத்மாவினுள்ளும் புறமும் முழுதும் பரிபூரணமாய்ப்பிர த்தியக்ஷமாய் விளங்குகின்றது சொரூபமென்று வேதஞ்சொல்லும் அதுதேவரீரருளினாலே (செ-ள்-பழமறை திருமொழிப்பரிசேதராத லாதல வுலகமுண்டகம் புறமருவுஞ் சராசராதிகண் முழுதுந் தன்னு ருவமாய்)விளங்கப்படுகின்றதுவுங்கண்டேன் பேதமாயிருக்கின்றபிர பஞ்சமெல்லாம்பிர்மநிச்சயமென்றுவேதஞ்சொன்னமெய்ம்மொழி ப்படியே ஜகமெல்லாமொரு தன்வடிவாய் விளங்குகின்ற சொரூபத் தை சிவதுரியமுதலாகக்கொண்டுள்ளும் புறமுமாய் வருகிற உபாதி குற்றங்களெல்லாந்தீர்த்து அநுக்கிரகம்பண்ணுகையினாலே யிந்தஷி வரூபம் ஐக்கியத்திலே உபசாந்தமாம் யிதனை அநிதாகியவமலதத்பா ர்த்தமென்றறி நீ இப்படி வியோமத்தைக்கடந்து விசுவமெல்லாந் த ன்மயமாய் விளங்குகிறபடியினாலே உபாதியினுடைய குற்றந்தீர்ந்து தும் இந்தவாசனாதோஷந்தீர்க்க வேண்டுமென்று வேதஞ்சொல்லும் ஆகையினால் யினியிந்த வாசனாதோஷந்தீரு முறைமை யெப்படியெ ன்னில் உபசாந்தம் நீங்கினாலொழிந்து தீராது.உபசாந்தமாவதெதெ ன்னில் மூலாக்ஞானம் மூலாக்ஞானமெதென்னில் மறைப்பு அந்தடி

றைப்புத்தானெதென்னில் தத்சொரூபபத்தைமறந்தவிடம் தேகமா திடுக யிந்தமறைப்பாகிய உபசாந்தம் அந்தமாகச்சகலமும் தன்னி னிடத்திலே அடங்குகையினாலே யிதற்கபிமானிபொற்புவிசாந்தனெ ன்றும்பேராம், பிருபதத்திரிவித வவத்தைதகள்போல விப்பதத்திரி வித வவத்தையுங்கண்டேனநன்றாய்விளங்கப்பட்டு உலகெலாம்நிறை த்த உபசாந்தமாகிய பெருமையை வேதத்தினுடைய முடிவு இன்ற ளவுசொல்லியும் முப்பதத்தவத்தை மும்மூன்றென்பது முடிந்தது ஞானமொன்று கொல்லியதாகையால்முப்பத முமுடிந்தவிடத்திலே சத்யஞானவனந்தவானந்தமா யிருக்கப்படாநின்ற தத்சொரூபம் வெளிப்படுமென்று அநுக்கிரகம்பண்ணி யருளித்தே அந்தசொரூ பத்தை அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்ன அநுக்கிரகம் பண் ணுகின்றார்.

அசிபாதார்த்தசுத்தம்.

முற்றிற்று.

தத்ஸ்வரூபம்.

அதெப்படியென்னில், யிந்தமறைப்பாகிய உபசாந் தத்தைக் கண்டு விளங்கப்பட்ட தத்சொரூபத்தினிடத்திலே அந்தமறப்பு நிற் குதோ வில்லையோ பாரென்னு மிடத்தில் இல்லை, யில்லாத விடமெ ப்படியிருந்தது ஆதியந்தஞ் சூனியமாயிருந்தது, அந்த சொரூபந் தான்காண், அறிவிடப்படாததாய் அறிவுடைத்தாய் அளவிடப்படா ததாய்ச்சுகசுவசொரூபியுமாயிருந்தது, அதுதான்காண் சத்யஞான வனந்தவானந்தமானது அதெப்படியென்னில், ஆதியந்தஞ் சூனிய மாயிருக்கப்பட்டதே பரிபூரணம் அந்தப்பரிபூரணம் எப்படியிரு ந்ததுபாரென்னுமிடத்தில் என்னாற்சொல்லப் போகாதிருந்தது, அ தேனென்னில் மனதுக்கெட்டாதபடியினாலேவாக்கு வசனிக்கப்போ காது, ஆகையினால்வாக்குமனோதீதமென்று இரண்டையுங்கண்டு வி ளங்கிவந்ததே ஞானம் அந்தஞானத்தை விட்டிருந்தவிடத்திலே யா தொருள்வரூபம் நிகழ்ந்தது ஆசாரியரும் மஹாவாக்யத்தினாலே அ துநீயாகின்றாயென்றும் நீயதுவாகின்றாயென்றும் அநுக்கிரகம் பண்ணினார், அந்தஸ்வரூபந்தான் மூன்றுபதமானது அவையெனவ

யென்னில் துவம்பதமுதலாக அந்தக்ஸ்வரூபந்தான் காண்மூன்று ல க்ஷணமானது அவையெவையென்னில் ஜீவன்முதலாக அந்த ஸ்வரூ பந்தான்காண் ஆறுகுறியும்அவைபேவையென்னில்வடிவு நுண்மை முதலாக அந்தஸ்வரூபந்தான் காண்எட்டியல்பானது அவையெவை யென்னில் இறந்தசேல்விமுதலாக இப்படி அநுக்ரகம் பண்ணப்ப ட்ட குருநாதன்பெருமையாதோவென்னில்மூலையிருந்தாளாமுற்றத் தேவிட்டவர்சாலப்பெரியரென் றுந்தீபற தவத்திற்றலைவரென்று ந்தீ பற இவைகளையெல்லாந் தத்வாமிர்தத்திற் கண்டுகொள்க,

தத்ஸ்வரூபமுற்றிற்று.

தத்வாமிர்தக்கட்டளை - முற்றுப்பெற்றது,

(கலிவிருத்தம்.)

தொம்பதந்தத்பதந்தோன்றுமசிபதம் ... ❁
நம்பியசிவன்பரன்சிவமாய்நிற்க ....❁
வம்பதமேலைச்சொரூபமாவககிய ... .❁
செம்பொருளாண்டருள்சீர்நந்திதானே ...❁

(நேரிசைவெண்பா.)

புசிப்போஞ் சிவபோகம் பூரணமாயெங்கும்..... ...❁
வசிப்போ முலகில் வசியோ - முசிப்பின்றி ....❁
வாழ்வோஞ்சிவனையுணர்மாதவர்தம்பொன்னடிக்கீழ்த்❁
தாழ்வோ மெமக்கார் சரி.. ....❁